
# ஒத்தை வீடு



சு. சமுத்திரம்

# ஒத்தை வீடு

## சு. சமுத்திரம்

**ஏகலைவன் பதிப்பகம்**

*9, இரண்டாவது குறுக்குத் தெரு,*
*டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்,*
*சென்னை - 600 041*
*©: 4917594*

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **ஒத்தை வீடு** *(இரு குறுநாவல்கள்)* |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - ஜூன், *2000* |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| விலை | : | ரூ. **60-00** |
| பக்கங்கள் | : | *248* |
| வடிவம் | : | "டெமி" |
| வெளியீடு | : | **ஏகலைவன் பதிப்பகம்,**<br>*9*, இரண்டாவது குறுக்குத் தெரு,<br>டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,<br>சென்னை - *600 041.* |
| ஒளி அச்சு | : | **ஏகலைவன்** |
| அச்சிட்டோர் | : | பிகே ஆப்செட் பிரஸ்,<br>சென்னை - 600 013. |

| | | |
|---|---|---|
| Title | : | **OTHAI VEEDU** (Two Novlets) |
| Edition | : | First Edition - June, 2000. |
| Copy Right | : | SU. SAMUTHIRAM (Author) |
| Price | : | Rs. 70-00 |
| Pages | : | 248 |
| Size | : | "Demy" |
| Published by | : | **EKALAIVAN PATHIPPAKKAM,**<br>9, 2nd Cross Street,<br>Dr. Radhakrishnan Nagar,<br>Chennai - 600 041. |
| Type Setting | : | **EKALAIVAN** |
| Printers | : | Beekay Offset Press<br>Chennai - 600 013 |

**டாக்டர். க. காந்தராஜ்**
பாலியல் நிபுணர், சென்னை.

# முன்னுரை

"இந்த இரண்டு குறுநாவல்களுக்கும், 'நீர்தான்யா முன்னுரை எழுதணும்' என்றார் சு. சமுத்திரம் அவர்கள். 'முன்னுரை எழுதுற தகுதி எனக்கிருக்கா..? யோசிச்சுதான் சொல்றீங்களா...?' என்று கேட்டதுதான்... 'இந்த நாவலே, உம்மோட தொழில் சம்பந்தப்பட்டது. அதனாலே நீங்க எழுதினா சரியா இருக்குமுன்னு பட்டது. படிச்சு எழுதுமய்யா...' என்று நாவலை என் கையில் திணித்துவிட்டுப் போனார், நண்பர் சமுத்திரம்.

எனக்குக் கதைகள் படிப்பதில் அதிகமாக ஆர்வம் இருந்ததில்லை. வரலாறு, மானுடவியல், அரசியல், சினிமா (டெக்னிக்கல் விஷயங்கள் பற்றி - நடிகர் நடிகையர்களைப் பற்றி அல்ல) போன்றவை சம்பந்தமான என் தொழிலுக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் ஆர்வம் அதிகம். அதேசமயம், சு. சமுத்திரம் போன்றவர்களின் எழுத்துக்கள் என்னை அதிகம் ஈர்க்கும். காரணம், வரலாற்றிற்கும், சமுத்திரம் அவர்களின் நாவல்களுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கும். வரலாற்றில், முன்னொரு காலத்தில் வாழ்ந்தவர்களைப் பற்றிய செய்திகளும், அவர்களின் சாதனைகள், வேதனைகள் மட்டுமின்றி வாழ்ந்த விதமும் அடையாளமின்றி வீழ்ந்த விதமும் சொல்லப்பட்டிருக்கும். இவருடைய நாவல்களும் சிறுகதைகளும் இன்று நம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்ப வர்களின் வரலாறாக இருக்கும்.

சு. சமுத்திரத்தின் கதாபாத்திரங்கள் கற்பனையாக தோன்றாமல், "இதோ இவர்தான் அந்த நாவலில் வருகிற அவரா" என்று நாம் அடையாளம் காட்டுகிற அளவுக்கு உயிருள்ளதாக இருக்கும். ஆனால், அந்த பாத்திரங்களுக்கு வருகிற பிரச்சினைகள் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். மற்ற எந்த எழுத்தாளரும் சிந்திக்காத அல்லது தொடப்பயந்த ஒரு சமூகப் பிரச்சினையை, தன் கதர்பாத்திரங்கள் வழியாக தனக்கே உரித்தான பாணியில் எடுத்துச் சொல்லும்போது, நமக்கு ஏற்படுகிற சிலிர்ப்பும் தாக்கமும் அவரது எழுத்துக்களின் சக்திக்கு ஓர் எடுத்துக்காட்டு.

**மீண்டும் வித்தியாசம்...**

சமுத்திரம் மீண்டும் வித்தியாசப்பட்டிருக்கிறார். தமிழ் நாவல்களில், பொதுவாக எந்தப் புதுமையும் இருப்பதில்லை. சினிமாவைக் குறை கூறுகிற இந்த தமிழ் எழுத்தாளர்களின் நாவல்களும், பெண்களைச் சுற்றியே

இருக்கும். ஒரு மத்திய நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த சம்பிரதாயமான ஒரு பெண்ணுக்கு நேருகிற குடும்பப் பிரச்சினைகள்தான் பெரும்பாலான தமிழ் நாவல்களின் கரு.

எதிர்வீட்டு வாலிபன், விரோதமாகிவிட்ட அத்தை அல்லது மாமா மகன், சக மாணவன், சக ஊழியன் என்ற யாராவது ஒருவரிடத்தில் காதல், வேண்டாத திருமணம், ஆகாத மாமியார், மலடு, நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை அல்லது கணவன், சரியான முறையில் வளராத மகன்-மகள், வரதட்சணை என்று ஒரு வட்டதுக்குள்ளேயே உழன்று கொண்டிருக்கும் எழுத்தாளர்கள், பெண்களுக்கு முப்பத்து மூன்று என்ன - முன்னூறு சதவீதமே உரிமை வழங்கினால்கூட, இவர்கள், இந்த வட்டத்தை விட்டு வெளியே வரமாட்டார்கள்.

ஏதோ அத்தி பூத்தாற்போல், சிலபேர் துப்பறியும் நாவல்கள எழுதுகிறார்கள். அதிலும்கூட **"Damsel in Distres"** (ஆபத்தில் இருக்கும் அழகி) என்ற ஃபார்முலா இருக்கும். விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு நாவல்கள் எழுதுவது என்பது தமிழில் இல்லையென்றே சொல்லலாம். ஒரு பிரபலமான விஞ்ஞானத் தொடர், பின்னால் அது தொலைக்காட்சித் தொடராகவும் வந்தது. அதில் எத்தனை பங்கு சுய கற்பனை என்றால், சோகம். 1984 என்ற மிகப் பிரபலமான ஆங்கில நாவல், **Presiclent's Analyclot, West World, Logan's Run** போன்ற பிரபல ஆங்கிலப் படங்களின் முக்கிய அம்சங்கள் அனைத்தையும் ஒன்றாக்கி, தன் சுய கற்பவனையில் எழுதியதாகக் காட்டிய அந்தப் பிரபல எழுத்தாளரின் முயற்சி, விவரம் தெரியாதவர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது என்பது வேறு விஷயம்.

சமுத்திரத்தின் நாவல்களில் சம்பவங்கள் கொஞ்சம்தான் இருக்கும். ஆனால், மனிதர்களின் மனவியல், நூல் முழுவதும் விரவிக் கிடக்கும். சமூகத்தில், வெளிவராத, இருட்டாக்கப் பட்டிருக்கிற பல மனோ வியாகூலங்களை அலசி ஆராய்ந்து அந்த சூழ்நிலையில், மனிதர்களின் நடத்தையில் ஏற்படும் விசித்திர, புரியாத மாறுதல்களை அப்படியே எழுத்துக்களின் மூலமாகக் கொண்டுவரும் அற்புத சக்தி கொண்டவர் சமுத்திரம்.

**சிட்டுக்குருவி - கருங்குரங்கு - பச்சைப்புறா**

முதலாவது நாவலின் மையக்கரு, **ஆண்மை இழப்பு**. இது, நம் நாட்டைப் பொறுத்தவரையில் சிட்டுக்குருவி லேகியம் விற்பவர்கள் சம்பந்தப்பட்டது என்று அசட்டை செய்கிற விவகாரம். அதன் உள்ளே நுழைந்து பார்ப்பவர்கள், மிகமிகக் குறைவு. எருதின் புண் காக்கைக்கு எப்படித் தெரியும் என்பார்கள். அதைப்போல் இந்தப் பிரச்சினையில் சிக்கிக் கொண்டவர்களின்

வேதனையை, சமூகம் அக்கறையோடு கேட்டதுகூட கிடையாது. இந்தத் துறையில் இருக்கும் எங்களைப் போன்ற டாக்டர்கள், பலசமயம் இந்த மாதிரி பாதிக்கப்பட்டவர்களின் சில விபரீத முடிவுகளைக் கண்டு அதிர்ந்து போயிருக்கிறோம். ஆங்கில மருத்துவம், சரியான மருத்துவம் கண்டு பிடிக்காமல் திணறிக் கொண்டிருக்கும் பிரச்சினையில், இதுவும் ஒன்று. அதன் விளைவு, சிட்டுக்குருவிகளும், கருங் குரங்குகளும், பச்சைப்புறாக்களும், பச்சோந்திகளும் பரிதவித்துப் போகின்றன.

ஆண்மைக் குறைவைப் பற்றி தமிழில் வேறு நாவல்கள் வந்திருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. ஏர்னஸ் ஹெமிங்வேயின் சன் ஆல்ஸோ ரைஸஸ் **(Sun Also Rises)** என்ற ஆங்கில நாவல், சில மாய்பஸான் கதைகள், தமிழில் "சாரதா" என்ற திரைப்படம் - எனக்குத் தெரிந்து இவைகள்தான், இந்தப் பிரச்சினையை ஓரளவு அணுகியவை. இவற்றில்கூட, ஆண்மைக் குறைவால் பாதிக்கப்பட்டவனுடைய வாழ்க்கையில் வந்த பெண்கள் அல்லது அவன் மனைவி என்று பெண்களின் பிரச்சினைகள்தான் அலசப்பட்டன. மீண்டும், என்னைப் பொறுத்தவரையில், ஆண்மைக் குறைவினால், ஆண்-பெண் இருபாலர்க்கும் ஏற்படும், உடல் மற்றும் மனரீதியான பிரச்சினைகளை சம அளவில் விறுவிறுப்பான முறையில் அணுகியிருக்கும் முதல் நாவல் "**ஒத்தை வீடு**" என்று கருதுகிறேன்.

**யதார்த்தம்**

சமுத்திரம் நாவல்களில், வழக்கப்படி எனக்கு ஏற்படும் பிரச்சினை, இதில் சற்று அதிகமாகவே ஏற்பட்டது. இந்த நாவலை மேலோட்டமாகப் படிக்க முடியாது. சமுத்திரத்தின் ஒவ்வொரு அலையும் வித்தியாசமானவை. அதைப் போலவே சமுத்திரம் நாவல்களின் ஒவ்வொரு வரியும் பல்வேறு கருத்துக்களோடு நம் மனதைத் தொடும். ஊருக்குப் பொது வழிப்பாதை போட நிலத்தில் இடம் கேட்டு ஆக்கிரமிக்க முயலும் கிராமப்புற ஊரார்களை, அதிகாரிகள் மூலம் சரிக்கட்டவேண்டும் என்ற பிரச்சினையைக் கொண்ட சகோதரியும், உணர்ச்சியின் உந்துதல்களுக்கு எதிர்பார்த்த மாதிரி செயல் படுகிற மாமியாராக நாயகனின் தாயும், பக்கத்து வீட்டு உமாவும், தன் மனைவிமீது கண் வைத்திருப்பதாக நாயகனை சந்தேகிக்க வைக்கும் இந்திரனும், அவ்வப்போது வந்தாலும், அவர்கள் நாவலின் யதார்த்ததத்துக்கு காரணமாகிறார்கள்.

ஆண்மைக் குறைவில், இரவு ஏமாற்றத்தை எத்தனை அழகாக நாசூக்காக சொல்கிறார் சமுத்திரம்! நாயகி காலையில் குளிக்காமல் பூஜை அறைக்கு சென்று வருகிறாள். அவள் தலையிலிருந்த மல்லிப்பூக்களின் தன்மையை வைத்தே, கணவனின் சகோதரி எதுவுமே நடக்கவில்லை என்பதை புரிந்து கொள்கிறாள் என்பது, நரகலாகியிருக்கக் கூடியதை நளினமாக்கிய கவிதை "ஐம்பது இரவுகளில், பௌர்ணமிக்குப் பதிலாக

அமாவாசைகளே வந்தன." எப்படிப்பட்ட விஷயத்தை எத்தனை எளிமையாக சமுத்திரம் எழுதிவிட்டார்! இல்லை ஓவியமாகத் தீட்டிவிட்டார்.

**நாத விந்து விளக்கம்...**

"நாத விந்து கலாதி நமோ" என்ற அருணகிரிநாதரின் வரிகளுக்கான விளக்கம், எனக்கு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. சிருஷ்டியின் ரகசியத்தை, இயற்கை *(கடவுள்?)* மட்டுமே அறிந்திருக்கும் ஒரு விந்தையை, நம் முன்னோர்கள் ஒரே வரியில் சொல்லியிருக்கிறார்கள் என்று எண்ணும்போது, அவர்களின் அறிவியல் அறிவில் கோடியில் ஒரு பங்குகூட இன்றைய தமிழனிடத்தில் இல்லையே என்று நெஞ்சு கனக்கிறது. ஆங்கிலத்தில் படித்து சுயமாக சிந்திக்கும் திறனை இழந்த நாம், நம் முன்னோரின் இம்மாதிரி அறிவியல் திறமைகளை எண்ணிப் பெருமூச்சு விடுவதைத் தவிர, வேறு வழியில்லை. இந்த இரு பக்கங்களுக்கு நான் சமுத்திரம் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வரிக்கு வரி மனப்பாடம் செய்ய வேண்டிய அளவுக்கு அறிவியலும் தத்துவ விளக்கங்களும் கொண்ட இரு பக்கங்கள் அவை.

"பெண் என்பவள் சக்தி. சக்தியைத் திருப்தி படுத்த எந்த ஆணாலும் முடியாது. "

*"தாம்பத்ய உறவில், மனைவியை அடக்க நினைக்காதே; அடங்க நினை."*

*"அவளை பப்ளிக்காய் அடக்கணும், பிரைவேட்டாய் அடங்கணும்."*

*"ஆணாய் நடக்க முடியாதவன், பிணமாய்த்தான் போகவேண்டும்."*

"பொம்மனாட்டிக்கிட்ட போறவன் சாதா ஆம்பிளைன்னா, அவளைக் கட்டி காக்கிறவன் பெரிய ஆம்பிளை."

இவை போன்ற விவாதத்துக்குரிய சிந்தனையைக் கிளறக்கூடிய சமுத்திர முத்துக்கள் நூலின் சிறப்பு.

**மனவியல்...**

மனவியல் ரீதியாக, ஆண்மைக் குறைவானவன், அதை நிவர்த்தி செய்து கொள்ள, மீண்டும் மீண்டும், வெவ்வேறு பெண்களிடம் முயற்சிப்பான். அடி மனதில் அழுந்திக் கிடக்கும் பயம், முயற்சிக்கும் நேரத்தில், அவனை ஆக்கிரமித்து, அவனை செயல்பட விடாமல் செய்துவிடும். இந்த மனவியல் மருத்துவத்தின் உண்மையை வெகு அழகாக நெஞ்சைத் தொடும்படி வெளிக் கொணர்ந்திருக்கிறார் சமுத்திரம்.

குறிப்பாக, அலுவலகத்தில் வேலை பார்க்கும் கங்கா என்ற பாத்திரம், அதன் மூலம் வெளிப்படுகிற சில அனுபவ விளக்கங்கள், மனிதர்களை ஒரு புதிய கோணத்தில் பார்க்க வைக்கிறது. ஹோட்டலில் நடக்கிற சம்பவங்கள்,

அதன்பின் கங்காவுக்கும் மனோகருக்கும் நடக்கும் கருத்துப் பரிமாற்றங்கள் சமுத்திரத்தின் பார்வையை எந்தப் பரிமாணம் கொண்டு அளப்பது என்ற பிரமிப்பை ஏற்படுத்துகிறது.

நான் ஆரம்பத்தில் கூறியதுபோல், சமுத்திரம் அவர்களும் இந்த மையக் கருத்தைக் கொண்ட வேற்று மொழி நாவல்களிலிருந்து சம்பவங்களை எடுத்து, அதைத் தன்னுடைய எழுத்துக்களாகக் காட்டி சுலபமாக பேர் வாங்கியிருக்கலாம். ஆனால், இவர் 'சமுத்திரமாயிற்றே!

"ஒத்தை வீட்டின்" ஒவ்வொரு பக்கத்திலும், அவரின் உழைப்புத் தெரிகிறது. சித்த மருத்துவமும், அலோபதி மருத்துவமும், மனவியில் ரீதியான இந்த பிரச்சினையை எப்படி அணுகுகின்றன என்பதை வெகு நுட்பமாக ஆராய்ந்து சொல்லியிருக்கிறார். குடும்பத்திலும், சமூகத்திலும் நடக்கும் பல்வேறு இனம் புரியாத குழப்பங்களுக்கு, ஆண்மைக் குறைவு போன்ற பாலியல் பிரச்சினைகள் எப்படி காரணமாகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வைத்திருக்கிறார். மருத்துவர்களுக்கே தகராறு செய்யும் இந்த விஷயத்தை, விறுவிறுப்பாகவும், சுவையாகவும், உள்ளத்தை ஊருடுறுவும் வகையிலும் சொல்ல சமுத்திரம் ஒருவரால்தான் முடியும்.

**புதைமண்**

**புதைமண்**ணில், சு. சமுத்திரம் என்ன புதிதாக சொல்ல வந்திருக்கிறார்...?

புதிது புதிதாகத் தோன்றிவரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், தொழில்களும், ஒரு தனி மனிதனின் அடிமனதில் ஏற்படுத்துகிற பிரச்சினைகளும், அதனால் அவனுடைய வாழ்க்கையே திசை தடுமாறிப் போவதையும், பால்வினை நோய்கள், எய்ட்ஸ் போன்றவைகள் பரவுவதற்கு, அவை காரணமாக இருப்பதையும் - என் போன்ற இந்தத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் உணர்ந்து வேதனையடைந்து, இதைமாற்ற வழியுண்டா என்று குழப்பிக் கொண்டிருந்த நேரத்தில்தான், சு. சமுத்திரம் அவர்கள், தன் சக்திமிகுந்த எழுத்தாற்றலை, இந்தத் துறையின் பக்கம் திருப்பி, இளைஞர் சமூகத்திலும், இலக்கிய உலகத்திலும் வியக்கத்தக்க அற்புதமான மாறுதல்களை உருவாக்கியிருக்கிறார்.

அலிகளைப் பற்றிய அவரது **வாடாமல்லியும்,** எய்ட்ஸ் நோயாளிகளைப் பற்றிய அவரது **பாலைப்புறாவும்** தமிழ் இலக்கிய உலகில் ஒரு மாபெரும் புரட்சி என்பது உலகறிந்த உண்மை. இந்தப் **புதைமண்**, அதேபோல் சந்தர்ப்ப வசத்தால், தன்னினச் சேர்க்கையாளனாக **(HOMO SEXUAL)** மாறிய ஒரு கிராமத்து இளைஞனின் கதை. இதைப் படிக்கும்போது, அந்த இளைஞனின் நாட்குறிப்பை, அவனது அனுமதியோடு படிக்கின்ற உணர்வு நமக்கு ஏற்படுகிறது. அவன் ஹோமோசெக்சுவலாக மாறி, அதை, அவன்

ரசிக்க ஆரம்பிக்கும்போது, நமக்கு ஏற்படுகிற பதைபதைப்பு அவன் அந்த செயலில் ஈடுபட்டு, அதை உணர்ந்து வேதனைப்படும்போது, நமக்குள் கசிகிற ரத்தக்கண்ணீர், அவன் அந்தப் பிரச்சினையிலிருந்து விடுபடும்போது, நமக்கு ஏற்படுகிற ஒரு நிம்மதி - நாவலின் உயிரோட்டத்துக்கு இந்த உணர்வுகளே சாட்சி.

**சமூக அக்கறை**

சு. சமுத்திரம், நுனிப்புல் மேய்பவர் அல்ல என்பதற்கு, இந்த நூல் மற்றொரு எடுத்துக்காட்டு. தன்னினச்சேர்க்கையில் ஈடுபட எந்தச் சூழ்நிலைகள் காரணம், அதிலிருந்து விடுபட பாதிக்கப் பட்டவனும், அவனைச் சேர்ந்தவர்களும் எப்படி செயல்பட வேண்டும் என்பதையெல்லாம் விளக்கமாகச் சித்தரித்திருப்பது சமுத்திரம் அவர்களின், சமூக அக்கறைக்கு சான்றாக விளங்குகின்றது.

வழக்கப்படி சமுத்திரம் அவர்களின் நையாண்டிக்கும் இந்த நூலில் நிறைய இடமிருக்கிறது. சில உதாரணங்கள்:

"கட்டிடப் பிளானை தலைகீழாகப் பார்த்த கார்ப்பரேஷன் கிளார்க்."

"அவர் எண்ணம் சம்ப்பில் விழாத, கார்ப்பரேஷன் தண்ணீர்போல் ஆனது."

"இந்தக் கவிஞர்களின் கவிதைகளையே திருடி, அங்குமிங்குமாய் மாற்றி, அசல் சினிமாக் கவிஞனாய் ஆகிவிடலாம்."

"**அய்யகோ**" - இது அவன் தந்தை, கலைஞரின் தாக்கத்தால் அடிக்கடி சொல்லும் வார்த்தை.

"குழந்தைகளை யூனிபாரமாகக் கூட்டி வந்தான்."

"செல்வம் என்றால் மரபுக்கவிதை; செல்வா என்றால் புதுக்கவிதை."

இப்படி நூல் முழுக்கப் பரவிக் கிடக்கும் மாறுபட்ட பார்வைகள். ராமனும் லட்சுமணனும் வெவ்வேறு தாய்க்குப் பிறந்தவர்கள். அதனால்தான், பாசமாக இருக்க முடிந்தது. ஒரே தாய்க்குப் பிறந்த பிள்ளைகள் பங்காளிகளாக மாறும்போது, பாசம் போய்விடுகிறது.

அடுத்த பிறவியில் ஐந்து கணவர்களுக்கு மனைவியாக வேண்டும் என்று தவமிருந்து திரௌபதியாகப் பிறந்த நளாயினியும், ராவணன் படத்தை வரைந்து, அவனை நினைத்த சீதையும், மைத்துனன் சுக்ரீவனோடு, காம விளையாட்டு நடத்திய, வாலியின் மனைவி தாராவும், கணவனின் செயல் சரியில்லை என்று வாதிட்ட மண்டோதரியும், **பஞ்ச பத்தினிகள்** என்று கொண்டாடப்படுகிறார்கள். மண்டோதரியைத் தவிர, மற்ற நால்வருமே கற்பில் சந்தேகத்துக்குரியவர்கள் என்றாலும், இவர்களை பத்தினி என்கிறது மதம்.

மதம், பத்தினித் தன்மைக்கு கற்பு தேவையில்லை என்று உறுதியாகக் கூறுகிறது.

இதுபோன்ற கருத்துக்கள், என்போன்ற வயோதிகர்களுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுக்கலாம். எப்படிப்பட்ட வாதங்கள்! நூல் முழுவதும் இப்படிப்பட்ட மாறுபட்ட சிந்தனைகள்... ஒரு வரியைக்கூட தள்ளிவிட்டு போக முடியவில்லை.

**சினிமாத்தனம்**

முடிவு சற்று சினிமாத்தனமாக இருந்தாலும், தவறுக்கு வருந்துபவனை வாழ்வதற்கு சமூகம் அனுமதிக்க வேண்டும் என்ற நேர்சிந்தனை, இந்த நூலைப் படிக்கும், பல தன்னினச் சேர்க்கையாளர்களுக்கு, நம்பிக்கையையும், நல்லவழி சென்று நல்லபடி வாழ்வதற்கான ஊக்கத்தையும் கொடுக்கும்.

என்னைப் போன்ற மருத்துவர்களெல்லாம், நோயாளிகளிடம் நிறையப் பேசி, ஆலோசனை வழங்கலாம். ஆனால், ஒரு **"புதைமண்"** - ஒரு **"ஒத்தை வீடு"** ஏற்படுத்துகிற தாக்கம், ஆயிரம் மருத்துவர்களின் சேவையையும் மிஞ்சி நிற்கும்; உடனடிப் பலனையும் ஏற்படுத்தும்.

எல்லா இளைஞர்களும், அவர்களைப் பெற்றவர்களும் கண்டிப்பாகப் பலமுறை படிக்கவேண்டிய நூல். இது சிபாரிசு அல்ல; ஆலோசனை.

---------------

# கத்திமேல் நடந்து...

நமக்குக் கிடைக்கும் தகவல்கள், சில சமயம் வாழ்க்கையைப் பற்றிய நமது அணுகுமுறையையே மாற்றிவிடுகின்றன. என்றாலும், இந்த மாற்றத்திற்கு தகவல்களின் தன்மையும், அவற்றை உள்வாங்கிக் கொள்கிறவரின் மனப்போக்கும், காரணமாகின்றன. என்னைப் பொறுத்த அளவில், ஏழை எளியவர்களைப் பற்றியும், வாழ்க்கையின் எந்த மட்டத்திலும் வதைபடும் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றியும் அதிகமாக எழுதிவந்தேன்; வருகிறேன். கைக்குக் கிடைத்த தகவல்கள், இந்த கருப் பொருளுக்கு வலிவு சேர்த்திருக்கின்றன.

எனது அரசுப்பணி சார்பாக சுற்றுப்பயணம் செய்தபோதும், புதிய நூல்களைப் படிக்கும்போதும், ஒவ்வொரு துறையிலும் வளமான தகவல்களைக் கொண்ட நிபுணர்களை சந்திக்கும்போதும், நான், அதுவரை பெறாத புதிய தகவல் தாக்கங்களைப் பெறுகிறேன். இவற்றை சமூக உலைக் களத்தில், புடம் போடுகிறேன். இந்தத் தகவல்களை, வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது, எனது அணுகுமுறை மாறாமல், ஒரு கிரியா ஊக்கியாகவே இருந்து வருகிறேன். ஆனாலும், நான் மாறாமல், எனது படைப்புக்கள் மாறியிருக்கின்றன. இவற்றின் சமூகத்தளம் அப்படியே இருந்தாலும், அதன் வெளிப்பாடுகள், மற்ற படைப்புகளில் இருந்து, மாறுபட்டு நிற்பதாக நினைக்கிறேன். "வாடாமல்லி"யும், "பாலைப்புறா"வும் இப்படி, ஆய்வு செய்து எழுதப்பட்ட படைப்புக்கள்.

### திசைமாறும் எழுத்தாளக் கவனம்...

மானுடத்தில், கிட்டத்தட்ட கால்வாசிப்பேர் எதிர்நோக்கும் ஆண்மைக் குறைவு பிரச்சினையைப் பற்றி, **ஒத்தை வீடு**, கலை வடிவத்தில் ஆய்வு செய்கிறது. முற்றிலும், ஆண்மையின்மை என்பது வேறு. ஆண்மைக் குறைவு என்பது வேறு. இதனை, டாக்டர். க. காந்தராஜ் அவர்கள், நான் நினைத்ததுபோல், அருமையாக வேறுபடுத்திக் காட்டியுள்ளார். ஆண்மை அற்றவன், தன் பாரத்தை, விதியின்மேல் இறக்கி வைத்துவிட்டு, வேறு வேலைகளைப் பார்ப்பான். ஆனால், ஆண்மைக் குறைவு உள்ளவன் பரிதாபத்துக்குரியவன். இவனுக்கு, அத்தனை ஆசைகளும் உண்டு. ஆனால், அந்த ஆசைகளை, முழுமையாய் செயல்படுத்த முடியாதவனாகிறான். மனைவிக்கோ அல்லது மற்ற பெண்ணுக்கோ, ஆரம்ப சூரத்தனமாக ஒரு எதிர்பார்ப்பைக் கொடுத்துவிட்டு, பிறகு அதையே தன்னைமீறி தரைமட்டமாக்கி விடுகிறான். இவன், நொந்து நொந்து, வெந்து போகிறவன். நமது இரக்கத்திற்கு உரியவன்.

என்றாலும், இவன், மனிதநேயத்தோடு அணுகப்படுவதில்லை. மூலையில் ஒதுக்கி வைக்கப்படவேண்டிய பாத்திரமாகவே வைக்கப் படுகிறான். இத்தகைய பாத்திரத்தை, பிரகாசப்படுத்துவதே, இந்த "ஒத்தை வீட்டின்" நோக்கம். பொதுவாக, ஆண்மைக்குறைவு உள்ளவனின் மனைவி, வெளோடோ ஓடிப்போவதாக அல்லது தற்கொலை செய்து கொள்வதாக எழுதப்படுகிறது. ஆண்மைக்குறைவு உள்ளவனுக்கு உள்ள ஆசை, இயலாமை, ஏக்கம், துன்பம், துயரம், அவமானம், சுய பரிதாபம் போன்றவற்றை எந்த எழுத்தாளியும், அதிகமாக சித்தரிப்பதில்லை. வியாபார ரீதியில், இந்த பிரச்சினைக்குரியவனின் மனைவி மீதே, எழுத்தாளக் கவனம் செல்கிறது.

இந்த வகையில், இந்த "ஒத்தை வீடு", ஒரு பெண்ணின் பாலியல் மொற்றத்தைப் பற்றி மட்டுமல்லாது, அவளது கணவனின் பிரச்சினையையும், அனுதாபத்துடனும் மனிதநேயத்துடனும் சித்தரிப்பதாகக் கருதுகிறேன்.

## அனுபவச் சுழல்

"பயர்" என்ற திரைப்படம், வந்தாலும் வந்தது, அதற்குப் பிறகு, ஆண் பெண் - ஆகிய இருபாலரின் ஓரினச்சேர்க்கை, நியாயப் படுத்தப்படுகிறது. இது, ஒரு தவறான அணுகுமுறை என்று, நான் கருதியபோது, இதற்கு மாற்றாக, ஒரு படைப்பை உருவாக்க வேண்டுமென்று நினைத்தேன். நடுவண் அரசின் தகவல் துறை இணை இயக்குநராக பணியாற்றியபோது, எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம்களை நடத்துவதற்காக, பல ஓரினச்சேர்க்கை இளைஞர்களை சந்தித்து இருக்கிறேன். இவர்கள், எப்படி இந்த பாலியல் திரிபுக்கு உட்பட்டார்கள் அல்லது உட்படுத்தப் பட்டார்கள் என்பதை, நேரடியாகப் பேசித் தெரிந்திருக்கிறேன். இதன் அடிப்படையில் எழுந்ததுதான், "புதைமண்." ஒரு இளைஞன், தெரிவித்த அவனது அனுபவத்தைச் சுற்றியே, இந்தப் படைப்பை, சுழல விட்டிருக்கிறேன்.

இந்த இரண்டு கருப்பொருட்களிலும், ஆபாசம் தொனிப்பது இயல்பு. ஆனாலும், சமூகப் பொறுப்பாளன் என்ற முறையில், கத்திமேல் நடப்பது போலவே, சில விவகாரங்களை, இலைமறைவு காய்மறைவாய் எழுதி இருக்கிறேன். அப்படியே ஆங்காங்கே தவர்க்க முடியாதபடி, ஒரு சில வார்த்தைகள், வெளிப்பட்டால், அவை, ஒரு டாக்டர், தனது நோயாளியை, உடல் திறந்தும், மனம் திறந்தும் பார்ப்பது போன்றது.

## கத்தியும் "கத்தி"யும்...

கத்திமேல் நடந்தாலும், இறுதியில், "கத்தி"யும் சொல்ல வேண்டியது கட்டாயமாகிவிட்டது. இந்த இரண்டு படைப்புகளிலும், இறுதியாக வரும் சிகிச்சைமுறை, கட்டுரைத்தன்மை வாய்ந்ததுபோல் தோன்றலாம். பிரச்சாரவாடை என்றும் பேசப்படலாம். என்றாலும், இது தவிர்க்க முடியாதது

இவற்றைப் படிக்கும் வாசகருக்கு, இந்த இரு பிரச்சினைகளுக்கும், முடிவு கட்டலாம் என்ற ஒரு நம்பிக்கை உணர்வை, தோற்றுவிக்கவேண்டும். அதற்கு, யதார்த்தமான சிகிச்சை முறைகளை, உள்ளது உள்ளபடியே கொடுக்க வேண்டியது, அவசியமாகிவிட்டது. கதையை மட்டுமே விரும்பு கிறவர்களுக்கு, இந்த இரு படைப்புக்களின் இறுதி அத்தியாயங்கள், சலிப் பூட்டலாம். ஆனால், இவை, கருத்தைச் சுற்றிய படைப்புக்கள்; படைப்பைச் சுற்றிய கருத்துக்கள் அல்ல. இவற்றைப் படிக்கிற ஒரு சராசரி வாசகருக்கு, பாலியல் திரிபுவாதிகளை, அனுதாபத்துடன் நோக்கவும், இயலுமானால் மீட்கவும் வகை செய்யும் என்றும் நம்புகிறேன். "**ஒத்தை வீடு**", "மாலைமதி"யில் வெளியான உடனேயே, கொடைக்கானலில் உள்ள, தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்று, இதனை தம்பதியருக்கு வழங்கும் ஆலோசனைக்கு, ஒரு ஆதார நூலாக வைத்திருப்பதாய் அறிகிறேன்.

இந்த இரண்டு படைப்புகளும், "மாலைமதி"யில், வெளியானவை. பொதுவாக, மாத நாவல்கள், வாசகனை மலினப்படுத்தும் வகையிலிலேயே வெளியிடப்படுவண்டு. என்றாலும், நான் எப்படி வேண்டுமென்றாலும் எழுதலாம், அப்படியே பிரசுரிக்கப்படும் என்று வாக்களித்ததோடு, தரமான ஓவியங்களோடு, அந்த வாக்கை நிறைவேற்றிய, "குமுதம்" ஆசிரியக் குழுவிற்கு, என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரண்டு படைப்புக்கருக்கள், உருவம் பெறுவதற்கு, டாக்டர். க. காந்தராஜ் அவர்களே காரணமாவார். இந்த படைப்பிற்கு, ஒரு அற்புதமான முன்னுரையையும் வழங்கியிருக்கிறார். அவர் தொழில் முறையில், பாலியல் நிபுணராக இருந்தாலும், பொது வாழ்வில், மிகச் சிறந்த பேச்சாளர்; இலக்கியவாதி. அவருக்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோல், வட சென்னையில் வாழும், தாவரயியல் பேராசிரியர், முனைவர். சுப்பிரமணியன் அவர்கள், வழக்கம்போல், பல அரிய விஞ்ஞானத் தகவல்களை தந்துதவி, இந்த படைப்பை வளப்படுத்தியதற்காக, நன்றி கூறிக் கொள்கிறேன்.

இந்த நூலை, கலைவனின் பிற நூல்களைப்போல், அருமையாக அச்சிட்டுக் கொடுத்த மணிவாசக நூலகப் பேராசிரியரும் சிந்தனையாளருமான முனைவர் **ச. மெய்யப்பன்**, அவருடன் இணைந்து பணியாற்றும் தோழர்கள் **சோமு, குருமூர்த்தி** ஆகியோருக்கும், இந்த மாதிரியான, அறிவும் உணர்வும் கலந்த படைப்புக்களை, எதிர்பார்த்து வாங்கிப் படிக்கும், எண்ணற்ற வாசகத் தோழர்களுக்கும், என் மனமார்ந்த நன்றி.

தோழமையுடன்,

*சு. சமுத்திரம்.*

பாலியல், இனப்பெருக்கம் போன்றவற்றில், நாம் இயற்கையிடம், குறிப்பாகத் தாவரங்களிடமிருந்து நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும். நமது முழங்கால் உயரத்திற்குச் சுருட்டை இலைகளோடு கிடக்குதே பிரளிச் செடி அது வண்ணத்துப் பூச்சி, ஆரம்பத்தில் புழுவாய் இருப்பதுபோல், தரையோடு தரையாய் சின்ன சுருட்டை முளையாய்த் தோன்றும். இப்படிப் பல முளைகள் சிதறிக் கிடக்கும். இந்த முளைகள் எல்லாமே பெண் பாலாய் இருந்தால், இந்த முளைகளில் ஒன்று வேகவேகமாய் வளர்ந்து, பெண் செடியாகி, ஒருவித இனமாற்றத் திரவத்தைச் சுரக்கும். இந்தத் திரவம், தரைக்கு வந்து, நீரில் கரைந்து, பிற முளைகளில் ஊடுருவி, அத்தனை பெண் முளைகளையும், ஆண் செடிகளாக்கி விடும்.

ஒரு ஆல விதை, எப்போது செடியாகி, மரமாகி, விழுதாகி, பல்கிப் பரவவேண்டும் என்பது, அந்த விதையிலேயே கணிப்பொறி திட்டங்களாய் உள்ளன. இந்த திட்ட நிகழ்வுகள் நிறைவு பெறுவதற்கு, அந்த விதையை விதைப்பதும், விதைத்ததை சுற்றி முள் வேலியைப் போடுவதும், உரமிடுவதும், காடுகளில் தானாகவும், நாடுகளில் நம்மாலும் நடைபெறுகிறது. இந்த பராமரிப்பு தவறும்போது, இந்த நிகழ்வுகளுக்குள் தடுமாற்றம் ஏற்படுகிறது.

இதேபோல், ஒரு குழந்தைக்குள் இருக்கும், மனிதனை அல்லது மனுஷியை - முழுமையாக வெளிக்கொணர, குடும்பத்தளமும், சமூகத்தளமும் ஒத்து வராதபோது, அந்தக் குழந்தை, பாலியல் திரிபு போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபடும் மனிதனாகிறது. இவனுக்கு அல்லது இவளுக்கு பாலியல் மீறல், பழக்கமாகிறது.

# ஒத்தை வீடு

அந்த வீட்டுக்கு வெளிப்புறத்தில், ஒரு வண்ணக்கோழியை செல்லமாகச் சிணுங்கியபடியே துரத்திக்கொண்டிருந்த வாலிப வனப்புச் சேவல் ஒன்று, திடுதிப்பென்று பின் வாங்கியது. வீட்டின் வெளிப்புற மாடத்தின் மேல் ஒன்றோடு ஒன்றாய் ஒட்டி, ஜோடியாய்க் கிடந்த சிட்டுக் குருவிகள் இறக்கைகளை உதறிய படியே எதிர் எதிர்த் திசைகளில் பறந்து போயின. அதே மாடத்திற்குள் காட்சி அளித்த பிள்ளையாருக்குத் தீபம் ஏற்று வதற்காகச் சிறிது குனிந்த காந்தாமணி, விளக்கேற்றாமல் தீப்பெட்டியும் குச்சியுமாக நிமிர்ந்தாள். காந்தாமணியின் அம்மா வான சொர்ணம்மா, பேசிய பேச்சையெல்லாம் வலது காதில் வாங்கி இடது காதுவழியாய் விட்டுக் கொண்டிருந்த அண்டை வீட்டு உமா, தனது வீட்டை நோக்கிப்போகப் போனாள். ஆனாலும் இங்கே நிற்பதா, அங்கே போவதா என்று முடிவெடுக்க முடியாமல், ஒரு காலை முன்வைத்து, மறு காலைப் பின்வைத்துத் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

இத்தனை பேரின் அத்தனை வெளிப்பாடுகளுக்கும் காரணமான மனோகர், வீட்டின் வெளிப்பக்கத்தில் வாசலுக்கு முன்னால் நின்றான். அவனது வலது கர வளைவில் ஒரு தோல் பை தொங்கியது. இடது கைப்பிடியில் ஒரு சூட்கேஸ் ஒட்டப் பட்டதுபோல் கிடந்தது. வலது தோளில் சோல்னாப் பையும், இடது கையில் தூக்குப் பையும் தொங்கி வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவன் போல் நின்றான். அனைவரையும் ஒட்டு மொத்தமாகப் பார்த்தான் வீட்டுக்குத் திரும்பியதால் ஏற்பட்ட எதிர்பார்த்த

மகிழ்ச்சியுடன், அக்காவைப் பார்த்த எதிர்பாராத மகிழ்ச்சியும் சேர்ந்து கொள்ள, 'காந்தாமணி அக்காவை ரெட்டிப்பு மகிழ்ச்சியுடன் பார்த்தான். மனைவியைக் கண்களால் தேடிப் பார்த்தான். கண்ணில் படவில்லை. மீண்டும் அம்மாவை விட்டு விட்டு அக்காவையே பார்த்தான். அவள், தான் வந்தது தம்பிக்கு பிடிக்கவில்லையோ என்று அனிச்சமலராய் ஆகும் வரை பார்த்தான். அப்புறம்தான் பேசினான்...

"எப்போக்கா வந்தே...?"

"இன்னிக்கு காலையிலதான்..."

"அறுவடை சமயம்... அடைமழை நேரம்... ஏன் இப்படி திடுதிப்புன்னு..."

"நான் சொல்லாமல் கொள்ளாமல் வரப்படாதா...?"

"ஒம்மா புத்தி... ஒன்னை விட்டுப் போகுமா... நிலத்தை வித்துட்டோ விற்காமலோ என்னோட தங்கிடுன்னு சொல்றவன் நான்?"

இதற்குள், "என் புத்தில என்னடா கண்டே..." என்று முற்றத்து மேல் திண்ணையில் நின்ற சொர்ணம்மா, வீதிக்கே ஓடிவந்தாள். அறுபத்தைந்து ஆண்டுகளைக் கொண்ட மொக்கையான' முகம். கண், வாய், மூக்கு, காது ஆகியவை அந்த மொக்கையில் தனித் தனியாய் ஒட்டப்பட்டது போன்ற தோற்றம்... பின் நெற்றி முன் தலையை ஆக்கிரமித்தது போல் பொட்டல்... அதில் ஒரு பள்ளம் ... பள்ளத்தாக்கைச் சுற்றிய மரங்கள் போல், அந்தப் பள்ளத்தைச் சுற்றிய முடிக் கற்றைகள்... காந்தாமணி, தம்பியிடம் இருந்த சூட்கேஸையும், ஜோல்னாப் பையையும் வாங்கிக் கொண்டிந்த போது, சொர்ணம்மா அங்கேயே, அந்த நிமிடமே ஒப்பித்தாள்...

"ஊர்ல... ஆறு மாசமா பேச்சு மூச்சி இல்லாமக் கிடந்த பாவிப் பயலுவ... பழையபடியும்... புத்தியக் காட்ட ஆரம்பிச்சுட்டாங்களாம்... அக்காவோட... நிலம் இருக்கு பாரு... மூணு மரக்கால்... நாலு செண்டு... அசல் பட்டா இடம்... அதுல வண்டிப் பாதை வேணுமுன்னு ஊர்க்காரனுவ கேட்டாங்களாம்... அக்கா, பட்டா நிலமுன்னு சொல்லியும் கேட்காமல், ஊர்க்காரனுவ வண்டி அடிக்காங்களாம். நிலத்துல முளைச்ச காணப் பயிருல்லாம் கரையான் புத்தாய் ஆகிட்டாம்... அவங்க நாசமாப் போகணும்... போன இடம் புல்லு முளைச்சுப் போக.. நீதான் பழையபடியும் பெரிய இடத்துல சொல்லணும்... இந்தத் தடவை... அவங்க காலுல கையில விலங்கை மாட்டி... போலீஸ் இழுத்துட்டுப் போறதுக்கு, நீ ஏற்பாடு செய்யணும்.."

"ஒனக்கு மூளை இருக்குதாம்மா...? தம்பி வந்ததும் வராததுமாய்..."

மனோகர், அக்காவையே பார்த்தான். பார்க்கப் பார்க்க எரிச்சலும், பாசமும் மாறி மாறி வந்தன. உச்சிமுதல் பாதம் வரை சமச் சீரான உடம்பு. பச்சைக் கருப்பு... பச்சையான கருப்பல்ல... பாசிப் பச்சையும், நீலக் கருப்பும் கலந்து குழைந்த வாளிப்பான நிறம்... எலும்புகள் தேக்காகவும், நரம்புகள் பித்தளை ஒயர்களாகவும், சதைகள் செப்புக் கட்டிகளாகவும் உருவெடுத்து, எஃகு போன்ற தோலுக்குள் அடங்கியது போன்ற மல்லுடம்பு...

மனோகர், எதுவும் பேசாமல் உள்ளே வந்தான்... முற்றத்தில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து பின்பக்கமாய்ச் சாய்ந்து, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். அக்கா கொண்டு வந்த ஒரு செம்புத் தண்ணீரை தூக்கிப்பிடித்து, நீரை அருவியாகவும், வாயைப் பள்ளத்தாக்காகவும் ஆக்கிக் கொண்டிருந்த போது, சொர்ணம்மா சொன்னதையே மாற்றிச் சொன்னாள்...

"பட்டா நிலத்துல வண்டிப் பாதை போடுறத்துக்கு, எங்கப்பனுக்கு பிறந்தானுவளா? இல்லை ஒன் மச்சானுக்குப் பிறந்தானுவளா- எவ்வளவு கொழுப்பு இருந்தால்- அடுத்தவன் நிலத்தை வாயில போடுவானவ-? அவனுவ துள்ளத் துடிக்கப் போவனும்- கொள்ளி போட பிள்ளை இல்லாமல் போகிற இடத்துல சாகணும்- வாந்தி பேதில போகணும்- மனோகர்! இத விடப்படாதுடா- இப்பவே போன் போட்டு, அவங்க கையில காலுல விலங்கு மாட்டி, போலீஸ்காரன் அவனுவள நடு ரோட்ல நாய இழுத்துட்டுப் போற மாதிரி போக வைக்கணும்- யாரை விட்டாலும் அந்த ராமசாமியை மட்டும் விடப்படாது... கொள்ளையிலே போவான்-"

மனோகர் பாதிச் செம்புத் தண்ணீரைத் தரையில் வீசியபடியே, புரையேறிய தலையோடு சீறினான்.

"சும்மா கிடம்மா... எக்கா... ஆறு மாதத்துக்கு முன்னாலதான் இதே மாதிரி பிரச்சினையில தலையிட்டு, ராமசாமி வகையறாக்களை உள்ளே போட்டோம்... போலீஸ் என்னதான் தெரிஞ்சவங்களா இருந்தாலும், ஒரு தடவதான் சொல்லலாம்... அடுத்த தடவ சொன்னால்... நமக்குத்தான் அசிங்கம்..."

அக்கா, காந்தாமணி, அசைவற்று பேசாமல் நின்றபோது, தாய்க்காரி மகளுக்கும் சேர்த்துப் பேசினாள்.

"இந்தப் பாவி மொட்டக்கிட்ட, காலையிலேயே படிச்சுப் படிச்சுச் சொன்னேன்... ஒன் தம்பியை நம்பாதே நம்பாதேன்னு தலையில அடிக்காத குறையாச் சொன்னேன்... அவன் பழைய

மனோகர் இல்ல... வீட்டுக்குக் கெட்ட பிள்ளையானாலும் பரவாயில்ல... ஊருக்கு நல்ல பிள்ளையாய் பேர் வாங்க நினைக்கான்னு சொன்னேன். கேட்டியாடி... என் பேச்சை...? எப்படிப் பலிச்சிட்டு பாரு!"

மனோகர், அதட்டினான்...

"எம்மா... இதுக்கு மேலே பேசினே... திண்ணைக்குக் கூட வராமல், திரும்பிப் பாராமல் போயிடுவேன்... நீயும் சண்டைக் கோழியாய் நிற்கப்படாதுக்கா... ஊரையும் அனுசரித்துத்தான் போகணும்... ஊர்ப் பாதைக்குத்தானே கேட்டாங்க... பெருந் தன்மையா விட்டுக் கொடுக்கலாமில்ல?"

"இந்தா பாருப்பா... நீ செய்யணும் என்கிறதுக்காக நான் வரல... ஒன்னைப் பார்க்கறதுக்காகக் கூட வரல... என் புது நாத்தனாரைப் பார்க்க வந்தேன்... பார்த்துட்டேன்... நாளைக்கே போயிடுவேன்... கவலைப்படாதே..."

"மூக்குக்கு மேலே கோபம் மட்டும் வந்துடும்... சரி விவரமாய்ச் சொல்லு..."

"ஊர்ப்பாதை... வெள்ளையன் தோட்டத்தோட முடியுது... அதுக்கு நேரா... சீமைச்சாமி நிலம், நீள வாக்குல இருக்குது... அதுல பாதை கேட்கலாமில்ல? அதவிட்டுட்டு, பத்தடி தள்ளி இருக்கிற என் நிலத்துல கேட்கிறது என்ன நியாயம்...? ஊர்ப்பாதையை வளைச்சு என் நிலம் வழியாய் விடாமல், சீமைச்சாமி நிலம் வழியா நேராய் விடலாம் இல்லியா... ஏன் விடல...? ஏன்னா, சீமைச்சாமிக்கு ஆள் பலம் இருக்குது... நான். நாதியத்தபய மகள்... இல்லாதவன் பெண்டாட்டி... எல்லோருக்கும் இளக்காரமான மயினிதானே...?"

அம்மாக்காரி, சவாலிட்டாள்.

"நான் இருக்கும்போது நீ.. எப்படி நாதியத்துப் போவே... நாளைக்கே நானும் ஊருக்கு வாரேன்... எந்தப் பயல் வண்டியடிச் சுட்டு வந்தாலும் முன்னால போய் நின்னு மூக்கணாங் கயிறைப் பிடிக்கேன்...!"

மனோகர், சளைத்தான்.

"சீச்சீ- இது வீடா-? ஒரு மாசம் நிம்மதியாய் டில்லியில் இருந்தேன். ஒருவன் கிட்டச் சிபாரிசுக்கு போறது பிச்சை எடுக்கிறது மாதிரின்னு யாருக்கும் தெரியல-"

"ஒங்களுக்குத்தான் தெரியல.. ஊர்க்காரன். இருக்கிறவன் நிலத்தை விட்டுவிட்டு, இல்லாதவன் நிலத்தை பிடுங்க வந்தால் எப்படிங்க? பாதி நிலத்தை வேணுமுன்னா, ஊர்ப்பொதுப்

பணத்துல வாங்கிக்கன்னு அண்ணி சொல்லி இருக்காங்க... அதுக்கு முடியாதுன்னா... அது அடாவடிதானே?... ஊர்க்காரன், ஆள் பலத்தை தப்பா பயன் படுத்தும் போது... நீங்க ஒங்க பேட்ச் மேட் எஸ்.பி.கிட்ட இருக்கிற நட்டை சரியா பயன்படுத்துறதுலே என்ன தப்பு...?"

மனோகர், நிமிர்ந்து பார்த்தான்... ஈரம் கசிந்த தலைமுடியை பின்பக்கமாய்த் தட்டி விட்டபடியே, சங்கரி அவனைப் பார்த்தாள்... அடுத்தவர் குடும்ப விவகாரத்தில் ரசனை கண்டு நின்றாலும், போவது போல் பாவலா செய்த பக்கத்து வீட்டு உமாவை அழுந்தப் பிடித்தபடியே, கணவனுடைய பதிலுக்காகக் காத்து நிற்பவள் போல் முகம் தூக்கி நின்றாள்... மனோகர், எதுவும் பேசாமலேயே அவளைப் பார்த்தான்... ஒரு மாதப் பிரிவிற்குப் பிறகான பரிவுப் பார்வை... அவள் உடலெங்கும் கண்களை ஊடுருவ விட்டபடி பார்த்துக்கொண்டே இருந்தான். சங்கரி மீண்டும் அவனை உசுப்பினாள்.

"இதையாவது செய்யுங்க..."

மனோகரின் பிரிவுப் பார்வை, பரிதாபப் பார்வையானது... அவளை ஊடுருவிப் பார்த்தக் கண்கள் தன்னைத்தானே உள்முகமாய்த் தேடின... 'இதையாவது செய்யுங்கன்னு எந்த அர்த்தத்தில் சொல்றாள்? யதார்த்தமா... இல்ல குத்தலா... நோ... நோ... அவள் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியலியே...'

அக்கா காந்தாமணி, நிலைமையைச் சமாளித்தாள்.

"சரி... சரி... நாளைக்கு ஆற அமரப் பேசலாம்..."

"பேசாம இங்கேயே வந்திடுக்கா..."

"அதையும் சேர்த்து நாளைப் பேசலாம்... எம்மா! சங்கரி... மொதல்ல தம்பி குளிக்கட்டும்... வெந்நீர்ல குளிச்சாத்தான் அலுப்பு தீரும்... உடல்வலி போகும்... கீசரப் போடு..."

"கீசரு ரிப்பேரு அண்ணி..."

"நல்ல பொண்ணு.... அப்போ அடுப்புல போடு... தண்ணி சூடாகணும்... அவ்வளவுதானே...?"

சங்கரி, கணவனை ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டே..., உள்ளே சமையலறைக்குள் போகப் போனாள்... பிறகு திரும்பி வந்து திண்ணையில் வைக்கப்பட்ட சூட்கேஸைத் தூக்க முடியாமல் தூக்கியபடி நின்றாள்... இன்னொரு லெதர் பேக்கைக் கண்களால் சுட்டிக் காட்டி, உமாவைத் தூக்கி விடும்படி அதே கண்களால்

கெஞ்சினாள்... ஆனால் உமா, கண்டுக்கவில்லை... 'அந்நியன் பொருளைத் தொடுவது அவனை தொடுவது மாதிரிதானே... கற்பு கெட்டுப் போகாதா...'

உமா, வெளியே போய்க் கொண்டிருந்தபோது, மனோகர் எழுந்து வீட்டுக்குள் போகப் போனான். அவனையே பார்த்து நின்ற அக்காவின் தோளில் கைபோட்டபடியே, திண்ணைப் படியில் அவன் கால் வைத்தபோது, ஒரு மோட்டார் பைக் சத்தம்... உமாவின் கணவன் இந்திரன், இடது பக்கமாக ஒடிக்கப்போன பைக்கை அங்கேயே நிறுத்திவிட்டு, உள்ளே வந்தான். உமாவை, 'ஒனக்கென்ன இங்கே வேலை' என்பது மாதிரி, எள்ளும் கொள்ளுமாய்ப் பார்த்தான். அவளை, அவன் பார்த்த தோரணை, உமாவைத் தலை முடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போக வந்தவன்போல் தோன்றியதே தவிர, மனோகரை பார்க்க வந்தவன்போல் தோன்ற வில்லை. ஆனாலும், கடித்த பற்களை விடுவித்தபடியே ஒப்புக்குக் கேட்டான்.

"என்ன மனோ... டில்லியில் பயிற்சி எப்படி இருந்தது..."

"உட்காருங்க இந்திரன் ஸார்... பயிற்சி... பொல்லாத பயிற்சி..."

"உமா... வீட்டுக்குப் போ... அம்மா தேடுவாள்... அப்போ பயிற்சி பயனில்லன்னு சொல்றீங்க..."

"அரசாங்கத்திலே இந்தப் பயிற்சி என்கிறதே ஒரு ஏமாத்து நாடகம்... மேலிடத்துக்குப் பிடித்தவங்க அதை கவனிக்க வேண்டிய முறையில கவனிக்கிறவங்க... ரிட்டயர்டாகிறதுக்கு ஒரு மாசத்துக்கு முன்ன கூட வெளிநாட்டுப் பயிற்சிக்குப் போவாங்க... வேண்டாதவங்கள கழித்துக்கட்ட உள்நாட்டுப் பயிற்சின்னு அனுப்புவாங்க..."

"நீங்க எந்த வகையில சேர்த்தி...?"

"இரண்டுலயும் சேர்த்தி இல்ல... எங்க சர்வீஸ் அதிகாரிங்களுக்குப் பயிற்சி கொடுக்கிறதுக்குன்னு டில்லியில் ஒரு நிறுவனம் இருக்குது... இப்போ பயிற்சியாளர்கள் அதிகமாகவும், பயிற்சி பெறுகிறவங்க குறைவாகவும் ஆகிப் போச்சு... ஆள் பஞ்சம். இதனால என்னை வரச்சொல்லிட்டாங்க... ஆனாலும் சும்மா சொல்லப்படாது... தமிழக அரசின் இல்லத்தில் ஏஸி ரூம்... அருமையான சாப்பாடு... தகராறுக்கு வராத ஆட்டோ டிரைவர்... அப்புறம் சைட் அடிக்கிறதுக்கு ஏகப்பட்ட அழகிகள்..."

மனோகர், குரலைத் தாழ்த்திப் பேசியபோது, இந்திரன், உமா போய்விட்டாளா என்று கண்களைச் சுழற்றி ஒரு தாவு தாவி விட்டு, கிசு கிசுப்பாகக் கேட்டான்...

"ஏதாவது சிக்கிச்சுதா பிரதர்...? எனக்கு சல்வார் கம்மீஸ்களை ரொம்பப் பிடிக்கும்..."

"இதுல ஒரு வேடிக்கை தெரியுமோ இந்திரன் ஸார்... டில்லிப் பஸ்ல அடித்துப் பிடித்து உட்காருவீங்க... ஒருத்தி, அதுவும் அழகான இளம் பெண்... பொத்துன்னு ஒங்க இருக்கைப் பக்கம் உட்காருகிறாள்... உங்களை நெருக்கியடித்துக் கிடக்காள்... தோளில் தோள் படுது... கையிலே கை படுது... ஆனால் நீங்க ஆயிரத்தெட்டு ஆஸ் தொல்லையால, அவள் உட்கார்ந்ததையே கவனிக்கல... அவள் ஆர்.கே. புரத்துல இறங்குறாள்... இறங்குன இடத்துல, இன்னொருத்தி ஏறுறாள். ஒங்க இருக்கைப்பக்கம் இடை வெளிவிட்டு உட்காருறாள்... நீங்க உஷாராகுறீங்க... பக்கத்துல ஒரு அழகுப் பெண் இருக்கிற கித்தாப்பு... ஒங்களுக்கு வந்துடுது... அவளைத் தொடாமலேயே பரவசமாகிறிங்க... உடனே அந்தப் பெண், திடுக்கிட்டு உங்களை முறைக்கிறாள்... பஸ் மோதி பாக்கு என்கிற இடத்துல நிற்கும்போது, வேற ஒரு சீட் காலியாயிடுது... அதுல போய், உட்காருகிறாள்... இதுக்கு என்ன அர்த்தம் ஸார்...? இதுக்குப் பேர்தான் டெலிபதியோ... இதுக்குப் பேர்தான் உள்ளுணர்வோ... ஆச்சரியமாய் இருக்குதுல்ல...?"

இந்திரன் ஒரு கண்டுபிடிப்பைச் சொல்லப் போனபோது, சங்கரி திண்ணைக்கு வந்து அறிவித்தாள்...

"வெந்நீர் ரெடி. காப்பி குடிக்கிறீங்களா ஸார்..."

"நோ தேங்ஸ்... சாப்பாட்டுச் சமயம் பாருங்கம்மா... அப்புறம் ஒங்க ஸ்டாப் செலக்ஷன் கமிஷன் பரீட்சை ரிசல்ட் வந்ததும், என்கிட்டச் சொல்லுங்க... கமிஷன்ல எனக்கு தெரிஞ்சவங்க இருக்காங்க... இன்கம்டாக்ஸ், என்போர்ஸ்மெண்ட், சி.பி.ஐ., இப்படிப்பட்ட பவர்புல் டிபார்ட்மெண்ட்ல போஸ்டிங்க போடச் சொல்றேன்..."

"எந்த டிபார்ட்மெண்ட்ல வேணுமுன்னாலும் போட்டுட்டுப் போகட்டும்... முதல்ல பாஸாகிறேனானு பார்ப்போம்..."

"நீங்க பாஸாகாட்டால், யாருமே பாஸாக முடியாது... எங்க உமா மாதிரியா நீங்க...? சரியான மக்கு... இரண்டு தடவ எழுதியும் தேறல... நீங்க... மனோகர் மாதிரி கிளாஸ் ஒன் சர்வீஸ் எழுதணும்..."

"நீங்க மட்டும் இன்டெலிஜெண்ட் இல்லியா... இவர மாதிரி.. நீங்களும் எழுதி இருக்கலாமே...?"

"புத்தியைக் கடன் கொடுத்துட்டேன்... சம்பளத்தை நம்பி மோசம் போயிட்டேன்... கழுதை மேய்த்தாலும் சர்க்கார் கழுதையை மேய்க்கணும் என்கிறது மறந்து போச்சு..."

"இப்போ மட்டும் ஒங்களுக்கு என்ன குறை... இருக்கிறதை வைச்சே நீங்க திருப்திப்படலாம். அய்யய்யோ... வெந்நீர் ஆறிடும்... ஒங்களைத்தான் எழுந்திருங்க..."

மனோகர் எழுந்தான்... அவன் உள்ளே போனாலும், தான் வெளியே போகப் போவதில்லை என்பது போல், இந்திரன் நாற்காலியில் கைகளை விரித்துப் போட்டான். இதற்குள், வெளியே தெருவில் சத்தம்... சொர்ணம்மாவுக்கும், பத்து பாத்திரம் தேய்க்கும் ஒரு நடுத்தர வயதுப் பெண்ணுக்கும் வாயத் தகராறு- ஒடிந்து விழுவது போல் மார்பற்றுப் போன அந்தப் பெண், போராளியாய் பேசினாள்... அந்த வீட்டு காம்பவுண்டு சுவருக்கு வெளியே எட்டிப் பார்த்த செவ்வரளி கிளைகளைச் சுட்டிக் காட்டிச் சொன்னாள்...

"அதோ... அதுல நேத்து ரெண்டு பூ பறிச்சது நிசந்தான்... நீ சத்தம் போட்டதும், ஒன் கிட்டயே அந்தப் பூவைப் போடலியா... ஆனா, இன்னிக்கு சாமி சத்தியமா நானு பூப்பறிக்கல..."

"சரியான புழுகிணிடி... அதெப்படி... நேற்று ரெண்டு பூ இருந்த இடத்துல இன்னைக்கு இல்லை...? சொல்லு... பதில் சொல்லுடி..."

"சரியான மாங்காய் மண்டையாய் இருக்கியே... பூத்த இடத்துலேயே பூக்கணுமுன்னு சட்டமா..."

"யாருடி மாங்கா மண்டை....? பன்னாடைப் பயமவளே... பல்லை... உடைப்பேன்... இன்னொரு தடவை சொல்லுடி பார்க்கலாம்..."

"மாங்காமண்டை..... மாங்கா மண்டை...."

மனோகருக்குக் கோபம் வந்தது. இந்திரனுக்குச் சிரிப்பு வந்தது. கோபக்காரன், குரோதமாய்க் கேட்டான்-

"இந்தா பாரும்மா. மரியாதையா போயிடு... வம்புச் சண்டைக்கு வந்தே, போலீஸ்ல ஒப்படைக்க வேண்டியது வரும்..."

"சரியான எட்டன் நீ... போலீஸ்ல ஒரு வாரம் வச்சிருப்பான்... அங்கேயே குடித்தனம் செய்யவா விடுவான்? ஒனக்கெல்லாம் இம்மாம் பெரிய உடம்பு எதுக்குய்யா? அம்மாக்காரிய அடக்குறதுக்கு வக்கில்ல... வந்துட்ட பெரிசா... தல காஞ்சவங்கள்னா இளக்காரமா...? எனக்கும் செட்டு இருக்குய்யா..."

"அடியே... செருப்பால அடிப்பேண்டி..."

"பாத்தியா... அந்த தத்தேறிப் பேசுற பேச்சை... சின்னப் பிள்ளாண்டான் மாதிரி நிற்கிறே... அந்தக் கஸ்மாலக் கெய்வியை தள்ளிட்டுப் போய்யா..."

மனோகரின் உதடுகள் துடித்தன. கண்கள் எரிந்தன... கைகள் துடித்தன... ஆனால் கால்கள் அந்தப் பெண்ணை நோக்கி நகர மறுத்தன. நல்ல வேளையாக காந்தாமணி ஓடி வந்து அம்மாவை, மாட்டை இழுப்பது போல் இழுத்துக்கொண்டு போனாள். சங்கரி, கணவனின் கையை பிடித்து இழுத்தபடியே, எரிச்சலாய்ப் பார்த்த அந்தப் பத்துப் பாத்திரத்தை, தங்கப் பாத்திரத்தைப் பார்ப்பது போல் பார்த்து, 'பேசினது தப்புத் தான்... நீ போம்மா...' என்று கெஞ்சினாள். 'அப்படி சொல்லு மவராசி...' என்று சொல்லிவிட்டு, அந்தப் பெண் குதிபோட்டு நடந்தாள்...

வீட்டுக்குள் கோபமாய்க் காலடி வைத்த மனோகர், தூக்குபையை, காலால் இடறியபடியே மாடிக்குப் போனான். காந்தாமணியும் சங்கரியும் சமையலறைக்கு வந்தார்கள். சொர்ணம்மா, அங்கேயும் வந்து ஆடினாள்.

"அடியே காந்தாமணி... எனக்குன்னு இப்படி ஒரு மருமகள் வாய்த்திருக்காள் பாரு... அவள் தலையை இழுத்து... யாருடி மாங்கா மண்டைன்னு ரெண்டு கேள்வி கேட்டு, நாலு சாத்துச் சாத்தாம, எதிரிகிட்ட தோப்புக் கரணம் போடுறாள் பாரு..."

"தப்புத்தாம்மா... நாளைக்கு வட்டியும் மொதலுமாத் திட்டுவாள்... நீ பிள்ளையாருக்கு விளக்கேத்திட்டு வா..."

அம்மா போனதும், கேஸைப் பொருத்திய காந்தாமணி கீழே குனிந்து, நாத்தனார் கையில் இருந்த சப்பாத்திக் கட்டையை பறித்தபடியே கூறினாள்...

"நீ... மாடிக்கு போயேன்... நான் சமையல் வேலையைப் பார்த்துக்கிறேன்..."

"வேண்டாண்ணி... அப்புறமாய்ப் போறேன்... அவரு பசியோட இருப்பாரு..."

"அதனாலதான் போகச் சொல்றேன்... ஒரு மாதப் பசி பாரு..."

காந்தாமணி, சங்கரியைப் பார்த்து கண்களைச் சிமிட்டினாள்... அவளோ, தலையைத் தாழ்த்திக் கொண்டு, சப்பாத்திக்கு மாவு பிசைய ஆரம்பித்தாள். இதற்குள் மாடிக்கு போன மனோகர், வேடம் கலைத்து, லுங்கி பனியனோடு சமையல் அறைக்குள் வந்தான். அக்காவை அங்கே எதிர் பாராதது போல், ஆள்காட்டி விரலை வாயால் கடித்தான். காந்தாமணி, தம்பியையும் சங்கரியையும் மாறி மாறிப் பார்த்துப் பூரித்துப் போனாள்... ஆயிரம் பெண்களை ஒதுக்கி, ஆயிரத்தில் ஒருத்தியாக இந்த சங்கரியை தம்பிக்குத் துணையாக்கியவள் இவள்தான். 'இந்த ஜோடிக்கு எதிராக எந்த

ஜோடியும் இருக்க முடியாது. மன்மதன் - ரதியே பொறாமைப்பட வேண்டும்... தம்பியை விட இவள் இரண்டு விரல்கட்டைதான் உயரக் குறைவு... தம்பிக்குத் தடிப்போ, மடிப்போ இல்லாத தேகம். நாத்திக்கு வயிறு தெரியாத லாவகம்... கொஞ்சம் ஒல்லியானாலும் மல்லி... கல்யாணமானதும் பூரிப்பில் தடிக்க வேண்டும். இன்னும் தடிக்கல. ஆனாலும் வளைவில்லாத மூக்கு... பயித்தங்காய் விரல்கள்... அடர்ந்த முடி... படர்ந்த முகம். தம்பி மட்டும் லேசுபட்டவனா. மாநிறம்... என்றாலும் அதில் ஒரு பளபளப்பு... ராஜ பார்வை... கோணாத உடம்பு... கோடு போட்டது மாதிரி சமமான தோளு... எம்மாடி... என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கே...'

சமையலறைக்குள் அல்லாடிய மனோகரை, 'நீ மொதல்ல வெளில போடா...' என்று மொதலுக்கு இரட்டை அழுத்தம் கொடுத்தாள்... அவன் போனதும், மாவு பிசைந்த சங்கரியை, அப்படியே தூக்கி, இரண்டு கைகளையும் குவித்து, குவித்துப் பிடித்தபடியே இழுத்து, வாஷ் பேசினுக்குக் கொண்டு வந்தாள்... நாத்தியின் கைகளைக் கழுவி விட்டாள்... தலை முடியை ஒதுக்கி விட்டாள். முகத்தை ஈரக்கையால் பாலீஷ் போட்டாள். பின்னர் அவள் முதுகைத் தள்ளித் தள்ளி, மாடிப் படிகளின் முனையில் விட்டாள்... அவள் படியேறி மேலே மறைந்த பிறகுதான், சமையலறைக்குள் வந்தாள்... அவளுக்கு முன்னால், அம்மா, அங்கே நின்றாள். மகள் வந்ததும் வராததுமாக அவள் காதைக் கடித்தாள்...

"ஒரு மாசம் கழிச்சு... புருசன் வந்திருக்கான். அவள் முகத்துக்குப் பௌடர் போடல... கண்ணுல ஒரு கிறக்கம் இல்ல... வாயில ஒரு சின்னச் சிரிப்புக்கூட இல்ல... இவள்ளாம் ஒரு பொம்புளையாம்... சரியான ஆம்புளப் பிறவி... இந்த மாதிரி சமயத்துல... அந்தப் பாவி மனுஷன் வெளியூர்ல மூணு நாள் தங்கிட்டு வந்தாக்கூட போதும்... நான் முகத்த அலம்பி... பொட்டு வச்சு... பூ முடிச்சு..."

"என்னம்மா... நீ... நான் ஒன் மகள்... என்கிட்ட போயி..."

"ஆபத்துக்குத் தோசம் இல்லடி..."

"மொதல்ல இங்கிருந்து போம்மா..."

அம்மா போய்விட்டாள். ஆனால் அவள் சொன்னது போகவில்லை.. ஒரு வேளை அம்மா நினைத்தது மாதிரியே இருக்குமோ... எப்படிக் கண்டுபிடிக்கலாம்...

கைகளை சொடக்குப் போட்ட காந்தா மணிக்கு, அவர்களது அந்தரங்கத்தைக் கண்டு பிடிக்க ஒரு வழி கிடைத்தது.

# 2

சங்கரியின் தலை, பாதிப் பூந்தோட்டமாகியது... முடி வளையங்கள், பூப்பதியங்களாயின... காந்தாமணி அண்ணிதான், மெனக்கெட்டு, மார்க்கட்டுக்குப் போய் மல்லிகை, முல்லை... கனகாம்பர பூ வகைகளை, முழக் கணக்கில் வாங்கி வந்தாள். முல்லைப் பூவை முன் தலையில் வைத்து, மல்லிகைச் சரத்தை பின் தலையில் சூடி, அதன் மேல் கனகாம்பரத்தைப் பொருத்தினாள், வலது காதின் மேல்பக்கம் சொருகப்பட்ட ஒற்றை ரோஜா பிறைச் சந்திரனாய் ஒளியிட்டது. பின் தலையில் வைத்த செவ்வந்திப்பூ மஞ்சள் ஒளியாய் ஜொலித்தது. நடுத்தலையில் வில்போல் வரித்துக்கட்டப் பட்ட முல்லை வெள்ளொளியாய் பிரகாசித்தது. அண்ணி அதோடு விடவில்லை. அவளுக்குக் குங்குமம் இட்டாள்... சந்தனம் தடவினாள். அவள் எவ்வளவோ மறுத்தும் கேட்காமல், பாவாடை தாவணி தோற்றம் காட்டும் புடவையை வலுக்கட்டாய மாகக் கட்டிவிட்டாள். இடைக்குக் கீழே மருதாணி நிறம். இடைக்கு மேல் சாம்பல் நிறம்...

காந்தாமணி, சங்கரிக்கு சிங்காரிப்போடு விடவில்லை. சுடச் சுடப் பாயசம் காய்த்து, அதில் நாலு பச்சை முட்டைகளை உடைத்துக் கலந்து, சுண்டக் காய்ச்சி, ஒரு செம்பு நிறைய நிரப்பி அவள் கையில் நீட்டியபடியே கிசுகிசுத்தாள். "ஆளுக்குப் பாதியாய் குடியுங்க... ஆண் பாதியும், பெண் பாதியும் முழு ஆளாய் மாறிவிடும்." என்று பிளாஷ்பேக் சம்பவங்களை நினைத்தபடியே, மெய் மறந்து குறிப்பிட்டாள்.

என்றாலும், சங்கரி, அந்த அறைக்குள் நாணப்பட்டோ, நளினப்பட்டோ வராமல் - ஏனோதானோ என்றே வந்தாள். வாசலில் கண்போட்டபடியே அந்த அறை முழுவதும் கால் போட்ட மனோகர், அவளை வழிமறித்துப் பற்றிக்கொண்டான். உடனே, அவள், செம்பை அவன் வாயில் திணித்தாள். அண்ணி சொன்னதை மெல்லச் சொன்னபடி, பாதியை தான் குடிக்காமல், அந்த செம்பு முழுவதையும் அவனைக் காலி செய்ய வைத்தாள்.

மனோகர், அவளை வலது கையால் இணைத்து, இடது கையால் அவள் பிடறியைத் தடவியபடி கட்டிலுக்கு நடத்தி வந்தான். மூன்று மணி நேரத்துக்கு முன்பே அண்ணி அனுப்பியபோது இருவரும் பேச வேண்டியதை எல்லாம் பேசிவிட்டார்கள். வீட்டுக்காரர், வீட்டைக் காலி செய்யவில்லை யானால், வேறொரு பூட்டைப் போடப்போவதாக மிரட்டியது...

மாமியார் சவாலிட்டது… அவனது பாஸ்போர்ட் விசாரணைக்கு வந்த போலிஸ்காரர் நூறு ரூபாயோடு திரும்பிப்போனது, டெலிபோன் பில், கரெண்ட் பில், போன்ற அனைத்து விவகாரங்களையும் அலசிவிட்டார்கள்… எனவே இப்போ பேச்சுக்கு வேலை இல்லை… ஆனாலும் பேசினான்…

"சீக்கிரமா வரப்படாதா… நான் தூங்கின பிறகு வர்லாம் என்கிற மாதிரி வாரே…"

"அவர்கள தூங்க வச்சுட்டு வாரேன்…"

இருவரும் சொல்லி வைத்தது போல் கட்டிலில் ஒரே சமயத்தில் விழுந்தார்கள். விழுந்து எழுந்தவளை, விழுந்து கிடந்தவன் கையைப் பிடித்து இழுத்து, தன் பக்கமாய்ச் சரித்தான்… பிறகு படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, அவளை தன் மடிமேல் கிடத்தினான். தலையைச் செல்லமாகக் குட்டினான். முகத்தை அவளை நோக்கிக் குனிந்தான். அரைவளைவாய் வளைந்து, அவள் முகம் நோக்கி தன் முகத்தைக் கொக்கு போல் நீட்டினான்… அவள் உடலில் விலாப் பக்கங்களில் நீள வாக்கில் கிடந்த கரங்களை, தனது கரங்களால், அழுத்திப் பிடித்தான். கட்டில் மெத்தையில் உடல் தடயங்கள் விழும்படி இறுக்கிப் பிடித்தான்.

என்றாலும், ஒரு நிமிடத்தில் எதையோ நினைத்துக் கொண்டவன்போல், "மறந்துட்டேன் பாரு" என்று கூறியபடியே முகத்தை நிமிர்த்தினான். கைப்பிடிகளை அகற்றினான். மடியில் கிடந்தவளை, மென்மையாய் புரட்டி, கட்டிலில் ஒருகளித்துப் போட்டு விட்டு, எழுந்தான். சுவர் அலமாரியைத் திறந்து, ஒரு வெள்ளைப் பெட்டியை எடுத்து, அவள் பக்கம் வைத்தான். ஜிகினாக் காகிதம் சுற்றிய அந்தக் காகிதப் பேழையை எப்படித் திறப்பது என்று அவள் அதை அங்கு மிங்குமாய்ப் புரட்டியபோது, மனோகர் குளியல் அறைக்குள் போனான்.

சங்கரி, சந்தன நிறத்தில் சதுர வடிவான, அந்தப் பெட்டியை வியாபித்த ஜிகினாக் காகிதத்தைக் கிழிக்கப் போனாள். கைதான் வழுக்கியது. பிறகு பல்லால் கடித்து, ஒரு பக்கத்தை ஓட்டையாக்கி, அந்த ஜிகினாவை அக்கு வேறு ஆணி வேறாக்கினாள். ஒன்றின் ஒன்றாய்க் கெளவிய பெட்டியை பலவந்தமாக உடைத்து, கெளவப்பட்ட பெட்டியைப் பார்வையிட்டாள். வண்ணக் காகிதத் துண்டுகளுக்கு மத்தியில் ஒரு முத்துமாலை. வெள்ளை நிற வாளிப்போடு, ஒளி வடிவமாய் மின்னியது. முத்துக்களுக்கு இடையிடையே முடிச்சுப் போடப்பட்ட தங்கச் சரம். அவள் முத்து மாலையை தூக்கிப் பிடித்த போது, மனோகர் குளியல் அறையில் இருந்து திரும்பினான். அவன் முகத்தில் ஆங்காங்கே குமிழிகள்…

நீர்க் குமிழிகளா... வேர்வைக் குமிழிகளா... அல்லது இரண்டு வகையுமா... அவனுக்கே தெரியாது... ஆனாலும் தெரிந்தெடுத்த அந்த மாலையைப் பற்றி அவன் விளக்கினான்...

"தெருவுல விற்கிற பாசி மாலையை வாங்கிட்டு வந்ததாய் நினைக்காதே சங்கரி... இதோட விலை... மூவாயிரம் ரூபாய்... டி.ஏ. அட்வான்ஸ்ல பாதிப் பணம்... புதுதில்லியில் இருந்து, பீல்டு விசிட்டாய் ஹைதராபாத் போயிருந்தோம்... அப்போ சார்மினார் பார்க்கப் போனோம். அதன் சுற்று வட்டாரத்தில் பெரிய பெரிய முத்து மாலைக் கடைகள்... அத்தனையும் ஒரிஜினல் முத்துக்கள்... ஏமாந்துட்டேன்னு நினைக்காதே... என்னோட தெலுங்கு சகாக்களைக் கூட்டிக்கிட்டு போய், சலுகை விலையில் வாங்கின மாலை... விற்பனை வரியைத் தள்ளுபடி பண்ணிட்டாங்க... ஆனால் ரசீது தர்ல..."

''எனக்கு என்னமோ... இது போலி மாலையாய் இருக்குமோன்னு..."

"என்னை இப்படி நோகடிக்காதே சங்கரி..."

"'ஸாரி... முத்துக்கள் போலியாய் இருந்தாலும் தங்கச் சரடு இருக்குதே... அது போதும். அதோட, நீங்க சொல்றது சரிதான்... மணக்காத குறையைத் தவிர... மற்றபடி நல்ல மாலைதான்... இதை நான் வெறும் மாலையா நினைக்கல அத்தான்... ஒங்க அன்பின் அடையாளமாவே நினைக்கேன்... ஆனாலும் காசை இப்படி கரியாக்கப்படாது... காலையில் இருக்குது ஒங்கம்மாவோட பூஜை... அவங்களுக்கு ஒரு புடவை எடுத்துட்டு வரப்படாதா... எப்படில்லாம் திட்டப் போறாங்களோ..."

"எடுத்துட்டு வருகிற புடவைக்கு... எத்தனையோ குறை சொல்ற கேஸு... இந்த முத்து மாலை விலையைக் கேட்டால்... மயக்கம் போட்டுடுவாள்... அதனால நாம் உண்மையைச் சொல்லப்படாது..."

"அண்ணிகிட்ட சொல்லாமல் இருக்க முடியுமா? அவங்க தண்ணீருக்குள்ளேயே தடம் பார்க்கிறவங்க..."

"எப்பா... ஒன்கிட்ட வாய் கொடுத்து மீள முடியுமா... நீ இங்கே அடிக்கிற லூட்டி... வெளியில யார்ருக்குமே தெரியாது..."

சங்கரி, மெல்லச் சிரித்தபடியே, அந்த முத்து. மாலையை விரிவாக்கி, அதற்குள் தலையை நுழைக்கப் போனாள். மனோகர், அவளது கரங்களைப் பற்றிச் செல்லமாகச் சொன்னான்...

"நீயே மாட்டிக்கப் போனால்... என்ன அர்த்தம் சங்கரி... நான் ஒருத்தன் எதுக்காக இருக்கேனாம்...?"

மனோகர், அந்த மாலையைப் பறித்து, தனது கரங்களுக்கு கொண்டு வந்தான். அவளும் அதைப் புரிந்து கொண்டவள்போல், சின்னச் சிரிப்பொன்றைச் சிதறவிட்டு, அவன் பக்கமாக கழுத்தை நீட்டினாள். அவன் அந்த மாலையின் கொக்கியையும், அது ஊடுருவிய வட்டத்தையும் பிரித்தான்... அந்த முத்துச் சரத்தின் முனைகளை கைக் கொன்றாய் பிடித்தபடி, அவள் கழுத்துக்கு இருபக்கமும் கொண்டு போனான். பிறகு ஒரு முனை கொக்கியை, மறுமுனை வளையத்திற்குள் மாட்டப் போனான். அந்த முயற்சியில், அவள் பிடரி முடி அந்த வளையத்தில் சிக்கியது... கொக்கியை மாட்டியபோது, அவளுக்குப் பிராணன் போகிற வலி... ஆனாலும் வலியைக் கடித்தபடியே வேடிக்கையாகத்தான் கருத்துரைத்தாள்.

"அய்யோ... என் முடி... சிக்கிட்டு... ஒங்க கிட்ட நல்லா மாட்டிக் கிட்டேன்... ஒங்களுக்கு எல்லாத்துலயும் எப்பவும் அவசரந்தான்... பரவாயில்லை... பழையபடி கழட்டிட்டு மாட்டுங்க..."

சங்கரி, அவன் கரங்கள் இயங்காமல் இருப்பதைக் கண்டாள்... 'கடவுளே... கடவுளே... ஒன்று சொன்னால் இது இன்னொரு அர்த்தத்திலா முடியணும்.'

"தப்பு என் மேலதான்... இப்படி பிடரியில புதர் மாதிரி முடியை வளர்த்திருக்கப்படாது... சரி... ஒங்க கையாலேயே கட்டி விடுங்க..."

சங்கரி, கரங்களை பின்புறமாய்க் கொண்டு வந்து, அந்த முத்துச் ச்ரத்தையும், அதில் சிக்கிய முடியையும் விடுவித்தாள்... அவன், இதைக் கட்டுவதற்கு வசதியாக அவன் மார்பில் சாய்ந்தாள். விலகிக் கிடந்த அவன் கரங்களை, அந்த முத்து மாலையாய் இணைத்தாள். சடையைத் தூக்கி, பின்தலைக்கு மேல் கொண்டு போனாள். அவன் கரங்கள், இப்போது இயங்கின. மாலை சூடியதை உணர்ந்த சங்கரி, தலையை நிமிர்த்தினாள். அவனோ, நிமிர்ந்த தலையை கையால் அழுத்தி அவளை மடியில் போட்டான். அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான். பிறகு கட்டிலில் இருந்து துள்ளிக் குதித்து எழுந்தான். பாதிச் சுவராய் பதிந்த அலமாரியைத் திறந்து, ஒரு அட்டைப் பெட்டியைத் திறந்தான். கையில் தொட்டாலே சுகம் கொடுக்கும் ஒரு வழுவழுப்பான துணி... அசல் புளு... அதுதான் நீல நிறம் மார்பகம் பக்கம் வட்ட வளைவுகள்... கழுத்துப் பக்கம் ஜரிகை மாதிரியான மாலை. மொட்டாகவும், மொட்ட விழ்ந்தும், பூவாய் மலர்ந்தும் தோன்றும் நைலான் துணி மாலை. அதில் ஆங்காங்கே பதிந்த சின்னச் சின்ன சதுரக் கண்ணாடிகளைப் பார்த்து, சங்கரி கண் கூசியபடியே கேட்டாள்.

"அய்யய்ய... இது லம்பாடிப் பெண்கள் போடுறதாச்சே.."

"நோ... நோ... காஸ்ட்லி நைட்டி... டில்லியில் ஸ்பெஷலாய் ஆர்டர் கொடுத்து தயாரித்த நைட்டியாக்கும்... கொஞ்சம் போட்டுக் குவியாம்... சேலை, பாவாடை ஜாக்கெட் அனாவசியங்களைக் கழட்டிட்டு இதப் போட்டுக்கோம்மா... இதுதான் நல்ல பெண்டாட்டிக்கு அடையாளமாம்..."

"நான் கெட்ட பெண்டாட்டியாவே இருந்துட்டுப் போறேன்..."

"கெட்ட மனைவியைத் திருத்த வேண்டியது நல்ல கணவனுக்கு அடையாளமாச்சே..."

மனோகர், சங்கரியை மல்லாக்கத் தள்ளி, அவள் புடவையை உருவப் போனான்... உருவி விட்டான். அவள் முதுகிற்கும், கட்டில் மெத்தைக்கும் இடையில் சிக்கிய புடவையை, அசல் துச்சாதனன் போலவே இழுத்தான். கலர்ப் பாவாடையோடு கிடந்தவள், கட்டிலில் இருந்து அவசர அவசரமாய்த் தரையில் விழுந்து எழுந்தாள்... முன்பக்க பட்டன்கள் கொண்ட அந்த நைட்டியைத் தூக்கிக் கொண்டு குளியல் அறைக்குள் ஓடினாள்...

ஐந்தாறு நிமிடங்கள் கழித்து திரும்பிவந்த சங்கரி, அந்த நைட்டியில் ஒளிர்விட்டாள். விளக்கு வெளிச்சம், சதுரக் கண்ணாடிகளில் பிரதிபலித்து, அவளைச் சுற்றி ஒளிவட்டங்கள் போட்டன... பவளக் கம்மலில் பாய்ந்த ஒளிக் கற்றைகள், பாளம் பாளமாய் மின்னின.

மனோகர், எழுந்து போய் அவளைப் பற்றிக் கொண்டான். அவனது முன்பாதியும், இவளது பின் பாதியும் ஒட்டிக் கொண்டன. கட்டிலில் டப்பென்று விழுந்தனர். அவன்பிடி வழக்கத்திற்கு மாறாக, பலமாக இருப்பதை உணர்ந்து ஆச்சரியப்பட்டாள்... ஆனந்தப்பட்டாள்... முட்டை பாயாசத்தின் வேலையா... சிரித்துக் கொண்டாள். அவனை சிக்கெனப் பிடித்துக் கொண்டாள்...

மனோகரின் பிடி தளர்ந்தது... இரும்பாய்ப் பற்றிய கரங்கள், துரும்பாய்த் துவண்டன. சிறிது நேரம் செயலற்ற சூன்யம்... ஒருமை ரெண்டுபட்ட வெறுமை... சிறிது நேரத்திற்குப் பிறகு, மனோகர் மீண்டும் அவளைப் பற்றினான். அவள் புரிந்து கொண்டாள்... அது போலியான பிடி. பழக்கப்பட்டுப் போன வழக்கமான பிடி. உணர்ச்சியற்ற ஒப்புப் பிடி... இயங்குகிறேன் என்று சொல்லாமல் ஏதோ இருக்கிறேன் என்பதைக் காட்டும் வீம்புப் பிடி... வெறும் பிடி...

சங்கரிக்குத், தாபம் போய் கோபம் வந்தது. ஆசை பொங்கிய கண்களை, அழுகை படையெடுத்தது. கிறங்கிய கண்கள் தங்களுக்குத் தாங்களே இரங்கிக் கொண்டன. நாகலிங்கப் பூவாய்

மலர்ந்த வாய், எருக்கலைப் பூவாய் சுருண்டது. ஒன்றாய் ஒட்டிய உதடுகள், விம்மலுக்கு அணை போட்டன. நெஞ்சில் முட்டி மோதிய வேகத்திற்கும், தாகத்திற்கும் தடை போட்டன. அவள், அவன் கரத்தை வீசியடிக்கப் போனாள். ஆனால் என்ன நினைத்தாளோ... ஏது நினைத்தாளோ... அவன் கரத்தை மென்மையாய்த் தூக்கி அவனிடமே சேர்த்துவிட்டு, அவனிடம் இருந்து புரண்டாள்.

கோழிக்குஞ்சாய் படுத்தவனைப் பருந்தாகப் பார்க்கப் போனாள். முரட்டுத்தனமாய் இறக்கைகளை அடிக்கப் போன அந்தப் பருந்து, அடுத்த கணமே, தாய்க் கோழியானது. முட்டிக்கால் வரை சுருண்ட நைட்டியை சரிப்படுத்தினாள். குப்புறத் தலை போட்டு, ஐம்புலன்களையும் அடக்கியவளாய் ஆமைபோல் கிடந்தாள். அவன், அவளைப் புரட்டுவதற்கு, ஒரு கையை விலாப் பக்கம் கொண்டு போனான். அவளுக்கு மனம் பற்றி எரிந்தது. சூடாகக் கேட்கப் போனாள். ஆனாலும், உடல் சூடும் மனச்சூடும் ஒன்றை ஒன்று தணித்துக் கொண்டன. முத்துச் சரம் போட்டு, நைட்டியில் தன்னை ரசித்த அந்த ஆசை முகத்தை அவள் புசிக்க விரும்ப வில்லை. அவனது சுயமரியாதையை பங்கப்படுத்த விரும்பவில்லை. முத்துச்சரம் குத்திய கழுத்தை லேசாய்த் தூக்கி, அவனைப் பார்த்தாள். அவன் குரல் மீண்டும் காதுகளில் விழுந்தது. இயலாமை அல்லம் ஏமாற்றம், ஏமாளி வேடம் போட்டுக் கேட்டது.

"என்ன சங்கரி... குப்புறப் படுத்துட்டே...?"

அவளுக்கு அழுகை வந்தது. தனக்காக மட்டுமல்ல... அவனுக்காகவும் பொங்கியது. ஆனாலும், அவளது அழுங்குரல், பச்சதாப ரசமந்திரத்தில் நெகிழ்ந்தது... அவள் பேச்சு, மனோகரை ஓரளவு கம்பீரப்படுத்தியது.

"என்னை இன்னைக்கு விட்டுடுங்க... ஒரே பல்வலி... கூடவே வயித்து வலி... ஸாரி... நாளைக்குப் பார்த்துக்கலாம்... பேசாமல் தூங்குங்க... எனக்குத் தூக்கம் வருது..."

"பல்வலில எப்படித் தூக்கம் வரும்..."

"எந்த வலியும் உச்சக் கட்டத்துக்குப் போனால் அது மரத்துப் போகும்... கையை எடுங்க... பிளீஸ்... என்னால் முடியல... தூங்கப் போறேன்..."

"சரியான தூங்கு மூஞ்சி... எவ்வளவு ஆசையைத் தேக்கி வச்சிருக்கேன் தெரியுமா...?"

"அது எனக்குத் தெரியும்... தூங்குங்க."

"கொஞ்சங்கூட... ஒத்துழைக்க மாட்டேங்கிறியே...

"நாம் நினைத்தபடியெல்லாம் உடம்பு கேட்குதா என்ன..."

"ஆனாலும் நீ... சுத்த மோசம்..."

சங்கரி, மேற்கொண்டு பேசவில்லை. அவனுக்கு ஒரு சாக்கைக் கொடுத்த திருப்தியில், கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவனுக்காக சிலுவை சுமப்பது போலான தாலியை, உருட்டி விட்டாள்... லிங்கப்படம் போட்ட அந்த மாங்கல்யம்... கட்டில் மெத்தையில், நேராய் நின்று, அவள் கழுத்துக் குழியை முள்ளாய்க் குத்தியது... உடனே அவள் அந்த தாலித் தங்கத்தை பின் பக்கமாய்க் கொண்டுவந்து, பிடரியில் விட்டுவிட்டு, நெஞ்சில் வெறுங் கயிரைப் படரவிட்டாள்.

இருவரும் விலகிக் கிடந்தார்கள். ஒவ்வொரு நிமிடமும், ஒரு ஊழியானது. நூற்றுக்கணக்கான நிமிடங்களின் ஊழ்வலியில் உழன்று கிடந்தார்கள்... அவன் புரளும்போது அவளும், அவள் புரளும்போது அவனும் அசைவற்றுக் கிடந்தார்கள்... ஏதோ ஒரு வகையில் கட்டில் அசைந்தது. ஒவ்வொரு வேளையும், ஒரே ஒரு பக்கமாய் ஆடியது...

சங்கரியால்; தூக்க நாடகத்தைத் தொடர முடியவில்லை... தலையை ஒருச்சாய்ந்து அவனைப் பார்த்தாள்... தூங்கத்தான் செய்தான்... இரண்டு கரங்களையும் வளை கோடாய் வளைத்துப் போட்டு, அடியற்ற மரம் போல் குப்புறக் கிடந்தான்.

சங்கரி, எழுந்தாள். பின் கதவைத் திறந்து பால்கனிப் பக்கம் வந்தாள்... கதவோடு கதவாய்ச் சாய்ந்தாள். சுவரோடு சுவராக நின்றாள். உடல் வேகம் எப்போதோ நின்றுவிட்டாலும் மனோவேகம் நின்ற பாடில்லை... திருமணமான இந்த மூன்று மாத காலத்தில், ஐம்பது இரவுகள், முழுமையாய் வந்திருக்கும். அந்த இரவுகள் ஒரு தடவை கூட விடியவில்லை... இருட்டில் விளையாடிப் பிரகாசிக்க முடியவில்லை.... அம்மா எழுதிக் கேட்கிறாள்... 'ஆகலையா' என்று அப்பா பூசகமாய் எழுதுகிறார்... 'எதுவானாலும் எழுதிப் போடு' என்று, அண்ணி வருத்தப்படுகிறாள். மாமியார், ஆடுகிறாள். இவள், அவமானம் தாங்காமல் தலை குனிகிறாள்.. ஒரு இரவா... இரண்டு இரவா... ஐம்பது இரவுகளும் துறவுகள். இரை தின்ன நினைத்துத் தூண்டிலில் மாட்டிய மீன்கதை. அந்த மீனாவது அப்போதே செத்துப் போகும்.

சங்கரிக்குத் தன்னையறியாமலே முதலிரவின் நினைப்பு வந்தது அவளுக்கும். எதிர்மறைவில் சொல்லப்போனால், மறக்க முடியாத இரவு தான். அவள் நாணக் கண்களோடு, தத்தித் தத்தி நடந்தாள் இரு கரங்களிலும் பால் குவளையோடு வருகிறாள் அவனைக்

கவிழ்த்து பார்க்கிறாள். பார்த்துப் பார்த்து நிற்கிறாள். நின்று நின்று, அவனை நோக்கி நடக்கிறாள். அவள், தலை கவிழ்ந்து, கண்மூடி, பார்வையற்றவள்போல், அவன் கரமிருக்கும் திசையை அனுமானித்து குவளையை நீட்டுகிறாள். அவன், அதை வாங்கி கட்டில் சட்டத்தில் வைத்துவிட்டு, அவளைப் பிடிக்கிறான். தோளில் சாய்க்கிறான். எலும்புகளை நொறுக்குவது போல் அழுந்தப் பற்றுகிறான். நெருக்குகிறான்...

கால் நிமிடமோ... அரை நிமிடமோ... அண்ட கோடி வேகம் கொள்கிறான். அவளைக் கடிக்கிறான். அவள் பயந்து போகிறாள். அவனிடம், நளினத்தை எதிர்பார்த்தவள் நடுங்கிப் போகிறாள். அந்த நடுக்கத்தில் கீழே விழாமல் இருப்பதற்கு, அவனைப் பற்றுக்கோலாய் பற்றுகிறாள். அதுவே ஆசையாகிறது. மோகமாகிறது. வேகவேக மான பிடியாகிறது. அரை நிமிடத்தில் அவன் பிடி தளர்கிறது. நிறுத்தப்பட்ட மின் விசிறி போல் அவன் உடல் சுழற்சி மெல்ல மெல்ல நிற்கிறது. எந்த விகற்பமும் இல்லாமல் நிற்பவளை, கட்டிலில் உட்கார வைக்கிறான். அவள் தோளில் தன் கரங்களை முன் சடை போல் தொங்கப் போட்டுக் கேட்கிறான்... 'என்னைப் பிடித்திருக்கா...' என்கிறான். அவள் நாணிக் கோணி தலையாட்டுகிறாள். நீள வாக்கில் முகத்தை முன்னும் பின்னும் ஆட்டுவது தெரியாமல் ஆட்டுகிறாள். காது வளையங்கள் சுழலத் தலையாட்டுகிறாள்;

உடனே, மனோகர் தன் கதையைச் சுருக்கமாகச் சொல்லுகிறான். எடுத்த எடுப்பிலேயே கிளாஸ் ஒன் ஆபீஸராம். கை நிறையச் சம்பளமாம் கார் வாங்கலாமா... மனை வாங்கலாமா... என்று யோசிக்கின்றானாம்... அவள் சொன்னபடி நடப்பானாம். அம்மா பித்துக்குளியாம். அவளிடம், நாத்தனார் போல்தான் நடப்பாளாம்... அவளை, இவன் பொருட்டுப் பொறுத்துக் கொள்ளணுமாம்... ஆனால் அவளது கிராமத்து நாத்தனார்... இவளை அனுப்பி வைத்தாளே காந்தாமணி, அவள் அம்மாவாய் நடப்பாளாம். இவளை, அவனுக்குப் பிடித்துப் போயிற்றாம். இவளைப் பேசச் சொல்கிறான். வாயை, பலவந் தமாகப் பிரிக்கிறான். அவள் பேசாவிட்டால், தான் பேசப் போவதில்லை என்கிறான்...

பழைய நினைவுகளில் மூழ்கி, வெறுந் சிப்பிகளை எடுத்த படியே, சங்கரி, சுவரில் இருந்து தாவி, பால்கனிக்கு வருகிறாள் குத்துக் காலிட்டு பால்கனியின் விளிம்புச்சுவரில் முகம் போட்டு, தான் பேசியதை நினைத்துப் பார்க்கிறாள். அழுகையும் வருகிறது. சிரிப்பும் வருகிறது.

சங்கரி தட்டுத் தடுமாறி பேசப் போகிறாள். மெல்ல மெல்ல நாக்கு, விமானம் போல் நகர்கிறது. பிறகு ஆகாயப் பாய்ச்சலாய் பாய்கிறது. நெடுநாள் பழகிய ஒரு தோழியிடம் பேசுவது போன்ற வேட்கை. பேசுகிறாள்... அவன் தலையைக் கோதிவிட கோதிவிட, பேசிக்கொண்டே போகிறாள். பெண் பார்க்க வந்தபோதே, அவனைப் பிடித்து விட்டதாம். கல்லூரிக் காலத்தில், தனக்கு வருகிறவன், எப்படி வர வேண்டும் என்று கற்பனை செய்தாளோ... அப்படியே இருக்கிறானாம். இவன்தான், அவனின் நகலாம்: இல்லை இல்லை இவனே அசலாம்... அவனைப் பார்த்த நாளில் இருந்து, சர்வீஸ் கமிஷன் பரிட்சைக்குப் படிக்க முடியலியாம்... பெயிலாகி விடுவாளாம்... ஆனாலும் கல்யாணப் பரீட்சையில் பாஸாகியதில் மகிழ்ச்சியாம்... கல்லூரித் தோழிகள், 'உன் நல்ல குணத்துக்கு ஒரு நல்ல ஜென்டில்- மேன்தான் கணவனாய் வருவான்.' என்று கணித்ததுபோல் கிடைத்து விட்டானாம். ஆனாலும், தோழிகளிடம் ஜென்டில்மேனுக்கு விளக்கம் கேட்டு குறுக்குக் கேள்விகளைப் போட்டாளாம்...

'அந்த ஜென்டில்மேன் என்ற வார்த்தையின் பொருளென்ன... கணவனா... நல்லாயில்லே... மாண்புமிகுவா... மதிப்புக்குரியவனா... அதிர்ந்து பேசாதவனா... அநியாயத்தைத் தட்டிக் கேட்கிறவனா... அக்கடா என்று கண்டுக் காதவனா- ஏக பத்தினி விரதனா- சூதுவாது இல்லாத சுத்தச் சுயப் பிரகாசியா- எல்லாம் தெரிந்தும் தெரியாதது போல் உள்ளடங்கி இருப்பவனா- குட் பெல்லோவா- அல்லது குட் பார் நத்திங் பெல்லோவா...' 'ஒரு கணவன், மனைவியிடம் ஜென்டில்மேனாய் நடக்கப்படாது... மனைவியோட முடியைப் பிடித்து இழுக்கணும். காதைத் பிடித்து திருகணும். இதெல்லாம், பிறத்தியார்கிட்டே செய்தால், ஜென்டில்மேன் செயலில்லை. இதேமாதிரி; மனைவிகிட்டேயும் செய்யாமல் ஜென்டில்மேனாக இருந்தால், அந்த கணவன் என்ன ரகம்?' என்று ஒருத்தி பேசியதை பாதியில் நிறுத்திவிட்டு, குறும்பாய் பார்க்கிறாள்.

சங்கரி, பின்நோக்கிய சிந்தனையை நிறுத்தி விடுகிறாள். பின்னர் சிறிது இடைவெளி கொடுத்து, மிச்சம் மீதியை நினைத்துப் பார்க்கிறாள். அப்போது மனதில் தோன்றிய சிரிப்பு, அவளைப் பார்த்து, இப்போது சிரிப்பாய்ச் சிரிக்க வைக்கிறது. குண்டுச் சட்டிக்குள் குதிரையை விட்டதுபோல், அந்தப் பால்கனிக்குள் வட்டமிட வைக்கிறது.

மனம், மீண்டும், பின்னோக்கி பாய்கிறது.

மனோகர், அவளைப் படுக்கையில் சாய்க்கிறான்... அவள் விளக்கு விளக்கு என்கிறாள். அவன் எழுந்து போய் விளக்கை

3.3.

அணைக்கிறான். இருளில் நடக்கிறான். அவள் மேல் படர்கிறான்... அங்குமிங்குமாய்ப் புரள்கிறான்... புரண்டதுதான் மிச்சம்... அவன் புரண்டதில் கட்டில் சட்டத்தில் குடிக்காமல் வைக்கப்பட்ட அந்த் பால்குவளை, கீழே விழுகிறது... பால் தரையில் வீணாய் ஓடுகிறது. அவன் குடிக்காமலும், அவளுக்கு கொடுக்காமலும், கெட்டுப் போகாமலேயே கொட்டிப் போகிறது... அப்புறம் சாக்கு சொல்கிறான்... கல்யாணக் காரியங்களை, தனியொரு ஆண் பிள்ளையாய் மேற்கொண்டதால், அலுப்பு என்றான்... நாளை இரவுதான் முதலிரவு என்கிறான்... அவளும் நம்புகிறாள்... நாளை தான் வரவில்லை. ஐம்பது இரவுகளில், பௌர்ணமிக்குப் பதிலாக அமாவாசைகளே வந்தன...

சங்கரி, பால்கனிக் கதவைக் கோபத்தோடு சாத்திவிட்டு, உள்ளே போகிறாள்... கதவுச் சத்தம் கேட்டோ என்னவோ... எதிர் பால்கனியில் விளக்கு எரிகிறது. இந்த அறையின் ஜன்னல் கம்பிகளுக்கு இடையே ஒளிக்கற்றையாய் ஊடுருவுகிறது. கட்டிலுக்கு வந்தவள், படுக்கையில் குத்துக்காலிட்டு, அதில் முகம் போட்டுக் கிடப்பவனைப் பார்த்துத் திடுக்கிடுகிறாள்... அவனைப் பார்க்கப் பார்க்க, கோபம், பரிதாபத்துக்கு விட்டுக் கொடுக்கிறது. படுக்கையில் உட்கார்ந்து அவனைக் குண்டுக்கட்டாய் வளைத்துப் பிடித்து, "தூக்கம் வர்லியா...?" என்றாள்.

மனோகர், பதிலளிக்கவில்லை... அவன் மனதில், சுய-இரக்கம் போய், கோபம் வருகிறது... மனதில் பல்வேறு யூகங்கள் நிழலாடுகின்றன. அந்த நிழல்களே, நிஜமாகி நெருப்பாய் எரிகின்றன... அவளைப் பார்க்கும் கண்கள், நெருப்பாய் கக்குகின்றன. எதிர் வீட்டு விள்க்கு, அவனை நெருப்பாய் எரிக்கிறது.

# 3

இரவு, பகலுக்கு விட்டுக் கொடுத்தாலும், மனோகரும், சங்கரியும் தத்தம் உள்ளுலகங்களில் மூழ்கிக் கிடந்தார்கள் அவன் மரக் கட்டையாய், மல்லாக்கக் கிடந்தான். அவளோ கள்ளிச் செடியாய்ச் சுருண்டு கிடந்தாள். நிசப்தம் கலைத்த சேவல்கள் கொக்கரக் கோவும், பால்காரப் பையனின் சைக்கிள் மணியோசையும், பத்திரிகைகள் விழுந்த டொக் டொக் சத்தமும், கை பம்புகளின் டப்... டப் சத்தமும் ஒன்றுடன் ஒன்று கூடிக் குலவி, ஒருவித கலவைச் சத்தத்தை எழுப்பின. இத்தகைய சப்தங்களுக்கு

முன்பே எழுந்திருக்கும் சங்கரி, அப்படியே தூக்கத்தில் லயிக்கப் போவதுபோல் உடம்பில் எந்தவித அசைவும் இல்லாமல் கிடந்தாள். அவனோ, பாதாதி கேசம்வரை, மூடிக் கிடந்தான்...

என்றாலும், வெயில் உறைத்தபோது, சங்கரி கடமைக்காக எழுவதுபோல் எழுந்தாள். கண்களை முந்தானையில் துடைத்த படியே, கணவனைப் பார்த்தாள். அவனை எழுப்பப்போன கரங்களை குறுக்கிக் கொண்டாள்; எரிந்த கண்களை கசக்கியபடியே, வெயில் தெறித்த மாடிப்படிகளில் இறங்கினாள்.

இதனை நல்ல சகுனமாக அனுமானித்த அண்ணி காந்தாமணி, அடுத்த பத்தாவது மாதத்தில் ஒரு நல்ல குழந்தையை ஏந்தலாம் என்பது போல் தன் கைகளைப் பார்த்தாள். மைத்துனியின் கண்ணில் படும்படியாய் படிக்கட்டுக்கு அருகே நின்றாள். ஆனால் சங்கரியோ அப்படி ஒருத்தி நிற்கிறாள் என்று அங்கீகரிக்காமலேயே, சமயலறைக்கு எதிர் பக்கமாய் உள்ள பூஜை அறைக்குள் நுழைந்தாள். சுவர் முழுக்க தெய்வப் படங்கள். முருகன்.. பிள்ளையார்.. அய்யப்பன்.. அனுமான்.. அம்பாள்.. அஷ்டலட்சுமிகள்.. மூன்றடித் தூக்கலில் உள்ள பீடத்தில் பித்தளை உருவ வேல் முருகன், பக்கத்தில் அம்மை அப்பன்.. முகத்தோடு முகம் போட்ட சிவ பார்வதி.. அந்த சிவசக்தியை சங்கரி வெறித்துப் பார்த்தாள்... வெறுப்பாய் பார்த்தாள்... அதைப் பார்க்க மனதில்லாமல் கண்களை மூடினாள்... அதுவே படிப்படியாய் தியானமானது. தீபம் ஏற்ற மறந்தவளாய்த் திக்கற்று நிற்பவள்போல் நின்றாள்.

இதற்குள், சமையல் அறையிலிருந்து வெளிப்பட்ட மாமியார் சொர்ணம்மா, பூஜை அறையைப் பார்த்தபடியே பின்பக்கமாய் நகர்ந்து, மகள் காந்தாமணியின் மீது முட்டினாள். மகளின் நெற்றியில் தனது பல்பட்ட இடத்தை தடவி விட்டபடியே, முகத்தை ஒரு குலுக்கு குலுக்கி, சலிப்போடும் சத்தமாகவும் கத்தினாள்...

"இவளுக்குக் கொஞ்சமாவது ஒரு இது இருக்குதா... சுத்த பத்தம் இல்லாம எப்படி பூஜை அறைக்குள் போகலாம்...? நல்ல பொண்ணாப் பாத்து என் தலையிலே கட்டிட்டே..... தடிமாடு..."

காந்தாமணி, அம்மாவின் வாயில் ஆள்காட்டி விரலை வைத்து, அதை அடைத்தாள்... அவளுக்கு ஏதோ ஒன்று தட்டுப்படுவது போல் இருந்தது... இந்த சங்கரி சுத்த பத்தமில்லாமல் பூஜை அறைக்குள் போகிறவள் அல்ல... திண்ணையில் நடந்தாள். கூட காலைக் கழுவிவிட்டு சாமி அறைக்குள் போகிறவள் அப்படி நடந்திருந்தால், இப்படிப் போகமாட்டாள்...

காந்தாமணி, மெல்ல நகர்ந்து சமையலறை கதவுச் சட்டத்தில் முதுகைப் போட்' 'டி, பூஜை அறையில் நின்றவளைப் பூடகமாகப் பார்த்தாள். தலையில் பூக்கள் கசங்கி இருந்தன... ஆனால் அவள் எதிர்பார்த்தது போல், அவை கசங்கிக் கசங்கிக் கூழாகி, அவள் தலைமுழுக்க அப்பவில்லை. எள் பிசங்குவது போல் ஈரப்பசை காட்டவில்லை. புடவையும், மடிப்புக் கலையாமல் மதப்பாகத் தெரிகிறது.

ண்ணிக்காரிக்கு லேசாகப் புரிவதுபோல் இருந்தது. அதற்கு ஏற்றாற்போல், பூஜை அறையில் இருந்து வெளிப்பட்ட சங்கரி, அண்ணியை தலைதூக்கிப் பார்த்தாளே தவிர, நாணத்தால் கண்சிவந்து, கண்களைக் கீழ்நோக்கி கவிழ்த்து மேல் நோக்கிப் பார்க்கவில்லை. உப்புச் சப்பற்ற சிரிப்பை உதிர்த்தாளே தவிர, குறுஞ்சிரிப்பாய், குறிப்புணர்த்தும் சிரிப்பாய்ச் சிரிக்கவில்லை. அண்ணியிடம் பேசாமலே சமையலறைக்குள் போனாள். அங்கே பாத்திரங்களோடு மோதிக் கொண்டிருந்த மாமியார், மருமகளுக்கு ஆணை இட்டாள்.

"பால் திரிஞ்சிட்டு... உமா வீட்ல இருந்து ஒரு டம்ளர் பால் வாங்கிட்டு வா... புருஷனுக்குக் காபி போட்டுக் கொடுக்கணுங்கற கரிசனங்கூட இல்ல..."

சங்கரி, மடமடவென்று வெளியே வந்து, விஷயத்தை அண்ணியிடம் சொல்லிவிட்டு, மீண்டும் சமயலறைக்குள் வந்தாள். காந்தாமணி, முற்றத்திற்குப் போய், எதிர்வீட்டு உச்சாணி பால்கனியில் ஒய்யாரமாய் நின்ற உமாவிடம், நின்ற இடத்தில் நின்றபடியே, நாத்தியார் சொன்னதை வெளிப்படுத்தினாள்

"எங்க வீட்டுப் பாலு கெட்டுப் போச்சு... ஒங்க வீட்ல இருந்து கொஞ்சம் பால் வேணும்..."

"அதுக்கென்ன... இப்பவே..."

பால்கனியில் ஒரு பூச்செடியைப் பதியம் வைப்பது போல் நின்ற உமா, அங்கிருந்து மறைந்து, ஐந்தாவது நிமிடம் அந்த வீட்டிற்குள் வந்தாள். குலுக்கி, மினுக்கி சந்தோஷமாகவே வந்தாள். அவளை, மாமியார் படுத்துவதாகக் கருதப்படும் கொடுமைகளை, அவள் இறக்கி வைப்பதற்கு, இந்த சொர்ணம்மா தான் ஒரு சுமைதாங்கிக் கல். நேற்றிரவு புருஷனிடம் சேரவிடாமல் மாமியார் தன்னைப் படுத்திய பாட்டை, சொர்ணம்மாவிடம் சொல்வதற்காகவும் வந்தவள்போல் வந்தாள்.. "பெரியம்மா. பெரியம்மா" என்று குரலிட்டபடியே போனவளின் கையிலிருந்த பால் டம்ளரை சங்கரி வந்து வாங்கிக் கொண்டாள்.. சங்கரி இருந்தாலும் பரவாயில்லை இந்த வயதிலும் பிரா போடும் மாமியாரைப் பற்றிச் சொர்ணம்மா

விடம் சொல்லியே தீருவது என சங்கரியைப் பின் தொடர்ந்த உமாவை, காந்தாமணி இழுத்துப் பிடித்து கொல்லைப் பக்கம் கூட்டிப்போனாள். இருவரும் பத்து நிமிடத்திற்கு மேலாக வாய் உரச, காது உரச நின்றார்கள். உமா, காந்தாமணியிடம் சில குறுக்குக் கேள்விகளைக் கேட்டு, தலையாட்டினாள்... பிறகு காந்தாமணியைப் போகும்படி சமிக்ஞையிட, அவளும் பூனைபோல் காலடிச் சத்தம் எழுப்பாமலேயே சமையலறைக்குள் வந்தாள்.

கொல்லைப் பக்கம் உமா கூவினாள்.

"சங்கரி.. ஏய் சங்கரி.. இங்க வாயேன்..."

சமையலறையில், மாமியாருக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்த சங்கரி, சொர்ணம்மாவை மவுனமாய்ப் பார்க்க, அவளோ, "அவளுக்கு வேற வேலையில்ல..." என்றாள். அவள் தன் மாமியாரைப் பற்றி அவதூறு கிளப்புவதுபோல், இவளும், அவளிடம் தன்னைப் பற்றிக் கிளப்பி விடக்கூடாதே என்கிற முன்னெச்சரிக்கை... ஆனாலும், அங்கே வந்த காந்தாமணி, குறுக்கே புகுந்து, "கூப்பிடறாள் பாரு... என்னன்னு கேளு.. அதான் மரியாதை... உன் வேலய நான் பாக்கேன்..." என்று சொன்னபடியே, சங்கரியின் முதுகைப் பிடித்துச் செல்லமாகத் தள்ளினாள். அவள் பின்வாசலைத் தாண்டியதும், அம்மாவுக்கு உதவியாளாய் ஒத்தாசை செய்யாமல், கொல்லைப்புற பின் கதவை பாதி சாத்தி, அதற்கு பின்னால் தன்னை மறைத்துக் கொண்டாள்.

அந்தக் கொல்லை, பூந்தோட்டமாகவும், குட்டித் தோப்பு போலும் மின்னியது. குடை விரித்தாற் போன்ற மா மரங்கள்... நிமிர்ந்து நின்ற கொய்யா மரங்கள்... வாழைப் பூவை உரசிய தென்னங்கன்று... ஒன்றை ஒன்று பின்னிக் கொண்ட செவ்வரளி... மஞ்சரளிச் செடிகள்... ராட்டினம் போல் பூக்கும் பெங்களூர் அரளி மரம்.. தரை மெத்தையான புல் பிறப்புக்கள்... அணில்களின் ஆரவாரங்கள்... பின்பக்கத்திற்குத் திரையிட்டது போன்ற அசோக மரங்கள் அவற்றின் முக்காடு போட்டத் தோரணை...

ஆங்காங்கே அழகு காட்டிய பூக்களில் கிடந்த சருகுகளை எடுத்து கீழே போட்டபடியே, சங்கரி, உமாவை நெருங்கினாள். என்ன என்று கேட்காமல், அந்த வார்த்தைக்குப் புன்னகை வடிவம் கொடுத்தாள்... அதற்குள் உமாவுக்கு வந்த காரியத்தைவிட சொந்தக் காரியமே முக்கியமாய்ப்பட்டது...

"சங்கரி எனக்கு அந்த மாங்காயப் பறிச்சுக் கொடேன்."

"உனக்கு இல்லாத உரிமையா... நீயே பறிச்சுக்க வேண்டியது தானே"

“நான் ஒன்ன மாதிரி உயர்ந்த மனுஷி இல்லயே.. எனக்கு எட்டல.”

“லோசாக் குதிச்சா எட்டுது.”

“நான் குதிக்கப் படாது.”

“ஏன்...?”

“அபார்ஷன் ஆயிடுமாம்... மூணு மாசம் வரைக்கும் எச்சரிக்கையாய் இருக்கணுமாம்... வயிறு குலுங்கப்படாதாம்...”

“ஒன் புள்ளைக்கி ரெண்டு வயசு கூட ஆகல. இதுக்குள்ளே என்ன அவசரம்...?”

“உனக்கு தெரியுது.. அவருக்குத் தெரியமாட்டேங்குதே... எங்க வீட்டு மிஸ்டர், குணத்துல மட்டுமில்ல... அதுலயும் உடும்புப் பிடிதான்... அவர் டூர் போய்ட்டுத் திரும்பி வரும்போது, நான் பயந்து போயிடுவேன்... பயமுன்னு கூடச் சொல்லப்படாது... பயபக்தி... ஒரு மணி நேரம் புரட்டி எடுத்திடுவார்... போயும் போயும் கொல்லர் தெருவுல ஊசி விக்கிறேன் பாரு... உங்க வீட்டு மிஸ்ட்டரும் நேற்று ராத்திரி ஒன்ன புரட்டி எடுத்துருப்பாறே! ஆசாமியைப் பார்த்தாலே அசத்தறது மாதிரித்தானே இருக்காரு...!”

சங்கரி, கண்களை மூடினாள் காணாத ஒன்றை காணவேண்டும் என்ற தாபம். ஒரு மணி நேரம் புரட்டுவாராமே... முப்பது வினாடிகளே, அவ்வளவு இன்பமாக இருந்தால், அந்த ஒரு மணி நேரம்... அறுபது நிமிடம்... மூவாயிரத்து அறுநூறு வினாடிகள் எப்படி இருக்கும்? இங்கே ஒரு நிமிடம் கூட இல்லை... அதிலும் பாதி. அதுவும் காதல் விளையாட்டாய்க் கரைந்து, இலக்கு இல்லாமலேயே அற்றுப் போகும்... ஒரு மணி நேரம் அடேயப்பா...

கண்மூடிக் கிடந்த சங்கரியை, உமா உலுக்கினாள்... நேற்றைய ராத்திரி உருட்டலை, அவள் நினைத்து மனதுக்குள் இன்றைய ராத்திரிக்கு ஒத்திகை நடத்துவதாக நினைத்தாள்... அந்தச் சமயத்தில் அவளுக்கு மாங்காய்தான், கண்ணில்பட்டதே தவிர, காந்தாமணி சொன்னது நினைவிற்கு வராமலே பேசினாள்.

“ஒருவேளை நீ கூட உண்டாயிருக்கலாம்.. அப்படின்னா நீயும் குதிக்கப்படாது... மாங்காய் கிடைக்காட்டால் போவட்டும்... மாவடு இருக்கவே இருக்கு... ஆனாலும் வாலிப மாங்காய் ருசியே தனி... மாவடுவிலே புளிப்புக்குப் பதிலா துவர்ப்புதான் இருக்கும்.”

“பரவாயில்ல.. ஒனக்காவது ருசிக்கட்டும் நானே பறித்துத் தாரேன்.”

சங்கரி, மாமரத்தை நோக்கி நடந்தாள். பின்னர், குதிப் பாய்ச்சலாய்ப் போனாள்... உடல் முழுக்க ஆவேசம்... மனம் முழுக்க ஆதங்கம். அந்த ஆவேசத்தையும் ஆதங்கத்தையும் உள்ளடக்க முடியாமல், ஒரே ஓட்டமாய் ஓடினாள்... மேலே தொங்கிய காய்களுக்குக் கண்களால் குறி போட்டாள்.. அத்தனையும் தலைக்கு ஒரு முழத்திற்கும் அதிகமான உயரத்தில், பிடி பார்க்கலாம் என்பது போல் பார்த்தன

சங்கரி, வலது கையை நீட்டி குதித்தாள்.... குறிப்பறிந்த மாங்காய், வலதுபக்கம் போனது.. உடனே அவள் இடது கையைத் தூக்கிக் குதித்தாள்.. அது வலது பக்கம் போனது. கைப்பக்கம் வருவது மாதிரி வந்து கண் காணாத இலைப் பிரதேசத்திற்குள் மறைந்தது.. இன்னொரு பிஞ்சு, அவளை இளக்காரமாய்ப் பார்த்தது... அவள் குதித்தாள். குதி குதியென்று குதித்தாள்... காய்களுக்காக குதித்தவள், இப்போது அவற்றின் நினைப்பற்று, சும்மாவே குதித்தாள்.. அந்த மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து தாவினாள். குதியற்று மேலே போய், பிடியற்றுக் கீழே விழுந்தாள்... காய்கள் சிரித்தன.. இலைகள் பரிகசித்தன... கிளைகள் அவள் தலையில் அடித்தன.. கண்களைப் பிராண்டின...

உமா, ஓடி வந்தாள்: பேசிக்கொண்டே ஓடி வந்தாள்...

"சங்கரி! முடியாட்டால் விட்டிடு... எப்பவுமே கொப்பை வளைத்துப் பிடித்து வசப்படுத்திக் கிட்டுத்தான், காயைப் பறிக்கணும்."

சங்கரிக்கு, மூச்சிரைத்தது. அவள் பிடித்த கிளைகளும் மூச்சிழைப்பது போல் அங்கும் இங்குமாய் ஆடின மாமர பச்சை அனைத்தையும் ஒன்று திரட்டி, அழுத்தப் பச்சையாகத் தோன்றிய கன்னிக் காய்கள், இலை மாராப்பில் அடைக்கலம் கொண்டு, அவளைப் பரிகசித்தன... மீண்டும் குதிக்கப் போன சங்கரியை, உமா பிடித்துக் கொண்டாள். அவளை ஆசுவாசப்படுத்தி, மாமரத்தின் கீழே உள்ள மணல் திட்டில் உட்கார வைத்தாள்.. தற்செயலாக உமா திரும்பியபோது, கொல்லைக் கதவின் பின்பக்கம் காந்தாமணி கைகளைக் கேள்விக்குறியாக்கி, அவளைப் பார்த்து முக மாட்டினாள்.

உமா, சமர்த்தானாள்.

"என்ன சங்கரி இப்படியா குதிக்கிறது? நேத்துக் கூட, நீ உண்டாயிருக்கலாம் கரு என்னாகிறது? கலைஞ்சிடாது.."

சங்கரி, ஆகாயத்தைப் பார்த்தாள் கைக் கெட்டாத அந்த மாங்காய்களைப் பார்த்தாள்.. உமா, அவளை மீண்டும் உலுக்கினாள்.

“ஏன் இப்படி ஒரு மாதிரி ஆயிட்டே? ஏன் கண்ணு அப்படிக் கலங்குது? இங்க பாரு சங்கரி! எதையும் மனசுக்குள்ளே கல்லு மாதிரிப் போட்டு வச்சா, அதுவே அப்புறம் பிளட் பிரஷரா.. நீரிழிவா... வயிற்றுக் கோளாறா... ஏன் பைத்தியமாக்கூட மாறுமுன்னு, எங்க வீட்டு மிஸ்டர் சொல்லுவார்... மனசுல என்ன இருந்தாலும், அதைக் கவுத்து வாயாலே கொட்டிடு.. ஒன்னோட பிரச்சினை காதல் தோல்வியா? இதனால, அவருக்கு இடங்கொடுக்க மனசு வரலயா? காதல் தோல்வி சகஜம்... நான் கூடத்தான் காதலிச்சிருக்கேன்... இப்ப உண்டாகலியா . பழச மறக்க முடியாதுதான்... அதுக்காக புதுச உதறணுமா என்ன...?”

சங்கரி, குமுறினாள். ‘காதலே இல்லாத போது, அது எப்படி தோல்வியாகும்? இந்தப் பழியோட நான், இடங்கொடுக்கல என்கிற இன்னொரு பழியா... கடவுளே.. கடவுளே..’

உமா, தொடர்ந்தாள்.

“ஒருவேளை உன் வீட்டுக்காரருக்குக் காதல் தோல்வியா? அதனால ஒன்ன விட்டு ஒதுங்குறாரா... ஒன் மேல எரிஞ்சு விழுகிறாரா... எதுனாலும் சொல்லு இவளே... பெரியவங்க எதுக்கு இருக்காங்க..”

சங்கரி, முட்டிக் கால்களில் முகத்தை அழுத்தமாகப் பதிய வைத்துக் கொண்டு, வயிற்றுக்கும் கால்களுக்குமான இடை வெளியில், வாயை மூடிக் கொண்டாள். ‘அந்த ஏலாமனிதர் மீதும் ஒரு பழியா...?’

அவள் உடம்பு குலுங்கியது.. தொண்டைக் குமுறல், வாய் மூடிக் கிடந்ததால், அது பிடறி வழியாய்ப் பிய்த்துக் கொள்ளப்போனது... உமா, அவளை தன் மடியில கிடத்தினாள். அவ்வளவுதான்... சங்கரி, அவள் மடியில் புரண்டு புரண்டு அலைமோதினாள்.

உமா, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தபடியே, பேச்சை விட்டாள்.

“அழாதடி அழாதே மனசுக்குள்ளே வச்சுக் குழப்பாதே... என்கிட்டயாவது சொல்லு.. பெண்ணுக்குப் பெண்... தோழிக்குத் தோழி. போதாக்குறைக்கு ஒன் மாமியார் வேற, ஒன்மேல பழி போடறாள் உன்கிட்ட இருக்கிற உண்மை ஒருத்தர் கிட்டயாவது போனாத்தான், அது உன்னைச் சுடாது... என்கிட்ட நம்பிக்கை இருந்தாச் சொல்லு.. அப்புறம் ஒன்னிஷ்டம்.”

சங்கரிக்கு, சொல்லவும் முடியவில்லை. சொல்லாமலும் இருக்க முடியவில்லை... தலைவெடித்து விடும் போல் இருந்தது. உடலைக்

கூனிக் குறுக்கியபடியே, ஆகாயத்தில் கடவுள் இருப்பது போலவும், அவரிடம் முறையிடுவது போலவும் சொன்னாள்.

"அவரால முடியலேயே... முடியலேயே."

சங்கரி விக்கியும், திக்கியும், விம்மியும், துக்கித்தும் அடை மழை தூறலானது போல்ஏங்கியபோது, உமா நெகிழ்ந்து போனாள்.. 'அவரால முடியலேயே என்று இவள் கோபமாய்ச் சொல்லவில்லை; குற்றஞ்சாட்டவில்லை. அனுதாபமாய்ச் சொல்கிறாள்.. இந்தக் காலத்தில் இப்படி ஒருத்தியா?'

உமாவுக்கு, மனம் கேட்கவில்லை. ஆனாலும் முக்கால் வாசி அனுதாபம் கொண்ட மனதின் நுனியில் ஒரு அற்ப சந்தோஷமும் ஏற்பட்டது... அவள் மீது இவள் கொண்ட பழைய பகையற்ற பொறாமை, புதிய பெருமிதமாய் உருமாறியது... இந்த உமாவின் மாமியார் எதற்கெடுத்தாலும், 'இருந்தால், சங்கரி மாதிரி இருக்கணும்... இங்கேயும் இருக்காளே... என்று சாடை மாடையாகப் பேசுவது உண்டு. இந்த ஒப்பீட்டுப் போராட்டத்தின் தோற்றாலும் இறுதிப்போரில் தான் வெற்றி பெற்றுவிட்டதாக, உமா எழுந்தாள்.

ஒரு உளவாளியின் சாதனைத் திருப்தியுடன், 'சரிம்மா... இது பெரிய பிரச்சினை... ஆற அமர அப்புறமாய்ப் பேசுவோம் எங்க வீட்டுக் கொள்ளிக் கண்ணி, இதுக்கு மேலே இருந்தால் எரிச்சிடுவாள்.' என்று சொன்னபடியே, சங்கரியைத் தனிமையில் விட்டு விட்டு, கொல்லையைத் தாண்டி, அந்த வீட்டின் முற்றத்திற்கு வந்தாள். அவளுக்காகவே காத்திருந்த காந்தாமணிடம், "ஒன்றும் நடக்கலியாம்' என்று பொதுப்படையாய் சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

காந்தாமணி, கொதித்துப் போனாள் 'இவள் ஆம்பிளப் பிறவிதான்... நேத்துக்கூட என் தம்பி, உமா புருஷன்கிட்ட டில்லி பொண்ணுகளப் பத்தி எப்படியெல்லாம் பேசினான்.. கோளாறு இவகிட்டதான் இருக்கும்... படிக்கும்போது எவனயாவது விரும்பிட்டு சினிமாவுல வரது மாதிரி, என் தம்பிக்கிட்ட ஏடாகூடமா நடந்தாலும் நடந்திருப்பாள். இந்த விவகாரம், சாண் ஏறுன்னா முழம் சறுக்குகிற கதையாச்சே. அம்மாகிட்ட சொன்னால், அவ்வளவுதான்.. தம்பிகிட்ட பேசவும் முடியாது... கிணறு வெட்ட பூதம் கிளம்புதே.. ராசியில்லாத நான், அவனுக்குப் பொண்ணு பார்த்திருக்கக்கூடாது ராசியிருந்தால், அந்த மனுஷன் அப்படி மாரடைப்புல சாவாரா அதுவும் மூணு வருஷத்துக்குள்ளே...'

இதற்குள், மனோகர் முற்றத்துக்கு வந்துவிட்டான். பேண்டும் சட்டையுமாய் நடந்தான் மண்மேட்டில் கிடந்த சங்கரி, அந்தப் பக்கமாய் ஓடிவந்து அவனை படபடப்பாய் பார்த்தாள். எங்கே போகிறார்... எதற்காகப் போகிறார்...

சங்கரி நினைத்ததை, காந்தாமணி, தம்பியிடம் கேட்டாள்.

"லீவு நாளும் அதுவுமா வீட்ல இருக்காம எங்கேப்பா போறே... குறைஞ்சத எங்கிட்டேயாவது பேசிக்கிட்டு இருக்கலாம் பாரு."

"போகும்போது எதுக்குக்கா மறிக்கிறே...?"

"ஒன்ன மறிக்கலேப்பா... ஆண்டவன் புண்ணியத்துலே... ராவும் பகலும், நீ சந்தோஷமா இருக்கனும்... அதான் என்னோட ஆசை..."

அவள் பேச்சை முடிக்கும் முன்பே, மனோகர் அக்காவையும், மனைவியையும் ஒரு மாதிரிப் பார்த்தான். பிறகு திரும்பிப் பார்க்காமலேயே, வீட்டிற்கு வெளியே வந்தான். அப்போது, உமாவின் கணவன் இந்திரன் குறுக்கே வந்தான். இரண்டு கண்களுக்குப் பதிலாய் ஒரு கண்ணை மட்டுமே மாறி மாறி பயன் படுத்துவது போன்ற காக்கா கண்ணன். உடலைக் குலுக்காமலும், கண்களைச் சிமிட்டாமலும் அவனால் பேச முடியாது... பொம்மைச் சொக்காவில் சென்டு வாசனை படர, மனோகரிடம் பேசினான்...

"ஒரு சின்ன உதவி செய்யணும் பிரதர்... இப்ப இருக்கிற கம்பெனில எனக்கு இருக்க விருப்பம் இல்லை... ஒரு பாரின் கம்பெனில வேகன்ஸி வந்திருக்கு.. என் சர்டிபிகேட்டுகளோட நகல்களை நீங்க அட்டெஸ்ட் பண்ணணும்... என்னை மாதிரி ஒங்களுக்கு, சம்பளம் இல்லாட்டாலும், அந்தஸ்து அதிகமாச்சே.. கெஸட்டட் ஆபீசரா, கொக்கா..."

"ஆபீஸ்லதான் சீல் இருக்கு... இன்னிக்கும் நாளைக்கும் லீவு... அடுத்தநாள் காலையிலே, ஆபீஸ் வாங்க... இல்லாட்டி ஒரிஜினல் களையும் நகல்களையும் எங்கிட்டே கொடுங்க. நான் செவ்வாய்க்கிழமை சாய்ங்காலம் கொண்டுவரேன்...."

மனோகர், நேற்று வரை உறவாடிய இந்திரனை எரிச்சலோடு பார்த்தான் அவன் தன்னிடம் பேசிக் கொண்டே, சங்கரியைத் துளைத்துப் பார்ப்பது போல் இருந்தது. எதிர்ப் பார்வை கிடைத்து விட்ட அனுபவமா

இந்திரன், மனோகருக்குள் எரியும் தீயில் எண்ணையை ஊற்றினான்

"எனக்கு எந்தக் காரியமானாலும், அதை உடனே முடிச்சிடணும்... வாங்க உங்க ஆபீசுக்குப் போகலாம்."

"என்ன சார் நீங்க... காலங்காத்தாலே வழி மறிக்கிறீங்க... அடுத்தவனுக்கும் வேலையிருக்குமுன்னு நெனைத்துப் பாருங்க... நாளைக்கும் போஸ்டல் ஹாலிடே . அதுக்குள்ளே என்ன அவசரம்...."

இந்திரன், சங்கடமாகச் சிரித்தான். நிற்கவும் முடியாமல், போகவும் முடியாமல் கால்களால் தரையைப் பிராண்டினான். மனோகர், ஏதோ தமாஷ் செய்வது போல் ஒரு மாயச் சிரிப்பை உதிர்த்தான். இதற்குள், உமா தனது வீட்டின் கேட்டிற்கு வந்து, "ஏங்க உள்ள வாங்க. மதியாதார் தலைவாசல் மிதிக்கலாமா? உலகத்துலே இவரு மட்டுந்தான் ஆபீசரா." என்று கத்தினாள்.

இந்திரன் யந்திரமாய் நடந்தான்... ஆனால், அதைப் பற்றிப் பொருட்படுத்தாதுபோல், மனோகர், வேக வேகமாய் நடந்து, தெருக்கோடியில் மறைந்தான். இதற்குள் பழைய நட்பை மறந்து உமாவை ஒரு பிடி பிடிக்க ஓடி வந்த சொர்ணம்மாவை, காந்தாமணி இழுத்துக் கொண்டு போனாள். உமா, சொர்ணம்மாவைப் பார்த்து நடுங்கினாள். மாமியாரைப் பற்றி தெரிவித்த சங்கதிகளையெல்லாம், மாமியாருக்கே வந்து விடுமே என்ற பயம்.

# 4

மனோகர், இடம், பொருள், ஏவல் அறியாதவனாய், இலக்கற்றுப்போய் நடந்தான்.... கால்கள் முன்னோக்கியும், மனம் பின்னோக்கியும் போய்க் கொண்டிருந்தன. நினைக்க நினைக்க நெஞ்சம் வெந்தது. அவன் ஆவேசியாய் நடந்தான். உயிரும் உடலும் அற்றுப் போய், ஆவியாய் தாவுவதுபோல் போனான். உடல், உயிருக்குள்ளும், உயிர் உடலுக்குள்ளும் ஒடுங்கியது போல், ஆமை நடையாகவும் நடந்தான். காலாற்றுப் போனவன் போல், தள்ளாடித் தள்ளாடியும், நடந்தான். தலைவிரி கோலமாகவும் பாய்ந்தான்.

அங்குமிங்குமாய் நடந்து, முட்டுச் சந்து சுவரில் மோதி, மனிதச் சந்தடியில் ஊடுருவி, ஒரு மேம்பாலச் சுவரில் உட்கார்ந்தான். ஆட்டோக்களும், சைக்கிள் களும், ஆட்களைப் பிடித்துப் போட்டபடி அலை மோதின. ஒலிப்பெருக்கம்... பேசும் யந்திரங்கள், பேசாத யந்திரங்களில் போய்க் கொண்டிருந்தன இரண்டு தெரு

நாய்கள், அத்தனை அமர்க்களத்திலும், ஒட்டிக் கொண்டன அவனைப் பார்த்து பரிகசிப்பதுபோல் பல்லிளித்தன.

மனோகருக்கு, மனைவியைப் பாம்பென்று ஒதுக்கவும் முடியவில்லை. பழுதென்று சேர்க்கவும் முடியவில்லை... நேற்று அவள், இந்திரனிடம் பேசியவிதம், அது சாதாரண நட்பாகத் தெரிய வில்லை. இவன் பயிற்சிக்காக புதுடில்லி போவது வரை, இந்திரனின் அசட்டுக் கேள்விகளுக்கு ஒற்றை வார்த்தையில் பதிலளிப்பவள், நேற்றோ, இருவரும் ஒருவரானதுபோல் பேசுகிறாள். ஒரு மாத காலத்தில் அப்படி ஒரு விபரீதம் ஏற்பட்டிருக்குமோ...? நேற்றைய ராத்திரியில், பால்கனியில் அவளுக்கு என்ன வேலை? இருக்காது... படுக்கையறையில் பெருந்தன்மையாய் நடந்து கொண்டவள், வெறுமையாய் உட்கார்ந்த தன்னை, மடியில் கிடத்தி, குழந்தையைத் தாலாட்டுவதுபோல் ஆட்டியவள்... அவனுக்கு தோல்வியை இல்லை என்பதுபோல் சர்வசாதாரணமாக நடந்து கொண்டவள்... அத்தனை ஏமாற்றத்திலும் அவளால் எப்படி சாதாரணமாக நடக்க முடிகிறது...?

காலப்போக்கில்... சரியாகிவிடும் என்ற நம்பிக்கையா அல்லது ஒரு வேளை... ஒரு வேளை... 'நீ.. இல்லாட்டால் வேறு ஆளே கிடையாதா' என்று கேட்காமல் கேட்கிறாளா... எப்படியோ... அவளைச் சொல்லிக் குற்றமில்லை... கோளாறு என் பக்க . அதன் வெளிப்பாடு அவள் பக்கம்.... இந்தச் சித்திரவதையை எத்தனை நாள் பொறுப்பது? அவள்முன் புழுவாய்த் துடிப்பதைவிடச் செத்து விடலாம்... வராத சாவை வருந்த அழைத்துக் கொள்ளலாம்.... தன்னைத் தானே கொலை செய்து கொள்ளலாம்.... இந்த ஈன வாழ்க்கை வேண்டாம்.... வேண்டவே வேண்டாம்...

மனோகர், எழுந்தான். பேருந்துகளில் மோதப் போகிறவன் போல் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான்... அண்ணாந்து ஆகாயத்தை வெறுமையாய்ப் பார்த்தபடி... ஆட்டோவில் மோதினான்... எதிர்ப்பட்ட ஒரு இளம் பெண் முகத்தில் முகமிடித்தான். அவள், பயந்து போய் ஒதுங்கியபோது, ஒரு காய்கறிக்கார கிழவி 'பொலிகாளப் பயலுக.... வந்துட்டானுக....' என்று திட்டியதைக் கேட்க, அவனுக்குச் சிறிது ஆறுதலாக இருந்தது... ஆனாலும் இப்போது சாலையின் ஓரமாகவே நடந்தான்... தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டு நடந்தவன், சங்கரியை, விட்டுவிட்டு, டில்லி நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தினான்.

சங்கரியை, சந்திக்க வேண்டிய வகையில் சந்திப்பதற்காக, சென்னையிலும், டில்லியிலும் பரிகாரம் தேடத்தான் செய்தான் சென்னையில் பரிச்சயமான மருந்துக் கடையில், ஒரு விளம்பரப்

பலகை, அவன் கண்களை முட்டியது. 'மாத்திரைக்கு முன்பு.... மாத்திரைக்குப் பின்பு..' என்று விலகிய ஜோடியையும், விலக்கப்படும் ஒட்டிக்கொண்ட அதே ஜோடியையும், படங்களாய் பார்த்தான்.

இவன் மாத்திரைகளை வாங்கினான். ஒவ்வொன்றும் பதிமூன்று ரூபாய்.... அறுபது மாத்திரைகளை வாங்கினான். திருப்திக்கு நாளொன்றுக்கு ஒன்றாம். படு திருப்திக்கு இரண்டு. ஆனந்தத்திற்கு மூன்று.. பேரானந்தத்திற்கு நான்கு... டில்லிக்குப் போகுமுன், அவளைப் பேரானந்தமாக சந்திக்கத் தயாரானான்... சந்தித்தான்... சந்தி சிரிக்காத குறைதான்.

என்றாலும், புதுதில்லி போனாலும், மனம் கேட்கவில்லை. அங்கே, 'கேஸ் அண்டு செக்ஸ்' என்று பிரகடனப்படுத்தும் சுவரொட்டிகளை முகவரிகளோடு பார்த்தான். அவனுக்கு தன் வயிற்றுக் கோளாறு நினைவுக்கு வந்தது. அடி வயிறு உப்பியிருப்பதும் உணர்வாய்த் தெரிந்தது... உருவமாயம் புரிந்தது... விளம்பரப் படுத்தப்பட்ட இடத்துக்குப் போனான்.. ஆட்டோவில் போனான்... விமானம் கிடைத்திருந்தால், அதில்கூடப் போயிருப்பான். ஒரு கரண்டி சிகப்புப் பொடியும், ஒரு லிட்டர் வெள்ளைப் பொடியும் கொடுத்தார்கள். ஒரு கரண்டி வெள்ளையில் ஒரு மிளகளவு சிகப்பைக் கலந்து, பாலில் போட்டு குடிக்கச் சொன்னார்கள். மருந்தை வாங்கிக் கொண்டு பேருந்துக்கே காசில்லாமல் நடந்தே வந்தான். பத்து நாட்களில் மன்மதனே உபதேசம் கேட்க வருவான் என்று சொன்னதை நினைத்துப் பூரித்து ஒரு மாதம் வரை உட்கொண்டான். நேற்றிரவு, அவளை ஆயுதபாணியாகத்தான் எதிர்கொண்டான். ஆனாலும் நிராயுத பாணியாகி விட்டான். நிர்க்கதியாகி விட்டான்.

நேற்று ராத்திரி வரையான கனத்துப்போன சிந்தனையில், கால்களின் போக்கை அறியாத மனோகரை, ஒரு ஆட்டோக் காரரின் வசவு திரும்ப வைத்தது அவனைச் அங்கேயே கட்டிப் போட்டது. எகிறஎகிறித் திட்டியவனைப் பார்த்துச் சிரித்தான். எப்பவோ சூடுசுரணை அற்றுப் போனவன்போல், மலங்க மலங்கப் பார்த்தான்.

அப்போது, மலட்டுக் கண்களில், ஒரு விளம்பரப் பலகை தென்பட்டது. ஒய்யாரமான கடை கண்ணிகளுக்கு இடையே, ஒரு செவ்வக வடிவ அறை. அதன் மேல் விதானத்தில் புலிப் பாணி சித்த வைத்திய நிலையம் என்ற துருப்படிந்த பலகை.. அதன் அடிவாரத்தில் வைத்தியர் செகன்னாதன் என்ற பெயர் மற்றபடி எந்த மேக்கப்பும் இல்லாத கூடம் இருபக்கத்துச் சுவர்களிலும், ஆகாயத்தை வில்லாய் வளைக்கப் போவதாய் எந்த மார்தட்டலும்

இல்லை... அதன் சாதாரணத் தோற்றம், அவனை ஈர்த்தது. 'டை' கட்டாத சித்த வைத்தியர். ஸ்டெதாஸ் கோப்பைக் கூடக் காண வில்லை. இப்படிப்பட்ட மனிதர்களிடம் தான் விஷயம் இருக்கும்... இருக்குதோ. இல்லையோ... இதுவே கடைசி முயற்சி. இதுவும் பலனளிக்கவில்லையானால், இருக்கவே இருக்குது விஷம்.... ரயில்வே தண்டவாளம்.... தேசிய சாலையின் நடுப்பக்கம்....

மனோகர், வாழ நினைத்தவனாய் நடக்காமல், சாகத் துணிந்தவனாய், அந்த அறையை நெருங்கினான். மூன்று படிகளையும் ஒரே படியாய் அனுமானித்து, ஒரே தாவாய்த் தாவினான். பத்தாம் பசலி நாற்காலியில் முதுகைக் கிடத்தாமல், நிமிர்ந்திருந்த தோற்றத்தைப் பார்த்து, பரவசப்பட்டான். சதுர முகம்... சதுராடும் பார்வை... தினவெடுத்த தோள்கள்... இவ்வளவுக்கும் அவருக்கு, வயது எழுபது இருக்கலாம்.

வைத்தியர் ஜெகன்னாதன், அவனை உட்காரச் சொன்னார். அவனை சாமுத்திரிகா லட்சணங்களால் அளவெடுப்பதுபோல், அவன் மூக்கைப் பார்த்தார். வாய்க்கு மேலுள்ள மச்சத்தைப் பார்த்தார். கால்கள், தரையில் கோலம் போடுகின்றனவா என்று கீழ்நோக்கிப் பார்த்தார். பிறகு இயல்பாகப் பேசினார்...

"எனக்கு காது கொஞ்சம் மந்தம்.... உரக்கப் பேசணும். ஏன் அப்படி மிரண்டு பார்க்கிங்க... 'கர்ப்பப்பை இல்லாட்டாலும் கர்ப்பிணி ஆகலாம்... எய்ட்ஸ் நோயை இப்பவே ஒழிக்கலாம். வழுக்கைத் தலையை பசுஞ்சோலை ஆக்கலாமுன்னு' பேப்பர்ல படங்கள் வருதே... கருப்புத் துரைகள். அவங்க மாதிரி நான் இல்யேன்னு ஆச்சரியப்படுகிறீங்களா... ஸ்டெதாஸ் கோப்பை தூக்குக் கயிறாய் கழுத்துல தொங்கப் போட்டு, புன்னகை பூக்கிறாங்களே... அவங்க வேறு... நான் வேறு... இவங்க சித்த வைத்தியர்கள் இல்ல... செத்த வைத்தியர்கள்.

அந்தப் பெரியவர், பேச்சை நிறுத்திவிட்டு, மனோகரின் காதுகளில், தன் பேச்சு ஏறுகிறதா என்பதுமாதிரி, மூக்கும் வாயும் முன்துருத்த உற்றுப் பார்த்தார். அவன் காட்டிய ஆவலில், பேச்சை தொடர்ந்தார்.

ஆனால், என்னை மாதிரி விரல்விட்டு எண்ணக்கூடிய அந்தக்காலத்து வைத்தியர்கள் இன்றும் உயிரோடதான் இருக்கோம். சித்தத்தை சிவனிடம் செலுத்தி, யோகம், ஞானம், மருத்துவம், மந்திரம், யந்திரம், தந்திரம் என்ற அப்பியாசங்களுக்கு அதிபதிகளான நந்தீசர், மூலதீசர், அகத்தீசர், சட்டநாதர், கிடைக்காடர், சண்டிகேசர், கனராமர், போகர், சிவவாக்கியர், பேரக்கர், புன்னாக்கீசர், மச்சமுனி, பூனைக்கண்ணர், யூகமுனி,

கொங்கணர், புலிப்பானி, வரமுனி என்கிற பதினெட்டுச் சித்தர்களின் பரம்பரை இன்னும் இருக்கத்தான் செய்யுது... ஆனால், பத்திரிகைகளுல படமா சிரிக்கிறவங்க.. இந்தப் பரம்பரையின் பெயரைக் கெடுக்கிறதுக்குன்னே பிறப்பெடுத்தவங்க.. இவங்க சித்தர் முன்னோர்களின் உள்முகம் தெரியாத வான்கோழிகள்... போகட்டும் உடம்புக்கு என்ன செய்யுது ?"

மனோகருக்கு ஆன்மீக மனிதராய்த் தோன்றும் அவரிடம், அற்ப விஷயத்தை எப்படிக் கேட்பது என்று புரியவில்லை... பிடி கொடுக்காமலே சொன்னான். "வயிற்றுக் கோளாறு... வாயுத் தொல்லை... இங்கிலீஸ் மருந்து, கேட்கல.."

"சரி... எழுந்து கைகால்களை உதறிட்டு.. நிமிர்ந்து உட்காருங்க... இல்லாத கூனை ஏன் போடுறே..?"

மனோகர், மனதை உதறிப்போடப் போவது போல், உதறிவிட்டு உட்கார்ந்தான். வைத்தியர் ஜெகன்னாதன், அவன் நீட்டிய கையின் மணிக்கட்டுக்கு கீழே, தனது மூன்று விரல்களைப் பதித்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு, ஒவ்வொரு விரலாய் எடுத்தெடுத்து, மீண்டும் பதித்தார்... திடுக்கிட்டவராய் அவனைப் பார்த்தார்.. கண்டதைச் சொன்னார். இப்போது அவனை ஒருமையிலேயே பேசினார்....

"என்னப்பா.... இது... நாதம் பேசலியே..."

"அப்படின்னா..."

"அடக் கடவுளே... இது, தெரியாமல் வந்த கோளாறு... நாதம் என்றால் ஒலி என்று மட்டும் அர்த்தமில்லை... பருவம் வந்ததும் ஒருத்தரோட குரலை ஆண், பெண் இயல்புக்கு தக்கபடி மாற்றி அமைக்கும் நாதாந்தம் என்றும் அர்த்தம். பதினான்கு, பதினாறு வயதில், ஆண்குரல்.... பெண்குரல் என்று அடையாளம் காண முடிகிறதே... அந்த மகரக்கட்டு அடையாளத்தை ஆணுக்குத் தருவது, விந்து. பெண்ணுக்குத் தருவது, நாதம்..

சகல உயிர்களுக்கும் ஆதாரமான பெரும்பொருள் மானுடத்தில் ஆணுக்குச் சுரப்பது விந்து... பெண்ணுக்குச் சுரப்பது நாதம்... ஆணையும் பெண்ணையும் எப்படிப் பொதுப்படையாய் மனிதன்னு அழைக்கிறோமோ.. அப்படி விந்துவையும், நாதத்தையும் நாதமுன்னு அழைப்பதுண்டு இதனால்தான் கோடிக்கணக்கான உயிரணுக்களைக் கொண்ட விந்தையும், லட்சோப லட்சம் முட்டைகளில் ஒன்றைக் கருப்பையில் சேர்க்கும் நாதத்தையும், பரம் பொருளின் சொரூபமாய் நினைக்கிறோம் இதனால்தான் நாதவிந்துக் கலாதி நமோ.. என்றார் அருணகிரியார் நாதாந்த ஜோதி என்றார் ஞானமுள்ள தேகமெல்லாம் நாதவிந்தின் கூறு'

என்றார்... இப்படிப்பட்ட பெரும்பொருளை இழந்து நிற்கிறியே.. ஒரு பெண்ணைத் தொட்டாலே தீட்டாயிடுவியே... அப்படியே ஆகாட்டாலும்... உன்னால ஒருத்தியை ஊடுருவ முடியாதே... கல்யாணம் ஆகிட்டா...? ஆயுட்டுதா..."

மனோகர், அவரை மருண்டும், மிரண்டும், பயந்தும், உண்மையைப் பாக்கப் போகிற புதிய தரிசனமாய்ப் பார்த்தான். அவரோ.. கேள்விமேல் கேள்வி போட்டார்...

"குடி... கூத்து.. கஞ்சா... சிகரெட்டுன்னு உண்டா... போதை ஊசி போடுறது உண்டா...? இல்லையா...? சந்தோஷம்... சரி... தூர்ப்பழக்கமுன்னு சொல்றோமே, சுய இன்பம்... அந்தப் பழக்கம் இருக்குதா .?

"இருந்தது... ஆனால் இப்போ இல்லை..."

"அந்தக் கெட்ட பழக்கந்தான்... நாதம் பேசாததுக்குக் காரணம்... பொண்டாட்டிகிட்டே... முடியுதா...?"

மனோகர், தலை கவிழ்ந்தான். அந்தத் தலையைத் தூக்கி பதிலளிக்கத்தான் போனான். முடியவில்லை. தலை நிமிர்த்தாமலேயே மென்று விழுங்கிப் பேசினான்...

"அந்தப் பழக்கம் ஒன்றும் தப்பில்லன்னு... டாக்டருங்க..."

"எழுதுனவன் ஏட்டைக் கெடுத்தான்... படித்தவன் பாட்டைக் கெடுத்தான்னு சொல்வாங்களே...அது இந்த எம்.பி.பி.எஸ் அரக்கன்களுக்குப் பொருந்தும்... அவங்க வாதம்... சொத்தை. எல்லாம் தெரியும் என்கிற ஆணவத்தில் எழுகிற மூடத்தனம்..."

"விந்து என்பது பிறப்பின் ஆதாரம்... ஆகாயம், வாயு, தேயு, என்ற தந்தைப் பூதங்களும், பிருதிவி, அப்பு என்ற தாய் பூதங்களும் கொண்ட பஞ்ச பூதங்களின் சேர்க்கையே இந்த உடல்... இந்தப் பூதங்களின் குறிப்பிட்ட விகிதாச்சார சேர்க்கையே ஒரு உயிர்ப்பொருள்... அல்லது... ஜடப் பொருளின் இயல்பையும், உறுதிப்பாட்டையும் தீர்மானிக்குது... அந்தப் பொருளை சமச்சீர் நிலையில் வைக்கிறது... இதைத்தான் இங்கிலீஸில் மெடாபாலிஸம் என்கிறான். உன் உடம்பில் இயற்கையாய் இருந்த இப்படிப்பட்ட சமச்சீர் நிலைகளை... நீ செயற்கையாய் செய்துசெய்து சிதைத்திட்டே... எவள்கிட்டயும், உன்னால முடியாதே'...?"

மனோகர், தட்டுத்தடுமாறி சந்தேகம் கேட்டான்.

"வாயுக் கோளாறாய் இருந்தாலும்.. நாதம் பேசாமல் இருக்கலாமே.."

“என் மேலேயே எதிரம்பு விடுறியா....? சந்தோஷம்... சும்மா சொல்லலே... நிசமாவே சந்தோஷம்.... வாயுக் கோளாறு... அது இருக்கிறது வரைக்கும் ஆண்மைக் குறைவை ஏற்படுத்தும்... இதை அலோபதிக்காரன் கணக்கில் எடுக்காதது தவறு... பெருந்தவறு... ஆனால் உனக்கு வாயுக் கோளாறு இருக்கிறதாய் நாடி சொல்லல... நீ உண்மையின் விபரீதத்தைச் சந்திக்கப் பயந்து, அப்படி நினைக்கிறே... விந்து விட்டவன்... நொந்து கெட்டான் என்பது பழமொழி... அப்படிப் பட்டவனை, ஒரு கோழி முடியைக் காட்டியே பயமுறுத்திடலாம்.. குரு பரசுராமருக்கும், சிஷ்யன் பீஷ்மருக் கும் ஏற்பட்ட போரில் பீஷ்மர் வென்றார்... குருவிடம் இதற்குக் காரணம் கேட்டார்... பரசுராமர் என்ன சொன்னார் தெரியுமா... பீஷ்மா... ஒன் பிரம்மச்சரியம் என்னைத் தோற்கடித்தது... என்றார். நம்ம மாதிரி சாதாரண ஆட்கள் கடைசிவரைக்கும் பிரம்மச்சரிய விரதத்தை கடைபிடிக்க வேண்டிய தில்லை... ஆனால் கல்யாணம் வரைக்கும் விரதம் இருந்தால்... அதற்குப் பிறகு விரும்பறதை பலமாய்ச் சுவைக்கலாமே... ஒன்னால் முடியாதே... பாவம்... ஒன் வீட்டுக்காரி....

மனோகர், புழுவாய் நெளிந்தான். சிறு பிள்ளையாய்த் துடித்தான்- சங்கரி, அவன் முன்னால் வந்து ஒப்பாரி போடுவது போல் ஒரு பிரம்மை- அப்புறம் அவள், கைதட்டிச் சிரிப்பது போல் ஒரு கொடுமை- அந்தச் சமயத்திலும் ஒரு சிந்தனை- ஆசாமி, இப்படி பயமுறுத்துறது வியாபாரத் தந்திரமாய் இருக்குமோ- இருக்கிறது மாதிரித் தெரியலியே- தோரணை, பேச்சு, துஷ்டனுக்கு உரியதாய்த் தோணலியே- விளம்பரப் பலகையில் டாக்டர் என்று போடாமல் வைத்தியர் என்று போட்டுக் காட்டும் மனிதரிடம், இப்படிப்பட்ட வில்லத்தனம் இருக்குமா- இருக்காது-

வைத்தியர், எழுந்தார் நாற்காலிக்குப் பின்பக்கம் திறந்த பலகை அலமாரியில், வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்ட லேகியப் பாட்டில்களில் ஒரு சின்னப் பாட்டிலை எடுத்தார்... சிறிது நடந்து, மேற்குப் பக்க சுவரோர கண்ணாடி அலமாரியைத் திறந்து, ஒரு சின்னக் குப்பியில் உள்ளதைக் கொட்டிக் கொட்டி, முப்பது சின்னச் சின்ன சரிக்கைக் காகிதங்களில் நிரப்பினார்... நிரப்பியதை மடித்துக் கொண்டு வர அவருக்கு முப்பது நிமிடமாயிற்று. நிலையற்றுக் கிடந்தவனிடம் திரும்பி வந்தார்.. பாட்டிலையும், பஸ்பத்தையும் வைத்தார்..

“பணம்...”

“நூறு ருபாய்..”

2.4

மனோகர் நீட்டிய பத்து ரூபாய் நோட்டுக்களை எண்ணிப் பார்க்காமலேயே, சட்டைப் பைக்குள் திணித்துவிட்டு, அவனுக்கு வைத்தியத்தை வர்ணித்தார்...

"சித்தர்கள், கட்டளைப்படி, நானே தயாரித்த மருந்து... ஒரு கரண்டி லேகியத்தையும், இந்த காகிதத்தில் இருக்கிற பஸ்பத்தையும் கலந்து சாப்பிடு. தினம் மூணு வேளை. ஆறின பாலைக் குடிக்கணும் சாப்பாட்டிற்குப் பிறகுதான்... போட்டுக்கணும்... ஒரு மணி நேரத்துக்கு முன்னாலேயோ, பின்னாலேயோ, காபி, டீ குடிக்கப்படாது. பத்து நாளைக்குப் பல்லைக் கடித்து, பெண்டாட்டியை ஏறெடுத்துப் பார்க்கக்கூடாது.. இந்த மருந்து பலிக்காட்டி, எந்த மருந்தும் பலிக்காது... பலன் கொடுத்தால், பதினோராவது நாள் என்னை வந்து பாரு... போய் வா..."

மனோகர் பேசாமலேயே நின்றான்... அவரையே உதடுகள் துடிக்கப் பார்த்தான்.. அவர் அவன் பக்கமாய் வந்து, அவன் கையைப் பிடித்தபடியே அறிவுரையாற்றினார்....

"பெண் என்பவள் சக்தி.. சக்தியைத் திருப்திப்படுத்த எந்த ஆணாலும் இயலாது... அவளாய்த் திருப்திப்பட்டால்தான் உண்டு... பெண்ணிடம், ஆண் ஒடுங்க வேண்டும்... இதுதான் சித்த வைத்தியத்தின் கோட்பாடு.. இதனால்தான் சித்தர்கள், மருந்துப் பொருட்களை தாய் சரக்கு, தந்தை சரக்கு என்று பிரித்தார்கள். தாய் சரக்கில் தந்தைச் சரக்கு மடிந்தால்தான் மருந்து கிடைக்கும்.."

"உதாரணமாய், கந்தகம் தாய்ச் சரக்கு... பாதரசம் தந்தைச் சரக்கு... பாதரஸத்தை பஸ்பமாக்கி, அதை கந்தகத்தோடு சேர்த்து அரைக்க வேண்டும். இதனால் பாதரசம் மாண்டு, கந்தகத்துடன் இணைகிறது. சத்ரு எதிர்நிலை கொண்டது. சத்ரு... தாய் நன்மை தரும் மித்ரு... மித்ருவைக் கொண்டு, சத்ருவை மடியச் செய்யவேண்டும். சத்ருவான விந்தை, மித்ருவான நாதத்தில் ஒடுங்கச் செய்ய வேண்டும்.. அதுவே தாம்பத்ய உறவு.. ஆகையால் இந்த உறவில் மனைவியை அடக்க நினைக்காதே... அடங்க நினை... இப்படிச் சொல்வதால், மனைவியை அவள் போக்கில் அடாவடியாய் விடலாம் என்று இல்லை... அந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் அவளைப் பப்ளிக்காய் அடக்கணும் ஆனால், பிரைவேட்டாய் அடங்கணும்.. போகட்டும்... எனக்கு என்ன வயது இருக்கும்..?"

"எழுபது."

"என் வயது எண்பது- இன்னும் ஒரு பல் போகல கண்ணுக்கு கண்ணாடி போடல. ஏன் இளமையிலேயே கட்டுப்பாடான

பிரம்மச்சரியம்- தியானம்- யோகாசனம்- அடுத்த தடவை வரும்போது உனக்கும் சொல்லித்தாறேன்- அதுக்கு முன்னால ஒன்று சொல்றேன்- கவனமாய்க் கேள்- உச்சம் வரும்போது- மூக்கின் நுனியைப் பார்- புருவ மத்தியைப் பார்- சரி போய் வா-”

மனோகர், அங்கேயே இருக்கப் போவதுபோல் நின்றான்- வைத்தியர் நாற்காலியில் உட்கார்ந்து பதார்த்த குண சிந்தாமணிப் புத்தகத்தைப் புரட்டியபோது, அவன், அவர் தனக்கு மேற்கோள் காட்டப் போவதாய் அனுமானித்து அவரைப் பார்த்தான்.

என்றாலும், வைத்தியர் அந்தப் புத்தகத்தில் மூழ்கியபோது, மனோகர், மனதுள் மூழ்கியபடியே, இப்போது நடந்தான்- மூக்கு நுனியைப் பார்த்தபடியே தொடர்ந்தான்... போகப் போக, அந்த வைத்தியசாலையில் கிடைத்த நிம்மதி சுருங்கியது- சுருங்கிச் சுருங்கி, சுருக்கம் தெரியாமலே போய் விட்டது. மனதில் மீண்டும் குழப்பம். ‘இந்த மருந்து பலிக்கா விட்டால் எந்த மருந்தும் பலிக்காது... என்றாரே- ஒருவேளை பலிக்காமல் போனால்- செய்முறைப் பழக்கம் உடலின் சமச்சீர் நிலையைப் பாதிக்கும்- என்றாரே- பாதித்திருக்குமோ- நாத விந்துக்கு அவ்வளவு மகிமையா- குப்புறப் படுத்த பழைய நாட்கள், பகை நாட்களோ- போனது போனதுதானோ- குரல் உடைந்துபோனதற்கு, அதுதான் காரணமோ. இதனால்தான் டெலிபோனில் வரும் சிலர், அவனை அடையாளம் தெரியாமலேயே மேடம் என்கிறார்களோ- மேடமா- மடமா- மோசம் போனேனே- நாசமானேனே-’

# 5

மனோகர், வீட்டுக்குத் திரும்பியபோது, முற்றத்தில் அம்மா... திண்ணை விளிம்பில் அக்கா... திண்ணைச் சுவரில் சாய்ந்தபடி சங்கரி... அம்மா முகத்தில் எள்ளும் கொள்ளும்; அக்கா முகத்தில் புருவச் சுழிப்புகள்... அவள் முகத்தில் கண்ணீர் வெள்ளம்...

மனோகர் அதட்டினான் தேக்கிவைத்த வெறுப்பையெல்லாம் சினமாகக் கக்கினான்

“என்ன இதெல்லாம்.”

அக்காக்காரி கரங்களைப் பிசைந்தபோது, அம்மாக்காரி அசுரக் கோபத்துடன் பதிலளித்தாள் மருமகளைச் சுற்றி மானசீகமாக

ஒற்றைக் குற்றவாளிக் கோட்டை போட்டபடியே குரலிழகப் பேசினாள்.

"லீவு நாளும் அதுமா.. வீட்டைவிட்டுப் போறானே... என்னம்மா நடந்ததுன்னு கேட்கப் போனேன்... என் பிள்ளையைக் காணோமேன்னு நான் பட்டபாடு... எனக்குத்தான் தெரியும்... பெத்தவளுக்குத் தெரியுறது மத்தவளுக்குத் தெரியலியே.. ஒரு மாமியார், மகன் எங்கே போனான்னு மருமககிட்ட கேட்கப் படாதா... எப்படியோ போகட்டும்.. அக்காவிஷயம் என்னாச்சு.. அந்தப் பயல்களைச் சும்மா விடப்படாது."

"எம்மா! எந்த நேரத்துல, ஒனக்கு, எதைப் பேசுவதுன்னு விவஸ்தை இல்லையா..? சங்கரி.... எதுக்காக ஒப்பாரி வைக்கிறே... யதார்த்தமாத்தானே கேட்டிருக்காங்க..."

சங்கரியால் கட்டுப்படுத்த முடியவில்லை... கண்ணீரும் கம்பலையுமாய் அழுதழுது சொன்னாள்..

"அப்படிக் கேட்டால் தப்பில்லதான்... ஆனால் அப்படிக் கேட்கலியே... நான் ஒங்களை வீட்ட விட்டுத் துரத்திட்டேனாம்.. நான் இந்த வீட்டுக்கு வந்ததிலேருந்து, நீங்க பேயறைஞ்ச மாதிரி ஆயிட்டிங்களாம்... எல்லாம் கடவுளுக்குத்தான் தெரியும்... சொல்லுங்க... ஒங்கள நானா துரத்துறேன்? வேணுமுன்னால் எங்க வீட்டுக்குப் போயிடுறேன்..."

மனோகர், பீறிட்டுக் கத்தினான். சுவரில் முகம் போட்டு நீர்க் கோடுகள் போடுகிறவள், திடுக்கிட்டுத் திரும்பும்படிக் கத்தினான்.

"ஏன் ஊரக் கூட்டுறது மாதிரி ஒப்பாரி போடுறே.. சரியான காட்டுமிராண்டி.... தாய்வீட்டுக்கு ஒரேயடியாய் வேணுமுன்னாலும் போயேன்.... நான் தடுக்கல..."

சங்கரி, சுவரோடு, சுவராய் உறைந்து நின்றாள்... இந்த மூன்று மாத காலத்தில், அவனிடமிருந்து கேட்டறியாத வார்த்தை அந்த அதிர்ச்சியில், அழுகை, திரவத்தில் இருந்து திட நிலைக்கு வந்தது.. ஆனாலும், சொர்ணம்மவுக்கு தாங்க முடியாத மகிழ்ச்சி... மகனின் சட்டையில் ஒட்டிய தூசி தும்புகளைத் தட்டிவிட்டாள்.

மனோகருக்கும், ஓரளவு திருப்தி. கட்டிய மனைவியை பப்ளிக்காய் அடக்கி விட்டானே!

# 6

சங்கரி, கட்டிலில் குப்புறக் கிடந்தாள். கண்களை மூடி, இருளில் வியாபித்தாள். மத்தியானம் சாப்பிடவே இல்லை. மாடிப்படி ஏறி வந்தவள், கட்டிலில் துக்க மயக்கத்தில் தொப்பென்று விழுந்தாள். அதுவே தூக்க மயக்கமானது. அண்ணி காந்தாமணி, மாடிக்கு வரத்தான் செய்தாள். அவளைச் சாப்பிட வரும்படி கூப்பிடத்தான் செய்தாள். எப்படி வயிற்றுக்குள் சோறு இறங்கும். அந்தப் பேச்சையும், ஏச்சையும் மாமியாரிடமிருந்து கேட்ட பிறகு, தன்னால் சாப்பிட முடியும் என்று அண்ணி நினைத்தது, அதைவிடக் கொடுமை.

சங்கரி, சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தவித்தாள். மனைவியை அடிப்பதை நிறுத்திவிட்டாயா என்று, ஆம் அல்லது இல்லை என்று சொல்லும்படி கட்டாயப்படுத்துவது போன்ற இக்கட்டான நிலைமை. ஆட்டையும் புல்லுக் கட்டையும், புலியையும் சேதாரமில்லாமல் சேர்க்கவேண்டியதுபோன்ற பொறுப்பு. பொறுப் பற்றவளுக்கு பதில் சொல்ல முடியாத பரிதவிப்பு.

அந்த மூன்று நாட்கள் முடிந்த இன்று சங்கரி மஞ்சள் தேய்த்து சாவகாசமாய்க் குளித்து விட்டு கூந்தலுக்கு வெள்ளைத் துணியால் கட்டுப் போட்டு, பூஜை அறைக்குள் நுழைந்தாள். மூன்று நாட்களாய்ப் பார்க்க முடியாமல் போன தெய்வப் படங்களை, தீபம் ஏற்றி, கற்பூரம் கொளுத்திக் கொண்டிருந்தபோது, அதற்கு மரணமணி அடிப்பது போல் மாமியார் கத்தினாள்.

ஒவ்வொருத்திக்கு கல்யாணத்துக்குப் பிறகு, குழந்தை உண்டாகாட்டாலும், பத்து நாளாவது நின்னு வரும்... இந்த வீட்ல என்னடான்னா டாண்னு வந்துடுது... என்ன பொம்பளையோ... சாதகப் பொருத்தம் சரியாக இருக்குன்னு சொன்னவனைச் செருப்பால அடிக்கணும்...

சங்கரி கற்பூரத்தட்டை சுற்றாமல், சுழற்றாமல், கீழே வைத்தாள். பூஜை மணியை அலட்சியப் படுத்தினாள். ஏதேச்சயாய்க் குங்குமம் எடுத்தவள் வழக்கப்படி அதை நெற்றியில் பொட்டாக்கி திருமாங்கல்யத்தில் ஒரு புள்ளியாக்குகிறவள், குங்குமத்தைப் பீடத்தில் சிதறடித்தபடியே, வெளியே வந்தாள். மாமியாரை முறைத்துப் பார்த்தாள். அவளோ, சண்டைக் கோழியாய் கைகளை மடித்து விலாவில் தட்டியபோது, சங்கரி பொறுமை இழந்தாள் 'இனிமேல் எது கேட்கணுமுன்னாலும் ஒங்க பிள்ளைகிட்ட

கேளுங்க.... என்கிட்ட கேட்டால் மரியாதை போயிடும்...' என்றாள். பிறகு, தான் சொன்ன வார்த்தைகளைத் தானே நம்பமுடியாமல், சிறிது கால்களைத் தேய்த்தபடியே நின்றுவிட்டு, மாடிக்கு வந்தவள்தான்.

சிற்றுண்டியும் சாப்பிடவில்லை. மத்தியானச் சாப்பாடும் வரவும் இல்லை. இவள் போகவும் இல்லை. பசிமயக்கம் எடுத்தாலும் அந்த மயக்கத்தை ஏதோ ஒரு விதச் சூன்யம் 'விழுங்கி விட்டது. மனதில் இருக்கும் பாரத்தை இறக்கிப் போட, உமாவும் வருவதில்லை. உறவோ பகையோ அற்ற நிலைமை. அன்று அவள் கணவனிடம் அவர் அப்படிப்பட்டவர் இல்லை... ஏதோ டென்ஷன்ல சொல்லிட்டார்... தப்பா நினைக்காதிங்க... என்று சொன்னபோது, இந்திரன் போட்ட பார்வை சரியாகப் படவில்லை. அவர் எப்படிப்பட்டவர் என்று எனக்குத் தெரியுமென்று அவன் சொன்ன பதில் சொன்ன தோரணையும், என்னவோ போல் இருந்தது. யானை சேறில் சிக்கினால் தவளை கூடக் கிண்டல் செய்யுமாம்.

சங்கரி தனிமையில் தவித்தாள். இந்த உலகில் அவள் மட்டுமே தனித்திருப்பதாய் ஒரு அனுமானம். சபிக்கப்பட்டது போன்ற உறுத்தல். சாப விமோசனம் எப்போ கிடைக்குமோ என்ற ஏக்கம்.

திடீரென்று, அவள் காதில் ஏதோ உரசுவதுபோல் தோன்றியது. திடுக்கிட்டுக் கண்விழித்தால், ஒரு இலைப் பொட்டலம். மல்லிகைப் பூவாய் துருத்திக் கொண்டிருந்தது. ஏறிட்டுப் பார்த்தால், மனோகர்! அவளுக்கு முதுகு காட்டி வீராப்பாய் நின்றான். அந்தப் பொட்டலத் தையும், விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல் நின்றவனையும் மாறி மாறிப் பார்த்த சங்கரி, குலுங்கப் போனாள். அவனைக் கட்டிப் பிடித்து தோளில் சங்கமமாக நினைத்தவளாய் எழுந்தாள். ஆனாலும், பழைய கசப்பு, புதிய இனிப்பை சேதாரம் செய்தது. காட்டுமிராண்டி மாதிரி ஏன் அழுகிறே என்று கேட்டாலும் கேட்பார். இதனால் மேலும் பத்து நாட்கள் சூன்யமாகலாம்.

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவில்லை. மனோகர் முன்பக்கம் அற்றுப்போனவன் போல் முதுகு காட்டி நின்றான். அவளோ, கட்டிலில் உட்கார்ந்தபடியே விரல்களுக்குச் சொடுக்குப் போட்டாள். அந்த மல்லிகைச் சரத்தை பொட்டலத் திலிருந்து விடுவிக்கப் போனாள். பொட்டலத்தைச் சுற்றிய வாழை நாரை அவிழ்க்க முடியவில்லை பல்லால் கடித்துப் பார்த்தால், அந்தப் பல்லுக்குத்தான் வலி. பொட்டலமும் கலைய வேண்டும் பூவும் நிலைக்க வேண்டும்.. எப்படி. எப்படி....

மனோகர், அவளுக்கு முகம் காட்டவில்லைதான்; என்றாலும், சங்கரிக்கு ஒரு நிம்மதி. ஆனந்தமான அதிர்ச்சி. மாமியாரின் கிரியா சக்தியால் பத்து நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கணவன் மனைவி யுத்தம் முடிவுக்கு வரப்போகிற மகிழ்ச்சி அன்று அவன், ஒரு தரப்பாக போர் தொடுத்த பிறகு, இன்றுவரை அவர்கள் பேசிக் கொள்வதில்லை அன்று முதல் அவள் கட்டிலில் உடல் கொள்ளாமல் தரையில் படுத்தாள் அவனோ, அவள் இருப்பதாக அனுமானிக்கவே இல்லை. மறுநாள் அவள் காப்பி கொண்டு வரவில்லை. அவன் துணிமணிகளுக்கு இஸ்திரி போடவில்லை. ஆனாலும், மாமியார்க்காரி 'நானிருக்கேன் ராசா...' என்று கத்தியபடியே படுக்கை அறைக்கே காப்பியோடு வந்தாள் இரண்டாவது நாளும் இப்படியே. மூன்றாவது இரவில், அவன் வருவதற்கு முன்பே, கட்டிலில் படுத்தாள். அவனோ தரையில் படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் மாமியாரை வாசலிலேயே நிறுத்தி அவள் கையிலிருந்த டம்ளரை வலுக் கட்டாயமாக பறித்து, அவனிடம் நீட்டினாள். அவன் குளித்து முடித்து சீவிச் சிங்காரித்து ஒரு அழுக்குப் பேன்டை போடப்போன போது, அவள் அதை வெடுக்கென்று பறித்துவிட்டு, அலமாரியில் தயாராயிருந்த ஒரு நீலப் பேன்டைத் தூக்கி, அவன்மேல் எறிந்தாள். அதற்கு இணையாக பால் வெள்ளைச் சட்டை ஒன்றை அவன் தோளில் தொங்கப் போட்டாள் மறு இரவில், அவன் கட்டிலில் படுத்தபிறகு பக்கத்தில் படுத்தாள். அவனோ கல்லுப் பிள்ளையாராய்க் கிடந்தான். அவள் அழுது பார்த்தும் அவன் அசைவில்லை. இன்றைக்கு என்ன ஆச்சு... எப்படி இந்தப் பூப்பழக்கம்.. அவள் தேன் கொண்ட பூவாய் மலர்ந்தாள். முதுகை முகமாக்காதவனை நினைக்க, நினைக்க சிரிப்பு வந்தது. செல்லமாகச் சிணுங்கினாள்.

"பூவுக்கு மட்டும் குறைச்சலில்லை..."

மனோகர், குறைபட்டவன்போல் திரும்பினான். 'என்ன சொல்கிறாள்.. அந்த குறைச்சலைச் சொல்லாமல் சொல்லு கிறாளோ...'

சங்கரி, அவனைச் சீண்டினாள்.

'யாருக்கு வேணும் இந்தப் பூவு..? பிச்சைக்காரிக்கு எறிந்தது மாதிரி எறிந்தால் என்ன் அர்த்தம்..? வச்சா தலையிலே வைக்கணும்."

மனோகரின் முகக்கடுமை இளகியது. முணுமுணுப்பு புன்முறுவலானது வைத்தியர் சொன்னதுபோல், அந்தச் சண்டையையே ஒரு சாக்காக்கி, பத்து நாட்களாய் பல்லைக்

கடித்துக் கொண்டிருந்தவன், பதினோராவது நா ளான இன்று, அவன் உடம்பு முறுக்கேறியிருந்தது. பார்வை மதப்பானது. எப்படியோ அவளுக்குத் தெரியாமல் சாப்பிட்ட மருந்து இன்றிரவு அவளுக்குத் தன்னை தெரியப்படுத்தும்.

மனோகர், அவளை நம்பிக்கையோடு நெருங்கினான். அந்தப்பூப் பொட்டலத்தை பல்லால் நார் உரித்து விடுவித்தான். தலையை கைகளால் மூடிக் கொண்டவளை, தன் மார்பில் கிடத்தினான். அவள் கைகளை தன் கைகளால் இறக்கினான். பிறகு அந்தப் பூவை அவள் தலையில் சூடினான். அவள் வீறாப்பாய் தலையை ஆட்டியபோது, அவன் கைபட்டு சில பூக்கள் கசங்கின. தலையில் சூடிய பூ கட்டிலில் விழுந்தது. அவள் செல்லமாக ஒரு பூவைக்கூட வைக்க முடியலே... என்று சொன்னபோது, அவன் உடல் முறுக்கு லேசாய்த் தளர்ந்தது. மனம் வாதைப்பட்டாலும், உடல் அவள் பக்கமாய்ச் சாய்ந்தது. நடுக்கமற்ற சாய்வு.... நம்பிக்கை போகாத அணைப்பு... அவள், அவன் பக்கமாகத் திரும்பி அவன் தோள்களைப் பற்றியபோது...

மாமியாரின் கனைப்புக்குரல் கேட்டது. வாசலுக்கு வெளியே உடம்பையும், உள்ளே தலையையும் போட்டுக் கொண்டு நின்றாள். "அக்கா விஷயம் என்னடா ஆச்சு..." என்றாள். சங்கரி, மாமியாரை ஏறிட்டுப் பார்க்கவில்லை. கணவனின் தோள்களைப் பற்றிய கைகளை அகற்றவில்லை. 'பார்த்தால் பார்க்கட்டும்.' ஆனாலும், மனோகர் அவள் கரங்களை அவசர அவசரமாக எடுத்துப் போட்டான் அம்மா பக்கம் போய், அவளை எரிச்சலாய்ப் பார்த்தான்.

உடனே அவள், "காந்தாமணியோட கொழுந்தன் லெட்டர் போட்டிருக்கான். 'மனோகர் பயலால என்ன செய்ய முடியுமுன்னு பார்க்கத்தான் போறோம். வண்டிப் பாதை வண்டிப் பாதைதான்... அவன் ஆபீசரா இருக்கலாம். ஆனால், எங்க ஊருக்கு, அவன் ஒரு இரப்பாளிப் பயதான்னு' ஊரு முழுக்கச் சொல்லிட்டு வாரானாம்... இந்த ராமசாமிப் பய... எல்லாம் நீ கொடுக்கிற இளக்காரம்... அவனை கைவிலங்கு கால்விலங்கு போட்டு ஜெயிலில அடைச்சிருந்தா இப்படிப் பேசுவானா...? ஒன்னால முடியும். ஆனால், மனசுதான் இல்ல. சரிசரி... சாப்பாடு சூடு ஆறிடும்... வந்து சாப்பிட்டுட்டு அப்புறம் கொஞ்சுங்க குலாவுங்க.... என்றாள்.

மனோகர், அம்மாவின் முதுகைத் தள்ளிக்கொண்டே படியிறங்கினான். சங்கரி, அவனை மாமியாரிடம் ஒப்படைக்க விரும்பாதவள் போல் கணவனைப் பின் தொடர்ந்தாள்.

தம்பியையும், நாத்தனாரையும் ஒருசேரப் பார்த்த காந்தாமணிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அவன் மாடிக்குப்

போகும்போது பேன்ட் பை உப்பி இருந்ததைப் பார்த்தவள். அதுவே இப்போது நாத்தனார் கொண்டையை உப்ப வைத்திருந்தது கண்டு ஆனந்தித்தாள். தம்பியையும், தம்பி மனைவியையும், இருவர் தோளையும் அழுத்தி சின்னச் சின்ன சதுரப்பாய் இருக்கைகளில் உட்கார வைத்தாள். பரிமாற எழுந்த சங்கரியை, கண்ணால் அதட்டி உட்கார்ந்த இடத்திலேயே உட்கார வைத்தாள். முட்டைப் பாயாசம் போடாமல் போனோமே என்று, தன்னைத்தானே விமர்சித்துக் கொண்டாள். நெத்திலிக்கருவாடு குழம்பு... முருங்கைக்காய் சாம்பார்... எண்ணைக் கத்தரிக்காய்ப் பொரியல்... இருவரும் ரசித்துச் சாப்பிட்டார்கள்.

மனோகரும், சங்கரியும் ஈரக் கைகளைத் துடைத்தபடியே ஜோடியாய் மாடிப்படிகளில் ஏறப்போனபோது, மாமியார் மகனின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

“இன்னைக்கு ரெண்டுல ஒண்ணு தெரியணும்... அக்காவுக்கு உதவப் போறியா இல்லியா... அந்த வண்டிப் பாதையை தடந்தெரியாம அழிக்கப் போறியா இல்லியா... ராமசாமிப்பயல ஜெயிலுல போடப்போறியா இல்லியா.... இப்பவே எனக்குத் தெரிஞ்சாகனும்... உன்னால முடியாட்டா, நான் ஊருக்குப் போகப் போறேன்... என்று கத்தோ கத்தென்று கத்தினாள். காந்தாமணியோ, அம்மாவை ஒப்புக்குத் திட்டுவது போல் திட்டினாள்.

சங்கரிக்கு எரிச்சலுக்கு மேல் எரிச்சல். அந்தச் சிவபூஜைக் கரடிகளை கண்களால் எரித்துவிட்டு, சலிப்போடு மாடிக்கு வந்தாள். மொட்டை மாடியில் அங்கும் இங்குமாய் சுற்றினாள். கீழே சத்தம் கத்தலாகியது. அந்தக் கத்தலை மீறி தெற்குப்பக்க வீட்டு மாடியில் ஒரு முக்கல் முனங்கல். ‘என்னை விட்டுடு... எவ்வளவு நேரமுய்யா....? வாட்ச்மேன் வந்திடப் போறான்... அட விடுய்யா... இந்தா பாரு... நான் அப்புறம் வரவே மாட்டேன்...’

சங்கரி, மொட்டை மாடியின் மதில் சுவர் விளிம்பில் கை ஊன்றி எதிர்ப்பக்கத்து வீட்டை ரசனையோடு பார்த்தாள். இவள், இந்த வீட்டுக்கு வந்தபோது, காலியாக இருந்த மனை, இப்போது அடுக்கு மாடி கட்டிடமாகிக் கொண்டிருந்தது. முதல் மாடியில் தான், இந்த அமர்க்களம். ஒரு மரத்தில் தங்கும் பறவைகள் போல் கீழ்த்தளத்தில் தொழிலாளர்கள் தங்கியிருக்கிறார்கள். ‘அவன், வேறு ஏதோ ஒரு கட்டிடத்தில் வேலை பார்க்கும் ‘பெரியாள்’... அவள், இந்தக் கட்டிடத்தில் வேலை பார்க்கும் ‘சித்தாள்.’ வாரம் இரண்டு தடவை நடக்கும் கூத்து இது. இவள் சாப்பிடப் போவதற்கு முன்பே அந்த கட்டிட முதல் மாடியில் சத்தம் கேட்டது. இன்னுமா முடியல... அடேயப்பா... எப்படி இவ்வளவு நேரம்.. உமா

என்னடான்னா ஒரு மணி நேரம் புரட்டினதாச் சொல்றாள்... இங்கே என்னடான்னா அதைவிட அதிக நேரம் ஆகும் போல இருக்கு.. இன்னும் ஓயல.. பாவ்ம்.. பாவப்பட்டதுகள். சந்தோஷமாய் இருந்துட்டு போகட்டும் ஆமாம்.. பாவப்பட்டது யார்...?'

என்றாலும், சங்கரிக்கு மகிழ்ச்சிதான் வீட்டுக்காரன் பேசிவிட்டான் என்பதால் மட்டுமல்ல. இன்றைக்கு அவன் பிடி அசத்தலாயிருந்தது முகத்தில் கூட ஒரு மலர்ச்சி. அவரோட அழகுக்கு வேற சொர்க்கம் இருக்க முடியாது.

சங்கரி, அந்த மொட்டை மாடியையே சுற்றிச் சுற்றி வந்தாள். படிகளில் இறங்கி பக்குவமாகப் பார்த்தாள். சத்தம் ஓய்ந்தது. அண்ணி அழுது கொண்டிருந்தாள். மாமியார் மூலையில் சாய்ந்து கிடந்தாள் 'அவரோ' அக்காவின் கைகளைப் பிடித்து ஏதோ பேசுகிறார். அம்மாக்காரி ஓடி வந்து அந்தக் கையைத் தட்டி விடுகிறாள்.. விவஸ்தை கெட்ட ஜென்மங்கள்... பாவம் அவரு... கீழே போய் ரெண்டு கேள்வி கேக்கலாமா... வேண்டாம் ஒருவேளை அவரு காட்டுமிராண்டினு கத்திடப்படாது...

சங்கரி, சலிப்போடு அறைக்கு வந்து, மல்லாக்கப் படுத்தாள். குப்புறப் புரண்டாள். ஒரு பக்கமாய் குடை சாய்ந்தாள். திடீரென்று அவள் உடலோடு உடல் உரசியது. தோளில் ஒரு முகம் விழுந்தது ஆனந்தமாய் திரும்பினாள். அவன், அவளை அங்கும் இங்குமாய் உருட்டினான். அவள் இன்னைக்கு உங்களுக்கு என்னாச்சு... என்று திக்கித் திக்கிச் சொன்னபடி அவன் தலையைச் செல்லமாகக் குட்டினாள் குட்டிய தலையைக் கோதிவிட்டாள் அவன் கழுத்துக்குள் தன் முகத்தைப் பதியவிட்டாள்... அவள் ஆடைகள் அறைகுறையாகின. அந்தச்சுரணை இல்லாமலேயே அவள் அரை மயக்கத்தில் கிடந்தாள்.. உடம்பு கனத்தது.. ஒரு சுமை... சிறிது நேரத்தில் கனம் தெரியாமல் போன சுகமான சுமை.. அவன் கழுத்தை வளைத்துக் கொண்டு ஐ லவ் யூ.. ஐ லவ் யூ.. மனோ.. என்று உளறுவது போல் உணர்ச்சிகளை கொட்டினாள் ஒரே ஒரு நிமிடத்திற்கும் குறைவே...

மனோகர், குழைந்து போனான்.. அப்படிப் போகப்போக, அவனுக்கு, அவள் வெறும் சதைப் பிண்டமாகத் தெரிந்தது அவளுக்கும், அவன் சுமையாகப்பட்டது. அவளே அவனை கீழே தள்ளிப் போட்டாள். பிடித்ததும் பிடிபட்டதும் பொய்யாய், பழங்கதையாய் போனது அவள் அந்த இருட்டில் அவனை எரிச்சலோடு பார்த்தாள். வீம்புக்குதன் மேல் சாயப் போனவனை ஒரு தள்ளு தள்ளிவிட்டு, படுக்கையில் உட்கார்ந்தாள் அவனாவது சும்மா இருந்திருக்கலாம் அந்தச் சமயம் பார்த்து, நெருப்புக் கோழியாய் ஒரு கேள்விக்குள் தன்னை மறைத்துக் கொண்டதாய் தன்னை நினைத்துக் கொண்டான்.

“ஆமா... நான்தான் எங்கம்மா பித்துக்குளின்னு சொல்லியிருக்கேனே.. காலையில அவளுக்குப் போட்டியா கூடக் கூடப் பேசினியாமே...”

சங்கரி, வெடித்தாள்... எரிமலையான வார்த்தைகள். பூகம்பமாய்ப் போன விமர்சனம்...

“எல்லாம் தலைவிதி... ஒங்களால இது முடியலைன்னு சொல்லிட்டுப் போங்களேன்.. ஏன் வம்புச் சண்டைக்கு சாக்கு தேடுறீங்க...”

சங்கரி, அவனது எதிர்த் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கத் தயாரானது போல் உடம்பை விறைப்பாக்கினாள். முகத்தைக் கடுமையாக்கினாள். வாயில் சில வார்த்தைகளைச் சுமந்தாள் ஆனாலும் அவனிடமிருந்து எந்த வார்த்தையும் வரவில்லை. ஒரு சின்ன முணுமுணுப்புக்கூட கேட்டகவில்லை. படுக்கைமட்டும் லேசாய் ஆடி அடங்கியது... எல்லாமே அடங்கிப்போன அல்லது அடக்கப்பட்ட வெறுமை. காலம் நிமிடங்களாய் கழிந்து கொண்டிருந்தது.

சங்கரி, அவன் பக்கமாய்த் திரும்பினாள். ஜன்னல் கம்பிகள் வழியாய் ஊடுருவிய நிலா வெளிச்சத்தில் அவன் மங்கலாய்க் கிடந்தான். கண்களைத் திறந்து வைத்திருந்தான். கைகளை விரித்துப் போட்டிருந்தான்.. தற்செயலாய் அவள் காலில்பட்ட தன் காலை அவசர அவசரமாய் இழுத்துக் கொண்டான். திறந்திருந்த கண்களை இமைகளால் பூட்டிக் கொள்ளாமல், கைகளால் மறைத்துக் கொண்டான்.

சங்கரிக்கு, என்னவோ போலிருந்தது. இப்போதுதான், தான் சொன்னதின் தாத்பரியம் அவளுக்கு முழுமையாய்ப் புரிந்தது போலிருந்தது. ‘ ஓடி.... ஓடி.... புறமுதுகு காட்டியவனை, அப்படி சொற்சூடு போட்டது, தவறு. ஆயிரமிருந்தாலும், அவர் கணவர் அந்தக்குறை தவிர, எந்தக் குறையுமில்லாத மனிதர். அவரை மீறிப்போன செயலின்மை... மனதும் உடம்பும் எதிரெதிராய்போன கொடுமை. ஒன்றோடு ஒன்று மல்லுக்கு நிற்கும் கொடூரமான யதார்த்தம். இந்த இரண்டிற்கும் இடையே, இவர் பிள்ளைப் பூச்சியாய் இடையில் அகப்பட்டுத் தவிக்கிறார். மனமிருந்தும் மார்க்கமற்றத் தன்மை.’

‘இப்படிப்பட்ட நோயாளி மாதிரியான ஒருவரை நோகடித்தாச்சு.. அய்யோ... எனக்குள்ளும் இப்படிப்பட்ட ஒரு ராட்சஷியா..? அன்றைக்கு அவர் சொன்னது போல் நான் ஒரு காட்டுமிராண்டிதான். மனுஷி இல்லை. இப்படியா கேட்பது..

கேட்டுட்டேனே.. எப்படியோ கேட்டுட்டேனே... புத்தியக் கடன் கொடுத்துட்டேனே.. அவர் ஆம்பளையா இல்லாமல் இருக்கலாம்... அதனாலேயே அவர் மனுஷன் இல்லேன்னு ஆயிடுமா... அந்த மனுஷனுக்குள்ள ஒரு மனம் இருக்குமே... அது இப்ப என்னபாடு படுதோ... நான் பெண்ணே இல்ல... பிறகு எப்படிப் பெண்டாட்டியா இருக்க முடியும்...'

சங்கரி, அவனைப் பார்த்துப் பார்த்து கைகளை பிசைந்தாள்... பிறகு, தலையில், ஓங்கி ஓங்கி அடித்தாள். மனோகரோ, அவளை ஏனென்று கேட்கவில்லை... தலையைத் தாக்கும் கரங்களைத் தடுக்கவில்லை... அழட்டும்... செத்துப்போனவனுக்கு ஒப்பாரி வைக்கிறாள்... தப்பில்லைதான்...

அவனுள் ஒரு வைராக்கியம். பட்டதுபோதும். இவள் ஒப்பாரிக்கு உருவம் கொடுப்பது போல் செத்துப் போகவேண்டும். 'ஆணாய் நடக்க முடியாதவன், பிணமாய்த்தான் போக வேண்டும். அதை எப்படிச் செய்வது... எங்கே செய்வது... எப்போது செய்வது...'

# 7

மனோகர், துணை இயக்குநராய், அலுவலக சுழல் நாற்காலியில் சோர்ந்து போய்க் கிடந்தான். எதிர் நாற்காலிகளில் ஒன்றை மேஜைக்கு இழுத்துப் போட்டு கால்களை நீட்டி போட்டிருந்தான். தலைதட்டும் மெத்தையிட்ட நாற்காலியில் கரங்களை வளைத்துப் போட்டு, அரைக்கண் பார்வையில் கிடந்தான். தூக்கமும் துக்கமும் கலவையாகி அவனை மயக்கிப் போட்டன நினைவுகள் அவனைத் தூக்கிப் போட்டு மிதித்தன.

சங்கரி, கண் விழிக்கும் முன்பே எழுந்து முகத்தை மட்டும் கழுவிவிட்டு, ஐந்து மணிக்குப் புறப்பட்டு ஆறு மணிக்கு அலுவலகம் வந்துவிட்டான். பாயில் அப்போதுதான் தூக்கம் கலைத்த அம்மா, அவன் பக்கமாய் ஓடிவந்து, 'எங்கடா... எங்கடா..' என்றபோது, அவன் அவளுக்குப் பதிலளிப்பதுபோல் டெலிபோன் எண்களைச் சுழற்றினான். 'வேதமுத்தா... நான் ஆபீஸ் வாரேன்... நிறைய வேலை இருக்குது... என் ரூமைக் கிளீன் செய்து வை..'

அம்மாக்காரி, அவன் சட்டை கிழியும்படி இழுத்திருப்பாள். ஆனால், ராமசாமிக்கு விலங்கு மாட்டுவதற்கு அவன் போவதாக

அனுமானித்து, சும்மாவே இருந்து விட்டாள். பைக்கில் ஏறிய மனோகர், வீட்டை திரும்பிப் பார்த்தபோது, அம்மா பக்கத்தில் சங்கரி. முகத்தைக் கழுவியதுபோல் கூடத் தெரியவில்லை. முந்தானை விலகிய நினைப்பற்றவளாய் நின்றாள். அவனைப் போய் வழி மறித்திருப்பாள். மாமியார் ரகளைக்குப் பயந்து விட்டாள்.

அலுவலகத்தில், மனோகர் நினைவுகளை அசை போட்டான். மனைவியை அந்தக் கோலத்தில் பார்த்தது, என்னவோ போலிருந்ததது. அங்கும் இங்குமாய் நெளிந்தான். கால்தட்டிக் கீழே விழுந்த நாற்காலியை எடுப்பதற்காக எழுந்தவன், எதற்கு எழுந்தோம் என்ற நினைப்பில்லாமல் அந்த அறையைச் சுற்றினான். அல்லாடி... அல்லாடி சோபா செட்டில் சாய்ந்தான். கொஞ்சம் சுகமாக இருந்தது. அவளிடம் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. மெய்யான நியாயம். மெய் சம்பந்தப்பட்ட நியாயம். ஆனால், அந்த நியாயத்தை, அப்படி அநியாயமாக சொல்லியிருக்க வேண்டாம். அப்படியும் சொல்ல முடியாது. அவள் இதுவரை பொறுத்ததே பெரிசு. நாய் தேங்காயை உருட்டியது போன்ற கதை. அரைக்கிணறு தாண்டி, கீழே விழுந்து அடிபட்டுப்போன கதை.

"அய்யா... ஏதாவது..."

'முப்பது வயதிலும் எழுபது வயது நடுக்கத்தோடு நின்ற சவுக்கிதார் மருதனை, மனோகர் கண் திறந்து பார்த்தான். துணை இயக்குநருக்கு உயிர் நடுக்கம் என்றால், அவனுக்கு உடல் நடுக்கம். இராக்காவலாளியான இவன், இரவு பத்து மணி முதல் நான்கு மணி வரை வீட்டில் படுக்கப் போய்விடுவான். டெலிபோனை எடுத்து, கீழே வைத்து விடுவான். 'ஒருவேளை அதற்கு முன்பே தன் வேலையைச் சரிபார்க்க நடுராத்திரியிலேயே டெலிபோன் செய்திருப்பாரோ... என்னை ஒழித்துக் கட்டுற வேலையைத்தான் முக்கியமான வேலை என்று சொல்லியிருப்பாரோ. பத்து வருஷ சர்வீஸ் பலன் கொடுக்குதான்னு பார்ப்போம்.'

"அய்யா.. நேத்து நைட்டு முழுதும் டெலிபோன் வேலை செய்யலைய்யா. அப்பப்போ வருது.. அப்பப்போ போய்டுதுய்யா... கேபிள் பால்டாம்யா.."

மனோகர், அவனை, வினோதமாகப் பார்த்தான். அவன் நடுங்கி விட்டான். 'சஸ்பெண்ட் சஸ்பெண்டு தானோ.. எதுக்கும் அடுத்த அஸ்திரத்தைப் போட்டுப் பார்க்கலாம்...'

"ராத்திரி முழுதும் எனக்குப் பேதி அய்யா.. முக்கால் வாசி நேரம் பாத்ரூம்லதான் இருந்தேன் அய்யா "

மனோகருக்கு, அவனுக்கு, 'வந்தது' தனக்கு வந்தது போன்ற அசதியில் பேசினான்

"இத மொதல்லயே சொல்லபடாதா...? சரி நீ... வீட்டுக்குப் போ... ஒன் வேலையும் நான் சேர்த்துக் கவனிக்கிறேன்."

"அய்யா... அய்யய்யா... தப்பு தவறு செய்தாலும் பொறுத்துக்குங்க அய்யா... எங்க மாமியார் படுத்த படுக்கையா இருக்காங்க அய்யா... எழுபது வயசு மாமியாருக்கு நான்தான் துணய்யா..."

"மாமியாருக்காக அழுகிற முதல் மருமகன் நீதான்..."

"அவங்க எங்கூடப் பொறந்த அக்காய்யா... அக்கா பொண்ணத்தான் கட்டியிருக்கேன் அய்யா..."

"உறவை திரிக்கிற உன்ன இதுக்கே சஸ்பென்ட் பண்ணனும்... போய்யா... பேதியானவனுக்கு எப்படி இருக்கும்னு எனக்குத் தெரியும்... முதல்ல வீட்டுக்குப் போ... முடிஞ்சால் சாயங்காலம் வா..."

"ஸ்வீப்பர் வரது வரைக்குமாவது இருக்கேன்யா..."

"அவள் வந்தால், அவள் வேலையப் பார்ப்பாள் நீ போ.."

மருதனுக்கு, இப்போது நிசமாகவே பேதி வந்தது. 'என்ன ஆகுமோ... எப்படி ஆகுமோ... பூடகமாய்ப் பேசுறாரே.' அவன் ஒடுங்கி ஒடுங்கி வெளியேறின்னான். மனோகர், மெல்லச் சிரித்தான். அக்காவை மாமியாராக்கியவனை நினைத்து ரசனையோடு சிரித்தான். திடீரென்று சிரிக்க அவனுக்கு அருகதை இல்லை என்பதுபோல், சங்கரி முன்னால் வந்து கை கொட்டிச் சிரிக்கிறாள். தலையில் அடித்து ஒப்பாரி இடுகிறாள். மனோகருக்கு விரக்தி தூக்கமானது. குறட்டை ஒப்பாரியானது.

"சாரே... சாரே..."

மனோகர், திடுக்கிட்டு கண் விழித்தான். விழிப்பில் ஏன் இப்படி பயம் வரவேண்டும் என்று சிந்தித்தான். வைத்தியர் சொன்ன கோழி முடி நினைவுக்கு வந்தது. தன்னைத்தானே நிமிர்த்திக் கொண்டு, அவளைப் பார்த்தான். அலுவலகத்தை கூட்டிப் பெருக்கும் கங்கா. சேரிக்கே உரிய கம்பீரம். உழைப்பில் உருவான உடல்கட்டு. இருபத்து நான்கு தேறலாம். பார்த்தால் பற்றிக் கொள்ளத் தூண்டும் கண்கள். பேசும்போது பூ விரிவது போன்ற தோரணை. அவள், இவனைத் தெரிந்து வைத்திருக்கும் அளவிற்கு, இவனுக்கு, அவளைத் தெரியாது ஒரு தடவை, மாதக் கூலியில் ஐம்பது ரூபாய் போட்டுக் கொடுக்கும்படி கேட்டபோது, இவன் நூறு ரூபாய் கூட்டிப்

போட்டான் இன்னொரு தடவை, இவளை இந்த அலுவலகத்தில் சேர்த்தவள் மாமூல் கேட்பதாக இவள் முறையிட்டபோது, பக்கத்து அலுவலக பெருக்கல்காரியான அந்த மாமூலை, மிரட்டியவன் இவன்... அதோடு சரி...

"சாரே... சாரே.. இந்த ரூமைப் பெருக்கித் துடைக்கணும் சாரே.. இந்தாண்டை வா சாரே..."

"நாளைக்குப் பார்த்துக்கலாம்...."

"வாணாம் சாரே.. நீ பொறுத்தாலும் ஏ.ஓ. கத்துவார் சாரே... வேணுமுன்னா சோபாவில கால்களை மடித்துப்போட்டு ஒக்காந்துக்கோ.. சாரே..."

மனோகர், அவள் சொன்னபடியே செய்தான். அவள் அந்த அறையை பெருக்கினாள். ஒரு வாளித் தண்ணீரை வைத்துக் கொண்டே ஈரத்துணியால் மொசைய்க் தரைக்கு பளபளப்பு ஏற்றினாள்.

"சாரே... சாரே.. செத்தோண்டு நாற்காலிலே உட்காரு சாரே.. சோபாவைத் துடைச்சிடறேன்."

மனோகர் எழுந்தபோது, அவன் தோள், கங்காவின் தோளில் மோதியது. அவன் கேட்டான்.

"ஆமா.. ஒன் பேரு என்ன...?"

"என்ன சாரே... அதுக்குள்ள என் பேரு மறந்து போச்சா..? ஆத்தா வச்ச பேரு கங்கையம்மா.. நானே எனக்கு வச்ச பேரு கங்கா.. நீ ஐம்பது ரூபாய ரெட்டிப்பா தந்ததை நா மறக்கல சாரே."

"உனக்கு கல்யாணம் ஆயிட்டா.."

"என்ன சாரே. மஞ்சக் கயித்தப் பார்த்துட்டும் அப்படிக் கேக்கிறே... ஆயி என்ன பிரயோசனம்.? அந்தக் கஸ்மாலம் கை விட்டுட்டான்.. என்னப் பிடிக்கலையாம். ரெண்டு வருஷத்துக்குப் பிறகு சொல்றான்... ஒரு குரங்கு மூஞ்சியோட ஓடிட்டான்... அவன் கிடக்கான்.. என் வேலைய பெர்மனென்டு ஆக்கு சாரே.."

"பிரதம மந்திரி நெனச்சாலும் ஒன்னை பெர்மனென்டு ஆக்க முடியாது. ஆனாலும் ஒன்னை ஒரு நல்ல கம்பெனியில சேர்க்கறதுககுப் பார்க்கிறேன்... எதுக்கும் ஒன்னைப் பத்திய பயோடேட்டா அதாவது வயது, படிப்பு இப்படிப்பட்ட விவரங்களை எழுதிக் கொடு..."

"எட்டாவது படிச்சாலும் என் எழுத்து தலையெழுத்து மாதிரி கோணல் மாணலா இருக்கும் நீ கேட்டுக் கேட்டு எழுதிக்கோ சாரே

மனோகர், நாற்காலியில் போய் உட்கார்ந்து ஒரு தாளை எடுத்தான். அவள், அவன் பக்கத்தில் வந்தாள். பிறந்த தேதி தெரியாது என்றாள். முகவரி சொன்னாள். அவன் முழங்கை விலாவில் பட்டபோது, விலகி நின்றாள். 'குழந்தை இருக்கிறதா?' என்று கேட்டபோது, 'அதான் குரங்கு மூஞ்சியோட போய்ட்டானே...' என்றாள். அவன், அவளை அனுதாபமாகப் பார்த்தான் 'ஒன் அழகுக்கு என்னவாம்...' என்று சொன்னபடியே கைகளை நெட்டி முறித்தான். ஒரு கை அவள் தோளில்பட்டது. அவள் அதை அறிந்தோ, அறியாமலோ, நின்றபோது, அந்தக் கை, அவள் தோளுக்கு கீழே போய், அவளை, அவன் பக்கமாக இழுத்துக் கொண்டு வந்தது. அவன் எழுந்தான். அவளின் கலங்கிய கண்களை நான் இருக்கேன் என்பது மாதிரி துடைத்து விட்டான். அவள் திடுக்கிட்டு திமிறினாள். முகத்தோடு முகம் முட்டியதுதான் மிச்சம். பிடிகள் இறுகின. அணைப்புக்கள் அணையை உடைக்கப் போயின.

"வேண்டாம் சாரே... அது மட்டும் வேண்டாம் சாரே..."

"என்னைப் பிடிக்கலியா...?"

"பிடிக்காட்டி இப்படி இடங்கொடுப்பேனா... விடு சாரே... பேஜாரா இருக்குது..."

"இனிமேல் உன் பிரச்சினை என் பிரச்சினை.. 'அதுக்காக' நான் சொல்லல... ஆனாலும் ஒன்னைப் பார்த்ததும்..."

"சரி சாரே... கதவையாவது சாத்திட்டு வா... வாட்ச்மேன் கேட்டுப் பக்கம் கீறாரு..."

மனோகர், தள்ளு கதவைத் தாளிட்டான். நாணத்தோடு நின்றவளை அப்படியே அப்பிக் கொண்டான். அவளை நகர்த்தி நகர்த்தி ஆன்டி ரூம் எனப்படும் ஒரு பிளைவுட் தடுத்த ஓய்வறைக்கு கொண்டு போனான். அவளை அழுந்தப் பற்றினான். அரைகுறை ஆடைகளில் விட்டான். ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம்... பிறகு அப்படியே அவளை விட்டு விட்டு, உபதேசம் செய்தான்.

"கங்கா... இது ஆபீஸ்... கோயில் மாதிரி... இங்கே வேண்டாம்... வசதிப்படும்போது வெளியில போகலாம்..."

கங்கா, மெல்லத் தலையாட்டினாள். அந்த ஆட்டு ஆமோதிப்பா, எதிர்ப்பா என்று தெரியவில்லை. 'சும்மா கிடக்கிற சங்கை ஊதிவிட்டுட்டியே சாமி... இனிமே ஒன் நெனப்புத்தான்...' என்று சிணுங்கினாள் வாளியை தூக்கிக் கொண்டு, கதவின் இடுக்கு வழியாகக் கண்ணைப் பதித்து விட்டு, பிறகு தாழ்ப்பாளை நகர்த்திவிட்டுப் போய் விட்டாள்.

மனோகருக்குப், பித்துப் பிடித்தது போல் இருந்தது. எல்லாப் பெண்களுமே அவனைத் தள்ளி வைப்பதுபோல் இருந்தது. அவனுக்கு காலநேரம் சூன்யமானது. ஒன்பதரை மணிக்கு வரவேண்டிய ஊழியர்கள் பத்தரை மணி அளவில் வந்தார்கள். அவன் தங்களின் காலதாமத்தை கண்டுபிடிக்க வந்திருப்பதாக அனுமானித்து, பல்வேறு சாக்குப் போக்குகளைச் சொன்னார்கள். அவன் போனால் போகிறது என்பது மாதிரி ஆட்டிய கைக்கு, ஒருத்தி, மானசீகமாக முத்தங்கொடுத்தாள்.

பதினோரு மணிக்கு நிர்வாக அதிகாரி, இரண்டு பைல்களோடு வந்தார்... ஐம்பது வயதுக்காரர்... முக்கியமான பைல்களை 'ரொட்டீனாக' அனுப்பாமல், அவரே கொண்டு வருவார். அதாவது அவருக்கு முக்கியமானதை. ஒரு பைலைப் பார்த்தபடியே, மனோகர் கேட்டான்.

"கிருஷ்ணனை எதுக்காக மதுரை பிராஞ்சுக்கு டூர் அனுப்பணும்... பக்கத்துல இருக்கிற இராமநாதபுரத்துக் கிளார்கை அனுப்பலாமே...?"

"வழக்கமாய்ச் சொல்றதுதானே ஸார்... அவன் பெண்டாட்டி, மதுரையில இருக்காள். போனால், அங்க திறமயக் காட்டுறானோ இல்லியோ, ஆபீஸ்ல வந்து திறமையைக் காட்டுவான்..."

"சிரித்து மழுப்பாதீங்க... அவன் பொண்டாட்டியோட படுக்கிறதுக்கு கவர்ன்மென்ட் எதுக்கு டி.ஏ. டீ.ஏ. கொடுக்கனும்.... நோ... நோ..."

நிர்வாக அதிகாரி, அவனைப் புதிதாய்ப் பார்ப்பதுபோல், அதிர்ந்து பார்த்தார். தன் பக்கம் நகர்ந்த பைலை வாங்கிக் கொண்டு, அடுத்த பைலை நீட்டினார். அவன் இப்போது அதிக கோபமாய்க் கேட்டான்.

"என்ன அக்கிரமம் இது...? இந்த வசந்தி... மூன்று மாசத்துக்கு முன்னாலேதானே குழந்தை பெத்தாள்."

"அதனால்தான், அபார்ஷனுக்கு லீவு கேட்கிறாள்."

"இது அக்கிரமம்... மூன்று மாசம் பிரசவ லீவுல போயிட்டு போன வாரம்தான் டூட்டிலே சேர்ந்தாள்... நோ... லீவ்..."

கோப்பில் ஏதோ எழுதப்போன மனோகரின் கரத்தைக் கிட்டத்தட்டப் பிடித்துக்கொண்டு உரிமைக் குரலில் சட்டோபதேசம் செய்தார், ஏ.ஓ. எனப்படும் நிர்வாக அதிகாரி.

"கவர்மெண்டு வேலையில கல்யாணமாகாத பெண் கூட கருக்கலைப்பதற்கு லீவு கேட்டால், கண்டிப்பாகக் கொடுக்கணு முன்னு ரூல்.. சொல்லுது ஸார்."

மனோகர், வேண்டா வெறுப்பாய் கையெழுத்துப்போட்ட போது நிர்வாக அதிகாரி, அவனை ஆச்சர்யமாகப் பார்த்தபடியே வெளியேறினார். சலுகைகளை வழங்குவதில் கர்ணனான அவன், எப்படிக் கம்சனானான் என்பது புரியாமல் போய்விட்டார். அவர் போன பத்து நிமிடத்தில் அஸிஸ்டென்ட் கிருஷ்ணன், ஒரு குண்டு மனிதரோடு வந்தான். அவனுக்கு ஏப்போதாவது பிரச்சினை வரும்போது, பெரிய மனிதர்களை கூட்டிவந்து மனோகருக்கு அறிமுகப்படுத்துகிறவன்.

"ஸார்... இவர் எங்க கஸின் பிரதர், டாக்டர் குமார்... மதுரையில் பிரபலமான செக்ஸாலஜிஸ்ட்...."

மனோகர், வந்தவரைக் கை கொடுத்து உட்கார வைக்காமல் கை கூப்பி அமரச் சொன்னான். அடுத்த இருக்கையில் உட்காரப் போன கிருஷ்ணனை, ஒரு வேலையைக் கொடுத்து வெளியேற்றினான். "மதுரைக்கு டூர்ல போங்க... டூர் ஆர்டரை டைப்படிச்சிட்டு வாங்க..." என்றான்.

கிருஷ்ணன், குதிக்காத குறையாய் போனதும், அந்தக் கேள்வியை எப்படிக் கேட்பது என்பது புரியாமல், மனோகர் யோசித்தான். புரிந்தது. இன்னும் புத்திசாலித்தனம் போகவில்லை.

"நீங்க எம்.பி.பி.எஸ். படித்திட்டு அப்புறம், செக்ஸ்ல பட்ட மேற்படிப்பு வாங்கி என்ன ஸார் பிரயோஜனம்...? சிட்டுக்குருவி லேகியம்... லபு கபே... தங்கபஸ்பம்முன்னு விளம்பரம் படுத்துற நாட்டு வைத்தியர்ங்ககிட்டதானே நம்ம ஆளுங்க போறாங்க...?"

டாக்டர். குமார், நாற்காலியிலேயே துள்ளினார். நீண்ட நாளாய், ஈ ஓட்டிக் கொண்டிருப்பவருக்கு, ஒரு வடிகால் கிடைத்த ஆனந்தம்.

"அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீங்க... செக்ஸ்ல தோத்துப் போறவன்.. நெருப்புல பாய்கிற விட்டில் பூச்சியாக ஆயிடுவான்... உடலுறவுல செத்துப் போகிற ஆண் தேனீக்களோட முடிவுதான் இவன் முடிவும்... வைட்டமின் ஈ-யில் குணமாகக் கூடிய சமாசாரத்துக்கு, நூற்றுக்கணக்குல ரூபாய் செலவழித்து, லேகியம், பஸ்பம்முன்னு தின்கிறான்... கடைசியில், இதுக்குள்ளே இருக்கிற உலோகத் துகள்கள், கிட்னிக்கு வந்து அந்தக் கோளாறிலே சாகிறான்... உள்ளதும் போச்சு... நொள்ளக் கண்ணா என்கிற கதை... இந்த மாதிரி அடாவடி வைத்தியர்களைத் தண்டிக்க தடா சட்டத்தை திருத்தணும்."

மனோகர், திடுக்கிட்டான். இன்று அந்த வைத்தியரிடம் போக நினைத்தவன், 'கிழட்டுப் பயல் கெடுத்துட்டானே கிட்னி போயிருக்குமோ ?'

"ஒரு பத்து நாளைக்கு சாப்பிட்டாலும் போயிடுமோ டாக்டர்..."

"கவலைப்படாதீங்க... மாதக் கணக்கிலே சாப்பிட்டாத்தான் கிட்னி கோளாறு வரும்..."

"அப்புறம் டாக்டர்... இந்தியா டுடேயிலேயோ, ரீடர்ஸ் டைஜஸ்டிலேயோ ஒரு கட்டுரை படிச்சேன்... மத்திய தரக் குடும்பங்கள்ல அங்கேயும் இங்கேயுமா சில கணவன்மாரால முடியலையாமே... நிசமாவா டாக்டர்..."

"அநியாயமா நிசந்தான்..."

"இந்த ஆண்மைக் குறைவுக்கு என்ன காரணம் டாக்டர்..."

"பெரும்பாலும் மனம்தான் காரணம்... கணவனுக்கு மனைவிகிட்டே உள்ளூர வெறுப்பு இருந்தால், அவனால முடியாது... கள்ளக் காதலியோட பயந்து பயந்து போனால், தேறாது... இப்படிப் பல காரணம்... இப்ப எனக்கு அவசர வேலை... மதுரைக்கு வாங்க... சாவகாசமா பேசலாம். நானிருக்கேன் கவலைப்படாதீங்க..."

கிருஷ்ணனின் கஸின் பிரதர், ஒரு கேஸ் கிடைத்த திருப்தியோடு போய்விட்டார். மனோகர், அவரிடம் சொல்லியிருக்கக் கூடாது என்று மருவினான். ஆனால், இப்போது அலுவலகமே சங்கரியாகிவிடும். என்றாலும், அவனுக்கு ஒரு சின்ன ஆறுதல். அவன் பிரச்சினை, ஆண்மைக் குறைவு பிரச்சினையாக இல்லாமல் இருக்கலாம். 'சங்கரி நாட்டுப்புறத் தோற்றம் கொண்டவள். பழக்க வழக்கமும் அப்படித்தான். பெண் என்ற நினைப்பற்று ஆண்களை இடிப்பதுபோல் நின்று பேசுகிறவள். அப்படியானால், அவளிடம் முடியாதது, இந்தக் கங்காவிடம் முடிந்திருக்க வேண்டுமே? முடிந்திருக்கும். ஆனால் பயம் அந்தஸ்தைப் பற்றிய பயம். அந்தஸ்த்துப் பேதம் பற்றிய பயம்.'

மனோகர், தன்னை மறக்க அலுவலகப் பைல்களை அழுத்தம் திருத்தமாகப் புரட்டிக் கொண்டிருந்தான். திடீரென்று தள்ளுகதவு சத்தம் போட்டது. அவன் எரிச்சலோடு பார்த்துவிட்டு, பிறகு எழுந்து நின்றான். வந்தவள் நீலம் கவுல்... மிஸ் நீலம்... வெள்ளையான கொள்ளை அழகு... பிடரிக்குக் கீழே போகாத பாப் முடி... மஞ்சள் கட் சோளி. வெளிப்படையாய்த் தெரிந்த தோள்களுக்கு இடையே அந்தச் சோளி, அவள் கழுத்துக்கு தங்க உறையாய் மின்னியது. கோவில் மாட்டுத் திமில்கள் மாதிரி உருண்டு திரண்ட புஜங்கள். ஈரப்பசையான உதடுகள்... வசீகரிக்கும் செண்ட் வாசனை

மிசௌரிப் பயிற்சியில் அவள், இவனோட பேட்ச் மேட். சில ஐ ஏ எஸ் டிரெயினிகள், இவள் பின்னால் 'லோ லோ' என்று

அலைந்தாலும் இவனைச்சுற்றி வட்டமிட்டவள்... ஒரு தடவை 'என்னைக் கட்டிக்கிறியா?' என்று கேட்டவள், "இந்தக் காலத்தில் பெண் அதிகாரிகள் ஒரு நல்ல கணவனையே விரும்புகிறார்கள்... மொழியோ, இனமோ முக்கியமல்ல.. ஒன்னை எனக்குப் பிடித்திருக்கு... நீ தேகக் கட்டுள்ளவன்... ஒழுக்கமானவன்... எல்லாவற்றிற்கும் மேலாக பெண்களை மதிக்கத் தெரிந்தவன்... கட்டிக்கோ..." என்று மன்றாடியவள் இவன்தான் பயந்து போனான்... அம்மாவுக்கு மாரடைப்பு வந்துவிடக்கூடாதே என்று அச்சப் பட்டான் தட்டிக் கழித்தான். நல்ல காலமோ கெட்ட காலமோ... இவளுக்கும் சென்னையிலேயே வேலை.

உள்ளே வந்த வேகத்திலேயே, மிஸ். நீலம், ஒரு போடு போட்டாள்.

"ஏம்பா... ஒன்னோட டிரெயினிங்குல ஒன்னத்தான் பெஸ்ட் டிரெயினின்னு தேர்ந்தெடுத்தாங்களாம்... எங்கிட்ட ஏன் சொல்லலே...? ஒய்ப்கிட்டயாவது கிஸ் அடிச்சு சொன்னியா...? இன்னிக்கு நான் ஒன்ன விடப்போறதா இல்லை... இதுக்கு நீ எனக்கு பார்டி கொடுக்கணும்... இல்லாட்டி நான் கொடுக்கணும்... நைட்ல என் பிளாட்ல வச்சுக்கலாமா... ஏன் அப்படிப் போக்கிரித்தனமாக பார்க்கிறே..."

மனோகர், அவள் நெஞ்சை ஊடுருவி, அவள் மனதை தரிசித்தான். தோழனாய், காதலனாய் வார்த்தெடுத்த மனக்காரி... அழகுக்கு அழகு... ஆசைக்கு ஆசை... அந்தஸ்துக்கு அந்தஸ்து. இவளை விட உற்ற தோழி யாரும் இருக்க முடியாது...

"ஒக்கே நீலம்... இன்னைக்கு நைட்ல உன் பிளாட்தான் என் வீடு."

"திருடா.... திருடா..."

மிஸ் நீலம், மேஜையில் அப்படியே படிந்து அவன் கழுத்தில் இரு கரங்களை வளைத்துப் போட்டாள். கதவு மீண்டும் சத்தம் போட்டதும், பால்குடிக்கத் தெரியாத பூனையாய் நாற்காலியில் பம்மி உட்கார்ந்தாள்.

# 8

மின்சார விளக்குகளில் மினுமினுத்த மையிருட்டு தயிரின் தெளிந்த நீர் போன்ற ஆகாய வெளிச்சம். இரவின் பிறப்பா அல்லது இறப்பா என்று கண்டறிய முடியாத வேளை. விடியல் பிரசவத்தின் இயற்கை வெளிப்பாடுகளான குருவிச் சத்தமோ கோழிச்சத்தமோ கேட்கவில்லை. ஆனாலும் சிசேரியன் ஆப்பரேஷன் போல், இருளின் வெளிப்பாடுகள் தோன்றின. மாநகரப் பேருந்துகள் வெறுமையாக நகர்ந்தன. வைக்கப்போர், செங்கல், இரும்பு டப்பா லாரிகள் மாமூலாகப் போகாமல் மைனர் நடை போட்டன. மோட்டார் பைக்குகளிலும் ஸ்வட்டர்களிலும் பெண்கள் தலை முக்காடு களோடும், ஆண்களில் சிலர் சரிந்து வைத்த தொப்பிகளோடும் உட்கார்ந்தபடியே ஓடிக் கொண்டிருந்தார்கள்.

மனோகர், கரங்களைத் தலைக்கு முக்காடாக்கி நடந்தான். சிறிது தொலைவில் நாய்கள் குலைக்கும் சத்தம் மட்டும் கேட்கவில்லை யானால், தொடர்ந்து நடந்திருப்பான். தெரு நாய்களுக்குப் பயந்து, நான்கு பக்கமும் பார்த்தான் நல்ல வேளையாக பேருந்து நிழல்குடை அருகிலேயே இருந்தது. அதன் முன்பக்கமும் பின்பக்கமும் பிளாட்பார பிரஜைகள் மூட்டைகளாய் வளைந்து கிடந்தார்கள் அப்பன், பிள்ளை, மனைவி என்று பூஜ்யமாய் வட்டமிட்டு படுத்து இருந்தார்கள்.

மனோகர், அந்த நிழல் குடைக்கு வந்து அதன் இரும்பு தூணில் பின்பக்கமாய் கைசுற்றிச் சாய்ந்தான். அவ்வப்போது ஒரு காலை இன்னொரு காலால் பின்னிக் கொண்டான். நடந்ததை நினைக்க மனம் மறுத்தது. ஏதோ ஒரு மாயப் பேய் உருவம், அவனை உச்சி முதல் பாதம் வரை ஆக்கிரமித்து நெஞ்சைக் கோர நகங்களால் கீறியது. தொண்டையை அசுரப் பற்களால் கடித்தது. உலகின் அத்தனை பளுவும் தலையில் ஏறி அதைத் தாறு மாறாய் ஆடச் செய்தது. இப்படி நடக்குமா... நடக்குமா என்று 'மனம்' அவனைக் கேட்டது. 'அவன்' மனதைக் கேட்டான். தொண்டைக்குள் ஒரு தேள் கண்களில் நெருப்புக் கதிர் வீச்சு மூளைக்குள் ஈட்டி முனைகள். வாய்க்குள் அரைப் பைத்தியமானது போல் முணு முணுப்பு.

நீலம் குடிவெறியில்தான் அப்படிப் பேசினாள் என்று ஒரே ஒரு சலுகையைத் தான் அவளுக்குக் கொடுக்க முடியும். மற்றபடி, ஆண்களைப் பிடித்துத் தின்னும் ராட்சசியாக நடந்து கொண்டது போலத்தான், அவனுக்குத் தோன்றியது. அவள் குடிக்கு 'கம்பெனி' கொடுக்கவில்லை என்றதும், உதவாக்கரை' என்று திட்டியது கூட

நட்புரிமைதான். முன்னாலேயே சேலை, பாவாடை சகிதங்களை அவிழ்த்துப் போட்டுவிட்டு கண்ணாடி கவுனை மாட்டிக் கொண்டது கூட காதலிக்கிறவள் என்ற முறையில் அதை ஒரு நெருக்கமாக ஒப்புக் கொள்ளலாம். அவன் உணவுக் கவளங்களை வாயில் ஊட்டி விட்டது, தாய் கூடக்காட்டாத வாஞ்சை. இவன் குழந்தையாகி, அவள் விரல்களை கடித்ததும், அவள், உடனே அவனை மடியில் போட்டு பஞ்சாபி மொழியில் தாலாட்டுப் பாடியதும், சங்கரியிடம் கிடைக்காத இன்பநேயம்.

அதேசமயம், படுக்கை அறையின் நான்கு சுவர்களிலும் தொங்கிய ஓவியங்கள், அதிகப்படியானவை மட்டுமல்ல அசிங்க மானவையும்கூட. சில ராஜஸ்தானிய அந்தப்புர விளையாட்டுப் படங்களாம். அந்தரங்கம் பகிரங்கப்படுத்தப்பட்ட பச்சையான விளையாட்டுக்கள். ஆடு மாடுகள் கூடச் செய்யாத காதல் களியாட்டங்கள்.

இந்த வகைப் படங்களை பார்க்க மறுத்து, அவன் தலை குனிந்தபோது, அந்தத் தலையை அவள் நிமிர்த்தியது கூட தண்டனைக்குரியது அல்ல. ஆனால், அத்தனை படங்களையும், நகலாக்கிப் பார்க்க வேண்டும் என்று அவள் வற்புறுத்தியது, அதிகப் பிரசங்கித்தனம். ஆனாலும், திட்டவட்டமாக மறுத்தவனுக்கு, அவள் விட்டுக் கொடுத்தது, அவளது பெருந்தன்மை.

முக்கால் இரவு வரை அந்தப் பெருந்தன்மையைக் காட்டத்தான் செய்தாள். முதல் ரவுண்டு இப்படித்தான் இருக்குமென்று அவனைத் திடப் படுத்தினாள். இரண்டாவது ரவுண்டும் இழுபறி ஆனபோது தூங்கிட்டு பார்ப்போம் என்று சொன்னவளும் அவள்தான் அவளை எழுப்பி விட்டது தப்பாய்ப் போயிற்று. மேஜைக்குத் தாவி அவனுக்காகவும் வாங்கி வைத்திருந்த அந்த திரவத்தை, அப்படியே விழுங்கிவிட்டு தாறுமாறாக ஆடினாள். இவன் பெண்ணாகவும் அவள் ஆணாகவும் மாற்றங் கொண்டது போன்ற நிலைமை. மூன்றாவது சுற்றும் முதலிரண்டு சுற்றுக்களானபோது, அவள் இப்படியா நாக் அவுட் செய்வது. “ஓடிப் போ பொட்டைப் பயலே... நல்ல வேளை... நீ என்னைக் கட்டிக்கலே... கட்டியிருந்தே, நானே உன்னைத் துப்பாக்கியாலே சுட்டிருப்பேன்.” என்றாள். இத்தோடவாவது அவள் விட்டிருக்கலாம். விடவில்லையே. “ஒன் பெண்டாட்டிய எவனும் இழுத்துட்டுப் போகும் முன்னால ஓடுடா... நீ அவளுக்குச் செய்யத் தவறுவது கொடுமைடா... ஆந்திரா ஹைகோர்டுல இதுக்குன்னே ஒரு ஜட்ஜ்மென்ட் வந்ததுடா” என்றாள். பிறகு பஞ்சாபி மொழியில் புலம்பினாள். அவை திட்டு வார்த்தைகள் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது

மனோகர், உள்ளமும் உடலும் அசைவற்றுப்போக நின்ற கோலத்திலேயே நின்றான். அந்த பேருந்து நிலைய தூண்களில் ஒன்றை, கட்டியபடியே தூங்கிவிட்டான்.

இதற்குள் மனித அரவங்கள் வெளிப்பட்டன. ஆவின் வேன் அலறியது. பக்கத்துப் பால் பூத்தில் வேலைக்காரப் பெண்களின் பிலாக்கணங்கள். சிறுவர்களின் பெரியமனித தோரணையான பேச்சுக்கள். அந்த நிழல் குடையைச் சுற்றியும் கடைக் கூடார பிளாட்பாரங்களிலும் படுத்துக் கிடந்தவர்கள், அசைந்து கொடுத்தார்கள். பொக்கிஷங்களான மூட்டைமுடிச்சுக்கள் இருக்கின்றனவா என்று படுத்தபடியே தலையைத் தூக்கியவர்கள், டப்பாக்களில் தண்ணீர் நிரப்பி அவற்றைத் தூக்கிக் கொண்டு நடந்தவர்கள், சேலைகளையே போர்வையாக்கிப் படுத்துவிட்டு அப்போது, போர்வைகளையே சேலையாக்கிக் கொண்டிருந்த பெண்கள், கடைகளின் படிக்கட்டுகளில் திட்டு வாங்கிய நோயாளிகள், சமையலறையான மூன்றுகல் அடுப்புக்களை மூலையோரமாய்க் கொண்டு போன முதியவர்கள்.

எவரோ ஒருத்தர் மனோகரை அதட்டலாகக் கேட்டார். சுவர் ஓரம் கிடந்த பிளாஸ்டிக் பானையை கொண்டுவந்து, முகத்திற்கு 'சதக் சதக்' என சத்தமிட நீரடித்தபடியே, "ஏரப்பா நீ... உனக்கு இங்க என்ன வேலை..." என்று அதட்டலாய்க் கேட்டார் பிறகு "பஸ்ஸுக்கா நிற்கே..." என்று அவனுக்கு ஒரு பதிலையும் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்

தூங்கிப் போன மனோகர், கண் விழித்தான். வினாடி நேரம் நிர்மலமான மனதில், இரவு நிகழ்ச்சிகள் நினைவுகளாய்ப் பீறிட்டன. பழைய நினைவுகளையும் இழுத்து வந்தன. வெற்றுக் குடத்தை ஆற்றுப் பிரவாகத்தில் அப்படியே முக்கிய நிலை. நீரும் ஏறவில்லை... குடமும் நிரம்பவில்லை... அவன் பின் பக்கமாய்த் திரும்பினான். ஒரு இளம் பெண் பாவாடை மேல் ஒரு படுதாத் துணியை தாவணியாய்ச் சுற்றிக் கொண்டிருந்தாள். முந்தானை பரவாத முன் பக்கம். தற்செயலாய்ப் பார்த்த மனோகர் அப்படிப் பார்ப்பதையே ஒரு செயலாக்கினான். மனதில் இச்சை வந்ததோ இல்லையோ, அவன் மனப்பாரத்திற்கு அவள் நெம்புகோலானாள். இதற்குள் அந்தப் பெண் சீறினாள். "யோவ்.. இதுக்கு முன்னாடி நீ பொம்மனாட்டிங்களைப் பார்த்ததே இல்லியா . கஸ்மாலம்..." என்று கத்தினாள். அவள் போட்டக் கூச்சலில், மிச்சம் மீதியாய் படுத்திருந்தவர்கள் எழுந்தார்கள்; அவனை நெருங்கினார்கள்.

மனோகர், அங்கிருந்து நழுவி ஓடாக்குறையாக நடந்தான் பயத்தோடு திரும்பிப் பார்த்தான். எவரும் அவனை விரட்டுவது

போல் பின் தொடரவில்லை. இப்படிப்பட்ட அனுபவங்கள் ஆயிரத்தைக் கண்டவர்கள்போல் அத்தோடு விட்டு விட்டார்கள். மனோகருக்குத்தான் மனம் கேட்கவில்லை. கொளுத்தும் வெயிலிலும் கிளுகிளுப்புச் சுகம் கொடுக்கும் குளிர்சாதன அறையும், மணி அடித்தால் மண்டியிடுவதுபோல் அலுவலர்கள் வருவார்கள். அலுவலர்களும் இன்டர்காமில் பேசினால், ஆயிரம் குழைவுகளோடு எவளாவது ஒருத்தி வருவாள். ஆனால், இப்போதைய நிலை...'

'ஒருத்தியிடம் பேடி... இன்னொருத்தியிடம் பொம்பளைக் கள்ளனாய்... இது என்ன ரெட்டை வேடம்...? இதில் எது வேடம்...? எது மூலம்...? இதற்கெல்லாம் யார் காரணம்...? சங்கரி... சங்கரியே... அவள் மட்டும் அழகாயிருந்து, பிற ஆண்களிடம் அளவோடு பழகி... தன்னிடம் பெண்மை குலுங்க நடந்திருந்தால்... இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. நீலம் நேரடியாய்ச் சொன்னதை சங்கரி மறைமுகமாய்ச் சொன்னாள். எவனயாவது இழுத்துட்டுப் போவாளாமே... போகட்டும்... அதைப் பார்க்க இருக்கக் கூடாது. செத்துப் போகணும்.... தற்கொலையாய் உடம்பைச் சிதைக்கணும்...

மனோகர், நடுச்சாலையில் நடந்தான். கிறீச்சிட்டு நின்ற பல்லவனுக்குள் இருந்த டிரைவர், கண்டக்டர், பயணிகள் ஜனநாயகக் கூட்டணி அமைத்து இவனைத் திட்டினார்கள் 'காலையிலேயே குடிச்சிட்டு ஆடுறியே... நீ மனுஷனாடா...?'

மனோகர், குடிகாரனாய் நடந்தான். எதிரே தென்படும் ஆட்டோக்களில் ஒன்றை நிறுத்தி வீட்டுக்குப் போகலாம் என்ற சுரணைகூட இல்லை. அந்த வீட்டின் நினைவு கூட இல்லை. வீடற்றவனாய், நாடற்றவனாய், தனக்குத்தானே அற்றுப் போனவனாய் அந்தச் சாலையில் நடந்தான். எவளோ ஒருத்தி முன்னால் போனாள். பின்பக்கத்தை வைத்து அனுமானிக்க முடியவில்லை! அவனுக்குள் ஒரு வேகம். மனம் அவளைச் சுமைதாங்கியாய்ப் பார்த்ததோ என்னமோ... அவளுக்கு இணையாக நடந்தான். அவளை, இணையாய்ப் பார்த்தான் மின்னும் கருப்பி... காதுகளைப் பாதி மூடும் சுருள் சுருளான தலைமுடி... அவளும் அவன் பக்கத்திலேயே நடந்தாள். இவன், 'இன்னும் சூரியனே உதிக்கலே... இப்பவே இப்படி எரியுது...' என்று தன் பாட்டுக்குச் சொல்வது போல் சொன்னபோது, அவள் ஏறிட்டுப் பார்த்தாள்... காறித்துப்பினாள்.

மனோகர், யாரையோ தேடுவது போல் அங்கும் இங்குமாய்ப் பராக்குப் பார்ப்பதுபோல் பார்த்தான் சாலையின் மறுபக்கம் அவனது நண்பன், நடந்து கொண்டிருந்தான் மிடுக்கான நடை. இவனோடு மிசௌரியில் குப்பை கொட்டிய ஐபிஎஸ் இப்போது

எஸ்.பி.. இவனை ரொம்பப் பிடிக்கும் 'டா' போட்டுத்தான் பேசிக் கொள்வார்கள். அவனிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், ராமசாமிக்கு விலங்கு... அம்மாவுக்கு கொண்டாட்டம். அக்காவுக்குத் துக்கக் குறைவு...

அந்த ஐபி.எஸ் நண்பனிடம் அக்கா சந்திக்கும் அநியாயமான அடாவடியை சொல்வதற்காக அவன் சாலையின் மறுபக்கம் போகப் போனான். அதற்குள் இன்னொருத்தி அவள் பார்த்த விதமே பன்னீர் தெளிப்பது போல் இருந்தது... அவளை முண்டியடித்து நடந்து, முதுகில் முட்டப் போவதுபோல் தொடர்ந்து, அவளுக்கு முன்னால் நடந்து, திரும்பித் திரும்பிப் பார்த்தான். அவள், தனக்கு இணையாக வரும் வரை நின்றான். இணையாகவே நடந்தான். குரலைக் கனைத்தான் செருமினான். அவளுக்குச் செய்தி கிடைத்தது... பதில் செய்தி கொடுத்தாள் 'ஏண்டா சோமாறி... கூடை வச்சுருக்குற பொண்ணுன்னா கூட வந்துருவான்னு அர்த்தமா... அதோ சைக்கிள்ல வர்றார்.. நீ ஆம்பளையா இருந்தா நில்லு... நில்லுடா.'

மனோகர், நிசமாகவே ஓடினான் சைக்கிள் மணிச்சத்தம் கேட்கும் போதெல்லாம் மனதுக்குள் அலறினான். திரும்பிப் பார்த்தால், அவளைச் சுற்றி ஒரு சின்னக் கூட்டம். பக்கத்தில் சைக்கிள்... மனோகர் பதறியடித்து ஓடினான் சந்து பொந்து இல்லாத நெடுஞ்சாலை ஒளியக் கூட இடமில்லாத பெரிய பெரிய கட்டிடங்கள்... கூர்க்காக்கள்... எப்படியோ ஒரு ஆட்டோவை 'நிறுத்து' என்று சொல்லாமலேயே, அதற்குள் துள்ளிக் குதித்தான்.

மனோகர், தன்னைத்தானே கூறு போட்டுப் பார்த்தான் அவன் செயல்பாடு அவனுக்கே அவமானமாகத் தெரிந்தது. 'இந்தப் பொம்பளைப் பொறுக்கித்தனம் எப்படி வருகிறது? எவள் கூப்பிட்டாலும், இவனால் இயலாது அப்போதைக்குப் பையில் பணமோ, உடம்பில் வீரியமோ இல்லை அப்படியும் ஏன் இப்படிப் பின் தொடர வேண்டும். ஊமையாய் அழும் மனம் அந்த ஒரு நிமிட இடைவேளையில் களியாட்டம் போடுகிறதா..? பில்லி சூன்யம் என்கிறார்களே, அப்படி யாராவது செய்திருப்பார்களோ..? ராசியில்லாத சங்கரி வீட்டுக்கு வந்த வேளையா.?'

வீட்டுக்கும் வாசலுக்குமாய் நடைபோட்டுக் கொண்டிருந்த சொர்ணம்மா, ஆட்டோவிலிருந்து இறங்கிய மனோகரைப் பார்த்து தலையில் அடித்தபடியே ஓடினாள் காந்தாமணி ஓடிப் போய் 'தம்பி' என்று சொன்னபடியே அவன் கைகளைப் பற்றிக் கொண்டு விம்மினாள். திண்ணையில் இருந்து முற்றத்திற்குத் தாவிய சங்கரி, மாமியார் போட்ட கூச்சலில் திகிலடைந்து நின்றாள்

"அடே... என் ராசா.. எங்கேடா போனே? ராத்திரி முழுசும் டெலிபோன் மேலே டெலிபோனா போட்டோமேடா... காலம் இருக்கிற இருப்புல என்ன எல்லாமோ நினைச்சோமடா... இந்தச் சண்டாளி ஒன்ன என்னடா பண்ணினா ..? இப்பவே இங்கேயே சொல்லுடா.. இந்த வீட்ல இந்தப் பேயாள மட்டும்தானா இருக்காள்...? நா இல்லியா... அக்கா இல்லியா... தெய்வமே... தெய்வமே... செத்துப் போன தெய்வமே. ஓடுற பாம்பை பிடிக்கிறது மாதிரி இருந்த என் பிள்ளை... இந்தச் சண்டாளி வந்த பிறகு. பேயறைஞ்சது மாதிரி ஆயிட்டானே... ஏண்டா அப்படிப் பார்க்கே... எனக்கு பயமா இருக்குடா..."

சங்கரி குன்றிப் போனாள். கால்கள் வளைந்து கொண்டிருந்தன. தலையும் கழுத்தும் சுருங்கிக் கொண்டிருந்தன. அம்மாவை அதட்டும் அண்ணி கூட, மவுனச் சம்மதமாய் நின்றாள். கொடுமையிலும் கொடுமையாகக் கட்டிய கணவன் பேசாமல் நின்றான். இதற்குள், தெருவோரம் சின்னக் கூட்டம். பட்டம் விட்டுக் கொண்டிருந்த சிறுவர்கள், அவற்றை இறக்கியபடியே, ஓடி வந்தார்கள். எதிர்வீட்டு மொட்டை மாடியில் நின்ற உமாவும், அவள் மாமியாரும், நெருங்கிய தோழிகளாய் நின்றார்கள். இந்திரன் மட்டும் கீழே வந்தான். எதுவும் நடக்காதது போல், மனோகரை நெருங்கினான்.

என்ன ஸார் இப்படிப் பண்ணிட்டீங்க...? ஒரு டெலிபோனாவது செய்யக் கூடாதா..? ஒங்க ஒய்பும், ஒங்க அக்காவும், எங்க வீட்டுக்கு, வந்து அழுத அழுகையில் எங்க உமா இன்னும் அழுதுகிட்டே இருக்காள்... போலீஸ்ல என்னை புகார் செய்யச் சொன்னாங்க. நான்தான் இன்னைக்குக் காலை வரை பொறுத்துக்கச் சொன்னேன்... ராத்திரி என்னசார் நடந்தது...?"

மனோகர், இந்திரனை, அகலிகையின் ரிஷிக் கணவன் பார்த்தது போலவே பார்த்தான். 'மானங்கெட்ட பய, வலியப் பேசுறான்... எனக்காகவா பேசுறான்... சங்கரி எப்படி அங்கே போகலாம்? நான் ஒரு நாள் தலை மறைஞ்சதுக்கே இப்படின்னா... ஒரேயடியா மறைந்தால்...... இந்த அக்காவுக்கு புத்தி எங்கே போயிட்டு...? அவள் சூதில்லாம போயிருப்பாள். இந்த சங்கரிதான், இதைச் சாக்காக வைத்துப் போயிருப்பாள்...'

மனோகர், இந்திரனுக்குப் பதில் சொல்லாமல், சங்கரியை அதட்டலாகப் பார்த்தான். அவசரப் பிரகடனச் சட்டத்தை வெளியிட்டான்... சட்டத்தின் அடிப்படையிலான தீர்ப்பல்ல.. தீர்ப்பின் அடிப்படையிலான சட்டப் பிரகடனம்.

"ஏய்.. சங்கரி... ஒண்ணு உள்ள போ... இல்லைன்னா வெளிலே போ இப்படி மானத்த வாங்கிட்டு நிற்காதே..."

சங்கரி, அதிர்ந்து திரும்பினாள். கூட்டம் மட்டும் இல்லையானால், அவனிடம் நியாயம் கேட்டிருப்பாள். ஆனாலும், அவன் எந்த அர்த்தத்தில் அப்படிச் சொல்லுகிறான் என்பது புரியவில்லை. அந்தக் கூட்டத்தைப் பார்க்கப் பார்க்க அவளை, அவமானம் பிடுங்கித் தின்றது. மாமியார்க்காரி வேறு, அண்ணியின் கன்னத்துக்கு அருகே கையைக் கொண்டு போய், 'பெண்ணாடி பார்த்தே... சீமையில் இல்லாத பொண்ணு...' என்று கத்திக் கொண்டிருந்தாள்.

சங்கரி, சூனியப்பட்டு நின்றாள். பிறகு வாயில் முந்தானை முனையைச் சுருட்டிப் பந்தாய்த் திணித்தபடியே பின்னோக்கி ஓடினாள். படிநோக்கிப் பாய்ந்தாள். கட்டிலில் விழாமல், தரையில் வீழ்ந்தாள். வீட்டின் நினைப்பு கேளாமலே வந்தது. அப்பா, அவளைத் தாயாகப் பாவித்தார். அம்மாவோ, பேத்தி போல் செல்லம் கொடுத்தாள். என்ன கேட்டாலும் கிடைக்கும். எங்கே வேண்டுமானாலும் போகலாம். இவள்தான் கேட்டதில்லை... போனதில்லை. அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள், தத்தம் பெண்களை சங்கரி இருக்காபாரு, நீயும் இருக்கியே பாரு என்பார்கள். ஆனால், இவள் சமயம் பார்த்து அந்தப் பெண்களை வீட்டுக்குக் கூட்டி வந்து, இக்கரைக்கு அக்கரை பச்சை என்று ஆற்றுப்படுத்துவாள். அந்தப் பெண்களும், அவளிடம் பகைமை காட்டியதில்லை. கல்லூரியில், அவளைப் பார்த்து சில மாணவர்கள் கிண்டலடித்தது உண்மைதான். காரைக்கால் அம்மையாராம்... அன்னை தெரேஸாவாம்... இவளும் பதிலுக்கு அவர்களை நெருங்கி, அந்த அம்மையார்கள் போலவே ஆசீர்வாதித்து விட்டுச் சிரிப்பாள். அந்தச் சிரிப்பு, சிரிப்பாய்ச் சிரிக்கப்படவில்லை. அந்தக் கிண்டல், நையாண்டியாய் மாறியதில்லை. தோழிகள் கூட, 'எங்களை இந்தப் பாடு படுத்தறானுக... உன்னை ஏண்டி விட்டு வைத்திருக்காங்க... சொல்லுடா...' என்று சுவைபடக் கேட்பார்கள். இவள் சிரிப்பாள். அந்தச் சிரிப்பு, அவர்களையும் தொற்றிக் கொள்ளும்.

இந்த வீட்டிற்கு வந்த பிறகுதான் இப்படிப்பட்டச் சுடு சொற்களைக் கேட்கிறாள். தெரு அவமானத்திற்கு உட்படுத்தப் படுகிறாள். பேசாமல் வீட்டுக்குப் போய் விடுவோமா... நீரிழிவு அப்பாவுக்கு கிட்னிதான் பெயிலாகும்... அம்மா, அழுதே செத்துப் போவாள்... இன்று வரை தன்னை வியக்கும் ஊர், 'வாழாவெட்டி' என்று வம்புப் பேச்சு பேசலாம்... கால வெளிப்பாட்டை அதன் போக்கிலேயே விட்டு விட வேண்டியது தான்...

கதவு தட்டப்பட்டது கேட்டு, அவள் தரையிலிருந்து கட்டிலில் உட்கார்ந்தாள் எதிர் பார்த்ததற்கு மாறாக, மாமியார் வாசல் பக்கம் நின்றாள்.

"கீழே குளிச்சிட்டு இருக்கான்.... பேன்ட் சட்டையை வாங்கிட்டு வரச் சொன்னான்."

"அவரையே வந்து வாங்கிட்டுப் போகச் சொல்லுங்க..."

"என்ன அதிசயமோ தெரியவில்லை - ஒருவேளை இவள் கண்களில் தெரிந்த கடுமையோ.... சொர்ணம்மா பேசாமல் போய் விட்டாள். ஆனாலும், 'என் பிள்ளைய பழையபடியும் துரத்துவாள் போலிருக்கே..' என்ற வார்த்தைகள் மட்டும் கேட்டன.

சங்கரி, அலமாறியிலிருந்த ஒரு காகிதத்தை எடுத்து, அவன் கண்ணில் படும்படி மேஜையில் வைத்தாள். அவனை அப்படிப் பேசியதிலிருந்து அவள் பட்டபாடு அவளுக்குத்தான் தெரியும்... 'துரத்திட்டேனே துரத்திட்டேனே' என்று இதே அறைக்குள் வெளிப்படையாகவே தலையில் அடித்துக் கொண்டவள். அவன், நேற்றிரவு வராத போது, ஒரு நிமிடம் கூட இமை மூடவில்லை. அவன் வந்ததும், அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கோர நினைத்தாள். 'நீங்கள் பக்கத்தில் இருந்தாலே போதும்... எனக்கு எதுவுமே வேண்டாம்.' என்று சொல்லத் துடித்தாள். ஆனால், அம்மாக்காரி அப்படிப் பேசியபோது, அதை அங்கீகரிப்பதுபோல் நின்றவரிடம் என்ன பேச்சு... எல்லாரும் இளக் காரமாய் நினைக்கும்படி, கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாக உள்ளே போகச் சொன்னவரிடம், என்ன ஒட்டு...? என்ன உறவு...?

சங்கரி, கதியற்று, தனக்குள்ளே புலம்பிக் கொண்டிருந்தபோது, மனோகர் ஈரத் துண்டைத் தலையில் துடைத்தபடியே வந்தான். அவள் ஒருத்தி, அங்கே இருக்கிறாள் என்று அங்கீகரிக்காமலேயே, பீரோவைத் திறந்து, நீலப் பேண்டையும், மஞ்சள் சொக்காவையும் தேடினான். அந்தத் தேடலில், அவள் சேலை பாவாடைகளைக் கீழே சிதறடித்தான். கண்ணாடி முன்னாடி ஒப்புக்குத் தலை வாரினான். மேஜையில்பட்ட காகித ஓலையை பார்த்துப் பிரித்தான். 'இவள் கெட்ட கேட்டுக்கு ஸ்டாப் செலக்ஷன் கமிஷன்ல பாஸாயிட்டாளாம். இன்னும் ஒரு மாதத்துக்குள்ளே எந்த டிபார்ட்மென்ட்ல வேலைன்னு ஆர்டர் போடுவாங்களாம்.'

மனோகர், காகிதத்தை கீழே வீசி அடித்துவிட்டு திரும்பிப் பாராமல் நடக்கப் போனான். இப்போது அவள் மனதிலும் ஒரு வீம்பு.

"நான் வேலையில சேரப் போறேன்."

அவன் நின்ற இடத்தில் நின்றபடியே திரும்பினான். அவளுக்கு ஜீ.ஓ. போட்டான்.

"வேலையும் வேண்டாம்... கீலையும் வேண்டாம்... நான் ஒருத்தன் சம்பாதிக்குறதே போதும்."

"எனக்குப் பணம் முக்கியமில்லை."

"லுக் சங்கரி! நீ வேலைக்குப் போகல.. போகல... போதுமா...?"

"எனக்கு அங்கேயாவது நிம்மதி கிடைக்கும்."

"என்னால முடியலைன்னு பழையபடியும் சொல்ல வர்ற... அவ்வளவுதர்னே..."

அய்யோ... நான் அந்த அர்த்தத்திலே சொல்லலே... அந்த நினைப்பே இப்ப இல்லை... உங்க அம்மா படுத்தற பாட்டைத்தான் சொல்ல வந்தேன்"

"நீ எதைச் சொல்ல வந்தியோ... எனக்குக் கவலை இல்லை... ஆனா ஒரு விஷயத்தை விளக்கி ஆகணும். மனைவிகிட்டே குறைகள் இருந்தால், அவள் புருஷனால முடியாதாம்... முதல்ல உன்னை கண்ணாடிலே பாத்துக்கோ.. உன் மனசை நீயா சோதித்துக்கோ... ஏன் முனங்குறே... முனங்கி முனங்கி என்னை முக்காடு போட வைக்காதே... எதைச் சொல்ல வந்தாலும் வெளிப்படையாச் சொல்லு... சொல்றியா.... இல்லியா..."

"எங்கிட்ட எந்தக் குறையும் நீங்க கண்டு பிடிக்க முடியாது... அப்படிக் கண்டு பிடித்திருந்தால் உங்களுக்கு என்னை நெருங்கவே மனசு வராது. ஆசையாத்தான் வாறீங்க... அப்புறமாத்தான்... சரி இப்ப இது ஒரு விவகாரமே இல்லை... இப்ப விஷயம் என் வேலை சம்பந்தப்பட்டது..."

"போக முடியாது."

"போய்த்தான் ஆகணும்... போவேன்."

"அப்போ... வேலையில சேருறதா லெட்டர் எழுதிப்போடு... மிஸஸ்னு எழுதாம மிஸ்ஸுன்னு எழுதிப்போடு... நம்ம ரெண்டு பேருக்குமே நிம்மதி..."

மனோகர், வெளியேறிவிட்டான். சங்கரியையும் பிடிவாதம் பிடித்துக் கொண்டது...

# 9

சங்கரி, கண்ணுக்கு மையிடப் போனாள். ஆனாலும் மூக்கு வரை வந்த அந்த வட்டக் குப்பிளை ஒதுக்கி வைத்தாள். பவுடரைக் கூட ஒப்புக்குப் போடுவது போல் முகம் முழுக்க அப்பாமல், அங்கும் இங்குமாய் தடவிக் கொண்டாள். கவரிங் வளையல்களைக் கழட்டி விட்டு, பீரோவில் இருக்கும் தங்க வளையல்களைப் போட நினைத்து கண்ணாடி பீரோவின் டிராயரைத் திறக்கப் போனவள், அதை இருந்த இடத்திலேயே விட்டு வைத்தாள்... மனமோ அல்லது மனசாட்சியோ அறிவுறுத்தியதற்கு அவள் இணங்கினாள். அவள், போவது அலுவலகப் பணிக்குத்தானே தவிர, அழகுப் போட்டிக்கு அல்ல... அதோடு அவரை சவால் விட்டுப் போகவில்லை. இதனாலேயே அவன் பிறந்தநாளில் வாங்கிக் கொடுத்த வாயில் புடவையைக் கட்டிக் கொண்டாள். அவன் வரணும் வரணும் என்பது போல் மாடிப்படி முனைக்குப் போனாள். வரக்கூடாது என்பது போல் திரும்பி வந்தாள்

வேலைக்குப் போவது சம்பந்தமாக ஏற்பட்டத் தகராறுக்கு ஒரு மாத வயதாகிவிட்டது ஆனாலும் அது குழந்தையாய் வளராமல், கிழடாய்ச் சுருங்காமல் அப்படியே இருந்தது. இப்போது அவன் வருவதும் போவதும் அவளுக்கே தெரியாது. அரசங்காப் பயணமா... அல்லது ஒரு மாதிரிப் பேசிக் கொள்கிறார்களே... அப்படிப்பட்ட அலைச்சலா.. அவளும் அலட்டிக்க வில்லை... அவனைப் பொறுத்த அளவில், அவள் மறக்கவில்லை என்றாலும் மரத்துப் போனாள்.

அன்றைக்கு அவளை, 'உள்ளே போ.. அல்லது வெளியே போ...' என்று சொன்ன கணவன், எப்போது வேண்டும் என்றாலும் வீட்டை விட்டுத் துரத்தலாம். துரத்துகிறானோ இல்லையோ... மாமியாக்காரி துரத்த வைத்து விடுவாள். அண்ணி வேறு ஊருக்குப் போய் விட்டு இன்றுதான் திரும்பியிருக்காள். அவள் விவகாரம் முடிந்ததோ... முடியலையோ . பழைய அண்ணியாக இருந்தால் இந்நேரம் இங்கு வந்திருப்பாள் அல்லது இவள், அங்கே போய் இருப்பாள். தாயும் மகனும் அண்ணி எழுதிய கடிதங்களைக் கண்ணில் காட்டியதில்லை அம்மா எழுதும் கடிதங்களைக் கூட பிரித்து, மீண்டும் சிநேகிதியான உமா மூலம் ரகசியமாய்ப் படித்து பழையபடி ஒட்டுவதாக உமாவின் மாமியார் சொன்னாள் இனிமேல் அம்மாவை அலுவலகத்திற்கே கடிதம் எழுதச் சொல்லலாம்

சங்கரி, புறப்படப் போனாள் கணவனிடம் சொல்லாமல் கொள்ளாமல் போவதை நினைக்கும்போது, வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால், அவன் இரண்டு நாளாக வீட்டுக்கு வரவில்லை. இதுதான் கடைசி நாள். அதோடு நல்ல நாள்.... அஷ்டமி, நவமி கழிந்த தசமி நாள்... பதினைந்து நாட்களுக்கு முன்புதான் ஆர்டர் வந்தது. அவனிடம் சொல்லியிருக்கலாம் சண்டைக்குப் பயந்தாள். சண்டை போடப் பயந்தாள். அதோடு முந்தா நாள் வரைக்கும் அப்படியா இப்படியா என்று அவளால் ஒரு முடிவு எடுக்க முடியவில்லை.

நேற்றுதான் சாஸ்திரிபவனுக்குச் சென்று, தான் வேலையில் சேருகிற அலுவலகத்தை தேடிப் பிடித்தாள். அங்கு நிலவும் சூழலுக்கு ஏற்ப முடிவெடுக்க நினைத்தாள். அரசாங்க அலுவலகம் என்றாலே அவளுக்குப் பயம். அந்தப் பயம் இப்போது பெருமிதமாக உருமாறினாலும், நேற்றுவரை பயம்தான். கல்லூரித் தமிழ் பேராசிரியர் ஒருவர் கலாட்டா செய்யும் மாணவனிடம் பார்த்து, ‘கல்லூரி அருமையும் ஆசிரியர் அருமையும் நீங்க வேலையில சேர்ந்த பிறகுதான் தெரியும்... நன்றாகக் குறித்துக் கொள்ளுங்கள்... அரசாங்கம் கல்லூரி அல்ல... அது அடிமைக் கூடம்... ஆபீஸர் ஆசிரியர் அல்ல.. அவர் ஆண்டான். உங்கள் சகாக்கள் இந்த மாவணர்கள் அல்ல.. உங்கள் அனுகூலச் சத்ருக்கள்... இங்கே நான் நிற்கிறேன்... நீங்கள் உட்காருகிறீர்கள்... அங்கே ஆபீஸர் உட்காருவார்... நீங்கள் நிற்பீர்கள்... எனவே,’ என்று பேராசிரியர் இழுத்தபோது, ஒருத்தன் அல்லது ஒருத்தி மூலம், ‘நம்ம அய்யாவை கவர்மென்ட் ஸர்வீஸ்ல இருந்து எவனோ செமத்தியா அடிச்சுத் துரத்தியிருக்கிறான்’ என்ற கமென்ட் கேட்டது. ஒரே சிரிப்பு... ஆசிரியரும் சேர்ந்து சிரித்தார்....

இப்போது, சங்கரி அதே வகுப்பறையில் இருப்பது போல் சிரித்தாள். ஆனாலும், அவள் சேரப் போகும் அலுவலகம், ஆசிரியர் பயமுறுத்தியதுபோல் இல்லை தலைமை அதிகாரி, அவளைப் பார்த்து ஆனந்தக் கூச்சலிட்டார். ‘அடேயப்பா... ரெண்டு வருஷ வேகன்ஸிக்கு விமோசனம் வந்துவிட்டது’ என்றார். பஸ்ஸரை அழுத்தி, அங்கு வேலை செய்கிறவர்களை வரவழைத்து, அறிமுகம் செய்து வைத்தார். ஆக மொத்தத்தில், ஒரு குடும்பப் பாங்கு சாஸ்திரி பவன் திடலில் இடைவேளையில் வீணையும் கையுமாக பக்திப் பாடல்களை இசைக்கும் பெண்கள். விதவிதமான மனிதர்கள்....

சங்கரிக்கு, தன் சக்திக்கு உட்பட்ட வகையில் மக்களுக்குச் சேவையாற்றப் போவதில் ஒரு பெருமிதம் சொந்தக்காலில் நிற்கப் போகும் கம்பீரம்.

இதற்குள், தெரு ஓரத்தில் கடாமுடாச் சத்தம். சங்கரி, இந்திரனுக்காக மூடிவைத்த பால்கனிக் கதவை திறந்தாள். அவன், தன்னை ஒரு மாதிரி பார்த்திருக்க முடியாது... அப்படிப் பார்த்திருந்தால் அண்ணியின் நிர்பந்தத்தில் வேண்டா வெறுப்பாய் அவன் வீட்டுக்குப் போனபோது, வசனம் பேசியிருப்பான் உஷாராயிருக்கலாம் அதுக்காக சந்தேகப்படக் கூடாது என்ன சத்தம்... குனிந்து பார்த்தாள்

மாமியார் முழங்கினாள். 'நீ ஒரு அற்பக் காய்கறிக்காரன்.. எனக்குப் பதில் சொல்லாம எப்படிடா போகலாம்.. நான் என்ன நாயா... குலைச்சா குலைக்கட்டுங்கிற மாதிரிப் போறே..'

"ஹலோ. உங்களைத்தான்.."

சங்கரி நிமிர்ந்தாள் எதிர் பால்கனியில் இந்திரன். அவன் பார்வை அண்ணியோடு போகும் போது பார்த்த பொதுப் பார்வையாக இல்லை. பொலிகிடா மாதிரி பல்லை இளித்தான். அவள் கண்களை உயர்த்தி கழுத்தையும் முகத்தையும் நிமிர்த்திய போது, அவன் ரகசியக் குரலில் கேட்டான்.

"உங்களுக்கு வேலை கிடைத்துட்டாமே. அதுக்காக உங்களை பாராட்டறதா... இல்லை நீங்க படுற பாட்டுக்கு அனுதாபப் படுறதான்னு புரியலே. நீங்க அன்றைக்கு மாமரத்துக்கு கீழே சொன்ன விபரத்தை உமா எங்கிட்டே சொன்னாள்.. பாவம்.."

சங்கரியின் கண்கள் உள்நோக்கிப் பாய்ந்து தொண்டைக்குள் போவது போல் இருந்தது. கை கால்கள் ஆடின. ஒரு நிமிடம்தான். கண்கள் உள்ளே ரத்தத்தில் மூழ்கி மீண்டும் விழிகளுக்குள் வந்தன. கால்களும் கைகளும் போராளியைப் போல் வைரப்பட்டன. அவனை நேருக்கு நேராய்ப் பார்த்தாள் அதையே அவன் ஒரு அனுகூலமாக எடுத்துக் கொண்டு குழைந்தான்.

"அந்த விவகாரத்தில போயிட்டுதுன்னா போயிட்டதுதான். குணப்படுத்த முடியாதாம்.. பாவம் உங்க பாடு... ஏதாவது ஒரு முடிவுக்கு வாங்க.. வேலை வேற கிடைச்சிட்டுது.. அவங்க, உங்களை என்ன பண்ண முடியும்? குணப்படுத்த முடியாத கேஸை விட்டுடுறதுதான், பெட்டர்.."

சங்கரி, சங்காரம் செய்யப் போகிறவள் போல் அவனைப் பார்த்தாள். விசை கொண்ட வெடிகுண்டாய் வெடிப்பைக் காட்டாமல், இயல்பாகப் பேசுவதுபோல் பேசினாள்.

"முடியுமுன்னு சொல்றாங்களே..?"

இந்திரனுக்குள் ஆனந்தக் கூத்து. கணவனுக்குச் சாதகமாகப் பேசினாலும், ஒரு அந்தரங்க விஷயத்தை பகிர்ந்து கொண்டாள்... இனிமேல் உடல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டியதுதான் பாக்கி. "எந்த லாட்ஜ் நல்ல லாட்ஜ்."

"நீங்க நினைக்கிறது மாதிரி முடியாது..."

"முடியுமாம் சார்... ஒவ்வொருவருடைய பிரச்சினையும் ஒவ்வொரு விதமாம்... அவரோட பிரச்சினை என்னை பிடிக்காததாலே ஏற்பட்ட பிரச்சினையாம்... உங்க பொண்டாட்டிய அவருக்கு ரொம்ப பிடித்திருக்காம்... அவள அனுப்பி வைத்தால், அவரோட பிரச்சனை தீர்ந்திடுமாம்... அனுப்பி வைக்கிறியாடா... நாகரீகம் தெரியாத நாயே... கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்கள்டா... நான் மதுரைக்காரி... இனி ஒரு தடவை வாலாட்டினே... ஒன் தலை, ஒன் கழுத்திலே இருக்காது... ஒன் பெண்டாட்டி என்கிட்ட சொன்னதெல்லாம், நான் ஒங்கிட்ட சொன்னால், நீ தூக்குப் போட்டுச் சாக வேண்டியிருக்கும்."

இந்திரன், நிற்குமிடமும், அந்த இடம் இருக்கும் வீடும், அந்த வீடு இருக்கும் தெருவும், அற்றுப்போய் நின்றான். சொர்ணம்மா விற்கு கேட்டிருக்குமோ என்ற பயம். உமா வந்து விடுவாளோ என்ற அச்சம். அவளைப்பார்த்து தலை கவிழ்ந்து கைகளை உயரத் தூக்கினான். சங்கரி அந்தக் கதவே உடைக்கப் போவது போல் ஒரே வீச்சாய் சாத்திவிட்டு அறைக்குள் திரும்பினாள். திரும்பி வந்த கதவை காலால் இடறினாள்.

அங்கே, அவளை எதிர்பார்த்து நிற்பது போல் மனோகர் நின்றான். பேடித்துப் பிரமித்து நின்றான். அவனைப் பார்த்த சங்கரிக்கு ஒரு ஆவேசம். குறைந்தது இவர் அந்தப் 'பழக்கத்திற்கு' வரவில்லை என்றாலும், கூடிப் பேசலாம். இவருடைய பாராமுகம் தான், அந்தப் பயலைப் பார்க்கும் முகமாக்கி விட்டது. இவரோடு இணைந்து போயிருந்தால், அவனுக்கு அப்படிப்பட்ட எண்ணம் வந்திருக்காது. அலுவலகத்திற்கு இவர் என்னைக் கூட்டிச் செல்வதே முறை. இல்லையானால் தாலிக் கயிறைப் பார்ப்பவர் களுக்கு சில சந்தேகங்கள் வரலாம். அதுவே இந்தப்பயலைப் போன்ற, சிலரை உற்பத்தி செய்யலாம். இவர் என் கணவர். இவர் என்னோட வரவேண்டும்... வந்தாகவே வேண்டும்.

சங்கரி அவன் கைகளை இரண்டையும் ஒற்றை ஆக்கி தன் கைக்குள் பிடித்துக் கொண்டாள். இன்னொரு கையால் அவன் தோளை உலுக்கி, கத்தினாள்...

3.6.

"இன்னைக்கு, நான் வேலையில சேரப் போறேன். சாஸ்திரி பவன்ல... வேலை கிடைத்திருக்கு.. நீங்க, என்னை பைக்ல கூட்டிட்டு போகணும்.... நீங்களே என்னை அங்கே வேலையில் சேர்க்கணும்... ஆபீஸ்ல இருந்து திரும்பும்போது என்னை பிக்அப் பண்ணணும்... ஒண்ணா போய் ஒண்ணா வரணும்... புறப்படுங்க...!"

அவள் உலுக்கிய உலுக்கலில், அவன் குலுங்காமல் நின்றான். எதிர்ப் பால்கனிக்காரனிடம், என்ன பேசினாள் என்பது கேட்கவில்லை. ஆனால், ஏதோ பேசினாள். என்னைப் பார்த்ததும் நடிக்கிறாள். அவன் கூட்டிக்கொண்டு போவதாக, இருந்த ரகசிய ஏற்பாட்டிற்கு, நான் பகிரங்கமான மாற்று ஆள்...

மனோகர், ஒரு முடிவுக்கு வந்தவன்போல், அவளை அதட்டாமலும், அன்பைக் கொட்டாமலும் கேட்டான். 'ஆர்டரைக் காட்டு..'

சங்கரி, வியந்து போனாள்; மகிழ்ந்து போனாள். ஆவேச உணர்வுகள் ஆனந்த உணர்வுகளுக்கு வழிவிடவில்லை. ஆனாலும் அவை அடங்கிப் போயின... கைப்பை இருக்கும் அலமாரிப்பக்கம் அசைந்தாடிப் போனாள். அந்தப் பையைக் கொண்டு வந்து, அதன் விலாவைக் கிழித்து, ஒரு காகிதத்தை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டே அவனிடம் நீட்டினாள். அவன் தோளில் முகம் போட்டபடியே நின்றாள்.

மனோகர், அந்த காகிதத்தின் மடிப்பை நீக்கினான்... அதன் மேலும் கீழுமாய் கண்களைச் சுழற்றினான். அரைக்கணத்தில் அந்த அரசாங்க முத்திரைக் காகிதத்தை இரண்டாகக் கிழித்தான். அதைத் தடுக்கப் போனவளை ஒரே தள்ளாய்த் தள்ளி தரையில் போட்டுவிட்டு, கிழித்தவற்றைக் கிழித்தான். இரண்டை நாலாய், நாலை பதினாறாய்... சுக்கு நூறாய் கிழித்தான். உள்ளங்கையில் பாதி அளவிற்குத் தேறிய அந்த காகிதச் சில்லுகளை, கீழே கிடந்தவளின் தலையில் போட்டான். முழக்கமிட்டான்...

"ஒன்னை கூட்டிக்கிட்டுப் போகச் சொல்றியா... கூட்டிக் கொடுக்கச் சொல்றியா... பால்கனியில் கொஞ்சிக் குலாவினியே... அந்தப் பயலைக் கூட்டிக்கிட்டுப் போகச் சொல்ல வேண்டியது தானே... சொல்லாமலா இருப்பே... இந்த வீட்ல நீ இனிமே ஒரு நொடி கூட, நீ, இருக்கக் கூடாது..."

சங்கரி, குப்பைத் தொட்டியாய் எழுந்தாள். கண்களைச் சரித்துப் பார்த்தாள். இரையை கழுகு பார்க்குமே... அப்படிப்பட்ட பார்வை. அவளுக்குள் பரிபாலனம் செய்த உள்ச்செல் நரம்புகளும் வெளிச் செல் நரம்புகளும் முரண்பட்டுச் செயல்படுவதுபோல் முகத்தைக் கோணலாக்கினாள். மூளையின் உடலாதிக் கத்தையும், மனோ

ஆதிக்கத்தையும், உள்ளுறுப்புகளும், வெளியுறுப்புகளும் கேள்வி கேட்பது போன்ற கோணல். சுழல்வதை காட்டாததுபோல், சுழல்கின்ற பூமியாய், அவள் தன்னுள்ளே சுழன்றாலும், சுழலாதவள் போல் நின்றாள். மனோகர், ஏதேதோ பேசிக்கொண்டே போனான். அவள் காதில் விழவில்லை.

திடீரென்று, அவன் மீது பாய்ந்தாள். கராத்தேக்காரி மாதிரி ஒரே தாவலாய் தாவி, அவனை வீழ்த்தினாள். அவன் தட்டுத் தடுமாறி எழுந்தபோது, அவன் தலை முடியை பிடித்து இழுத்தாள். அவன் திமிறி விடுபட்டபோது, அவன் சட்டையை இழுத்தாள். அந்தக் காகிதம்போல் சுக்குநூறாய்க் கிழித்தாள். கைவிரல்கள் கம்பிகளாகின... கண்கள் தீக்கட்டிகளாகின... அவன் இந்த எதிர் பாராத தாக்குதலால் சுயத்தை இழந்தான். 'ஏய்... ஏய்' என்று அங்கும் இங்குமாய் ஓடினான். அவள், தலையணையைத் தூக்கி அவன்மீது எறிந்தாள். கையிலிருந்த அவன் சட்டைக் கிழிசல்களை வீசினாள். டெலிபோனைத் தூக்கிக் கீழே போட்டாள்... ஒரு நாற்காலியைத் தூக்கி மல்லாக்கப் போட்டாள்... பீரோ கண்ணாடிக்கு முன்னால் போனாள்... அவளது உருவம் அவளுக்குப் பிடிக்கவில்லையோ என்னமோ... அந்தக் கண்ணாடிக்குள் அவன் உருவமும் தெரிந்ததோ என்னமோ... கண்ணாடியைக் கைகளால் குத்தினாள்... குத்திக் குத்தி விரல்களுக்கு குருதி வண்ணம் கொடுத்தாள்... அவனையே குறிவைப்பது போல் ரத்தமும் கையுமாய் மீண்டும் பாய்ந்தாள். அப்போது...

சொர்ணம்மா, ஓடிவந்தாள். குய்யோ முறையோ என்று கத்தினாள்.

"அய்யோ- அய்யய்யோ- என் பிள்ளையப் போட்டுக் கொல்றாளே- நான் உள்ளங்கையிலே ஏந்தி வளர்த்த செல்ல மகனை- கொல்லு கொல்லுன்னு கொல்றாளே... கிளியை வளர்த்து பூனை கையிலே ஒப்படைச்சிட்டேனே- ஏய்- விடுடி அவனை- விடுடி என் பிள்ளையை-"

சொர்ணம்மா, மருமகளை பிடிக்கவோ அடிக்கவோ, அவள் பக்கமாய் ஓடினாள். ஆனாலும் அவள் பார்த்த பார்வையில் பைசா நகரக்கோபுரம் போல் சாய்ந்து நின்றாள். இதற்குள் காந்தாமணி, ஓடி வந்தாள். காய்கறி வண்டிப் பையன் வந்தான். கட்டிடத் தொழிலாளர்கள், ஓடோடி வந்தார்கள். சொர்ணம்மா, எல்லோரிடமும் முறையிடுவதுபோல் கத்தினாள். "அய்யோ எங்கேயும் நடக்காத ஒரு அநியாயம் இங்கே நடந்திட்டே..."

காந்தாமணி, சங்கரியை முரட்டுத்தனமாகத் தள்ளிவிட்டு, தம்பியை மீட்டினாள். நாத்தனாரை ஒரு சுவரோடு சாத்தி, அவள் மார்புக்குக் குறுக்கே கையை அடைப்பாக்கிக் கொண்டு, தம்பியைப்

பார்த்தாள். இடுப்புக்கு மேலே துணிச் சிதறல்களோடும், கிழிசல் பொத்தல்களோடும் ஆண் கவர்ச்சி ஆட்டக்காரன் போல் நின்ற மனோகர், மருவி மருவிச் சொன்னான்.

"வேலைக்குப் போகக் கூடாதுன்னேன்... அதுக்கு இந்தப்பாடு படுத்துறாள். எத்தனை வருஷம் ஜெயிலில் இருந்தாலும் சரி- இவளை நான் விடப்போறதா இல்லை-"

அவன் மாவீரனாய் மனைவிமீது பாயப் போனபோது, அக்காக்காரி இன்னொரு ஒற்றைக் கையால் அவனைப் பிடித்துக் கொண்டாள்- அந்தச் சமயம் பார்த்து உமா ஓடிவந்தாள். லேசாய் அமைதிப்பட்டு நின்ற சங்கரி, அவளைப் பார்த்ததும் பதட்டமானாள்.

"முதல்ல இங்கிருந்து போடி- போறியா? இல்லியாடி-? அடுத்துக் கெடுத்தவளே- நம்பிக்கைத் துரோகி- இந்த வீட்ல உனக்கென்னடி வேலை-? நான் சொன்னதுமாதிரி ஒன் புருஷன் அனுப்பி வைச்சானா-?"

உமா, கைகளைப் பிசைந்து திரும்பி நடக்கப் போனபோது, சொர்ணம்மா, அவளைப் பிடித்துக் கொண்டு, பதில் கத்துக் கத்தினாள்.

"இது என் வீடு. இவள், எனக்கு இன்னொரு மகள் மாதிரி... போகமாட்டாள்... என்னடி செய்வே... ஏய்... உமா... நீ நில்லும்மா..."

உமா, நிற்கத்தான் செய்தாள். ஆனால், இந்திரன் ஓடிவந்து, அவள் கையைப் பிடித்து, நாயை இழுப்பது மாதிரி இழுத்துக் கொண்டு போனான். ஆனாலும், முன்னெச்சரிக்கையாய், சங்கரிக்கு முகத்தைக் காட்டாமல், படிகளுக்குள் உடம்பைப் பதுக்கிக் கொண்டு உமாவோடு ஓடிவிட்டான்.

இருவரையும் இரு கரங்களால் தடுத்து நின்ற காந்தாமணி, தம்பியை ஒருபுறமாய் ஒதுக்கித் தள்ளிவிட்டு, நாத்தனாரைப் பார்த்து... நியாயம் கேட்பதுபோல் கேட்டாள்...

"என் தம்பியால, 'அது' முடியலைன்னு இந்த உமாகிட்ட கேவலமாப் பேசியிருக்கே- நான், வலது காதில வாங்கி இடது காதில வச்சுட்டு இருக்கேன்- நீயே சொல்லு... என் தம்பியைப் பேடின்னு பேசினது மட்டுமில்லாம, இப்போ அவன அடி அடின்னு அடிச்சிறிக்கிறியே- இது ஒரு பொம்பள செய்கிற காரியமா-"

மகள் சொன்னதை சொர்ணம்மா, உன்னிப்பாய்க் கேட்டாள். முதலில் அவளுக்குப் புரியவில்லை.. புரியப் புரிய வாயிலும் வயிற்றிலும் அடித்தபடியே அந்த அறையே அதிரும்படிக் கத்தினாள்... மருமகள், முன்னால் விரல்களை நீட்டி மடக்கியபடியே பேசத் தெரிந்த மிருகமாய்க் கத்தினாள்....

"அடி சண்டாளி... என் மகனையாடி ஏலாதவன்னு சொன்னே... நீ மதம் பிடிச்சுத் திறிஞ்சா அதுக்கு அவன் என்னடி பண்ணுவான்? இப்போ சொல்றதை நல்லாக் கேளுடி... ஒன் கண்ணு முன்னாலேயே, என் மகனுக்கு இன்னொரு கல்யாணம் செய்துவச்சு, ஒரு வருஷத்துக்குள்ளே... என் பேரக் குழந்தையை நான் மடில வச்சுக் கொஞ்சலைன்னா... என் பேரு சொர்ணம்மா இல்லடி... அடிப்பாவி... என் பிள்ளையை எப்படிக் கேவலப்படுத்தியிருக்கா... ராத்திரிலே என்ன பாடெல்லாம் படுத்தினாளோ... அடேய்... இன்னுமாடா நீ, இவள்கூட வாழணும்... இவளை ஒரேயடியாய் மிதிச்சுப் போடாம இப்படி அடிபட்டு நிக்கியே... நீயெல்லாம் ஒரு ஆம்பளையாடா...?"

காந்தாமணி, அம்மாவின் வாயைப் பொத்தினாள். தாயின் ஆவேசம் தனயனுக்கும் வந்துவிட்டது. இப்போது பசுப்போல் மலங்க மலங்கப் பார்த்தபடியே நின்ற சங்கரியின் மீது மனோகர் பாய்ந்தான். அவள் முடியைப் பிடித்து இழுத்தான். கால்களை இடறி வயிற்றைக் குத்துவதற்காக குதிகால்களைத் தூக்கி கைகளை ஓங்கினான்.

என்றாலும், சங்கரி அவனுக்கு இடம் கொடுக்கவில்லை. தொப்பென்று கீழே விழுந்தாள். பின்பக்கமாய் விழுந்து மல்லாக்கச் சாய்ந்தாள்... வாயில் நுரை சோப்புக் குமிழ்களாய் நின்று நிதானித்து, பின்னர் திரிந்துபோன பாலாய் ஓடியது. கண்கள் இடுக்கிக் கொண்டன. கை கால்கள் வெட்டிக் கொண்டன... வெட்டி வெட்டி ஒன்றை ஒன்று குத்திக் கொண்டன.

# 10

மனோகர் திருவான்மியூர் பேருந்து வளாகத்திற்கு எதிரே, மாமல்லபுர பேருந்து நிறுத்தத்தில், கால்களைச் சுழற்றாமலே, கண்களைச் சுழற்றினான். அவன் நின்ற இடத்தை பேருந்துக் கூடாரம் என்று சொல்ல முடியாது. அவனைப்போல் கூடாரம் அற்றுப்போன ஒரு இடம். பாதிக்கிழிந்துபோன பேருந்துப் படத்தைச் சுமக்கும் வளைந்துபோன கம்பி. மழை, சாலையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. மண் திட்டுகள் சேறும் சகதியும் ஆன சதைகளாய் வழிந்தோடின. குண்டு குழிவாய்கள் நீரைக் கொப்பளித்தன. மூடியற்ற சாக்கடை குழிகளில், நீர் சுழி போட்டது. முந்தய மழையாலும் மண் லாரிகளாலும் ஏழைப் பெண்ணின் புடவைபோல் ஒப்புக்குப் போடப்பட்ட தார், நார் நாராய், தடம்

புரண்டு, அந்த சாலையை நிர்வாணமாகக் காட்டியது. ஆள் அரவம் அதிகமில்லை. நின்றவர்களும் அருகே உள்ள கடைக் கண்ணிகளில் ஒதுங்கிக் கொண்டார்கள்.

என்றாலும், மனோகர் மட்டும் மழையில் நனைந்தபடியே நின்றான். நனைகிறோம் என்ற நினைவற்றே நின்றான். அவனுக்குக் குளிரடிக்கவில்லை. தலையைக் குட்டிய மழை நீரும், உடலை அப்பிய ஈர உடையும், அவனுள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை. நல்லதுக்கும் கெட்டதுக்கும் அப்பால்போன ஞானம். ஞானத்தின் எதிர் மறையோ, அஞ்ஞானத்தின் வெளிப்புறமோ... முற்றும் நனைந்ததற்கு ஈரமில்லை என்பதுபோல் நின்றான். கங்காவுக்காக நின்றாலும், அவள் வருகையின் உணர்வற்றே நின்றான்.

சங்கரியை, தனியார் மருத்துவமனையில் சேர்த்தாகி விட்டது. காக்காய் வலிப்போ... வேறு எதுவோ... இன்றைய டெஸ்டில் நாளைக்கு ரிசல்ட் தெரியும். அக்காவும், அம்மாவும் மாறி மாறித் தவம் கிடக்கிறார்கள். ஆரம்பத்தில் துள்ளிக் குதித்த அம்மா, அடங்கிப்போனாள். வரதட்சணைக் கொடுமை என்று ஆகிவிடப் படாதே என்று காந்தாமணி சொன்னதும், அவள் ஆடிப்போனாள். ஆனால், இவனுக்கோ அந்தச் சிந்தனையே இல்லை. வாடகைக் காரில், சங்கரியை பிணம்போல் ஏற்றினார்கள். அவனும் பிணம் போலவே அந்தக் காரில் ஏற்றப்பட்டான். அக்காக்காரி அந்தக் காருக்குள்ளேயே அவனைக் கட்டிப்பிடித்து அழுதாள். அம்மாக்காரி அவன்மீது முட்டி மோதினாள்.

மனோகர், நினைவுகளை உதறிவிட்டு, அந்தப் பஸ் நிறுத்தத்தில் பட்ட மரமாய் நின்றான். அவன் பாலை மனத்தில் துளிர் விட்டது ஒன்றே ஒன்று. பெண் மோகம். அந்த மோகமே பித்தானது. எதிர்காலத் திட்டமோ, நிகழ்கால நினைப்போ ஏதுமற்று, அப்போதைக்கு அப்போது, வாழும் தற்காலிக வாழல். பெண் பித்துக்காகவே வாழுதல். மனச்சுமையை மறக்கும் காமத்தேடல். இதனால்தான், இந்த ஒருமாத காலத்தில், தெருக்களில் தேடிப்பிடித்த நான்கு பெண்களோடு கடற்கரைக்குப்போய் இருக்கிறான் மூன்று பெண்களோடு சினிமாவிற்குப் போய் இருக்கிறான். ஐந்தாறு பெண்கள் செருப்புக்களைத் தூக்கியதையும் கண்டிருக்கிறான். ஜீ.பி.எப்பில் கடன் வாங்கினான். டி.ஏ. அட்வான்ஸ் வாங்கி அரசுப் பயணம் மேற்கொள்ளாமல், அதே பணத்தில் பெண் பயணத்தில் லயித்துவிட்டான். பயணம் என்றால், அறைக்குள் நடத்தும் ரகசியப் பயணமல்ல. பகிரங்கமான சினிமா தியேட்டர்களிலும், கடற்கரைகளிலும் நடத்தும் பாதிப்பயணம். எல்லையைக் காணமுடியாத இடைவேளைப் பயணம் இவனால், இப்போதைக்கு அவனுக்கு எதுவுமே உறைக்கவில்லை உயர்

பதவியின் பொறுப்பில்லை. தெருப் பொறுக்கியாய் ஆகிப்போன நினைவில்லை

மழை, தூறல் ஆகிவிட்டது. இப்போதுதான் அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மழைத் துளிகள் பட்டு, மங்கலான கடிகாரக் கண்ணாடிக்குள், சின்ன முள்ளை பெரிய முள் கவ்வியிருந்தது. ஒல்லியான வினாடி முள், வட்டமடித்தது. கடைசி முள்ளின் நிலைதான் அவன் நிலையோ... லேசான நினைப்பு. பழைய ரசனையின் பெருங்காய வாடை. வெறுமையாய்ச் சிரித்தான். பிறகு அந்த வெறுமைக்குப் பயந்துபோய் குடையைப் பிடித்துக் கொண்டு சென்ற, ஒரு பெண் பின்னால் போனான். அவளை எட்டிப் பிடிப்பதுபோல் நடந்து, லேசாய் கனைத்தான். அந்தக் கனைப்புக்கு அவள் முகம் கொடுக்காதபோது, திரும்பி நடந்தான். எதிர்பக்கம் இன்னொருத்தி பாளம் பாளமான பட்டை டிசைன் போட்ட புடவைக்காரி. பேருந்தில் அடிபடாத குறையாக அந்தச் சாலையைக் கடந்தான். அவளுக்கு இணையாக நடந்தான். அவளோ, அவனை ஒருமாதிரிப் பார்த்தாள். 'மணி என்னாச்சு' என்றாள். அவன் அவளோடு போயிருப்பான். அதற்குள், கங்கா அவனை வழி மறித்தாள். அவன் கைகளைப் பற்றியபடியே சாடினாள்.

"சொன்ன இடத்தில் நிற்காமல் ஏன் இப்படி அலையறே... அங்க போய் நின்னால், பொறுக்கிப் பசங்க முறைக்கிறாங்க... உன்னோட பேஜாருய்யா..."

மனோகர், அவளை ஏறிட்டுப் பார்த்தான். இப்போதெல்லாம், அவள் 'ஸார்' போடுவதில்லை.... 'போய்யா வாய்யா'தான். கள்ளக் காதலிலும் அவளுக்கு ஏக புருஷ விசுவாசம். அவள் வருவாள் என்று தெரிந்தே அலைந்தான். ஆனாலும் பெண் தேடினான். எதார்த்தத்தால் தடுக்கப்படவில்லை அந்த வீண் முயற்சியிலும் ஒரு சுகம். அந்த நாய் அலைச்சலிலும் ஒரு கிளு கிளுப்பு.

மனோகர், அவளை மீண்டும் மீண்டும் பார்த்தான். நீண்ட முகத்திற்குப் போட்டியாக பின்புறத் தலையாய் முளைத்த கொண்டை. அதில் பாதியை மறைத்து மல்லிகைச் சரத்தின் நிலா வெளிவட்டம் செஞ்சிவப்புப் பிடரியை கருப்புக் கோடுகளாய்க் காட்டி கொண்டையில் தொடங்கி பிடறியில் முடியும் முடிக் கிராதிகள். பாடதி கம்மல்களுக்குப் பதிலாக அங்கும் இங்குமாய் சுழலும் மீன் வடிவ வளையங்கள். இடது கையில் பொன்னிறக் கடிகாரம். வலது கையில் கைப்பை. எல்லாம் இவன் வாங்கிக் கொடுத்ததுதான் அவள் வாங்க மறுத்தும் இவன் திணித்தவைதான்.

மனோகர், தன்னை ரசிப்பதை கங்கா ரசனையோடு பார்த்தாள். போகப் போகிற அந்த இடத்தில் எவருக்கும் அந்தச் சந்தேகம்

வந்துவிடக் கூடாது என்பதற்காக இவனே சொல்லி, அவள் செய்த அதிகப்படியான அலங்காரம். அது அலங்கோலமாகி விடக் கூடாதே என்ற பயம். அந்தப் பயத்தை அவளுள் ஏற்படுத்தியவனும் இவன்தான் இந்த இரவில் ஆட்டோவில் போனால், போலீஸ் செக்போஸ்டில் மடக்கி பூர்வோத்திரம் கேட்கலாம் என்று விவரம் சொன்னான். அதற்குப் பரிகாரமாய் பேருந்தில் போகலாம் என்றான். போகிற இடத்தில், இவள் வாயைத் திறக்கக் கூடாது என்றான். அதே சமயம் பயப்படாமல் அசத்தலாகப் பார்க்க வேண்டும் என்றான். இதுவே அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. 'போலீஸில் சிக்கினால் படாதபாடு. அந்தக் கஸ்மாலத்துக்குத் தெரிஞ்சா வெட்டிப் பூடுவான்... இந்த ஆளையும் சேர்த்து வெட்டுவான். புருஷன் மேஞ்சாலும், பெண்டாட்டி யோக்கியமா இருக்கணுமுன்னு பினாத்துற ஜென்மம். அதோட மனசாட்சின்னு...'

"வாணாய்யா... வாணாய்யா..."

"என்ன ஒனக்கு பிடிக்கலியா.."

"பிடிக்காட்டி வருவேனா...."

"அப்போ பேசாம வா..."

"நம்ம ஆபீஸ்ல வேற, ஒரு மாதிரிப் பேசுறாங்கய்யா..."

"அங்கே ஒவ்வொண்ணும் ஒவ்வொண்ண லவ் பண்ணிட்டுத் தான் இருக்கு... ஜோடிகளை மாற்றி மாற்றி லவ் பண்ணுது அதுகளுக்கு நம்மளப் பத்தி பேச யோக்கியதை இல்லை.."

"ச்சீ.. என்னப்போல எவளும் இருக்கமாட்டாள்.."

"என்னைப்போல ஒருத்தன் ஒனக்குக் கிடைப்பானா...."

"நிசந்தான்யா.. அம்போன்னு இருந்த என்னை இப்படி பைத்தியமாக்கிட்டியே... சதா ஒன் நெனப்புத்தான்யா.."

மனோகர், பெருமை பிடிபடாமல் தன்னையே பார்த்துக் கொண்டான். வெற்றி பெற்றவன் போல் புன்னகைத்தான். சாதாரண வெற்றியல்ல சங்கரியைத் தோற்கடித்த வெற்றி. எப்படி இருக்காளோ... எப்படியும் இருக்கட்டும்... இந்தச் சின்ன வீடே இனிமேல் ஒரு பெரிய வீடு... அடியே சங்கரி... ஒன்கிட்ட முடியாதது இவள்கிட்ட முடியும்... காரணம் இவள் என்னை நேசிக்கிறவள்..'

இருவரும், பேருந்தில் ஏறி, மாமல்லபுரத்திற்கு மூன்று கிலோமீட்டருக்கு முன்பே இறங்கிக் கொண்டார்கள் ஆரவாரமற்ற சாலை இருவரும் பயந்துபோய் ஒருவருக்கு ஒருவர் காங்களைப்

பற்றிக் கொண்டார்கள். ஆனாலும் அந்த விடுதியின் நுழை வாயிலுக்குப் போன உடனேயே அவர்களுக்குப் பயம் தெளிந்தது. கடலோர விடுதி. ஆகாயம் வளைந்தது போன்ற கட்டிடம்... அதில் அப்பிய கலர் பல்பு நட்சத்திரங்கள்.

அண்ணாந்து பார்த்த கங்காவை முதுகைப் பிடித்து நகர்த்தியபடியே வரவேற்பு அறைக்குள் நுழைந்தான். அங்கே தூங்கி வழிந்தவன், தூக்கக் கலக்கத்தில், கண்களால் அதட்டினான். கீழே நான்கு ஐந்துபேர் குறுக்கும் நெடுக்குமாய்ப் படுத்திருந்தார்கள். வரவேற்பாளன், பிணக்காட்டில் நடப்பதுபோல் அவர்களுக் கிடையே குறுக்கும் நெடுக்குமாய் நடந்து வரவேற்பு வளைவுக்கு வெளியே வந்து சாவியை நீட்டினான். நேற்று மத்தியானமே பதிவு செய்துவிட்டுப்போன 'முத்துசாமியை' புன்னகைத்துப் பார்த்தான். இவன், அப்போது கொடுத்த ஐம்பது ரூபாய் அன்பளிப்பை இன்று மத்தியானம் தான் 'ஆப்பாக்கி' ஆப்பானவன் இப்போதுதான் எழுந்தான். ஒரு 'புல்லை' எதிர்பார்த்து, அவனே அவர்களை முதலாவது மாடிக்கு நகர்த்தி மூன்றாவது அறைக்குள் கொண்டு போய் விட்டான்.

அந்த அறையைப் பார்த்து, கங்கா அதிசயித்தாள். அருமையான கிளுகிளுப்பு. அதுவே குரலிடுவதுபோன்ற மென்மையான சத்தம். அவர்களை வரவேற்பதுபோல் டிரான்ஸ்பார்மர் அதிர்வேட்டாய் முழங்கி ஒரு சிவப்பு விளக்கைக் காட்டுகிறது. அவள் தரை தெரியாத கம்பளத்தில் நடந்து, மெத்தையைத் தொட்டாள். 'எம்மாடியோ' என்று குரலிட்டபடியே அவனை நன்றியுடன் பார்த்தாள். கட்டில் சட்டத்தில் பதித்த சுவிட்சுகளைத் ,தட்டி விட்டாள் அந்த விளையாட்டில் மேல்தளம் வானவில்லானது. அறை முழுக்க மஞ்சள் வெயில் வெளிச்சம்.

கங்காவுக்கும், பயம் போய்விட்டது. வெல்வெட் சோபா இருக்கைக்குத் தாவினாள். பேண்டை கழட்டிப்போட்டு விட்டு லுங்கியைக் கட்டிக்கொண்டு இருந்தவனை பல்லிபோல் அப்பிக் கொண்டு, அவனோடு படுக்கையில் விழுந்தாள். ஒரே நிமிடத்தில் அவன் அவளிடமிருந்து விடுபட்டான். அவளோ 'என் ராசா ராசா..' என்று அரற்றினாள். அவனுக்கோ, அவள் முத்தம் எச்சிலாகப் பட்டது. இதற்கா இவ்வளவு அலைச்சல் என்று தன்னையே நொந்து கொண்டான். அவனுக்கு நல்ல வேளையாக கதவு தட்டப்பட்டது. தவில் அடிப்பதுபோல் சத்தமிட்டது. அதுதான் சாக்கென்று விடுபட்டான். கதவை திறந்தான் அவள் ஆடைகளைச் சரிப்படுத்த முடியாமல், குளியலறைக்குள் போகவேண்டும் என்று நினைப்பில்லாமல், கட்டிலுக்குக் கீழே பதுங்கினாள்.

வந்தவன் பணிரெண்டு, பதிமூன்று வயதுச் சிறுவன் பூவாகாமல், பிஞ்சாகாமல் வெம்பிப்போன பழம். முகத்தில் முதிர்ச்சி. அதாவது வறுமையின் முதிர்ச்சி. செடி மரமாகாமல் தடுக்க கிளைகளை வெட்டியெடுத்த; இலைதளைகள் பிய்த்து எறியப்பட்ட மரத்துப்போன செடி. கண்களைச் சிமிட்டாமல் கள்ளச் சிரிப்பை உதிர்க்காமல், அவர்களைப் பேரன் பேத்தியாய்ப் பார்த்து ஒரு தாத்தாவின் தோரணையில் கேட்டான்.

"வேற ஏதாவது வேணுமா சார்..."

"அப்படின்னா..."

"அதுதான்.. விஸ்கி, பிராண்டி, ஜின், சிக்கன் 65, நூடுல்ஸ், பிரைடு ரைஸ், சிக்கன் மஞ்சூரி, சிக்கன் டிரை, நான், சப்பாத்தி..."

மனோகருக்கு சாப்பிடாமல் இருப்பது அப்போதுதான் உறைத்தது. கட்டிலுக்குக் கீழே கிடந்தவளைக் குனிந்து பார்த்தான். அவளோ எதுவும் வேண்டாம் என்பதுபோல் தலையாட்டினாள். அந்தச் சிறுவனைப் போகச் சொல்லும்படி படகோட்டுவது போல் கைகளைக் கொண்டு போனாள். ஆனால், மனோகர் வேறுவிதமாக நினைத்தான். நீலம், அன்று படுக்கை அறையில் சொன்னது நினைவுக்கு வந்தது. 'அடே பயா... ஆளுக்கு ரெண்டு பெக் தண்ணி அடிச்சிட்டு படுக்கையில் புரண்டா அந்தச் சுகமே அலாதிடா...' என்றாள். அப்போது அதை மறுத்தவன், இப்போது ஒப்புக் கொண்டான். பாதிப் போதையில் கண்கள் கிறங்க பெண் ஆண்வசமாக, ஆண் பெண் வசமாக, ஆணும் பெண்ணும் அற்றுப் போன நிலையில், அந்தச் சுகமே அலாதி.... இப்படி இவனே சொல்லிக் கொண்டான். சிறுவனிடம் பாதிப்பாட்டில் விஸ்கிக்கும், இதர வகையறாக்களுக்கும் பணம் கொடுத்தான். நூறு நூறு ரூபாய் நோட்டுக்கள்.

அந்தச் சிறுவன், கங்காவை ஏறிட்டுப் பார்க்காமலே போனபிறகு, அவள் கட்டிலிலிருந்து வெளிப்பட்டாள். அந்த சிறுவனை 'போக்கிரி.. பொறம்போக்கு' என்று திட்டிக் கொண்டே, கதவைச் சாத்தப்போனாள். மனோகருக்கு, இழந்துபோன உடல் முறுக்கு இன்னும் வரவில்லை. அரைமணி நேரமாவது ஆகும். அப்படி வந்தாலும் முடியுதோ... முடியலையோ... முடிந்தால் சந்தோஷம்... முடியாவிட்டால் பாட்டில் மீது பழிபோட்டு விடலாம். அவன் ஆணையிட்டான்...

"கதவு திறந்திருக்கட்டும்..."

"அந்தப்பய வாரறதுக்கு அரை அவுரு ஆகுமே... அதுவரைக்கும் என்ன செய்றதாம்.."

"இந்தா பாரு... கதவைச் சாத்தாதே... இந்த இரவு முழுசும் நமக்குத்தான்..."

அவள், லேசாய் திடுக்கிட்டாள். அவன் குரலில் காட்டிய கடுமை, அவளுக்கு என்னவோ போலிருந்தது. ஆனாலும், தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அரைமணி நேரம் முக்கால் மணியாகியது. அதுவரைக்கும் அவள்தான் பேசினாள். அவன் ஒற்றை வார்த்தையிலேயே பதிலளித்தான். அவள் 'பலாவான' சில்மிஷங்களைச் செய்தாள். அந்த சதை வஸ்துவை, அவன் பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொண்டான்.

இதற்குள், அந்தச் சிறுவன் ஆடி அசைந்து வந்தான். வாங்கியவற்றை அங்கிருந்த டீப்பாயில் பொட்டலங்களாகவும் பாட்டிலாகவும் வைத்துவிட்டு எஞ்சிய நோட்டுக்களையும் சில்லறைகளையும் அப்படியே கொடுத்துவிட்டு, கொசுறுக்காகக் காத்திருக்காமல் போய்விட்டான்.

மனோகர், இரண்டு கிளாஸ்களை எடுத்து பாட்டிலில் கால்வாசியைக் காலி செய்தான். எறா மாதிரி நெளிந்து கிடந்த வலுத்த முந்திரிப்பருப்பு ஒன்றை அவள் வாயில் திணித்தபடியே, 'நீயும் போட்டுக்கோ...' என்றான்.

"வாணாம்யா..."

"பழக்கம் கிடையாதா...?"

"அந்தக் கஸ்மாலம் ஒருவாட்டி வற்புறுத்தித் தந்திருக்கான். அடிக்குப் பயந்து நானும் ஊத்திக்கினேன்... அப்புறம் ஆடுனனாம் பாரு ஆட்டம்... அப்படி ஆடுனேனாம். அந்தக் கஸ்மாலத்தைப் போடா வாடான்னு திட்டினேனாம். அவன் வழக்கம்போல் அடிக்க... நான் புதுசாத் திருப்பி அடிக்க... தெருவே திரண்டிட்டு..."

"ஒனக்கு புருஷன்மேலே இருந்த வெறுப்பு அப்படி வெளியாயிருக்கு.. இங்கே சூழ்நிலை வேறே... ஒரு 'பெக்' போட்டுக்கோ... 'அதுக்கும்' நல்லதாம்..."

மனோகர், அவள் வாய் விளிம்பில் அந்தக் கிளாஸை திணித்து, உதடுகளை இரண்டாக்கினான். அவள் அழுத்தம் தாங்காமல் வாயைத் திறக்க, அந்தத் திரவம் அவள் வயிற்றுக்குள் தானாய் ஓடியது. அவன் கோழி வறுவல்களையும், உருளைக்கிழங்கு சிப்ஸையும் அவள் வாய்க்குள் திணித்தபோது, அவள் கிளாஸிலிருந்து தானாகவே கொஞ்சம் ஊற்றி வாய்க்குள் விட்டாள். மூன்றாவது பெக்கை தனக்குமட்டுமல்லாமல்

அவனுக்கும் ஊற்றிக் கொடுத்தாள். மெல்ல மெல்ல அவள் இரண்டு பட்டாள் கண்கள் தனியாய் சுழன்றன. பிறகு தலையோடு சேர்ந்து சுழன்றன. அவன் சுழன்றான்… அந்த அறையே சுழன்றது… அவள் காளியாய் எழுந்தாள். குதியாய்க் குதித்தாள்…. அவன் தோளைப் பற்றித் தூக்கியபடியே… கத்தினாள்…

"ஏன்யா… தெரியாமத்தான் கேக்கேன்… நீ ஆம்பளதானா…? இந்நேரம் அந்தக் கஸ்மாலமாயிருந்தா, என்னமா உருட்டி யிருப்பான்… கதவைச் சாத்தாதேன்னு போக்கு காட்டுறியே… எனக்கா தெரியாது… நீ நெசமாவே ஆம்பளைன்னா… வாய்யா பார்க்கலாம்… வாய்யா…."

கங்கா, மல்லாக்க விழுந்தாள். சேலையை அவிழ்த்துப் போட்டாள். தலையைத் தூக்கித் தூக்கி இரண்டு கைகளையும் ஆட்டி ஆட்டி "ஒனக்கு நெசமாங்காட்டியும் தில்லு இருந்தா, வாய்யா… வாய்யா…" என்று அபிநயம் காட்டி குரலிட்டாள்.

போதைக்குள் மூழ்கியிருந்த மனோகருக்கு, உடனடியாய் போதை தெளிந்தது. சத்தம் போட்டவளின் வாயை கைகளால் பொத்தினான். அவள் கடித்த வலி பொறுக்காமல், கட்டிலில் கிடந்த பனியனை பந்து போலாக்கி, அவள் வாய்க்குள் திணித்தான். அவள், அவனை ஒரே தள்ளாய்த் தள்ளிவிட்டு எழுந்தாள். வார்த்தைகள் அம்புகளாகின குரல் அதிர்வேட்டானது.

"ஒன்னையே நம்புற என்னோட வேலையப் பற்றி யோசித்தியா- இன்னாச்சு ஒன் கம்பெனி… பொல்லாத கம்பெனி… போவட்டும்… ஆபீஸ்லயாவது பெர்மனென்டு ஆக்கினியா- ஆமாம்- தெரியாமத்தான் கேக்கேன்- நீ பொம்பளப் பொறுக்கி ஆயிட்டியாமே- ஆபீஸ்ல ஒரு கிளார்க்குப் பொண்ணு வனஜா- செருப்பைத் தூக்கிக் காட்டினாளாமே- நான் இருக்கேன்- ஒன் பொண்டாட்டி இருக்காள். இந்த ரெண்டையும் சமாளிச்சாலே ஒனக்குப் பெரிசு… இன்னா மன்ஷன்யா நீ… பொட்டையில்லைன்னா இப்பவே வாய்யா- ஒன்னால நம்ம ஆபீஸே நாறுதுய்யா… என்னையும் ஒன்னையும் அந்தக் கிருஷ்ணன் பய ஏடாகூடமாப் பேசுறான்யா- தாங்க முடியலையா- என்னால தாங்க முடியலைய்யா- எனிக்குப் பழி பாவத்தைக் கொடுத்திட்டியே- என்ன ஸ்கைவிட்டிடாதேய்யா- என்னக் காப்பாத்தைய்யா- ஏமாத்திடாதேய்யா- ஏமாத்துவியா? மவனே… ஏமாத்தின என்ன நடக்கும் தெரியுமா?"

கங்கா, படுக்கையிலிருந்து எழுவதும் விழுவதுமாகச் சுழன்றாள். பாவாடை ஜாக்கட்டில் ஒரு சினிமாப் பாட்டைப் பாடினாள். அவன் முதுகில் இரண்டு சாத்துச் சாத்தி, தாவி ஆடினாள் அவன் கையை எடுத்து, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்… அழுதாள். அந்த அறையே குலுங்கும்படி ஒப்பாரி போட்டாள்

"அந்த கஸ்மாலம் விட்டதுமாதிரி என்னக் கைவிட்டிடாதேய்யா... நீ... விட்டிடுவே... விடத்தான் போறே... எனக்கும் ஒனக்கும் எதுவும் நடக்கல... நடத்தவும் ஒன்னால முடியல... நடக்காமலே முடிக்கிறே... என்னால ஒனக்குப் பிரயோசனமில்ல... ஒன்னால எனக்குப் பிரயோசனமில்ல... என்னமாதிரி ஒரு வயசுப் பொம்மனாட்டிக்கி இந்த ரூமு முக்கியமில்லய்யா... பெட்டு முக்கியமில்லய்யா... தரை கூடப் போதும்யா... ஏய்யா என்னக் கூட்டி வந்தே...? என்னக் கைவிடப் போறீயே..."

கங்கா, பக்கத்திலிருந்த கிளாஸை எடுத்து பீரோ கண்ணாடி மீது வீசினாள். கையெடுத்துக் கும்பிட்டவனைப் பார்த்துச் சிரித்தாள். கைதட்டினாள்... கதவைக் குத்தினாள்... கொண்டையை அவிழ்த்துப் போட்டாள்... பூக்களைப் பிய்த்துப் போட்டாள்... பாட்டுப் பாடினாள்... தங்தங்கென்று குதித்தாள்.

அறைக்கதவு பலமாக தட்டப்பட்டது. மனோகர் கைகளை நெறித்தான். அவள் கன்னத்தில் கூட, ஒன்று போட்டான். அவள், உடனே ஒப்பாரி இட்டாள். இப்போது கதவுக்கு வெளிப்பக்கம் வசவுகள் கேட்டன. அந்தக் கதவு அதிர்ந்தது. மனோகர் வேறு வழியில்லாமல் பெட்டிப்பாம்பாய் கதவைத் திறந்தான். வெளியே நான்கைந்து பேர் நாகப்பாம்பாய் சீறி நின்றார்கள். வரும்போது வாஞ்சையோடு இந்த அறையில் விட்டுப்போன வரவேற்பாளன், இன்னும் அங்கும் இங்குமாய் ஆடிக் கொண்டிருந்தவளை நோட்டம் போட்டபடியே கத்தினான்.

'ஏண்டா... ஒன்னப் பார்த்தா படிச்சவன் மாதிரி தெரியுது... இப்படிப்பட்டவள ஏண்டா கொண்டு வந்தே...'

'ஏண்டா கமால்... அவங்கிட்டே போய் நியாயமா கேக்குறே...? கற்பழிப்பு கொலைன்னு பழியை நம்ம மேல போட்டுட்டு, தப்பிக்கறதுக்கு வந்திருக்கான்... பேசாம போலீசுக்கு போன் போடு.... நீ பேசறியா? நான் பேசட்டுமா...? ஏடி ஒன்னத்தான் இதுக்கு மேலே ஆடின, கடலுக்குள்ள வீசி கடாசிடுவோம்... கடாசினவங்கதான்... கமால்... இன்னுமா டெலிபோனை எடுக்கலை..."

ஒரு மொட்டைத்தலை தடியனின் அதட்டலுக்குக் கட்டுப்பட்டு, வரவேற்புக் கமால், அந்த அறைக்குள் இருந்த டெலிபோனை எடுத்தான். பிரமித்து நின்ற மனோகருக்கு விபரீதம் புரிந்துவிட்டது. கையெடுத்துக் கும்பிட்டு மன்றாடினான்...

'வேண்டாம் ஸார்... வேண்டாம் ஸார்...'

அந்தச் சமயத்தில் கங்கா, எரிகிற தீயில் எண்ணெய்யை ஊற்றினாள்

"ஏல ... ற்றே...? போன்போட்டாப் போடட்டுமே... போலீசு ... கொம்பனா... டேய் கஸ்மாலம்... போலீசு மச்சிக்கிட்ட பேசுடா...'

இதுவரை தயங்கிய கமால், இப்போது டெலிபோன் எண்களை உறுதியாகச் சுற்றினான்... மனோகர் அவன் கைகளைப் பற்றி தன் கண்களில் ஒற்றிக் கொண்டே மன்றாடினான்...

"என் கழுத்துல கிடக்கிற இந்த நாலு பவுன் செயினை எடுத்துக்குங்க சார்... பையில இருக்கிற ரெண்டாயிரம் ரூபாயும் எடுத்துக்குங்க சார்... இந்த கடிகாரத்தையும் வாங்கிக்கிங்க சார்... ஏய் கங்கா... சார் காலுல விழுடி..."

மனோகர் சுட்டிக் காட்டிய அந்த தடித்த மனிதரை அற்பப் புழுபோல் பார்த்துவிட்டு, கங்கா, மனோகரிடம் மல்லுக்கு வந்தாள்.

"அடப்போடா... அந்தக் கஸ்மாலம் மட்டும் ஒனக்குப் பதிலா இருந்திருந்தால், இந்த மொட்டைப்பயல இன்நேரம் கீய்சுப் போட்டிருப்பான்...."

தடித்த மொட்டை, கமாலிடமிருந்து டெலிபோனை வாங்கியபோது, மனோகர், அவன் காலில் விழுந்தான்.

"வேண்டாம் ஸார். தயவு செஞ்சு வேண்டாம் ஸார்... நான் பெரிய ஆபீஸர் ஸார்.... அரெஸ்டானால், என் வேலை போயிடும் சார்... நான் சொன்னதெல்லாம் ஒங்களுக்கு தாரேன் சார்..."

"சரி கீழே வந்து நீ சொன்னதையெல்லாம் கழட்டிக் கொடுத்திட்டு லாரியப் பிடித்து ஓடு... இந்த தத்தேறி குட்டி இங்கேயே இருக்கட்டும்... காலைல அனுப்பி வைக்கிறோம்..."

"நீங்க நினைக்கிறமாதிரி அவள், அப்படிப்பட்டவள் இல்லை சார்... போதையிலே உளறினாலும்... புருஷனுக்கு பதிலா என்னையே நம்பியிருக்கிறவள் சார்..."

"இவன் சரிப்படமாட்டான்... போலீசு நம்பர் என்கேஜ்டா...? சரி... மூணாவது மாடியில இருக்கிற, சப்-இன்ஸ்பெக்டரைக் கூட்டி வா... ஏய் ஒன்னத்தான் எதுக்குடி புடவையைக் கட்டுறே... உக்காருடி...."

"சார்... சார்.. என் மானம் போயிடும்... வேலை போயிடும்... எங்களை விட்டிடுங்க சார்..."

"இந்தா பாருடா... நீ பண்ணின காரியத்துக்கு நாங்களே ஒன்ன போலீசுல ஒப்படைக்கணும். ஆனால், ஒன்னப் பார்த்தால், பாவமா இருக்கு... நீ மட்டும் தப்பிச்சுப் போயிட்டே இரு. இவள நாங்க விடப் போறதில்லை டேய்... அவ புடவையப் பிடுங்குடா..

மொட்டைத் தலையனின் தடித்த கால்களில் போட்டிருந்த கைகளை, மனோகர் வெட்டருவாள் வீச்சோடு எடுத்தான் அவனுக்குள் அவனையறியாமலேயே ஒன்று விஸ்வ ரூபம் எடுத்தது. அவர்களை நேருக்கு நேராய்ப் பார்த்து ஆணையிட வைத்தது. வீறாப்பாய் நின்று சூளுரைக்க வைத்தது...

'சரி... போலீஸைக் கூப்பிடுங்க... ஆனது ஆகட்டும்... என் உயிர் போவதற்கு முன்னால, இவள நீங்க தொட முடியாது...'

# 11

எந்தப் பேருந்து நிலையத்திலிருந்து ரகசியமாய் ஏறினார்களோ, அதே இடத்திற்கு அருகே மனோகரும், கங்காவும் ஆட்டோவில் இருந்து பகிரங்கமாய் இறங்கினார்கள். இரவு மரித்துக் கொண்டிருக்கும்போது புறப்பட்டு, பகல் விடியல் குழந்தையாய் பிறந்தபோது, அந்தக் குழந்தையின் தொப்புள் கொடிபோல் ஆகாயத்தில் செஞ்சிவப்பாய் ஒளிக்கற்றை. அந்தப் பிறப்பை அறிவிக்கும் குலவைச் சத்தம்போல் பறவைகளின் சத்தங்கள்.

கங்கா, மனோகரை கண்கூசிப் பார்த்தாள். அந்த அறையில் நடந்த அமர்களத்திற்குப் பிறகு இருவருமே பேசவில்லை. முகத்துக்கு முகம் பார்க்கவில்லை. இப்போதுதான் பார்த்துக் கொண்டார்கள். தலைகளைத் தாழ்த்திக் கொண்டார்கள். மவுனம் பேசிற்று. பார்வைகள் துக்கத்தைப் பகிர்ந்து கொண்டன. அவன் பேன்ட் பையில் கையிட்டு ஐந்து இருபது ரூபாய் நோட்டுக்களை, வெறுமையாய் புரட்டிய அவள், கைகளுக்குள் திணித்தான். அவள், அந்த நோட்டுக்களை, அவன் பைக்குள் சொருகியபடியே, ஆற்றாது அரற்றினாள்.

"அந்தப் பசங்க கிட்ட நானு அப்படிப்பட்டவள் இல்லேன்னு நீ சொன்னப்போ... பெருமைப்பட்டேன்... ஆனால், இப்போ நானு அப்படிப்பட்டவள்தான்னு நினைக்கிறது மாதிரி பணத்த நீட்டுறியே சாரே...."

மனோகர், அவளை, அவள் கண்கள் வழியாய்ச் சந்தித்தான் கூடவே அவள் நினைவூட்டும் சம்பவக் கோர்வைகள் தானாய் மனதில் மோதின. இப்போதே அந்த நிகழ்ச்சிகள் அங்கேயே நடப்பதுபோல் கண்கள் பார்த்தன... காதுகள் கேட்டன.

போதை தெளிந்து பயந்து நின்ற கங்காவை, தன் உடம்போடு உடம்பாய் இணைத்துக்கொண்டு, அவன் சூளுரைக்கிறான்.... 'வயது வந்த் ஆணும் பெண்ணும் உடலுறவில் ஈடுபடுவது குற்றமில்லை.... ஒருத்தி உடலை விற்றால்தான் குற்றம்... அதை நட்புக்காக விட்டுக் கொடுத்தால் அதில் தப்பில்லை... இவள் என்னோட தோழி... நாங்கள் உறவாடுவது எங்கள் சொந்த விவகாரம்... வேணுமின்னா ஒன் போலீஸை வரச் சொல்லைய்யா...' என்று சவால் இடுகிறான். உடனே கமால் சிரித்தபடியே... 'சட்டந் தெரியாதவன்தான்யா பேரலீஸ். அதத் தெரிஞ்சு வச்சிருந்தால், அதை எப்படி வளைக்கனுமுன்னு அவங்களுக்குத் தெரியும்...' என்கிறான்.

உடனே மனோகர் ஆகாயமும் பூமியும் ஆனவன்போல் கர்ஜிக்கிறான்... 'இந்தா பாருங்கப்பா... நீங்களும் போலீசுமா சேர்ந்து என்னைக் கட்டிப் போட்டுட்டோ இல்லை கொலை செய்துட்டோ இவள, மானபங்கப்படுத்த முடியும்... அப்புறம் என்ன நடக்கும்...கொலைக் கேஸ்ல உள்ள போவீங்க... இல்லாட்டி நான் நியாயம் கிடைக்கறது வரைக்கும் அதாவது ஒங்க கைல காப்பு மாட்டறது வரைக்கும் ஓய மாட்டேன்... உண்ணா விரதம் இருப்பேன்... ஊரக் கூட்டுவேன்... மறியல் செய்வேன்.. எதுவும் பலிக்காட்டி.... தீக்குளிப்பேன்... எங்கே அவளத் தொட்டுப் பாருங்க... எங்கே டெலிபோன் செய்யுங்க...' என்று அதட்டுகிறான், மிரட்டுகிறான். அவர்கள் அடங்கிப் போகிறார்கள். அப்படியும் அவன் தங்கச் செயினையே பார்க்கிறார்கள். மனோகரோ 'இந்த அறைக்கு ஏற்பட்ட சேதாரத்துக்கு முன்பணத்துல கழித்துக்கலாம்.. இப்ப மொதல்ல வெளில போங்க... இல்லாட்டி நானே போலீஸுக்கு போன் செய்வேன்... உங்களுக்கு இன்ஸ்பெக்டரத்தான் தெரியும்... எனக்கு ஐ.ஜி.யையே தெரியும்...' என்கிறான். அவளை ஆக்கிரமிக்கப் போனவர்கள், ஆக்கிரமிக்கப் பட்டவர்களாய் வெளியேறுகிறார்கள்.

மனோகர், ஒரு மாவீரன்போல் அவளைப் பார்க்கிறான். அவள் நீட்டிய ரூபாய் நோட்டுக்களை தனது பைக்குள் திணித்துக் கொண்டே 'ஆட்டோவுக் காவது' என்று ஒரு வார்த்தையை ஒரு வாக்கியமாய் இழுக்கிறான். அவளோ, 'நான் நடந்தே போயிடுவேன் சாரே.. நடந்து நடந்தாவது வழி குறையுறது மாதிரி என் பாரம் குறையுறதான்னு பார்க்கிறேன் சாமி...' என்கிறாள். அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தே, நடக்கிறாள். மீண்டும் அவனிடம் திரும்புகிறாள். ஆகாயத்தைச் சாட்சியாக வைத்துச் சொல்வது போல், அந்த ஆகாயத்தைப் பார்த்துவிட்டு, அவனிடம் பேசுகிறாள்.

"நீ ஆம்பளைங்களுலேயே பெரிய ஆம்பளை ஸாரே. உன்ன மாதிரி ஆம்பளைய இப்பதான் நான் பாக்கேன் ஸாரே.. பொம்மனாட்டிக்கிட்டே போறவன் சாதா ஆம்பளைன்னா

அவளை கட்டிக் காக்கிறவன் பெரிய ஆம்பிளை... நீ மட்டும் என்ன விட்டுட்டுப் போயிருந்தே.. என்ன பீஸ் பீஸா ஆக்கி இருப்பாங்க... நானு ஒரு கபிரிச்சி... என்னெல்லாமோ பேசியிருப்பேன்... ஆடியிருப்பேன்... என்ன மன்னிச்சேன்னு... ஒரே ஒரு வார்த்தை... எனிக்கி ஒன் ஆபீஸ்ல கூட்ற வேலை வேணாம்... கம்பெனி வேலையும் வேணாம்... என்ன மன்னிச்சேன்னு... ஏன்னா... இனிமேங்காட்டி நாம பாக்கப் போறோமோ இல்லியோ... சொல்லு ஸாரே.. என் வவுத்துல பால் வாரு சாரே..."

அழப்போன கங்கா, பின் பக்கமாக லேசாய்ச் சாய்ந்தாள். அப்படியும் கண்ணீர் தெரித்தது... அவன், அவளை அழுத்தமாகப் பார்த்தான். அடக்கி வைத்திருந்த உணர்வுகளை கொட்டினான்...

"இந்தா பாரு கங்கா! மன்னிப்புன்னு வந்தால், நீதான் என்னை மன்னிக்கனும். கலங்காத குளமா இருந்த உன்னை, குட்டையாய் கலக்கிட்டேன். ஆனால், ஒன்னோட நட்பு என் ஆயுள் வரைக்கும் நெனப்பா இருக்கும். பிரியப்போறதா நெனச்சுச் சொல்லல, நாம பிரியப் போறதும் இல்ல... ஆனா... அதேசமயம் நம்ம ரெண்டு பேரோட நடவடிக்கையும்... வேற மாதிரி இருக்கும்... இருக்கணும்... நான் நம்பிக்கைத் துரோகியுமில்ல... நிச்சயம் ஒரு நல்ல செய்தி வீடு தேடி வரும்... ஆபீஸுக்கு வாரத மட்டும் நிறுத்திடாதே... ஆபீஸ்ல நான் அதிகாரியில்லே... நீ பெருக்குறவள் இல்லே... நான் மனுஷன்... நீ மனுஷி... சரி... போய்வாம்மா... சீக்கிரமா ஆபீஸ்ல போய் வேலையைப் பாரு..."

"அழ வைக்கிறியே ஸாரே... அழ வைக்கிறியே... ஒன் நெலமய நினைச்சா எனிக்கு மனசு கேட்க மாட்டேங்குதே..."

கங்கா, உதடுகளைக் கடித்தபடியே, அவனை உற்றுப் பார்த்தாள். அவளை தனக்குள் உள்வாங்குவது போல், அசைவற்ற கண்ணாடி போல் சலனமின்றி நின்ற மனோகர், எதிர்திசையில் நடந்தான். இலக்கு நோக்கிச் சென்றான். சங்கரியைப் பார்க்க வேண்டும். அவள் கண்களைத் துடைத்து விடவேண்டும். அவளுக்கு எது தேவையோ அதை ஈடேற்ற வேண்டும். அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மனோகர், நடையில் ஒரு மிடுக்கு... பார்வையில் ஒரு கம்பீரம்... கால்கள் தரையில் அழுந்தப் பதிந்தன. சாய்வாய் நடக்காமல் நேராய் நடந்தான். கெட்டதைப்போல் நல்லதும் தொடர்ந்து வரக்கூடியது... ஒரு நல்ல குணம் இன்னொரு நல்ல குணத்தைத் தொற்றிக் கொள்ளக் கூடியது. அழுகையும், சிரிப்பும் இப்படித்தான். இனிமேல் சிரிக்க முடிகிறதோ இல்லையோ, அழப்போவதில்லை. அழ வைக்கப் போவதும் இல்லை. எப்படி இருக்காளோ. எப்படி யெல்லாம் நடந்திருக்கேன். கங்காவை காப்பாற்றியதுபோல்

சங்கரியையும் காப்பாற்ற வேண்டும்... எல்லா வகையிலும் காப்பாற்ற வேண்டும்.

மனோகர், பெரு விரலைப் பார்த்தபடியே நடந்தான். அக்கம் பக்கம் எந்தப் பெண்ணும் இயங்குவது அறியாமல், நடந்து கொண்டிருந்தான். தன்னைத்தானே தரிசித்ததில் ஒரு பெருமிதம். இந்த உணர்வையும் குணத்தையும் ஆவியாக்காமல் மனதுக்குள்ளேயே கட்டிப்போட வேண்டும் என்ற வைராக்கியம்.

அந்த மருத்துவமனையின் நுழை வாயிலுக்குள் சென்றதும், மனோகரின் கால்கள் லேசாய்த் தளர்ந்தன. கால்களோடு சேர்ந்து தலையும் தாழ்ந்தது. எந்த முகத்தோட அவளைப் பார்ப்பது? தரையைப் பார்க்க மனமில்லாமல், அண்ணாந்து பார்த்தான். அந்தக் கட்டிடத்திற்கு மேலே தலைநீட்டிய அசோக மரங்களை அண்ணாந்து பார்த்தபடியே நடந்தான். ஏதோ ஒன்று மோதுவது கண்டு, கண்ணிறக்கினான். அவனிடம் முட்டுப்பட்ட கட்டுப் போட்ட மனிதர் ஒருவர், இயல்பாகச் சொல்வதுபோலவும், தன்னை நினைத்துக் கொண்டது போலவும் வலி அடக்கிப் பேசினார்...

"அண்ணாந்தும் பார்க்கப்படாது... குனிந்தும் நோக்கப்படாது... நேராப் பார்க்கணும். நேரா நடக்கணும். நம்மோட சிரமம், பிறத்தியாரைச் சிரமப்படுத்தக் கூடாது..."

மனோகர் நின்றான். தன்பாட்டுக்குப் போய் கொண்டிருந்த மனிதரின் முதுகைப் பார்த்தான் அந்த முதுகு புறமுதுகல்ல. அவனுக்கு ஒரு கேடயம்... அந்த வார்த்தைகள் வெறும் வார்த்தைகள் அல்ல. அசரீரி வார்த்தைகள்.

மனோகர், லிப்டில் ஏறி, மூன்றாவது மாடிக்கு வந்தான். அதுவே தரைத்தளம் மாதிரியான வரவேற்பறை. பார்வையாளர்கள் இருக்கைகள். அரசாங்க மருத்துவமனை காணாத பளபளப்பான தரை. இந்த மருத்துவமனை இவன் சக்திக்கு அப்பால் பட்டதுதான். போலீஸ் வழக்கு வம்பு வரக்கூடாது என்பதற்காக, தெரிந்தவர் ஒருவர் மூலம் கிடைத்த இடம்.

சங்கரியின் அறைக்கு முன்னால் நாலு பேர் அம்மா, அக்கா, மாமனார், மாமியார் அக்கா, அவ்வப்போது பேசுகிறாள். அம்மாவின் கை வீச்சுக்களுக்கிடையே முகமிட்டு, அவளுக்குச் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ பேசுகிறாள் மாமனார், தலையை ஒருச்சாய்த்து நிற்கிறார் மாமியார் இரண்டு கைகளையும் தலையில் குவித்துக்கொண்டு தடுமாறுகிறாள்

இந்த சொர்ணம்மா அவர்கள் வந்ததும் பயந்து போனவள்தான். போலீஸ்ல பிடிச்சுக் கொடுத்திடாதீங்கன்னு கெஞ்சப் போனவள்தான். ஆனால் சம்பந்திகள் 'என் மகள் தெரிஞ்சும் தெரியாம ஏதாவது செய்திருந்தால், நீங்கதான் பெரிய மனசு பண்ணி மன்னிக்கணும்.' என்று அழுதபோது, அவளது பயம், பயமுறுத்தலானது. கடந்த மூன்று நாட்களில் அவள் எகிறல் மூன்று மடங்காகி, முப்பரிமாணம் பெற்றது. மனோகர் பின்னால் நிற்பதை அந்த நால்வருமே கவனிக்கவில்லை. நாயகியான சொர்ணம்மா, சுடச்சுடக் கொடுத்தாள்.

"இன்னியோட எங்க பொறுப்புத் தொலைஞ்சது. நீங்க ஆயிரம் சொன்னாலும் கேட்கப் போறதாய் இல்லை... இனிமேல் நீங்க யாரோ... நாங்க யாரோ... ஊருக்குக் கூட்டிப் போகணுமுன்னாலும் கூட்டிப் போங்க... இங்கேயே வச்சு அழகு பார்க்கணுமுன்னாலும் பாருங்க... ஏய்... காந்தாமணி... புறப்படு..."

"அண்ணி! அப்படியெல்லாம், பேசாதீங்க... நாங்க எந்த முகத்தோட அவளக் கூட்டிட்டுப் போவோம்...?"

'சும்மாச் சும்மா பினாத்தாதே... எங்கேயாவது... பெண்டாட்டி, புருஷன அடிப்பாளா...? இவள் அடிச்சிட்டாளே... இவளைச் சேர்த்தால்... ஒருநாள் ராத்திரியிலே என் மகனைக் கொலை செய்ய மாட்டாள் என்கிறதுக்கு என்ன நிச்சயம்...?"

"எம்மா... என்ன இதுல்லாம்..."

மனோகர், ஓங்கிக் கத்தினான்... நால்வரும் திரும்பினார்கள். கண்களில் நீர் கோர்த்த மாமியாரையும், யோகி போல் கைகட்டி நின்ற மாமனாரையும் மாறி மாறிப் பார்த்தான். மாமியார் அவனைப் பார்த்துவிட்டு, இயல்பிலேயே ஒடுங்கிப்போன உடம்பை ஒடுக்கினாள். மாமனார், அவன் கையைப் பிடித்து தேக்கி வைத்த உணர்வுகளைத் திரவமாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். இருவரும் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள். குழந்தைகளோடுப் பழகிப் பழகி குழந்தையானவர்கள். மாமியார், மருமகனைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டாள். அம்மாவைப் போல் அவன் திட்டி விடக்கூடாதே என்கிற பயம். அவள் உடம்பு ஆடியது. சரணாகதியாய் ஆடியது. கும்பிட்ட கையை எடுக்காமலே மருமகனைப் பார்த்து மன்றாடினாள்.

"அவள் நடந்துக்கிட்டது தப்புத்தான் மாப்பிள்ளே. எங்க குடியைக் கெடுக்கிறதுக்கின்னே பிறந்திருக்காள்... ஒரே பெண்ணாச்சேன்னு தலையிலே தட்டி வளர்க்காமப் போயிட்டோம். எங்க வீட்ல இருந்தது மாதிரியே ஒங்க வீட்லயும் இருப்பான்னு நினைத்தோம்... இப்படி ஒங்களைச் சீரழிப்பான்னு நினைக்கலே... ஏங்கி ஏங்கி அழுகிறா மாப்பிள்ளே. நீங்களே சொல்லுங்க அவளை ஊருக்குக் கூட்டிட்டுப்

போக முடியுமா? அப்படிப் போய் உயிரோடதான் இருக்க முடியுமா- ஒரே ஒரு சந்தர்ப்பம் அவளுக்குக் கொடுங்க மாப்பிள்ளே- அப்பக்கூட நீங்க அவளை அடிப்பீங்களோ... பிடிப்பீங்களோ... அவள் ஒங்க பொருளு- அவளை என்ன வேணுமின்னாலும் செய்யுங்க- நாங்க ஏன்னு கேட்கமாட்டோம்-"

சம்மந்தியம்மா பேசி முடிப்பது வரைக்கும் பொறுமை காட்ட முடியாமல் சொர்ணம்மா, கைகளை ஆட்டியபோது, காந்தாமணி, அவற்றைப் பிடித்துக் கொண்டாள். இப்போது அந்தம்மா கைகளை நீட்டாமலேயே கத்தினாள்...

"இந்த மாதிரி பசப்பற வேலையெல்லாம் வேண்டாம்- என் மகனை அவ ராவோட ராவா குத்திக் கொலை பண்ணணும்- அப்பப்பா- என்ன நல்லெண்ணம் உனக்கு-"

சொர்ணம்மா, மகளிடமிருந்து கையை எடுத்து விட்டு, அங்குமிங்குமாய் ஆடிக் காட்டியபோது, மனோகர், அம்மாவை முறைத்தபடியே கத்தப் போனான். அதற்குள் வாசல் கதவு திறக்கப்பட்டது. சங்கரியை எட்டிப் பார்க்கப்போன மனோகரின் கண்களை இரண்டு உருவங்கள் மறைத்தன. ஸ்டெதஸ்கோப் மனிதருக்கு ஐம்பது வயதிருக்கலாம். கூட நின்ற பெண்ணுக்கு இருபத்தேழு வயதிருக்கலாம்.... டாக்டர் கத்தினார்...

"இப்படி சந்தைக்கூட்டம் போட்டால் எப்படி...? ஏம்மா நீ இங்க வரக்கூடாதுன்னு சொன்னேனே... எதுக்காக வந்தே..."

"காசு செலவளிக்கிறவள் நான். வரப்படாதா..."

மனோகர் 'எம்மா' என்று ஒரு அதட்டல் போட்டுவிட்டு, டாக்டரைக் கேட்டான்...

"இப்போ என் ஒய்புக்கு எப்படி இருக்கு டாக்டர்..."

"கன்கிராசுலேஷன் மிஸ்டர் மனோகர்...."

மனோகர் அந்த இளம் பெண்ணை புரியாமல் பார்த்தான். அவள் தனது பாராட்டுக்கு விளக்கமளித்தாள்.

'அந்தம்மா, ஒங்க பெண்டாட்டி, என்கிற நினைப்பு வந்திருக்கே... இப்போவாவது பார்க்கணுங்கிற எண்ணம் வந்திருக்கே... அதுக்குத்தான் பாராட்டினேன்...'

அந்தப் பெண்ணின் கோபத்தைச் சந்திக்க முடியாமல், மனோகர், டாக்டரிடம் அடைக்கலமானான்.

"அவளுக்கு எப்படி இருக்கு டாக்டர்..."

"நல்லாத்தான் குணமாகி வந்தாங்க... ஆனால் இந்தம்மா... ஓங்கம்மாவா- நல்ல அம்மா- இவங்க, இந்த ரெண்டுபேரையும் படுத்தின பாட்டுல- பாவம் ஓங்க மனைவிக்கு பழையபடியும் கைகால் வெட்டிட்டு-"

டாக்டர் மேற்கொண்டு பேசமுடியாமல் வாயடைத்துப் போனார். மனோகரின் மாமியாரும், மாமனாரும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு விம்மினார்கள். அதுவும் நல்லதாய்ப் போயிற்று. தனித்தனியாய் அழுதிருந்தால் கீழே விழுந்திருப்பார்கள். ஒருவரையொருவர் எதுவும் பிடிபடாமல், பிடித்துக் கொண்டார்கள். ஒருவர் தோளில் இன்னொருவர் முகம்போட்டு முதுகுகளை ஈரமாக்கினார்கள்... தலைகள் இறங்கி முண்டமான இரு உடம்புகளாய் ஆகிப்போனார்கள்.

மனோகர், பொங்கிய கோபத்தை திசை திருப்பினான். எதிர்மறை உணர்வை ஆக்கமாக்கினான். அம்மாவின் தோளில் கை போட்டபடியே அவள் முகத்தைத் தூக்கிப்பிடித்து நெகிழ்ந்து பேசினான்...

"எம்மா... ஒன் மகளாயிருந்தால், இப்படிப் பேசுவியா...? இவங்க ஒன் தம்பி தங்கச்சியாயிருந்தால், இப்படி நோகடிப்பியா? ஒன்னையும் என்னையும் நம்பித்தானேம்மா சங்கரியை ஒப்படைத்தாங்க. ஏம்மா இந்த மாதிரி எல்லாரையும் நோகடிக்கிறே... அக்காவுக்கு, சங்கரி மாதிரி வெட்டு வந்திருந்தால், நீ அவள் புருஷனை விட்டு வைப்பியா... என் பெண்டாட்டியையும் ஒன் மகளா நெனச்சுப் பாரும்மா..."

சொர்ணம்மா, கண்களால் அரைவட்டம் போட்டாள். விழி பிதுங்கப் பார்த்தாள். பிறகு முகத்தை மூடிக் கொண்டாள்.... உச்சிமுதல் பாதம்வரை குலுங்கியது. காந்தாமணி அவள் கைகளைப் பிடித்தபோது, அம்மாக்காரி அவள் தலையில் முகம்போட்டு மருவினாள்... ஊமை அழுகையாய் அழுதாள். மகன் அப்படிப் பேசிவிட்டானே என்று அழுகிறாளா.... மருமகள் பழையபடியும் வீட்டுக்கு வருவது நிச்சயம் என்று நினைத்து அழுகிறாளா... அல்லது அன்று முதல் இன்றுவரை தான் நடந்து கொண்டதைப் பற்றி குற்ற உணர்வில் அழுகிறாளா... குற்றஞ்சாட்டி அழுகிறாளா... அந்த சொர்ணமாவுக்கே அது தெரியாது.

இதற்குள் டாக்டர் அதட்டுவதுபோல் பேசினார்...

'இடத்தை காலிபண்ணுங்கம்மா- வேடிக்கை பார்க்காங்க பாரு- இப்போ அந்தப் பொண்ணுக்கு டைசிபாம் ஊசி போட்டுட்டு, வந்திருக்கோம்- இன்னும் நாலுமணி நேரம் அரை மயக்கத்திலேயே இருப்பாங்க- அப்பா அம்மா மட்டும் இங்கேயே இருக்கட்டும்-'

'நானும் இருக்கேன் டாக்டர்...'

'நோ மிஸ்டர் மனோகர்... ஸாரி... இன்னும் ஒரு வாரத்திற்கு நீங்க அவளைப் பார்க்கக்கூடாது... நாங்க ஒங்க ஒய்பை அப்ஸர்வேஷன்ல வச்சிருக்கோம்... எப்போ பார்க்கச் சொல்றோமோ... அப்பப் பார்த்தால் போதும்... இந்தாம்மா... பெரியம்மா... வீட்டுக்குப்போய் எவ்வளவு அழணுமோ... அவ்வளவு அழு... இனிமேலாவது யாரையும் அழவைக்காதே... இல்லாட்டி ஒனக்கும்... மிஸ்டர் மனோகர்... என்னோட வாங்க...'

அந்த அறைக்குள் முண்டியடித்த சொர்ணம்மாவை, காந்தாமணி இழுத்துக்கொண்டு போனாள். மனோகர், மாமனாரின், மடித்து வைத்த கரங்களில், லேசாய் பிடித்து அழுத்திவிட்டு, டாக்டரோடு போனான். கூடவே அவனைச் சாடிய அந்தப் பெண்ணும் போனாள்.

அந்த அறையில் சுழல் நாற்காலியில் மேலே கதிர் விரிந்த சூரியப் படம். எதிர்ச் சுவரில் வட்டங்களை உள்ளடக்கிய பெருவட்டப் படம். அதன் மையத்தில் ஒரு புள்ளி. அதற்குக் கீழே மெத்தையிட்ட கட்டில்.

"இப்போ என் ஒய்புக்கு எப்படி இருக்கு டாக்டர்..."

"ஒய்ப் இருக்கட்டும்... ஒங்களுக்கு இப்ப எப்படி இருக்குது... நோயின்னு அனுமானித்தால், அது ஒங்களுக்குத்தான். ஒங்க ஒய்புக்கு இருக்கிறது அதோட அறிகுறிகள்... ஒங்களுக்கு மனக்காய்ச்சல்... அந்தப் பெண்ணுக்கு நெறி கட்டியிருக்கு.... அந்தப் பொண்ணு கிட்டே பேசிப் பார்த்தோம்... ஒங்க செக்ஸ்லைப் பற்றி சொன்னாங்க... ஏன் அப்படிப் பார்க்கறீங்க... டாக்டர்களான நாங்க தாயுமானவங்க... ஒடம்போட நிர்வாணம் மட்டுமில்லே... மனசோட நிர்வாணமும் எங்களுக்குத்தான் தெரியும்..."

அந்தப் பெண், இடைமறித்தாள். சூரியகாந்திப் பூ நிறம். அதன் விதை போலவே கன்னத்தில் ஒரு மச்சம்.

"ஆனால் உங்களுக்கு இவ்வளவு ஆணாதிக்கம் கூடாது சார். அந்த ஆர்டரை எப்படி சார் கிழிச்சுப் போடலாம்?. பெண்டாட்டின்னா அடிமையா. பக்கத்து வீட்டுக்காரன் ஏடாகூடமாப் பேசினான்னு அவனக் கேட்காத கேள்வியை கேட்டிட்டு, திரும்பி வரும்போது, நீங்க ஒரு கணவன், கேட்கக்கூடாத கேள்வியைக் கேட்கலாமா? ஒரு கேள்வி முறை இல்லையா? கோளாறை ஒங்ககிட்ட வச்சுக்கிட்டு குறையை அவங்ககிட்ட கண்டா என்ன அர்த்தம்? கற்புப் பெருமிதத்தோட வந்த மனைவியை. நீங்களே மானசீகமா, அதே மனிதனை கற்பழிக்கச் செய்தீங்க... ஆனாலும்

ஆண்மைக்குறைவு உள்ளவங்களுடைய நடத்தையைப் பற்றி விளக்கி, நீங்க தற்கொலை செய்தாலும் செய்துக்கலாம் என்று அவங்ககிட்டச் சொன்னபோது, அந்தம்மா, தனக்காக அழுகிறத நிறுத்திட்டு, உங்களுக்காக அழுகிறாங்க சார். இதுதான், இந்த நாட்டுப் பெண்களோட பண்பாடோ. அல்லது சுயத்தைத் தொலைக்கும் சீரழிவோ.'

டாக்டர். சந்திரசேகரன், அந்தப் பெண்ணை கண்களால் அடக்கினாரோ கெஞ்சினாரோ. அவள் அடங்கினாள்.

"ஏம்மா.... நீ வந்தது கவுன்சிலிங் செய்யுறதுக்கு... வக்கீலா மாறினால் எப்படி....? சங்கரிகிட்டேயும் கோளாறு இல்லாம இல்லை... பக்கத்து வீட்டுக்காரன் ஒரு மாதிரிப் பார்த்ததை... அது தனக்கு பிடிக்கல என்கிறதை... இவர்கிட்ட பகிரங்கமா சொல்லியிருக்கணும்... செக்ஸ் லைப் பற்றி, படித்த பெண்ணுக்கு தெரிந்திருக்கணும்... இவரு ஆயத்தமா நெருங்கும் போதெல்லாம், அந்தம்மா, தெரிந்தோ தெரியாமலோ, சில வார்த்தைகளைக் கொட்டியிருக்காங்க... ஆனாலும், மிஸ்டர் மனோகர்! கூட்டிக் கழிச்சுப் பார்த்தால், தப்பு ஒங்க மேல தொண்ணூறு சதவீதம்... மீதி பத்து சதவீதம், அந்த பொண்ணு மேல.."

"நான் என்ன செய்யனும் டாக்டர்...? நீங்க என்ன சொன்னாலும் கட்டுப்படுறேன்... டாக்டர்..."

"நாம் பிரச்சினையை நேருக்கு நேராய்ச் சந்திப்போமா..? இந்தப் பிரச்சினைக்கு முழுக்காரணமே, உங்களோட ஆண்மைக் குறைவுதான்- அந்தக் குறைவு மனோரீதியாலானதா? அல்லது ஆர்கானிக் அதாவது உடல் ரீதியாலானதா? என்கிறதை இனிமேல்தான் கண்டுபிடிக்கணும்- மனோரீதியா கண்டுபிடிக்க உங்க மனசுல என்னல்லாம் உறுத்துதோ, அதை எல்லாம் எழுதுங்க- எத்தனை பக்கமானாலும் சரி- எழுதுறதை என்கிட்ட கொடுங்க- அதோட சில பிஸிகல் டெஸ்டுகளுக்கும் எழுதிக் கொடுக்கிறேன்- இரண்டையும் வைத்து ஒரு முடிவுக்கு வரலாம்."

"நல்ல முடிவு கிடைக்குமா டாக்டர்...?"

"இப்போதைக்கு நான் எதுவும் சொல்ல முடியாது... நீங்க உண்மையை - அது எதுவா இருந்தாலும் சந்திக்கத் தயாராகணும்..."

# 12

உள்ளே வந்து உட்காராமல் நின்ற மனோகரை, டாக்டர் சந்திரசேகரன் ஆச்சரியமாகப் பார்த்தார். சொன்னபடி, எழுதிக் கொடுத்ததுபோல், குறிப்பிட்ட நாளில், குறித்த நேரத்தில் வந்துவிட்டான். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதும், நேரம் தவறாமையும் நல்ல பழக்கங்கள் மட்டுமல்ல... பண்பாடுங்கூட..... தன்னை மையமாக வைத்துச் சுழலாமல், பிறர் நலத்தையும் பேணும் ஆரோக்கியமான அணுகுமுறை. இதுவே மனநலத்திற்கு முக்கியமான காரணி... இவன் தேறிடுவான்.

"உட்காருங்க மிஸ்டர் மனோகர்! ஏன் கிழவர் மாதிரி சாய்ந்து இருக்கீங்க? நிமிர்ந்து, நேரா உட்காருங்க... மனம் எப்படி புற வெளிப்பாடுகளைத் தோற்றுவிக்குதோ... அப்படி புற வெளிப்பாடுகளும் அகத்தை செப்பனிடும்.".

மனோகர், நாற்காலியின் பின்பக்கம் சாய்த்துப் போட்ட முதுகை நிமிர்த்தினான். அதன் சட்டங்களில் கிடந்த கரங்களைத் தூக்கி, வயிற்றுக்கு அணையாய்ப் போட்டான். இதற்குள் டாக்டர், ரேக்கில் இருந்து ஒரு பைலை எடுத்தார். அதன் இரண்டு நீல உறைகளை அகலப்படுத்தி, அவற்றின் இடைவெளிக்குள் கிடந்த காகிதங்களைப் புரட்டினார். அத்தனையும் மனோகர் எழுதிக் கொடுத்தவை. அவற்றை, அவர் ஆழ்ந்து படித்திருக்கிறார் என்பதற்கு அத்தாட்சியாக, ஆங்காங்கே பச்சைக் கோடுகள் போடப் பட்டிருந்தன. பக்கவாட்டில் சின்னச் சின்ன குறிப்புக்கள்.

டாக்டர் சந்திரசேகரன், அவனை ஏறிட்டுப் பார்த்தார். அவனது நேர் கொண்ட தோரணையைப் பார்த்து, சுயச் சிரிப்பாய்ச் சிரித்து விட்டு, நாற்காலியில் படுக்க வைத்த தனது உடம்பை நிமிர்த்தினார். பிறகு, காகிதக் கத்தைகளுக்குள் கண்களைப் படர விட்டபடியே கேட்டார்.

"நீங்க எழுத்தாளரா.. மனோகர்?"

"நான் கெட்ட கேட்டுக்கு..."

"லுக் மிஸ்டர் மனோகர்! உலகில் உள்ள சகல உயிரினங்களுக்கும், நாம் அனுதாபப்படலாம்; படணும் ஆனால், நமக்கு நாமே அனுதாபப்படுகிற ஒரு சுய அனுதாபம், ஒரு மனங்கொல்லி நோய். நான் நிசமாத்தான் சொன்னேன். மனோயியல் நிபுணர்கள் நல்லதுக்காக நடிக்கிறவர்கள் என்று ஒரு கருத்து இருக்குது... பாவலா செய்யுறவங்க என்றும் ஒரு எண்ணம் இருக்குது.'

இது தப்பான கருத்து. சைக்கியாட்ரிஸ்டுகளிலும் மெண்டல் கேஸ்கள் உண்டு. ஆனால், பொய்யர்கள் கிடையாது. அதனால, நான் சொல்வதை நீங்க நம்பணும்... ஒங்களுக்கு எழுத்து ஒரு கிப்டா கிடைத்திருக்கு. முயற்சி செய்தால் நீங்க மிகச் சிறந்த எழுத்தாளராய் மாறலாம். மனம் வைத்தால், அப்படி மாற முடியும். கெட்டுப்போன அருணகிரிநாதர்தான் திருப்புகழ் தந்தார். மனநோய் பீடித்த சார்லஸ் டிக்கன்ஸ்தான், டேல்ஸ் ஆப் டூ சிட்டிஸ், பிக்விக் பேப்பர்ஸ் முதலிய அற்புதப் படைப்புக்களைத் தந்தார். அதனால, கெட்டுப் போனதை, அல்லது மன மாற்றத்தைப் ஒரு அனுபவமாய் எடுத்து, நீங்க அதை எழுத்தில் ஆரோக்கியமாய் மாற்றலாம். நான் சொல்வது சரியா எழுத்தாளரே...."

மனோகர் மனதில் ஒரு குறுகுறுப்பு. சின்னதாய் ஒரு கம்பீரம். புன்னகைத்தான். டாக்டர் சந்திரசேகர் தொடர்ந்தார்.

"நான், சைக்கியாட்ரிஸ்ட் யூரலாஜிஸ்ட்... செக்ஸாலஜிஸ்ட்... அதோடு நல்ல வாசகன். நீங்க எழுதியதை, ஒரு நிபுணராய் படிக்கத் துவங்கி, ஒரு வாசகனாய் முடித்தேன். உதாரணத்திற்கு, நீங்க எழுதிய முன்னுரையை வாசித்துக் காட்டுறேன் பாருங்க.. இதை நீங்க எழுதியதாய் அனுமானிக்காமல், மனதை உதறிப் போட்டுவிட்டு, ரசிகனாய் கேட்கணும்."

டாக்டர். சந்திரசேகரன், அவன் எழுதிய முதல் பக்கத்தை படிக்கத் துவங்கினார்.

"தமிழகத்தில் பொதுவாக பலவகைக் கிராமங்கள் உண்டு. முதலாவது, சமபலத்தில் ஆன சாதிகளைக் கொண்ட கிராமம் இங்கே யானைக்குப் புலியிடம் பயம். புலிக்கு யானையிடம் பயம் என்பது மாதிரி பரஸ்பர பயமும் மரியாதையும் கொண்ட இந்த சாதியினர் பொதுவாய் அடித்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால், தப்பித் தவறி சாதிச் சண்டை வந்தாலோ, அது தமிழகப்போர் மாதிரி ஆகிவிடும். இரண்டாவது வகைக் கிராமம், சிறுபாண்மைச் சாதியும், பெரும்பான்மைச் சாதியும் கொண்டது. இந்த சாதியினர் அடக்கியும், அடங்கியும் போவார்கள். ஆனால், அடக்கப்படுவது அத்துமீறல் ஆகும்போது, இதர கிராமங்களில் பெரும்பான்மையாய் இருக்கும் இந்தக் கிராமத்தில் சிறுபான்மைச் சாதியினர், தம் சாதியின் பலத்தோடு ஆதிக்க சாதியை எதிர்த்துப் பொங்கி எழுவார்கள். இது மாவட்டப் போராக மாறும் மூன்றாவது வகைக் கிராமம், ஒரே ஜாதியைக் கொண்டது. இங்கே சாதிச் சண்டைக்குப் பதிலாக எந்தக் குடும்பம், பெரிய குடும்பம் என்ற பங்காளிச் சண்டைகள். எந்தத் தெரு, பெரிய தெரு என்ற வீதிச் சண்டை,கள்.

கட்சிச் சண்டைகள், கோவில் சண்டைகள் என்று பலப் பல சண்டைகள் நடக்கும்."

"இதே சாதியம், மதங்களுக்கும் பொருந்தும். இவையும் மூன்று வகை. மூன்றும் மூன்றும் சேர்ந்தும், கிளை பிரிந்தும், யாருக்கு யாருடன் தகராறு என்று கண்டறிய முடியாத பெரும் போர்களைத் தோற்றுவிப்பதும் உண்டு. அதாவது, இரண்டாவது மூன்றில் ஒவ்வொன்றும், முதலாவது மூன்றில் எதில் சேர்கிறது? ஏன் சேர்கிறது? என்பது சேர்கிறவர்களுக்கும், சேர்த்துக் கொள்கிறவர்களுக்கும் புரியாது. சாதி - மதக் கலவரங்களில், இதுவே பெருங் கலவரமாகும். ஆனாலும், எப்படியோ, துண்டுபட்ட ஊர்கள் ஒன்றுபடும். ஆனாலும், இந்தச் சண்டைகள் ஜலதோசம் மாதிரி, சட்ட ஒழுங்கு நடவடிக்கையால் ஒரு வாரத்திலும், போலீஸ் தலையீடு இல்லாமல் ஏழு நாட்களிலும் தீர்ந்து போகும். 'மறப்போம்; மன்னிப்போம்.' என்ற தத்துவம், கொடி கட்டிப் பறக்கும்."

"இந்த ஆறுவகைக் கிராமங்களிலும், ஒரு வகை வீடோ அல்லது வீட்டுக் குவியல்களோ இருக்கும். இதற்கு 'ஒத்தை வீடு' என்று பெயர். இதில் இருப்பவர்களுக்கு 'ஒத்தை வீட்டுக்காரன்' என்ற பட்டப்பெயர். இந்தக் குடும்பத்தினரை, வந்தேறிகள் அல்லது வந்தட்டிகள் என்பார்கள். இந்த ஒத்தை வீட்டுக்காரக் குடும்பத்துடன் சண்டை என்று வந்தால், சொல்லுக்குச் சொல்... 'ஒத்தை வீட்டுப் பயலே... ஒனக்கா இவ்வளவு திமிரு...' என்கிற வசைச் சொல் வந்தபடியே இருக்கும். இந்த ஒத்தை வீட்டுக்குப் பங்காளி பலம் கிடையாது. பண பலமும் கிடையாது. ஓட்டுக்கள் குறைவு என்பதால், உள்ளூர் அரசியல்வாதிகளும் சீண்டுவதில்லை."

"இந்த வகைக் குடும்பத்தை, சொந்த சாதிக்காரனும் அடிப்பான்; எந்த சாதிக்காரனும் அடிப்பான். 'எங்க வீட்டு நாயை எப்படி அடிக்கலாம்' என்று கேட்கும் ஊரில், இந்த ஒத்தை குடும்பத்திற்கு நாதி கிடையாது. இந்தக் குடும்பத்தினரை, யார் வேண்டுமானாலும் அடிக்கலாம். இவர்கள் சாதி இருந்தும், தள்ளாமல் தள்ளி வைக்கப்பட்டவர்கள். சமயம் இவர்களுக்குச் சமயத்தில் உதவாது. ஆனாலும், இப்படிப்பட்ட ஒத்தை வீடுகளில் சிலர், பெருத்த பங்காளிக் குடும்பத்தில் பெண் கொடுத்து, பாதுகாப்பைத் தேடிக் கொள்வார்கள். அத்தகைய பலமான பங்காளிக் குடும்பமும், இந்த ஒத்தை வீட்டில் பெண் எடுக்குமே தவிர, பெண் கொடுக்காது."

"இப்படிப்பட்ட பின்னணியில், எங்கள் வீடு ஒத்தைவீடு. இத்தகைய சூழலில் ஒதுங்கிப் போக வேண்டிய என் அம்ஹாவோ, கிராமத்து யதார்த்தம் புரியாத வாயாடி. பட்டறிவு இல்லாத பாமரப்

பெண். வெறும் உணர்வுகளால் ஆளப்பட்டவள். கெட்ட கெட்ட வார்த்தைகளை வாங்கிக் கொள்வதிலும், அவற்றைத் திரும்பிப் கொடுப்பதிலும் வல்லவள். எத்தனையோ பெண்களிடம், சில சமயம் ஆண்களிடமும் உதைபட்டுப் போனவள். கீழே விழுந்து கிடக்கும்போதும், எதிரிகள் முகத்தில் காலால் மண் வாரித் தூத்துவாள். அடிபட்டால் வலிக்கும் என்பதுதான் அவளுக்குத் தெரியும். அவமானமாயிற்றே என்பதை அறியாதவள்”

“ஒரு தடவை, வழக்கம்போல் ஒரு சண்டை அம்மாவின் வாய்க்கு ஈடு கொடுக்க முடியாத ஒரு தடியன், அவன் பேர் ராமசாமி. எங்கம்மாவைப் பார்த்து, ‘நேத்துக்கூட பத்து ரூபா கொடுத்துட்டு ஒன்கிட்டே படுத்தேனடி...” என்று அபாண்டமாய்ச் சொன்னான். உடனே எங்கம்மா, அவனுடைய மனைவியின் ‘வைப்பாளன்களை’ பட்டியல் போட்டுச் சொன்னாள் அவ்வளவுதான். ராமசாமி, அம்மாவை மல்லாக்கத் தள்ளினான். அவன் பெண்டு பிள்ளைகள், அம்மாவின் கால், கைகளைப் பிடித்துக் கொள்ள, ராமசாமி, ஒரு கூர்மையான கல்லை எடுத்து, அம்மாவின் நெற்றியில் இடித்தான். அம்மாவுக்கு மயக்கம் வரும்வரை குத்தினான். என் அம்மாவின் நெற்றியில் இப்போதுகூட அது பள்ளத்தாக்காய் கிடக்கிறது. அதைப் பார்க்கும் போதெல்லாம் ... இப்போதுகூட அந்தப் பள்ளத்தில் ஒரு கோரக் காட்சி எனக்குத் தென்படும். அப்போது எனக்கு வயது பன்னிரண்டு இருக்கலாம். ராமசாமியின் பிடறியில் அடிக்கப் போனேன். உடனே, அவன் பெரிய மகன் என்னைக் கீழே தள்ளி, வாயில் மண்ணைப் போட்டு, கை முஷ்டியால் இடித்தான். இந்தச் சமயத்தில், அப்பா வந்தார். பரமசாது. “என்னை அடிக்கிறதப் பார்த்துட்டு நிற்கிறியே... நீயும் ஒரு ஆம்பிளையா?” என்று அம்மாவிடம் வாங்கிக் கட்டும் பரம சாது. அதோடு பூஞ்சையான ஒல்லி உடம்பு.”

“ஆனாலும், அந்தச் சாதுக்குக் காடு கொள்ளாச் சினம் பொங்கியது. என் மார்பில் உட்கார்ந்திருந்த ராமசாமியின் மகனை மல்லாக்கத் தள்ளினார். ஒரு கல்லைத் தூக்கி, அம்மாவை ரத்தக் காடாக்கிய ராமசாமியின் மேல் போடப் போனார். அதற்குள், அந்த ஒற்றை மனிதர் அடிபட்டதே மிச்சம். பத்துப் பதினைந்து பேருக்கு மத்தியில் சுருண்டு விழுந்தார். ரத்தமும் சதையுமாய் மயங்கிக் கிடந்தார். அப்போதுதான், புல்லுக்கட்டுடன் வந்த அக்கா காந்தாமணி, ஒப்பாரியுடன், வாயிலும் வயிற்றிலும் அடித்தபடியே, ஐந்து கிலோமீட்டர் தொலைவு போலீஸ் நிலையத்திற்குப் போனாள் போலீஸ் வந்தது. கோபத்தோடு வந்தவர்கள், ‘குணத்தோடு’ போனது. ராமசாமிக் குடும்பம் கொடுத்த அடியில் ‘வர்மம்’ ஏற்பட்டு வீட்டுக்குள்ளேயே முடங்கிப் போன அப்பா, ஒரு வருடத்தில் ஒரேயடியாய் முடங்கி விட்டார்.’

டாக்டர் சந்திரசேகர், மேற்கொண்டு படிக்க முடியாமல், மனோகரை நிமிர்ந்து பார்த்தார். அவர் மனதில், அவரே முன்னால் சொன்ன இலக்கிய நயமும், வாசிப்புச் சுகமும் மரித்துப் போயின. மரித்தவை, மனித நேயமாய் உயிர் பெற்றன. அவர், மனோகரின் தோளைத் தட்டிக் கொடுத்தார். அவனோ, தட்டப்பட்டது தெரியாமல் தலை தாழ்த்திக் கிடந்தான். அந்த மொஸைக் தரை, சாணம் பூசிய வெறுந்தரையானது. மேல் தளம் பனையோலைகள் பதித்த கூரையாகிறது. 'அப்பா செத்துக் கிடக்கிறார். வெளியே அம்மா, ஊரைத் தூற்றி மண்வாரிப் போடுகிறாள். சிலர் திட்டுகிறார்கள். ஊர் வழியில் பிணம் போவாது என்று அவளை மிரட்டுகிறார்கள். பாவாடை-தாவணி அக்கா, அவன் தலையில் முகம் போட்டு விம்முகிறாள். ஈரப் பசையில், இருவர் விழிகளும் ஒட்டிக் கொள்கின்றன.'

விநாடிகள், நிமிடங்களாய் மாறுகின்றன. எப்படிப் பேச்சைத் துவக்குவது என்று யோசித்துக் கொண்டிருந்த டாக்டருக்கு, மனோகரே இறுதியில் அடியெடுத்துக் கொடுக்கிறான்.

"அப்போதான்... அப்படின்னனா... இப்பவும் இப்படி.... பட்ட காலுலயே படும்; கெட்ட குடியே கெடும் மாதிரி ஆகிட்டு."

டாக்டர், அவன் பேச்சைப் பிடித்துக் கொள்கிறார்.

"அப்போ... அப்படி இருந்ததால்தான், இப்போ இப்படி இருக்குது. ஆமாப்பா.. ஒன்னோட பிரச்சினை, அடிப்படையில் செக்ஸ் பிரச்சினை அல்ல. ஆழ் மனதில் வேருன்றிய பாதுகாப்பின்மை உணர்வு. அதுதான பீலிங் ஆப் இன் செக்யூரிட்டி. வெளி மனதில் பாலியல் இயலாமை. வெளிப் ப்ாடுகளாய் வேடம் போடுது. இந்த அடிமனப் பெரும் பயத்தை, நீக்கினால் தவிர, செக்ஸ் இயலாமையைப் போக்க முடியாது. ஒங்க அம்மா, சிறுமைப் படுத்தப்பட்ட போதெல்லாம் சிறுவனான நீ, எதிரிகளை அடிக்கக் கைகளைத் தூக்கி இருக்கே... பற்களைத் கடித்திருகிகே. பெரியவனாகாமல், போயிட்டமேன்னு வருத்தப் பட்டிருக்கே. இயலாமையில் துடித்திருக்கே. கற்களைத் தூக்கி வைத்துக்கொண்டு, அவற்றை எறிந்தால் என்ன ஆவோமோ என்று நினைத்து சும்மா இருந்திருக்கே"

"பன்னிரண்டு வயதில், அம்மா தாக்கப்பட்ட போது, நீயும் ஒரு பெரிய பையனால் தாக்கப்பட்டு, அவனை மாதிரி பெரியவனாய் ஆகாமல், போனதுக்கு வருத்தப்பட்டே.... சரியா?" ஆனாலும், யதார்த்தத்தின் சூடு தாங்காமல், பேன்டஸி எனப்படும் ஒரு கற்பனை உலகில் உலவி இருக்கே. எதிரிகளின் பெண்கள் ஒனக்கு ஆறுதல் சொல்வது போல் ஒரு கற்பனை. அவர்கள் ஒன் முகத்தோடு

முகம் போட்டு முதுகைத் தட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஒன் மேலே விழும் ஒவ்வொரு பெண்ணும் படிப்படியாய் கீழே போனாள். பாயில் விழுந்த பாவை, ஒனக்கு மெத்தையாகிறாள். அப்போதெல்லாம், ஒன் விடலை உடம்பில் ஒரு இயக்கம்; ஒரு சுகம். விதவிதமான பெண்கள். பெரும்பாலும் உள்ளூர் எதிரிகளின் பெண்கள். இவர்கள் உன்னை அடிக்க வரும் அப்பன் மார்களுக்கு எதிராய் வெகுண்டு, உன் முன்பக்கத்தில் முதுகைப் போட்டு, அவரைக் கொல்லுமுன் என்னைக் கொல்லுங்கள்' என்று கேடயமாய்ச் சுகூளுரைத்தார்கள்."

"இப்படிப்பட்ட போலிக் கற்பனையும், நிசமான பாலியல் இயக்கமும் மெல்ல மெல்ல உங்களுக்கு ஒரு பழக்கமாகிறது. பழக்கம் வழக்கமாகி, அதுவே ஒரு போதை ஆகிறது. தெருச் சண்டைகள் நடக்கும்போதும், வரப்புகளை வெட்டி ஒன் வயலை ஆக்கிரமிப்புச் செய்த மிராசுதார்கள், ஒங்கம்மாவை சிரமப் படுத்தும்போதும், கல்லூரிப் படிப்பு சங்கடத்தைக் கொடுத்த போதும், இந்த பாலியல் பழக்கத்துடன் அடைக்கலம் ஆனாய்."

"சைக்கிளில் கல்லூரிக்குப் போகும் ஒன்னை, சின்னப் பிள்ளைகளில் இருந்து பெரிய பயல்கள் வரை, ஒன் கையில் கிடந்த கடிகாரத்தைச் சாக்காக்கி, 'ஓட்டைக் கடிகாரம்.. ஓட்டைக் கடிகாரம்.' என்று நையாண்டி செய்த போதெல்லாம், நீ மிரண்டே; துவண்டே; பெரிய ஆளாகாமல் போனோமே என்று துடித்துப் போனே. வீட்டுக்கு வந்ததும், பரிகாசிகளின் பெண்கள், ஒன் படுக்கை அறைக்கு வந்தார்கள். ஆரம்பத்தில் கஷ்டப்பட்டதால், சுய சேர்க்கையில் ஈடுபட்ட நீ, இறுதியில், அந்தச் சேர்க்கை களுக்காக கஷ்டப்பட விரும்பினே. அம்மா திட்டும்படி நடந்துக்கிட்டே. சின்னப் பசங்க பரிகசிக்கும்படி, அவர்கள் கண் முன்னாலேயே கடிகாரத்தைக் கழற்றி, 'கீ' கொடுத்தே அவர்கள் கிண்டலடிக்க அடிக்க, அவன் தமக்கைகள் உன் மானசீக காதலிகளாய் ஆனார்கள்."

மனோகர், தலை தானாய் தொங்கியது; முகம் வெளுத்தது; நிமிர்ந்த மேனி, சரிந்து கிடந்தது. டாக்டர், இப்போது சுருதி மாற்றிப் பேசினார்.

"ஒனக்கு வந்தது, எனக்கு வந்தாலும், நானும் அப்படித்தான் நடந்திருப்பேன். பொதுவாக, வாழ்க்கையில், தாங்க முடியாத கஷ்ட நஷ்டங்களையும், சிறுமைகளையும் அனுபவிப்பவர்கள், ஒன்று ஒன் தந்தையைப்போல், பரம சாதுவாய் ஆவார்கள். அல்லது ஒன் அம்மாவைப் போல் பயங்கரியாய் ஆவார்கள் ஆனாலும், ஒனக்குத் தீமையே நன்மையாகி விட்டது. படித்துப் படித்து நல்ல

வேலைக்குப் போய், குடும்பத்தோடு, ஊரை விட்டே, வேரோடும், வேரடி மண்ணோடும் போகவேண்டும் என்ற எண்ணம் ஒனக்கு ஏற்பட்டது. போதாக் குறைக்கு, பாவாடை தாவணியிலிருந்து சேலைக்கு வந்த ஒன் அக்கா, உள்ளூரிலேயே, பங்காளி பலமிக்க தேக்கன் குடும்பத்தில் நல்லவனும் வல்லவனுமான சௌரி முத்துவைக் காதலித்து, அவனையே திருமணம் செய்து கொண்ட பிறகு, உன் வாழ்க்கையில் ஒரு வாசனை வீசியது. ஒன் மச்சானே, உன் குடும்பத்தின் காவல் தெய்வமானார். ஒன்னை மோட்டார் பைக்கில் கொண்டு போய் கல்லூரி வாசலில் விட்டார். ஒன்னை, ஓட்டைக் கடிகாரம் என்று நச்சரித்த பயல்களின் காதுகளைத் திருகினார். தலைகளில் குட்டினார். மனதில் சிறுவனாய் இருந்த நீ, சம வயதுக்கு வந்தாய். சுய சேர்க்கையைக் கூட கைவிட்டாய்."

"ஆனால், வசந்தம், பாலையானது. சௌரிமுத்து, மாரடைப்பால் இறந்தபோது, அவரது சொல்லுக்குக் கட்டுப் பட்டிருந்த குடும்பம், ஒன் அக்காவை, வீட்டை விட்டுத் துரத்தியது. அவள் வந்த வேளைதான், அண்ணன் போய்விட்டான் என்று மைத்துனர்கள் ஊர்ச் சாட்சியாக அவளை அடித்து விரட்டி னார்கள். மனைவிதான், கணவனின் வாரிசு என்று சொல்ல, ஊரில் அதைத் தெரிந்து வைத்திருந்தவர்கள் முன்வரவில்லை. மீண்டும் நீ, மனதுக்குள் சிறுவனாய் மாறிவிட்டாய். உன்னுள் அந்தச் சிறுவன் அப்படியே இருக்கிறான். அவ்வப்போது வளர நினைக்கிற அந்தச் சிறுவனை, அம்மாவின் நெற்றிப் பள்ளமும், அக்காவின் விதவைக் கோலமும் வளர விடாமல் செய்கின்றன. ஒன் மனதில் தவிக்கும் அந்தச் சிறுவனைப் பெரியவனாக்கி விட்டால், ஒன் செக்ஸ் பிரச்சினை தீர்ந்தது மாதிரிதான். நீ, முழுமையான ஆணாய், மனைவியை நெருங்கும் போதெல்லாம், இந்தச் சிறுவன், மூக்கை நீட்டுகிறான். ஒன் மூக்கை அறுக்கிறான். அதோடு, 'ஓட்டைக் கடிகாரம்... ஓட்டை...' என்ற சத்தம் தானாய்க் கேட்கிறது. இந்த வன்மமான, இளக்காரமான வார்த்தைகள், ஒன் வெளித் தோற்றத்தைக் கலைத்து, உள் தோற்றமான சிறுவனை முன்னிலைப் படுத்திவிட்டன. ஆகையால், இந்தச் சிறுவனை முதலில் வேண்டும். அல்லது, அவனை வளர்த்து, ஒரு வாலிபனாக்க வேண்டும். இது சிரமமமான காரியம் ஆனால், எனக்குச் சிரமமில்லாமல் செய்துட்டே...."

மனோகர், டாக்டரை ஒரு கேள்வியாய்ப் பார்த்தான். அவரும் பதிலாய்ப் பேசினார்.

"ஒன்னை மாதிரிப் பிரச்சினைக்காரங்களுக்கு அதிரடிச் சிகிச்சை - அதுதான் ஷாக் ட்ரீட்மெண்ட் தேவைப்படும். ஆனால், ஒனக்குத் தேவையில்லை அந்த விடுதி நிகழ்ச்சிகள். ஒனக்கு ஒரு

அதிரடிச் சிகிச்சையைத் தந்துவிட்டன. ஒன்னுள் இருந்த சிறுவன், ஒரே சமயத்தில், ஒரேயடியாய் பெரியவனாகி விட்டான். நீ, அந்த விடுதிப் பயல்களோடு நடத்திய போராட்டம் இருக்குதே... அது வெறும் ஆண்மையல்ல... பேராண்மை. இப்பவே, ஒன் மனதில் ஒன்னைப் பற்றி ஒரு உயர்வான எண்ணம் வந்திருக்குமே. எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளத் தயார் என்கிற மனப்பான்மை வந்திருக்குமே. நான் சொல்றது சரியா? வாயைத் திறந்து பேசுறது. இப்படித் தலையாட்டினால் எப்படி."

"சரிதான் டாக்டர்..."

"கேட்கிறதுக்கு சந்தோஷமாய் இருக்குது. 'நான் "வயதுக்கு" வந்த வாலிபன். மிஞ்சேன்; அஞ்சேன்; கெஞ்சேன். என்னால், செக்ஸில் முழுமையாக ஈடுபட முடியும்' என்று பலதடவை மனதுக்குள் சொல்லிப் பாருங்கள். இதுக்கு ஆட்டோ சஜ்ஜஸ்ஷன்னு பேர்... தேவைப்பட்டால், உறிப்னாடிக் சிசிக்கை கொடுக்கேன். ஆனால், அது உங்களுக்குத் தேவைப்படாதுன்னு நினைக்கேன். கடைசியாய் ஒரே கேள்வி. கமர்ஷியல் செக்ஸ் ஓர்கர்ஸ்கிட்டே போனதுண்டா..."

"அப்படின்னா...."

"விலைமாதர். இந்தப் பெண்கள் பாவிகள் அல்ல. பாவப் பட்டவர்கள். இவர்களில் பலர், தங்கள் விருப்பத்துக்கு விரோதமாய், அந்தத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டவர்கள். அதனால்தான், இந்தப் பெயர் மாற்றம். சரி... போனதுண்டா?"

"எல்லாம் கடற்கரை வரைக்கும்தான். எல்லை தாண்டல..."

"குட். எதுக்கு கேட்டேன்னா... விலை மாதருக்கு, சாரி... ஒரு பாலியல் விற்பனைப் பெண்ணுக்கு, சலிப்பு வரும்போதோ அல்லது குற்ற உணர்வு கூடும்போதோ, நிர்வாணமாகிறவனை உற்றுப் பார்ப்பாள். பிறகு, திடுக்கிட்டதுபோல் பாவலா செய்வாள். அப்புறம், 'நீ ஆம்பிளையே இல்ல... போய்யா... தம்மாத்துண்டு'ன்னு துரத்துவாள். இதனாலேயே பலருக்கு ஆண்மைக் குறைவு ஏற்பட்டிருக்கு...."

மனோகர், அவர் வாயையே பார்த்துக் கொண்டிருந்தான். அவர் பேச்சை முடித்து மறு பேச்சைத் துவங்குமுன்பு, அரைகுறையாகச் சொன்னான்.

"சுய சேர்க்கையாலே, ஏடாகூடமாயிடுமுன்னு மயிலாப்பூர்ல, ஜெகன்நாதன்னு ஒரு சித்த வைத்தியர் சொன்னார்."

"ஓ! அவரா.. எங்க பெரியப்பாதான். என்னக் கூடத் திட்டுவார். இன்னும் ஐம்பது வருஷம் கழிச்சு, சுய சேர்க்கை ஆபத்துன்னு.

அல்லோபதிக்காரன் ஆய்வு அறிக்கை விடுவான்னு கிண்டல் அடிப்பார் ஆனால், அதனாலே, எந்தக் கோளாறும் கிடையாது என்பதுதான் எங்க கட்சி. அதோட, இன்னொரு விஷயம். ஆண்மைக் குறையுள்ளவன், பெண்டாட்டியெல்லாம் ஒழுக்கங் கெட்டவளாய் இருக்க வேண்டியதில்லே... ஆண்மையுள்ளவன் மனைவிகள் பத்தினிகளாய் இருப்பாங்க என்ற கட்டாயமும் கிடையாது வாட்ட சாட்டமானவன் ஆண்மை உள்ளவனா இருக்கணும் என்கிற அவசியமில்லே. பூஞ்சை உடம்புக்காரன் இயலாதவன் என்கிற பேச்சும் கிடையாது."

மனோகர், மேலும் சில வினாக்களைக் கேட்கப் போனபோது, ஒரு யூனிபார வாலிபன், ஒரு பைலைக் கொண்டு வந்து, டாக்டர் சந்திரசேகரிடம் கொடுத்தான். அதன் மேலட்டையில் மனோகரின் பெயர் எழுதப்பட்டிருந்தது. கீழே மெடிகல் ரிப்போர்ட் என்ற ஆங்கில வாசகம்.

டாக்டர் சந்திரசேகர், அந்த பைலுக்குள் இருந்த எக்ஸ்ரே படத்தை உருவிப் பார்த்தார். கருப்பாய்ப் பளபளத்த பின்னணிப் படத்தில் வெளுப்பான நிழல்களைக் காட்டிய அந்த எக்ஸ்ரேயை மானிட்டரில் பொருந்திப் பார்த்தார் சர்க்கரை, ரத்தம், சிறுநீர் போன்றவற்றின் சோதனைக் குறிப்புக்களை படித்துப் பார்த்தார்.

மனோகர், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டான். உடல் ரீதியில் ஏதும் கோளாறு இருக்குமோ என்ற சந்தேகம். அப்படியானால், எப்படி முடிவெடுக்க வேண்டும் என்பதில் ஓர் தீர்மானம்.

மனோகர், பிடித்திருந்த அவனது சொந்த உயிர், இப்போது டாக்டர் சந்திரசேகரின் கைக்கு மாறியது. சிறிது நேரத்தில், அவனின் கையை குலுக்கியபடியே, உயிர் கொடுத்தார்.

"கன்கிராஜ்லேஸன்ஸ் மனோ, உங்களுக்கு உடல் ரீதியிலும் எந்தக் கோளாறும் கிடையாது. ரத்தத்தில் சர்க்கரை, சாப்பாட்டிற்கு முன்பு 90... நார்மல். சாப்பாட்டிற்குப் பிறகு 130... நார்மல். ஆக நீரிழிவு கிடையாது. ரத்த அழுத்தம் 90 - 130; கச்சிதம். ஆண்மைக் குறைவுக்குக் காரணமான சயரோகமோ புட்டாளம்மன் நோயோ வந்ததில்லை. நான், ஆரம்பத்தில் சந்தேகப்பட்டதுபோல், பிட்டத்துக்குக் கீழே, உட்பக்கமாய்க் கட்டி ஏதும் இல்லை. அப்படி ஒரு கட்டி இருந்தால், அது ஆயுள் வரைக்கும் வலிக்காது. ஆனால், பாலியல் நரம்புகளை அழுத்தி, இறுக்கி அடம் செய்யும். இப்படிப்பட்ட கட்டியும் இல்லை. அதனால, ஆபரேஷனுக்கு அவசியம் இல்லை. இப்போ ஒரு நவீன முறை வந்திருக்கு. செக்ஸ் ரீதியாய் பலவீனப்பட்ட ஆணுக்கு, ஒரு பலூன் மாதிரி வஸ்துவைப்

பொருத்தி வைக்கிற சிகிச்சை முறை. ஆனால், இதுக்கு ஒன்றரை லட்ச ரூபாய் செலவாகும். இதுவும் மிச்சம். அதோட உங்க கணவரோட உயிரணுக்கள் சரியான அளவில் இருக்குது. இதனால அடுத்த வருஷம் நீங்க ஒரு குழந்தையை பெற்றெடுத்தாக் கூட ஆச்சரியமில்லை."

மனோகர், தன்னை புதிதாய் கண்டுபிடித்ததுபோல், தன்னையே பார்த்துக் கொண்டபோது, டாக்டர். சந்திரசேகரன், இன்னொரு ஆலோசனையும் வழங்கினார்.

"உடம்பை லகுவா வச்சுக்கணும். கொத்துக்கறி, குலைக்கறி உடம்பு பாலியல் உறவைப் பாதிக்கும். பாரதி சொன்னதுபோல், காற்றில் ஏறி விண்ணைச் சாடுவது மாதிரியான, மிதப்பான உடம்பு தேவை. இதை ஆசனப் பயிற்சியாலும், அளவான உணவாலும், ஆக்கிக் கொள்ளும்போது, நாமே உணரக்கூடியது மாதிரி நமக்குள்ளே ஒரு வாசனை எழும். பொதுவாய், ஒவ்வொரு மனிதருக்கும், பல வாசனைகள் உண்டு. இதில் பாலியல் வாசனை முக்கியமானது. இந்த வாசனையைப் பிற வாசனைகள் மூழ்கடிக்காமல், பார்த்துக்கணும். உதாரணமாய், ஒரு குழந்தையைக் கொஞ்சும்போது, ஒரு ஆணுக்குப் பெண் மீதோ, பெண்ணுக்கு ஆண் மீதோ ஆசை ஏற்படாது. காரணம், குழந்தையிடம் பீறிடும் வாசனை, பாலியல் வாசனையை அமுக்கிவிடும். இதனால்தான் படுக்கை அறையில், மலர் தூவும் வழக்கத்தை நம் முன்னோர்கள் கொண்டு வந்தார்கள். இப்போது, நான் உங்களுக்கு மலர் தூவ வேண்டிய அவசியமில்லை. அந்த விடுதி நிகழ்ச்சியே, உங்கள் மனதை வைரப்படுத்தியதுடன், அதே மனதில், பாலியல் மலர்களையும் தூவிவிட்டது."

மனோகருக்கு, தான் புதிதாய் வளர்ந்தது போன்ற எண்ணம் ஏற்பட்டது.

## 13

"ஒரு பெண், தாம்பத்ய உறவில் சுகம் பெற வேண்டும்; நிறைவு பெற வேண்டும். இதற்கு, அவளுக்கு முழுமையான உரிமை உண்டு. இந்த உரிமை மறுக்கப்பட்டால், அது சட்டப்படி, மனைவிக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பிறக்கும்போதே, கோடிக்கணக்கான சின்னஞ்சிறு முட்டைகளை உள்ளடக்கிய ஒரு பெண், தாய்மை அடைவதற்கும் தடங்கல் ஏதும்

3.8.

இருக்கக்கூடாது. இதனாலேயே ஒங்க கணவரை, தொழில் மரபையும் மீறி அதட்டுனேன். ஆனாலும்...”

கட்டில் சட்டத்தில், தலையணையை சுவரோடு சுவராய் போட்டு, அதன் மேல் தலை சாய்த்து கிடந்த சங்கரி, எதிரே பிளாஸ்டிக் நாற்காலியில் உட்கார்ந்தபடி, தனது முகம் பார்த்துப் பேசியவளின் வார்த்தைகளை, வேத வாக்காகக் கேட்டுக் கொண்டிருந்தாள். ‘ஆனாலும்’ என்று அவள் நாக்கை இழுத்துப் பிடித்தபோது, இவள் முகமும், தொலைக்காட்சிப் பெட்டியில் தடங்கல் ஏற்படும்போது வருமே, சுழிப்புக் கோடுகள், அவை போல் ஆனது. இந்த ‘ஆனாலும்’ என்கிற வார்த்தை, சொன்னது அனைத்திற்கும் சூடுபோடும் பதம் என்பதை உணர்ந்தவள்போல், சங்கரி, அந்தக் ‘கவுன்சிலிங்’ பெண்ணை கண்களால் பரிசீலித்தாள். சம வயதுக்காரி; மனோ தடுமாற்றங்களை தீர்த்து வைப்பதற்காக நியமிக்கப்பட்டவள். உடம்பு பளபளத்தாலும், உடையில் படாடோபம் இல்லை. குண்டு மாம்பழ முகம். ஒவ்வொரு வார்த்தையும் கேட்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவள். சங்கரிக்கு, தனது அடுத்த கருத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தம் கொடுத்துவிட்டு, அவள் தொடர்ந்தாள்.

“பாலியல், இனப்பெருக்கம் போன்றவற்றில், நாம் இயற்கையிடம், குறிப்பாகத் தாவரங்களிடமிருந்து நிறையக் கற்றுக் கொள்ளவேண்டும். நம் முழங்கால் உயரத்திற்குச் சுருட்டை இலைகளோடு கிடக்குதே பிரளிச் செடி., அது வண்ணத்துப் பூச்சி, ஆரம்பத்தில் புழுவாய் இருப்பதுபோல், தரையோடு தரையாய் சின்ன சுருட்டை முளையாய்த் தோன்றும். இப்படிப் பல முளைகள் சிதறிக் கிடக்கும். இந்த முளைகள் எல்லாமே பெண் பாலாய் இருந்தால், இந்த முளைகளில் ஒன்று வேகமாய் வளர்ந்து, பெண் செடியாகி, ஒருவித இனமாற்றத் திரவத்தைச் சுரக்கும். இந்தத் திரவம், தரைக்கு வந்து, நீரில் கரைந்து, பிற முளைகளில் ஊடுருவி, அத்தனை பெண் முளைகளையும், ஆண் செடிகளாக்கி விடும். இதில் இருந்து ஒங்களுக்கு ஏதாவது புரியுதா சங்கரி....?”

சங்கரி, தலையணையை எடுத்துக் கட்டிலில் போட்டுவிட்டு, சம்மணம் போட்டு உட்கார்ந்து, முதல் தடவையாகப் பேசினாள்.

“புரியுது. சொல்ல வந்ததை முழுசா... முடியுங்க”

“அப்படில்ல. ஒங்களுக்கு என்ன புரிந்திருக்கு என்கிறது எனக்கும் புரிந்தால்தான், நான் மேற்கொண்டு, சொன்னதைப் புரிஞ்சுகிட்டே பேச முடியும். நாம் என்ன பேசுகிறோம் என்கிறதைப்

புரிஞ்சிட்டுப் பேசினால், பிரச்சினையில் பாதியளவு போயிடும். சொல்லுங்க மேடம்?”

“அதாவது, கணவனை, முழுமையான ஆணாக்குவதில், ஒரு மனைவிக்கும் பொறுப்பு இருக்குதுன்னு சொல்ல வாரீங்க... நான் இதுல தோற்றுப் போயிட்டேன்.”

“தோற்கல. தோற்றுப் போனதாய் நினைக்கிறீங்க. கணவன் - மனைவி உறவில், மூன்று மாத காலத்தில் ஏற்படும் முட்டுக்கட்டை, ஒரு முட்டுச் சந்தல்ல. ஆண்டுக் கணக்கில், உங்களைவிட மோசமான நிலையில் இருந்தவர்களுடைய பிரச்சினைகளை அடியோடு தீர்த்து வைத்திருக்கிறோம். ஒங்க பிரச்சினை ஒங்களுக்கு அசாதாரணம். ஆனால், எங்களுக்கு சாதாரணம். மனோகரை, கணவராய்ப் பார்க்காமல், ஆண்மைக் குறைவில் அல்லாடுகிற ஒரு வாலிபனாய்ப் பாருங்க!”

“ஆண்மைக் குறைவு உள்ளவர்கள், எப்படி நடப்பாங்கன்னு அந்தக் காலத்திலேயே விஞ்ஞான ஜாதகம் கணித்திருக்காங்க. அதன்படிதான், ஒங்க கணவர் நடந்துக்கிட்டார். அதே ஜாதகத்தில் பரிகாரமும் இருக்குது. அந்தப் பரிகாரம், ஒங்க கணவருக்குக் கொடுக்கப்பட்டு வருது. பொதுவாய், பணக்காரக் குடும்பங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தால், ஓசைப்படாமல் விவாகரத்து ஏற்படும். அடிமட்டக் குடும்பங்களில் ஏற்பட்டால், கட்டிய பெண்ணே ‘ஓட்டை வண்டின்னு’ கணவனை வெளிப்படையாய் திட்டித் தீர்ப்பாள். நானே பலதடவை, இப்படிப்பட்ட வசவுகளை கேட்டிருக்கேன். ஆனால், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிப்பது, நாம் இருக்கிற நடுத்தர வர்க்கந்தான்.”

“என்னை... என்னதான் செய்யச் சொல்றீங்க....?”

“அவருக்கு இன்னும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்க. இன்னும் இரண்டு மாத புரபேசன். அதாவது பரீட்சார்த்த காலம் இந்தக் கால வரம்புல, நீங்க அவரை குத்திக் காட்டக்கூடாது. அவரைப் பாசத்தோடு அணுகணும். ஏமாற்றத்தை எந்த வகையிலும் காட்டிக்கப்படாது. ‘இன்றைக்குப் பரவாயில்லிங்க’ன்னு பொய்கூடச் சொல்லணும். இது வள்ளுவர் சொல்றது மாதிரி, ‘புரை தீர்ந்த பொய்’ அதுலயும் முடியலைன்னா, அப்புறம் இருக்கவே இருக்கு. விவாகரத்து... மறுமணம்.”

“நீங்க தப்புக் கணக்குப் போட்டுட்டிங்க! அவர் கிட்ட இருந்து, நான் விலகிப் போக நினைக்கிறது உண்மைதான் என்

பெற்றோரால்தான் இந்த அறையில் முடங்கிக் கிடக்( கன். ஆனால், மறுமணத்தைப் பற்றி, நான் நினைத்தே பார்க்ட ல... பட்டது போதும்..."

"அப்படி நினைத்தால், நீங்கதான் பட்டுப் போவீங்க. விவாகரத்து செய்கிற எந்தப் பெண்ணுக்கும் மறுமணம் செய்ய உரிமை உண்டு. பழையவன் மாதிரிதான், புதியவன் இருப்பான் என்கிற அனுமானமே தவறு. ஒரு பெண் தனித்து வாழ்வதாலேயே, அவளுக்குத் தனித்துவம் வந்துவிடாது. ஒங்க பெற்றோரின் நிம்மதிக்காவது, மறுமணம் செய்துக்கணும். இது பெற்றோருக்கு செய்கிற வைத்தியம். ஒங்களுக்கு, நீங்களே ஏற்படுத்திக்கிற புனர்வாழ்வு."

"என்ன மேடம் நீங்க. எனக்குத் தோணாததையும் சொல்லிக் கொடுக்கிறீங்க. நான் எதுக்கும் லோலோன்னு அலையுற 'லோ' டைப் இல்லை, வசந்திம்மா."

வசந்தி, அவளைத் திடுக்கிட்டுப் பார்த்தாள். சங்கரி, லேசாய்ப் புன்னகைத்தில், அவளுக்கு ஆறுதல். அந்த ஆறுதலை மகிழ்ச்சி யாக்கி, சங்கரி பேசினாள்.

"அவரோடு வாழ்கிறதா... இல்லையா என்கிறதுல என்னால இன்னும் ஒரு முடிவு எடுக்க முடியலதான். அவரோட அடாவடித் தனங்களை, அவருடைய ஆரம்பகால இனிய சுபாவமும், நேர்மையும் இன்னும் பின்னுக்குத் தள்ளுது. ஆனால், என்னோட மாமியாரை நினைத்தால்..."

"அந்தம்மாவும் ஒரு மனநோயாளிதான். வாழ்க்கையின் அடிமட்டத்தில் பிறந்து, அடிபட்டு அடிபட்டு அந்தம்மாவுக்கு உள்ளூர ஒருவித உறிஸ்டிரியாவும், சேடிஸமும் வந்துட்டு... நீங்க இல்லாட்டால், அந்தம்மா, சொந்த மகனையும், மகளையும்கூட பாடாய்படுத்தி இருப்பாங்க. அந்தம்மாவுக்கு, ஏவுகணைத் தாக்குதல் தான் முக்கியம். இலக்கு முக்கியமல்ல. இப்போ, அவங்களுக்கும் 'கவுன்சிலிங்' செய்யுறோம். பாதி குணமாயிடும். நீங்க, கணவனைச் சந்திக்க, இப்போ தயாராய் இருக்கீங்க.. சரியா..."

சங்கரி, நகத்தைக் கடித்தபோது, வசந்தி, டெலிபோனில் எட்டைச் சுழற்றி, ஆப்பரேட்டரிடம் லைன் கேட்டாள். உடனே, அவள், டாக்டர் சந்திரசேகரனிடம், சங்கரி, கணவனைச் சந்திக்கத் தயாராய் இருக்கும் விபரத்தைச் சொன்னாள். பிறகு, ஐந்தாறு நிமிடம் பேசினாள். பேசி முடித்துவிட்டு, டெலிபோன் குமிழை சரியாகப் பொருத்திவிட்டு உற்சாகமாகப் பேசினாள்

"வாழ்த்துக்கள் மேடம்! உங்கள் மனோவுக்கு, உடம்பு ரீதியில், எந்த குறையும் கிடையாது. ஒரு சராசரி ஆண்மகனுக்கு உள்ள அத்தனை உடலியல் நிறைவுகளும் அவருக்கு இருக்குதாம். மனம் கூட, இப்போது பாலியல் பயம் இல்லாமல் போய்விட்டதாம். ஆனாலும், பறவை போனாலும், கிளை ஆடுவதைப்போல சில காலத்திற்கு தடுமாறத்தான் செய்யும். அப்போது, நீங்கள்தான், தாங்கிக் கொள்ளவேண்டும் - இரண்டு விதத்திலும்.... சரியா....?"

சங்கரி, நகத்தை கடிப்பதை விட்டுவிட்டு, அவளை புன்முறுவலாய் பார்த்தபோது, "ஓ.கே. குட்லக்..." என்று சிரித்தபடியே வசந்தி, போய்விட்டாள்.

# 14

சங்கரி, மீண்டும் நகங்களைக் கடித்தாள். விரல்களுக்குச் சொடுக்குப் போட்டாள். வாசல் பக்கம், பட்டும் படாமலும் கண் போட்டாள். அது பயத்தாலா, பாசத்தாலா என்பது அவளுக்கே புரியவில்லை. அவன் கேட்ட, 'கேட்கத்தகாத' கேள்விகள் இன்னும் மனதைக் குத்தின. இத்தனை கேள்விகளுக்குப் பிறகும், அவனுடன் வாழ வேண்டியது தேவையா என்று ஒரு கேள்வி. அதே சமயம், பெற்றோரைத் திட்டிய அம்மாவை, அவன் அதட்டியதும், அவர்களைத் தனது சிகிச்சைக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று தடுத்து, தானே அத்தனை செலவுகளையும் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்பட்டதும், அவளுக்கு ஒரு இனிமையான நினைவாக வந்தது. இரு வித நினைவுகளும், அவளை இருபக்கமாக இழுத்தன. பழைய நரகம் மீளுமோ, புதிய சொர்க்கம் கிடைக்குமோ....

இப்போது, அவள், அந்த அறை வாசலை நேருக்கு நேராய்ப் பார்த்தாள். மனோகரைக் காணவில்லை. மனம் பட படத்தது. எழுந்து அறையில் உலாவினாள். டீப்பாயிலிருந்து கீழே விழுந்த ஒரு வெண்கல டம்ளரை, எடுத்து மேஜையில் வைத்துவிட்டுத் திரும்பியபோது....

மனோகர், அவள் எதிரே நின்றான். கைகளைக் குறுக்காய்க் கட்டி, அவளை அவ்வப்போது பார்த்துப் பார்த்து தலை

கவிழ்ந்தான். ஏதோ பேசுவதற்காக, முகத்தை முன்னோக்கி நிமிர்த்தப் போனான். முடியவில்லை. முயன்று, முயன்று பார்த்தான். கண்கள்தான், கசிந்தன. அவள், எடுத்த எடுப்பிலேயே தன்மீது தாவி, விழுந்து அழுவாள் என்று எதிர்பார்த்த அவனுக்கு, ஒரு ஏமாற்றம். அந்த ஏமாற்றமே, அவன் மனதை வைரப்படுத்தியது. அவளது எந்த முடிவையும் மரியாதையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மனம் சொல்லிக் கொடுத்தது.

சங்கரி, இன்னும் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை. அழுகையும், ஆத்திரமும், நீரும் நெருப்பும்போல் ஒருங்கே வந்தன. படுக்கையில் உட்கார்ந்து முட்டிக் கால்களைக் கட்டிக் கொண்டு முகம் புதைத்தாள். இடையிடையே அவனைப் பார்த்தாள். அவனைப் போலவே, பார்க்க நினைத்து, பார்க்க முடியாமல், முகம் நீட்டியும் தலை கவிழ்த்தும் அல்லாடினாள்.

இதற்குள், ஒரு உறுதியனான முடிவுக்கு வந்த மனோகர், கட்டிலின் எதிரே உள்ள பிளாஸ்டிக் நாற்காலியில் உட்கார்ந்தான். சட்டைப் பைக்குள் இரு மடிப்பாய் இருந்த ஒரு அரசாங்க முத்திரையிட்ட கவரை, ஒரு கையால் எடுத்தபடி, மறு கையால் அவள் முகத்தை நிமிர்த்தினான். அந்தக் கவரை, அவள் கைகளைப் பிரித்துத் திணித்தான். சிறிது நேரம் அசைவற்ற அவள் கண்களில், அந்தக் கவர் தாளாய்ப்பட்டது. அதன் மேல் அவளது பெயர், முகவரி...

மனோகர், அந்தக் கவரை, அவ்விடமிருந்து எடுத்து, உள்ள இருந்த காகிதத்தை, அவள் முட்டிக் கால்களில் வைத்தான். அதைப் படிப்பதைத் தவிர, அவளுக்கு வேறு வழியில்லை. மூன்றாம் ஆளாய்ப் படித்தவளின் உடல் நிமிர்ந்தது. கால்கள் சம்மண மிட்டன. கண்கள் பிரகாசித்தன. சாஸ்திரிபவனில், அவள் சேர வேண்டிய அலுவலகத்திலிருந்து வந்துள்ள கடிதம், அவள் வேலையில் சேர ஒரு மாத கால அவகாசம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த அவகாசம் முடிய இன்னும் இருபத்தைந்து நாட்கள் உள்ளன.

சங்கரி, பரவசப்பட்டாள். சாஸ்திரிபவனில், அவள் அப்போதே வேலை பார்ப்பது போன்ற பிரமை. சக தோழிகளுடன் பேசுகிறாள்.... சிரிக்கிறாள்...

அப்போது, அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில், அந்த மகிழ்ச்சியை யாருடனாவது பகிர்ந்து கொள்ளவேண்டும்

என்பதுபோல், அவனைப் பார்த்தாள். பார்க்கப் பார்க்க தனது மகிழ்ச்சி, மடிந்து, அவன்து கோலம் மனதைக் குடைந்தது. பத்து நாளையத் தாடி; கசங்கிப் போன உடை; உள்ளுக்குள் போன கன்னங்கள். 'அய்யோ, இது என்ன அலங்கோலம்.'

மனோகர், தட்டுத் தடுமாறி தழுதழுத்த குரலில் விளக்கினான்.

"நீ சேரவேண்டிய அலுவலகத்துக்குப் போய், தலைமை அதிகாரியைச் சந்தித்தேன். உனக்கு சுகமானதும், வேலையில் சேர்த்திடுவேன்னு அவகாசம் கேட்டேன். உடனே, அந்தப் பெரிய மனிதர், 'வெளியூர்ல அவங்க அப்பாவுக்கோ, அம்மாவுக்கோ சீரியஸ்னும், இதனால ஒங்க ஒய்பு அங்கே, போயிருக்காங்கன்னும்' ஒரு லெட்டர் எழுதிக் கொடுக்கச் சொன்னார். ஒனக்கு சுகமில்லைன்னு சொன்னால், மெடிகல் சர்டிபிகேட்டில் பிரச்சினை வரும் என்றார். நானும், ஓங்கம்மா, மதுரையில் படுத்த படுக்கையாய் இருக்கிறதாய் எழுதிக் கொடுத்தேன். எந்த நேரம் பொய் சொன்னேனோ, அது எங்கம்மா விஷயத்துல மெய்யாயிட்டு..."

சங்கரி, அவனை நேருக்கு நேராய்ப் பார்த்து, முதல் தடவையாக அதே சமயம், எதார்த்தமான குரலில் கேட்டாள்.

"என்னாச்சு... என்னால எல்லாருக்குமே பிரச்சினைதான். என்னாச்சு..."

"பயப்படும்படியா இல்ல... நாலு நாள் படுக்கை வாசம். இப்போ பக்கத்து வீட்டுக்காரனைத் திட்டுற அளவுக்குத் தேறிட்டாங்க. ஐ.... ஆம் ஸாரி சங்கரி.... ஒன் விஷயத்துல, அரக்கத்தனமா நடந்துக் கிட்டேன்னு, எங்கம்மாவே என்னைத் திட்டுறாங்க...."

சங்கரி, சகவாச தோசத்தில் கேட்பதுபோல, கேட்டாள்.

"ஒங்க அக்காவுக்கு ஏதாவது செய்தீங்களா...."

"ஆமாம். என் போலீஸ் எஸ்.பி. பிரெண்டைப் பார்த்தேன். அவரு, எங்க மாவட்ட எஸ்.பி. கிட்டே பேசினார். இரண்டு நாளுல அக்காகிட்டே தகராறுக்குப் போன அத்தனை பேரும், இங்கே வீட்டுக்கு வந்தாங்க. என் காதைப் பிடித்துத் திருகுனவன் முதல் இளக்காரமாய்ப் பார்த்தவனுங்க வரை அத்தனை பேரும் வந்தாங்க... காலுல விழாத குறையாக் கெஞ்சினாங்க. அக்காவும் சமரசத்திற்குச் சம்மதிச்சிட்டாள். பிரச்சினை தீர்ந்துட்டு."

"கடைசில... எல்லாரும் தர்மத்தை விட, போலீஸுக்குத்தான் பயப்படுறாங்க.. ஒங்க அக்காவுக்கு... நீங்க இருக்கீங்க

தப்பிச்சிட்டாங்க... இதை மாதிரி அதிகார பலம் இல்லாத அனாதைப் பெண்கள் என்ன செய்வாங்க? உதைக்கிற காலுலதான் விழணுமா? அடிக்கிற கையைப் பிடித்துத்தான் கெஞ்சணுமா?"

சங்கரி, பாதிக் கண்களை மூடியபடி, மனோகரைப் பார்த்தபோது, அவன், அவளைச் சந்திக்க முடியாமல், முழுக் கண்களையும் மூடினான். என்ன சொல்கிறாள்? அவளோட நிலைமையைச் சொல்லாமல் சொல்கிறாளா... பேசிட வேண்டியதுதான்... முழுமையாகப் பேசி... முடிவை அவளிடம் விட்டுவிட வேண்டியதுதான். எந்த முடிவையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக வேண்டியதுதான்.

மனோகர், நாற்காலியில் நிமிர்ந்து உட்காருகிறான். மனம், விரக்தியையும், பற்றையும் விலக்கித் தள்ளியது. வாய் அதன் வெளிப்பாடாகியது.

"ஒன் விஷயத்தில், நான் ஒரு மிருகமாகவும், எனக்கு நானே பித்துக்குளியாகவும் நடந்துக்கிட்டேன். இதற்கு, டாக்டர், பல்வேறு பின்னணிக் காரணங்களைச் சொல்கிறார். ஒனக்கு, வலிப்பு வந்தது எப்படி, உன்னை மீறிய செயலோ... அப்படித்தான் நான், நடத்திய ஆர்ப்பாட்டமும், அடித்த கூத்தும், என்னை மீறிய செயல் என்கிறார். ஆனாலும், அவர் சாக்கில், நான், நடந்து கொண்ட விதத்தை நியாயப்படுத்த விரும்பல... உன்கிட்டே மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... தயவுசெய்து என்னைப் பேச விடும்மா..."

"இப்போ... நான், எல்லா அம்சங்களிலும் மேன்மைப்பட்டதாய் நினைக்கேன். டாக்டரும் அதைத்தான் சொல்கிறார். இனிமேல் என்னோட சேர்ந்து வாழ்வதும், வாழாததும் ஒன்னோட உரிமை. பிளீஸ் பேச விடு... நீ என்னோட வாழ்வதற்கு வசதியாய் நானும் நடந்துக்குவேன். டாக்டர், சொன்னது மாதிரி, நம் இரண்டு பேருக்கும் சுற்றுப்புற மாற்றம் அவசியம். ஒன் முடிவு எப்படியோ... நான், வீடு பார்க்கேன். உனக்குச் சம்மதமுன்னால், புதுவீடு கிடைக்குற வரைக்கும், ஒன்னோட ஊருக்கே வரத் தயாராய் இருக்கேன். ஊர்க்காரன் அடங்கிட்டதால், அம்மா, அக்காவோட ஊருக்குப் போகப் போவதாய் ஒத்தக் காலில் நிற்கிறாள்"

"இனிமேல், நீ சொந்தக் காலில் நிற்கப் போகிற சுயேச்சையான பெண் கணவன் கையை எதிர்பார்க்கிற ஒரு மனைவியின் அன்பு, மாசு, மருவற்று இருந்தாலும், சில சமயம் அது கட்டாயத்தின் பேரிலும் வரலாம். ஆனால், வேலைக்குப் போகிற ஒரு மனைவியின்

அன்பு, எந்தக் கட்டாயத்திற்கும் உட்பட்டதல்ல... அந்த அன்பு, நீர் தேக்கமல்ல... தானாய்ப் பீறிடும் நீரூற்று... ஒன்கிட்டப் பேசின பிறகு, என் மனம் லேசானது மாதிரித் தெரியுது. ஒன்கிட்ட மனைவியாய்ப் பேசற உரிமையை, நீ தராமல் நான் எடுக்கத் தயாராயில்லை. ஒன்னை ஒரு தோழியாய் நினைத்துத்தான் பேசுறேன். நான் பேசுறதுல, ஒனக்குச் சந்தோசமோ... இல்லியோ... எனக்கு ஒரு நிம்மதி. காரணம், நானும் ஒன்னை மாதிரி ஒரு வகையிலே, அனாதரவான..."

மனோகர், விம்மினான். உடனடியாய் அந்த விம்மலை, அடக்கினான். தனக்குத்தானே ஆணையிட்டான். 'அழுது ஆதாயம் தேடப்படாது... நான் வயதுக்கு வந்தப் பெரியவன். அழமாட்டேன். எந்த முடிவையும் ஏற்றுக்கொள்வேன்.'

யந்திர சங்கரி, பெண்ணானாள். அந்தப் பெண், மெள்ள மெள்ள மனைவியாக மாறிக் கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில், மனோகரும் யதார்த்தக் குரலில் கேட்டான்.

"இப்போ, எனக்கு ஒரு பதில் வேணும். சங்கரியை, இனிமேல் நான் எப்படிக் கூப்பிடணும்? வழக்கம்போல் நீ என்றா, இல்லை நீங்கன்னா... ரெண்டு எழுத்துத்தான் வித்தியாசம். ஆனால், இது நம்மை ரெண்டாகவும் பிரிக்கலாம்; ஒன்றாகவும் ஆக்கலாம். என் முடிவைச் சொல்லிட்டேன். அதேசமயம், சங்கரி முடிவையும் மதிக்கிறேன். மனசு கேட்கல... நான் நடந்துகிட்டதுக்குப் பிராயச்சித்தம் செய்யணும். எது என்கிறது எனக்கு இப்பத் தெரியணும். இல்லாட்டியும்... நாளைக்குச் சொல்லலாம்."

சங்கரி, மனோகரை மலங்க மலங்கப் பார்த்தாள். அவன், கண் கலக்கத்தில், அவள் கண்கள், கசிந்தன. ஒரு விநாடி அவனையே அசைவற்றுப் பார்த்தவள், மறு விநாடி அவன் மேல் சாய்ந்தாள். அவன் கழுத்தை இரண்டு கரங்களாலும், சுற்றி வளைத்து, அவனை தன் பக்கமாகச் சரித்தாள். ஏதோ பேசப் போனவனின் வாயைப் பொத்தினாள். குலுங்கிக் குலுங்கி அழுதழுது, அவனையும் குலுக்கினாள். அவன் தோள்களை, அழுத்தப் பற்றி, அவன் கழுத்தில் முகம் போட்டாள். சத்தம் போட்டே கத்தினாள்.

"நான் போகமாட்டேன். ஒங்கள விட்டுட்டுப் போகமாட்டேன். என்ன ஆனாலும் சரி... எப்படி ஆனாலும் சரி... நீங்க என்னை விட்டுப் போறதுக்கு விடமாட்டேன்... பார்த்துடலாமா..."

சங்கரி, அவனைச் சவாலாகப் பார்த்தாள். ஒரு குழந்தையைப் போல பார்த்தாள். அவனை, பொய்யடியாய், கன்னத்தில்

அடித்தாள். தலையில் குட்டினாள். அவன் சிரித்தபோது, இவள் அழுகை விக்கலாகி, திக்கலாகி, அவன் கழுத்துக்கு, இன்னொரு முகம் முளைத்ததுபோல் மவுனமாய் முற்றுப் பெற்றது. அவளது கண்ணீர், மழை விட்ட தூவானமாய், அவன் கழுத்து மேட்டில் துளித் துளியாய் பல்கிப் பரவி நின்றது. அந்த ஒவ்வொரு துளியும், அவன் மனதில் ஒவ்வொரு நதியாய்ப் பிரவாகம் எடுத்தது. அத்தனை நதிகளும், ஒரு மகாநதியாகி, சங்கரிக்குள் சங்கமித்தது.

கடலும் நதியும் ஒன்றானதில், அவர்களது கரங்களும், கால்களும் அலைகளாய் ஆர்ப்பரித்தன. நேரத்தை இழுத்துப் பிடித்த அலைகள்... இயக்கத்தை நிறுத்தாத புதிய புதிய அலைகள்.

*****

# புதைமண்

# புதைமண்

சென்னைப் பெருநகரின் இதயப்பகுதி; அதற்குப் பைபாஸ் சர்ஜரி செய்தது போன்ற கட்டிடத் தொகுதிகள். அத்தனையும் வானம் அளப்பவை. இதில் முக்கோணமாய் முகம் காட்டும் மூன்று திரையரங்குகள். இந்தக் கட்டிடத் தொகுதிக்குப் பின்னால் விரிந்து பரந்த ஆள் நடமாட்டம் இல்லாத வளாகம். பென்ஸ், டாடா சுமோ, மாருதி, சான்ரோ, இண்டிகா போன்ற பல்வேறு கார்கள், கிழித்த கோடுகளை மீறி நின்றன. இவற்றின் அருகே பல்வேறு வண்ணத்திலான இரண்டு சக்கர வாகனங்கள்; ஒரு ஓரத்தில் சைக்கிள்கள்.

இந்த வளாகத்தின் உள்முனையில் பத்து படிக்கட்டுக்கள். கீழே இறங்கிப் போனால் 'அண்டர் கிரவுண்டான' அடிவாரத் தளம். பளபளப்பான கடப்பா மேனித் தரை நடந்தால் காலுக்கு ஒரு சுகம்; உள்ளே வருகிறவர்களை வரவேற்பதற்காக, ஒரு காதில் மட்டும் கடுக்கன் போட்ட விரிந்த சடை இளைஞர்கள் இரண்டு பேர், கோட்டும் சூட்டுமாய் நின்றார்கள் 'ஹலோ' என்பதற்கு பதிலாக ஒவ்வொருவரிடமும் "ஹாய் கேய்" என்றார்கள்.

அடிவாரத் தளத்தில் வடக்கு முனையில் அலங்கரித்த மேடை; மிருதங்க, வீணை, வயலின், கடம் முதலிய வித்தகர்கள் தத்தம் கருவிகளோடு அவற்றை செல்லத் தட்டாய் தட்டியபடியே இருந்தார்கள். இவர்கள் மத்தியில், ஒரு இளம் பாடகன். மேடையின் மேட்டுப் பகுதியில், காகிதப் பூக்களால் தோரணமாய் சுருள் சுருளாய் கட்டப்பட்டிருந்தன பின்தளத்தில் தில்லை நடராஜருக்குப் பதிலாக, அர்த்த நாரீஸ்வரர் சிலை அதன் ஒரு கண்ணில் நளினப்

பார்வை. இன்னொன்றில் சுடலைத் தீப்பொறி. ஒ; றை மார்பகம்; இடுப்பில் ஒரு பக்கத்தை காணவில்லை. கால்கள் ஒ ன்றில் லாவகம். இன்னொன்றில் ஆடு தளத்தை அழுந்தப்பிடி;;த - நாட்டிய பாணியில் சொல்லப்போனால் "தரைத்தட்டு"க் கோலம்.

நடுநிசி வந்துவிட்டது.

திடீரென்று மிருதங்கத்தின் அலாரிப்பும், அந்த அர்த்த நாரீஸ்வரர் சிலைமீது பூக்களும் ஒரே சமயத்தில் உராய்ந்தன. பக்கவாட்டில், நீளவாகு தேக்குப் பலகையில் விஸ்கி, பிராந்தி, ரம், ஒயின், ஓட்கா, பிளடி மேரி போன்ற குடி வகையறாக்கள். இடது பக்கத்து நீளவாக்குப் பலகையில் பிஷ் பிங்கர், பிங்கர் சிப்ஸ், மட்டன், சிக்கன் வறுவல்கள், முந்திரிக்கொட்டை, வேர்க்கடலை, நனைந்த பருப்பு, நனையாத பருப்பு, உருளை வடிவமான வெங்காயம், அதேமாதிரியான வெள்ளரிக்காய், பிரியாணி, சப்பாத்தி, சமாச்சாரங்கள். இவை அத்தனையையும் ஓரங்கட்டிப் பார்த்தபடியே நின்றவர்கள், இரண்டு வரிசையாகப் போடப் பட்டிருந்த நாற்காலிகளில் உட்காரப் போனார்கள்.

அதுவரை, மனித குரோசோம்களில் நாலு கோடியே பத்து லட்சம் கேரக்டர்கள் இருப்பதை கண்டு பிடித்த லண்டன் மருத்துவ விஞ்ஞானிகளின் பிரமிக்க வைக்கும் கண்டுபிடிப்பை அலசிக் கொண்டிருந்தவர்கள் - வீட்டில் வெள்ளைக் கோட்டை தூக்கிப் போட்டுவிட்டு வந்திருந்த இவர்கள், முன் வரிசையில் இடது பக்கம் நட்புக்கு ஏற்ற வகையிலும், மேடைப் பார்வைக்கு ஏற்ற வகையிலும் உட்கார்ந்தார்கள். தர்மபுரியில், மூன்று மாணவிகளை, உயிரோடு கொளுத்திய கொடுமையை அரசியல் சாசனத்தின் வழியாகவும், இ.பி.கோ. மூலமும், அலசிக் கொண்டிருந்தவர்கள், வலது பக்கம் உட்கார்ந்தார்கள். இவர்களும் கருப்பு அங்கிகளை கார்களுக்குள் போட்டுவிட்டு வந்தவர்கள். பொறியாளர்களிடம், தான் வரைந்த கட்டிடப் பிளானை தலைகளாகப் பிடித்த கார்ப்பரேஷன் கிளார்க்கிடம் அதைச் சுட்டிக் காட்டினால் உடனே அவர் தவறுக்கு வருந்தாமல் 'எனக்குத் தெரியும்' என்று திமிராக பதிலளித்ததை விளக்கிக் கொண்டிருந்த சீனியர் பொறியாளரை விட்டுவிட்டு, ஜுனியர் பொறியாளர்கள் இருக்கைகளில் ஓடிப்போய் உட்கார்ந்தார்கள் சாதிச் சண்டைகளை, சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக கருத வேண்டும் என்று வாதாடி போராடிக் கொண்டிருந்த ஐ ஏ எஸ், ஐ.பி.எஸ்.,காரர்களும், சமூகப் பிரச்சினையாக கருத வேண்டும் என்று பதிலளித்த அரசியல் வாதிகளும் அவசர அவசரமாய் ஓடி உட்கார்ந்தார்கள் இவர்கள் அல்லாது கம்பெனி நிர்வாகிகள், மாணவர்கள், டாக்சி டிரைவர்கள், என்.ஜி ஒ எனப்படும் தன்னார்வ தொண்டு நிறுவனர்கள்,

லுங்கிக்காரர்கள் உள்ளிட்ட கலப்புக் கூட்டமாக, அந்த இருக்கைகள் மாறின. ஆனாலும், மருந்துக்குக்கூட ஒரு பெண் இல்லை.

திடீரென்று, அந்தத் தளத்தின் மேடை, வெள்ளை வாழைத் தண்டு விளக்குகளும், வண்ண பல்புகளும் அணைய அணைய, செஞ்சிவப்பு விளக்குகளால் பிரகாசித்தது. மிருதங்கம் மட்டும் பெரிதாய் ஒலிக்க, இதர இசைக்காரர்கள் தத்தம் கருவிகளுக்கு சுதி சேர்த்தார்கள். எங்கிருந்தோ ஒரு பின்னணிக் குரல்.

"ஹாய்! கேய்... பாய்ஸ்... வணக்கம். இப்போது நமது சங்கத்தின் பொதுச் செயலாளரும், பெரிய இடத்துப் பிள்ளையும், நடன சிகாமணியுமான மோகனனின் பரத நாட்டியமும், கதக் நாட்டியமும் நடைபெறும்."

மோகனன் என்ற பெயர் வந்தபோது நமது தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர்கள் வி.ஐ.பி. பேர்களுக்கு ஒரு அழுத்தம் கொடுப்பார்களே, அப்படிப் பட்ட அழுத்தம் அந்த பெயருக்கு கிடைத்தது. நிகழ்ச்சி அறிவிப்பு முடிந்ததும், மேடை விளக்குகள் திடீரென்று அணைந்தன. அந்த இருள் மயத்தில் மெல்லிய இசைகூட பேயோசையானது. இரண்டு நிமிடங்களில் அதே மேடை விளக்குகள் மீண்டும் ஜொலித்தன.

மேடையின் மையப் பகுதியில், மோகனன் நடனக் கச்சிதமாய் காணப்பட்டான். செம்பச்சை வேட்டி இறுகக் கட்டப்பட்டிருந்தது. இடுப்பிற்கு மேல் இடது பக்கம் மட்டும் ஒரு தாவணி போன்ற துணி தோளைத் தொட்டு, முதுகை வருடிக் கொடுத்தது. ஒருகால், லேசாய் தூக்கியும், இன்னொரு கால், நளின வளைவோடும் நின்றன. காதுகள் ஒன்றில் வளையம். இன்னொன்றில் கடுக்கன். முகத்தில் ஒரு பகுதி சிவப்பு. மறுபகுதி கரும்பச்சை கீழ் உதட்டில் மட்டும் லிப்டிக்ஸ். பரதநாட்டிய இலக்கணப்படி, அவன் இரண்டு தோள்களும் ஒரே நேர்கோடாய் இணைந்தன. கழுத்து அதன் முடிச்சானது. இடுப்பின் நடுப்பகுதி ஒரு முக்கோண வடிவமாகவும், இடுப்புக்கு கீழே இருந்து பாதம் வரை இன்னொரு முக்கோண வடிவமாகவும் தோன்றின. அவன் கைகளை நீட்டி வளைத்து, அவற்றில் ஒவ்வொன்றும் முட்டிகளில் முட்டியபோது அவையும் இரண்டு முக்கோணங்களாகின.

மோகனன், ஒரு காலை மேலே தூக்கி, பிறகு பக்கவாட்டிற்கு கொண்டு வந்தான் கால்களை சலங்கை சத்தத்துடன் முன்னால் வந்து தரைத்தட்டு செய்தான். பின்னர், குதிகாலில் நின்று அப்படியே திரும்பி அர்த்த நாரீஸ்வரரை வணங்கி அதே காலோடு

குருவான நட்டுவனாரை கைகூப்பி, அப்படியே திரும்பிய இடத்திற்கு திரும்பி, அவைக்கு வணக்கம் போட்டான். பின்னர் உடம்பின் நடுப்பகுதியில் பூமத்தியரேகை மாதிரியான ஒரு கற்பனைக் கோட்டை வரைந்து "சம பங்கமாய்" நின்றான். அப்போது தாள லயத்துடன் பாடல் அனுபல்லவியாய் ஒலித்தது.

பல்லவி

**"ஆணும் ஆணும் உறவு கொண்டால் - நீங்கள்**
**அலட்டிக்க என்னய்யா இருக்குது?**
**ஓரின உறவு, எங்களின் உரிமை - இந்த**
**உரிமையை பறிப்பது, உங்களின் மடமை!**

அனுபல்லவி

**என்னய்யா நியாயம்?**
**இதுதான் அநியாயம்!**

பலத்த கைத்தட்டலுக்கு, இடையே இப்படி பாட்டு ஒலித்த போது, மோகனன் ஒரு பக்கம் சாய்ந்தாடி, "அபங்கம்" செய்தான். முக்கோணமாய் உடலாட்டி "திரிபங்கம்" போட்டான். பின்னர் அய்யப்ப சாமிபோல் குத்துக்காலில் உட்கார்ந்து அவற்றில் இரு கைகளையும் வேலியாக்கி வேக வேகமாய் உட்கார்ந்தான். அப்படியே அவன் எழுந்தபோது, இன்னொருவன் அலங்கார மேடைக்கு வந்தான். இவனை அடிக்கப் போவது போல் துரத்திக் கொண்டே கையை ஓங்கினான். மோகனன், அவனுக்குப் பயந்தவன் போல் கை நடுங்கி, கால் நடுங்கி மேடையின் மறுமுனைக்கு அபிநயமாய் போனான். உடனே, உச்ச கட்டத்தில் இசையொலி - விடாதே பிடி என்பது மாதிரி ஒலித்தது. அவ்வளவுதான்.. மோகனன் அடிக்க வந்தவனை காலை வாரி குப்புறப் போட்டான். அவன் மேல் கவிழ்ந்து படுத்தான். "அய்யோ அய்யோ" என்று சிறிது நேரம் கீழே கிடந்தவன் அலறினான். பிறகு "ஆகா ஆகா" என்று மகிழ்ச்சி ஆரவாரத்தில் குப்புறப்படுத்த மோகனனின் கழுத்தை பிடித்துக் கொண்டான். உடனே பேரவையில் இருந்து "ஒன்ஸ்மோர்" என்று பல "மோர்கள்" ஒலித்தன. அதற்குள் அது முடிந்து, மீண்டும் மோகனனின் தனித்துவ நாட்டியம்.

பல்லவி பல தடவை ஒலித்தது ஒவ்வொரு தடவைக்கும் ஒவ்வொரு விதமாக மோகனன் ஆடினான் "வர்ணம்" என்ற நாட்டிய இலக்கணப்படி சுழன்றான்; சுற்றினான்; சரணத்திற்கு ஏற்ப பாடுவதுபோல் வாயசைத்தான்.

*ஓரினச் சேர்க்கை ஒருத்தரின் உரிமை*
*ஈரினச் சேர்க்கையால் என்னத்தை கண்டீர்? - மனித*
*உயிரினம் பெருகினால் உயிருக்கே ஆபத்து - எங்கள்*
*ஓரினச் சேர்க்கைதான் உடனடி மருந்து.*

*மக்கள் பெருகினால் வெள்ளம், எரிமலை,*
*பூகம்பம், புயல், போரென்று வருமாம்.*
*மாபெரும் நிபுணன் மால்தஸின் கூற்று.*
*ஓரினச் சேர்க்கையே இந்தக் கூற்றுக்கு கூற்று.*

*கருப்பை இல்லாத சேர்க்கை*
*உருவம் பிறக்காத சேவை...*
*இருப்பினும் எங்களை வெறுக்கிறீர்*
*என்னய்யா நியாயம்? இது அநியாயம்...*

மோகனன், பாடலுக்கு ஏற்ப அபிநய ஆட்டம் ஆடிவிட்டு, கால்களை லேசாய் ஆட்டி ஆட்டி பலமாய் நின்றான். அப்போது ஒரு பின்னணிக் குரல்.

"மோகனனின் பரத நாட்டியத்தால் நீங்கள் பாலியல் ரீதியாக பரவசப்படுவது புரிகிறது. ஆகையால், தில்லானா இல்லாமல், இப்போது கதக் ஆட்டத்தை ஒரு சாம்பிளாக ஆடிக்காட்டுவான் நம் மோகனன்."

மோகனன் எழுந்து, சபைக்கு சிரம் தாழ்த்தி கைகூப்பி வணக்கம் செய்து கொண்டே, உள்ளே போய்விட்டான். கீழே கிடந்தவனும் இரண்டு குதி குதித்துவிட்டு போய்விட்டான். 'ஆடும் மேய்த்தாயிற்று... அண்ணனுக்கும் பெண் பார்த்தாயிற்று....' என்பது போல், மோகனன் இளைப்பாறுவதற்கும், ஆடை மாற்றத்திற்கும் ஏதுவாக, ஒவ்வொரு இசைக்கருவியும் தனி ஆவர்த்தனம் செய்தது. முப்பது நிமிடங்களில் மோகனன் திரும்பி வந்தபோது, கைதட்டு வலுவா? இசையோசை வலுவா? என்று ஒரு பட்டிமன்றமே நடத்தலாம்.

இப்போது, மோகனன் பட்டுக் கச்சை கட்டியிருந்தான். கழுத்தில் வெவ்வேறு அளவிலான விதவிதமான நகைகளை போட்டிருந்தான். கால் சதங்கையிலும், கை மணிகளிலும் மாற்றம் இல்லை. ஒரு பக்கத் தாவணியைக் காணவில்லை. பத்தும் பசலியாக ஒலித்த அதே இசைக்கருவிகள், இப்போது அட்டகாசமாய் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டன. மோகனனின் உடல் ஒற்றை நேர்கோடாய் நின்றது கால்கள் சமபாத நிலையில் ஊன்றின. இசைக்கு ஏற்ப அவன் இரு கால்களையும் மூன்றடி அளவிற்கு

மேலே தூக்கி எம்பினான். எம்பி எம்பி குதித்தான். கை தட்டல்கள் வலுத்தன. மேடை குலுங்கியது. பின்னர் ஒரு காலை தரையில் ஊன்றிக் கொண்டே கண் புருவங்கள் வேக வேகமாய் அசைய அசைய, இன்னொரு காலை வட்ட வட்டமாய்ச் சுற்றி உடம்பையே பம்பரமாக்கினான். பூவாய் விரிந்தாடினான். மொட்டாய் குவிந்தாடினான். அந்தரத்தில் பல்டி அடித்தான். குறுக்கு நெடுக்குமாய் துள்ளினான்.

மோகனன், ஆட்டத்தை முடித்துவிட்டு, அவையோரைப் பார்த்தான். அங்குள்ள அனைவருக்கும் சீருடை வேலைக்காரர்கள் ஒவ்வொரு வெள்ளைக் கிளாசிலும் கால்வாசியை ரத்தக் கலராக்கி கொடுத்தார்கள். இன்னும் சிலர் கிளாஸ்களோடு வரிசையில் அமர்ந்தவர்கள் முன்னே, தட்டுக்களோடு பணிந்து குனிந்து நகர்ந்தார்கள். அப்போது, மோகனன் அவைக்கு ஒரு அறிவிப்பு கொடுத்தான்.

“பெண்ணாதிக்கதிலிருந்து விடுபட்ட “கேய்” தோழர்களே! இப்போது உங்களுக்கு, ஒரு நல்லவரை வல்லவரை அறிமுகப் படுத்தப்போகிறேன். ஆனால் அவர் “கேய்” இல்லை. கேய்களோடு நட்பாக இருப்பவர். தமிழக அரசின் எய்ட்ஸ் பிரிவில் இணை இயக்குநராக இருந்த, 'சிறந்த பேச்சாளர். இப்போது அரசாங்க பொது மருத்துவமனையில் எஸ்.டி.டி. - அதுதான் பாலியல் நோய் பிரிவிற்கு தலைவராக இருக்கிறார். ஒரு முன்னாள் அமைச்சரின் தம்பி. இவர் நினைத்திருந்தால், அமெரிக்காவிற்கு என்ன, அண்ணனின் உதவியால் நிலவுக்கே போயிருக்கலாம். ஆனாலும், சுயமரியாதைக் காரர். இன்னும் டெப்டி டைரக்டர் அந்தஸ்துலேயே இருப்பவர். இவர் எய்ட்ஸ் நோயில் ஒரு அதாரிட்டி. நமது தோழர். பார்ப்பதற்கு அழகாக இருப்பார். அவரை ஏதும் செய்து விடாதீர்கள். இப்போது அவர் மேடைக்கு வரப்போகிறார். அவர்தான் டாக்டர் காந்தராஜ். காந்தராஜ் அவர்களே! மேடைக்கு வாருங்கள்.”

டாக்டர். காந்தராஜ், மேடையில் போடப்பட்டிருந்த அலங்கார நாற்காலியில் விட்டு விட்டுத் தட்டப்பட்ட கைதட்டுக்களோடும், விசில் சத்தங்களோடும் உட்கார்ந்தார். அவையைப் பார்த்தார். அவருக்கு பழக்கப்பட்ட டாக்டர்களும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., வகையறாக்களும் இருப்பதைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். அத்தனை பேரும் மிளகாய் பஜ்ஜி, மீன் வறுவல், சிக்கன் பிரைகள் சாட்சியாக மதுக் கிண்ணத்தை வாயில் சொருகியபோது, டாக்டர் காந்தராஜ், முன்னால் இருந்த மைக்கில், பொதுப்படையாகப் பேசினார்

“ஓரினச் சேர்க்கை என்பது இயற்கைக்கு விரோதமானது. ஒரு முழுமையான ஆண் என்கிற முறையில், எனக்கு முழு இன்பம் கிடைக்கிறது. என் பெண் பார்ட்னருக்கும் கிடைக்கிறது. இதை வெறுத்து ஒதுக்கிவிட்டு...”

அவையினர் அத்தனைபேரும் அவரைப் பகைப் பார்வையாக பார்த்தபோது, ஒருவர், அதுவும் சரியான பெரிசு, ‘எங்கிருந்தோ வந்தவர்போல்’ இடையே குறுக்கிட்டார்

‘‘லுக் டாக்டர் காந்தராஜ்! உங்களை பொம்பள சுக உபதேசத்திற்காக இங்கே கூப்பிடல... அதனால ஹோமோ செக்ஸ் தப்பானதா? சரியானதா? என்ற ஆராய்ச்சி உங்களுக்கு அனாவசியம். இனிமேலும் பேசினால் எங்களின் ஒருவரின் மேலேயோ அல்லது கீழேயோ கிடத்தப்படுவீர்கள்! எங்களால் சமுதாயத்திற்கு எந்தக் கேடும் இல்லை. ‘நாங்கள் உண்டு. எங்கள் ஹோமோ செக்ஸ் உண்டு’ என்று இருக்கும் வாயில்லா ஜீவன்கள் நாங்கள். இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது. ஆனால், எங்களுக்குத்தான், இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை ஆனாலும் எங்களுக்கு அமெரிக்காவில் சுதந்திரம் கிடைச்சுட்டுது.. பம்பாயில் பத்திரிகை வெளியிடுகிறோம். இந்த டர்ட்டி தமிழ்நாட்டில்தான் இன்னும் சுதந்திரம் கிடைக்கல. வந்த வேலையை கவனியுங்க டாக்டர் காந்தராஜ்...”

இன்னொருத்தவரும் எகிறினார்.

“ராமன் கெட்டதும் பெண்ணாலே. ராவணன் கெட்டதும் பெண்ணாலே என்று உங்களுக்கு புரியாதா காந்தா.”

காந்தராஜ் பயந்து போனார். தன்னை காந்தா என்று அழைத்ததில், அப்படி ஆக்கிவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டது. பெரிய இடத்துப் பிள்ளையான மோகனனின் ஐ.ஏ.எஸ்., தந்தை, இவருக்கு அறிமுகமானவர். அதன் மூலம் இந்த மோகனனின் பரிச்சயம் கிடைத்தது இவனுக்காகவே வந்தார். ஆனால், இங்கே என்னடா என்றால்...

என்றாலும், டாக்டர் காந்தராஜ் சுதாரித்துக் கொண்டார். அவருக்கு இயற்கையின் அசலை சொல்லாமல், தான் மட்டும் அசலாய் வெளியேறினால் போதும் என்றாகிவிட்டது பதமாக இதமாகப் பேசினார்.

“தம்பிகளா... அண்ணன்களா . சக வயதுக்காரர்களா... உங்களை நான் குறை சொல்லவோ நிறை சொல்லவோ போவதில்லை. ஒரு வீ.டி. டாக்டர் என்கிற முறையில், உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்ல தயாராய் இருக்கிறேன் சீக்கிரமாய் கேள்வி கேட்டு

சீக்கிரமாய் என்னை அனுப்பினால் உங்களுக்கு கோடி புண்ணியம். சரி... கேளுங்கள்."

குடிமகனான ஒரு தடிமகன், ஒரு கேள்வி கேட்டான்.

"ஓகே டாக்டர்! ஓரல் செக்ஸ்ஸால் எய்ட்ஸ் வருமா?"

"பொதுவாக வராது. ஆனால், வாயில் புண் இருந்தால், உறுப்பிலும் புண் இருந்தால் இந்த இருவரில் ஒருவர் எய்ட்ஸ் நோயாளியாக இருந்தால், இது வருவதற்கு வாய்ப்புண்டு."

"இந்த ஓரல் செக்ஸ்ல, எய்ட்ஸ், வீ.டி., ஆபத்துக்கள் வராமல் இருக்க நாங்கள் என்ன செய்யணும்..."

"ஓரல் செக்ஸ்சுகுன்னே தனி ரக காண்டோம் இருக்குது. பனானா... பைன் ஆப்பிள்... மல்லிகை... ஆரஞ்சுன்னு விதவிதமாய் இருக்குது..."

"ஏன் இந்த மாதிரி பேரு வச்சாங்க?"

"அப்படிக் கேளுங்க... இதுல ஒரு உரையை மாட்டினால் அது வாழைப்பழம் போல் வாசனை கொடுக்கும். இன்னொன்றை மாட்டினால் ஆரஞ்சு போல் சுக வாசனையை நுகரலாம். இதனால், ஆக்டிவ் பார்ட்னர் இதை போட்டுக் கொள்ளும்போது, பாசிட்டிவ் பார்ட்னருக்கு, ஒரு இனிமையான வாசனை கிடைக்கும்."

"டாக்டர் அய்யாவுக்கு ஒரு விண்ணப்பம். இந்த பனானா, பைன் ஆப்பிள் உறைகளில் ஒன்றை தாங்கள் போட்டுக் கொண்டு எங்களுக்கு டமான்ஸ் ஸ்டிரேட் செய்ய வேண்டும்."

"எப்பா.. நான் பிள்ளைக் குட்டிக்காரன். என்னை அப்படியே விட்டுடுங்க. மோகனன் கூப்பிட்டான்னு வந்தேன். வேற எந்த பாவமும் அறியேன். ஆனால், வாயிலோ அல்லது எதிலோ செக்ஸ் நோய் வந்தால், என்னை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம். இந்த மாதிரி விவகாரங்களில் நான் நீதிபதி அல்ல. வெறும் சாட்சிதான்..."

"நீங்க ரொம்ப ரொம்ப அழகு. எங்களுக்குன்னே பிறந்தவர் மாதிரி தோணுது. கிளப்ல சேர்ந்துடுங்க காந்தா."

டாக்டர் காந்தராஜ், வெலவெலத்துப் போனார். இந்த மோகனன் சொன்னானென்று ஒரு மாறுதலுக்காக வந்த தன்னை, எங்கே ஒருவழி ஆக்கிவிடுவார்களோ என்று பயந்து போனார். பேண்டையும் சட்டையையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். இரண்டு கைகளையும் பின்புறமாக வளைத்து பிட்டத்தில் வளைத்துக் கொண்டார். 'இந்த "கேய்" பையன்களைப் பற்றி ஆய்வு

செய்து தனது துறைக்கு அறிக்கை சமர்ப்பிக்கலாம் என்ற அவர் எண்ணம் "சம்பில் விழாத கார்ப்பரேஷன் தண்ணீர்" போல் ஆனது. ஆளை விட்டால்போதும்.'

மோகனன், நிலைமையை புரிந்து கொண்டான். இந்தக் கூட்டத்தை பொறுத்தவரை, காதலுக்கு கண் உண்டு. பெண் இல்லை. இந்த ஐம்பதிலும் அழகாக தோன்றும் காந்தராஜை எவனும் எதுவும் செய்து விடக்கூடாதே என்று எச்சரிக்கையானான். அவரை மேடைக்குப் பின்புறமாய் அழைத்துச் சென்று எப்படியோ அவரது காருக்குள் ஏற்றி விட்டான்.

இதற்குள் மது மயக்கத்தில் எல்லோரும் கிறங்கிப் போனார்கள். சிலர் பேண்டை அவிழ்த்து அண்ட்ராயரோடு சேர்த்து தூக்கி எறிந்தார்கள். பலர் சிலரை துகிலுரிந்தார்கள். அத்தனையும் அம்மணங்கள். அதில் ஆனந்த பரவசமானார்கள். ஒருவரை ஒருவர் இழுத்துப் போட்டு கவிழ்த்துக் கொண்டார்கள். கவிழ்ந்து கொண்டார்கள்.

## 2

படித்துக் கிழித்தான் என்று இளக்காரமாக சொல்வார்களே, அந்த சொல்லடையை சிறிது மாற்றி, செல்வாவை, எழுதிக் கிழித்தான் என்று சொல்லலாம். எழுதுவதும், எழுதிய காகிதத்தை சுக்கு நூறாய் கிழித்துப் போடுவதுமாக இருந்தான். அந்த அறை முழுவதும், குப்பைத் தொட்டிபோல் தோன்றியது. போதாக் குறைக்கு எழுதிக் கிழித்த காகிதக் கூறுகள், மேலே சுற்றிய மின்விசிறியினால், அவன் முகத்தில் அடிப்பது போல அரை குறை வார்த்தைகளோடு முட்டிமோதின. காகிதத்தைக் குத்திய பேனா முள், அவன் தலைக்குள் வண்டாக மாறி குடைந்து கொண் டிருந்தது. களைத்துப் போன தலையும், துடித்துப் போன கண்களும், வலித்துப் போன முன் நெற்றியும் அவனுக்கு எரிச்சலை கொடுத்தன. தலை, பூமியைப் போல் தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருந் தாலும், அதே பூமி சூரியனைச் சுற்றுவது போல், அடுத்த வீட்டிற்கு அடுத்த வீட்டிலுள்ள கவிதாவை, மானசீகமாகச் சுற்றிக் கொண்டிருந்தது.

கவிதை எழுதுவதற்காக, காகித கற்றைகளை அடுக்கி வைப்பதிலேயே அவனுக்கு அரைமணி நேரம் ஆகிவிட்டது. ஒரு

கவிதையின் தரம், அதைத் தாங்கும் காகிதத்தில் இருப்பது போல், ஒரு மடிப்போ, பிடிப்போ, கரும்புள்ளியோ, செம்புள்ளியோ இல்லாத காகிதங்களை "பேடில்" சொருகினான். ஆனாலும் அவன் எழுதியவை "பேடாக" இருப்பது, அவனுக்கே துல்லியமாக தெரிந்தது கவிதையின் தரத்தை உயர்த்துவதற்காக, சித்தப்பா வைத்துவிட்டுப் போன கோப்பிலிருந்த கணிப்பொறி காகிதங்களை எடுத்தான். எவ்வளவுக்கு எவ்வளவு அவை லேசாய் இருந்தனவோ, அவ்வளவுக் அவ்வளவு பளபளப்பாக இருந்தன.

செல்வா, கவிதாவை மானசீகமாக முகத்திற்கு எதிராக முன்னிருத்திக் கொண்டே, எழுதப் போனான். மனதிற்குள் அந்த கவிதாதான் சுரந்தாளே தவிர, கவிதை சுரக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவன் மனதிற்குள் அவள் வெள்ளப் பிரவாகமாக வந்து கொஞ்சம் நஞ்சம் உழைத்த கவிதைப் பயிர்களை அடித்துக் கொண்டு போய்விட்டாள்.

செல்வா, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். ஒரு படைப்பாளியின் படைப்பை படிக்கும்பொழுது, 'நாமும் இப்படி எழுதலாம் போலிருக்கிறதே' என்று ஓர் உணர்வு வந்தால், அது படைப்பாளிக்கும் படைப்பிற்கும் கிடைத்த வெற்றி என்று எங்கேயோ ஒரு இலக்கியக் கூட்டத்தில் இவன் நிசமாகவே மழைக்கு ஒதுங்கியபோது, ஒரு பிரபல எழுத்தாளர் பேசியது நினைவுக்கு வந்தது. அப்படிச் சொன்னவர் கவிஞர்கள் **பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன்,** உடுமலை **நாராயணகவி,** பட்டுக்கோட்டை **கல்யாணசுந்தரம், சுரதா, கே.சி.எஸ். அருணாசலம்,** டாக்டர் **தயானந்தன் பிரான்ஸிஸ், தணிகைச் செல்வன், இன்குலாப், வைரமுத்து, வாலி, அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், மு. மேத்தா, அறிவுமதி, பழனிபாரதி** ஆகியவர்களை மேற்கோள் காட்டினார். இவர்களுடைய கவிதைகளை இவன் படித்தானோ படிக்கவில்லையோ, அந்த எழுத்தாளர் மேற்கோள் காட்டிய வரிகளை தன்னாலும் எழுத முடியும் என்ற ஒரு நம்பிக்கை வந்தது. அப்போதே, தானும் ஒரு கவிஞன்தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டான் ஆனால், ஒரு வரிகூட கவித்துவ வரியாக வரவில்லை.

செல்வாவுக்குள் ஒரு பொறி... எலிப்பொறி மாதிரியான திருட்டுப் பொறி. இந்தக் கவிஞர்களின் கவிதைகளையே திருடி அங்குமிங்குமாய் மாற்றி அசல் சினிமாக் கவிஞனாய் ஆகி விடலாமா என்று நினைத்தான். பள்ளிக்கூடத்தில் இவன் படித்த சங்ககால, இடைக்கால, சிற்றிலக்கிய கால கவிதைகளை கையாண்டு

இப்போது பல சினிமாக் கவிஞர்கள் காரோடும், பேரோடும் இருப்பதை அறிவான். ஆனாலும், எழுத்தாளர் கோடி காட்டிய கவிஞர்களில் பலர் காதல் சுவை சொட்டச் சொட்ட எழுதவில்லை. "காடு விளைஞ்சென்ன மச்சான், நமக்கு கையும் காலும்தானே மிச்சம்." என்ற பட்டுக்கோட்டையார் பாடலை இப்படி மாற்றி எழுதலாமா? "கடற்கரை தனித்திருக்கு... கை காலு குறுகுறுக்கு... கடலோரம் போய் கண்ணே... கற்பனையை ஈடேற்ற வா பெண்ணே." என்று உல்டாவாக்கலமா...? 'வா'வுக்கு இருபொருள் கொடுக்கலாமா...?

செல்வாவிற்கு, மனசாட்சி உறுத்தியது. அதோடு கவிதா, அவன், தன்னை பற்றி புதுக் கவிதையில் வர்ணிக்க வேண்டும் என்றாள். மரபுக் கவிதை கூடவே கூடாது என்று ஆணையிட்டாள். இவன், இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைக் கேட்டபோது, 'செல்வம் என்றால் மரபு. செல்வா என்றால் புதுக்கவிதை' என்று ஒரு ஆசிரியை போல் அச்சுறுத்திச் சொன்னாள். அவ்வப்போது பத்திரிகைகளில் புதுக்கவிதைகளை படித்து அனுபவத்தில், 'இம்புட்டுதானா' என்கிற அலட்சியத்தோடு, அவளிடம் ஒப்புக் கொண்டான். இப்போதுதான் புரிந்தது அனுபவத்தில். அவள் இடக்கு மடக்கில் மாட்ட வைத்து விட்டாள் என்பது; முதலில் கவிதையாம். அதற்கு பிறகுதான் குறைந்த பட்ச தீண்டலாம். அவளை சந்திக்க வேண்டும் என்றால் புதுக்கவிதையோடு வரவேண்டுமாம்.

இன்று மாலையில், கடற்கரையில் அவளைச் சந்திப்பதாக ஏற்பாடு. இப்போதோ நள்ளிரவு. சித்தப்பாவின் குழந்தைகள் ஏழு வயது அருணும், மூன்று வயது சுபேதாவும் அவன் படுக்கைக்கு இருபுறமாக படுத்திருக்கிறார்கள். குறட்டைக்கூட விடுகிறார்கள். அந்த குறட்டை அளவிற்குக்கூட கவிதை வரவில்லை. ஒருவரி கிடக்கட்டும், ஒரு வார்த்தைகூட வரவில்லை.

இதற்குள் சித்திக்காரி பாத் ரூமுக்கு போய்விட்டு வந்தாளோ என்னமோ, விளக்கு எரிவதைப் பார்த்துவிட்டு ஷாக் அடிப்பது மாதிரி கத்தினாள்.

"இப்படி விளக்கெரிஞ்சா கரண்ட் பில் யார் கொடுக்கிறது? கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாம்? பெரிய படிப்பு படிக்காராம். பொல்லாத படிப்பு. லைட் ஆப் பண்ணுடா! குழந்தைங்க தூக்கம் கெடும் என்கிற எண்ணமாவது வேண்டாம்? 'அற்பனுக்கு பவுசு வந்தா அர்த்த ராத்திரியில குடை பிடிப்பானாம்.' தூங்குற ராத்திரியிலுமா லைட்டு."

செல்வாவின் முகம் சுண்டிப் போயிற்று. சித்திக்காரி, இப்படி குத்திக் காட்டுவது வழக்கம்தான். அந்த வழக்கமான ஏச்சை வாங்கிக் கொள்வதை, இவன் ஒரு பழக்கமாக்கிக் கொண்டவன்தான். ஆனாலும், கவிதா உள்ளத்தில் இருக்கும் இந்த சமயத்தில், சித்தி அப்படிக் கத்தியது சுய அனுதாபத்தை கொடுத்தது. விளக்கை அணைக்க மறந்தவனாய், தனது வருத்தத்திற்கு அடைக்கலம் தேடுவதுபோல், கவிதாவின் காதலையும், கடற்கரையையும் நினைத்துக் கொண்டான். அவன் கண் முன்னால் கடற்கரை தோன்றியது. கவிதா தோன்றினாள். மற்ற யாரும் தோன்றவில்லை அந்தச் சந்திப்பு நிகழ்ச்சி பிம்பங்களாய் வந்து கொண்டிருந்தன.

## 3

கள்ளக் காதலர்களையும், கள்ளங் கபடமற்ற காதலர்களையும் கண்ணகி சிலை, ஒற்றைச் சிலம்போடு மறைத்து வைத்தாளோ அல்லது தனக்கு கிடைக்காத சுகங்கள் எல்லாம் இவர்களுக்கு கிடைக்கிறதே என்ற ஆதங்கத்தில் முகம் திருப்பி, அவர்களுக்கு முதுகைக் காட்டுகிறாளோ... அன்றைய இளங்கோ அடிகளுக்கும் இன்றைய பட்டிமன்றப் பேச்சாளர்களுக்கும் மட்டுமே வெளிச்சம்.

கவிதாவும், செல்வாவும் மெரினா கடற்கரையில் இருட்டுக்கும் வெளிச்சத்துக்கும் இடைப்பட்ட இரண்டும், கெட்டான் மண்வெளியில் உட்கார்ந்தார்கள். 'எதுக்கும் கைய கொஞ்சம் தள்ளி வையுங்க' என்று அவனைத் தள்ளிக் கொண்டே கவிதா செல்லச் சிணுங்களாய் சிணுங்கினாள். அதோடு முன்னெச்சரிக்கை... வாய்க்கு வந்தது, வயிற்றுக்கு வந்துவிடக்கூடாதே என்ற பயம். அது பயமுறுத்தலாக வெடித்தது. திடீரென்று, வீட்டில் நடந்த ரகளை நினைவுக்கு வந்தது. செல்வா அங்கே இல்லாதது போல் அனுமானித்துக் கொண்டதுபோல், கவிதா, தலையைத் தொங்கப் போட்டாள். உடனடியாக அவளது மாற்றத்தை புரிந்து கொண்ட செல்வா, இப்படிக் கேட்டான்.

"ஏன் ஒரு மாதிரி ஆயிட்டே கவிதா..."

"இன்னைக்கு வீட்ல ஒரே ரகளை.. எங்கண்ணன் மோகனன், வீட்டுக்கு எப்பவாவது ஒரு தடவை வருவான். வந்த உடனேயே, அப்பா கிட்ட பணம் கேட்பான் அடிக்கப்போறது மாதிரி கையை ஓங்குவான் நான் தடுக்கப் போனால், என்னையும் கெட்ட கெட்ட

வார்த்தையால திட்டுவான். அப்பாவையும் மீறி பீரோவை, உடைத்து, பணத்தை எடுத்துக்கிட்டு போயிடுவான். அவன் நடவடிக்கையும் சரியாய் இல்ல... ஐ.ஏ.எஸ். ஆபீசரான எங்கப்பாவால, ஒரு நிமிஷத்துல அவனை உள்ள தள்ள முடியும். ஆனால், பெற்ற மகனாச்சே... திடீரென்று ஏனோ அந்த ரகள நினைப்பு வந்துட்டுது."

"ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில ஒரு பிரச்சினை இருக்கு. ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒரு தீர்வும் இருக்கு... கவலப்படாத கவிதா... எப்போதாவது ஒருநாள் ஒங்கண்ணன் திருந்துவார். பல பெரிய இடத்துப் பிள்ளிங்க இப்படித்தான் இருக்குதுங்க..."

கவிதா சிறிது விலகி உட்கார்ந்தாள். காய்ந்த மண்ணை குடைந்து குடைந்து ஈர மண்ணை எடுத்து வலது கையால் பிசைந்தபடியே, இடது கையை அவன் தோளில் போட்டாள். போட்டபடியே கேட்டாள்.

"எனக்கு பயமா இருக்குது செல்வா! பேசாம படிப்பும் வேண்டாம் கிடிப்பும் வேண்டாமுன்னு உதறிவிட்டு, ஒங்க கிராமத்துலப் போயி செட்டில் ஆயிடலாமா?"

"ஒவ்வொரு நாளும் இப்படி கிளிப்பிள்ளை மாதிரி கேட்டதையே கேட்டால் எப்படி கவிதா? நீ இப்போ பிளஸ் டூ. நானோ காலேஜ்ல முதலாம் வருடம். பட்டப்படிப்பை முடித்து எப்படியும் வேலைக்குப் போகணும். நீயும் உன் ஆசைப்படி டாக்டருக்கு படித்து கிளினிக் வைக்கணும். அதுக்குப்பிறகுதான் கல்யாணம்."

"அதுக்குள்ள நான் கிழவியாயிடுவேன்... நீங்க கிழவனாயிடு விங்க..."

"காதலர்களுக்கு முதுமை, வந்தாலும் காதல் என்றுமே இளமைதான் கவிதா"

"அதுவும் சரிதான். எப்போதோ வரப்போற கல்யாணத்தப் பற்றி இப்போ எதுக்கு பேசணும்?"

"காதல் என்கிறது கல்யாணம் வரையுன்னு கண்ணதாசன் பாடினாரே! நாம காதலர்களாகவே இருப்போம்."

"தத்து புத்துன்னு உளறாதீங்க செல்வா! நான் ஒங்ககூட சுத்துறது எங்கப்பா காதுல விழுந்துட்டுதுன்னு வச்சுக்கவும் அவர் மூணுல ஒன்றை செய்வார் இல்லையான்னா மூன்றையும் செய்வார் ஒன்று, இந்த வயசிலேயே காதலாடின்னு அடி அடின்னு அடிப்பார்

இல்லன்னா அதிகாரத்தைப் பயன்படுத்தி உங்கள போலீஸ்ல பிடிச்சுக் கொடுப்பார்."

"மூணாவது?"

"என் படிப்பை நிறுத்திட்டு, ஏதாவது ஒரு பெரிய இடத்துப் பயலுக்கு கல்யாணம் செய்து வைப்பார்."

"நல்லதையே நினைப்போம். நல்லதே நடக்கட்டும். கவலைப்படாதே. இன்னும் சில வருஷத்துல நாம் சொந்தக் காலுல நிற்கப் போறோம். அதுவரைக்கும் இலைமறைவு காய்மறைவா மூணு மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு தடவையோ சந்திப்போம்."

சுடிதாரோடு, அவள் நிறத்தைப் போன்ற புதுநிற துப்பட்டாவோடு அவனோடு இணைந்து உட்கார்ந்திருந்த கவிதா, அவன் அப்போதே தன்னை கைவிட்டு விட்டதுபோல் அழாக் குறையாய் பேசினாள்.

"என்ன செல்வா நீங்க ..? வாரத்துல ஒரு நாள்தானே சந்திக்கிறோமுன்னு நான் ஒரு வாரத்துல ஒரு நாள்தான் இருக்கணுமுன்னு ஆசைப்படுகிறேன். ஆனா நீங்க என்னடான்னா, மாதக் கணக்கில வாய்தா போடுறீங்க... போகட்டும் உங்களுக்கு வேலை கிடைச்சதும் உங்கப்பா உங்க சாதியிலே ஒரு பெரிய இடத்துப் பெண்ணா நிச்சயிச்சாருன்னா என்ன செய்வீங்க? நீங்கதான் அப்பா பிள்ளையாச்சே!"

செல்வா, சிறிதுநேரம் கண்களை மூடினான் அந்தக் கண்களில், உள் உருவமாய் அப்பா வந்து நின்றார். ஆண் சரஸ்வதி போன்ற வெள்ளாடைத் தோற்றம். அதிர்ந்து பேசமாட்டார். ஆனால், அவர் பேச்சு அழுத்தமாக இருக்கும். கிராமத்தில் எல்லாத் தந்தைகளும், தம் பிள்ளைகளைத் திட்டும்போது, இவனை அவர் "ட ா" போட்டு பேசக்கூட யோசிப்பார். அவர் தன்னையோ பிறரையோ திட்டி ஒரு நாளும் கேட்டதில்லை அப்படிப்பட்ட அப்பா இப்போ..

சொந்தக் கிராமத்துக்கு மானசீகமாய் போய், தந்தையின் தரிசனத்தில் மூழ்கிப் போன செல்வாவை, கவிதா, ஒரு உலுக்கு உலுக்கினாள். அவன் சோகம் அவளுக்குப் புரிந்தது பேச்சை மாற்றுவதற்காக அவன் இடுப்பில் கைபோட்டுக் கொண்டு கேட்டாள்.

"ஆமா... ஒங்கப்பா, அந்தக் காலத்துல கிராமத்துல ஆண்கள்ல பெண்கள்ல பலரை காதலிக்க செய்ததாய் திருக்குறள் மாதிரி

சொன்னீங்களே. இந்த 'அதுக்கு' ஒரு குறளோவியம் கொடுக்கிறீங்களா...."

செல்வா, மீண்டும் கடற்கரைக்கு வந்தான். தந்தையின் தரிசனத்தை அரைகுறையாய் விட்ட அதிருப்தியோடு அவளைப் பார்த்தான். அவள் 'சொல்லுங்க' என்று அவன் முடியை பிடித்து இழுத்தபோது, இவன் மூளைக்குள் பதிவான அப்பாவின் பேச்சு இவன் பேச்சானது.

"அந்தக் காலத்துல, அதாவது அறுபது வருஷத்திற்கு முன்னால, கிராமங்களில் திராவிட இயக்கத்தின் தாக்கத்தால எல்லா வகையிலும் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டதாம். குறிப்பா கலைஞரோட "பராசக்தி", "மனோகரா" வசனங்கள், ஒரு உலுக்கு உலுக்கியதாம். "பராசக்தி" நாடகங்களை போடாத கிராமங்களே கிடையாதாம்.

அதுக்கு முந்தன காலத்துல, கல்யாணமான கணவன் மனைவி, ஒருவாரம் வரைக்கும் நாணிக்கோணி, அப்புறந்தான் படுக்கையை பகிர்ந்து கொள்வார்களாம். அப்புறம் காய்ஞ்ச மாடு கம்பம் புல்ல மேய்ஞ்ச கதையாம். கல்யாணமான பதினோறாவது மாசத்திலே ஒன்பதாவது மாசம் வந்திடுமாம். கம்மாக்கரைவரை தோள்மேல கைபோட்டு, கையோடு கைசேர்த்து, பேசிக்கிட்டே போகிற இந்தத் தம்பதி, ஊருக்கு ஒரு கிலோமீட்டர் தொலைவில், புருஷன்காரன் முன்னால நடப்பானாம். பெண்டாட்டியானவள் அவன் யாரோ தான் யாரோ என்பதுமாதிரி, அரை கிலோமீட்டர் பின்னால நடப்பாளாம். இதை எங்கப்பா ஒரு உதாரணமா சொன்னாரு... எங்கப்பாவோட குட்டாம்பட்டி வாத்தியாருக்கும், வெட்டாம்பட்டி வாத்தியாரம்மாவுக்கும் கல்யாணம். கல்யாணம் முடிந்த ஒரு மணி நேரத்துல அந்த வாத்தியாரம்மா புருஷனாகிப் போன வாத்தியாருக்கு நாலுபேரு முன்னால காபி டம்ளரை நீட்டினாளாம். "சூடு ஆறு முன்னால குடிங்கன்னு" சொன்னாளாம். அவ்வளவு தான்.. ரெண்டு பட்டி வாய்களுக்கும் அவல் கிடைச்சது மாதிரியாம். இப்படி ஒரு பொம்பள இருப்பாளா?ன்னு ரெண்டு ஊர்க் காரர்களும் ரெண்டு மாசம் வரைக்கும் சிரிப்பா சிரிச்சாங்களாம்."

"அப்போ உங்கப்பாவும் அம்மாவும் காதலித்து, கல்யாணம் பண்ணினாங்க என்கிறதா நீங்க சொன்னது பொய்தானே?"

"பொய் இல்ல கவி! நிசம்தான் எங்கம்மாவும் அப்பாவும் அந்த தலைமுறைக்கு அடுத்த தலைமுறை அதாவது கலைஞரோட வசனக்கால தலைமுறை. எங்கப்பா, எட்டாவது படிக்கும்போது

நல்ல தமிழ் வருமாம். கலைஞர் தமிழை கண் மூடிக்கிட்டே ஒப்பிப்பாராம் அந்தக் காலத்துல பெண்கள் ஆறு, அஞ்சு படிச்சிட்டு பீடி சுத்துனாங்க... எட்டாவது வகுப்பான இ.எஸ்.எல்.சி. படித்துட்டு ரெண்டு வருஷம் டிரெயினிங் படிச்சுட்டு வாத்தியாரம்மாவா வந்தவங்க. பின் கொசுவம் கட்டுகிற பெண்கள் மத்தியில இவங்க முன் கொசுவம் வச்சு புடவை கட்டினாங்களாம். வாத்தியாரம்மாக்களுக்கு செகண்டிரி கிரேட் டீச்சர், இல்லன்னா அந்தக் காலத்து பெரிய படிப்பான எஸ்.எஸ்.எல்.சி. வாலிபர்கள் பிடிக்குமாம். பீடி சுத்துற பெண்களுக்கு ஹீரோ டெய்லர், ஒயர்மேன், பீடிக்கடை ஏஜெண்டு, கணக்கப்பிள்ளை, பெட்டிக் கடை இளைஞன், சைக்கிளில் மிட்டாய் போடும் வியாபாரி.

ஆக மொத்தத்துல ஒவ்வொருத்தனுக்கும் ஒவ்வொருத்தி மேல கண்ணாம். ஆனால், தமிழ்தான் வராதாம். அப்பாகிட்ட வந்து 'லவ் லெட்டர்' எழுதித் தரும்படி கேட்பாங்களாம். உடனே எங்கப்பா கலைஞர் பாணியில, 'கண்ணே... பெண்ணே... முத்தே... மாணிக்கமே... இடையில்லா இளம் பெண்ணே... வானத்துச் சந்திரனே... பூமியில் உதித்த புதுமலரே... காணியில் பூக்கும் செண்பகமே... உன் புருவங்கள் வேல்... உன் விழிகள் மீன்... உன் கழுத்தோ சங்கு' என்கிற பாணியில் எழுதிக் கொடுப்பாராம். ஒருவேளை காதலுக்கு பதிலாக, எழுதிக் கொடுத்தவரையும், எழுதச் சொன்னவரையும் கம்பத்தில் கட்டி, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கழுதைமேல் ஏற்றிவிடலாம் என்ற அச்சத்தில், எங்கப்பாவே சம்பந்தப்பட்ட பெண்ணைப் பற்றிய வர்ணனையை, மார்பகத்திற்கு மேலே தான் வைத்துக் கொள்வாராம்."

சீ! போங்க இந்த மாதிரி பேசுறதெல்லாம் எனக்குப் பிடிக்காது. சரி மேற்கொண்டு சொல்லுங்க... பிடிக்காட்டியும் கேட்டுத் தொலைக்கேன்."

வீட்ல அப்பா அம்மாகிட்டயும் அண்ணன்மார் கிட்டயும் மூண்டக்கண்ணி, கட்டையில போறவள், மூதேவி, மேனா மினுக்கி, கவுண்ணி, சண்டாளி, சதிகாரி, பிடாரி, பேய், வீட்டக்கெடுக்கிற ஊமைச்சி, பல்லிளிச்சாள்' என்று பல்வேறு பட்டங்களை வாங்கிக் கொள்ளும் இந்தப் பெண்களுக்கு 'கண்ணே கண்மணியே' என்ற வசன நடையில் எழுதிய கடிதத்தை, எழுத்து கூட்டிப படித்தபிறகு, எழுதியவன் மீது ஒரு கிக் வந்துவிடுமாம். அப்புறம் புளியந்தோப்பாம்... இல்லன்னா கரும்புத்தோட்டம்..."

அப்போ ஒங்கப்பாவுக்கு ஏகப்பட்ட காதலிகளா?

'நீ வேற.. எங்கப்பாவுக்கு, அப்போ வயதே பதினாலுதான். டெய்லர், ஒயர்மேன் மாதிரி ஆட்களுக்கு இந்த மாதிரி லெட்டர்கள,

அவங்க பேரில எழுதிக் கொடுத்திருக்கிறார். இதுல எல்லாப் பெண்களுமே விழுந்துட்டாளுகளாம். ஒரு ஸ்டேஜ்ல, அதாவது எங்கப்பாவுக்கு பதினெட்டு வயசு வந்தபோது, 'நாம ஏன் இப்படி ஒரு லெட்டர் எழுதி ஒரு பெண்ணுக்கு கொடுக்கக்கூடாதுன்'னு ஒரு நினைப்பு வந்துட்டுதாம். இதுக்காக சிறப்புக் காதல் கடிதம் எழுதியிருக்கார். இந்த லெட்டரில் விழுந்தவள்தான் எனது அம்மா. இன்னும் எழுந்திருக்கல... எங்கப்பா, அவ்வளவு பெரிய உள்ளூர் மேதை. கிராமத்திலேயே அந்தக் காலத்துலயே எஸ்.எஸ்.எல்.சி பாஸான முதல் படிப்பாளி. மற்றவங்க அதைத் தாண்டல.. அதோட பொது அறிவுப் புத்தகங்கள நிறையப் படிப்பாரு... வீட்ல இந்து பத்திரிகையத்தான் வாங்குவாரு... அந்தக் காலத்து வில்லுப் பாட்டாளிகளுக்கு சில சமயம் இவரே பாட்டு எழுதிக் கொடுப்பாரு... நாடகங்களுக்கு கதை வசனம் எழுதி அரங்கேற்றினவரு... லேசுப்பட்டவரு இல்ல..."

"எப்பாடி சிரிச்சு சிரிச்சு வயிறே புண்ணாச்சு. போகட்டும். உங்ககிட்ட ஒரே ஒரு கேள்வி. புலிக்கு பிறந்தது எதுவாய் இருக்கும்"

"என்ன பைத்தியக்காரத்தனமாக கேள்வி. புலியாத்தான் இருக்கும்."

"அதனால வர்ணனைப் புலியான லட்சுமணன் என்கிறவருக்கு பிறந்த செல்வா என்கிற நீங்க, உங்க பேருக்கு ஏத்தாப்போல, என்னை வர்ணித்து ஒரு புதுக்கவிதை எழுதி இதே இந்த இடத்துல அடுத்த வாரம் வாசித்துக்காட்டணும். இல்லாட்டி நீங்க வரவேண்டியதில்ல... சரியா?"

"சரியில்லம்மா... பள்ளிக்கூடத்துல 'நேர் நேர் புளிமா' என்று தமிழாசிரியர் சொல்லும்போது, இதை ஏன் "மடையா" என்று சொல்லக்கூடாது சார் என்று கிண்டலடித்தவன் நான் தமிழ்ல தட்டுத் தடுமாறித்தான் தேறினேன். என்னை விட்டுடும்மா."

"புளிமா என்கிற வார்த்தைக்கு இணையாக ஒரு வார்த்தையை கண்டுபிடித்தலிருந்தே உங்களிடம் இலக்கிய ஆர்வம் இருபபது தெரிகிறது. அதனால நீங்க எனக்கு புதுக்கவிதையில ஒரு அன்பளிப்பு கொடுக்கணும்."

"எனக்கு மேடைப்பேச்சுதான் வரும். கவிதை வராதும்மா

"ஒரு துறையில கொடி கட்டிப் பறக்கறவங்களால மற்ற துறையிலும் பிரகாசிக்க முடியும். காரணம் இது ஒரு வகையான சக்தி. இந்த சக்தியை அழிக்க முடியாது. மாற்றிக் காட்ட முடியும் தம்பரன்! உங்கள் கல்லூரி மேடைப் பேச்சுத் திறனை ஒரு

புதுக்கவிதையாய் வடித்துக் கொண்டு வாங்க.... வரணும்.. வந்தாகணும்.."

"கவிதையா? நானா?"

"ரெண்டுந்தான்."

கவிதா வெட்டொன்று துண்டு ரெண்டாய் பேசப் பேச, செல்வா அப்படி ஆனவன்போல் துடி துடித்தான். கவிதை... அதுவும் புதுக்கவிதை... அய்யகோ... (இது அவன் தந்தை, கலைஞரின் தாக்கத்தால் அடிக்கடி சொல்லும் வார்த்தை)

கவிதாவிடம் அடைக்கலமாகவும் அநாதையாகவும் நினைவலைகளில் பயணம் செய்த செல்வா, அப்படியே தூங்கிப் போனான். நள்ளிரவில் செல்வாவை, சித்திக்காரி யதார்த்தத்திற்கு கொண்டு வந்தாள்.

"உன் மனசுல என்னடா நினைப்பு? இன்னும் விளக்கை அணைக்காமல் இருக்கே? நான் சொன்னதுக்கு ஒரு மட்டு மரியாதை வேண்டாம்? அவர் வரட்டும். நாளைக்கு ரெண்டுல ஒண்ணு தெரியணும்."

செல்வா, இரண்டு துண்டாய் ஆனவன்போல், விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தான்.

# 4

காலை ஐந்து மணிக்கெல்லாம், கடிகார அலாரம் அலறியது. அதை அப்படியே விட்டால், சித்தி வந்து திட்டுவாள். சித்தப்பா இருக்கும் சமயத்தில் ஆறு மணிக்கும், இல்லாத சமயத்தில் ஏழு ஏழரை மணிக்கும் தூக்கத்திலிருந்து விடுபடுபவள். ஆகையால் செல்வா, படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து அலாரப் பட்டனை ஒரே அமுக்காக அமுக்கினான். இரவில் கடைசியாக தோன்றும் நினைவு, காலையில் எழுந்ததும் மனதில் முதலாக வரும் என்பார்கள்.

இதற்கேற்ப செல்வாவிற்கும் புதுக்கவிதையும் கவிதாவும் போட்டி போட்டுக்கொண்டு வந்தார்கள். புதிதாக ஐந்தாறு காகிதங்களை அடுக்கிக் கொண்டு கவிதை எழுதப் போனான். அது, கழுதைமேல் சவாரி செய்வதுபோல் ஆகிவிட்டது. வடிவத்திற்கு

ஏற்ற உள்ளடக்கம் இல்லை. உள்ளடக்கத்திற்கு ஏற்ற உருவம் இல்லை உலகத்தில் உள்ள அத்தனை கவிஞர்களையும் திட்டினான். அவள் கேட்டபடி, ஒரு கவிதை எழுத முடியவில்லை என்றால், தன்னுடைய மரியாதை கடற்கரை காற்றோடு கலந்து போய்விடுமே என்று கலங்கினான் இப்ப மட்டும் தனது மரியாதை சித்தியிடம் என்ன வாழ்கிறதாம் என்று நினைத்துக் கொண்டான். ஒருவேளை கவிதையோடு போகவில்லை என்றால், தனக்கு இருக்கக்கூடிய ஒரே ஆதரவான கவிதா தன்னை நிராகரித்து விடுவாளோ என்று கலங்கினான். ஒருவேளை அப்படி நிராகரிப்பதற்குத்தான் பெரிய இடத்துப் பெண்ணான அவள் தன்னை கவிதை எழுதும்படி சதி செய்கிறாளோ என்றும் அளவுக்கு மீறி சிந்தித்தான்.

சித்தப்பா இருக்கும்போது, சித்திதான் காபி போடுவாள் அவர் இல்லாதபோது, இவன் போட வேண்டும். காபியோடு சித்தியை எழுப்பவேண்டும். அதுவும் ஏழேகால் மணிக்கு, குழந்தைகளுக்கோ ஆறுமணிக்கெல்லாம் காபி தேவை. ஆகையால் புதுக்கவிதையை விட்டுவிட்டு, குளியலறைக்குப் போய் அத்தனை காரியங்களையும் முடித்துவிட்டு, வெளியே வந்தபோது மணி ஐந்தரை. அவசர அவசரமாக சமையல் அறைக்குள் ஓடினான். கேஸ் சிலிண்டரை பற்ற வைத்தான். பிறகு பால் வாங்க மறந்து போய்விட்டோமே என்று அடுப்பை அணைத்து விட்டு, ஒரே ஓட்டமாய் ஓடினான். புதுக்கவிதையையும் இப்போது பழைய கவிதையையும் சேர்த்து திட்டிக்கொண்டே ஓடினான். ஆவின் பூத்திற்குள் போய் இரண்டு பால் உறைகளை கையில் எடுத்துக்கொண்டு வந்தபோது, அவை அவன் கையை உருக வைத்தன. கவிதை நினைவிலும், கவிதா நினைவிலும், பாலித்தின் பையை கொண்டு போக மறந்து, கையுருக திரும்பி வந்தான்

அடுப்பை பற்ற வைத்தபோது, ஆறரை மணி இதற்குள் சித்தப்பா குழந்தைகள் அருணும், சுபேதாவும் "அண்ணா அண்ணா" என்று கூவினார்கள். காபி டம்ளர்களோடு அவர்களைப் பார்த்து அந்த அறைக்குள் ஓடினான். கான்வென்ட் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் என்பதால், பல்லை பிரஷ் செய்யாமலே காபி குடித்து பழகியவர்கள். அருணை முகத்தை கழுவச் சொல்லிவிட்டு, சுபேதாவை தூக்கிக் கொண்டுபோய் முகத்தை கழுவினான். சுபேதாவோ தனது பல்லைக் காட்டி 'வாட் கலர் திஸ்' என்றாள். உடனே, இவன், "வெள்ளை நிறம்" என்றான். பிறகு, அவள் உதட்டை மடித்துக் காட்டி 'வாட் ஈஸ் திஸ் கலர்' என்றாள். இவன் "சிகப்பு" என்றான் உடனே அந்தக் குழந்தை தனது கவுனை தூக்கிப் பிடித்துக் கொண்டு 'நோ அண்ணா நோ . திஸ் ஈஸ் ஒயிட்... திஸ் ஈஸ் பிங்க் ' என்றாள்

படுக்கை அறையிலிருந்து, சித்தியின் பயங்கரமான அலறல் கேட்டது

"இங்கிலீஷ்ல பேசற பிள்ளிங்கள கெடுத்துடுவே போலிருக்கே... இதுக்காகவே மாசா மாசம் இந்த பேய்களை, இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துல போட்டு மாசம் அறுநூறு ரூபாய் அழுவுறோம்... ஏற்கெனவே டாடின்னு சொல்ற பிள்ளைங்கள அப்பாவாக்கிட்டே... மம்மியான என்னை அம்மாவாக்கிட்டே... இதுல்லாம் சரிப் படாதுப்பா... தமிழாம் பொல்லாத தமிழு..."

செல்வா, மனதிற்குள் ஏற்பட்ட வேதனையை அதே விகிதாச்சாரத்தில் அன்பு மயமாக உரக்கக் கேட்டான்

"உங்களுக்கு காபி போடட்டுமா சித்தி."

"நான் இன்னும் கொஞ்ச நேரம் தூங்குறது ஒனக்கு பொறுக்காதே..."

இதற்குள், அருண் ஒரு விரலையும், சுபேதா இருவிரலையும் காட்டினார்கள். அருணை மேற்கத்திய டாய்லெட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு, சுபேதாவை தனியாக இருந்த இந்திய டாய்லெட்டுக்கு கூட்டிப் போனான். பிறகு, அவர்களை பல்லில் பிரஷ் செய்ய வைத்தான். இரண்டு குழந்தைகளையும் ஒருசேர குளியலறைக்குள் கொண்டு போனான். அருண் தானாகத் குளித்தான். இவன், அவனுக்கு சோப்பை எடுத்து உடலெங்கும் தேய்த்தான். சுபேதாவை குளிப்பாட்டினான். துணியால் துவட்டினான். இரண்டு பேரையும் வெளியே கொண்டு வந்து, அருணுக்கு வெள்ளை மேல் சட்டையும், நீல கால் சட்டையும் அணிவித்தான். சுபேதாவிற்கு வெள்ளையும் பச்சையும் கலந்த கவுனை அணிவித்தான். சுபேதாவின் தலையை வாரிக் கொண்டிருந்தபோது, சித்தியின் குரல் சிறிது இறங்கியது போல் கேட்டது.

"கீசரை போடு. நான் இன்னிக்கி வெந்நீர்ல குளிக்கணும். அப்படியே காபி கொண்டு வா..."

செல்வா, குழந்தைகளிடம் ஹோம் வொர்க் நோட்டுகளை கொடுத்துவிட்டு, சமையலறைக்குள் ஓடி, காபி தயாரித்தான் அப்போதுதான் வந்த ஐம்பது வயது வேலைக்காரம்மாவிற்கு, சித்தியின் அறையை நோட்டமிட்டபடியே ஒரு கப் காபி கொடுத்தான். இன்னொரு கப்பை சித்தியின் அறைக்கு கொண்டு போனான். 'சித்தி... சித்தி...' என்றான். அவளோ கட்டில் சுகத்திலிருந்து மீள முடியாமல் 'வைத்துவிட்டுப் போ' என்றாள்.

செல்வா, குழந்தைகளும் தானும் இருக்கும் அறைக்கு ஓடி வந்தான் அவர்கள் ஹோம் வொர்க்கை முடிக்க இன்னும் நேரமிருப்பதை அறிந்தான். அந்தச் சமயம் கவிதைக் கற்பனை வந்தது. மீண்டும் நான்கைந்து தாள்களை வைத்துக்கொண்டு, அவனும் கவிதையும் போராடிக் கொண்டிருந்தபோது, சித்தி குளிப்பதற்காக உள்ளே வந்தாள். இவன் பாட்டுக்கு எழுதுவதைப் பார்த்து, மெல்லிய குரலில், அதேசமயம் அழுத்தம் திருத்தமாக ஒரு கேள்வி கேட்டாள்.

"பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறதை விட்டு விட்டு, என்னத்த எழுதிக்கிட்டு இருக்கே .? முடியாதுன்னா சொல்லிடுப்பா... நான் டியூஷன் வச்சுக்கிடுறேன்... நீ வந்ததிலிருந்து குழந்தைங்க மார்க்கும் குறைஞ்சிட்டுது... அதுங்க பேசுற தமிழும் கூடிட்டுது... முடியாதுன்னா சொல்லிடுப்பா... ஒனக்கு மாதிரி ஒரு டீச்சருக்கும் தண்டம் போடணும் அவ்வளவுதான்.."

"இல்ல சித்தி. முன்னைவிட இப்போதான் மார்க் நல்லா வாங்குறாங்க"

"பொய் பேச வேற கத்துக்கிட்டியா?"

"நிசமாய் சித்தி. நீங்கதான் தப்பா நெனைக்கிறீங்க"

"எதிர்த்துவேற பேசுறீயா?"

அம்மாவுக்கும் அண்ணாவுக்கும் இடையே நடக்கும் வாக்குவாதத்தின் தாத்பரியம் புரியாமலே, அருண், அம்மாவின் இடுப்பில் ஒரு குத்து குத்தினான். அண்ணனைப் போல் பழகத் துடிக்கும் சுபேதாவும் அம்மாவின் பிட்டத்தில் ஒரு குத்து குத்தினாள். சித்திக்காரி கூச்சலிட்டாள்.

"முட்டாப்பய பிள்ளிகளா.. மூதேவிகளா... அம்மாவை அடிக்கிற அளவுக்கு வந்துட்டிங்களா... ஓங்க பெரியப்பா மகன் உங்களுக்கு நல்லாதான் சொல்லிக் கொடுத்திருக்கான். இன்னும் கத்தியை மட்டும் எடுத்து கையில கொடுக்கல..."

செல்வா, கோபத்தில் பிள்ளைகளின் காதுகளை திருகினான். உடனே, சித்திக்காரி மீண்டும் கத்தினாள்.

"என் கண்ணு முன்னாலேயே என் பிள்ளைகளை இப்படி பண்றீயே... நான் இல்லாட்டால் என்ன பாடுபடுத்துவே..? ஏய் பேய்ப்பய பிள்ளிகளா.. இனிமே நீங்க என்கூடத்தான் படுக்கணும்..."

"போ.. மாத்தோம்" என்றான் அருண். "அண்ணாகூட த்தான் படுப்பேன்" என்று சுபேதா மழலை மொழியில் பேசினாள்.

சித்திக்காரியும் தன்னைத்தானே திட்டிக் கொண்டாள் குழந்தைகளுக்கு நன்றி சொல்லிக் கொண்டாள் 'இன்று அவர் டூரிலிருந்து திரும்பி வருகிற நாள். இதுகளையும் படுக்கை அறையில் போட்டால் திட்டோ திட்டென்று திட்டுவார். செல்வாவிற்கும் இது தெரியும் அது என்னமோ தெரியவில்லை பகலில் அடிக்காத குறையாக சண்டைபோடும் சித்தப்பாவும் சித்தியும், இரவில் சிரிப்பும் கும்மாளமுமாய் கிடப்பார்கள்

அந்த அறையை பெருக்க வந்த வேலைக்காரம்மா, செல்வாவை, பரிதாபமாகப் பார்த்தாள். இவன் ஒரு சமயம், சித்தியினுடைய ஏச்சு தாங்கமுடியாமல், கட்டிய லுங்கியோடும், போட்ட சட்டையோடும் வெளியேறப் போனபோது, இந்த வேலைக்கார அம்மாதான், அவன் மோவாயைத் தாங்கி, 'ரெண்டு வருஷம் பல்லைக் கடிச்சு பொறுத்துகோ ராசா பாலப் பார்க்கிறதா.. பால் காய்ச்சின பானையைப் பார்க்கிறதா ஒன் சித்தப்பா ஒன்மேல உயிரையே வெச்சிருக்காருப்பா.. ஏடா கோடமா எங்கேயும் போயிடாதேப்பா' என்று மட்டும் ஆலோசனை சொல்லவில்லையானால், செல்வா, இந்நேரம் ஏதோ ஒரு நகரில், பொறுக்கிக் கொண்டு இருந்திருப்பான்

சித்திக்காரி, குளித்து முடித்துவிட்டு அடுப்பறைக்கு போனாள். அரைமணி நேரத்தில் "சாப்பிட்டுத் தொலையுங்க.. நான் கொஞ்ச நேரம் படுக்கணும்... உடம்பு சரியில்ல." என்றாள்

செல்வா, குழந்தைகளை யூனிபாரமாக கூட்டி வந்தான். சித்திக்காரி தட்டில் இட்லிகளை போட்டபடியே, 'உடம்புக்கு சுமமில்லன்னு சொல்றேனே என்ன சித்தி உடம்புக்குன்னு கேட்டியா?' என்று அவனை வம்புக்கு இழுத்தாள் உடனே செல்வா, "எதுக்கும் டாக்டரை போய்ப் பாருங்க சித்தி.. நான் வேணுமுன்னா லீவு போட்டுட்டு உங்களை கூட்டிகிட்டுப் போகட்டுமா?" என்று நேயத்தோடு கேட்டான் சித்திக்காரி கனிந்து போனாள் "நாலு இட்லி மட்டும் சாப்பிடுறியே .. வயிறு கேட்குமா .. இன்னையிலி ருந்து ஆறு இட்லி சாப்பிட்டாகணும் இந்தா ஒனக்கு பிடிச்சமான மிளகாய்ப் பொடி.... ஏய் மூதேவிகளா! இன்னுமா உங்க அண்ணன் உங்களுக்கு ஊட்டணும். சீக்கிரமாகட்டும் அவனும் காலேஜுக்கு போகணுமில்ல.." என்றாள்

செல்வாவும், வேலைக்காரம்மாவும் ஒருவரை ஒருவர் அர்த்தத்தோடு பார்த்துக் கொண்டார்கள் இந்த சித்தியை பாம்பென்று அடிக்கவும் முடியாது, பழுதென்று தள்ளவும் முடியாது சாப்பாட்டு விஷயத்தில் செல்வாவிற்கு என்றுமே அவள் குறை வைத்ததில்லை ஒருசில சமயங்களில் இவன் துணியையும்

துவைத்துப் போட்டிருக்கிறாள். செல்வா பாதி இட்லி வாயோடு, "டாக்டருக்கிட்ட போகலாமா சித்தி." என்றான்

"உங்க சித்தப்பா, காலையிலே வருவாரு. அவர் கூட்டிட்டுப் போவாரு... நீ குழந்தைகளை விட்டுட்டு காலேஜுக்குப் போ.." எனக்கு ஆஸ்மா இருக்குமான்னு சந்தேகமா இருக்குது. மூச்சு வாங்குது... இன்னிக்கு ஒன் சித்தப்பாவ கூட்டிட்டுப் போகச் சொல்கிறேன்" என்றாள். 'இது கத்துவதால் ஏற்படுகிற இளைப்பு.. ஆஸ்மா இல்லை' என்று வாயெடுக்கப் போன செல்வா, அதற்கு முன்னெச்சரிக்கையாக அதே வாயை இட்லித் துண்டுகளால் அடைத்துக் கொண்டான்.

செல்வா, ஸ்கூட்டரில், சுபேதாவை முன்னால் நிறுத்திக் கொண்டும், அருணை பின்னால் இருத்திக் கொண்டும் புறப்பட்டான். ஆரம்ப காலத்தில் அப்படியே அதே வண்டியில் கல்லூரிக்குப் போவான். என்றைக்கு சித்தி "பெட்ரோல் என்ன கொட்டியா கிடக்குது..." என்று தன்பாட்டுக்குச் சொன்னாளே, அன்றையிலிருந்து குழந்தைகளை விட்டுவிட்டு, அந்த இரு சக்கர வாகனத்தை வீட்டில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு, பேருந்து நிலையத்தைப் பார்த்து ஓடுவான். குறைந்தது ஐந்தாறு நிமிடம் தாமதமாகத்தான் முதல் வகுப்பிற்கே போக முடிகிறது. இதனால் மாணவர்கள் இவனுக்கு 'லேட்டன்' என்று பெயர் வைத்தார்கள். 'டே... லேட்டா..' என்றுதான் இவனை செல்லமாகக் கூப்பிடுவார்கள். இவன் லேட்டாக வருவதால் இவனை மாணவ தாதாவாக நினைத்துக் கொண்டு ஆசிரியர்கள் எதுவுமே சொல்ல மாட்டார்கள்.

கல்லூரிக்குப் போன செல்வாவிற்கு, பாடத்தில் கவனம் போகவில்லை. பொதுவாக விரிவுரையாளர் சொல்லச் சொல்ல அப்படியே தானும் சொல்லி மனதுக்குள் பதிவு செய்துக் கொள்வான். ஆனால் இன்றோ, அவர் என்ன சொல்கிறார் என்பதே புரியவில்லை. முதல் மூன்று வகுப்புக்களிலும் கவிதை மயமானான். இடைவேளையில் எழுதிப் பார்த்தான். இயலவில்லை ஆனாலும், அதுவே ஒரு வைராக்கியமாகி விட்டது

மாலை வகுப்புக்களை கட்டடித்துவிட்டு, கல்லூரி நூலகத்திற்குள் நுழைந்தான். நீண்ட மேஜையில் பல்வேறு இதழ்கள் துண்டு துண்டாக கிடந்தன. பெரிய இதழ்கள், சிற்றிதழ்கள், அறிவு ஜீவிகள் நடத்தும் தனிச்சுற்றுப் பத்திரிகைகள் என்று பல்வேறு வகை ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு வகையில் கவிதை இருந்தது இவனுக்கு தெம்பு கொடுத்தது. கூடவே கவிதை எப்படி இருக்க வேண்டுமென்று ஒரு பிரபல கவிஞர், லோக்கல் கவிஞர்களுக்கு

சொல்லிக் கொடுப்பதுபோல் ஒரு கட்டுரை எழுதி இருந்தார். செல்வா அந்தக் கட்டுரையை மூன்று தடவை படித்தான். அந்தக் கட்டுரைக்கு ஏற்ப எழுதத் துவங்கினான். வார்த்தைகள் மட மடவென்று வந்தன. அவனுக்கு ஒரு அறிவு ஜீவியாகி விட்டதுபோல் ஒரு ஆனந்தம். கவிதா, மோவாயில் கை வைத்து அவனைப் பார்த்து வியக்கப் போகிறாள் என்ற கற்பனையில், வகுப்புக்களை கட்டடித்ததுகூட அவனுக்கு தவறாய் தோன்றவில்லை.

# 5

அந்த மெரினா கடற்கரை பூத்துக் குலுங்கியது. ஆண்கள் செடிகளாகவும், பெண்கள் கொடிகளாகவும் பின்னிப் பிணைந்திருந்த பகுதி. இருள்மயமே அவர்களுக்கு ஒளி மயமாக தோன்றிய இடம். என்றாலும், அங்கே சென்ற செல்வாவை கவிதா இழுத்துப் பிடித்துக் கொண்டே, 'முதலில் உங்க கவிதையை சொல்லுங்க' என்று கடற்கரையின் விளிம்புப் பகுதிக்கு வந்து உட்கார்ந்தாள். அவன் கையைப் பிடித்து அவனையும் உட்கார வைத்தாள். அவள் கை வலுவை பார்த்த செல்வா கேட்டான் ஒரு கேள்வி.

"நீ என்ன கராத்தே பெண்ணா? உன் பிடி இரும்புப் பிடியாய் இருக்கே?"

"ஒரு பெண்ணோட கடைக்கண் பார்வையில் மண்ணில் குமரருக்கு மாமலையும் ஒரு கடுகாம் என்றார் பாரதிதாசன். இது ஒரு ஆணாதிக்கப் பார்வை. அவரே பெண்ணாக இருந்தால், காதலியின் கைப்பிடியில் காதலனும் ஓர் கடுகாமுன்னு பாடியிருப்பார். இப்போ நீங்க என் தோளில கிடக்கிற கையை எடுக்கறீங்க... அதே கையால பைக்குள்ள இருக்கிற கவிதைய எடுத்துப் படிக்கிறீங்க... நிறைய எழுதியிருக்கீங்களோ.... உங்க சட்டைப்பை கர்ப்பம் தரிச்ச பெண்ணு மாதிரி துருத்திக்கிட்டு நிற்குது..."

செல்வா, பெருமிதமாகச் சொன்னான்

"இது கவிதைக் கற்பம். இப்போது பிரவசம் நடக்கும் பார்"

செல்வா, இலக்கியக் கர்வத்தோடு இரண்டாய மடித்த அந்தத் தாள் கற்றைகளை எடுத்து சத்தம் போட்டே படித்தான்

"கானல் சதுரத்தின் வேனல் வெளிப்பாடு
வேனல் வெளிப்பாடுகளில் கோணல் சரிவுகள்
கானலும் சதுரமும் கலந்தவள் கவிதா
வினைப்பாலின் திணைப்பயனோ?
திணைப்பாலின் வினைப்பயனோ?
ஊடகத்தின் பூடகம்
பூடகத்தின் ஊடகம்
ஊடகமும் பூடகமும்
ஒன்றித்த லாகவங்கள்"

கவிதா 'ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்' என்று சொன்னபடியே அவன் வாயை பொத்தி, கையை ஈரப்படுத்தினாள். அந்தக் காகித கற்றையில் லயித்துப் போய் வாசித்த செல்வா அவள் கையை விலக்கிக் கொண்டே கேட்டான்.

"என்ன கவிதா! நான் நல்ல தமிழில் கவிதை படிக்கும்போது, நீ இங்கிலீஷ்ல திட்டுறியே... திட்டுறதா இருந்தாலும் கவிதையில திட்டு..."

"ஒங்க கவிதை லட்சணத்துக்கு, திட்டப்படாது. நாக்குல சூடு போடணும். எழுதுற கைய முறிக்கணும்..."

"இப்படித்தான் எல்லா ஜனரஞ்சக வாசகர்களும் கேட்கிறாங்க... இந்தக் கவிதை, அறிவு ஜீவிகளுக்காக ஒரு அறிவு ஜீவி எழுதிய புதுக்கவிதை..."

"புரியாததற்குப் பெயர்தான் புதுக்கவிதையா?"

செல்வா, தான் படித்த கட்டுரையின் சில பகுதிகளை தானே சொல்வது போல் ஒப்பித்தான்.

"எடுத்த எடுப்பிலேயே புரிவது கவிதையல்ல. கவிதையின் நோக்கம் வாசிப்பு சுகம் அல்ல. மூன்று நான்கு தடவை படித்த பிறகுதான், அதன் பொருள் புரியவேண்டும் அப்படித்தான் நான் எழுதியிருக்கேன்.. ஒரு கவிதையில் வாசிப்பு, மறுவாசிப்பு, அசை போடல், அடிமனத் தேடல், மறு பரிசீலனை, சுய புரிசீலனை, சுயத்தை இழந்த பார்வை, பார்வையை இழந்த சுயம் இப்படி ஆயிரம் இருக்குது... ஒரு மாதம் டைம் கொடுக்கறேன்... உன்னை அறிவு ஜீவியாய் மாற்றிக் கொள். அப்புறம் இந்தக் கவிதையின் பொருள் புரியும்."

கவிதா, அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் ஒருவேளை இவனுக்கு பித்து பிடித்துப் போய்விட்டதோ. இனிமேல் குறுந்தாடி வைக்க வேண்டியதும், ஒரு ஜோல்னா பையை போட்டுக்

கொள்ளவேண்டியதும், அரக்கப் பரக்கப் பார்க்க வேண்டியதும் தான் பாக்கி. அய்யய்யோ! இவரை இனிமேல் கவிதை எழுதவே சொல்லக்கூடாது.'

கவிதா, அவனது வலது காதை செல்லமாக அல்லாமல், வலிக்கும்படி முறுக்கியபடியே கேட்டாள்

"ஒழுங்கா பதில் சொல்லுங்க! இது நீங்க எழுதுன கவிதை இல்ல. இப்போ நீங்க பேசுற பேச்சுக்கு உங்களுக்கு எவனோ பின்னணிக் குரல் கொடுக்கான். கொடுத்தவன் யார் சொல்லுங்க..."

"நான்தான்... நானேதான்.."

"நம்ப மாட்டேன்... நம்பவே மாட்டேன். இந்தக் கவிதை, நம்ம, அந்தரங்கத்தை நீங்க எவன் கிட்டயோ சொல்லி, அவன், உங்க அப்பா எழுதிக் கொடுத்தது மாதிரி, இப்படி எழுதிக் கொடுத்திருக்கிறான். இப்போது உங்கள் காதல்மீதே எனக்குச் சந்தேகம்."

கவிதா, அவன் காதை அவனிடமே ஒப்படைத்துவிட்டு, கால்களைத் தூக்கி முட்டிகளின் முனையில் முகம் போட்டாள். செல்வா, அவள் முகத்தை நிமிர்த்தப் போனான். அவள் பற்களால் கடிபட்ட கைகளை உதறியபடியே, அவள் முன்னால் எழுந்து, மூன்று முறை தோப்புக் கரணம் போட்டபடியே விளக்கமளித்தான்.

"என்னை நம்பு கவிதா.. நம்ம காதலைப் பற்றி எந்த பயல் கிட்டயும் மூச்சு விடல... கல்லூரி நூலகத்திற்குப் போனேன். அங்கே வந்த எங்க இணை தமிழ்ப் பேராசிரியர்கிட்ட புதுக்கவிதை பற்றி விளக்கம் கேட்டேன். பல இலக்கிய கூட்டங்களுக்கு போனவர் அவர். பல கூட்டங்களில் அடித்துப் பேசுவார். அடிபட்டும் வருவார். இந்தக் கவிதையை அவரிடம் காட்டினேன் 'இதற்கு ஈடாக இனிமேல்தான் ஒரு கவிதை பிறக்க வேண்டும்' என்றார். பச்சையாக சொல்லப்போனால், ஒரு இலக்கிய இதழில் வந்த கவிதையை அப்படியே காப்பி அடித்து கொண்டு வந்தேன்."

கவிதா, மீண்டும் அவன் காதைத் திருகியபடியே இன்னொரு கேள்வி கேட்டாள்.

"இனிமேல் அறிவு ஜீவிகளின் பக்கம் போவீங்களா?"

"மாட்டேன். மாட்டவே மாட்டேன்."

"சரி போகட்டும். இந்தக் கவிதை மண்ணாங்கட்டி எதுவும் வேணாம் என்னை சந்திப்பதற்கு முன்னால் நீங்க எப்படி இருந்தீங்க.

என் சந்திப்புக்குப் பிறகு எப்படி ஆனீங்கன்னு யதார்த்தமா, செயற்கைத்தனம் இல்லாமல் கட்டுரை மாதிரி எழுதுங்க... உரைநடையாவது உங்களுக்கு வருதான்னு பார்ப்போம்... என்னைப் பற்றி ஒரு வர்ணணைகூட இருக்கக்கூடாது. அதை பதிவு செய்ய கவிஞனோ, எழுத்தாளனோ தேவையில்லை. கண்ணாடி போதும். அதேசயமம், நான் உங்களிடம் ஏற்படுத்திய மாற்றத்தை குறிப்பிடணும்."

"இதைத்தான் பல தடவை நேர்லயே சொல்லிவிட்டேனே... இந்த புதுக்கவிதை அனுபவத்திற்குப் பிறகு, எழுதுறதுன்னா எனக்கு பயமாய் இருக்குதும்மா... இப்பவே நேருக்கு நேராய் சொல்லிடுறேன்..."

"நாம் கைப்பட ஒரு கதை எழுதுறோம். அது பத்திரிகையில பிரசுரமானால், என்ன சுகம் கிடைக்குமோ, அதைவிட அதிக சுகம் நீங்க கைப்பட எழுதின கடிதத்தில் கிடைக்கும். இதய உணர்வுகளுக்கு உங்க வாய் ஈடாகாது. நீங்கள் எழுதித் தருகிற கடிதத்தை ரகசியமான இடத்தில வச்சு கண்ணுல ஒற்றி ஒற்றி ஒரு நாளைக்கு ஒன்பது தடவையாவது படிப்பேன். அந்த அளவுக்கு நீங்க எழுதுவிங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்குது...."

"மொதல்ல நான் உன்னிடம் ஏற்படுத்திய மாற்றத்தை விலாவாரியா நீ எழுதிக் கொடு."

"நம்மளால முடியாதுப்பா."

"ஏன் முடியாது? உன்னால் முடியும் கவிதா. ஆனாலும் பிற்காலத்துல நம்ம காதல் தோல்வியுற்றால் அந்த லட்டரை வச்சு சினிமாவுல வாறது மாதிரி நான் உன்னை பிளாக் மெயில் செய்வனோன்னு பயப்படுற...."

"அப்படிப் பயப்பட்டாலும் தப்பில்லியே...."

செல்வாவிற்கு, என்னவோ போல் இருந்திருக்க வேண்டும். அப்படியே எழுந்தான். தன்பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தான். அவளை திரும்பிக்கூட பார்க்கவில்லை. அதுவும் வாகன விளக்குகள், விட்டில் பூச்சிகளாய் தெரிந்த கடற்கரைச் சாலையை நோக்கி நடந்தான். கவிதா, தான் சொன்னதன் வலிமையையும், தவறையும் உணர்ந்தவள் போல் அவன் பின்னால் ஓடினாள். சரியாக கண்ணகி சிலைக்குப் பின்பக்கமாக, அவன் சட்டைக் காலரை பிடித்து விட்டாள் சுற்றும் முற்றும் போட்டிருந்த சிமெண்ட் பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்த பெரிசுகள் என்னமோ ஏதோவென்று

எழுந்துவிட்டன போய்க்கொண்டும், வந்து கொண்டும் இயங்கியவர்கள் நின்றார்கள் ஒருசிலர் கவிதா பக்கமாய் போய் நின்று "பொறுக்கிப் பயல்களுக்கு இதுவே பொழைப்பா போச்சு... ஒன்னை என்னம்மா செய்தான்? நடந்ததைச் சொல்லு... அதோ தெரியுதா உங்கள் நண்பன். அதாம் போலீஸ் போஸ்ட். அதுல இவனை ஒப்படைத்திடலாம்." என்று பரிந்துரைத்தார்கள்.

செல்வா, வெலவெலத்தான். அவன் பற்கள்கூட தானாய் ஆடுவது போல் தோன்றியது. சுற்றி வளைத்த கூட்டத்தைப் பார்த்து கவிதா, கையெடுத்துக் கும்பிட்டபடியே கெஞ்சினாள்

"இவன் என்னோட கஸின் பிரதர். எங்க வீட்டுல தங்கித்தான் படிக்கான். வீட்ல ஒரு சண்டை. ரெண்டு நாளா ஆளக்காணோம். இங்கே தேடிவந்தால் ஆள் அகப்பட்டான். என்னைப் பார்த்ததும் ஓடுறான். அவ்வளவுதான். பார் உன்னால... உன்னால எத்தனை பேர் வேடிக்கைப் பார்க்கிறாங்க பாரு...."

கவிதா, நிசமாகவே அழுதாள். வேடிக்கை பார்த்த கூட்டத்திற்கு ஒரு விக்கல். அந்தரங்கம் அம்பலம் ஏறியதற்காக ஒரு கேவல். கூட்டத்தில் அப்பாவுக்கு தெரிந்தவர் யாராவது இருக்கலாம். அவ்வளவுதான் ரகளை ஏற்படும். தன் ஒழுக்கத்தைப் பற்றி கவலைப்படாதவர்கள் தான் பிள்ளைகளின் ஒழுக்கத்தில் கண்டிப்பாக இருப்பார்கள். அப்பா அந்த வகை. இந்த செல்வா, எந்த வகை?

கூட்டத்தினர், ஒருவரை ஒருவர் பார்த்து கண் சிமிட்டிக் கொண்டார்கள் இந்த "கஸின் சிஸ்டர், கஸின் பிரதர் விவகாரம்" அவர்களுக்கும் அத்துபடி. இந்தச் சமயம் பார்த்து, கழிவறை பக்கம் ஒரு அடிதடி; கூட்டம் இவர்களை விட்டுவிட்டு அங்கே ஓடியது. முன்னெச்சரிக்கையாக, பின்வாங்கியும் முன் வாங்கியும் உஷாராக ஓடிப்போய் தங்களுக்கு ஆபத்து ஏற்படாத ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று கொண்டு, இரண்டு பேரின் சொற்போரோடு கூடிய மற்போரை வேடிக்கை பார்த்தது.

கவிதாவும் செல்வாவும், ஒருவரோடு ஒருவர் பேசாமல் கண்ணகிச் சிலையிலிருந்து தெற்குப் பக்கமாக பிளாட்பாரத்தில் நடந்து கொண்டே போனார்கள். அவனுக்கு பின்னால் நடந்த கவிதா பேசிக் கொண்டே நடந்தாள்.

"உங்க பித்துக்குளி தனத்தால நடக்கக்கூடாதது நடந்தது பார்த்தீங்களா... சரியான கிராக்கு.."

"நான் கிராக்கு இல்ல.. மானஸ்தன்... நான் பிளாக்மெயில் செய்தாலும் செய்யலாமுன்னு உனக்கு ஒரு எண்ணம் வந்தது பாரு...

அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை நான் ஏற்படுத்தியிருக்கேன் பாரு.. இதுக்காக எனக்கு நானே தண்டனை வழங்குறது மாதிரி பிரியுறேன்."

"ஸாரி.. செல்வா. சும்மா ஜோக்காத்தான் சொன்னேன். விலகிப் விலகிப் போன உங்களை வளைத்துப் போட்டது நான்தான். உங்க வீட்டு வேலைக்காரம்மா நீங்க படுற பாட்டை சொன்னபோது நிசமாவே அழுதுட்டேன். பெண்களை மானபங்கபடுத்துற இந்தக் காலத்துல, நீங்க ரொம்ப ரொம்ப நல்லவர்னு அந்தம்மா சொன்னாங்க... காலேஜ்ல நல்லா பேசி மெடல் மெடலாய் வாங்கியிருக்கீங்கன்னு வேலைக்காரம்மா சொன்னாங்க... அதனால ஒங்க மூஞ்சு முகரக் கட்டைக்காக நான் உங்களை காதலிக்கல... உங்க டேலண்டுக்காகவும் நல்ல குணத்துக்காகவும்தான் காதலிக்கிறேன்."

"எங்க சித்தப்பா மகன் ஐ.ஏ.எஸ். டிரெயினிங் போயிருந்தான். அவன்கிட்ட ஒரு வங்காளப் பொண்ணு... ஒரு ஓரிசா பொண்ணு... காஷ்மீரி பொண்ணு இவ்வளும் ஐ.ஏ.எஸ். தான். இவன்கிட்ட ஒவ்வொருத்தரும் என்னை கட்டிக்கிறீங்களான்னு கேட்டிருக்காங்க.. உடனே இவன் நானோ கருப்பிலேயோ கருப்பு அண்டங் கருப்பு.... மொழியும் மதமும் வேற வேற... நான் ஒரு புத்தகப் புழு... என்ன ஏன் விரும்புறீங்கன்னு கேட்டதுக்கு, அவளுக ஒவ்வொருத்தியும் என் கணவருக்கு அழகு முக்கியமில்ல. ஆரோக்கியமான உடம்பு முக்கியம். எந்தக் கெட்டப் பழக்கமும் இருக்கக்கூடாது. பெண்களை மதிக்கத் தெரியணும்... அதனால நீங்க எனக்கு கணவரா வந்தா சந்தோஷப்படுவேன்னு, சொல்லியிருக்காங்க.... அதாவது இந்தக் காலத்து பெரிய பதவி பெண்களுக்கு, கணவன் என்கிறவன், அவளை மதிக்கச் தெரிந்தவனாகவும், நல்லவனாகவும், தோழனாகவும் இருக்கணும்...."

"உங்க சித்தப்பா மகன் என்ன செய்தான்?"

"அந்தப் பெண்களை உதறிட்டு, நான் உங்கள காதலிக்கிறது மாதிரி ஒரு தொட்டாச்சிணுங்கி பொண்ண காதலிக்கிறான். முகம் போற போக்க பாரு.. உங்களுக்கு சென்ஸ் ஆப் ஹுமரே இல்ல... சரி போகட்டும். உங்க மேல எனக்கு நம்பிக்கை இருக்கு என்கிறதை நிரூபிக்கிறதுக்கு, நானே ஒரு லவ் லெட்டர் எழுதி உங்களுக்குத் தரப் போறேன்."

"எழுது. எழுதாமல் போ. நான்தான் முதல்ல எழுதுவேன்."

"ஒங்க மேல இருக்கிற நம்பிக்கையை நிரூபிக்கிறதுக்காக இதுவரைக்கும் போகாத சீரணி அரங்கத்திற்குப் பின் பக்கம் போவோமா? இன்னிக்கு உங்களுக்கு அதிக சலுகை.."

"கொடுக்கணுமா.. எடுக்கணுமா.."

"ரெண்டும்."

இருவரும், கடல் மண்ணில் தடம் போட்டார்கள். அந்தத் தடங்கள், ரெட்டை ரெட்டையாகவும், இரண்டு அடுக்குகளாகவும், ஒன்றின் மேல் ஒன்றாகவும் ஆழப் பதிந்தன. கால் பின்ன கை பின்ன அப்படிப் பின்னியது தெரியாமலேயே சீரணியின் பின்பக்கம் உட்கார்ந்தார்கள். ஆங்காங்கே ஜோடிகள் அருகருகே ஒன்றுக்கு ஒன்று பாதுகாவலாய் கட்டிப் பிடித்து கிடந்தன. முகமறியா ஜோடிகள். செல்வாவும் கவிதாவும் அந்த ஜோடிகளிடமிருந்து சிறிது விலகி உட்கார்ந்தார்கள். கவிதா, அவன் தோளில் தலை சாய்த்தாள். அப்போது பார்த்து, ஒரு வேர்க்கடலைப் பயல் முன்னால்போய் உட்கார்ந்தான். மூன்று ரூபாய்க்கு வேர்க் கடலையை வாங்கிய பிறகு, ஒரு பூக்காரி முழம் ஆறு ரூபாய் என்றாள். கவிதா, அவசர அவசரமாக இரண்டு முழம் வாங்கி, செல்வாவை, தன் தலையில் வைக்கும்படி குனிந்தாள். அவன் அவள் பின்னலை பூச்சரமாக்கிக் கொண்டிருந்தபோது, இரண்டு மூன்று பேர் அவர்களை சுற்றிச் சுற்றியே வட்டமடித்தார்கள். எங்கிருந்தோ வந்த ஒரு பேண்ட் போட்ட எருமை அவர்களுக்கு எதிரில் உட்கார்ந்து ரசனையோடு பார்த்தது.

செல்வாவும் கவிதாவும் அந்த இடத்திலிருந்து, வடக்குப் பக்கமாக நடந்து, இன்னொரு இருட்டு வெளியில் கையோடு கை சேர்த்து உட்கார்ந்தார்கள். அவன் தோளில் இவள் கையும், இவள் தோளில் அவன் கையும் படரப் போன நேரத்தில், அங்கே சுற்றிக் கொண்டிருந்தவர்கள், இங்கே வந்துவிட்டார்கள். போதாக்குறைக்கு, அந்த பேண்ட் போட்ட எருமையும் இவர்களுக்கு முன்னால் வந்து சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தது. கவிதா பயந்து போனாள். 'போகலாம்... போகலாம்.." என்று சொன்னபடியே' எழுந்தாள். 'எதுக்குப் பயப்படணும்' என்றான் செல்வா. 'இது பயப்படுற விஷயம் மட்டுமல்ல.. கற்புப் பிரச்சினை' என்றாள். பிறகு ஒரு சந்தேகம் கேட்டாள் 'எத்தனையோ ஜோடிகள் இருக்கும்போது, நம்மை மட்டும் ஏன் இந்த தடியன்கள் சுத்துறாங்க' என்றாள். அவளுக்கு பதிலளிக்க முடியாமல், செல்வா குழம்பியபோது, அதே வேர்க்கடலை பையன், வந்தான். அவர்களுக்கு உபதேசம் செய்தான்.

"நீங்க ரெண்டு பேரும் பசங்க.. அதாவது சின்ன வயசுப் பசங்க... ஒங்கள மாதிரி சின்ன வயசுக்காரங்கள மிரட்டி கற்பழிக்கிறது இதோ சுத்துறாங்களே இந்தப் பயல்களுக்கு ஒரு பொழுது போக்கு. ஏன்னா உங்களால வெளில சொல்ல முடியாது பாருங்க... ஆனால், மத்த ஜோடிங்க அப்படி இல்ல நல்லாப் பாருங்க. ஒவ்வொருவரும்

ஒரு தடியன்.. இப்படில்லாம் நடக்கலாம் என்று எதிர்பார்த்து அதை சமாளிக்கிற தைரியத்தோட வர்றவங்க... இவங்ககிட்ட அந்தப் பயலுவ பாச்சா நடக்காது. இவனுகளோட ஜோடிகளும் காசுக்காகவே எதுக்காகவோ வருகிற பஜாரிங்க."

"அதனால இந்த பெரிசு ஜோடிங்ககிட்ட போகமாட்டாங்க... நீங்க திரும்பிப் பாராம ஓடுங்க.... எப்போ காதலிக்கிறதுன்னு வந்துட்டிங்களோ அதுக்கு ஏத்தபடி நடந்துக்கணும். அதாவது சுற்றிச் சுற்றி வராவங்களை ஓரக்கண்ணாலதான் பார்க்கணும். அவங்கள அலட்சியப்படுத்துறது மாதிரி இருக்கணும். நீங்க என்னடான்னா வாரவனையும் போறவனையும் பயந்துகிட்டே பார்க்கிறீங்க... இதனால உங்களை என்ன வேணுமுன்னாலும் செய்யலாமுன்னு அந்த கடற்கரை பொறுக்கிகளுக்கு ஒரு எண்ணம் வந்துடுது. அதனால உங்களுக்கு இந்த ஏரியா ஒத்துவராது. வேர்க்கடலை வேணுமா?"

கவிதாவும், செல்வாவும் வேர்க்கடலை வாங்கும் சமயத்தில், ஏதாவது நடந்துவிடக்கூடாதே என்ற பயத்தில், வேதாந்திபோல் பேசிய அந்த பிஞ்சுப் பழத்தின் கையில் ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தை திணித்து விட்டு, வேக வேகமாக வெளிச்சம் நிலவும் பகுதிக்கு வந்தார்கள். கூடவே ஆள்கூட்டம் அதிகம். பழக்கப்பட்ட குரல் கேட்டு கவிதா தெற்குப் பக்கமா திரும்பினாள். அவள் அண்ணன் மோகனன் நாலைந்து பேரோடு நாட்டியமாடிக் கொண்டிருக்கிறான் மத்தியில் ஒருவன் டேப் அடித்துக் கொண்டு கானா பாட்டை பாடுகிறான். அண்ணன் குதிக்கிறான்; தரையை மிதிக்கிறான். அங்குமிங்குமாய் தாவுகிறான்.

கவிதா, செல்வாவின் முதுகைத் தள்ளிக் கொண்டே கடற்கரையின் விளிம்பிற்கு ஓடினாள் அவனிடம் பதட்டத்தோடு பேசினாள்

"இனிமேல் இந்தப் பக்கம் வரப்படாது செல்வா. அங்கே குதிச்சுக்கிட்டிருக்கே ஒரு கூட்டம் அதுல ஆடிக்கிட்டு இருக்கிறவன் எங்கண்ணன் மோகனன். அவன் கண்ணுல பட்டால் அவ்வளவுதான்.."

"நானும் அதைத்தான் சொல்லணுமுன்னு நெனச்சேன்... ஒங்கண்ணன் நல்லாவே ஆடுறான்."

"எங்கண்ணன் பரத நாட்டியம் நல்லா கற்றுக் கொண்டவன். பதினாலு வயசிலேயே இவன் நாட்டியம் அரங்கேறியது. அப்புறம் குடும்பத்துல என்னல்லாமோ நடந்தது இவன் சித்தன் போக்கு சிவன் போக்காய் ஆகிட்டான் இனிமேல் அவன் எக்கேடு

கெட்டாலும் சரிதான். எங்கப்பா அவனை தண்ணி தெளிச்சு விட்டுட்டாரு... பெற்ற கடனுக்காக அவன் கொடுக்கிற ஏச்சையும் பேச்சையும் வாங்கிக்கிட்டு, அதுக்கு பதிலாக அவன் பணம் எடுக்கும்போது சும்மா இருக்காரு... சரி அதை விடுங்க... நாம், இனிமேல் எப்படி சந்திக்கிறது? எங்கே சந்திக்கிறது? இந்தக் கடற்கரையில வெளிச்சத்துல சந்திச்சா தெரிஞ்சவங்க பார்ப்பாங்க... இருட்டுல சந்திச்சா தெரியாதவங்ககிட்ட அகப்படணும்."

"அதுதான் எனக்குப் புரியல..."

"ஒரு குட் நியூஸ்... நாளைக்கு எங்கப்பாவும் அம்மாவும் டூர் போறாங்க. ஆபிஸ் கார்ல போறாங்க. அம்மா என்னையும் கூப்பிடுறாங்க. உங்களை பிரிந்து என்னால இருக்க முடியுமா? அதனால நான் முடியாதுன்னுட்டேன். நல்லவேளை நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. எங்க வீட்டுக்கு வந்துடுங்க..."

"எனக்கு பயமா இருக்குது கவிதா... ஒருவேளை தப்பித் தவறி யாராவது இருந்தால்... ஒங்கண்ணன்கூட இருக்கலாமே..."

"போன வாரம்தான் மூவாயிரம் ரூபாய் எடுத்துட்டு போனான். இனிமேல், அடுத்த மாசம் ஒண்ணாந் தேதிதான் வருவான். ஒருவேளை எங்கப்பா, நானும் அவரோட போகணுமுன்னு அடம் பிடித்தால், என்னால தட்ட முடியாது. அதனால, நான் மட்டும் வீட்ல இருக்கிறதா இருந்தால் கம்பவுண்டு கதவுல ஒரு பக்கம் திறந்திருக்கும். மூடி இருந்தால், நான் இல்லன்னு அர்த்தம்."

"வாட்ச்மேன் இருக்கலாம் இல்லியா?"

"அவனையும் கூடமாட ஒத்தாசைக்கு அப்பா கூட்டிட்டுப் போறார்."

"கொஞ்சம்கூட பொறுப்பில்லாத அப்பா. அம்மாவை கூட்டிக்கிட்டு ஒன்னை மட்டும் விடலாமா... நீயும் போ..."

"ஒங்க மனசு கல் மனசு செல்வா. எனக்கு இருக்கிற துடிப்பு உங்களுக்கு இல்ல..."

"நீ சொல்லிட்ட.... நான் சொல்லல.... அவ்வளவுதான் வித்தியாசம்..."

"சமையல்காரம்மா வீட்டோட இருக்காங்க. அந்தத் தைரியத்துல அப்பா என்னைப் பற்றி கவலைப்படமாட்டார். அதோட, 'அம்மா - அப்பா விளையாட்டுக்கு' நான் இடைஞ்சலா இருக்கக்கூடாதுன்னு நினைப்பார்."

"சமையல்காரம்மா அப்பா வந்ததும் போட்டுக் கொடுத்தால்?"

"அந்தம்மாவுக்கு சாப்பாடு மட்டும்தான் போட்டுக் கொடுக்கத் தெரியும். மற்றபடி பெருந்தூக்கக்காரி. அவங்கள சமாளிக்கிறது என் பொறுப்பு. கேட்ல ஒரு பக்கம் திறந்திருந்தால், நீங்க வாறீங்க... மூடி இருந்தால், போறீங்க..."

கவிதா, தனது மாருதி காரில் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்தபடி, இடது பக்க முன்னிருக்கைக் கதவை செல்வாவிற்கு திறந்து விடப் போனாள். அந்தக் கதவின் உள் சதுரம் பிய்ந்து போய் முரண்டு செய்து கதவை திறக்க மறுத்தது. இதனால் செல்வா, நீண்டு நெடிந்த பின்னிருக்கையில் கைகளையும் கால்களையும் தாரளமாகப் பரப்பிக் கொண்டு உட்கார்ந்தான்.

# 6

செல்வா, மத்தியானம் பன்னிரண்டு மணி வரை, கவிதாவைப் பற்றி, தான் எழுதிய உரை வீச்சை அடித்தும் திருத்தியும் அல்லோ கலப்படுத்தினான். சுமாரான காகிதங்களில் எழுதப் பட்டதை நல்ல காகிதங்களில் நகல் எடுத்தபோது, "உனக்குன்னு தனியா பறிமாறணுமா?" என்ற சித்திக்காரியின் சத்தம் அவன் காதுகளில் குத்தியது. அவன், அந்தக் காகிதங்களை பயபக்தியோடு தனது நோட்டுப் புத்தகத்தில் வைத்தபோது "தனியா சாப்பிட்டால் என்ன நாய்களா?" என்று, பிள்ளைகளுக்கு குரல் கொடுத்தாள் சித்தி.

செல்வா, அவசர அவசரமாக சாப்பாட்டு மேஜைக்கு ஓடினான். குழந்தைகள் ஏற்கெனவே அங்கே உட்கார்ந்திருந்தன. சித்திக்காரியும் உட்கார்ந்திருந்தாள். ஞாயிற்றுக்கிழமை என்றாலும் அலுவலகத்திற்குப் போய்விட்ட கணவன் மீது கடும் கோபமாக இருப்பது, அவள் 'சாதத்தை பிசைந்து கஞ்சியாக்குவதிலிருந்து தெரிந்தது. செல்வா, ஒரு கவளத்தை சுபேதாவுக்கு ஊட்டிக் கொண்டே மறு கவளத்தை தனது வாயில் போட்டுக் கொண்டான். சித்திக்காரி அவசர அவசரமாக சாப்பிட்டுவிட்டு, ஒரு செம்பு தண்ணீரையும் மடக் மடக் என்று தொண்டைக் குழிக்குள் அருவியாக்கிவிட்டு போய்விட்டாள்.

செல்வாவும், குழந்தைகளும் சாப்பிட்டு முடித்தபோது, சித்திக்காரியின் குறட்டைச் சத்தம் தோசைக்கல்லில் ஊற்றப்பட்ட ஈர மாவு மாதிரியான ஒலியை எழுப்பியது. செல்வா, சுபேதாவின் கையையும் வாயையும் கழுவிவிட்டு, அருணையும் அப்படி கழுவச்

செய்துவிட்டு தங்களுக்கு என்று ஒதுக்கிய மேற்குப் பக்கத்து அறைக்கு வந்தான். குழந்தைகளை மெத்தைக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டு, அவன் அந்த இருவர்களுக்கிடையே படுத்துக் கொண்டான். அந்த இருவரும் தூங்குவதற்கு உந்துகோலாக ஒவ்வொரு கையாலும் ஒவ்வொருத்தர் தலையையும் கோதி விட்டான்.

இந்த முடிக்கோதல் ஒரு அலாதி இன்பம். அதுவும் மிகவும் வேண்டியவர்கள் வருடி விடும்போது, அது ஒரு தனித்துவ சுகத்தை கொடுக்கிறது. மகிழ்ச்சித் திரள்கள் ஒன்றாய் திரள்கின்றன. ஆறுதலுக்கு ஆறுதல். நெருக்கத்திற்கு நெருக்கம். உடலெங்கும் சுக மயம். உள்ளமெங்கும் நிர்மலம். இதனால்தான், குரானில் 'ஒருவரின் துக்கத்தை குறைப்பதற்கு அவரது பிடரியை தடவி விட வேண்டும்' என்று விஞ்ஞான பூர்வமாக கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த விஞ்ஞானம், அந்த இரு குழந்தைகளிடமும் எடுபடவில்லை. அவன் கை இரண்டையும் பிடித்துக் கொண்டு 'கதை சொல்லுங்க அண்ணா' என்றன. சுபேதா பஞ்ச தந்திரக்கதை வேண்டும் என்பது மாதிரி கேட்டாள். அருண் சக்திமான் டைப்பில் கதை கேட்டான். இந்தப் போட்டியில் இரண்டு குழந்தைகளும் அண்ணன் மார்புக்குமேல் பாய்ந்து ஒன்றை ஒன்று அடித்துக் கொண்டன. அருணை முறைத்துக் கொண்டும், சுபேதாவின் கண்ணீரை துடைத்துக் கொண்டும் அவர்கள் இருவரையும் தன் மார்பில் தலைசாய்க்க செய்து முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

குழந்தைகள் தூங்கி விட்டன. செல்வா, மெல்ல அவர்களின் தலைகளை படுக்கைக்கு இறக்கி, அவர்கள் விழிக்கிறார்களா என்று நோட்டம் போட்டான். 'அண்ணா' என்ற குரல் எழுப்பி குழந்தைகள் தன்னை காணாமல் அலறி விடக்கூடாதே என்ற அச்சம். மணியை பார்த்தான். சரியாக பிற்பகல் ஒன்று. உடனே அணிச்சையாக ஆவின் நினைவு வந்தது. பால் கார்டை எடுத்துக் கொண்டு, சமையலறையிலிருந்த பிளாஸ்டிக் கூடையையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். சித்தி விழிப்பதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும் என்பதும், ஆவின்காரன் பிற்பகல் மூன்று மணிவரை இருப்பான் என்பதும் அவனுக்கு ஆறுதல் கொடுத்தது.

செல்வா, தெருவுக்கு வந்து, அடுத்த வீட்டை தாண்டி, அதற்கு அடுத்த வீட்டின் கேட்டை நெருங்க நெருங்க இதயமும் மூளையும் ஒன்றை ஒன்று நெருக்கிக் கொண்டன. கால்கள், பின்னியபடியே நடந்தன. மனம் "போ" என்றும் மூளை "போகாதே" என்றும் மாறி மாறி ஆணையிட்டன. 'இன்றைக்கு மட்டும்தான்' என்று மூளைக்குச் சொன்னான் 'இன்றைக்கு பேச வேண்டியதையெல்லாம் பேசிவிடுவோம்' என்று மனதிற்குச் சொன்னான். இந்த மனதிற்கும்

மூளைக்கும் இடைப்பட்ட குரல் எதுவாக இருக்குமென்று எண்ணிப் பார்த்தான். மனசாட்சியோ என்னவோ.. தன்னை நம்பும் சித்தப்பாவிற்கு துரோகம் இழைப்பது போன்ற நெருடல். மகன் மீது மகத்தான பாசமும் நம்பிக்கையும் கொண்டிருக்கும் தந்தை முன்னால் வந்து தடுப்பது போல் ஒரு பிரமை. கூடவே சித்திக்காரியின் திட்டுக்கள். என்றாலும், இதுவரை உயிரோடும் படிப்போடும் இருக்கிறான் என்றால் அதற்கு, அந்த வேலைக் காரம்மாவும் இந்த கவிதாவும்தான் காரணங்கள் என்று நினைக்க நினைக்க, அவனது பின்னிய கால்கள் பிரிந்தன.

செல்வாவின் மனம் துள்ளியது. மணிக்கணக்கில் பொறுத்த வனால் வினாடிக் கணக்கில்கூட பொறுக்க முடியவில்லை. கம்பௌண்ட் கதவில் ஒன்று திறந்திருந்தது. அக்கம் பக்கம் பார்த்தபடியே உள்ளே ஓடினான் கவிதா, அவனுக்காக முன்வாசல் வள்ாகத்தில் காத்திருக்காதது லேசாய் வலித்தது. முன்னெச் சரிக்கையாக இருக்கும் என்று அந்த வலியை வருடலாக மாற்றிக் கொண்டான்.

ஆறு கிரவுண்டுகளை ஆக்கிரமித்த அரண்மனை வீடு. சுவர்களுக்கு நான்கு புறத்திலும் ஒரு பனை உயரத்திற்கான ஏழெட்டு வெண்மையான தூண்கள். இவற்றிற்கு இடையே அலங்கார வளைவுகள். இரண்டு மாடி கட்டிடம் என்றாலும், அது மூன்று மாடியாய் தோன்றியது. பர்மா தேக்குகள் மாதிரி அதேசமயம் நவீனப் பாங்கில் செய்யப்பட்ட கதவு. பழமையும் புதுமையும் இணைந்த அது சொக்கத் தங்க நிறத்தில் மின்னியது. நுணுக்கமான நெளிவு சுளிவுகளோடு கோபுரமாய், தேராய், சின்னஞ்சிறு பதுமைகளாய் தோன்றிய அந்த கதவில் வெறுமையான பகுதி என்று எதுவும் காணமுடியாது.

கதவு திறந்திருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தால் கவிதாவைக் காணவில்லை. ஒருவேளை சினிமாக் காட்சிகளில் வருவதுபோல் மறைந்திருந்து தாவுவாள் என்று நினைத்துக் கொண்டான். பைக்குள் இருந்த உரைவீச்சை தட்டிக் கொடுத்தான் இதுவரை அதிகமாய் சொல்லாத சுமைகளை கொண்ட அந்தக் கடிதத்தை படித்துவிட்டு, கவிதா அ, ாக அழுதுவிடக்கூடாதே என்ற ஆதங்கம். அதேசமயம் அவள் அழுகைக் கண்ணீரில், தனக்கு ஆனந்தக் கண்ணீர் வரும் என்றும் நினைத்தான். தன்னை நேசிக்கும் ஒருவரிடம் தனது பாரங்களை ஏற்றிவிட்டு ஏற்றப்பட்டவர்களின் பாரங்களை திருப்பி வாங்கிக் கொள்ளும்போது எப்படிப்பட்ட சுகமும், நன்றி உணர்வும், பெருமிதமும் கிடைக்குமோ அப்படிப்பட்டவை அவனுக்குக் கிடைத்தன

செல்வா, உப்பிப் போன தனது சட்டைப் பை 'யை அழுந்தப் பிடித்தபடியே, "கவிதா . கவிதா..." என்று காந்தக் குர 'லாடு சோபா செட்டுகளை கொண்ட வரவேற்பறையின் ந( )வில் நின்று கூவினான்.

உடனே கதவில்லாதது போல் தோன்றிய பிளைவுட்டால் ஆன கிழக்கத்திய தடுப்பிலிருந்து ஒரு தேக்குப் பலகை திறந்தது. மோகனன், இரண்டு ஆண்கள் கட்டி அணைக்கும் முத்திரை படம் கொண்ட பனியனோடு நின்றான். லாகவமான உதட்டோரப் புன்னகை. சுருள் சுருளான புல்தரை மாதிரியான கிராப்பு. பிடரியைத் தாண்டிய முடி ஒற்றைக் கடுக்கன். கையில் ஒற்றை வளையம். நீளவாக்கு முகம், மாம்பழ நிறம், முகத்தில் கொய்யாக்காய் போன்ற வடுக்கள்.

செல்வா, வெலவெலத்துப் போனான். எங்கே நிற்கிறோம், யார் முன்னால் நிற்கிறோம் என்பதுகூட தெரியாத அதிர்ச்சி. ஒரே ஓட்டமாய் ஓடிவிடலாம் என்பதுபோன்ற திருப்புமுனை பார்வை. அதுவே குற்றத்தைக் காட்டி கொடுக்கும் என்ற ஞானம். ஆனாலும், மோகனன் அவனை சிரித்தபடியே பார்த்தான். அந்த சிரிப்பை புன்னகையாக்கியபடியே, அவன் மெல்ல நடந்து வந்தபோது, செல்வாவின் பயம் லேசாய் தெளிந்தது. கூடவே சிரிப்பாய் வரவேற்கும் மோகனன் மீது அன்பும், இப்படித் தன்னை மாட்ட வைத்த கவிதா மீது கோபமும் வந்தது.

மோகனன், செல்வாவை நெருங்கி, 'ஐ எம் மோகனன்' என்று கையை நீட்டினான் இடுப்போடு ஒட்டிக் கிடந்த செல்வாவின் வலது கையை பிடித்துக் குலுக்கினான். "நீ யார்" என்று அவனை கேட்காததிலிருந்து, அவனை அவன் தெரிந்து வைத்திருக்கிறான் என்பது புரிந்தது. செல்வாவின் கையை பிடித்த மோகனன், சிறிது நேரம் அதை வருடிக் கொடுத்தபடியே நின்றான். செல்வாவிற்கு பயம் போய்விட்டது. 'இவன் ஜென்டில்மேன். இவனைப் போய் கவிதா அசல் போக்கிரி என்றாளே. அதோடு அசிங்கம் பிடித்தவன் என்றும் கத்தினாளே..'

மோகனன், செல்வாவின் கரத்தை விடுவித்துவிட்டு, அறைக் கதவை நோக்கிப் போட்ட ஒற்றைச் சோபா இருக்கையில் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்தான் எதிரே உள்ள சோபா செட்டில் செல்வாவை உட்காரும்படி சைகை செய்தான்.

அவன் உட்கார்ந்து முடித்ததும், மோகனன் தோழமையோடு கேட்டான்.

"நீங்க பக்கத்து வீட்டுக்கு பக்கத்தில இருக்கிற கிச்சன் வீட்டு பையன்தானே?'

செல்வாவிற்கு கோபமும் வந்தது. ரோசமும் வந்தது. அவன் சித்தப்பா நேர்மையானவர். கடனே என்று கட்டிய வீடு. அதாவது அரசாங்கக் கடனில் கட்டிய வீடு. சித்தியின் நகைகளை அடகு வைத்து சுமாராக கட்டப்பட்ட அந்த வீட்டை, இவன் கிச்சன் வீடு என்று சொன்னது என்னவோ போல் இருந்தது. இவன் அப்பன் ஐ.ஏ.எஸ். காரனைப் போல் கொள்ளையடித்துக் கட்டிய வீடல்ல. இப்படி சொல்லி விடலாமா என்று கூட அவன் நினைத்தான். உடனே காரியம் பெரிதா... வீரியம் பெரிதா... என்ற கிராமத்துப் பழமொழி அவனுக்கு நினைவுக்கு வந்தது. அதோடு இவன், அவன் உயிருக்குயிரான கவிதாவின் அண்ணன் தமாஷ் பேர்வழி. மனதில் எந்த விகற்பமும் இல்லாமல் அப்படி கேட்டிருப்பான்.

“ஏன் யோசிக்கிறே? பதில் சொல்லு?”

“ஆமாம் ஸார். அது எங்க சித்தப்பா வீடு. ரொம்ப ரொம்ப நேர்மையானவர். அவரால கிச்சன் வீடுதான் கட்ட முடியும். நான், அவரோட அண்ணன் மகன். கிராமத்துல அப்பாம்மா இருக்காங்க... நான் இங்கே சித்தப்பா வீட்ல தங்கி காலேஜ் படிக்கிறேன்.

“ஒன்னைப் பார்த்தால், படித்தவன் மாதிரி தெரியலியே?”

“நோ... நோ... சார்... நான் பி.எஸ்.ஸி. பிசிக்ஸ் ஸார்... கிளாஸ்ல பஸ்டு ஸார்... பல கல்லூரிப் பேச்சுப் போட்டிகள்ல பஸ்ட்ல வந்திருக்கேன் ஸார்...”

“குட்... அப்படித்தான் இருக்கணும். ஆனா டிரெஸ்லேயும் கவனம் செலுத்தணும்... நான் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் மகனாய் பிறந்தாலும், பத்தாவது வகுப்புக்கு மேல புத்தி போகல... ஆனாலும் எவ்வளவு ஸ்டைலாக இருக்கேன் பார். ஒன் நன்மைக்காகத்தான் நான் சொன்னேன்.. தப்பா பேசியிருந்தால் மன்னிச்சுடு...”

“மன்னிக்கும்படியாய் நீங்க எதுவும் பேசல ஸார்... உங்கள ரெண்டு மூணு தடவதான் பார்த்திருக்கேன். நீங்க விதிவிலக்கான இளைஞராம். டான்ஸ் மாஸ்டராம். ஸ்டண்ட் பயிற்சியாளராம். டி.வி.யில நிகழ்ச்சிகளுல அந்தர் பல்டி அடிச்சுக்கிட்டே பாடுவீங்களாம். ஆக மொத்தத்துல சகலகலா வல்லவராம். ஆனாலும், ஐ.ஏ.எஸ். அப்பாக்கூட மட்டும் ஒத்துப் போனால் எங்கேயோ போயிருப்பீங்களாம்.. இதனால உங்க டேலண்ட் வேஸ்ட் ஆகுதாம்..”

“இப்படி சொன்னது யார் உனக்கு?”

“எங்க சித்தி ஸார். உங்க அம்மாவோட பிரண்டு ஸார்.”

“அப்போ உங்க சித்தியை நான் ‘டாவ்’ அடிக்கட்டுமா? உட்காருடா.. எழுந்துட்டதாலேயே நீ போகமுடியாது. இப்படிச்

சொன்னது என் சிஸ்டர் கவிதாதானே... நேரா உண்மைக்கு வரவேண்டியது தானடா..."

செல்வா, தலை குனிந்தபடியே, மோகனனுக்கு முகம் காட்டாமல் கிடந்தான் போதாக்குறைக்கு 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பதுபோல் இடது பக்க சட்டைப் பையை வலது கையால் மூடினான் அது துருத்திக் கொண்டிருப்பதை ஏற்கெனவே கவனித்த மோகனன், அவனை உச்சி முதல் பாதம் வரை பார்த்தான். மானசீகமாக பருகினான் மோப்பக் குழையும் அனிச்ச முகம். நாட்டுக் கட்டை உடம்பு என்றாலும் அதில் ஒரு நளினம். மன்மதனின் மனைவியான ரதியக்கா தன்னைப்போல் ஒரு மனிதச் சதையை செதுக்கியது போன்ற தோரணை. கருப்பும் மின்னும் என்பதுபோல் காட்டிய உடம்பில் சந்தனக் குழைவு. "இரண்டுக்கும் பயன்படுவான்."

இப்போது, மோகனனின் புன்னகை போலித்தனமான கோபமானது. நாட்டியக்காரன் என்பதால் கண்கள் உருண்டு திரண்டு ஒரே நிலையில் நின்றன.

"கவிதாவை பார்க்கத்தானே வந்தே?"

"ஆமாம் ஸார். இனிமேல் இந்தப் பக்கம் வரமாட்டேன் ஸார்"

"நான் காதலுக்கு எதிரியில்லை மச்சி... பையில இருக்கிற அந்த லவ் லெட்டரை எடு . எனக்குத் டமிழ்ன்னா உயிரு... அதோட ஒன்னை மாதிரி காலேஜ் பசங்களோட டமில் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்."

"லவ் லெட்டர் இல்ல ஸார்... ஆவின் கார்டு ஸார்..."

"எனக்கு காதுல பூ வச்சு பழக்கமே தவிர, வைக்க விடுறதில்ல. மரியாதையா கையில இருக்கிறத நீட்டு... இல்லன்னா போலீஸுக்கு போன் பண்ண வேண்டியது வரும். ஒரு மைனர் பெண்ணை கடத்த வந்த குற்றத்திற்கு, போலீஸ்ல லத்தியால லொத்து லொத்துன்னு வாங்குவாங்க. ஒரு ஐ.ஏ.எஸ் ஆபீசர் மகன் போலீஸுக்கு போன் செய்தால் என்ன நடக்கும் தெரியுமா? கம்பி எண்ணனுமா... லெட்டர தாரீயா..."

"லவ் லெட்டர்தான் ஸார்... கவிதாவுக்குத் தெரியாமல் நானே எழுதின டர்டி லெட்டர் ஸார்..."

"டர்டின்னு சொல்லாத மச்சி.... ஸ்வீட் நத்திங்ஸுன்னு சொல்லு. நான் காதலுக்கு எதிரியில்லை அதை ஆதரிப்பவன். நீ எப்போ என் தங்கைய லவ் பண்றதா தெரிஞ்சிதோ, அப்பவே, நான் ஒனக்கு மச்சான்.. நீ எனக்கு மச்சி. சரி லெட்டரை எடு..."

"இது ஒருதலைக் காதல் ஸார்... கவிதா என்கிட்ட பேசினதே கிடையாது ஸார்..."

"அத, ஒன் லெட்டரைப் பார்த்து தெரிஞ்சுக்கிடுறேன்... அப்புறம் ஒன்னை போக விடுறேன். ஏன்னா.. கொலை மிரட்டல் மாதிரி எதுவும் எழுதியிருக்கப்படாது பாரு... சரி.. கொடு..."

செல்வாவின் உடல் வேர்வையில் நனைந்தது. தலை சுற்றியது. ஆகாயத்தில் தூக்கி எறியப்பட்டு, தரைக்கு வராமல் தவிப்பதுபோல் இருந்தது. தயங்கித் தயங்கி ஆவின் கார்டையும் கவிதாவிற்கு எழுதிய கடிதத்தையும் கை நடுங்க, கால் ஒடுங்க மோகனனிடம் கொடுத்தான் அவனோ ஆவின் கார்டை பின் அட்டைபோல் வைத்துக் கொண்டு அந்தக் கடிதத்தை மேலெழுந்த வாரியாகப் படித்துவிட்டு, பிறகு கண்ணூன்றி படித்தான்.

"என் இனிய சுமை தாங்கியே!"

"வணக்கம். வணக்கமம்மா. நீ கடற்கரையில் ஆணையிட்டதால் மட்டும் இந்தக் கடிதத்தை எழுதவில்லை. எனக்கு ஏற்பட்ட ஆசையாலும், இதை எழுதுகிறேன். இதை வாசிக்க வாசிக்க, நீ மகிழ்ந்தால் நானும் மகிழ்வேன். ஆனாலும், இந்தக் கடிதம் உன்னை அழ வைக்குமோ என்று அஞ்சுகிறேன். ஒருவர் மனதில் இருப்பதை அப்படியே எழுதினால் பிரச்சினையில் பாதி குறையும் என்பார்கள்."

"எனக்கு காலில் முள் குத்தினால் உனக்குக் கண் வலிக்கும். இதே போல்தான் எனக்கும். மன அலையோ... உள்ளுணர்வோ... முற்பிறவியோ ஏதோ ஒன்று நம் இருவரையும் இனிமையாக கட்டிப் போட்டிருக்கிறது. அது மலையையும் பாதாளத்தையும் இணைக்கும் ஏதோ ஒரு காதல் சங்கிலி. இந்தச் சங்கிலியிலிருந்து நீ கீழே இறங்கக் கூடாது. நான்தான் மேலே ஏறி வரவேண்டும். பி.எஸ்.ஸி. முடித்ததும் வேலையில் சேர்ந்தபடியே நிச்சயம் எம்எஸ்ஸி. படித்து ஐ.ஏ.எஸ். எழுதி உன்னை கைப்பிடிப்பேன் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது. எல்லாம் அடியேனின் உழைப்பில் எழும் ஆண்டவன் சித்தம்."

"உன்னை நான் சுமைதாங்கி என்று அழைத்தற்கு, வேறு ஒரு சாதாரண பெண்ணாக இருந்தால் கொச்சையான பொருளில் எடுத்துக் கொள்வாள். ஆனால், நீயோ அசாதாரணமான பெண். தாய்மையின் உருவம். எல்லோர் மீதும் படரும் உன் தாய்மை, எனக்கு மட்டும் காதலாக கவிழ்ந்தது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், நீ எல்லோருக்கும் தாய் மாதிரியான அமைதியும் அன்பும் ஊடாடும் மௌனப் பார்வைக்காரி என்னைத் தவிர்த்து, மற்றவர்களிடம் நிதானமாக உதடு அசைத்து, மெல்லவும், அதே

சமயம் உறுதியாகவும் பேசக் கூடியவள். ஆடை அலங்காரத்தில் ஆசை கொள்ளாதவள். பிறர் துன்பத்தை தன் துன்பமாய் எடுத்துக் கொள்கிறவள். என் துன்பத்தை நீ பகிர்ந்து கொண்டதால், அது எவ்வளவோ குறைந்திருக்கிறது. நீ என் தோளைத் தட்டும் போதெல்லாம், அந்தத் தோளுக்கு ஒரு வலிமை கிடைத்தது. கண்களை துடைத்த போதெல்லாம் என் கண்களுக்கு பிரகாசம் கிடைத்தது."

இருக்கை விளிம்பில் கையூன்றி திரிசங்கு நிலையில் நடுங்கிப் போய் நின்ற செல்வாவை ஏற இறங்கப் பார்த்த மோகனன் 'எனக்கு டமில் புரியாது. பத்து வரைக்கும் கான்வெட்டில் படிச்சவன் இதுக்கு பேர்தான் ஒருதலைக் காதலோ' என்றான்.

செல்வா, அவனை கையெடுத்துக் கும்பிடப் போனபோது, அதற்குள்ளேயே மோகனன் கடிதத்துள் மூழ்கினான்.

"நம் காதலுக்கு, முதலில் எங்கள் வீட்டு வேலைக்காரம்மாவிற்கு நன்றி சொல்லவேண்டும். நான் அங்கே படும் பாடுகளை அவள் உன்னிடம் சொல்லாவிட்டால் உனக்கு என்னிடம் ஈர்ப்பு ஏற்பட்டிருக்காது. அதே வேலைக்காரம்மா என் கதையை கேட்டு நீ கண்ணீர் சிந்தியதாக சொல்லாவிட்டால், பெரிய இடத்துப் பெண்ணான உன்னிடம் என் மனம் நிச்சயமாக ஈடுபட்டிருக்காது."

"ஆக பலருக்கு, காதல் கண்ணீரில் முடியும். நமக்கோ, கண்ணீரில் துவங்கியது. நிச்சயமாகச் சொல்கிறேன். தற்செயலாக உனது காரில் எனக்கு நீ லிப்ட் கொடுக்காமல் இருந்தால், நான் தற்கொலை செய்திருப்பேன். அதற்காகத்தான் அந்தப் பூங்கா பக்கம் போனேன். என்னைப் பற்றி எல்லாம் தெரியும் என்பதுபோல் நீ பேசிய பேச்ச என் வாழ்க்கைக்கு ஒரு திருப்பு முனையாகிவிட்டது. நீ என் காதலிதான். கண்ணம்மா என் காதலி என்று பாரதி பாடினாரே அப்படிப்பட்ட காதலி நீ."

"உன் அறிவுரைப்படி பலர் முன்னிலையில் என்னை இழிவுபடுத்தும் சித்தியின் பிள்ளைகளாக அந்த குழந்தைகளை அனுமானிக்காமல், அண்ணன் மகனை முன்னுக்கு கொண்டு வரத் துடிக்கும் சித்தப்பாவின் அருமை செல்வங்களாக நினைத்து நினைத்து, இப்போது அவர்களை என் குழந்தைகளாக நினைக்கிறேன். இதற்கு பெருமைப்படாமல் சித்தி, பொறாமைப் படுகிறாள். ஆனாலும், அவள் என்னை ஏச வேண்டும். அதை நான் உன்னிடம் ஒப்பிக்க வேண்டும். நீ வழக்கம்போல் ஆறுதல் கூறவேண்டும் என்று என்னை அறியாமலேயே ஒரு எண்ணம் வருகிறது. சித்தியையும் அதிகமாக குறை சொல்ல முடியவில்லை. என்னை திட்டுவது போலத்தான், தான் பெற்ற குழந்தைகளையும்

திட்டுகிறாள். வஞ்சகம் இல்லாமல் எனக்கு உணவளிக்கிறாள். ஆபீசர் சித்தப்பாவிடம் அதிக எதிர்பார்ப்புகளோடு வந்தவளுக்கு, அவரது நேர்மை விலங்கிட்டிருக்குமோ என்று ஐயப்படுகிறேன். சித்தப்பா மீது காட்ட முடியாத கோபத்தை என்மீது காட்டுகிறாளோ என்னவோ. ஆனாலும், சித்தி என்னை திட்டும் போதெல்லாம், நீ அங்கே தோன்றி அவளிடம் எதிர் கேள்வி கேட்டு அடக்குவதுபோல் கற்பித்து கொள்கிறேன். யதார்த்தமான நிசத்திலிருந்து தப்பிக்கத் தோன்றும் முட்டாளின் சொர்க்கம் என்று நினைக்காதே. நீதான் என் சொர்க்கம்."

"எதை நீக்க முடியாதோ, அதை சகித்துக் கொள்ள வேண்டும் என்பது ஆங்கிலப் பழமொழி. சித்தியின் ஏச்சான 'எச்சிக்கல பயலே... வாங்கிக் குடித்த பய மவனே... எறப்பாளி...' என்பன போன்ற வார்த்தைகளை 'நீங்கள் நேர்மையானவர்... வெள்ளந்தி... எதிர்கால வி.ஐ.பி.' என்று நீ சொல்லும் வார்த்தைகள் சித்தியின் வார்த்தைகளை துரத்தி விடுகின்றன.

"சித்தியின் ஏச்சை நான் பொறுத்துக் கொள்வதால், நான் சுயமரியதைக்காரன் அல்ல என்று பொருள் அல்ல. என் பெற்றோர், என்னை அப்படியும் வளர்க்கவில்லை. நாங்கள் வாழ்ந்து கெட்ட குடும்பம். என் தந்தை, தனது தம்பியான என் சித்தப்பாவை சக்திக்கு மீறி படிக்க வைத்தவர் இதர சித்தப்பாக்கள் அவனை ஏன் படிக்க வைக்க வேண்டும் என்று கேட்டபோது, அவர்களுக்கு வாயால் சூடு போட்டவர். எப்போதுமே வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டையுமாய் ஒரு தூசி தும்பு படாமல் இருப்பவர். விவசாய உழைப்பாளி அல்ல. அதேசமயம் பத்தாயிரம், இருபதாயிரம், ஐம்பதாயிரம் என்று சீட்டுப் போட்டு, அதில் மாதா மாதம் கிடைக்கும் ஏழாயிரம், எட்டாயிரம் ரூபாயை சேமித்து தனது இரண்டு தங்கைகளை கரையேற்றியவர். இதனாலேயே ஊரில அவருக்கு நல்ல பெயர்."

"ஆனாலும், தென் மாவட்டங்களில் ஏற்பட்ட சாதித் தீ, எங்கள் கிராமத்தையும் பற்றிக் கொண்டது. இந்தச் சாக்கில், சீட்டுப் பணத்தை ஏலத்தில் எடுத்த பிற சாதியினர், மீதி பணத்தை கட்டவில்லை. அப்பாவிடம் சீட்டுக் கட்டியதற்கான எந்தவித ரசீதும் இல்லாததால், அவரால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இதேபோல், அவரும் ஆதாரம் இல்லை என்ற சாக்கில் சீட்டை ஏலத்தில் எடுக்காதவர்களுக்கு பட்டை நாமம் போட்டிருக்கலாம். அப்படி அவர் செய்ய மனம் வரவில்லை. சீட்டு கட்டியவர்கள், தத்தம் மகள்களை கரையேற்றுவதற்காக பணம் போட்டவர்கள். இக்கட்டான நிலையில் இருந்த அப்பாவுக்கு, வசதியான கிராமத்து சித்தப்பாக்கள் உதவிக்கு வராமல் தங்களது

சீட்டுப் பணத்தையும் அவர் தந்தாக வேண்டுமென்று அரிவாள் கம்போடு வந்தார்கள். அத்தைமார்களோ, உதவப் போன கணவன் மார்களை ஏலத்தில் குரல் எழும்புவது போல் திட்டித் தீர்த்தார்கள். எனக்கு ஒரு புதிராகவே இருக்கிறது கவிதா. பொதுவாக வறுமைப்பட்ட ஒரு குடும்பத்தில் அனைவரையும் கரையேற்றும் மூத்த அண்ணன் அல்லது மூத்த சகோதரி கடைசியில் அதே குடும்பத்தாரால் உதாசீனப்படுத்தப்படுகிறார். இது எங்கப்பாவுக்கு மட்டும் நேருவது அல்ல. பலருக்கு நடந்திருக்கிறது. சமூக இயல் நிபுணர்களும், மனோதத்துவ நிபுணர்களும்தான் இத்தகைய உதாசீனத்திற்கு காரணங்கள் கூறவேண்டும். சரி விஷயத்திற்கு வருகிறேன்."

"என் தந்தையிடம் மஞ்சள் கடிதாசு கொடுக்கும்படி சண்டைக்கு வந்த சாதிக்காரர்களே ஆலோசனை சொன்னார்கள். ஆனாலும் என் தந்தை கொஞ்ச நஞ்சமிருந்த சொத்தையும் அம்மாவின் நகைகளையும் விற்று, அத்தனை பேருக்கும் கட்டிய பணத்தை திருப்பிக் கொடுத்தார். இப்போது ஒரு சின்னப் பெட்டிக் கடை வைத்திருக்கிறார். ஆனாலும் அவரது குனிந்த தலை குனிந்தபடியே இருக்கிறது. அந்த தலையை நிமிர்த்துவதுதான் என் முதல் பணி. இரண்டாவதுதான் நீ. இதை நீ தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. காரணம் மூன்றாவதுதான் நான்."

"ஊருக்கு வந்த பிறகுதான், சித்தப்பாவுக்கும் சித்திக்கும் விவகாரமே தெரியும். மாதச் சம்பளக்காரரான சித்தப்பாவாலும் ஏதும் பெரிதாய் உதவ முடியவில்லை. தனது பங்குக்கு உரிய சொத்தையும் விற்கும்படி சொன்ன சித்தப்பாவை, அப்பா கண்ணீர் மல்கி கட்டித் தழுவி அழுதார். ஆனால், மறுத்துவிட்டார். அப்பா அழுவதை அப்போதுதான் பார்த்தேன். ஒரு தாய் மக்கள், பங்காளிகளாக மாறும்போது எனது தந்தையும் சித்தப்பாவும் ராம லட்சுமணர்கள். ராமரும், லட்சுமணரும், வெவ்வேறு தாய்க்கு பிறந்தவர்கள். ஆகையால், அவர்களால் ஒற்றுமையாக இருக்க முடிந்தது. ஆனால், ஒருதாய் மக்கள் என்றைக்குமே ஒற்றுமையாக இருந்ததில்லை. இதற்கு விதிவிலக்கு என்னுடைய அப்பா-சித்தப்பா. பிளஸ் டூ முடித்த என்னை கல்லூரியில் படிக்க வைப்பதாக சித்தப்பா அப்பாவிடம் கேட்டுக் கொண்டார் அதுவும் அழுதபடியே கேட்டார். சொத்து என்று வந்தபோது அழுது மறுத்த அப்பா, எனது படிப்பு என்று வந்தபோது 'உன் பிள்ளை எடுத்துக்கோ' என்றார். சித்தியும், "நீ, நான் பெறாமல் பெற்ற பிள்ளை" என்றாள். இந்த சென்னைக்கு வந்த பிறகுதான் தெரிந்தது. சித்திக்கு நம்பிக்கையான ஒரு வேலைக்காரன் வேண்டும் என்று. பால் கொடுக்கும் மாட்டை பல்லை பிடித்து பார்க்கக்கூடாதுதான்.

ஆனாலும், உன்னிடம் மட்டுமே இதை தெரிவித்தேன். தெரிவிக்கிறேன். ”

“இன்று, உன் வீட்டில், நான் உன்னை சந்திப்பது இதுவே முதலாவதாகவும் கடைசியாகவும் இருக்க வேண்டும். அதேசமயம், புனைப் பெயர்களில், நீ, என் கல்லூரி முகவரிக்கும், நான் உன் பள்ளி முகவரிக்கும் கடிதம் எழுதிக் கொள்வோம். உன் பெயர் கவியரசன். என் பெயர் செல்வி. நான் நம் இருவருக்கும் சூட்டியிருக்கும் பெயர்களின் பொருள் புரிகிறதா மக்கே... காதல் என்று வரும்போது காதலன் காதலியாகிறான். காதலி காதலனாகிறாள்.”

“உன் அண்ணன் மோகனனைப் பற்றி அதிகமா நீ அலட்டிக்க வேண்டாம். அவரை வெறுக்கவும் வேண்டாம். எனக்கு என்னமோ, அவர் நல்லவர் போலவே படுகிறது. நீயும் உன் தந்தையும் கௌரவத்தை பார்க்காமல் அவரிடம் கனிவாக பேசினால் அவரும் கனிந்து விடுவார். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த விவகாரத்தை நான் எழுப்புவது உனக்கு எரிச்சலை கொடுக்கலாம். ஆனால், என் மைத்துனர் நன்றாக இருக்க வேண்டும் என்பதில் எனக்கு மட்டும் ஆசை இருக்காதா என்ன?

இப்படிக்கு முத்தங்களுடன்,

செல்வா.

மோகனன், கடிதத்தின் முன்னுரையை படித்துவிட்டு கண் கலங்கினான். சுழித்த புருவங்கள் இறங்கின. செல்வாவை பாசத்தோடு பார்த்தான். கொடுமைக்குள்ளாகும் பெரிய இடத்துப் பெண்களுக்கு திரௌபதி வேடம் போடுகிறவன்மீது ஒன்றிப்பு ஏற்படுவதுபோல, இவனுக்கும் செல்வாவிடம் ஒரு ஒன்றிப்பு ஏற்பட்டது. ஆனால், செல்வாவோ-

“என்னை விட்டுடுங்க ஸார்... வேணுமுன்னால் அடியுங்க ஸார்... இப்படி எழுதுனது தப்புதான் ஸார்... இதை மட்டும் நீங்க என் சித்தப்பா கிட்டயோ, சித்தி கிட்டயோ சொன்னால், என் படிப்பு கெடும். அதைப் பற்றிக்கூட நான் கவலைப்படல ஸார். ஆனால், சித்தப்பா, நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டனேன்னு என்னைப் பார்க்கிற பார்வையையோ, என் பெற்றோர் தலைகள் மேலும் தாழ்வதையோ பார்த்துகிட்டு நான் உயிரோட இருக்கமாட்டேன் ஸார்... நீங்கதான் ஸார் என்னை காப்பாத்தணும்..”

எதிர்பாராத விதமாக, செல்வா, மோகனனின் காலில் விழுந்தான். அந்தக் காலை கட்டிக்கொண்டே தலையை முட்டினான், மோதினான். மோகனனும், எந்தவித விகறபமும்

இல்லாமல், மனித நேயத்தோடு செல்வாவை தூக்கி நிறுத்தினான். அவன் கண்ணீரை துடைத்து விட்டான். தலையை கோதிவிட்டான் அழாதடா.. அழாதடா... நீ நினைக்கிறபடி எதுவும் நடக்காதுடா...' என்றபோது செல்வா, விம்மி வெடித்து அவன் மார்பில் சாய்ந்தான்.

மோகனனின் அகமும் புறமும் தீப்பற்றியது. இதயத்திலிருந்து ரத்தம் கீழ்நோக்கிப் பெருகி ஓடியது. நரம்புகள் புடைத்தன. ரத்தக் கோளங்கள் அகலமாகி, ஆழமாயின. மோகனன் 'பயப்படாதடா.. பயப்படாதடா... என்னால உன் காதலுக்கோ படிப்புக்கோ தடங்கல் வராது... வா கண்ணு... உள்ளே போய் விலாவாரியாய் பேசலாம்...' என்றான்

மோகனனின் அறைக்கதவு, அவனையும் செல்வாவையும் உள்ளே அனுப்பியபடியே, தானாக ஒட்டிக் கொண்டது. அப்படிப்பட்ட பூட்டு கொண்ட கதவு. அதாவது ஆட்டோமேடிக் கதவு சாதாரண கதவல்ல.. அசாதரணமாய் தாளிடும் கதவு.

# 7

சித்திக்காரி, வாசலுக்கும், தெருவுக்குமாய் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். பற்கள் ஒன்றை ஒன்று கடித்துக் குதறப் போயின. வாய், செல்வாவை கொண்டு வந்த கணவனையும், அதற்கு உடந்தையாக இருந்த தன்னையும் திட்டிக் கொண்டது. 'மணி இப்போதே நான்கு. காபி குடித்தால்தான் சமையல் செய்கிற மூடு வரும். குழந்தைகளா அவை? அசல் பேய்கள். அப்பன் மௌனசாமி என்றால், அதற்கு எதிரான குரங்குகள். 'அம்மா அம்மா' என்று அரற்றினால்கூட, ஆறுதல் பட்டுக்கொள்ளலாம். ஆனால், அண்ணனாம். அண்ணன்... வரட்டும் இந்த அண்ணன்... வரட்டும் அந்த மனுஷர்....'

நல்லவேளையாக, சித்தப்பாவின் வீட்டிலிருந்து அந்த அரண்மனை வீட்டை பார்க்க முடியாது. இது உள்ளே தள்ளியும், அது வெளியே துருத்தியும் இருந்தன. செல்வா வீதியில் வருவதைத்தான், சித்தி, பார்த்தாள். தட்டுத் தடுமாறி வந்த அவனை நோக்கி, அதுவரைக்கும் பொறுக்க முடியாமல் வேக வேகமாய் நடந்தாள் ஆத்திரத்தில் அவன் உருவம் மட்டுமே அவளுக்கு மங்கலாகப் பதிந்தது. அந்த உருவத்தின் தடயங்கள் தட்டுப் படவில்லை

"நாயை குளிப்பாட்டி நடு வீட்ல வச்சாலும், அது காளு காளுன்னு கத்துற புத்திய விடாதாம். பால் எங்கேடா... பை எங்கேடா..."

செல்வா, தட்டுத் தடுமாறி பதில் அளித்தான். அதில் முன்னெச்சரிக்கையும் உள்ளடங்கி இருந்தது. புரைதீர்ந்த பொய்யே மெய்யாய் பேசியது.

"போகிற வழியில் மயங்கி விழுந்துட்டேன் சித்தி. இன்னும்கூட மயக்கம் முழுசா போகல சித்தி."

சித்திக்காரி, அப்போதுதான் அவனை ஏற இறங்கப் பார்த்தா ள்.

செல்வா முகத்தில் கடிக்காயங்கள். கைகளில் சிறாப்புக்ள். கழுத்தில் நகக் கீறல்கள். கண்கள் பசுமையற்ற தரிசு நிலமாய் தோன்றியது. சட்டைப் பித்தான்கள் முன்னுக்குப் பின் முரணாக மாட்டப் பட்டிருந்தன. மனச் சிதைவுகளை மறைக்க முடிந்த தன்னால், இந்த உடல் சிதைவுகளுக்கு எப்படி விளக்கம் அளிப்பது என்று அவன் குழம்பியபோது, சித்தியின் கேள்வியிலேயே பதில் கிடைத்தது. அவள் குரல் கனிவாக வரவில்லையானாலும், காய்ப் பழுப்பாய் ஒலித்தது.

"முள்ளுச் செடியில விழுந்திட்டியாடா..."

"ஆமாம். கருவேல முள்ளுச் செடி...."

"எப்போ நடந்தது."

"எது?"

"உனக்கு கிறுக்கு புடிச்சுட்டா... எப்போ மயங்கி விழுந்தன்னு கேட்டேன்..."

"பால் வாங்கிட்டு வரும்போதுதான் சித்தி. ஆவின் வேன் லேட்டா வந்துது... பால் வாங்கிட்டு வரும்போதுதான் மயங்கி விழுந்துட்டேன்."

"பால் கிடக்கட்டும்... பால் கார்டு எங்க?"

"எனக்கே தெரியல சித்தி. எப்படி நடந்ததோ... என்ன நடந்ததோ..."

"சரி விழுந்த இடத்தையாவது காட்டித் தொல...."

"அதோ அந்த முனையில முள்ளுச் செடி குவியல் இருக்குதே. அதுலதான் சித்தி."

"சரி நீயும் வா. தேடிப் பார்க்கலாம்."

செல்வா, பிட்டத்தைப் பிடித்தபடியே அவள் முன்னால் நடந்தான் இடையில் வயிறு குமட்டியது. குடலே வெளியே வருவது போன்ற வாதையோடு வாந்தி எடுத்தான். வெள்ளை வெள்ளையான வாந்தி கோளையைப் போலவோ இல்லாமல், சாப்பிட்ட உணவுக் குழம்புபோல் அல்லாமல், வெள்ளை வெள்ளையாக, வெள்ளைத் திரள்போல் வெளிப்பட்ட வாந்தி.

எல்லாம் முடிந்தபிறகு, அந்த அறைக்குள்ளேயே மோகனன் உடைகளை சரிப்படுத்திக் கொண்டிருந்தபோது, மோகனனின் கண் முன்னாலேயே, வாய்க்குள் விரல்விட்டு, தொண்டை வரைக்கும் விரல்களை துழவவிட்டு, மஞ்சள் பூசியது போன்ற வெள்ளை திரவத்தை வாந்தி வாந்தியாய் எடுத்தான். வாய்க்குள் விட்ட கையால் மோகனனின் வயிற்றில் குத்தியபடியே, 'தேவடியா மவனே... இதோடயாவது என்னை விடுடா... நீ நாசமாய் போக... கவிதா சொன்னது மாதிரி நீ ஒரு காட்டுமிராண்டி... அசிங்கம் பிடிச்சவன்னு அவள் சொன்ன அர்த்தத்துக்கு இப்பதாண்டா அர்த்தம் புரியுது. ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் தெரியாத ஒனக்கு தங்கைக்கும் தாரத்துக்கும்கூட வித்தியாசம் தெரியாது. அவளையாவது விட்டு வையுடா... என்னைப் போக விடுடா... புறம்போக்குப் பயலே... போக்கிரி நாயே...' என்று பிரமை கலைந்தும், கலைத்தும் கொதித்து கொதித்துப் பேசினான். தலைகுனிந்து நின்ற மோகனன், கதவை திறந்துவிட்டு, கட்டிலில் படுத்து விழியாடாது கிடந்தான்.

அப்போது செயற்கையாக வரவழைக்கப்பட்ட வாந்தி, இப்போது சித்தியின் முன்னிலையில் இயற்கையாக வந்தது. குடலைக் கழுவி விட்டதுபோல் உணவுக் கூழ்களையும், கத்தரிக்காய் துண்டுகளையும் வெளியே கொட்டியது. அவனுக்கு உடனே, அம்மாவின் ஞாபகம் வந்தது. கிராமத்தில் ஒரு தடவை மஞ்சள் மஞ்சளாய் அவன் பிந்த வாந்தி எடுத்தபோது, அம்மா, இவன் தலையை பிடித்துக் கொண்டாள். முகத்தை நிமிர்த்தி, அதில் படிந்த வாந்தியை தனது முந்தானையால் துடைத்துக் கொண்டு தோளுக்கு மேலே போன தன் பிள்ளையை, தனது தோளில் சாய்த்துக் கொண்டாள் அப்பா ஓடோடி வந்து துடித்துப் போய் நின்றார். அக்காக்கள் அவன் கரங்களை ஆளுக்கு ஒன்றாய் பிடித்துக் கொண்டு அவனை சோகத்தோடு பார்த்தார்கள். பெரிய அக்கா அவன் கலைந்து போன சட்டையை சரிப்படுத்தினாள் சின்னக்கா, அவன் வாயை துடைத்து விட்டாள். இப்படி அவன் நினைத்துக் கொண்டிருந்த போது, சித்திக்காரி அவன் வாந்திக்கு நேர்முக வர்ணனை கொடுத்தாள்.

"கொஞ்சமா தின்னாத்தானே...? வயிறு முட்ட சாப்பிடலாம்... வாய் முட்ட சாப்பிட்டால், இப்படித்தான் வாந்தி வரும்.... சரி. புறப்படு. பால் கார்டை தேடிப் பார்க்கலாம்."

செல்வா, தெருவில் அப்படியே உட்கார்ந்தான். திக்கித் திக்கி பதிலளித்தான்.

"என்னால ஒரு அடிகூட நகர முடியல... நீங்க போய் தேடிப்பாருங்க சித்தி..."

"எல்லாம் என் தலைவிதி. வேலியில போற ஓணானை பிடிச்சு காதுல விட்ட கதை."

சித்திக்காரி, அந்த மூலை முடுக்கு முட்புதர் பக்கம் ஓடினாள். இதற்குள் அந்த தெருவாசிகளில் ஒரு சிலர் வழியில் வாந்தி சாட்சியாக உட்கார்ந்திருந்த செல்வாவை கிட்டத்தட்ட தூக்கிக் கொண்டுபோய் வீட்டில் விட்டார்கள். அருணும், சுபேதாவும் அவனை ஓடி வந்து பிடித்துக் கொண்டார்கள். இந்த இரண்டு பிள்ளைகளையும் இடுப்போடு சேர்த்து அணைத்தபடியே அறைக்குள் போனான். கட்டிலில் குப்புறப் படுத்தான். குழந்தைகள் 'அண்ணா.. அண்ணா..' என்று அவனை உசுப்பின. அவன், கண்களை மூடிக்கொண்டு, ஒரு அனுமானத்துடன் அந்த பிள்ளைகளை இருபுறமும் இணைத்துக் கொண்டு கேவிக்கேவி அழுதான் குமைந்து குமைந்து புகைந்தான். பிறகு, ஆவேசமாக எழுந்து பேஸ்டை பிரஷ்ஷில் தடவி, பற்களில் தேய்த்தான். உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் தேய்த்தான். வாஷ்பேஷன் தண்ணீரை வாய்க்குள் ஊற்றி தொண்டைக் குழி வரைக்கும் செலுத்தி, கவளம் கவளமாய் துப்பினான். தன் பக்கமாய் ஓடி வந்த பிள்ளைகளை அணைத்துக் கொண்டே கட்டிலில் மல்லாக்க விழுந்தான்.

மோகனன் பயன்படுத்திய வாயை கழுவியாயிற்று. வயிற்றை கழுவியாயிற்று. பின் பக்கத்தை கழுவியாயிற்று. ஆனால், மனதை எப்படி கழுவுவது? இது விபத்து என்று விட்டு விடுவதா? அல்லது சித்தியிடம் சொல்லி புலம்புவதா? சித்தப்பா பஞ்சும் இரும்பும் கலந்து செய்யப்பட்ட மனசுக்காரர். அலுவலகப் போராளி. விவகாரம் தெரிந்தால், அந்த மோகனன் பயலை, கை காலை எடுத்து விடுவார். இல்லயைானால் காவல் துறைக்குப் போவார். விசாரணை, அடிதடி என்று எல்லாமே வெளிப்படும். கவிதா வெளிப்படுவாள். இவன் வெளிப்படுவான். ஏற்கெனவே தாழ்ந்து போன தந்தையின் தலை கழுத்துக்குக்கீழே போகும். சித்தப்பாவின் பாசமே பாதகமாகும். ராம லட்சுமணரான அண்ணன் தம்பிகளுக்குக்கூட மனஸ்தாபம் ஏற்படலாம்.

செல்வா, திகைத்து நின்ற குழந்தைகளின் தோள்களில் கையூன்றியபடியே, படுக்கையில் இருந்து எழுந்தான். பிறகு அப்படியே விழுந்தான். ஒரு சாய்த்து படுத்தான். மீண்டும் அந்த குழந்தைகளை பிடித்துக் கொண்டு ஒப்பாரி குரலில் அழுதான். இதற்குள் சித்திக்காரியும் கூக்குரலோடு வந்தாள். அவள் கை எங்கும் முள் துவாரங்கள். ஒருச் சாய்ந்து கிடந்தவனுக்கு முன்னால் தன் கைகளை நீட்டி நீட்டி பேசினாள்.

"காபி இல்லாமலும் பண்ணிட்டே... கையிலேயும் முள்ள குத்த வச்சுட்டே... கார்டையும் தொலைச்சுட்டே... இப்போ ஒனக்கு திருப்தி தானடா? ஏ! நாய்ங்களா... இன்னிக்கு மட்டும் காப்பி கீப்பி கேட்டிங்கன்னா... தோலை உரிச்சுடுவன்... எல்லாம் என் தலைவிதி... வீட்டுக்குள்ள ஆமை வந்தது மாதிரி."

செல்வா, தலையை மட்டும் பாம்பு படம் மாதிரி தூக்கிக் கொண்டு பதிலளித்தான். இதுவரை நேருக்கு நேராய் பார்க்க அஞ்சிய சித்தியை, நேரடியாக பார்த்தபடியே பேசினான்.

"வேணுமுன்னா, என்ன ஒரேயடியா வெட்டிப் போடுங்க சித்தி. ஏற்கெனவே நொந்து போயிருக்கேன். இந்த பிள்ளைகளுக்காக பார்க்கிறேன். இல்லாட்டா இப்பவே இந்த வீட்டை விட்டு ஓடிடுவேன். எல்லாரும் சாகப் போறதே போறம். இடையில எப்படி வாழ்ந்தால் என்ன. படிக்காதவன்லாம் வாழாமலா போயிட்டான். ஓடிப் போனவங்களும் உருப்பட்டிருக்காங்க சித்தி.. தப்பா பேசியிருந்தால், மன்னிச்சிடுங்க சித்தி... என்ன பேசறதுன்னே எனக்குத் தெரியல..."

சித்திக்காரி, வாயடைத்துப் போனாள். அவனுக்குள்ளும் ஒரு மனமும், அந்த மனதிற்குள் ஒரு ரோசமும் இருப்பதை முதல் தடவையாக புரிந்து கொண்டாள். பதில் ஏதும் பேசாமல் அப்படியே சிறிது நேரம் சுய பரிசீலனையில் ஈடுபட்டவள்போல் நின்றாள். அப்போது பார்த்து, 'மேடம்' என்ற குரல். சித்திக்கு அடையாளம் காண முடியாத குரல். ஆனால், செல்வாவிற்கு சிறிது நேரத்திற்கு முன்பு பரிட்சயப்பட்ட குரல்.

சித்தி வெளியே வந்தாள். வந்தவனைப் பார்த்ததும் "உட்காருங்க ஸார்... உட்காருங்க ஸார்..." என்று பரபரப்பான குரலோடு பேசினாள். அங்குமிங்குமாய் அலை மோதினாள்.

செல்வா, துள்ளிக் குதித்து, வாசல் பக்கமாய் நின்று கொண்டான். காட்டுமிராண்டிப் .பயல், 'உன் சித்தியை டாவடிக்கட்டுமா' என்று தன்னிடமே கேட்ட பயல்... கெட்ட பயல்... என்ன ஆனாலும் சரி... அவனை ஒரே வெட்டாய் வெட்டி சித்தியின்

கற்பை காப்பாற்றணும்... செல்வா, அரிவாளை தேடிக் கொண்டிருந்தபோது, மோகனன் குரல் மீண்டும் கேட்டது.

"உங்க பால் கார்டுன்னு நினைக்கேன். வழியில கிடந்தது."

சித்தி, அந்த பால் கார்டை வாங்கி உற்றுப் பார்த்தபடியே, "ரொம்ப நன்றி ஸார்" என்றாள். கண்களை சுழலவிட்ட மோகனனுக்கு கதவிடுக்கில், செல்வா, அரிவாளோடு நிற்பது தெரிந்தது. சித்திக்காரிக்கு பதிலளிப்பதுபோல் அவனுக்கு பதிலளித்தான்.

"ஸார்ன்னு கூப்பிடாதிங்கம்மா... சத்தியமாச் சொல்றேன். உங்களைப் பார்க்கிறதுக்கும் கேட்கிறதுக்கும் எங்கம்மாவைவிட ஒசத்தியாவே நீங்க தோணுது.... நான் இனிமேல் எந்தத் தப்பும் செய்யக்கூடாதுன்னு என்னை ஆசிர்வாதம் பண்ணுங்கம்மா..."

மோகனன், செல்வாவை கண் தாழ்த்திப் பார்த்துவிட்டு, தலை தாழ்த்திப் போய்க் கொண்டிருந்தான். சித்திக்காரி, செல்வாவின் அறைக்குள் வந்தாள்.

"ஐ.ஏ.எஸ் ஆபீசர் மகன். பெத்த தாய்கிட்ட பேசுறது மாதிரி பேசுறான். உனக்கு நான் தாய் மாதிரி. நீ என்னடான்னா, சொல்லப் பொறுக்கல... ஒன்னை திட்டுறதுக்கு எனக்கு உரிமை கிடையாதா?"

செல்வா, சித்தியின் கைகள் இரண்டையும் பிடித்து, கண்களில் ஒற்றிக்கொண்டு, மாங்கு மாங்கென்று அழுதான்.

## 8

அன்றிரவு, சித்திக்காரியே, அவனுக்கு அறைக்குள்ளேயே தட்டோடு உணவை கொண்டு வந்தாள். "சாப்பிடுப்பா" என்று ஊட்டிவிடாத குறையாக, "டா"வை, "பா"வாக்கினாள் உடனே, சாப்பாட்டு மேஜையிலிருந்த குழந்தைகளும் தட்டுக்களோடு உள்ளே ஓடி வந்தன. சித்தியிடம் ஏற்பட்ட மாற்றத்தை புரிந்து கொள்ளும் நிலையில் செல்வா இல்லை. ஆனாலும், குப்புறக் கிடந்தவன், அவளுக்கு மரியாதை காட்டுவது போல் பரபரப்பாக உடல் நிமிர்த்தி எழுந்தான். கடந்த ஆறு மாத காலத்தில் அம்மா ஊட்டிய சாதத்தை குழந்தைகள் வேண்டா வெறுப்பாய் உண்டுவிட்டு, அண்ணனோடு தூங்கி விட்டன

செல்வா, தன்னையே சித்தி பார்த்துக் கொண்டிருப்பதை ஓரக் கண் போட்டுப் பார்த்தான். அவசர அவசரமாக கத்தரிக்காய் சாம்பாரை வெள்ளை சாதத்தில் பிசைந்து இலை தனை கலவையாக்கி ஒரு கவளத்தை வாய்க்குள் கொண்டு போனான். அவனை அறியாமலேயே வாய்க்குள் சோறு போனபோது, மத்தியானம் நடந்தது சோற்றோடு கலப்படமானது. குமட்டிக் கொண்டு வந்தது. இதற்குள் சித்திக்காரி, தானும் நல்லவள்தான் என்ற நினைப்போடு திருப்தியோடு போய்விட்டாள். அவள் போனதும் செல்வா, பத்து நிமிடம் வரை சோற்று தட்டையே வெறித்துப் பார்த்தான்.

பின்னர், முன்னெச்சரிக்கையாக, கதவை தாளிட்டுக் கொண்டான். மேற்குப் பக்கமாக உள்ள ஜன்னல் வழியாக ஒவ்வொரு கவளமாக எடுத்து வெளியே வீசினான். ஒரு பக்கம் வீசினால், வாசல் பெருக்கும் வேலைக்காரம்மாவுக்கு சந்தேகம் வரலாம் என்று நினைத்ததுபோல், இன்னொரு பக்க ஜன்னல் வழியாக எஞ்சியவற்றை பன்னீர் தெளிப்பதுபோல் அங்கு மிங்குமாய் வீசினான். முழுமையான முட்டையை கசக்கி சிதைத்து வெளியே வீசியபோது, சித்தியின் உழைப்பை வீணாக்குவது போன்ற குற்ற உணர்வு ஏற்பட்டது. பின்னர், உச்சி முதல் பாதம் வரை மூடிக் கொண்டு உருத் தெரியாமல் கிடந்தான்.

இரவு பத்து மணி அளவில் வந்த சித்தப்பா சிவனுப்பாண்டி, காலையில் காபியோடு அவனை எழுப்பினார். உடம்புக்கு என்னடா என்று கேட்டபடியே, காபி டம்ளரை அவன் பக்கம் நீட்டினார். தாட்சண்யம் கருதியும், சித்தப்பா மீது வைத்திருக்கும் பய பக்தியாலும் அந்த காபியை குடிக்கப் போனான். மீண்டும் குமட்டல். ஒரு சொட்டு காப்பியும் உதடோரத்தில் நீர்க் கோடுகளாய் வெளிப்பட்டன. ஒல்லியானாலும் சாட்டைக் கம்பு போல் உறுதியான உடல் படைத்த சித்தப்பா பதறியபடியே கேட்டார்.

"என்னடா செய்யுது."

"சாப்பிடவோ குடிக்கவோ நினைத்தால் வாந்தி வருவது மாதிரி இருக்குது சித்தப்பா.. என்னால உங்களுக்கும், சித்திக்கும் சிரமம் சித்தப்பா..."

"எங்கண்ணன் - அதான். உங்கப்பா எனக்காக பட்டிருக்கிற சிரமங்களில இது ஆயிரத்துல ஒண்ணாக்கூட வராதுடா.. வயிறு எதையும் ஏற்க மாட்டேங்குதுன்னா, அது மஞ்சள் காமாலையாய் இருக்கலாம். லட்சுமி.. கொஞ்சம் வாயேன். "

சித்திக்காரியான லட்சுமி வாசல் காலில் நின்றபடியே, கணவனை புருவச் சுழிப்போடு பார்த்தாள். அவர் விளக்கினார்.

"இவனுக்கு மஞ்சள் காமாலை வந்திருக்கும்போல தோணுது. எதுக்கும் கொஞ்சம் பழைய சாதத்த எடுத்துட்டு வா இவன் சிறுநீர கலந்து பார்க்கலாம்."

"நேற்று ராத்திரி நல்லாத்தானே சாப்பிட்டான்."

"நேற்று ராத்திரி கிடக்கட்டும். இப்போ சாப்பிட நினைச்சாலே வயிறு குமட்டுதாம்."

"என்ன வயிறோ."

சித்திக்காரி, பழையபடியும் - அதேசமயம் பாதியளவு மட்டுமே முருங்கை மரத்தில் ஏறினாள். நேற்று கணவரிடம் எதிர்பார்த்தது கிடைக்காததால் அந்தக் கோபத்தை இப்படிக் காட்டினாள். என்றாலும், ஒரு தேங்காய் சிறட்டையில், பழைய சாதத்தை வைத்து குளியலறையில் வைத்து விட்டுப் போனாள். அவள் வெளியே வந்ததும், செல்வா உள்ளே போனான். பத்து நிமிடம் கழித்து சித்தப்பா போனார். வெள்ளைச் சாதம் மஞ்சளாகவில்லை. அவன் இமைகளை விலக்கி, விழிகளைப் பார்த்தார். மஞ்சள் நிறம் இல்லை. காமாலை இல்லை என்று கண்டறிந்ததும் அவருக்கு மகிழ்ச்சி. ஆனாலும், டாக்டரிடம் அவனைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டார். உடல் நிலை என்று வரும்போது, சுய அனுமானமும் சுய மருந்தும் தவறானவை என்பதை புரிந்து வைத்திருப்பவர். அண்ணன் மகனுக்கு சிறிது அதட்டலாக ஆணையிட்டார்.

"சீக்கிரமா டிரெஸ் பண்ணுடா. எனக்குத் தெரிந்து, மஞ்சள் காமாலை இல்லை. ஆனாலும், டாக்டர்கிட்ட டெஸ்ட் செய்து பார்க்கலாம்."

வேறு வழியில்லாமல், செல்வா, அவசர அவசரமாய் லுங்கியில் இருந்து விடுபட்டு, பேண்ட் சட்டைக்குள் போனான். சித்தப்பா, அவனை கைத்தாங்கலாக நடத்தியபடியே, 'லட்சுமி. இவனை டாக்டர்கிட்ட காட்டிட்டு வாறேன்' என்ற விளக்கத்திற்கு, ஆங்காரமாக 'ஊங்' கொட்டினாள்.

வீதி வழியாக, அவனை விலாவோடு சேர்த்து அணைத்தபடி நடத்திக் கொண்டு வந்த சித்தப்பா, 'அந்த ஸ்கூட்டர் ஸ்டாண்டு வரைக்கும் தம்பிடிச்சு நடந்திடு' என்றார் போவோர் வருவோர் அந்த இருவரையும் போய்க் கொண்டும், நின்றும் பார்த்தார்கள். செல்வாவிற்கு என்ன என்பது மாதிரி கண்களால் கேட்டார்கள்.

சிலர் வாயால் கேட்டார்கள். அந்தத் தெரு வாசிக(நக்கு செல்வா மிகவும் பிடித்துப் போன பையன். அவர்களுக்கு அவ சர அவசரமாக விளக்கமளித்துக் கொண்டே சித்தப்பாக்காரர், அந்த அரண்மனை வீட்டுப் பக்கம் வந்தபோது, ஒரு இண்டிகா கார் வெளிப்பட்டது. அவர்கள் அருகே நின்றது. மோகனன் கேட்டான்.

"எங்க போறீங்க அங்கிள்?"

"என்ன மோகனனா! ஒன்னை ஆடிக்கொரு தடவை, அமாவாசைக்கொரு தடவைதான் பார்க்க முடியுது. இன்னிக்கு நிச்சயம் மழை வரும்."

"அப்போவும் புழல் ஏரி பெருகாமல், நம்மை சிரமப்படுத்தும். இவனோட எங்க அங்கிள் போறீங்க...."

"இவனுக்கு சாப்பாட்டை, நினைத்தாலே வாந்தி வருதாம். அதனால மஞ்சள் காமாலையான்னு கண்டுபிடிக்க டாக்டர்கிட்ட போறேன்."

"நல்லவேளை என்கிட்ட சொன்னீங்க அங்கிள்! எனக்கும் சாப்பாட்ட நினைத்தால் குமட்டுது. இதனால எங்க பேமிலி டாக்டருக்கு போன் செய்தேன். சென்னையில மெட்ராஸ் ஐ மாதிரி, இது ஒரு விதமான வயிற்று நோயாம். நிறைய பேருக்கு வந்திருக்காம். ஆனால், மஞ்சள் காமாலை போல, நாற்பது நாள் தங்காமல் ஒரு ஊசியோட போயிடுமாம். நானும், இப்ப டாக்டர்கிட்ட போறேன். இவனையும் வேணுமுன்னா கூட்டிட்டுப் போறேன். உங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும். டோண்ட் ஒர்ரி இவனை என்கிட்ட ஒப்படைச்சுடுங்க. மாமுலாயிடுவான்."

செல்வா, மிரண்டான். அரண்டான். மோகனன் அவனை தானாக காரில் ஏறிக் கொள்ளும்படி பேசினான்

"சும்மா சொல்லப்படாது அங்கிள். உங்கப் பையன் ரொம்பவும் நல்லவன். ஒரு தடவை அவன் நோட்டுப் புத்தகத்தைப் பார்த்தேன். முத்து முத்தான கையெழுத்து. மனசுல எந்த கல்மிஷமும் இல்லாதவங்களுக்குத்தான், எழுத்துக்கள் `அச்சடிச்சது மாதிரி வருமாம்."

"டி.டி.பி. போட்டது மாதிரின்னு சொல்லு என்னோட எழுத்தும் முத்து முத்தாத்தான் இருக்கும்"

"நீங்களும் கல்மிஷம், இல்லாத மனிதர்தானே. ஒங்க இலாகாவிலேயே கை நீளாத ஒரே ஊழியர் நீங்கதானே. ஆனால், ஒங்களுக்கும் சேர்த்து எங்கப்பன் கொள்ளை அடிக்கான்."

"ஆயிரந்தான் இருந்தாலும் அவர் ஒன்னை பெத்தவரு... அவன் இவன்னு பேசப்படாது.. டேய் செல்வா! காருல ஏறுடா.. சித்தப்பாவுக்கும், கொஞ்சம் ஆபிஸுல வேலை காத்திருக்கு."

இயக்குநர் இருக்கையில் மோகனனையும், அதே மாதிரியான இடதுபக்க முன்னிருக்கையில் செல்வாவையும் சுமந்து கொண்டு, அந்தப் கார் பறந்தது. மென்மையான ஏ.சி. குளியல். அது உடம்பு முழுவதும் குவிந்த சுகம். உள்ளே இருந்து பார்த்தால் வெளியே தெரியப்படுத்தியும், வெளியே இருந்து பார்த்தால் உள்ளே இருப்பவர்களை காட்டாததுமான பச்சைக் கண்ணாடி கண்ணாடியின் அருகே செஞ்சதுரமாய் இருந்த ஒரு சின்ன பெட்டியிலிருந்து மல்லிகை செண்டு, ஏ.சி. காற்றோடு கலந்து முகத்திற்கும் மனதிற்கும் மோகனத்தை கொடுத்துக் கொண்டிருந்தது. செல்வா, தலைக்கு மேல் சாணும் முழமுமாய் போன விரக்தியில், எடுத்த எடுப்பிலேயே திட்ட வட்டமாகக் கேட்டான்.

"என்னை என்ன செய்யப் போறடா பாவி?"

"சத்தியமாய் என்னை நம்பு. மறப்பாய் மன்னிப்பாய்ன்னு ஒன்கிட்ட மன்னிப்பு கேட்கிறதுக்குத்தான் ஒன்னை காரில் ஏற்றியிருக்கிறேன். உன்னிடம் நான் நடந்து கொண்டது காட்டு மிராண்டித்தனம்தான். உன்னை நான் மிஸ் யூஸ் செய்தது தப்புத்தான்."

"நீ செய்தது மிஸ் யூஸ் இல்ல. அபியூஸ்."

"இந்த ரெண்டு வார்த்தைக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கிற அளவுக்கு நான் படித்தவனில்ல. எல்லாம் வெளி வேடந்தான். நீ என் தங்கையை கட்டிக்கப் போற மைத்துனன் என் தங்கை மீது எவ்வளவு வாஞ்சை இருக்குதோ, அவ்வளவு வாஞ்சை உன்கிட்டயும் எனக்கு இருக்குது. நீ என்னை மாதிரி ஆயிடக்கூடாது என்கிறதுல நான் கறாரா இருக்கேன். தங்கைக்கு உதவாக் கரையா போன நான், அவளுக்கு உன்னையும் உதவாக் கரையாய் போக விடமாட்டேன் இது சத்தியம்."

"இதை நிரூபித்துக் காட்டுறதுக்கு கவிதாவுக்கு நான் எழுதுன லெட்டரை இப்பவே என்கிட்ட தா."

"ஐ எம் ஸாரி பிரதர் இன் லா.. வீட்ல, என் நெம்பர் லாக் சூட்கேஸ்ல வைத்திருக்கேன். சத்தியமா... நிச்சயமா... உண்மையாய்... உறுதியாய்.. தந்துடுறேன். நான் ஒரு ஹோமாசெக்ஸ்காரன்தான் அதுவும் குடும்பச் சூழலில், என் கதையை உன்கிட்ட சொல்லி

எப்படி ஒருத்தன் சந்தர்ப்ப வசத்தால் ஓரினச் சேர்க்கையாளனாய் ஆகிறான் என்பதை உன்கிட்ட சொல்லப்போறேன். இதன் மூலம் கேய் பாய்ஸ் மீது விதிவசமா உனக்கு ஏற்பட்டிருக்கிற வெறுப்பை, நீக்கப் போறேன் அந்த லெட்டரை உன் கிட்டயே கொடுத்துட்டு, என்கிட்ட இருந்து, உனக்கு ஒரு விடுதலை உணர்வை தரப் போறேன் ஒருவேளை, நான் சொல்றது ஒனக்கு ஒரு மெண்டல் சிகிச்சையாக்கூட இருக்கலாம். சரி. அதோ அந்த மோட்டலுல போய் மரத்தடி இருக்கையில் உட்கார்ந்து சாவகாசமா பேசலாம். பேசி முடித்ததும் உன்னை உன் வீட்டுலயே டிராப் செய்றேன் ஒப்புக்கு வழியில சில வைட்டமின் மாத்திரைகளை வாங்கித் தாரேன். இப்ப, நீதான் என் பாஸ். மோட்டலுக்கு போகலாமா?"

"வேண்டாம். காரை ஓட்டியபடியே உன் கதையைச் சொல்லு...."

"சொல்றேன். மோட்டலுல ரூம்ல, ஒன்னை, நான், பழைய படியும் மிஸ்யூஸ் பண்ணிடுவேன்னு நீ பயப்படுறது நியாயம்தான். அதனால காரை ஓட்டிக்கிட்டே பேசுறேன். ஏதாவது விபத்து வந்தா நீதான் பொறுப்பு.

"என்னைத்தான் ஏற்கெனவே விபத்தாக்கிட்டியே..."

"உன் காலுல வேணுமுன்னாலும் விழுகிறேன். என் தங்கையோட எதிர்கால கணவனிடம் அப்படி நடந்துகிட்டது தப்புதான். நீ என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏத்துக்கிறேன். அதுக்கு முன்னால என் கதைய கேளு."

செல்வா, மௌனமாக இருந்தான். கார் ஒரே சீராக ஓடிக் கொண்டிருந்தது. சில சமயம் தாறுமாறாகவும் ஓடியது. ஏ.சி. கார் என்பதால் முன்னாலும் பின்னாலும் போகும் லாரிக்காரர்களும், இரண்டு சக்கர வாகனக்காரர்களும் திட்டோ திட்டோ என்று திட்டுவது, இவர்களுக்கு கேட்கவில்லை. மோகனன், ஒரு கேள்வியோடு தன் கதையைத் துவக்கினான்.

"எங்க பேலஸ்ல இருக்கிற எங்கம்மாவை நீ பார்த்திருக்கியா?"

"இது என்ன கேள்வி? ஒரே தெருவுல இருக்கிறவங்கள பார்க்காம இருக்க முடியுமா? ஒங்கம்மாவ பார்த்தால், கையெடுத்துக் கும்பிடலாம் போலிருக்கு அப்படிப்பட்டவளுக்கு இப்படி ஒரு பிள்ள... சீ..."

"ஒனக்கு அப்படி ஆனால், எனக்கு அந்த நாயை கல்லால் அடிச்சுக் கொல்லலாம் போலத் தோன்றும்."

"பெற்ற தாயை இப்படியா பேசுறது? தாய்கிட்ட அன்பு செலுத்தாத எவனும், வேறு யார் கிட்டயும் அன்பு காட்ட முடியாது அதனாலதான் ஒனக்கு நான் பலியாயிட்டேன்."

"நான் தான் ஸாரி சொல்லிட்டேனே... பிரதர் இன் லா... அந்த மேனா மினுக்கி எங்கம்மாவே இல்ல. டூப்ளிகேட் அம்மா..."

"அய்யய்யோ"

"என்னைப் பெற்றவள் இன்னொருத்தனோட இருக்காள்."

"அடக் கடவுளே"

"முழுசாக் கேள். இந்த பெரிய மனுஷன் வேணுகோபால் ஐ.ஏ.எஸ். இருக்கானே, அவனோட மகனான நான், ஏ.சி. கார்லேயே கான்வெட்டுக்கு போய்கிட்டு இருந்தேன். பரத நாட்டியத்துல இவன்தான் சேர்த்தான். அந்த சாக்குல நான் கதக், ஒடிசி போன்ற நம் நாட்டு நாட்டியங்களையும், வெஸ்டன் டான்ஸ்களையும் கத்துக்கிட்டேன் இங்கிலீஷ் பேச்சுப் போட்டியிலயும், கட்டுரைப் போட்டியிலயும் முதலாவது வந்தேன். பதினாலு வயசிலேயே முதலமைச்சர் தலைமையில என் பரதநாட்டியம் அரங்கேறியது. அதை செய்தியாய் போடாத பத்திரிகை இல்லை... டி.வி. இல்லை. விமர்சனம் செய்யாத இதழ்கள் இல்லை."

"எங்கம்மா என்கிறவள் ரெண்டு பிள்ளை பெற்றாள். எனக்கு பதினாலு வயசுல, எங்க வீட்டு மாடியில ஒரு சினிமாக்காரன் குடி வந்தான். கட்டுன பெண்டாட்டிய விட்டுட்டு இன்னொருத்தியோட வாழ்ந்துகிட்டு இருந்தான். இது தெரிஞ்சும், எங்கப்பன் பணத்துக்கு ஆசைப்பட்டு அவனுக்கும், அவன் கள்ளக் குடும்பத்துக்கும் வீட்ட வாடகைக்கு விட்டான் அம்மா என்கிறவள் நாட்டுப்புறப் பாடல்ல கெட்டிக்காரி. எங்கப்பனோ பொம்பள பொறுக்கி. அதனால மனைவியோட டேலண்ட அமுக்கி வச்சான். நான் அவளுக்கும் நியாயம் வழங்கணும் பாரு... அதனால சொல்றேன். எப்படியோ மாடியிலிருந்த சினிமாக்காரனுக்கும் எங்கம்மாவுக்கும் தொடர்பு உண்டாயிட்டு. ஒருநாள் ரெண்டு பேரும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிட்டாங்க."

"அந்த சினிமாக்காரனோட கீப்பு நேரா எங்கப்பன்கிட்ட வந்திருக்காள். 'ஒங்க பெண்டாட்டி ஒங்கள விட்டு ஓடிட்டாள். என்கூட வாழ்ந்தவன் என்னை விட்டுட்டு ஓடிட்டான். அதனால நாம ரெண்டு பேரும், ஏன் ஒன்றாய் சேரக்கூடாதுன்'னு வாதிட்டிருக்காள். அவளும் கிளாஸ் ஒன் ஆபீசர். அதாவது பெரிய

அதிகாரி. அவர் சம்பளத்துக்கு ஆசைப்பட்டோ அல்லது அவளுக்கு ஆசப்பட்டோ, இல்லன்னா எங்கம்மா கூட்டிகிட்டு போனவனை பழி வாங்கிறதுக்காகவோ, இவனும் அவளை சேர்த்துக்கிட்டான். ரெண்டு பேருக்கும் ஒரே குடி. ஏச்சு பேச்சு... எப்படியோ எல்லா ஐ.ஏ.எஸ். பிள்ளைகளையும் போல, நல்லா இருக்க வேண்டிய நான், குறைந்த பட்சம் நாட்டியத்தில் இரண்டாவது தனஞ்செயனாக உலகம் முழுவதும் சுற்ற வேண்டிய நான், இப்போ ஒவ்வொரு பயல்கள் பின்னாலயும் சுற்றிக்கிட்டு இருக்கேன்."

"அய்யோ... இதுக்கு மேல சொல்லாதப்பா... என்னால தாங்க முடியாதுப்பா..."

"என்னை நீ இனிமேல் பகிர வேண்டாம். என் பாரத்தையாவது பகிர்ந்து கொள். எவளுக்கும், ரெண்டு பிள்ள பிறந்த பிறகும், கணவனை டைவர்ஸ் பண்றதுக்கு உரிமை உண்டுதான். ஆனால், அதுக்கு முன்னால பிள்ளைகளை பற்றி ரெண்டு பேரும் ஒரு செட்டில்மெண்டுக்கு வரணும். இப்படி இல்லாமல் பிள்ளை களுடைய எதிர்காலத்தைப் பற்றி கொஞ்சம்கூட கவலைப்படாமல், ஒரு தாய், ஓடிப் போகிறாள் என்றால், அவள் அசல் தேவடியாளத்தான் இருக்கணும். காரணம், பெண்மை என்பதே தாய்மை. அந்தத் தாய்மைக்கு மிஞ்சி ஒருத்திக்கு திமிர் - செக்ஸ் திமிர் ஏற்பட்டால், அவள் பெண்ணே இல்ல... இப்படி ஓடிப்போனவளுக்கு நானும் கவிதாவும் பிறந்தது நிசம். ஆனால், அம்மா என்கிறவள் எங்கள இந்த லஞ்சப் பேர்வழி வேணுகோபாலுக்கு பெத்தாளோ, இல்ல வேறு யாருக்காவது பெத்தாளோ..."

"அப்படி இருக்க முடியாது. உங்கப்பா சாயல்தான் ஒனக்கும், கவிதாவுக்கும் இருக்குது..."

"அப்படி இருந்தால் வெட்கப்படுறேன். டூப்ளிகேட் அம்மாவ, கவிதாவால ஏற்க முடிஞ்சுது. ஆனால், என்னால முடியல. எங்கப்பன் லஞ்ச வாங்குறதுல சமர்த்தன். இவளும் பணம் வாங்குறதுல ஒரு பழைய பெருச்சாளி இயல்பிலேயே நேர்மை யானவன் நான். எங்கப்பன நினைத்தாலே, ஒனக்கு குமட்டுறது மாதிரி எனக்கும் குமட்டுது. வேலை போட்டு தருகிறேன் என்கிற வாக்குறுதியை நம்பி வந்தவள்கள், அலுவலக சகாக்களை பழி வாங்குவதற்காக இவனோடு படித்தவள்கள் - எல்லாம், எங்க கண் முன்னாலேயே நடந்தது. இந்த லட்சணத்துல எங்களுக்கு ஒழுக்கத்தின் உயர்வு பற்றி போதிப்பான் இந்த யோக்கியன்."

"எனக்கு டூப்ளிகேட் அம்மாவை ஏற்றுக்க முடியல. அந்தச் சமயத்துல திரைப்படங்களுல எக்ஸ்ட்ரா வேடம் கிடைச்சுது.

பெரிய பெரிய கதாநாயகர்களெல்லாம் டான்ஸ் ஆடுறது மாதிரி காட்டுவாங்களே அது குளோசப்பாக இருக்கும். லாங் ஷாட்ல ஆடுறது என்னை மாதிரி டூப்ளிகேட்கள்தான். அவங்களுக்கு லட்ச லட்சமா பணம். எங்களுக்கு நாயே பேயேன்னு திட்டு. இந்தச் சமயத்துல, தமிழ் திரைப்படக் காட்சிய பார்க்க வந்த ஒரு ஐரோப்பியருக்கு, என்னை ரொம்ப பிடித்துப் போச்சு. நல்ல டிரெஸ் வாங்கிக் கொடுத்தார். நல்ல சாப்பாடு போட்டார். நல்ல படுக்கையில போட்டார். அதுவும் ஸ்டார் ஓட்டல்ல. அப்போ அவனோட ஏற்பட்ட சேர்க்கையை நான் தட்ட நினைத்தாலும் முடியல. ஒன்னை மாதிரிதான் வாந்தி எடுத்தேன். அப்புறம் அதுவே ஒரு டேஸ்ட்டாயிட்டுது. ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு விதமான பையன் தேவைப்படுது; தேவைப்படுறேன். அப்போ பிடித்த இந்த ஓரினச் சேர்க்கை, இப்போ ஒரு போதை மாதிரி ஆயிட்டுது. என் தங்கையின் எதிர்கால கணவனுக்கு, என்னை மாதிரி ஒரு நிலமை ஆகிவிடக் கூடாதுன்னுதான், ஒனக்கு இதைச் சொல்றேன்."

"கவிதா, ஒங்கம்மாவைப் பற்றி என்கிட்ட ஒருவார்த்தை சொல்லுலியே."

"பாவம் அவள். நான், என் அம்மாவை ஒரு தாசியாக நினைத்து ஒதுக்கிட்டேன்; ஒதுங்கிட்டேன். அவளுக்கோ ரெண்டு அம்மாக்கள். ஓடிப்போன அம்மாவை சொல்வாளா? ஓடிவந்த அம்மாவைச் சொல்வாளா? நல்லவேளை, ஒன்னோட காதல் அவளுக்கு கிடைத்திருக்கு. இல்லன்னா என்னை மாதிரி அவள் சீரழிந்திருப்பாள். லிம்போ மேனியாக்கா, அதாவது ஒரு நாளைக்கு ஒருத்தன தேடுறவளாய் ஆகியிருப்பாள். இல்லன்னா லெஸ்பியனா மாறியிருப்பாள்."

"யாரைச் சொன்னாலும் கவிதாவைச் சொல்லாதே."

"ஒன்னைவிட அனுபவத்திலும் வயதுலும் பெரியவன் என்கிற முறையில நான் சொல்றதை கேளு. ஒரு காதலுலயோ அல்லது காமத்திலேயோ செக்ஸ் என்கிறது கால்வாசிதான். முக்கால்வாசி உள்ளத்தால் ஒன்றுபடுதல். அதேசமயம், தம்பதிகளுக்குள்ளே செக்ஸுவல் அட்ஜெஸ்மெண்ட் இருக்க வேண்டும். இல்லையானால், புருஷன் கொடுமைக்காரனாவான். மனைவி பத்தினியா வாழ நினைத்தால் ஸ்டீரியாவுல தவிப்பாள். இல்லாட்டால், பலரோட படுப்பாள். இப்படி படுப்பதுகூட செக்ஸ் அல்ல. கணவனின் இயலாமைக்கு அல்லது அவனது கொடுமைக்கு அல்லது அவன் பிற பெண்களோடு உறவாடுவதற்கு காட்டுகிற எதிர்ப்பே இந்த கள்ள உறவின் முதல்படி அல்ல செக்ஸ்.

இரண்டாம் படிதான். ஆக மொத்தத்துல பலரோடு படுக்கைகளை பகிர்ந்து கொள்வதும், ஓரினச் சேர்க்கையும், ஒரு நோயின் அறிகுறியே தவிர நோய் அல்ல."

"உங்க கதையை கேட்கிறதுக்கு மனசுக்கு சங்கடமா இருக்குது. ஆனாலும், ஆயிரம் சங்கடங்கள் வந்தாலும், அதனால ஒழுக்கச் சிதைவு ஏற்படக்கூடாது."

"முதல்ல எது ஒழுக்கம்? எது சிதைவு? இதை தீர்மானிக்கவே பல பட்டி மன்றங்கள் நடத்தணும். இந்திரனால் கற்பழிக்கப்பட்ட அகலிகையையும், நளாயினியாய் இருக்கும்போது தனக்கு ஐந்து கணவர்கள் வேண்டுமென்று கேட்டு, மறுபிறவியில் நெருப்பில் பிறந்த திரௌபதியையும், ராவணன் படத்தை வரைந்த சீதையையும், சுக்ரீவனோடு கூடிக்குலாவிய வாலியின் மனைவியான தாராவையும், கணவன் போக்கு தவறென்று நினைத்த மண்டோதரியையும் பஞ்ச பத்தினிகள் என்று நமது புராணங்கள் கூறுகின்றன முதலில் இதற்கு பதில் சொல். கற்பு என்பது என்ன? ஒழுக்கம் என்பது என்ன? இந்த ஐந்து பெண்களின் அடிப்படையில் பதில் சொல் பார்க்கலாம். இந்த ஐவரில் மண்டோரிதான் விதிவிலக்கு. அவளையும் ஆராய்ந்து பார்த்தால், ஒருவேளை தேறமாட்டாள். ஆகையால், நமது புராணங்கள் பத்தினித் தன்மையை கற்போடு இணைக்கவில்லை. உன்னை மாதிரி ஆசாமிகள்தான் இணைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஓரினச்சேர்க்கை என்பதும் புராணச் செய்திகள் தான்."

"அய்யோ எனக்கு தலை சுத்துது... காரை வீட்டைப் பார்த்து திருப்புங்க."

"வந்ததே வந்துட்டோம். பக்கத்துல இருக்கிற கிளப்புக்கு போயிட்டு போகலாம். கேய் பாய்ஸ் - அதுதான் ஓரினச் சேர்க்கைக் காரர்கள் கிளப். நான் அந்த கிளப்போட பொதுச் செயலாளர். இதுவரைக்கும் வந்துட்டு, அங்கே போகலன்னா என்னுடைய பதவியும், எனக்கு கிடைக்கிற வெளி நாட்டுப் பணமும் போயிடும்."

"பார்த்தியா... பார்த்தியா... உன் செயலுக்கும் பேச்சுக்கும் வித்தியாசம் தெரியுதோ. அங்கே கொண்டு போய் என்னை என்ன செய்யப்போறே?"

"தட்டுக்கெட்ட முண்ட எங்கம்மா மேலேயோ, பொம்பள பொறுக்கியான எங்கப்பன் மேலயோ சத்தியம் செய்ய முடியாது இதோ என் தலையிலேயே சத்தியம் செய்றேன் ஒன்மேல ஒரு துரும்புகூடப் படாது. நீ கார்லேயே இரு நான் கால் மணி நேரத்துக்குள்ள திரும்பி வந்துடுறேன் நாளைக்குத்தான் எங்க

ஐரோப்பிய பாஸ் வரார். அப்போ மட்டுந்தான் பிஸியா இருப்பேன்."

"எப்படியோ சதி செய்து என்னை கூட்டிட்டு வந்துட்டே."

"இதுக்குத்தான் பத்து கிலோ மீட்டருக்கு முன்னால உள்ள மோட்டலுல பேசிட்டு திரும்பலாமுன்னு நினைத்தேன் காரியத்த கெடுத்ததே நீதான். என்னை மீறி ஒனக்கு எதுவும் நடக்காது. நான், நாட்டியக்காரன் மட்டுமல்ல குஸ்தி கத்துக்கிட்டவன். பயப்படாதே."

செல்வா மௌனமானான். அந்தக் கார், கேய் பாய்ஸ் கிளப்பை நோக்கி போகலாமா? வேண்டாமா? என்பது போல் தள்ளாடித் தள்ளாடி ஓடியது.

# 9

சென்னையிலிருந்து முன்பு மகாபலிபுரத்திற்கும், இப்போது பாண்டிச்சேரிக்கும் அழைத்துச் செலுத்தும் கிழக்கு கடற்கரைச் சாலை. பெருநகரிலிருந்து முப்பது கிலோ மீட்டர் தொலைவில் சாலையிலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் பதுங்கிக் கிடந்த தர்பார் கட்டிடம். ஏக்கர் கணக்கில் சுற்றி வளைத்து, இரும்புக் கம்பி இழைகளால் வேலி போடப்பட்ட அதன் வளாகத்தில், அசோக, ஆல, அத்தி போன்ற மரங்கள் அந்த கட்டிடத்தை மறைத்துக் கொண்டிருந்தன. அதற்குள் போவது காடு மலை தாண்டி போவது போல ஒரு உணர்வை ஏற்படுத்தும். இடையிடையே பாறைக் குவியல்கள். மூன்று கிலோ மீட்டரில் முக்கால் வாசியை முடித்து விட்டால், கத்தரித்த ஆடாகவும் மாடாகவும் புலியாகவும் சிங்கமாகவும் பல்வேறு வடிவங்களில் மேக்கப் செய்யப்பட்ட புல் வகையறாக்கள். சிகை அலங்காரம் செய்யப்பட்ட கற்றாழைகள். பல்வேறு வண்ணத்தில் அமைந்த தாமரைகள்.

இதன் மேல்தளத்திற்கு, ஒரு பெருந்தூணில் சுற்றி வளைத்த படிகள் வழியாகத்தான் போகவேண்டும் ஏனோ லிப்ட் வைக்கவில்லை. மேல்தளத்தின் அடிவாரத்தில், பூவாய் விரிந்த விளக்குகள். வானவில் போன்ற மின்சார வரவேற்பு வளைவுகள். நான்கடி உயரத்தில் நவீன மேடை. அரைகுறை ஆடைகளோடு ஒரு சில முதியவர்களும், பல நடுத்தர வயதுக்காரர்களும், பெரும்பாலான இளைஞர்களும் மண்டிக் கிடந்தார்கள் இந்த

வளாகத்திற்கு முன்னால் மிகப்பெரிய கட்-அவுட். அதில், ஒரு வெள்ளைக்காரரின் மிகப்பெரிய உருவம். ஆங்கிலத்திலான வரவேற்பு வாசகங்கள். தமிழிலும் சில சொற்றொடர்கள்.

"மறுவாழ்வு கொடுக்கும் மணியே வருக! ஓரினச்சேர்க்கையின் உருவே வருக!"

மோகனனின் கார், அந்த வளாகத்திற்குள் வந்தபோது, மேலே கேட்கும் கூச்சலை கேட்ட செல்வா, இப்போது, 'அய்யோ அய்யோ' என்றான். 'உனக்கு எத்தனை தடவை சொல்றேன்.... உனக்கு ஒன்றும் பங்கம் ஏற்படாது. காருக்குள்ளேயே கண்ணாடிகளை இறக்காமல் ஏ.சி. யை போட்டுக்கொண்டு பேசாமல் இரு. நான் பத்து நிமிடத்தில் வந்துடுவேன். தலையை மட்டும்தான் காட்டணும். மற்றதை காட்டுறது நாளைக்குத்தான்' என்று சொல்லிக்கொண்டே, கார் கதவை திறந்து கொண்டு இறங்கினான் மோகனன். அப்போது, இன்னொரு கார் வந்து நின்றது. இவனுடைய காரைவிட இரு மடங்கு பெரிய கார். மும்மடங்கு பளபளப்பு. அந்தக் காரிலிருந்து செக்கச் செவேலென்ற ஒரு மனிதர் இறங்கினார். உடனே, அத்தனை பேரும் அவரை மொய்த்துக் கொண்டார்கள். அவர், எதேச்சையாக மோகனனை பார்த்துவிட்டார். கூட்டத்துக்கு உள்ளே ஊடுறுவி, அந்தக் கார் பக்கம் வந்து 'ஹலோ' என்று கை குலுக்கிவிட்டு, இடது பக்க இருக்கையில் ஒடுங்கிக் கிடந்த செல்வாவை வைத்த கண் வைத்தபடி பார்த்தார். பிறகு, 'யூ புராட் எ பிராப்பர் பாய்... தேங்ஸ் எ லாட்' என்றார்.

மோகனன், அதிர்ந்து போனான். மரகத பச்சை சட்டையை, பொன் வண்ண பேண்டுக்குள் இன் பண்ணி சிவப்பு, டை கட்டி அழகாகத் தோன்றிய அந்த நாற்பது வயது மனிதர், உலக நிறுவனம் ஒன்றின் இயக்குநர். தங்கச் சங்கிலி காதில் தொங்க, மூக்குக் கண்ணாடி மார்பில் பதியத் தோன்றிய அந்த மனிதர், செல்வாவை பார்த்துக் கொண்டே மீண்டும் மோகனனிடம் குசலம் விசாரித்தார். மோகனனுக்குத் தெரிந்த அளவில், இன்று அவர் வருவதாக இல்லை. நாளைக்கு காலையில் பிளைட்டில் வரவேண்டும். இவன்தான், அவரை விமான நிலையத்தில் வரவேற்க வேண்டும் என்ற ஏற்பாடு. இவர்தான் எங்கேயோ சினிமாக்காரர்களுக்கு இடையே உதிரியாய் சுற்றிக் கொண்டிருந்த இவனை, ஓரினச் சேர்க்கை மூலம் கரையேற்றியவரோ? கரை படுத்தியவரோ...? இந்த நிலத்தையும், அதன் முகம் போன்ற கட்டிடத்தையும் உலக நிறுவனத்தின் சார்பில் வாங்கிப் போட்டவர். ஓரினச் சேர்க்கைக் காரர்களின் மறுவாழ்வு மையம் என்ற பெயரில் ஏகப்பட்ட பணம் அனுப்புகிறார் ஆனால் நடப்பதோ மறுவாழ்வு அல்ல. மருவாழ்வு. எல்லாம் இவருடைய சம்மத்தோடுதான்

மோகனன், தவியாய் தவித்தான் பாலுக்கு காவலாயும், பூனைக்குத் தோழனாகவும் இருக்க வேண்டிய நிலைமை. செல்வாவிடம் ஓடி விடு என்று தமிழில் சொல்லலாம் என்றால், இந்த மையத்தின் துணைச் செயலாளர், அந்த உலக நிறுவன இயக்குநருக்கு போட்டுக் கொடுத்துவிடுவான் பழையபடியும் சினிமா உதிரியாக வேண்டும். இதற்குள் அந்த மனிதர், உடனடியாய், புரியாத ஆங்கிலத்தில் பேசினார்.

"லெட்டஸ் கோ மோக்..."

மோகனன், செல்வாவை, கண்டுக்காமல் அதே சமயம் முதுகுக்கு பின்னால் கையை வளைத்து அவனை அங்கேயே இருக்கும்படி சொல்லிவிட்டு, மிஸ்டர் ஜான் ஜோவுடன் இணையாக நடக்கப் போனான். உடனே அவர், 'பிரிங் தட் பாய்... லெட் இம் ஆல்சோ என்ஜாய்.' என்றார். உடனே இவன் 'அவன் என் மைத்துனன். தங்கையின் "உட்பி".' என்றான். 'சோ வாட்' என்றார் அவர். இதற்குள் துணைச் செயலாளர் சத்ருக்கன், குலுங்கிக் குலுங்கி நடந்து, செல்வாவை வெளியே இழுத்து, அந்த வெள்கைக்காரர் முன்னால் நிறுத்தினான். எல்லோரும் மேல்தளத்திற்கு ஏறிக் கொண்டி ருந்தார்கள். கடைசியாக தயங்கி நின்ற செல்வாவிடம் 'எப்படியாவது இங்கிருந்து ஓடிடு. இவர் என்னுடைய பாஸ்... இவர் சொல்லை என்னால தட்ட முடியாது. என்று கிசுகிசுத்தான். உடனே செல்வா, வார வழியில தேக்குத் தோப்புல நரிகளப் பார்த்தேன். நான் எப்படித் தனியா போறது? என்னை கொண்டு போய் விடுறது உன்னுடைய டூட்டி...' என்றான். 'சரி வா.. பார்த்துக்குவோம்.' என்று சொல்லிக்கொண்டே செல்வாவையும் இழுத்துக் கொண்டு படியேறினான்.

அந்த வெள்ளைக்காரர், மேடையேறி, அங்கிருந்தவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, மோகனன் செல்வாவிடம் 'அதோ அந்த் அறைக்குள் போய் பதுங்கிக்கோ. நான் வருவது வரைக்கும் கதவைத் திறக்காதே' என்றான். செல்வா திருப்பிக் கேட்டான்.

"நீ வாறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும்."

"எப்படியும் மிட் நைட் ஆயிடும்."

"அய்யோ... சித்தப்பாவுக்கு என்ன சொல்றது? என்னாச்சோ ஏதாச்சோன்னு துடியா துடிச்சிகிட்டு இருக்கப் போறார்."

"உன்னை அப்சர் பண்ணுவதற்காக கிளினிக்கில் வைத்திருக் கதாய், உங்க சித்தப்பாவுக்கு போன் செய்யுறேன். நீ இந்த அறைக்குள்ளேயே இரு. மீண்டும் சத்தியமாய் சொல்லுறேன். அந்த வெள்ளைக்காரன் என்னை வேலைய விட்டுத் துரத்தினாலும், உன்னை இழிவாய் பயன்படுத்த அனுமதிக்கமாட்டேன்."

மோகனன், அவசர அவசரமாக மேடைக்குப் போய், மிஸ்டர் ஜான் ஜோவிடம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு, மேடையை விட்டு படி வழியாக இறங்காமல் அப்படியே கீழே குதித்து சுழல் படிகளில் கீழே இறங்கி, அருகே உள்ள ஹே பாய்ஸ் மறுவாழ்வு மைய அலுவலகத்திற்கு ஓடினான்.

இதற்குள், மோகனன் காட்டிய அறைக்கதவை, செல்வா தொட்டான். தொடப் பொறுக்காமல் அது திறந்தது. உள்ளே ஓரடி வைத்தவன் தனது சித்தியை பார்த்ததுபோல் பயந்து திடுக்கிட்டான். அந்த அறைக்குள் ஆண்களும் ஆண்களும் ஒருவரோடு ஒருவர் பின்னிப் பிணைந்து கிடந்தார்கள் ஒவ்வொருவர் வாயிலும், இடுப்புக்குக் கீழேயும் பல்வேறு நபர்களின் உறுப்புக்கள். ஒவ்வொருவரும் ஏழெட்டு பேருக்கு ஈடு கொடுத்தும், ஈடு செய்தும் முழு நிர்வாணக் கோலத்தில் அலங்கோலமாக கிடந்தார்கள். இலை தழைகளோடு பூத்துக் குலுங்க வேண்டிய பூக்கள் காய்ந்து போன காம்புகளாய், கிழிந்து போன இதழ்களாய், சிதறிப் போன மகரந்த தூள்களாய், வண்டுகளே பூக்களாய்... பூக்களே வண்டுகளாய்... எட்டறக் கலந்து கிடந்தார்கள். (அதாவது எட்டுபேர்.) இவர்களின் வலுவான குலுக்கலுக்கும் புரட்டலுக்கும் இடையே மென்மையான 'டிங்... டிங்...' இசை.

வெளியே வந்த செல்வாவுக்கு, உறுப்புகளில் ஒன்றுகூட இயங்க வில்லை. நினைத்துப் பார்க்கவே அசிங்கமாய்... அருவெருப்பாய் தெரிந்தது. மிருகங்களுக்குக்கூட பாலியல் உறுப்புக்கள் இலை மறைவு காய்மறைவாய் உள்ளன. பசு மாட்டின் வால், அதன் உறுப்பை மறைக்கிறது. நாய்க்கு அடிவாரத்தில்தான் அதன் உறுப்பு உள்ளது. காகங்கள் உள்ளிட்ட சில பறவைகள் புணர்வதை பார்க்க முடியாது. ஆனால், இவர்களோ மிருகங்களை விடக் கேவலமாய், அசிங்கம் பிடித்த அம்மணமாய், அலங்கோலமாக கிடக்கிறார்கள். செல்வாவிற்கு மீண்டும் குமட்டிக் கொண்டு வந்தது. பத்து நிமிடம் ஒரு தூண் மறைவில் நின்றான். மோகனனைக் காணவில்லை. ஒருவேளை, அவன் வேண்டும் என்றே தன்னை இங்கே கூட்டிக் கொடுத்துவிட்டு போயிருப்பானோ என்ற சந்தேகம். அதுவே கோபமாக, தாபமாக அந்த தூணை இரண்டு கைகளாலும் மாறி மாறி குத்திக் கொண்டிருந்தபோது, மிஸ்டர் ஜான் ஜோ ஓடி வந்தார். அவனை, தன் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்

"டேக் இட் ஈஸி மை எங் மேன்... டிட் யூ ஈட்."

"டோன் வாண்ட் ஈட்... எனக்குப் பசிக்கல. என்னை விட்டா போதும். மோகனன் பயல் எங்கே?" என்று வெள்ளைக்காரருக்கு

அரைகுறை ஆங்கிலத்திலும், அவரைச் சூழ்ந்து நின்ற கேய் பையன்களுக்கு தமிழிலும் பேசினான். உடனே, துணைச் செயலாளர் வெள்ளைக்காரரிடமும், இந்தப் பையனிடமும் மாறி மாறிப் பேசினார். வாசகர்களின் வசதிக்காக தமிழாக்கம் செய்யப்படுகிறது.

"இவன் உங்களுக்கு பயன்படக்கூடாது என்பதற்காக, தன்னோட தங்கையை கட்டிக்கப்போறதாய், மோக், அப்போ சொன்னது நினைவிருக்குதா பாஸ்."

"ஏஸ்.... புரசீட்...."

"அதாவது, இவனை அவன் மட்டுமே கீப் செய்யணுமுன்னு நினைக்கிறான். ஒரு அறைக்குள்ள தங்கும்படி இவனுக்கு எச்சரிக்கை செய்தான். உங்க பணத்தை வாங்கிக் கிட்டு உங்களுக்கே துரோகம் பண்றான்."

"தட்ஸ் ஆல் ரைட்.... ஹீ வில் பே பார் இட்.... (பரவாயில்லை. அதற்கான பலனை அனுபவிப்பான்)"

வெள்ளைக்காரர் உடம்பைச் சொறிந்து கொண்டே, தூணோடு தூணாய் ஒடுங்கிக் கிடந்த செல்வாவை உற்றுப் பார்த்தார். "பயல், கேய் கேம்முக்கு புதுசு.... இந்த மாதிரி 'கன்றிவுட் பாயை' விடவே முடியாது. சோதா பயல்களோட சோரம் போனது போதும்."

என்றாலும், மிஸ்டர் ஜான் ஜோ, நாலுந்தெரிந்தவர். கிளப்பின் துணைச் செயலாளரான சத்ருக்கனை பொருள்பட பார்த்தார். அவன், அவர் காதில் ஏதோ கிசுகிசுத்தான். விட்டுப் பிடிக்க வேண்டிய கிராக்கியாம்.

செல்வாவின் அருகே, அவனுக்குத் தெரியாமல் ஒரு முரடனை நிறுத்திவிட்டு அவர்கள் மேடைக்குப் போய் விட்டார்கள். உடனே 'ஆடல் பாடல்', அம்மண அமர்க்களங்கள். நமக்கு மறுவாழ்வு அளிக்கும் மிஸ்டர் ஜோ என்று துணைச் செயலாளர் சத்ருக்கன் ஓங்கிக் கத்த, மேடையில் நின்றவர்களும், தளத்தில் கிடந்தவர்களும் "வாழ்க வாழ்கவே" என்றார்கள். பிறகு ஒரு பாடல்.

**"இருப்பது கொஞ்ச காலம் – அதுவே**
**கொஞ்சும் காலமாகட்டும்.**
**இறப்பது நிச்சயம் – அதனால்**
**இருப்பதைப் பகிர்வோம்.**
**ஆணென்ன பெண்ணென்ன**
**அனுபவ இன்பமே முக்கியம்."**

இந்தப் பல்லவி, தான் எழுதியது என்றும், அதன் பொருளையும் சத்ருக்கன், ஜோவிடம் விளக்கிக் கொண்டிருந்தான். பல பேர்

மேடையில் பாட்டிற்கேற்ப கொஞ்சுக் குலாவினார்கள். இதற்குள் துணைச் செயலாளனின் ஜோவாய் அசைப்பில் ஒருத்தன் தட்டு நிறைய பிரியாணியோடு செல்வாவிடம் போனான். 'உன்னை எதுவும் செய்ய மாட்டோம். பேசாம சாப்பிடு' என்றான். இரண்டு நாள் முழுக்க பட்டினி கிடந்த செல்வா, அந்த தட்டை பாய்ந்து பிடிக்கப் போனான் உடனே தட்டுக்காரன் 'மொதல்ல வயித்துக்குள்ள கனமான சாப்பாட்ட திணிக்கும் முன்னால, பழரசம், சூப் எதையவாது குடிக்கணும். உனக்கு என்ன வேணும்' என்றான். பசி வேகத்தில் செல்வா, 'இரண்டும்' என்றான். உடனே, தட்டுக்காரன் செல்வாவை கவனித்துக் கொண்டிருந்த முரட்டுத் தோற்றக்காரனை பார்த்து கண்ணடிக்க அவன் சூப்போடும், பழரசத்தோடும் வந்தான். செல்வா, மாங்கு மாங்கு என்று குடித்தான். பிரியாணியில் மூன்று கவளங்களை போட்டிருப்பான். மீண்டும் ஜுஸ், சூப் என்றான். கேட்டது கிடைத்தது. கிடைக்கக் கிடைக்க அவன் தலை சுற்றியது.

சிறிது நேரத்திற்குள் செல்வா, இறப்பிற்கும் பிறப்பிற்கும் இடைவெளி கொடுக்கும் சுரணையற்ற நிலைக்கு போய்விட்டான். கண் முன்னாலேயே கலர் கலராய் பல்வேறு விதமான படங்கள். யதார்த்தம் - மாந்தரீக இயல்பானது. தலை சுழன்றது. கண்கள் வெட்ட வெளியாயின. அப்படியே தரையில் சாயப் போனவனை, துணைச் செயலாளன் சாய்த்துப் பிடித்து தரையில் குப்புறக் கிடத்தினான். பேண்டை உருவினான். ஜட்டியை கழட்டினான். கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப்போகும் சாதனையாளன் போல் மேடைக்குப் போய், மிஸ்டர் ஜான் ஜோவை கூட்டி வந்தான். அவரும் ஜட்டி போடாத பேண்டை கழட்டி தோளில் துண்டு மாதிரி போட்டுக் கொண்டு, கையிலிருந்த கோப்பையை ஒரே மடக்காய் வாயில் கவிழ்த்துவிட்டு ஓடோடி வந்தார். இதற்குள் அத்தனை பேரும் அம்மணமாக ஆங்காங்கே சுருண்டார்கள். உலக நிறுவன இயக்குநர், செல்வா மீது கவிழ்ந்து படுத்தார். பத்து நிமிடம் ஆகியிருக்கும்.

கால நேர வர்த்தமானங்களைத் தாண்டிய முப்பரிமாண நிலை. அரை மணிநேரமோ கால் மணி நேரமோ... லேசாய் கண் விழித்த செல்வாவிற்கு, பாதி உண்மையாகவும், மீதி கற்பனை போலவும் தோன்றியது. ஆனாலும், தன் மேல் ஒரு சுமையை உணர்ந்தான். உடனே அவனுள் ஒரு வெறி..பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற வெறி. மிஸ்டர் ஜான் ஜோவை, ஒரே உதறலாய் கீழே தள்ளி, குப்புறப் போட்டு அவர்மீது கவிழ்ந்தான். அவரை ஒரு பெண்ணாக நினைத்துக் கொண்டான். கிராமத்தில் ஆட்டை மரத்தில் கட்டி கிடாயை ஏவி விடுவதும், காளை மாடு பசுவின் மேல் கால்

போடுவதும் அவனுக்கு நினைவுக்கு வந்தது. இதுவரை பசுவாக, ஆடாக கிடந்த இவன், இப்போது கட்டிளங் காளையாய், அசல் மாடாய் ஆகிப் போனான். ஆனாலும், கீழே கிடக்கும் வெள்ளையரை ஒரு பெண்ணாகப் பாவித்துக் கொண்டான்.

கால்மணி நேரத்தில், அவனுள் ஒரு சுகம் தெரிந்தது. இதுவரை அனுபவித்தறியாத சுகம். கன்னி கழியாதவனுக்கு கிடைத்த முதல் தீனி. சுவையான தீனி. சுகமான தீனி. தீனி முடிந்ததும் உடலெங்கும் ஒரு ஆயாசம். ஒரு குற்ற உணர்வு. செல்வா, மிஸ்டர் ஜான் ஜோவிடமிருந்து புரண்டு தரையில் குப்புற விழுந்தான். அவன் மீது மது வெறியிலும், மோக வெறியிலும் பாயப்போன துணைச் செயலாளரை அப்போதுதான் வந்த மோகனன் பிடித்துக் கொண்டான். கீழே கிடந்த மிஸ்டர் ஜான் ஜோ, "மோக்... நோ. வயலன்ஸ்... வெரி பேட்... லெட் தம் என்ஜாய்... டோண் பி எ கில் ஜாய்... (மோகனா, நீ செய்வது தவறு. அவர்கள் மகிழட்டும். மகிழ்ச்சிக்கு தொலைகாரனாகாதே.) என்று தான் நடத்தியதில் திருப்தியும், செல்வா நடத்திக் காட்டிய மகிழ்ச்சியும் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும் என்பதுபோல், கை கால்களை அங்குமிங்குமாய் ஆட்டினார். செல்வாவும், அவனைப் பார்த்து கையை ஆட்டி "ஐ லைக் இட்... ஐ லைக் இட்" என்றான்.

இடுப்புக்கு கீழே அம்மணமாய் கிடந்த செல்வாவை, தூக்கி நிறுத்திய மோகனன், எவனோ கழட்டிப் போட்ட பேண்டை எடுத்து அவனை மாட்டச் செய்தான். கழுத்து வரைக்கும் சுருக்கி வைக்கப்பட்ட பனியனையும், பனியன் மேலான சட்டையையும் கீழே இழுத்து விட்டான். அந்தக் கூட்டத்தை அனல் கக்க பார்த்துவிட்டு, செல்வாவுடன் சுழல் படிகளில் இறங்கி, தரை தட்ட நின்றான்.

செல்வாவை, அணைத்தபடியே தனது காருக்குள் ஏற்றினான். அந்தக் கார் நான்கு சக்கர பாய்ச்சலில் கண் மண் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்தது. இந்த நிலையில்... இந்த இரவில்... இவனை சித்தப்பாவிடம் ஒப்படைக்க முடியாது. காரை ஓட்டிக் கொண்டே இருக்க வேண்டும். பெட்ரோல், ரிசர்வ்க்கு வரும்போது, அதே இடத்தில் நிறுத்த வேண்டும்.

இருட்டு மயமான சாலையில், எதிரே வரும் வாகன ஒளியை வைத்தே ஒரு அனுமானத்தோடு, கார் ஓட்ட வேண்டும். அந்த ஒளியின் பரிமாணத்திற்கு ஏற்ப வண்டியின் எதிர் வாகனத்தின் கன பரிமாணத்தை உணர்ந்து, காயை நகர்த்துவதுபோல் காரை நகர்த்த வேண்டும். பின்னால் வரும் வண்டிகளின் விளக்கு வெளிச்சம், கார் கண்ணாடியில் பிரதிபலிப்பதை அனுமானமாகக் கொண்டு

அதற்கேற்ற இடைவெளி கொடுத்து ஓட்ட வேண்டும். லாரிகள் மொய்க்கும் தேசியச் சாலையில் இரவில் கார் ஓட்டுவது என்பதே ஒரு தனிக்கலை. இதில் மோகனன் தேர்ந்தவன் என்றாலும், இப்போது அவன் கார் இரு தடவை விபத்துக்குள்ளாகப் போனது. இவன் வழிவிடவில்லை என்று ஒரு லாரி இவன் காரை 'அணைப்பது'போல் ஓடியது. எதிரே நான் வருகிறேன் என்பதுபோல் பிரகாசமாக வெளிச்சம் போட்டும். வேக வேகமாய் ஓடிய இவன் காரை மோதப் போவதுபோல் பாவலா செய்து கொண்டே ஒரு லாரி பின்நோக்கிப் போனது. இவனே காரை நிறுத்தலாமா என்று நினைத்தபோது, பின்னிருக்கையில் படுத்துக் கிடந்த செல்வா மயக்கம் தெளிந்ததுபோல் கத்தினான். அலறியடித்து எழுந்து மோகனனின் சட்டைக் காலரின் பின் பக்கத்தை பிடித்திழுத்தபடியே, "சதிகாரப் பயலே... என்னை... அந்த மிருகக் கூட்டத்துல மாட்ட வச்சிட்டு... எங்கேடா போனே..." என்று கத்தினான்.

கார் நின்றது. முன் கதவு திறந்தது. பின் கதவு திறக்கப்பட்டது. மோகனன், செல்வாவை வெளியே இழுத்துப் போட்டான். கன்னத்தில் ஓங்கி ஓங்கி அறைந்தான். இடுப்பில் காலால் எகிறினான். கீழே விழுந்த செல்வாவை தூக்கி நிறுத்தி, கழுத்தை, கையால் பிடித்தபடியே அந்த அந்தகார இருளில் பேய் போல் கத்தினான்.

"பொறுக்கிப் பயலே... முட்டாப் பயலே... நான் ஒன்னை ஒளிஞ்சுக்கோன்னு சொன்னால்... இப்படி பண்ணிட்டியே.... உன்னையே நம்பி இருக்கிற என் சிஸ்டர் என்ன பாடு படப்போகிறாளோ..."

"உன் சிஸ்டர் யாருக்குடா வேணும்? நீதாண்டா போக்கிரி... புறம்போக்கு... கூட்டிக் கொடுத்த பயல்.. பத்து நிமிஷத்துல சித்தப்பாவுக்கு டெலிபோன் செய்துட்டு வாறதா போக்குக் காட்டிட்டு, ரெண்டு மணி நேரமா என்னடா செய்தே...? தோ பாரு... இதுக்கு மேல கைய நீட்டுன... மவனே... ஒன் முதுகிலயும் நான் சவாரி செய்வேன்."

மோகனன், புரிந்து கொண்டான். பயலுக்கு போதை மாத்திரையை கலக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இப்போதுதான் லேசாக அவனுக்கு மயக்கம் தெளிந்திருக்கிறது. சொல்லிப் பார்ப்போம். கேட்டால் கேட்கட்டும். கேட்காவிட்டால் போறான்... மோகனன், தன்னிலை விளக்கமாக பேசினான்.

"நான் சொல்வதை கேளுடா நாயே... போன் செய்வதுக்காக, கேய் அலுவலகத்துக்குப் போனேன். அது அவுட் ஆப் ஆடர்.

இருபத்தைந்து நிமிஷம் காரை ஓட்டினேன். ஒரு கடையோ, டெலிபோன் பூத்தோ கிடைக்கல.. எப்படியோ ஒரு இடத்துல மூடப்போன பூத்துக்காரன் கையில காலுல விழுந்து ஒன் சித்தப்பனுக்கு போன் பண்ணிட்டு, அப்பதான் வந்தேன். அதுக்குள்ளே எல்லாம் முடிஞ்சிட்டே..... என்னை மாதிரியே நீயும் ஆயிட்டு வாரியேடா... இதுக்கு தெரிஞ்சோ தெரியாமலோ நானே காரணமாயிட்டேனடா... கூடப் பிறந்த தங்கைக்கே சக்களத்தி ஆக்கிட்டியேடா...."

மோகனன், நரிகள் கத்தும் அந்த நள்ளிரவில், காட்டுப் பூனைக்குப் பயந்து காகங்கள் பறந்த அவற்றில் காலடிகளுக்கு கீழே தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். காரில் தலையை முட்டி மோதினான். செல்வா, அவனை தன் பக்கமாக இழுத்தான். அவன் கண்ணீரை துடைத்தான். உடனே, மோகனன் எந்தவித விகற்பமும் இல்லாமல்தான் செல்வாவை கட்டிப் பிடித்தான். ஆனாலும் -

பற்றிக் கொண்டது.

# 10

காரிலிருந்து இறங்கிய செல்வா, முன் நடக்க, மோகனன் பின் நடந்தான். பிள்ளைகளை பள்ளிக்கூடம் கொண்டு செலுத்த செல்வா வருகிறானா என்று தெருமுனை வரை கண்ணோட்டிய சித்திக்காரி, செல்வாவை பார்த்ததும் பல்லைக் கடித்தாள். அவனிடம் காட்டிய பச்சாதாபம் ஒரு நாள் கூத்தாக முடிந்தது. கணவர் சிவனுப்பாண்டி, மனைவியின் சுபாவத்தை புரிந்து வைத்திருப்பவர் போல் 'எங்கண்ணன் மகன் பார்வையே ஒரு தினுசா இருக்குறது. நீ ஏதும் தாறுமாறா நடந்துக்கிட்டியா' என்றார். படுக்கையறையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொள்ளாமல், அந்த அறைக்குள்ளேயே அவர் அப்படி கேட்டது அவளை பழைய சித்திக்காரியாய் ஆக்கிவிட்டது. 'நான் வேணுமுன்னா செத்துத் தொலையுறேன்' என்று கணவனுக்கு பதிலடி கொடுத்தாள். தன் தவறை உணர்ந்து கொண்ட அவரும், அதற்குப் பிராயச்சித்தமாக அவளை அணைக்கப் போனார். அவள் அவரது கைகளை உதறிவிட்டு செத்துப் போனவள் போலவே கிடந்தாள். இப்போது செல்வாவைப் பார்த்ததும், மரித்தெழுந்தாள். நாக்கே, நரம்பாய் முறுக்கேற நின்றவள், மோகனனைப் பார்த்ததும் குளிர்ந்து விட்டாள். இதனால் பெரிய இடத்து சாவகாசம்

வைத்திருக்கும் செல்வா மீதுகூட பாசம் வரவில்லையானாலும், கோபம் குறைந்தது நடை வாசலில் இருந்து உள்ளே ஓடி கணவனை வெளியே கொண்டு வந்தாள். அவர், செல்வாவின் கையைப் பிடித்தபடியே, மோகனனிடம் கண்களால் விளக்கம் கேட்டார்.

"ஒண்ணுமில்ல அங்கிள். நான் நேற்று சொன்னேன் பாருங்க... அதே கேஸ்தான்... ரெண்டு தடவை ஊசி போட்டார். இப்ப சரியாயிட்டு. இனிமே குண்டோதரன் மாதிரி சாப்பிடுவான் பாருங்க."

"மஞ்சள் காமாலை இல்லியே?"

"டாக்டர் டெஸ்ட் செய்து பார்த்தார் அங்கிள். இல்லவே இல்லை."

"ஏங்க... பிள்ளைகளுக்கு ஸ்கூலுக்கு நேரமாவுதே. வேன்காரன் இன்னைக்கு வரமாட்டானாம்."

"என்னாலயும் முடியாதே லட்சுமி. ஆபீசுக்கு நேரமாயிட்டுது. இரண்டும் எதிர் எதிர் திசையில இருக்குதே..."

'அப்படியானால் செல்வாவை...'

"அறிவு கெட்டத் தனமா பேசுறியே. அவனால முடியுமா? எவ்வளவு வீக்கா இருக்கான் பார்."

மோகனன் முன்னால் தன்னை இழிவுபடுத்திய கணவனை அங்கேயே பதிலடி கொடுக்கப் போனாள். அதற்காக அவள் வாயெடுக்கும் முன்பே, மோகனனின் வார்த்தைகள் விழுந்துவிட்டன.

"நான் இந்தக் காரிலேயே குழந்தைகளை கொண்டு போய் விட்டுட்டு வாறேன் அங்கிள்"

சித்திக்காரி உச்சி குளிர்ந்தாள். அந்தப் பணக்காரப் பிள்ளையை, பல்லிளித்துப் பார்த்தாள். ஆனால், மோகனனோ அவளை கடுமையாகப் பார்த்தான். நேற்றைய இரவுக்கும் பகலுக்குமான இடைவேளையில் செல்வா, அவனிடம் தனது சுய வரலாற்றை கூட்டாமல் குறைக்காமல் சொல்லியிருந்தான். சித்தப்பாவின் வாஞ்சையும், சித்தியின் வாட்டலும் அந்த வீட்டையே ஒரு கூண்டாகவும், செல்வாவை அதற்குள் மாட்டிக் கொண்ட கிளியாகவும் அனுமானித்தான் ஆகவே அந்தக் கிளியின் இறக்கைகளை வெட்டி விடுகிறவளை, தன் அம்மாவை பார்ப்பது போலவே பார்த்தான். அதேசமயம், அவள் கணவரை விருப்போடு பார்த்து, இறுதியில் விருப்பையும் வெறுப்பையும் தாழ்த்திக் கொண்டே பேசினான்.

"அங்கிள் நீங்களும் கார்ல ஏறுங்க... உங்களையும் ஆபீசுல கொண்டு விட்டுடுறேன்..."

"ஒனக்கு எதுக்குப்பா சிரமம்? ரெண்டும் எதிர் எதிர் திசை."

"பாசிட்டிவும் நெகட்டிவும்தான் ஒண்ணா சேரணும். உங்கள பற்றி செல்வா நிறையச் சொன்னான். அப்படிப்பட்ட உங்களை என் காரில ஏற்றிக் கொண்டு போய் விடுறது எனக்கு கிடைக்கிற கௌரவம் அங்கிள். என் அப்பா என்கிறவர் மட்டும்..."

மோகனன், மேற்கொண்டு ஏதும் பேசாமல், முகத்தை வேறு பக்கமாக திருப்பிக் கொண்டபோது அவனது இரு கரங்களும் அந்த காரின் வைப்பர்கள் போல் செயல்பட்டன. செல்வாவின் வருகைக்காக அலுவலக ஆடையுடனும், கூடையுடனும் காத்து நின்ற சித்தப்பாவிற்கு, மோகனனின் தழுதழுத்த குரலோ, முக நனைவோ, தெரியவில்லை. செல்வாவை பார்த்து துள்ளி ஓடி வந்த சுபேதாவையும், அருணையும் காருக்குள் தள்ளி விட்டார். அவர்களோ காருக்குள் நுழைய மறுத்து "எங்கே போனே அண்ணா... ஏன் நைட்ல வர்ல அண்ணா..." என்று அவனை மொய்த்தபோது, சித்திக்காரி, "டைம் ஆயிட்டு... அண்ணாகிட்ட அப்புறமா வந்து கொஞ்சுங்க..." என்று சொல்லிவிட்டு, செல்வாவிடம் ஒட்டிக் கொண்ட பிள்ளைகளை பிய்த்தெடுத்து காருக்குள் போட்டாள். முன்னால் ஓடிய கார் திரும்பாமலே பின்னோக்கி ஓடி வந்தது. சித்தப்பாகாரர் கார் ஜன்னலை தாழ்த்தி வைத்து, அதில் முகத்தை கொக்காக்கி, மனைவிக்கு ஒரு ஆலோசனை சொன்னார்.

"நம்ம கொல்லைப்புறத்துல இருக்குதே பசலிக் கீரை. அதைக் கழுவி... நல்லா அரைத்து... இவனுக்கு கொடு.. வயித்துல புண் இருந்தால் கேட்கும். கூழ் மாதிரி ஆக்கி நீயும் குடி. இந்த பசலி எதிர்கால வயித்து நோய்க்கும் ஒரு இன்சூரன்ஸ் மாதிரி. அதனால் பசலிக் கீரையை பறித்து... நல்லா கழுவி..."

"பறிக்கிறதை கழுவணுமுன்னு எனக்குத் தெரியாதா? அரைச்சால், கூழ் மாதிரி ஆகும் என்கிறத நீங்க சொல்லிக் கொடுக்கணுமா?"

சிவனுப்பாண்டி, எதுவும் பேசவில்லை. ஆனாலும், இதன் எதிரொலிப்பு செல்வா மீது விழுமோ என்று அச்சப்பட்டார். அலுவலக அவசரத்தில் அது பெரிதாக தெரியவில்லை. அவளை தாஜா செய்வதாக நினைத்துத்தான், 'நீயும் குடி' என்றார். ஆனால், அவளோ குடிகாரி மாதிரியே பேசுறாள் 'அறிவு கெட்டத் தனமா பேசுறியே?" என்று இவன் முன்னால் கேட்டது தப்புத்தான் இரவில்

வந்து எப்படி மன்னிப்பு கேட்பது என்று மனதில் ஒத்திகையாக பேசிக் கொண்டார்.

அந்தக் கார் போய்க் கொண்டிருக்கும்போதே, செல்வா, வீட்டிற்குள் போனான். அவனை துரத்துவது போல் பின்னால் ஓடிவந்த சித்தி, காட்டுக் கத்தலாய் கத்தினாள்.

“இப்போ ஒனக்கு திருப்திதானே? நீயுன்னுகூட அதிர்ந்து பேசாத மனுஷரை ஒரு அந்நியன் முன்னால திட்ட வச்சுட்டே..... இதனோடயாவது நிற்பியா? இல்ல, இன்னும் திட்டு வாங்கிக் கொடுப்பியா?

செல்வா, சித்தி சொல் கேட்காவதன் போல் தனது அறைக்குள் போனான். அன்று தனது அறையாக தெரிந்த அந்த இடம், இப்போது பிள்ளைகளின் அறையாய் தோன்றியது. ‘எவ்வளவு திமிர் இருந்தால் தப்புத்தான் சித்தின்னு சொல்லாமே போவே.... எல்லாம் என் தலைவிதி’ என்று அவள் தலையில் அடிக்காமலே கத்தியபோது, அந்த அறைக்கதவு தாளிட்டுக் கொண்டது. இது சித்தியின் கோபத்தைக் கூட்டியது. ‘என் வீட்ல இருந்துக்கிட்டே என் ரூமையே பூட்டுறியா? கதவைத் திறடா களவாணிப் பயலே...’ என்று அவள் கதவை டாம் டூம் என்று கையால் இடித்தாள். காலால் உதைத்தாள். அந்தக் கதவு, தட்டியும் திறக்கப்படவில்லை.

செல்வா, கதவு தட்டலோ-சித்தியின் ஏச்சோ எதுவும் கேட்காமல், கண் திறந்திருந்தும் பார்க்க முடியாமல், காது மடல் விரிந்தும் கேட்க முடியாமல் கிடந்தான். ஒரு ஆற்றின் மணல் மேல் குறுக்காய் நடப்பவர்களை திடீர் வெள்ளம் அடித்துச் செல்வது போல், இக்கட்டான - அதேசமயம், யதார்த்தமான வாழ்க்கை மண்ணில் நடந்தவனை, அனுபவ வெள்ளம் விழுங்காமல் விழுங்க வைத்ததை நினைத்து பிரமித்துக் கிடந்தான். உள்ளுருப்புகள் மட்டுமே இயங்க, வெளி உறுப்புகள் சூனியமாக, மல்லாக்கக் கிடந்தான்.

சித்திக்காரிக்கு கை வலியும், வாய் வலியும் ஏற்பட்டு கதவுச் சத்தம் ஓய்ந்த பிறகுதான், அவனுக்கு பிரக்ஞை ஏற்பட்டது. கூடவே அது பல்வேறு விபரீதங்களை கற்பித்துக் கொண்டது அந்த ஓரின ஆடுதளத்தில் சில சிறுவர்கள் வாய் கவ்வி கிடந்தது நினைவுக்கு வந்தது. அந்த நினைவு சித்தப்பா பிள்ளை அருணை, இந்த மோகனன் சில்மிஷம் செய்வானோ என்று எண்ண வைத்தது. அந்த எண்ணம் சுய அனுதாபத்தில் கரைய வைத்தது. காரில் சித்தப்பா இருக்கிறார் என்ற வடிகால் கிடைத்தது. அந்த வடிகாலில் சித்தப்பாவும் மூழ்கிப் போவாரோ என்ற பயம் பிடித்தது அதுவே

பீதியானது. அந்த பீதி தலையணையை விசிறி அடித்தது. கைகளை தரையை அடிக்க வைத்தது. கெட்டுப் போன வாய்க்குள் கைவிட்டு நாக்கை வெளியே எடுக்கப் போனது. நாக்கு வலிக்க வலிக்க அவனுக்கு கோபம் கோபமாக வந்தது. சுய கோபம். சென்னைக்கு அனுப்பிய அப்பா மேல் கோபம். அவன் மீது பாசம் வைத்திருக்கும் சித்தப்பா மீது அதே எதிர் விகிதாச்சார கோபம். இந்த வீட்டை விட்டு ஓடிப்போகாமல் கட்டாமல் கட்டிப்போட்டிருக்கும் பிள்ளைகள் மேல் கோபம். சித்தி மேல் கோபக்... கோபம்... சென்னை மேல் கோபம். எல்லாவற்றிக்கும் மேலாக -

கவிதா மேல் கோபம். அவளை நினைக்கவும் முடியவில்லை. மறக்கவும் முடியவில்லை. இந்த கேடு கெட்டவளுக்கு, ஒரு காதல் கடிதம் தேவை. அதற்கு கிடைத்த இளிச்ச வாயன் இவன். சரியான கள்ளி. இவன் உள்ளதை உள்ளபடி ஒன்றுவிடாமல் அவளிடம் சொல்லிவிட்டான். ஆனால், அவளோ, அம்மா ஓடிப்போன விவகாரத்தை சொல்லவில்லை. இவன் கௌரவத்தை இழக்க வைத்து, தன் கௌரவத்தை விட்டுக் கொடுக்காத பாவி. அவள் மனதிற்குள் இன்னும் என்னென்ன ரகசியங்கள் கிடக்குதோ? வீட்டிற்கு வரச் சொன்னவளே அந்த பழிகாரிதான். அப்பனுடன் டூரில் போவதை சொல்ல நினைத்திருந்தால் அவள் சொல்லி யிருக்கலாம். மனமிருந்தால் மார்க்கமுண்டு. மனமற்றவள். இவளைவிட இந்த மோகனன் எவ்வளவோ மேல். அவனுக்கு மட்டும் இந்தக் கெட்டப் பழக்கம் இல்லையானால் அவனைவிட நல்லவனை காணமுடியாது.

கெட்ட பழக்கம் மட்டும்தானா அது? தானும் கெட்டு பிறத்தியாரையும் கெடுக்கும் பழக்கம். ஒரு தொற்று வியாதி. அவனிடம் இந்த கவிதாவுக்கு எழுதிய கடிதம் இருக்கும் வரை வாய் கெட்டுக் கொண்டே இருக்கும். ஒரு வாயா? இல்லை. இரண்டு வாய்கள். இந்தக் கடிதத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டும். சித்தப்பாவிடமோ, பிள்ளைகளிடமோ வாலாட்டக்கூடாது என்று அந்தப் பொட்டப் பயலை கத்தியோடு போய் எச்சரிக்க வேண்டும். நேற்று வாக்களித்தபடி அந்த மோகனன் மட்டும் தலையெழுத்தாய் மாறிப்போன தன் கையெழுத்திலான கடிதத்தை மட்டும் கொடுக்காது போனால் -

செல்வாவின் கைகளே ஆயுதங்கள் போல் நீண்டன. விரல்கள் திரிசூலப் பாணியில் பத்து சூலங்களாய் ஆகிப்போயின. பின்னர் அவன் சிந்தனையில் தேக்கம் ஏற்பட்டது அப்படியே தூங்கிப் போனான். எவரோ அடித்துப் போட்டது மாதிரியான தூக்கம்

# 11

செல்வா, லுங்கியில் பேண்டுக்கும் தாவியதும், அவன் எங்கேயோ புறப்படுகிறான் என்று யூகித்துக் கொண்ட அருண், "நானும் வாரேன் அண்ணா" என்றான். "நானும்" என்றாள் சுபேதா. பொதுவாக இந்த மாதிரி மாலை மயக்க நேரத்தில் செல்வா, இரண்டு பேரையும் கூட்டிக் கொண்டு கடற்கரைக்கு போவான். ஒவ்வொரு கையிலும் ஒவ்வொருவரை பிடித்துக் கொண்டு, அருகே உள்ள கடற்கரைக்கு பொடி நடையாய் நடப்பான். சுபேதாவின் கால் வலித்ததும், அவளை தோளில் போட்டுக் கொள்வான். அண்ணனோடு உட்கார்ந்து குடை ராட்டினம், ஆகாய ராட்டினம் போன்றவற்றில் சுற்றுவதும், வேடிக்கையாகவும், வாடிக்கையாகவும் நடக்கும் சங்கதிகள். அதோடு பெரிய பெரிய பலூனாய் வாங்கிக் கொடுப்பான். அம்மா, கூட்டிப் போனால், ராட்டினத்தில் ஏற்றாமல், குடை ராட்டினம் போல் தலைமுடி அவிழ்வதையும் பொருட் படுத்தாமல், அவர்கள் தலையில் குட்டுவாள். 'ரெடியாகுங்க' என்று கூறும் அண்ணன், இப்போது தன்னந்தனியாக புறப்படுவது கண்டு, அருண் குழம்பினான். குழந்தைகள் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொன்னார்கள். செல்வாவிற்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

"நான் போகிற இடத்துக்கு நீங்க வரப்படாது."

"எந்த இடத்துக்கு அண்ணா."

"எந்த இடமா இருந்தால், ஒனக்கென்னடா? வேணுமுன்னா, ஒங்கம்மாவ பீச்சுக்கு கூட்டிட்டு போகச் சொல்லுங்க."

சித்தப்பா பிள்ளைகளை அலட்சியப் படுத்தியபடியே செல்வா, இரண்டு எட்டு வைத்தபோது, அருண் அவன் முன்னால் போய் நின்று வழி மறியல் செய்தான். சுபேதா அவன் கையைப் பிடித்து இழுத்தாள் செல்வா, அந்த பிள்ளைகளை முரட்டுத் தனமாக கீழே தள்ளினான். தேன் சிந்தும் வார்த்தைகளால் அவர்களிடம் பேசுகிறவன், இப்போது தேனீ போல் கொட்டினான்.

"சனியன்களே... சொன்னா கேட்க மாட்டீங்க? நான் எங்கே தொலைஞ்சா உங்களுக்கென்ன? என்னோட வரப்படாதுன்னா வரப்படாதுதான்."

அருணும் சுபேதாவும் ஒருவரை ஒருவர் அதிர்ச்சியோடு பார்த்தபடி கீழே கிடந்தார்கள். கடந்த ஒரு வருட காலமாக

வார்த்தைக்கு வார்த்தை 'அண்ணா... அண்ணா...' என்று செல்லம் கொஞ்சும் குழந்தைகள், இப்போது "எம்மா... எம்மா..." என்று ஒருமித்துக் கத்தியபடியே தரையில் புரண்டார்கள். அவனோ, அதைப் பற்றி பொருட்படுத்தாமல், நடையை தொடர்ந்தான். எதிர்த் திசையில் என்னமோ ஏதோ என்று ஓடிவந்த சித்தியை முட்டாக் குறையாக உராய்ந்தபடி, வாசலைத் தாண்டினான். தாவித் தாவி, பாய்ந்து பாய்ந்து ஓடினான்.

பூட்டாமல் ஒட்டிக் கிடந்த இரும்புக் கிராதி கதவுகளை, இரண்டாகப் பிளந்து அந்த பிளவிற்குள் பாய்ந்து, மலைப்படிகள் மாதிரியான வீட்டுப் படிகளில் ஏறி, வராண்டாவை தாண்டி, வரவேற்பு அறையில் குதித்து, மோகனனின் அறை வாசலில் பாதி வழி மறித்துக் கிடந்த கதவை, பிய்த்து விடுவதுபோல் ஒருச்சாய்த்து தள்ளியபடியே, உள்ளே பாய்ந்த செல்வா, பிரமித்தபடியே நின்றான். உதடுகள் ஒட்டாமல், விழிகள் கொட்டாமல், அப்படியே நின்றான்.

அந்த அறையின் கிழக்குச் சுவரில் தேர் வேலைப்பாடுகளைப் போன்ற ஆறடி உயர பீரோ பலகைகள். இவற்றை குறுக்காய் இணைக்கும் மூன்றடி அகல கருஞ் சிவப்பு பலகைகள். இவற்றில் மத்தியில் ஒரு செவ்வக வடிவம். ரேடியோ, சி.டி., டேப் ஆகிய மூன்றையும் கொண்ட இசைக்கருவி. இந்த குறுக்குச் சட்டத்திற்கு மேலேயும் கீழேயும் பல்வேறு வகையான இசைக் கருவிகள். சி.டி.யில் ஒரு பாடல். சந்த நயம் கொண்ட வேக வேகமான சொல்லடுக்குகளை கொண்ட ஊழிக்கூத்து பாடல்.

மோகனன், கால் சலங்கையும், கை மணியுமாய் தாமரைப் பூ போல் விரிந்த தார் பாய்த்த எட்டு முழ தும்பை வேட்டியுடன், இடுப்புக்கு மேலே எதுவும் இல்லாத விரிந்த மார்பும், பரந்த தோளுமாய் ஆடிக் கொண்டிருந்தான். சிவபெருமானின் ஊழிக்கூத்தின் அனந்தங்கோடி பிரமாண திரளாய் ஆடினான். ஊழித் தாண்டவம். காலும் கையும் உரசிக் கொள்கின்றன. உச்சியும் பாதமும் ஒட்டிக் கொள்கின்றன. தலை பம்பரமாய் சுழல்கிறது. பிறகு உடலோடு சேர்ந்து அங்குமிங்குமாய் தாவித் தாவி அந்த அறையே ஒரு பிரபஞ்ச கண்ணாடி ஆகிறது. அங்குமிங்குமாய் சுழல்கிறான். ஒரு கை உடுக்கை போல் ஆகிறது. இன்னொரு கையால் அதை அடித்துக் கொள்கிறான். பின்னர் ஒவ்வொரு கையும், ஒவ்வொரு காலோடு பின்னிக் கொள்கின்றன.

அந்த பின்னலிலும் ஒரு மாற்றம். வலது கையும் வலது காலும் பிரிந்து இடது கையும் இடது காலோடும் ஜோடி சேர்கின்றன. இடது காலும் இடது கையும் பிரிந்து வலது கையுடன் இணைகின்றன. ஒற்றைக்கால் உயர்கிறது. மற்றக்கால் துள்ளுகிறது.

ஒலி முழக்கமும், உடல் முழக்கமும் ஒன்றிக்கின்றன. தரை தகிக்கிறது. சதங்கை மணிகளில் ஒன்று உருண்டோடுகிறது. கை மணிகள் ஒன்றுடன் ஒன்று மோதி, மோதி கால் சதங்கைகளோடு இணைகின்றன. இசை, சொல்லாகிறது. உடல் வில்லாகிறது. சொற்கள் செல்லரிக்க செல்லரிக்க, வேர்வையில் குளித்த மோகனனின் உடல் மெல்ல மெல்ல நிதானப்படுகிறது. தாங்க முடியாத வேதனையோடு தாவித் தாவி ஆடியவன், இப்போது தரை இறங்கினான்.

செல்வாவை அடுத்து அந்தக் குழந்தைகளையும், அவர்களது தந்தையையும் பார்த்தபிறகு 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்ற தத்துவம் அவனுக்கு பரிட்சயமானது. அதற்கு எதிர்ப்பதமாய் ஆகிப்போன தன்னை நினைத்து, தன்னை படைத்த கடவுளை நினைத்து, தன்னை பெற்ற அம்மாவை நினைத்து, தன்னுள் இருந்த நாட்டியக் கலையை ஒரு வடிகாலாக ஆக்கிக் கொண்டிருந்தான். இப்படி அடிக்கடி ஆடுகிறவன்தான். அது, ஈஸ்வரியை பொன் சிம்மாசனத்தில் உட்கார வைத்து, சிவபெருமான் ஆடினாராமே... ஆனந்தக்கூத்து, அப்படிப்பட்ட நாட்டியம். ஆனால், இன்றைக்கோ அண்டங்கோடி அண்டங்களும், அண்ட சராசரங்களும் சுயம் சுருங்கி ஒரு அணுவுக்குள் அடங்கியது போன்ற ஊழிக்கூத்து.

மோகனனை பயபக்தியோடு பார்த்தபடியே நின்ற செல்வாவை, மோகனன், அப்போதுதான் பார்த்தான். நிதானத்திற்கு வந்து கொண்டிருந்த பாத குலுக்கல்களுக்கு இடையே, கோபம் கோபமாய் கேட்டான்.

"முட்டாள்... மூடா... என் தங்கை வருவது வரைக்கும், இந்தப் பக்கம், நீ, தலை காட்டப்படாதுன்னு ஒனக்கு எத்தன தடவடா சொல்றது...?"

"நான் ஒன்றும் ஒன்னை பார்க்க வரல.... கவிதாவுக்கு, நான் முட்டாள் தனமா எழுதுன லவ் லெட்டரை வாங்கிட்டுப் போக வந்தேன். அதை வைத்து, நீ எப்ப வேணுமுன்னாலும் என்னை பிளாக் மெயில் செய்யலாமே..."

"அறிவு கெட்ட ஜென்மமே.... அதோ அந்த ரேக்குல இருக்குது பார்... அதுதான் உன்னோட காதல் லெட்டர். எடுத்துக்கிட்டு ஓடுடா..."

சதுரமாய் மடிக்கப்பட்ட அந்தக் கடிதத்தை, செல்வா ஓடிப்போய் எடுத்துக் கொண்டான். அவனால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. அவன் கைப்பட எழுதிய கடிதம்தான் செல்வா, அதை பிரித்து பார்த்து அதை படித்து முடிப்பது வரைக்கும் காத்திருந்த மோகனன், ஒரே தாவாய் தாவி,

செல்வாவிடமிருந்த கடிதத்தை பிடுங்கி, சுக்கு நூறாய் கிழித்து அவன் தலை மேலேயே போட்டுவிட்டு கத்தினான்.

"கத்துக்குட்டி பையா! ஒனக்கு எதுக்குடா காதலு? அந்த லெட்டர நான் எப்படிடா வெளில காட்ட முடியும்? அப்படி காட்டினால், என்னோட சிஸ்டர் எதிர்காலமும் பாதிக்கும் என்கிறது எனக்குத் தெரியாதா? அவளும் இந்த மண்ணாங்கட்டி காதலில் சம்பந்தப்பட்டிருப்பது, இந்த கடிதத்திலேயே தெரியுதடா... நல்லா கேளுடா... என் தலையில நானே மண் அள்ளி போட்டிக்கிட்டேன். அதேசமயம் என் தங்கை தலையில மண் அள்ளி போடுற அளவுக்கு நான் மோசமானவன் இல்லடா... திரும்பிப் பாராமல் ஓடுடா..."

"ஒன் தலையில நீயோ யாரோ அள்ளிப் போட்ட மண்ணு, என் தலையிலயும் விழுந்துட்டுதே.... விழ வச்சுட்டியே..."

"ஒன் தலையில விழுந்தது தூசி தாண்டா..."

"தூசியோ தும்போ அதை என்னால மறக்க முடியலியே."

மோகனன், மௌனமாய் தலை குனிந்தான். குனிந்த தலையை அங்குமிங்குமாய் ஆட்டிக் கொண்டான். கண் வழி நீரை துடைத்துக் கொண்டான். அப்படியே அசமந்த நிலையில் நின்றான். செல்வா, அவன் தலையை நிமிர்த்தினான். ஆறுதல் சொன்னான்.

"நீ நல்லவன்தான்... ஆனால் இவ்வளவு நல்லவனா இருப்பேன்னு நான் நெனக்கல..."

மோகனன், அவனை தள்ளி விட்டபடியே கத்தினான்.

"இந்தா பாரு பையா... இந்த தொடுற வேலைய என்கிட்ட வச்சுக்காத..."

"என்னை இவ்வளவும் செய்த ஒன்னை, தொடுறதுக்கு உரிமை இல்லியா?"

"நான் சொல்றத நல்லா கேளு செல்வா! உனக்கும் என் தங்கைக்கும் இடையில நான் குறுக்காய் நிற்க விரும்பல..."

"அவளுக்கு ஒன்னோட இந்தப் பழக்கம் தெரியுமா?"

"தெரிஞ்சிருக்கணும். ஒரு தடவை ஹோமோ பயல்களையும், லெஸ்பியன் பெண்களையும் நிற்க வைத்துச் சுடணும்முன்னு என்னை சாடை மாடையாக பார்த்துக்கிட்டே, யார் கூடவோ டெலிபோன்ல பேசினாள் இப்ப அவள் என்னை திட்டியது முக்கியமில்லை. அவள்தான் முக்கியம் நீ அவளுக்கு... அவள் உனக்கு.. எனக்கு பம்பாய்..."

"அப்படின்னா."

"ஒன்னை, அந்த சொரிப்பயல் வெள்ளையனிடமிருந்து நான் காப்பாற்ற முயற்சி எடுத்ததை, அவனுக்கு எவனோ போட்டு கொடுத்துட்டான். நேற்று நள்ளிரவிலிருந்தே, என் வேலை போயிட்டுது.... பதவி போயிட்டுது... ஆயிரக் கணக்கில டாலர் போயிட்டுது... ஆனால், இதுவும் நன்மைக்குத்தான்... நேற்றே என் பேர்ல ஒரு லெட்டர் இங்கே கிடந்தது. எங்களுக்குன்னு பம்பாயில ஒரு சங்கம் இருக்குது.. ஒரு பத்திரிகையும் வெளி வருது... இப்போ இந்த சங்கத்தை அகில இந்திய சங்கமாய் ஆக்கப் போறோம். இதுக்கு என்னை பொதுச் செயலாளரா போட்டிருக்காங்க. ஒவ்வொரு மாநிலமும் சுற்றலாம். சங்கத்தின் வளர்ச்சிக்காக என்னோட நாட்டிய நிகழ்ச்சிகளும் நடக்கும்... யார் கண்டா? நான் ஒருவேளை அகில இந்திய வி.ஐ.பி.யாக்கூட ஆகலாம். இல்லன்னா தெருவோர லோலாயியாகவும் திரியலாம்."

"இங்கே வருவதாய் இருந்தால், குறைந்தது ஐந்து வருஷம் ஆகும். அதுவும் உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் என்கிற செய்தி வந்தபிறகுதான் வருவேன். ஒரே ஒருநாள் உங்களுக்குத் தெரியாமலே தலை காட்டிட்டு ஓடிப் போயிடுவேன். சரி... மைடியர் பிரதர் இன் லா.... கவிதாவை கை விட்டுடாதேடா... ரொம்பவும் ரோசக்காரி.... எவ்வளவுக்கு எவ்வளவு ரோசம் உண்டோ... அவ்வளவுக்கு அவ்வளவு பாசம் உள்ளவள். என்னை அவள் உன்கிட்ட திட்டுனதுகூட பாசத்தின் வெளிப்பாடுதான். எனக்காக அவள் அழுதுயிருக்கிற கண்ணீர் ஆயுள் முழுதுக்கும் போதும்... சரி கெட் அவுட் ப்ளீஸ்..."

"பாவம்... என்னால நீங்க போறத நெனத்தால்... மனசுக்கு கஷ்டமா இருக்குது ஸார்..."

"யாருடா ஸார்..."

"ஸாரி... ஏன் மச்சான்... நீங்க இங்கேயே இருக்கப்படாதா? ஏன் பம்பாய்க்கு ஓடுறே..."

"ஒங்களுக்காக மட்டும் ஓடலடா... டூப்ளிகேட் அம்மாவுக்காக.... ஒரிஜினல் அப்பனுக்காக... என் பிழைப்புக்காக..... ஓரினச் சேர்க்கைக்காரர்களை உதாசீனப்படுத்தும் இந்த தமிழ்நாட்டுக்காக... கர்ணனை எப்படி அர்ச்சுனன் தன்னந்தனியா கொல்லலியே... அப்படி, ஒன்னாலயோ கவிதாவாலயோ மட்டும் நான் ஓடலே... அதனால என்னை தியாகியாய் ஆக்கிவிடாதே..."

செல்வா, மோகனனின் கைகளை பற்றியபடியே ஏதோ ஒரு வாசனையை உணர்ந்தான். அது வந்த மேற்கு திசையை நோக்கினான். சன் மைக்கா மேசையில் செண்பக, ஆரஞ்ச், பைன்

ஆப்பிள் வடிவங்களில் ஒரே விதமான மூன்று பொருட்கள். செல்வா, சந்தேகம் கேட்டான்.

"இது வந்து... அதாவது..."

செல்வாவின் பார்வை அந்த பொருட்கள் மீது போனபோது, மோகனன் பதிலளித்தான்.

"உன் யூகம் சரிதான். இந்த மூன்றும் வெவ்வேறு வாசனையைக் கொடுக்கிற டீலக்ஸ் நிரோத்துகள். புத்தம் புதியவை. இம்போர்ட்டட் சரக்குகள். வேணுமுன்னா தொட்டுப் பார்."

செல்வா, அந்த மூன்றில் மல்லிகை நிறமும், அந்த வாசனையையும் கொண்ட உறையை எடுத்தான். மூக்கில் வைத்தான். சுவாசம் சுவாரசியமானது. மூளைக்குள் அந்த வாசனை பதிந்தது. உடல் முழுக்க வாசனை மயம். செண்பகத்தை எடுக்கப் போனான். அதை தடுக்கப் போனான் மோகனன். கையும் கையும் உரசிக் கொள்ள, உடலும் உடலும் மோதிக் கொண்டன. மோகனன் இப்போது ஆளே மாறிவிட்டான். உருவம் மாறாமலேயே குணம் மாறியது. தங்கை மீது வைத்திருந்த பாசம், தணிந்தது. தூக்குத் தண்டனை கைதியின் கடைசி ஆசை போல் துக்கக் குரலில், தன் ஆசையை வெளிப்படுத்தினான்.

"மைடியர் பிரதர் இன் லா...! உன்கிட்ட இருந்து ஒரு கடைசி பரிசு வேணும். ஆமாம் டியர். இந்த நிரோத்தை போட்டுக்கிறேன். இதனால் உன் வாய்க்கு சேதாரம் வராது. வயிறு வாந்தியாகாது. எனக்காக கடைசி தடவையாய், உன் ஒத்துழைப்பை கேட்கிறேன். சத்தியமாய் இன்னும் ஒரு மணி நேரத்துக்கு மேலே இந்த வீட்டில் நான் இருந்தால் நீ ஒன் செருப்பாலேயே என்னை அடி. ஒன் லி ஓன் டைம்... இப்படி டெம் டேஷன் வருமுன்னுதான் உன்னை இந்த வீட்டுப் பக்கம் தலை காட்டக் கூடாதுன்கு, நான் உத்தரவு மாதிரி போட்டேன். ஆனாலும், நான் வற்புறுத்தலப்பா... நம்மோட நிரந்தர பிரிவுக்கு பரிசாத்தான் கேட்கிறேன்."

செல்வா, மோகனனையே பார்த்தான். நேற்றிரவு, அவன் தன்மீது காட்டிய பரிவு ஒரு தாட்சண்யமானது. அதோடு, அந்த வெள்ளையன் மேல் புரண்டதில், கிடைக்காத சுகம் ஒன்று கிடைத்ததும் நினைவுக்கு வந்தது.

செல்வா, அந்த செண்பக வாசனை உறையை எடுத்துக் கொண்டான். பிறகு, ரகசிய பேசுவதுபோல் பேசினான்.

"முதலில் நீ... அப்புறம் நான்... ஆனாலும் வேற மாதிரி..."

அவர்கள் இருந்த அறையின் திறந்த கதவு, ஒரு சின்ன தீண்டலில் வெட்கப்பட்டதுபோல் வாசலோடு ஒட்டிக் கொண்டது.

# 12

கவிதா, வந்ததும் வராததுமாக 'வாக்கிங்' என்ற சாக்கில், அந்த தெருவில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். அப்பாவும் அம்மாவும் தன் கண்ணெதிரில் கொஞ்சுக் குலாவிய தணிக்கையற்ற காட்சிகளை செல்வாவிடம், சொல்லிச் சொல்லி சிரிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். அம்மாவின் பக்கத்தில் தன்னையும், அப்பாவின் பக்கத்தில் அவனையும் கற்பனை செய்து கொண்டதை சொல்ல வேண்டும் என்று நினைத்தபோது, அவள் முகம் சிவந்தது. சொல்கிறோமோ இல்லையோ, உடனடியாக அவனை இப்போது பார்த்தாக வேண்டும்.

பொதுவாக, நைட்டியுடன் காலையிலும் மாலையிலும் அந்தத் தெருவில் நடைபோடுகிறவள், அவன் வந்தால் அவனுடன் சேர்ந்து, போவதற்காக பாவடை, தாவணி மாதிரி தனித்தனி நிறத்தோற்றம் காட்டிய கீழே வெளிர் மஞ்சளும், மேலே மஞ்சள் சிவப்புமான புடவையில், இரண்டு சக்கர வாகனத்தை காம்பவுண்டுக்கு வெளியே நிறுத்திவிட்டு, அங்குமிங்குமாய் சுற்றினாள். "ஏம்மா! அல்பாய்சு" என்று சொன்ன வேன் டிரைவர், அப்படி சொல்லப்பட்டவள் கவிதா என்பதை உணர்ந்ததும், "மன்னிச்சுடுங்கம்மா" என்று சொன்னான். அவன் சொன்னது காதில் ஏறாமல் நடந்து கொண்டிருந்த கவிதா, ஏதேச்சையாய் வேனுக்குள் எட்டிப் பார்த்து அதிர்ந்து போனாள். அந்த வாகனத்திற்குள் அருணும், சுபேதாவும் இருந்தார்கள். காக்கா பூக்களுக்குள் இருக்கும் வெள்ளை மொட்டுக்களாக பிள்ளைகள் பெரிய மனித தோரணையில் முதுகுச் சுமையோடு உட்காந்திருந்தன.

வேன், அங்கே நின்ற நேரத்திற்கு ஈடு கட்டுவதுபோல் பாய்ந்து பறந்தது. கவிதா அதிர்ச்சியில் தலையை பிடித்துக் கொண்டாள். ஒருவேளை செல்வாவை, அவன் சித்தி துரத்தியிருப்பாளோ? இவனே ஒருநாள் தன்னிடம் சொன்னதுபோல் எங்கேயாவது ஓடிப் போய் இருப்பானோ? அல்லது உடல் நலம் சரியில்லாமல்...

கவிதாவால், பொறுக்க முடியவில்லை. உடனடியாய் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள் சஞ்சலப்படுகிற மனம் அந்த மனத்துக்காரனை அல்லது காரியை கோழை போல் சித்தரிக்கிறது. பிறகு அந்த சஞ்சலம் உச்ச கட்டத்திற்கு போகும்போது, அதுவே ஆபத்துக்கு பாவம் இல்லை என்று ஒரு முடிவான தீர்மானத்திற்கு வந்துவிடுகிறது அதற்குப் பிறகு எண்ணிப் பார்ப்பது என்பது

பொதுவாக இல்லை. இந்த மனோதத்துவ விதிப்படியோ என்னமோ, செல்வா வாடும் அல்லது வாட்டப்படும் வீட்டிற்கு ஏதாவது ஒரு சாக்கில் போயாக வேண்டும். போவது நிச்சயம். சாக்கு என்னவென்றுதான் புரியவில்லை.

பொய் வேடம் போடும் மெய்மைக்கும், சகவாச தோசத்தில் "புரைநீர்ந்த" பொய், வாங்காமலே வந்துவிடுகிறது. அப்பா, அம்மாவை முந்திக்கொண்டு ஒருநாள் முன்னதாக வந்த அவள், இப்போது வீட்டிற்குள் ஓடினாள். பள்ளியில் வகுப்பு பரீட்சை என்று தந்தையின் அனுமதியோடு வந்தவள், அங்கு பிரிட்ஜியில் வைத்திருந்த பால் பாக்கட்டுகளை வெயிலில் போட்டாள். அது ஈரம் உலர்வது வரைக்கும் காத்திருக்க முடியாமல், தவித்தாள். கூடவே ஒரு கற்பனை. இன்று வீட்டில் யாருமில்லை. இன்றைக்கு செல்வாவை வீட்டிற்குள் அழைத்து, ஆசை தீராமலே அணைத்து, சுவை தீராமலே பேசி, தனது டூர் அனுபவங்களை சொல்ல வேண்டும். அதற்காகத்தான் முந்திக் கொண்டு வந்தவள்.

அரைமணி நேரம் கழித்து, பால் பாக்கட்டுகள் கையை குளிர்விக்காமல் சூடாக்கியதில், அவள், குளிர்ந்து போனாள். ஒரு எவர்சில்வர் தட்டை எடுத்தாள். அது கண்ணாடி பளபளப்பில் சூரிய ஒளி கற்றைகளை பிரதிபலித்து, அதன் மேலுள்ள ஆப்பிள் பழங்கள், சப்போட்டா பழங்களில் மின்னி, அதிலிருந்த தூக்குப் பையில் ஊடுருவியது.

கவிதா, காலிங் பெல் குரலோடு "ஆன்ட்டி... ஆன்ட்டி..." என்று சொந்தக் குரலையும், கொடுத்தபோது, தாளிட்ட கதவு தானாய் திறந்தது. சலிப்போடு வெளியே வந்த சித்திக்காரி லட்சுமி, அவளை பார்த்ததும், சிறிதுநேரம் அப்படியே நின்றாள். வாராத மாமணி வந்ததுபோல், வாயகல நின்றவள், பிறகு வாயெல்லாம் பல்லானாள். உணர்வுகளுக்கு வார்த்தைகளால் ஒலி வடிவம் கொடுத்தாள்.

"என் கண்ணையே நம்ப முடியவில்லையே! ஒரு நாளும் வராத திருநாளா வந்திருக்கே? உன் கால் படுறதுக்கு இந்த வீடு பாக்கியம் செய்திருக்கு. உள்ளே வாம்மா..."

கவிதா, உள்ளே வந்தாள். சித்தி, தூசியும் தும்புமாய் கிடந்த ஒரு நாற்காலியை, தனது முந்தானையை துடைப்பமாக்கி, துடைத்துவிட்டு, கையும் ஓடாமல், காலும் ஓடாமல் நின்றாள். பெரிய இடத்துப் பெண்... இவள் வீட்டுக்காரரை பார்த்தாலேயே தொடை நடுங்க வைக்கும் அந்தஸ்திலிலுள்ள ஒரு பெரிய அதிகாரியின் மகள். சித்திக்காரி, வார்த்தைகள் வராமல் உளறிக் கொட்டினாள்.

"நீ... அய்யய்யோ தப்பு... தப்பு... நீங்க வந்தது எங்க வீட்டுக்குள்ள லட்சுமியே வந்தது மாதிரி இருக்கும்மா... என்னம்மா விஷயம்..."

லட்சுமி என்றதும், சிறந்த நடிகையான லட்சுமியை மனதில் பதிவு செய்தபடியே, கவிதா சத்தம் போட்டே பேசினாள். அந்தச் சத்தம், அவனை அங்கிருந்தால் வெளியே இழுத்துக் கொண்டு வரும் அளவிற்கு பெரிதாக இருந்தது. சாடை மாடையாக வீட்டுக்கு வரும்படி, அவனுக்கு சைகை செய்துவிட்டு போய்விடலாம். சித்திக்காரி, அதிசயப்பட்டு கேட்டாள்.

"தட்டுல... என்னம்மா இதுல்லாம்?"

"ஒருத்தர் வீட்டுக்கு முதல் தடவையா போகும்போது, பழங்களோட போகணுமுன்னு அப்பா சொல்வார். இது கொடைக்கானலில் வாங்கினது... எடுத்துக்குங்க ஆன்ட்டி...."

லட்சுமி எடுத்துக்கொண்டே, கேட்டாள்.

"இந்த தூக்குப் பையில என்னம்மா?"

"ஒரு வாரமா வெளியூர் போயிருந்தோமா... எப்படியோ, கரண்டல ஒரு பேஸ் போய் பிரிட்ஜ் கரண் கணைக்ஷன் இல்லாமல் கெட்டுப் போச்சு. அதனால, இந்த தூக்குப் பையில இருக்கிற, இந்த பால் பாக்கட்டுகளை, உங்க பிரிட்ஜ்ல வைத்துட்டுப் போகலாமுன்னு வந்தேன்."

சித்திக்காரி, தனது ஏமாற்றத்தை கை சொடுக்காகவும், அவமானத்தை கண் கலங்கியும் காட்டினாள். அந்தத் தட்டை கவிதா, தன் வீட்டிற்கு தானமாய் கொண்டு வந்ததாய் நினைத்ததில் ஒரு ஏமாற்றம். அதுகூடப் பெரியதாக தெரியவில்லை. பிரிட்ஜ் இல்லாத ஏழ்மையில் ஒரு அவமானம். தட்டுத் தடுமாறி பேசினாள்.

"ஸாரிம்மா... எங்க வீட்டுல பிரிட்ஜ் வாங்கி வைக்குற நிலமையில நான் இல்ல... வாங்கக்கூடிய அளவுக்கு சம்பளம் வரத்தான் செய்யுது. ஆனால்... ஊர்ல இருந்து, தூரத்து உறவையும், பக்கத்து உறவையும் சொல்லி, இங்கே டேரா போட்டு, இந்த வீட்டையே சத்திரம் சாவடி ஆக்கிட்டாங்க. அதோட அவருக்கு சாமர்த்தியம் அவ்வளவு பத்தாது."

கவிதா, இன்னும் அதிகமாய் சத்தம் போட்டே பதிலளித்தாள். செல்வா, இருந்திருந்தால் இந்நேரம் வந்திருப்பார். அவர் எங்கே போனார் என்பதை எப்படி கேட்பது? இவள் தயக்கத்தைப் போல, சித்திக்காரிக்கும் ஒரு தயக்கம். பக்கத்திலிருந்து கொண்டே இப்படிச் சத்தம் போட்டு பேசுகிறாளே, ஒருவேளை, அவளிடம், தன்னை

யாராவது செவிடு என்று சொல்லியிருப்பார்களோ? என்ற அல்லாடல். எல்லாவற்றையும்விட, கேவலம் தன் வீட்டில், ஒரு பிரிட்ஜ் வாங்க முடியவில்லையே என்ற கொதிப்பும் தவிப்பும் கூடிய பேரவமானம். இதைப் புரிந்த கொண்டதுபோல் கவிதா, தலை குனிந்து நின்றவளின் முகத்தை நிமிர்த்தியபடியே, அவள் தோளில் கை போட்டாள். பிறகு, அவளை மாமியாராகவும், தன்னை மருமகளாகவும் பாவித்துக் கொண்டு, மாமனாருக்கு வக்காலத்து வாங்கினாள்.

"மாமாவை நினைத்து நீங்க பெருமைப்படணும் அத்தே..."

ஆன்ட்டி, அத்தையானதில், அவள் அர்த்தம் கண்டுபிடித்து விடக்கூடாதே என்று ஆரம்பத்தில் பயந்த கவிதா, அவள் முகம் மரப்பொம்மையாய் இருப்பதைப் பார்த்ததும், இவளுக்கு தத்துவ உபதேசம் செய்ய தோன்றியது.

"மாமா... ஆயிரத்துல ஒரு அரசு ஊழியர் ஆன்ட்டி... அவரோட ஆபீஸ் ஒரு பணச்சுரங்கம். அங்கிள் நினைத்தால் ஒரு நாளைக்கு ஆயிரம் ஆயிரமாய் அடிக்கலாம். பிரிட்ஜ் என்ன... வாஷிங்மெஷின், ஏ.சி., கம்யூட்டர், கார் - இப்படி "கைண்டா" வாங்கலாமாம். இவர் கண் பார்வைக்கு எத்தனையோ பேர் தவம் இருக்காங்களாம். எங்கப்பா சொல்வாரு... அதுவும் தலை குனிஞ்சுக்கிட்டே சொல்வாரு..."

"நீதான் மெச்சுக்கணும். ஆனாலும், எங்க வீட்டு மிஸ்டர் நேர்மையானவர் என்கிறதுல எனக்கும் பெருமைதாம்மா... எனக்கும் ஒரு பெண் இருக்காள்... உன்னை மாதிரியே வளரப்போறாள். இதையும் நான் நினைச்சுப் பார்க்க வேண்டியதிருக்கே. அதோட பெரிய இடத்துப் பெண்ணான உன்னை, ஒரு உருப்படியான சோபா செட்டில உட்கார வைக்க முடியலையேன்னு ஆன்ட்டிக்கு ஒரு வருத்தம்."

"எளிமையாய் இல்லாமல் நேர்மையாய் இருக்க முடியாது ஆன்ட்டி..."

சிறிது இடைவெளி மௌனம்.

இந்த இடைவெளியில் இரவு வீடு திரும்பும் கணவனிடம் கொடுக்க இருக்கும் கோரிக்கை பட்டியலில் சில அயிட்டங்களை கூட்டிக் கொண்டாள் சித்திக்காரி. கவிதா, சுற்றி வளைத்து விசயத்திற்கு வந்தாள்.

"ஒங்க வீட்டுப் பொருளை ஏதாவது பிரிட்ஜ்ல வைக்கணு முன்னா... யார் கிட்டயாவது கொடுத்தனுப்புங்க ஆன்ட்டி எங்க

பிரிட்ஜ் இன்னும் ஒரு மணிநேரத்துல ரிப்பேராகி விடும். எங்கப்பா, டூர்ல இருந்தே, எலக்ட்ரிசிட்டி போர்டு சேர்மன்கிட்ட பேசிட்டாரு..."

இருவர் சிந்தனைகளும், தத்தம் உள் உலகிற்குள் சஞ்சரித்த போது, அதை கலைப்பதுபோல் மேற்கு அறைக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. அதிலிருந்து எட்டிப்பார்த்த செல்வாவைப் பார்த்து, சித்தி முகம் சுழித்தாள். கவிதா, சித்திக்காரிக்கு தெரியாமல், அவளுக்கு பின்னால் நகர்ந்து கொண்டு, தலைக்கு மேலே கையை வைத்து, அவனுக்கு சமிக்ஞை செய்தாள். செல்வா, கவிதாவை பார்த்ததுதான் தாமதம். ஏற்கெனவே நொந்து போயிருந்த கதவை படாரென்று சாத்திக்கொண்டான். சித்திக்காரி, கவிதாவிடம் ஒருபாடு அழுதாள்.

"என் வீட்லேயே இருந்துக்கிட்டு, எப்படி என்னை மூஞ்சில அறையறது மாதிரி சாத்துறான் பாரு... பால் கொடுக்கிற மாட்ட, பல்ல பிடித்து பார்க்கிறான். நீ, பெரிய இடத்துப் பெண்ணு... ஆனாலும், எப்படி ஒரு ஆம்பள வரான்னு என் பின்பக்கமா மறஞ்சிக்கிடறே... இதுக்குப் பேர்தாம்மா வளர்ப்பு முறை...."

அந்தக் கதவுச் சத்தம், கவிதாவையும் பேயாய் அறைந்தது. ஆனாலும், ஒரு ஆறுதல். அவன் லுங்கியில் இருப்பதை பார்த்துவிட்டு, தனது சமிக்ஞையினால் அவன் பேண்ட், சர்ட்டை போட்டுக் கொண்டு சிறிது காலம் தாழ்த்தி வருவான் என்று அனுமானித்தாள். 'அவர் சட்டை தொலளதொளப்பாய் இருக்கிற பார்த்தால், என்னை பார்க்காம இளைச்சிட்டார் போலிருக்கே.... சாதாரண இளைப்பல்ல... பாதி இளைப்பு... முக மெலிவில் பற்கள்தான் பெரிதாய் தோன்றின. அவள் கிள்ளி விளையாடிய கன்னங்கள், கிண்ணக் குழிகளாய் தோன்றின. அந்தச் சமயத்தில், அவன் கௌரவத்தில், தன் வீட்டு கௌரவமும் இருப்பதை புரிந்துகொண்ட சித்தி, சிறிது விட்டுக் கொடுத்துப் பேசினாள்.

"ஒரு வாரமாத்தான் இப்படி எதையோ பறி கொடுத்தது மாதிரி இருக்கான். மற்றபடி, நல்ல பையன்தான். இவருக்கு கூடப்பிறந்த அண்ணன் மகன். நான் இவனை என் சொந்த மகன் மாதிரிதான் நினைக்கேன். ஆனால், அவன்தான் இந்த ஒரு வாரமா..."

கவிதா, நகைத்தை கடித்தபடியே மெல்லச் சிரித்தாள். அவர் தன்னால்தான் அப்படி இளைத்துப் போயிருக்கிறார். சொல்லாமல் கொள்ளாமல் போனது தப்புத்தான். ஆனால், கதவு மூடித்தானே கிடந்தது. என் மீது இருக்கும் உரிமையான கோபத்தை, இப்படி கதவைச் சாத்தி காட்டுகிறாரா... அல்லது தனக்கும் அவருக்கும்

இருக்கும் உறவு சித்திக்கு தெரியக்கூடாது என்பதற்காக, அப்படி கதவை அறைந்தாரா..? எப்படியோ, இப்போ பேண்ட், சட்டை போட்டுக் கொண்டிருப்பார். சீக்கிரமாய் தெருவிற்கு வருவார். என்னைப் பார்ப்பதற்காகவே அங்குமிங்குமாய் நடப்பார். ஆசாமியை அலைய விடக்கூடாது. வாசலிலேயே வரவேற்று, வீட்டுக்குள் கடத்த வேண்டும்.

"நான் புறப்படுறேன் ஆன்ட்டி."

"அதுக்குள்ள என்னம்மா அவசரம்? ஒரு ஜூஸ் கொண்டு வாரேன்."

கவிதாவின், பதில் சத்தம் வலுத்தது.

"நான் வீட்ல தனியாத்தான் இருக்கேன் ஆன்ட்டி... ஒரு பிரண்ட் வருவாங்க... நல்லாநேரம் போகும். சீக்கிரமா வாங்க..."

"இப்பவே வேணுமுன்னாலும் வாரேம்மா. ஒன் வீட்ட வெளியிலதான் பார்த்திருக்கேன்."

கவிதாவின், புயல் சத்தம் பூச்சத்தமானது.

"ஸாரி ஆன்ட்டி. சீக்கிரமா 'போகணும்' என்கிறத, 'வாங்கன்னு' என்று சொல்லிட்டேன். வீட்ல சாமான்கள் தாறுமாறா கிடக்குது. நாளைக்கு நானே வந்து உங்கள கூட்டிட்டுப் போறேன். நான் வாரேன் ஆன்ட்டி...."

கவிதா, அந்த வீட்டு உள்ளோட்டத்தை திரும்பித் திரும்பி பார்த்தபடியே, வெளியே வந்தாள். சொந்த வீட்டின் இரும்புக் கிராதிகளில் சாய்ந்தபடியே நின்றாள். கண்கள் மட்டும் அங்குமிங்குமாய் சுழன்றன. அவன் டிரெஸ் செய்வதற்கு பதினைந்து நிமிடம் நேரம் கொடுத்து நின்றாள். சித்தியிடம், வாங்கிக் கட்டிக் கொள்வதற்கு இன்னொரு பத்து நிமிடம். ஒருவேளை அவன் தன்னோடு அதிக நேரம் தங்கவேண்டும் என்பதற்காக, அவன் சாப்பிடுவதற்கும் நேரம் ஒதுக்கினாள். பிறகு நகத்தை கடித்தாள் இனிமேல் ஒருவேளை குளிக்கப் போகிறாரோ என்று நேர ஒதுக்கீடு செய்தாள். சித்தி, இன்னும் சமையலை முடித்திருக்க மாட்டாள் என்பதற்காக சிறப்பு நேர ஒதுக்கீடு வழங்கினாள் ஆகக்கூடி இரண்டு மணிநேரம் வரை கத்திருந்தாள். வீட்டுக்குள்ளும் போக முடியாமல், வெயில் நேரத்தில் குறுக்கும் நெடுக்குமாகவும் நடக்க முடியாமல், ால் வலியை சரிசெய்ய, அதை சிறிது முன்னால் நீட்டியபடியே கம்பிக் கிராதிகளில் சாய்ந்தாள். பிறகு, குறுக்கும் நெடுக்குமாய் கோணல் மாணலாய் நடந்தாள்.

அரைமணி நேரத்திற்குள், அவள் முகத்தில் ஒரு புன்னகை. அவன் ஆடை அலங்காரத்தோடு எதிரே வந்து கொண்டிருந்தான். கவிதா, அக்கம் பக்கம் பார்க்காமலே ஓடினாள். அவனை நோக்கி பறப்பதுபோல் கைகளை ரெக்கையாக்கிக் கொண்டாள். ஒரே நிமிடம். அவள் முகம், அமாவாசையாகியது. கூனிக்குறுகிப் போனாள். தலை தானாக கவிழ்ந்தது. செல்வா, அவளைப் பார்த்து திடுக்கிட்டு, ஒற்றைக் காலில் நின்றான். மோகனனின் பாணியில் அதே ஒற்றைக் காலை திருப்பி, வீட்டின் வெளி வாசல் கதவை மோதி, தன் வீட்டிற்குள் மறைந்து விட்டான்.

கவிதாவுக்கும், சுயமரியாதை கோபமானது. அந்த சுயத்தில், அவளுக்கு, அவள் கொண்ட காதலை தொடரவேண்டும் என்பதைவிட, அவனது பாரா முகத்திற்கு காரணம் கண்டு பிடிக்கவேண்டும் என்ற வேகம் ஏற்பட்டது. சொந்த அம்மாவே தன்னை எப்போது தொலைத்தாளோ, அப்போதே, எல்லோருடைய புறக்கணிப்பிற்கும் ஆயத்தமாக வேண்டுமென்று அடிக்கடி தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறவள். அவன் செய்த காரியத்தைவிட, அதற்கான காரணமே முக்கியமாய் பட்டது. ஏதோ வெறி உந்த, அவன் போன வீட்டிற்குள்ளேயே போனாள். சித்தி எதிர்பட்டால் அதற்குரிய காரணத்தை சொல்வதற்கும் ரெடியாகி விட்டாள். செல்வா, ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஒரு நாட்டியத்தை தொலைக்காட்சியில் பரவசமாய் பார்த்துக் கொண்டிருந்தான் அந்த பரவசத்திற்குரியவன், அந்த தொலைக் காட்சி நிகழ்ச்சியில், ஏற்கெனவே நாட்டியப் பதிவு செய்த அவள் அண்ணன் மோகனன். பம்பாய்க்கு திரும்பாப் பயணமாக போவதாய் அவள் பெயருக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு போய்விட்டான். உன் உறவு தொடரட்டும்' என்றும் அந்த கடித்த்தில் குறிப்பிட்டிருந்தான். அண்ணனாகிய தன்னை அவள் புறக்கணித்து விடக்கூடாதே என்று அர்த்தத்தில், அப்படி அவன் எழுதியதாக, இவள் அர்த்தப்படுத்திக் கொண்டாள்.

கவிதா, இருமினாள்; செருமினாள் பின்னர், அந்த வீடு முழுவதையும் திருட்டுத் தனமாக பார்த்தபடியே, அவன் முடியை பிடித்து இழுத்தாள். செல்வாவின் முகம் மேல்நோக்கித் திரும்பியது. அவளைப் பார்த்ததும், அதே முகம், கால் கைகளை இழுத்துப் பிடித்து தரையில் நேராக நிறுத்தியது. வலது கை ரிமோட் கட்டுப்பாட்டு கருவியின் சிவப்பு பித்தானை அழுத்தியது கலர் கலரான அந்த வண்ணப் பெட்டி வெறுமையானது.

செல்வா, அவளை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு, அந்த அறையின் குறுக்கு வெட்டை நீளவாக்கில் நடந்து அறைக்கதவை

உடையும்படி சாத்திக் கொண்டான். இதற்குள், சமையலறைக்குள் தொலைக்காட்சியின் ஆட்டத்தை பார்க்க முடியவில்லையென்றாலும், பாடலை ரசித்துக் கொண்டிருந்த சித்திக்காரி, அது நின்று போனதும், காரணம் கண்டறிய வெளியே வந்தாள் கவிதாவை, மீண்டும் பார்த்த மலைப்பில் நின்றாள் கவிதா, தனது வருகையின் நோக்கத்தை திசை திருப்பிச் சொன்னாள்

"எனக்கு போர் அடிக்குது ஆன்ட்டி எதிர்பார்த்த பிரண்ட் வர்ல. வரணுமுன்னு அவசியமும் இல்ல... நீங்க வாங்க ஆன்ட்டி..."

"செத்தே இரும்மா. இந்த பேயனுக்கு பொங்கிப் போட்டுட்டு வாறேன். தான் பார்க்காத டிவி. யை, பார்க்க முடியாட்டாலும், காதால கேட்கப்படாது என்கிற ஆங்காரத்துல ஆப் செய்துட்டு உள்ளே·போயிட்டான் பாரு.. இவனெல்லாம் உருப்படுவானா?. நீயே சொல்லும்மா...."

கவிதா, விரக்தியின் விளிம்பில் நின்றாள் ஆகையால், விம்மலோ, தும்மலோ எதுவும் ஏற்படவில்லை. 'நீங்க ஆற அமர என் வீட்டுக்கு வாங்க ஆன்ட்டி நான், உங்களுக்காக காத்திருக்கேன்' என்றாள் பிறகு, அந்த வீட்டையும், வீட்டிற்குள் அவன் இருக்கும் அந்த அறையையும் திரும்பிப் பார்க்காமலே ஒரே போக்காய் வெளியேறினாள்.

## *13*

செல்வா, குமைந்து கொண்டிருந்தான் இதயம் நெருப்பு பற்றியதுபோல் புகைந்து கொண்டிருந்தது. போர்வையால், உச்சி முதல் பாதம் வரை, அந்த வெயில் நேரத்திலும் இழுத்து மூடினான். இரு கரங்களையும் இடுப்போடு ஒடுக்கி, முடி களைந்தும், மூளை குழம்பியும் குப்புறப் படுத்துக் கிடந்தான் இந்நேரம், அவன், குழந்தைகளின் ஹோம் வொர்க்கிற்கு உதவி செய்திருக்க வேண்டும் ஆனாலும், அவன் உடல், அவர்களுக்கு உதவி செய்தது அவனுக்கு இரு பக்கமும் இருந்த குழந்தைகள், அவன் முதுகிலும், பிட்டத்திலும் நோட்டுப் புத்தகங்களை வைத்து, பென்சிலால் எழுதுவதும், ரப்பரால் அழிப்பதுமாய் இருந்தன அருண், சுபேதாவிற்கு திடீர் ஆசிரியரானான். அவள் தலையில் அடிக்கடி குட்டினான். இவளும் ஆசிரியை குட்டை விட, அது லேசாக இருந்ததால், அண்ணன் குட்டை பொறுத்துக் கொண்டாள்

செல்வாவிற்கும் ஒரு சுக உணர்வு. பசு மாட்டின் மேலிருந்தபடி, அதன் உண்ணிகளை கொத்தித் தின்னும் காகங்கள், அந்த மாட்டிற்கு கொடுப்பது போன்ற சுகம். ஆனாலும், மரக்கட்டையாய் கிடந்தான். உடல் இயங்கவில்லையானாலும், மனமும் மூளையும் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டன இருபக்கமும் அடிபட்டு, மனச்சாட்சி மௌனச் சாட்சியானது.

நேற்று, கவிதாவிடம் அவன் நடந்து கொண்ட முறை காட்டுமிராண்டித்தனம் என்பது அவனுக்கே தெரியும். ஆனால், அவனது, காட்டுமிராண்டியான, செல்லத்தனமான மோகனனை, அவனால் மறக்க முடியவில்லை. அண்ணன், தங்கை மாறி மாறி வந்தார்கள். முதல் தடவை வாந்தி எடுத்தவனுக்கு, அந்த வாசனை மிக்க டீலக்ஸ் உறை இப்போதும், கிளுகிளுப்பூட்டும் வாசனையாக வந்தது. உடலெங்கும், உடலை லேசாக்குகிறது. அதோடு, தான் பயன்படுத்திய அந்த செண்பக வாசனை டீலக்ஸையும் நினைத்துக் கொண்டான் தன்னைவிட உருவத்திலும், வயதிலும் பெரிய மோகனனை, பாசிவ் பார்ட்னராக - சும்மா கிடக்கும் பங்காளியாக ஆக்கிக் காட்டியதில் அவனுக்கு வெற்றிப் பெருமிதம்கூட ஏற்பட்டது. தாழ்வு மனப்பான்மை, உயர்வு மனப்பான்மையாகியது. அவனுக்கு கிடைத்த ஆண்சுகம், பெண்சுகம் போலவே தோன்றியது. தன்னுள் துடித்த ஏதோ ஒன்றிற்கு வடிகால் கிடைத்த ஒரு ஆனந்த அனுபவம். அதேசமயம், மோகனனை, இனிமேல் பார்க்க முடியாதே என்ற ஒரு பரிதவிப்பு. அவனை அப்போதே பார்க்கத் துடித்தான். அவன் கூட்டிச் சென்ற கிளப்பிற்கு போய், அவனது பம்பாய் முகவரியை வாங்கிக் கொண்டு தானும் பம்பாய்க்கு போய்விடலாமா என்ற சிந்தனை

ஆனாலும், அந்த கற்பனையான பயணத்தை, கவிதா மானசீகமாக வழி மறித்தாள். டூப்ளிகேட் அம்மாவுடன் வாழவேண்டிய கட்டாயத்தில் உள்ள பாவப்பட்ட பெண்தான். ஆனாலும், பழிகாரி. அந்த அம்மா விசயத்தை, முன்பே அவனிடம் சொல்லி இருக்கலாம். எனினும், சுயமரியாதை விட்டுக் கொடுத்து, வீடு தேடி வந்தாள். அவள் விளக்கமளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம். ஆனால், நட்பாகத்தான் கொடுக்க முடியும். காதலாக கொடுக்க முடியாது. செல்வாவின் மனதிலிருந்து, அந்த மோகனன், அவளைத் துரத்திவிட்டு, தான் மட்டுமே தன்னந் தனியாய், தக்காரும் மிக்காரும் இல்லாமல் காலூன்றிவிட்டான் அவன் நாட்டியத்திற்கு முன், இவள் நடை நொண்டியடிக்கிறது. அவன், கிறங்க வைக்கும் பார்வையில், இவள் பார்வை மங்கிப் போகிறது. அவன் மரகதப் பச்சை டையில், இவள் கழுத்துச் சங்கிலி, அந்த கழுத்தை சுற்றிய நாகம்போல் தோன்றுகிறது. அவன்

தீண்டியதும், அவனைத் தீண்டியதும் ஒரு பெருஞ்சுகம். அவற்றின் முன்னால், இவள் கொடுத்தவை சின்னஞ்சிறு சுகங்கள்.

அந்த மோகனனின் பாட்டுக்கு முன், இவள் கெஞ்சலும்-கொஞ்சலும், சிணுங்கலும்-குலுக்கலும் அற்பமாகின்றன. ஆனாலும், அவளையும் உதற முடியவில்லை. இவனுக்கு சுமை தாங்கியாக இருந்தவள். இவன் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் கொடுத்தவள். சிறுமையில் சுருங்கிப் போன இவனை, பெருமைப்படுத்திய அவளை, இவன் சிறுமைப் படுத்திவிட்டான். ஆனாலும், அவள்தான் அதற்குக் காரணம் நேற்று வந்ததுபோல், டூருக்கு போவதற்கு முன்பு, ஏதாவது ஒரு சாக்கில், தான் போகப்போவதை சொல்லியிருக்க முடியும். ஒருவேளை, அண்ணனுக்கு இவளே தன்னை கூட்டிக் கொடுத்தாளோ என்னமோ? இப்போதைய நிலமைக்கு இவளே காரணம்; இவளே வில்லி.

செல்வா, மல்லாந்து புரண்டான். இதனால், குழந்தைகளின் நோட்டு புத்தகங்கள், அவன் முதுகிற்குள் சிக்கின. சுபேதா, அவன் முதுகோர இடுக்குகளிலிருந்து, நோட்டை மீட்பதற்கு போராடியது போது, செல்வாவின் மனம் கிராமத்திற்கு போனது ஏரிக்கரையில் ஏழெட்டு நண்பர்களோடு சிரிப்பும் கும்மாளமுமாய் நடந்து, அந்த ஏரியால் பெருக்கெடுத்த கிணறுகளில், அந்தர் பல்டி அடித்தது, குற்றாலத்திற்கு போன குளியல் நினைவுகள், மாலையில் நண்பர்களோடு சேர்ந்து விளையாடிய வாலிபால் விளையாட்டு, பம்பு செட் நீரில் அருவியாய், ஏகாந்தமாய் குளித்தது, வெட்டை வெளி பசும்புல் தரையில் ஏகாந்தமாய் படித்தது; படுத்தது, வகுப்புக்களில் முதலாவதாக வந்தது. இங்கேகூட கல்லூரியில் ஆங்கிலம் தவிர்த்த மற்ற பாடங்களில், ஏதோ ஒரு வகையில் ரேங்கில் வந்தது. இப்போது நான்கைந்து நாட்களாக கல்லூரிக்குப் போவதுபோல் போக்குக்காட்டி, அடையாறு, குழந்தைகள் பூங்காவிற்குப் போய், தன்னந்தனியாய், தனி மரமாய், மரங்களோடு மரமாய் நின்றது; படுத்தது; புரண்டது; எழுந்தது; அலைந்தது; கிராமத்தில் முறைப்பெண் ஒருத்தி அவனை வம்புக்கு இழுத்தது; இவன் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிப்போனது; ஊரில் கிடைத்த நல்ல பையன் பட்டம்.

இப்போது அந்த அறைக்குள், பழையதையும் புதியதையும் ஒப்பிட்டு ஒப்பிட்டு இறுதியில் செல்வா மனதளவில் செத்துப் போய்க் கிடந்தான். ஒரு வாலிபனுக்குரிய ஆண்மை, நூலறுந்த காற்றாடியாய் சுற்றுகிறது. இப்போது காதலனும், காதலியும் இவனே. இவன் காதலனாகும்போது, மோகனன் காதலி ஆகிறான்.

இவன் காதலியாகும்போது, மோகனன் காதலனாகிறான். 'போயிற்று... எல்லாம் போயிற்று. தந்தையின் குனிந்த தலையை நிமிர்த்துவதற்குப் பதிலாய், தன் பங்கிற்கும் இவன் தாழ்த்தியாயிற்று. சித்தப்பாவிற்கு நம்பிக்கைத் துரோகம் செய்தாகிவிட்டது. இப்போது, வெறும் சதைப் பிண்டம். உயிர் இருப்பதால் மட்டுமே உலாவும் நடைப்பிணம். 'சண்டாளி; சதிகாரி நீ மட்டும் என்னை வம்புக்கு இழுத்து காதலிக்காமல் இருந்திருந்தால், இந்நேரம் நான் முழுமையான மாணவனாய், பாசமிக்க சித்தப்பாவிற்கு, நன்றி மறக்காத அண்ணன் பிள்ளையாய், குழந்தைகளுக்கு தோழனாய், ஒரு முழுமையான மனிதனாய் தலை நிமிர்ந்து நடந்திருப்பேன். என்னை கெடுத்துட்டியேடி! அர்த்த நாரீஸ்வரனாய் என்னை ஆக்கிட்டியேடியடி! நீ வஞ்சகி... உன்னிடம், நானே நினைத்துப் பார்க்க கூசும் என் சம்பந்தப்பட்ட விவகாரங்களை சொல்லி இருக்கிறேன். ஆனால் நீயோ, உனக்கு ஒரு டூப்ளிகேட் அம்மா இருப்பதைப் பற்றியோ, உன் அண்ணன், ஓரினச் சேர்க்கைக்காரன் என்றோ சொல்லல... சொல்லியிருந்தால் பிழைத்திருப்பேன். இப்போ சாகாமல் செத்துட்டேனடி...'

செல்வா, வெந்து தணியாமல் வெந்து கொண்டே கிடந்தான். இதற்குள் அருண், இவன் மார்பில் நோட்டுப் புத்தகத்தை நகர்த்தி, கண்ணுக்கு கீழே கொண்டுவந்து, 'அண்ணா! வாட் ஈஸ் திஸ் சர்க்கிள்' என்றான். சுபேதாவோ, 'அண்ணா நான் வேன்ல போகமாட்டேன். அண்ணனோட ஸ்கூட்டர்லதான்... போவேன்' என்று தான் என்பதற்கும், போவேன் என்பதற்கும் அழுத்தம் கொடுத்தாள். செல்வாவால் எரிச்சலை அடக்க முடியவில்லை. சுபேதாவின் காதை வலது கையால் திருகிக் கொண்டே, அருணின் கன்னத்தை இடது கையால் பிதுக்கிக் கொண்டு கத்தினான். "சனியங்களா... ஒங்கம்மா கிட்டப் போய் பாடம் கேளுங்க..." என்று சொன்னபடியே, அருணின் நோட்டுப் புத்தகத்தை கீழே வீசியடித்தான். அந்த வீச்சில், அந்த நோட்டு, தாள் கிழிந்து, அட்டை விலகி, அலங்கோலமாய் கிடந்தது

செல்வா, தனது முட்டாள்தனத்தை உணர்ந்ததுபோல், இரண்டு குழந்தைகளையும் விடுவித்துவிட்டு, அந்த நோட்டுப் புத்தகத்தை எடுப்பதற்காக எழுந்தபோது -

வாசலில், சித்தப்பா!

மனைவி, ஏற்னெவே குழந்தைகளிடம் இவன் நடந்து கொள்ளும் விதம் குறித்து சொல்லியிருக்கிறாள். அதனால்தான், குழந்தைகளை, வேனில் அனுப்ப சம்மதித்தார். இப்போது, அருணும், சுபேதாவும், கேவியபடியே அப்பாவின் கைகளை

பிடித்துக்கொண்டு நின்றனர். "இனிமேல் அண்ணாகிட்ட இருக்க மாட்டேம் டாடி..." என்றான் அருண். சுபேதா, அவன் பேச்சுக்கு வக்காலத்து வாங்குவதுபோல், அப்பாவின் கையை விட்டுவிட்டு, அருணின் கையை பிடித்தாள்.

அண்ணன் மகனை, புனல் ததும்பப் பார்க்கும் சித்தப்பா, இப்போது கனல் கக்கப் பார்த்தார் குழந்தைகளை, அவன் அடிப்பதாக, தன்னிடம் குற்றஞ்சாட்டிய மனைவியிடம் 'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்று அவனுக்கு வக்காலத்து வாங்கியவர், இப்போது அதிர்ந்து போய் நின்றார் அப்போதே நேர்கோட்டுச் சிந்தனையில் இருந்து விலகி, பக்கவாட்டில் சிந்தித்தார். "உங்க அண்ணன் மகனை, நம்ப அம்மா லேசா கஷ்டப்படுத்துறாங்க அய்யா.. நான் சொன்னேன்னு சொல்லாம, சாடை மாடையா சொல்லுங்கையா" என்று சொன்ன அதே வேலைக்காரம்மா, நேற்று, "இந்த பிள்ளாண்டான் போக்கும் சரியில்லை அய்யா." என்றாள். அவனுடைய பிரச்சினையை கண்டறிய, அலுவலகம் போகிற வழியில், செல்வா படிக்கும் கல்லூரியிலும் விசாரித்தார். கல்லூரிக்கு அவன் நான்கைந்து நாட்களாக போகவில்லை என்கிற அதிர்ச்சி செய்தி கிடைத்தது. செல்வாவை அழுத்தம் திருத்தமாய் பார்த்தார். அவன் தலை தாழ்த்திவிட்டு, மீண்டும் நிமிர்ந்தபோது -

"உன்னோட பிரச்சினை என்னடா?"

"ஒண்ணுமில்ல சித்தப்பா. நல்லாத்தான் இருக்கேன்"

"அதை நான் சொல்லணும். காலேஜ் போறீயா?"

"போறன் சித்தப்பா. சித்தி புளுகிறாங்க."

"பொய் பேசவும், பழி போடவும் கத்துக்கிட்டே!. இன்னும் என்னல்லாம் கத்துக்கிட்டியோ. சொல்லுங்க ஸார். நானே காலேஜ்ல போய் விசாரித்து வந்தேன் ஸார்."

செல்வா, தலை கவிழ்ந்தபடியே, தனக்குள்ளேயே முணுமுணுத்தான். பிறகு, அவரது காலில் விழுந்து கதறப் போனான். இதற்குள் சித்தப்பா முந்திக் கொண்டார்

"இந்தா பாருடா! பளுவிலேயே பெரிய பளு, நன்றிப் பளு. உங்கப்பா. அதான் எங்கண்ணன், காய் கறிகளையும், என்னையும் வண்டியில ஏற்றிக்கிட்டு, புளியரை சந்தைக்கு வண்டி அடிப்பார். ஒரு சந்தர்ப்பத்துல, ஒரு மாடு, தவழ ஆரம்பிச்சுட்டுது. உடனே, அந்த மாட்டை அவிழ்த்து வண்டியில பின் பக்கமா கட்டிட்டு, இறங்கப் போன என்னையும் இறங்கவிடாமல் தடுத்துட்டு, அந்த மாட்டுக்குப் பதிலாய் ஒரு மாடாய் வண்டி இழுத்தார். எத்தனையோ கஷ்டத்திலயும் என்னை படிக்க வைத்தார் நானும் வட்டியும்

முதலுமாய் நன்றிக் கடன் செலுத்திட்டேன். வாங்குன வரதட்சணை பணத்தை அப்படியே அண்ணன் கிட்ட ஒப்படைத்தேன். உன் பெரிய அக்காவுக்கு, நானே நகை போட்டு மதுரையில் கல்யாணம் செய்து வச்சன். சின்னக்காவுக்கும் கொஞ்சம் உதவுனேன். இதையெல்லாம் எதுக்குச் சொல்றேன்னா, கணக்கு சரியாயிட்டு. நீ, 'எங்கப்பா சித்தப்பாவ படிக்க வச்சாரு. அதனால சித்தப்பா, 'நம்மள படிக்க வைக்க வேண்டியது அவரோட கடமை.' அப்படின்னு, நீ நினைக்கக்கூடாதுன்னு சொல்றேன். இந்த வீட்ல இருந்து படிக்கக்கூடாதுன்னு சொல்லல. உன்னை தர்மத்துக்காக படிக்க வைக்கேன். இதை நீ புரிஞ்சுக்கணும்."

இடையிலே, ஒரு இடைச்செறுகலாக சித்தியின் குரல்.

"எம்மாடியோ... எனக்குத் தெரியாம, இவ்வளவும் நடந்திருக்கா...? உங்க அண்ணன், உங்கள நல்லாத்தான் மயக்கி ஓட்டாண்டி ஆக்கிவிட்டிருக்கார். 'பெரிய குடும்பமாயிருக்கு. யோசித்து செய்யுங்கன்னு', எங்கம்மா, எங்கப்பாகிட்ட சொன்னது சரியாப்போச்சு."

சித்தப்பா சிவனுப்பாண்டி, அண்ணன் மகனிடம் தொடர்ந்து பேசுவதா... அல்லது மனைவியை அடக்குவதா, என்று புரியாமல் தவித்தபோது, சித்திக்காரி தொடர்ந்தாள்.

"உங்க அண்ணனுக்காவது புத்தி வேணும். 'உன்ன நம்பி வந்திருக்கிற பெரிய இடத்து பெண்டாட்டிய பூ மாதிரி நடத்துணுண்டான்னு' புத்தி கெட்ட உங்களுக்கு புத்தி சொல்லியிருக்கணும். அந்த மனுஷன் பெரிய மனுஷனாம், பெரிய மனுஷன். ஒரே அடியா மொட்டை அடிச்சுட்டார்."

சிவனுப்பாண்டி, முதல் தடவையாக மனைவியை நோக்கி, கையை ஓங்கினார். பிள்ளைகள் மட்டும் அந்த கையை எம்பிக் குதித்து பிடிக்கவில்லை என்றால், இந்நேரம் அவள், இந்த சாதுவின் கோபத்தை தாங்க முடியாத, காடாய் சரிந்திருப்பாள். அதற்குள், செல்வா துள்ளி எழுந்தான். மிரட்டல் பார்வையோடு சித்தி அருகே சென்றான்.

"சித்தி... எங்கப்பா பற்றி இதுக்குமேல ஏதாவது சொன்னீங்க... நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது."

"ஓஹோ... அந்த அளவுக்கு வந்துட்டியா... ஒரு நாளும், கை நீட்டி அறியாத மனுஷன, கையை ஓங்க வச்சுட்டே... இப்போ நீ வேற, அடிப்பேன் என்கிற அர்த்தத்துல சொல்றியா... வேணுமுன்னா அடிச்சுட்டுப் போப்பா..."

சித்தப்பா, மனைவியை கையமர்த்திவிட்டு, செல்வாவை பார்த்து நடந்தார். இடையே குறுக்கிட்ட பிள்ளைகளின் முதுகுகளில் இரண்டு சாத்து சாத்திவிட்டு, அவர்களை மனைவியின் பக்கமாய் தள்ளிவிட்டார். ஆவேசமாய் பேசினார்.

“இந்த அளவுக்கு பேச வந்துட்டியாடா.. ‘அண்ணன் பிள்ளைய வளர்க்கிறதைவிட, தென்னம் பிள்ளைய வளர்க்கலாம்’ என்கிறது சரியாப் போச்சு. ஆனாலும், உன் படிப்ப கெடுத்துட்டேன் என்கிற பழி பாவத்திற்கு நான் ஆளாக விரும்பல. இன்னும் ரெண்டு மாசம்தான் இருக்குது. எப்படியாவது காலேஜுக்குப் போ. அடுத்த வருஷம் நம்ம ஊர்ப்பக்கம் இருக்கிற டவுனுல உன்னை சேர்த்துடுறேன். நடந்தது நடந்ததாய் இருக்கட்டும். எம்மா... உன்னத்தாம்மா லட்சுமி... உன்னை கையெடுத்து கும்பிடுறன்.. ரெண்டே ரெண்டு மாசம் பொறுத்துக்கம்மா... ஒனக்கும் எனக்கும் ஊருக்குப் போகும் போதெல்லாம், தென்னை மரத்துல ஏறி, இளநீர் பறித்து கொடுத்த பிள்ளம்மா... அப்படிப்பட்ட இவன் இப்ப எப்படி இந்த நிலைமைக்கு ஆளானான்னு புரியல. டேய் செல்வா! நாளையிலிருந்து காலேஜ் போகணும்.”

“போமாட்டேன்.”

“ஏன் போகமாட்டே?”

“போகப் பிடிக்கல.”

“சித்தப்பா சொல்றத கேளுடா. எதை இடையில விட்டாலும் படிப்பை விடக்கூடாதுடா...”

“நீங்க என்ன சொன்னாலும் கேக்கறேன்... ஆனால் காலேஜுக்கு மட்டும் போகமாட்டேன்.”

“அப்போ... நீ இந்த வீட்ல இருக்கிறதுல என்னடா அர்த்தம்?”

செல்வா, அந்த அறைவாசல் இடைவெளியில், சித்தப்பாவையும், சித்தியையும் தன்னை அறியாமலே மோதித் தள்ளியபடி, கட்டிய லுங்கியோடு, போட்டிருந்த சட்டையோடு வாசல்வரை நடந்தான். வாசல் வரை நடந்தவன், வீதிக்கு வந்ததும், ஓட்டமும் நடையுமாகப் போனான். பின்னர் ஒரேயடியாய் ஓடுவதுபோல் ஓடினான்.

# 14

செல்வா, தலைவிரி கோலமாக நடந்து நடந்து, சொந்த ஊருக்கே நடக்கப் போவதாக அனுமானித்தான். அந்த நடைவேகத்தில், அடையாரின் விளிம்பில் உள்ள புற்றுநோய் மருத்துவமனை இருக்கும் பிரதானச் சாலைக்கு வந்தபோது, இளைத்துவிட்டது. அயோத்தி நகரை தாண்டிய உடனே, காடு எங்கே இருக்கிறது என்று சீதை கேட்டாளாமே - அப்படிப்பட்ட இளைப்பு ஊருக்கு நடந்து போகமுடியாது என்பது புரிந்து விட்டது. தனக்குத்தானே ஒரு சமாதானமும் செய்து கொண்டான். ஊருக்குப் போய் சித்தப்பாவிற்கு கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கக்கூடாது. எதிரற்று போன எதிர்காலத்தைப் பற்றி, எங்கேயாவது உட்கார்ந்து யோசிக்கவேண்டும்.

இந்தியாவின் விஞ்ஞான மூளையான ஐ.ஐ.டி. க்கு அருகே உள்ள கிளைச்சாலையில் நடந்தான். வழக்கம்போல், குழந்தைகள் பூங்காவிற்குள் இந்தத் தடவை டிக்கெட் வாங்காமலே கண்மூடித்தனமாக நுழையப் போனான். வாட்ச் அண்டு வார்டு மேன் டிக்கெட் என்றான். வழக்கம்போல், ஒவ்வொரு தடவையும் தன்னை இப்படி கேட்க வைக்கும் அவன் மீது வார்டு எரிச்சலானான். அதேசமயம், அந்த குழந்தை முகத்தைப் பார்த்ததும், எரிச்சல் அனுதாபமானது. அதோடு, தான் கடமையில் கண்ணுமாய் இருப்பதை "கவுண்டனுக்கு" நிரூபித்துக்காட்ட பல வாய்ப்புக்களை வழங்கும் செல்வாவை, நன்றியுடன் நினைத்துக் கொண்டான்.

செல்வா, கவுண்டரில் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு, அதை வாட்ச்மேனிடம் கிழிக்கக் கொடுத்துவிட்டு, கிழிப்பில் பாதியை வாங்காமலே உள்ளே போனான். ஓங்கி வளர்ந்த அத்தி, ஆல, அரச மரங்களின் அடிவாரங்களில் ஒவ்வொன்றிலும் கைகளை மட்டும் பிடித்துக் கொண்டிருந்த பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகள், லுங்கியோடு திரிந்த இவனைப் பார்த்து சிறிது அச்சப்பட்டார்கள். அதேசமயம் தங்களைப் போலவே கல்லூரிக் கோடு தாண்டிய, கல்லூரி "மேட்டுகள்" அருகில் இருப்பதால், அச்சம் தவிர்த்தார்கள்.

செல்வா, அங்குல அங்குலமாக நகர்ந்து, அடி அடியாய் ஊர்ந்து, மீட்டர் மீட்டராய் தாவி, ஒரு ஆலமரத்தின் அருகே உள்ள கரையான் புற்றில் சாய்ந்து கால்களை நீட்டிக் கொண்டான். புற்றுமண் உரசலில் அவன் படிப்பும், பந்த பாசமும் 'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபோன' பழமொழியை நினைவுக்குக்

கொண்டு வந்தது. அந்த புற்றின் உச்சி உடைந்து, சல்லடை போட்டது போன்ற குருத்து மண் துகள்கள், அவன் தோள் வழியாய் உருண்டோடிக் கொண்டிருந்தன. எதிரே சிறுவர்-சிறுமியர் சாய்வாய் போடப்பட்ட சறுக்குப் பலகையில் வழுக்கி வழுக்கி விழுந்து கொண்டிருப்பதை பார்த்ததும், சித்தப்பா பிள்ளைகளின் நினைவு வந்தது. கூடவே கண்ணீரையும் கொண்டு வந்தது. அந்த நினைவோடு, கவிதாவின் நினைவு வெறுப்புக் குரியதாகவும், மோகனனின் நினைவு "லவ்-கேட்" எனப்படும் விருப்பும் வெறுப்பும் கலந்த கலவை உணர்வாகவும் அவனை பிழிந்தெடுத்தன. சித்தியை, அடிக்கப் போவதுபோல், அவனை நெருங்கி மிரட்டியதற்காக, நாக்கை பற்களால் துண்டாக்கப் போனான்.

செல்வா, அந்த புற்றின் மேல் சாய்ந்தான். சாயச் சாய அது சரிந்தது. இதை புதை குழியில் கிடப்பதுபோல் கிடந்தான். ஆங்காங்கே கேட்ட சிரிப்பும், கும்மாளமும் தன்னை நையாண்டி செய்வதுபோல் தோன்றியது. கணக்கிலும், விஞ்ஞானத்திலும் நூற்றுக்கு நூறாய், தொன்னூறாய் வாங்கியவன் கல்லூரி வகுப்புக் கணக்கில் பத்துக்கு பத்தாய் வாங்கியவன், இப்போது மனிதன் என்ற "ஒன்று" போய் சைபராய் கிடந்தான். அந்த எதார்த்தத்தை உள்வாங்க முடியாமல், சிறிது நேரத்தில் பிணத் தூக்கம்.

"செல்வா... செல்வா...."

பதில் கிடைக்காததை கண்ட கவிதா, அவனை உலுக்கினாள். அவன் அருகே உட்கார்ந்து அங்குமிங்குமாய் ஆட்டினாள். அவன் மூக்கில் கை வைத்த பிறகுதான், அவளுக்கும் சுவாசமே இயங்கியது. அவனுக்குத் தெரியாமலே அவன் பின்னால் நடந்து, அவன் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் தளர் நடையாகி, அவன் தலை திரும்பிய பாதையில் நடந்தாள். பாம்புப் பண்ணையில் தேடினாள். பிறகு, ஒரு அனுமானத்தோடு இங்கே வந்தாள் மூச்சடைக்க அலைந்தாள். எப்படியோ கண்டுபிடித்து விட்டாள்.

"செல்வா... செல்வா..."

செல்வா, அவள் உலுக்கலில் இருந்து கண் விழித்தான் கோபத்தை காட்டுவதுபோல் பல் கடித்து எழுந்தான். ஆவேசக் குரலில் கேட்டான்.

"உன்னை யார் என் பின்னால் வரச்சொன்னது?"

"நான் ஒன்றும் உங்கள் பின்னால் வரல. நீங்கதான் என் முன்னால போனீங்க."

கவிதா, சூழலை எளிமைப்படுத்த நினைத்தபோது, அவன் கடுமைப்படுத்தினான்

"ஒன்னால நான் பட்டது போதும். நீ ஒரு புழுகிணி.. மோசடிக்காரி.. கூட்டிக் கொடுக்கிறவள்... போடி..."

கவிதா, இந்த மாதிரி வார்த்தைகளை எப்போதும் எவரிடம் வாங்கி அறியாதவள். அவன் கோபம், அவளையும் தொற்றிக் கொண்டது.

"லுக் மிஸ்டர் செல்வா! நீங்க என்னை வெறுக்கிறதனால, நான் செத்துடமாட்டேன். வாழ்ந்து காட்டுவேன். ஆனால், உயிருக்கு உயிராய் பழகிய என்னை ஏன் வெறுக்கிறீங்க என்பதற்கு காரணங்களை கேட்க, எனக்கு உரிமை உண்டு. நீங்க சொல்லித்தான் ஆகணும்."

"சொல்றேன். உன்கிட்ட, என் மனசே நினைக்க பயப்படுற அந்தரங்கங்களை, சொன்னேன். ஆனால், நீ இப்போதைய உன் அம்மா, ஒரு டூப்ளிகேட் என்கிறதை சொல்லல."

"வயசுக்கு வருகிற பருவத்துல இருக்கிற மகளையும், நன்றாக படிக்கிற மகனையும் விட்டுட்டு, ஒருத்தி ஓடிப் போறான்னா... அவள், அம்மா இல்ல. பச்சைத் தேவடியாள். ஆனால், என் அப்பாகிட்ட வந்தவள் குழந்தை குட்டி இல்லாதவள். எங்க அப்பாவுக்கு ஆறுதல் சொல்வதற்காக வந்தவள், எனக்கு அம்மாவாகிப் போனாள். நீங்கள் சொல்கிறீர்களே டூப்ளிகேட் அம்மா, இந்த அம்மா என்னை பெற்ற அம்மாவைவிட பல மடங்கு பெரியவள். அம்மா என்றால் எனக்கு இவள்தான். இந்த அம்மாவை உங்களிடம் களங்கப்படுத்த நான் விரும்பவில்லை. இந்த அம்மாவா? நீங்களா? என்றால் எனக்கு இந்த அம்மாதான் முதலில். அவளால்தான், என் அப்பனின் ஆடாத ஆட்டத்தை சகித்துக் கொண்டிருக்கிறேன். நான் போட்ட நகைகள் பொதுச்சொத்து. அதனால், என் அம்மாவின் ஆலோசனைப்படி அப்பனை கழட்ட முடியாது என்பதால், நகைகளை கழட்டி விட்டேன். இதுதான் நீங்கள் என்னை வெறுப்பதற்கு காரணம் என்றால், நீங்கள் தாராளமாக என்னை வெறுக்கலாம்."

"இதுகூட எனக்குப் பெரிசில்ல... நாலு நாளைக்கு முன்னால என்னை பார்க்கிறதுக்காக கெட்டுப் போகாத பிரிட்ஜ் சாக்குல வரத் தெரிந்த உனக்கு, அதே மாதிரி ஏதாவது ஒரு சாக்கில எங்க வீட்டுக்கு வந்து, நீ டூரில் ஒழியறதை சொல்லியிருக்கலாமே."

"கதவு மூடி இருந்தால் வரவேண்டாமுன்னுதான் சொல்லியிருந்தேனே?"

"கதவு எங்க மூடி இருந்தது? முழுசா திறந்திருந்தது. உள்ளே போனால்... உங்கண்ணன், நான் உனக்கு எழுதின லெட்டரை கைப்பற்றிட்டான். கடைசில உங்க அண்ணனுக்கு என்னை கூட்டிக் கொடுத்திட்டியேடி..."

கவிதா, சுருண்டு விழப்போனாள். அண்ணனைப் பற்றி, பிறர் சொல்லக் கேட்டிருக்கிறாள். என்ன நடந்திருக்கும் என்பதை அவளால் யூகிக்க முடிந்தது. அப்படி யூகிக்க யூகிக்க, அவள், ஆலமர விழுதை பிடித்துக்கொண்டே விம்மினாள். அந்த மரத்தின் தூணில் குப்புற சாய்ந்தபடியே, ஒப்பாரியாய் ஒப்பித்தாள்.

"நான் பாவி... படு பாவி... உங்களை இந்த கதிக்கு கொண்டு வந்த, அந்தப் பயலும் ஒரு அண்ணனா? கூடப் பிறந்த தங்கையோட காதலன்னுகூட தெரிஞ்சும், உங்கள விட்டு வைக்கலியா? உடன் பிறந்தே கொல்லும் வியாதியாய் போனானே..."

"மோகனனை திட்டாத... அவரு ரொம்ப ரொம்ப நல்லவரு..."

கவிதா, செல்வாவை அதிர்ந்து போய், உடல் திருப்பிப் பார்த்தாள். அந்த மரத்தின் தூரிலிருந்து கீழ் நோக்கி சரிந்தாள். அவன் பேசியதின் தாத்பரியம் புரியப் புரிய அவளுக்கு, தான் அவனை இழந்ததை விட, அவன் தன்னைத்தானே இழந்ததே பெரிய கொடுமையாக தோன்றியது. இப்போது, அவன் திட்டியதும், முன்பு அவளைப் பார்த்த உடனேயே பின் வாங்கியதும் குறைந்த பட்ச எதிர்வினையாகவே தோன்றியது. அவளுக்கு மூச்சு முட்டியது. உள்ளுக்குள் ஏதோ ஒன்று சுழன்று சுழன்று சுற்றுவது போலானது. நினைத்து நினைத்து, நினைவற்றாள். மனம் சூன்யமானது. உடல் மரக்கட்டையாது. கண்கள் வெளிறிப் போயின. அந்த சுற்றுப்புறச் சூழல் ஒரு மயான காடுபோல தோன்றியது. ஆங்காங்கே நடமாடிய காவலாளிகள் வெட்டியான்கள்போல் பட்டனர். அருகருகே இருந்த ஜோடிகள் மோகினி வடிவங்களாய் தோற்றம் காட்டின.

இதற்குள், சுயத்திற்கு வந்த செல்வா, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான். அவள் அப்படியே அவன் மார்பில் சாயப் போனபோது, அவளை விலக்கி வைத்தவன் போல் ஆலமர அடிமர அடிவாரத்தில் அவளை சாய வைத்துவிட்டு யதார்த்தத்தை சுட்டிக் காட்டினான்.

"நல்லதோ... கெட்டதோ... நடந்தது நடந்துவிட்டது. என் மனசில இருந்த உன்னை, ஒங்கண்ணன் துரத்திட்டான். அவனை நினைக்கும் இந்த மனம், இனிமேல் யாரையும் நினைக்காது இப்போதும் உன்னை நேசிக்கிறேன். காதலியாக அல்ல... பெண்ணாகக்கூட

இல்லை. தனிமையில் விடப்பட்ட ஒரு மனித ஜீவியாக நினைக்கிறேன். அதனால..."

"போதும் நிறுத்துங்க. எதிர்காலத்துல ஒரு நல்லவனா பார்த்து கல்யாணம் செய்துக்கன்னு சொல்லுவீங்க. அவ்வளவுதானே?"

"அப்படிச் சொல்ல எனக்கு உரிமையில்ல. உண்மையைச் சொல்லப்போனால், ஒங்கண்ணனோட எனக்கு கிடைத்த முதல் அனுபவத்தில் எப்படி எனக்கு குமட்டிக் கொண்டு வந்ததோ, அப்படி உன்னோட உரசல்களும், முத்தங்களும் இப்ப எனக்கு குமட்டுது."

"ஏய்... பாவி. நீ உருப்படுவியா? என்னையும் இவரையும் இந்த நிலைக்கு ஆளாக்கிட்டு எங்கேயோ போயிட்டியேடா... நீ நிச்சயம் நல்லா இருக்க மாட்டடடா..."

"நல்லாத்தான் இருப்பார். அவரோட முகவரிய அவர் கிளப்ல போய் வாங்கிட்டேன். நானும் உருப்படுறதுக்கு ஒரு வழி இருக்கு. உங்கண்ணன் நிரந்தரமாய் போன பம்பாய்க்கு, நானும் போகப் போறேன். என் கையில பைசா இல்லை. நாம பழகின தோசத்துக்காக, நீ மட்டும் டிக்கெட்டும், செலவுக்கும் பணம் கொடுத்தால், நான் கரையேறிடுவேன்."

கவிதா, பிரமித்தாள். பித்துப் பிடித்தவளாய் தலையை அங்குமிங்குமாய் சுற்றினாள். சுற்றும் முற்றும் சூழ்ந்த வேடிக்கைக் கூட்டம், அவள் கண்ணில்கூட பதியவில்லை. கைகளை உதறினாள். கண்களை உருட்டினாள். முன் பல்லால் பின் உதடுகளை கடித்தாள். 'அய்யோ அய்யய்யோ' என்றாள். அந்த கூட்டத்தின் தலைகளையும் மீறிப் பார்த்த செல்வாவின் கண்களில், எதிர்ப்புற உதிய மரத்தின் ஒதுக்குப் புறத்தில், அறுபதைத் தாண்டிய ஒரு பெரியவர், கண்பட்டார். ஆடை அலங்காரம் கச்சிதம். வாலிபன்போல் பொம்மை சொக்கா போட்டிருந்தார். சந்தேகம் இல்லை. மோகனன் அழைத்துச் சென்ற அந்த கிளப்பில், நிர்வாணமாக நின்றபடி, தன்னை நிர்வாணப்படுத்திக் கொண்டிருந்தவர். அவரை ஒட்டினாற்போல் ஒரு பத்து வயதுச் சிறுவன். அவனது ஒரு கரம், பெரியவரின் தொப்புளுக்கு கீழே போயிருந்தது.

செல்வா, எழுந்தான். வீர அபிமன்யூ போல வேடிக்கை கூட்டத்தை கிழித்தபடியே எதிர்ப்புறம் கால் கிலோ மீட்டர் வரை, குதிகால்கள் தலையில் தட்டாக் குறையாய் ஓடி, அந்த பெரியவர் முன்னால் மூச்சடைக்க நின்றான். அவர், அவனை ஆசுவாசப் படுத்திப் பேசினார்.

"ஹலோ... நீங்க மோகனனோட பார்ட்னர் செல்வாதானே? ஐ அம் தாமோதரன். அன்றைக்கு கிளப்ல பார்த்திருப்பீங்களே?"

"அதிருக்கட்டும். அந்தப் பையன் யார்?"

"இதுவெல்லாம் சொல்லியா தெரியணும். என் பக்கத்து வீட்டு குடிசைப் பையன். அவனுக்கு பிடித்தமான குலோப் ஜாம், கட்லட், சென்னா பூரி - இதுங்கல வாங்கிக் கொடுப்பேன். கை நிறைய காசும் கொடுப்பேன். அவனுக்கு பிடித்ததை நான் கொடுக்குறதால, எனக்கு பிடித்ததை அவனும் செய்யுறான். அவ்வளவுதான்."

செல்வா, அந்த சிறுவனை தூக்கி நிறுத்தினான். கன்னத்தில் மாறி மாறி அடித்தான். தலையில் கை நிறைய குட்டினான். பிறகு, கத்தினான்.

"இந்த அயோக்கியன்கிட்ட மாட்டிக்காதடா. பெண்டாளப் பிறந்தவங்கள மாதிரி... இவன் ஆணாளப் பிறந்த அயோக்கியன் திரும்பி பாராமல் வீட்டுக்கு ஓடுடா. முதல்ல ஒன் வீட்டு அட்ரஸை சொல்லு."

"அப்பா பேரு ஜெயபால். மயிலாப்பூர் கபாலித் தோட்டத்துல மூனாவது சந்துல எட்டாம் நம்பர் வீடு."

அந்தப் பெரியவர்... பெரியவர் என்ன பெரியவர்... கிழட்டுப் பயல்... அவசர அவசரமாக பேண்ட் பட்டன்களை மூடியபோது, செல்வா, அந்த பையனின் பிடரியில் ஒரு அடி போட்டான். "இனிமேல் இந்த மாதிரி காரியத்துக்கு சம்மதிப்பியா? சம்மதிப்பியா?" என்று கேட்டபடியே அடித்தான்.

"அடிக்காதண்ணா... அடிக்காதண்ணா... மாட்டேன்... மாட்டேன்... மாட்டவே மாட்டேன்..."

அந்தச் சிறுவன், பையை உப்ப வைத்த பைவ் ஸ்டார் சாக்லேட்டுகளையும், பூமர் பப்லுகாம்களையும், அந்த கிழவரின் முகத்தில் கல்லெறிவதுபோல் எறிந்தான். பிறகு கைகளே காலாகும்படி, அவற்றை தொங்க போட்டபடியே ஓடினான். ஓடிக்கொண்டே இருந்தான்.

இன்னும் பிரமிப்பிலிருந்து மீளாத தாமோதரக் கிழவன்மேல், செல்வா பாய்ந்தான். அவரை மல்லாக்கத் தள்ளி வயிற்றில் ஏறிக்கொண்டு முகத்திலும் கழுத்திலும் மார்பிலும் குத்தினான். கால்களால் இரண்டு காதுகளையும் நசுக்கினான். கூப்பாடு போடப்போன அவர் வாயில் மண்ணை அள்ளிப் போட்டு குத்து

குத்தாய் குத்தினான். தாமோதரனின் வாய் உரலானது. அதற்குள், கிடந்த மண், தானியமானது. செல்வா, கை உலக்கையானது.

கவிதா, ஓடோடி வந்தாள். அவள் பின்னால் வேடிக்கை கூட்டமும் ஓடி வந்தது. அதற்குள் பூங்காவின் வாட்ச் அண்டு வார்டு வீரர்கள், செல்வாவை கீழே தள்ளி முன் கைகளை, பின்புறமாய் வளைத்துப் பிடித்தார்கள். அந்தக் கிழவர் சிறிதுநேரம் வெட்கத்தால் தலை கவிழ்ந்தார். அந்த தலையை நிமிர்த்துவதுபோல், "இவனை ஒரு வாரமா வாட்ச் பண்ணிகிட்டிருக்கேன். சரியான பைத்தியம். மேலதிகாரிகள்கிட்ட சொன்னால், 'பைத்தியத்துக்கு, எல்லாரும் பைத்தியம் மாதிரி தெரியுமுன்னு' என்னை நக்கல் பண்றாங்க..." என்றான் ஒரு வார்டு.

தாமோதரன் கிழவருக்கு தப்பிக்க வழி கிடைத்ததுபோல் தோன்றியது. மண் கலந்த கையோடு செல்லுலார் போனை எடுத்தார்.

# 15

குய்யோ முறையோ' கூப்பாடோ, ஒப்பாரியோ கேட்க முடியாத இருண்டு அறையில், செல்வா, போய்ச் சேர்ந்தான். முழங்கால் இரண்டிலும் ரூல் தடியை வைத்து உருட்டல், கை நகங்களில் குண்டூசிகளால் குத்தல், காதுகளை நெட்டெடுத்தல், முகக் குத்து, உச்சி முடி இழுப்பு, லத்திக் கம்படி, ஐசில் கிடத்தல் போன்ற அத்தனை தடாலடிகளுக்கும் உட்பட்ட செல்வா, மீண்டும் லாக்கப் அறையில் ஜட்டியோடு நிறுத்தப்பட்டான். ஆரம்பத்தில் கொடாக்கண்டனாக இருந்ததால், விடாக் கண்டரான இன்ஸ்பெக்டரின் ஆணையின் பேரில், காவலர்கள் நடத்திய 'விசாரணையில்'; செல்வா கக்கிய உண்மைகள் பொய்களைவிட பயங்கரமாய் தோன்றின. புகார் கொடுத்த தாமோதரன், புள்ளிகளிலே முக்கியமான புள்ளி. அவரா அந்தச் சிறுவனிடம் அப்படி நடந்து கொண்டார் என்பதை இன்ஸ்பெக்டரால் ஜீரணிக்க முடியவில்லை. 'இவனுங்க தாய்யா இப்படி நடப்பானுங்க' என்று காவலர்கள் அவரிடம் சொன்னபோது, அந்த இன்ஸ்பெக்டருக்கு, செல்வா மீது சிறிது அனுதாபம் ஏற்பட்டது சட்டப்படி பெரிய குற்றவாளியான ஒருவர், சின்னக் குற்றவாளி மீது புகார் கொடுத்ததும், அந்த விசாரணையின் போக்கு எதில்

கொண்டு போய்விடும் என்பதைப் பற்றி அவர் கவலைப்படாததும், இன்ஸ்பெக்டருக்கு குழப்பத்தைக் கொடுத்தது

புள்ளியோ பெரிய புள்ளி. அதோடு கரும்புள்ளி. ஆகையால், கிரைம் இன்ஸ்பெக்டரான இவர், 'இது லா அண்டு ஆர்டர் பிராப்ளம்' என்று அருகே உள்ள இருக்கையில் இருந்த எல் அண்ட் ஓ இன்ஸ்பெக்டரிடம் சொன்னார். அந்த எல் அண்ட் ஓ வோவோ, 'பப்ளிக்கா நடப்பதாலேயே, லாவும் ஆர்டரும் சிதைந்ததாக அர்த்தம் இல்லை. இது கிரைம். ஆகையால், கிரைம் இன்ஸ்பெக்டரான நீதான் இதை விசாரிக்கணும். என்னை விடுப்பா...' என்றார்

லாக்கப் அறையில், வழக்கமாக வாடிக்கையாளர்கள், வம்படித்து சிரித்தபோது, தான் மட்டும் ஜட்டியோடு நிற்பது செல்வாவிற்கு அவமானமாகத் தோன்றியது. ஆனாலும், லுங்கி கிடைத்தால் எப்படியாவது தூக்குப் போட்டோ, இல்லையானால் எப்படியாவது தப்பித்து தண்டவாளத்தில் தலை வைத்தோ, பஸ் முன் பாய்ந்தோ, தீக்குளித்தோ, சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தற்கொலை செய்து கொள்வது என்ற முடிவிற்கு வந்துவிட்டான். இதனால் அவன் முகம் உறுதிப்பட்டது. இதயம் வலுப்பட்டது. பார்வை தீட்சண்யமானது 'சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரமும் கர்லளவு' என்ற பழமொழியை நிரூபிப்பவன்போல் நெஞ்சு நிமிர்த்தி நின்றான். உடலெங்கும், வரிக்குதிரை மாதிரி வரி வரியாய், லத்திக் கம்பு தடயங்கள், ஒரு விரல் பரிமாணத்திற்கு குறுக்கும் நெடுக்குமாய் கோடுகள் போட்டிருந்தன. கண் இமைகள் வீங்கிப் போயிருந்தன காதுகளில் ரத்தச் சிதைவுகள். ஆனாலும், இவற்றை பற்றி கவலைப்படாதவன் போல் கைகளை வீரக்கட்டு என்பார்களே விவேகானந்தர் கட்டு அப்படி கட்டிக்கொண்டு, நின்றான்.

ஒரு டெலிபோன் கூச்சலை மௌனமாக்கிய காவலாளர் ஒருவர், அதன் குமிழை அப்படியே வைத்துவிட்டு, இன்ஸ்பெக்டரின் காதில் கிசுகிசுத்தார் அவரும் அலறியடித்து, பேசவேண்டிய குமிழின் பொந்திற்குள் காதை வைத்தும், கேட்க வேண்டிய குமிழில் வாய் வைத்தும், "எஸ் ஸார்." என்று சொல்லி விட்டு, எதிர்முனை ஆணைக்கு காத்து நின்றார். உடனே, கான்ஸ்டபிள் வாலிபர், அந்த டெலிபோன் கருவியை பலவந்தமாய் பிடுங்கி, உள்ளபடியே வாய்க்கும் காதுக்கும் வைத்து பொருத்தியபோது, கோபக்கார இன்ஸ்பெக்டர், "என்னடா, செய்யுறே நாய்ப்பயலே' என்றார். எதிர்முனையில் என்ன கிடைத்ததோ? இன்ஸ்பெக்டரின் காக்கிச் சட்டை நனைந்தது.

வேர்வையா? சிறுநீரா? என்று அனுமானிக்க முடிட வில்லை. பிறகு, “கான்ஸ்டபிளைத்தான், நான் திட்டினேன் ஸார். தப்புத்தான் ஸார். கான்ஸ்டபிளையும் அப்படி திட்டக்கூடாதுதான் ஸார்” என்று கெஞ்சினார்.

எதிர்முனைக்காரர், ‘ரிலீஸ் த பாய் செல்வா. நோ எப் ஐ ஆர். எங்கே நான் சொன்னதைச் திருப்பி சொல்லு’ என்று கேட்டிருக்க வேண்டும் உடனே இன்ஸ்பெக்டர், “ரிலீஸ் த பாய் செல்வா. நோ எப்.ஐ.ஆர்’ என்று சத்தம் போட்டு கூவினார். எதிர்முனையில் இருந்து என்ன கிடைத்ததோ, ‘எஸ் ஸார்’ செல்வாவை விடுதலை பண்ணிடுறேன். கேஸ் புக் பண்ணல ஸார். அந்த தாமோதரன் பெரிய புள்ளி ஸார். நீங்கதான் அவர் கிட்டயும்... ஓகே... ஓகே... ஸார்... உங்க உத்தரவுதான் முக்கியம். அப்புறம், என் மேல போட்ட சார்ச்சீட்டு விசாரணை அறிக்கை உங்க டேபிள்லதான் இருக்குதாம். தப்புத்தான் ஸார்.... சமய சந்தர்ப்பம் தெரியாம பேசுறேன் ஸார்.’ என்று சொல்லிவிட்டு, ஆயாசத்தோடு போனை கீழே வைத்தார். முன்பெல்லாம் டெலிபோனில், ‘எஸ் ஸார்’ என்று சொல்லிவிட்டு, பிறகு, தனது ஜுனியர் சகாக்களிடம், சம்பந்தப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரி தனது ஆலோசனையை கேட்டதாக தம்பட்டம் அடிக்கும் இவர், இப்போது குட்டு வெளியானதால் குட்டுப்பட்டவர்போல் கிடந்தார். எவ்வளவு பெரிய பதவியிலும் இருக்கும், தப்புத் தண்டா ஆசாமி எவருக்கும், மேலதிகாரி என்று வந்துவிட்டால், வேர்வை சுரப்பிகள் விரைந்து செயல்படும் என்பதும், அசல் பிச்சைக்காரர்கள் மாதிரி கெஞ்சுவார்கள் என்பது போலவும் இன்ஸ்பெக்டர் ஒரு நாடமாடும் வெறும் காக்கித் துணியானார்.

காலவர்கள் திறந்தால் நேரமாகும் என்று நினைத்தவர்போல், சுவரில் அடித்த பித்தளை கம்பிகளில் தொங்கிய சாவிகளில் ஒன்றை எடுத்து லாக்கப் அறையை திறந்தார். கான்ஸ்டேபிள் ஒருவர், மொபைல் போலீஸ் ஒப்படைத்த செல்வாவை, பய பக்தியோடு பார்த்தார். எங்கிருந்தோ கொண்டு வந்த லுங்கியை அவனை அணியும்படி கெஞ்சினார். ரத்தம் பிசிறிய சதைக் கோடுகளை மறைப்பதற்கு சட்டை இல்லை. அடித்த அடியில் அது நூல் கற்றைகளாகி விட்டன. எதிர்முனைக்காரரின் மகள் வரப் போகிறாளாம். அதற்குள், இந்த பயலின் இடுப்புக்கு மேல் நிர்வாணமான பகுதியை எப்படி மறைப்பது?

இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டரின் காதில் கிசுகிசுத்தார். அவர் லாக்கப்பிற்குள் போய் அங்கே நின்று கொண்டிருந்த ஒருத்தனின் சட்டையை கழட்டி, செல்வாவிற்கு அவரே மாட்டிவிட்டு, அவனை வி.ஐ.பி. போல் சர்வ சலாம்களுடன் இன்ஸ்பெக்டருக்கு முன்னால் உள்ள நாற்காலியில் உட்கார

வைத்துவிட்டு, தனது ஆபீஸ் முதலாளி பார்த்த திசையை பார்த்தார். ஒரு அழகான பெண். அநேகமாக எதிர்முனைக்காரரின் மகளாக இருக்கவேண்டும். அவளோடு, நாற்பது வயது மதிக்கத்தக்க பிள்ளைக்குட்டி தம்பதியினர்.

இன்ஸ்பெக்டர், தானே கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளியேறியவர் போல், உடனடியாய் எழுந்து அவர்களை நோக்கி நடந்து, வரவேற்றார்.

"நீங்க மிஸ் கவிதாதானே?"

"ஆமாம் ஸார்."

''என்ன மேடம்? நான் இன்னார் மகள்னு நீங்களே சொல்லியிருந்தால் இவனை எப்பவோ திருப்பி அனுப்பியிருப்பேன்."

"நானும், நீங்க சொன்னது மாதிரி இன்னார் மகள்னு போன் செய்தேன். யாரோ ஒருத்தன் 'வைடி போனைன்'னு சொன்னான்"

அப்படிச் சொன்னது யாராக இருக்கும் என்பதுபோல், கடுமையாய் பாவலா செய்தபடியே இன்ஸ்பெக்டர், காவலர்களைப் பார்க்க, அவர்கள் "நீதான்... நீயேதான்" என்பதுபோல் எதிர்பார்வை பார்த்தார்கள். ஆனாலும், இன்ஸ்பெக்டர் சமாளித்தார். 'இங்கே யாரும் அப்படி பேசுறவங்க கிடையாது மேடம். நீங்க கேட்டது டெலிபோன் கிராஸ் டாக்கா இருக்கும்."

இதற்குள், இரும்பாய் உட்கார்ந்திருந்த செல்வா, மெழுகாய் குழைந்து எழுந்து, நின்றான். சித்தப்பாவின் காலில் அப்படியே விழுந்து, "உங்களுக்கு துரோகம் பண்ணிட்டேன் சித்தப்பா. என்னை மன்னிச்சிடுங்க சித்தப்பா" என்று காலைக் கட்டி அழுதான். அவர், அவனை தூக்கி நிறுத்திவிட்டு, தனது கண்களை துடைத்தபோது, செல்வா, சித்திக்காரியின் தோளில் சாய்ந்து, "சித்தி! எங்கம்மா திட்டாத திட்ட, நீங்க திட்டல... எங்கம்மா போடாத அளவுக்கு எனக்கு சோறு போட்டீங்க... நான் உங்ககிட்ட நன்றியில்லாம நடந்துட்டேன். நீங்களும் என்னை மன்னிக்கணும். உங்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படியா பண்ணிட்டேனே" என்று விம்மினான். கவிதாவையும் நன்றியோடு பார்த்தான். அந்த பார்வையில் நளினம் இல்லை. 'ஆனாலும், எல்லோரையும் மோசடி பண்ணிட்டேனே' என்று, கவிதாவை பார்த்தபடியே, கண்களை கைகளால் மறைத்துக் கொண்டான். குழந்தைகளை இருபக்கமாக அணைத்துக் கொண்டான்.

கவிதா, மட்டும் சிறிது விலகிப்போய் துப்பாக்கி அப்பிய சுவர் பக்கம் முகம் போட்டு, அந்தச் சுவரில் கண்ணீர் கோடுகளை

போட்டுக் கொண்டிருந்தாள். இவளை, நோட்டமிட்ட இன்ஸ்பெக்டர், எல்லா விவகாரத்தையும் சொன்ன பயல், இவள் காதல் விவகாரத்தை மட்டும் சொல்லாமல் விட்டதில் திகைத்தார். "ஒருவேளை விசாரிப்பு சரியாக கிடைக்கவில்லை என்று பொருளா? அல்லது ஒரு பெண்ணின் பெயரை அம்பலப்படுத்தக்கூடாது என்ற பெருந்தன்மையா? என்று ஆய்வு செய்தார்.

எல்லோரும் பேசி, இடக்கு மடக்காய் விவகாரம் விகாரமாகி விடக்கூடாது என்று நினைத்த இன்ஸ்பெக்டர், பொதுப் படையாகக் கேட்டார்.

"நீங்க தானே இவரோட சித்தப்பா சிவனுப்பாண்டி? அந்தம்மா உங்க ஒய்ப் லட்சுமி. இது அருண், அவள் சுபேதா. சரியா..."

சரிதான் என்பதுபோல், குழந்தைகள் உட்பட எல்லோரும் தலையாட்டினார்கள். இன்ஸ்பெக்டர், மீண்டும் கேட்டார்.

"மோகனன் என்கிறவன் யாரு?"

செல்வா, குடும்பத்தினர் மௌனமாய் நின்றபோது, கவிதா, கண்ணீரை துடைத்துக்கொண்டு, "அவன் ஒரு சமூக விரோதி. என் கூடப்பிறந்த அண்ணன்." என்றாள்.

இன்ஸ்பெக்டருக்கு, போன மூச்சு திரும்பி வந்தது. இந்த மோகனனை வைத்தே, எதிர்முனை கொம்பனை மடக்கி விடலாம். தனக்கு எதிராக போடப்பட்ட சார்ச்சீட்டும், விசாரணை அறிக்கையும், பதவி உயர்வாக மாறும் என்பதில் அவருக்கு சந்தேகம் இல்லை ஆனாலும், அந்த சமயத்தில், அவர் மனிதனாகவே பேசினார் சிவனுப்பாண்டியை நேரடியாகவும், கவிதாவை மறைமுகமாகவும் பார்த்தபடியே பேசினார்

"இந்தப் பையன் உங்க எல்லார் மேலயும் உயிரையே வைத்திருக்கான். விதி வசத்தால் தன்னையும் மீறி இப்படி ஆயிட்டான். இவன் வேணுமுன்னே உங்கள நோகடிக்கல. இப்போ... இவன் கிட்டத்தட்ட ஒரு மனநோயாளி மாதிரி."

செல்வா, குறுக்கிட்டான்

"எல்லா விஷயத்தையும் சொல்லிடுங்க இன்ஸ்பெக்டர் ஸார். இல்லாட்டி, எங்க சித்தியாலதான் இப்படி ஆயிட்டேன்னு, எங்க சித்தப்பா எங்க சித்தியைத் திட்டுவார்."

"பேசாம இருடா. பெரியவங்க பேசும்போது குறுக்கிடப்படாது என்கிற பண்பாட்டை கத்துக்கோ மிஸ்டர். சிவனுப்பாண்டி! இவன் எல்லா விஷயங்களையும் என்கிட்ட சொல்லிட்டான். இவன் ரோசமா ஓடிப்போனதும், செல்லமாய் பழகின குழந்தைகளை

வெறுத்ததும், இவன் தானாய் செய்ததல்ல. அதுக்கு காரணங்கள் இருக்கு. அது உங்களுக்கு தெரிய வேண்டாம். அதற்கு உரியவர்களை கவனிக்க வேண்டியது என்னோட பொறுப்பு. இப்போது, இவனுக்கு தேவை மனோதத்துவ ரீதியான சிகிச்சை என் தங்கை சத்தியா, கிளீனிக்கல் சைக்காலஸிஸ்ட். அவள்கிட்ட ஒரு கேசை கொடுக்கிறதா நினைக்காதிங்க. பையனோட சிக்கல்கள்களை சரிப்படுத்திடுவாள். இல்லையானால், அப்பாய்மெண்ட் வாங்கவே ரெண்டு மாதம் ஆகும்"

இன்ஸ்பெக்டர், டெலிபோனில், தங்கையிடம் பேசினார். பிறகு, இவர்களிடம், "நாளைக்கு காலையில பத்து மணிக்கு அப்பாய்மெண்ட் கொடுத்திருக்காள். இந்த விசிட்டிங் கார்டுதான் அவளுடைய அட்ரஸ். என்னுடைய மைத்துனரும், அதாவது தங்கையின் கணவரும் மனோதத்துவத்தில் லண்டனில் 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்று பட்டம் பெற்ற இரண்டு இந்தியர்களில் ஒருவர். ஆனாலும், தொழிலுக்கு மதிப்பு கொடுக்காத தேசமாச்சே நமது நாடு. எதுக்காக சொல்றேன்னா, என் தங்கையால முடியாட்டாலும், அவர் சரிப்படுத்திவிடுவார் என்கிறதுக்காகத்தான் சொன்னேன் நீங்க எல்லாரும் இந்த மேடம் கவிதாவுக்கு நன்றி சொல்லணும். இவங்க அப்பாதான் இந்த மேடத்தோட பெயரை என்கிட்ட சொன்னவரு. செல்வா! 'ஆயிரம் மனச்சிக்கல்லயும் நீ கிரேட்டுடா. என்று கவிதாவையும், அவனையும் மாறி மாறி பார்த்தபடி, பேசினார். கவிதா, புரிந்து கொண்டாள். செல்வா, வலிக்கிற தசைக்கோடுகளை தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

சித்திக்காரி, ஒரு 'லா' பாயிண்டை கிளப்பினாள்.

"அந்தம்மாகிட்ட இவனுக்கு என்ன சிக்கலுன்னு நீங்க சொல்லலியே அய்யா..."

"உங்களுக்கு தெரியக்கூடாது என்கிறதுக்காகத்தான் சொல்லல இனிமேல் என் தங்கைபாடு... இந்தப் பையன் பாடு... உங்ககிட்ட எந்த பணமும் வாங்க மாட்டாளாம். காரணம்... இவன் பிரச்சினை, அவள் தொழிலில் ஒரு சவாலாம். சரி... போயிட்டு..."

குழந்தைகள் தவிர, எல்லோரும் முகத்தில் ஈயாடாமல் போனார்கள் வாசலுக்கு போய்க் கொண்டிருக்கும்போது, இன்ஸ்பெக்டர், "மிஸ் கவிதா.. இங்க வாறீங்களா. நீங்க மட்டும்." என்றார்.

கவிதாவும், இன்ஸ்பெக்டரும் பாதி வழியில் சந்தித்துக் கொண்டார்கள்.

"மிஸ் கவிதா! இவனை நீங்க நண்பனாகவோ இல்ல காத.. ஸாரி அண்டை வீட்டுக்காரனாகவோ அடைந்ததற்கு பெருமைப்

படணும். நீ காதலித்த பெண் யாருடான்னு ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு அடி என்கிற மாதிரி அடி கொடுத்தோம். அப்படியும் அவன் மூச்சு விடல. ஆனால், உங்கண்ணன் மோகனன் மேல, நான் ஆக்ஷன் எடுக்கலாமுன்னு யோசிக்கேன்."

"எடுத்தாலும் நான் கவலப்படமாட்டேன். செல்வாவை, எங்கிட்ட இருந்து பிரித்த கொடியவன் அவன்."

இன்ஸ்பெக்டர், சிறிது ஏமாந்தார். சுருதி மாற்றிப் பேசினார்.

"தட்ஸ் ஆல் ரைட் நான் ஆக்ஷன் எடுக்கிறதாய் இல்ல. இப்போ அது முக்கியமில்ல. உங்க காதலுக்காக நீங்க பெருமைப்படலாம். பையனை, என் சிஸ்டர் உங்ககிட்ட முன்னால எப்படி இருந்தானோ, அப்படி ஒப்படைத்துடுவாள் 'பை தி பை' என் பிரமோஷன் பைலும், விசாரணை அறிக்கையும் உங்கப்பா டேபிள்ல இருக்கு."

"கண்டிப்பா அப்பா உதவுவார் ஸார். நீங்களும் ஒங்க சிஸ்டர்கிட்ட பழையபடியும் அழுத்தமாகப் பேசி..."

"கவலைப்படாதீங்க மேடம். உங்கள மாதிரி . என்ன மாதிரி நல்லவங்களுக்கு நல்லதே நடக்கும். நான் செய்த நல்ல காரியத்தை, நானே உங்க அப்பாகிட்ட டெலிபோன்ல சொல்லட்டுமா? இல்ல நீங்க சொல்றீங்களா?"

"நானே சொல்லிடுறேன் ஸார். அதுதான் அவர் டேபிள்ல இருக்கிற உங்க பைலுக்கு எபெக்டா இருக்கும் தேங்க் யூ ஸார்."

கவிதா, மனதிற்குள் சிரிப்பும் அழுகையுமாய் தேக்கி வைத்துக்கொண்டு, கால்களை தேய்த்து தேய்த்து நடந்தாள்.

# 16

அண்ணன் அனுப்பிய அத்தனை பேரோடும், டாக்டர். சத்தியா, தனித்தனியாகப் பேசினாள் குழந்தைகளோடு பேசும்போது குழந்தைபோலவே பேசினாள். இறுதியாக அவர்களில் யாராவது ஒருவர், வெளியே இருக்கலாம் என்று சொன்னாள். எல்லோருமே இருக்கப்போவதாக தர்ணா முறையில் பதிலளித்தார்கள். பிறகு, செல்வாவை கூப்பிட்டாள். சுமார் முக்கால் மணி நேரம்வரை அவனது பிரச்சினைகளை கேட்டறிந்தாள் கேள்விகளில் அளவுக்கு மீறாத அனுதாபம். அவன் பதில்களுக்கு தலையாட்டியதில், இது

சகஜந்தான்... சாதாரணமானது என்று காட்டும் தோரணை... சிற்சில சமயங்களில், லேசாய் அதிர்ந்த பார்வை.

டாக்டர். சத்தியா, அவன் சொன்னவற்றை தற்காலிகமாக ஒதுக்கி வைத்ததுபோல், செயல்பட்டாள். உடம்பையும், மனதையும் எப்படி ஆசுவாசப்படுத்திக் கொள்வது என்பதை நாற்காலியில் இருந்தபடியே செய்து காட்டினாள்.

பரந்து விரிந்த பெரிய அறை. சித்தப்பா வீட்டு படுக்கை அறையையும், செல்வா, குழந்தைகள் அறையையும் விழுங்கிவிட்டு, பாதி வயிறு நிறைந்தது போல் இருக்கும் அறை. தென் முனையில் சுவரோடு சுவராக ஒரு ஒற்றைப் படுக்கை. இருபக்கமும் தேக்குக் குமிழ்களைக் கொண்ட கட்டில். இதன் எதிர்ச்சுவரில், 'நம்முடைய அணுகுமுறையே நம்மை தீர்மானிக்கிறது' என்ற வாசகப் பொறி. பளபளப்பான மரப்பலகையில் இடம் பெற்றிருந்தது. கட்டிலின் வடமுனையில் கால்களுக்கு மேலே இன்னொரு பச்சை பலகை. அதில், 'அஞ்சுவதும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை.' என்ற அப்பர் பிரானின் மேலாண்மை வரிகள், வெள்ளை வரிகள்.

மனோதத்துவ நிபுணர் டாக்டர் சத்தியாவின் வேண்டுகோள்படி, அவளிடம், செல்வா, எல்லாவற்றையும் ஒப்பித்துவிட்டான். அவளைப் பார்க்க பார்க்க, இவன் பதட்டம் பரவசமானது. சுமார் முப்பது வயதுக்காரி. அசல் கிராமத்து அக்காவின் நகர்ப்புற வார்ப்பு. மனிதச் சதையாலும், எலும்பு நரம்புகளாலும் கடைந்தெடுக்கப் பட்டது போன்ற உடல். நெற்றியில் உச்சிக்கு சிறிது கீழேயும், நடுவிலும் இரண்டு நிசமான குங்குமப் பொட்டுக்கள். புருவ மத்தியில் ஒளி சிந்தும் முத்துக்களால் ஆனது போன்ற அம்பு வடிவப் பொட்டு. அரவிந்தர் ஆசிரமத்தின், அந்த அன்னையின் லேமினேட்டட் புகைப்படம் மேஜையின் பின் சாய்வோடு இருந்தது. அன்னைக்கு தீட்சண்யமான பார்வை. திடப்படுத்தும் நோக்கு. எல்லாமே அன்பு மயம் என்ற போக்கு.

செல்வா, அந்த கட்டிலில் மல்லாக்க படுத்திருந்தான். டாக்டர் சத்தியா, அவன் அருகே சென்றாள். டாக்டர் என்றால் ஸ்டெதாஸ்கோப் டாக்டர் அல்ல. மனோதத்துவத்தில் வாங்கிய டாக்டர் பட்டக்காரி. செல்வாவை சிறிது நேரம் பார்த்தாள்.

அவனோ, இதுவரை படுத்தறியாத சுகமான கட்டிலில், அதன் மெத்தையோடு பறப்பதுபோல், கிடந்தான். மயிலிறகால் செய்தது போன்ற மெத்தை. மேலேயும் கீழேயும் அவனை மென்மையாய் தாலாட்டியது. தானும் ஆடிக் கொண்டது சத்தியா, 'நான் சொன்னது மாதிரியே நீ செய்து காட்டணும்.' என்று சொல்லி விட்டு, அவன் தலைப்பக்கம் வந்தாள். அந்தக் குரல், ஆகாயத்து

அசரீரி குரல்போல் செல்வாவிற்கு ஒலித்தது. மெல்லிய குரல் கொண்ட ஏ சி. வெள்ளை விளக்குகள் அணைந்து, பட்டும் படாமலும் எரியும் மஞ்சள் விளக்கு. சத்தியா, இப்போது அவன் கால்மாட்டு பக்கம் வந்து ஆணைபோல் பேசினாள்.

"கமான் யங்மேன். இப்போ நான் சொல்லிக் கொடுத்த பதினெட்டு உடல் மையங்களில் ஒவ்வொன்றாக உங்கள் பதட்டத்தை ஏற்றப் போறீங்க. அப்புறம் ரிலாக்ஸ் பண்ணப் போறீங்க... முதலாவதாக, இரண்டு கைகளையும் முஷ்டியாக்குங்கள். இந்த இரண்டு முஷ்டிகளிலும், உங்கள் உடம்பிலும் உள்ளத்திலும் உள்ள அத்தனை பதட்டங்களையும் முஷ்டிகளுக்கு கொண்டு வாருங்கள்."

செல்வா, இரண்டு கைகளையும், மூடிக்கொண்டு, பெருவிரல்கள் மட்டும் நீட்டிக் கொண்டிருக்க, உச்சி முதல் பாதம் வரை உள்ளும்-புறமுமான பதட்டங்களையும், பயங்களையும், நடுக்கங்களையும் அங்கே கொண்டு வந்தான். முஷ்டிகள் வலித்தன. வெளியேறப்போன விரல்களை உள்ளங்கைகளோடு அழுத்தினான். இந்த முஷ்டிகள் தவிர உடம்பில் உள்ள அத்தனை உறுப்புகளும், நாடி நரம்புகளும் லேசானது போன்ற உணர்வு. இரண்டு நிமிடம் ஆனது. சத்தியா, ஒரு தோழனிடம் சொல்வதுபோல் சொன்னாள்.

"இப்போது முஷ்டிகளை விரல்களாக்குங்கள். விரல்களுக்கு இடைவெளி கொடுத்து, உள்ளங்கையோடு சேர்த்து, ரிலாக்ஸ்... ரிலாக்ஸ் மை பாய்... ரிலாக்ஸ்..."

செல்வா, விரல்களை விரித்து, அவற்றையும் உள்ளங் கைகளையும் மென்மையாய் விரிவாக்கி, ஆசுவாசப்படுத்தினான். கைகளில் கட்டிப் போட்டிருந்த ஏதோ ஒரு கல் கீழே விழுந்தது போன்ற உணர்வு.

"எப்படி இருக்கிறது பிரதர்."

"கைகள் பஞ்சு மாதிரி மென்மையாய் இருக்குதும்மா."

"ரொம்ப நல்லதாப் போச்சு. நீங்கள் ஓரினச்சேர்க்கை என்கிற புதை மண்ணிலிருந்து நிச்சயம் விடுதலை ஆவீர்கள். இப்போ அந்த மண்ணிலிருந்து கைகள் வெளிப்பட்டு விட்டன. இனிமேல் முழங்கைகள், மேற் கைகள் ஆகிய நான்கு மையங்கள், நெற்றி, கண், வாய், கழுத்து, மார்பு, வயிறு ஆகிய ஆறு மையங்கள், இரண்டு தொடைகள், இரண்டு முழங்கால்கள், இரண்டு பாதங்கள் ஆகமொத்தம் பதினாறு இடங்களில் உடற்பாரத்தையும், மனப்பாரத்தையும் ஒவ்வொன்றுக்கு இரண்டு நிமிட நேரம் கொடுத்து ஏற்றுங்கள். மூன்று நிமிடம் ஒவ்வொரு உறுப்பையும்

ஆசுவாசப்படுத்துங்கள். இரண்டு மையங்களாக உள்ளங்கைகளில் செய்தாயிற்று. இனிமேல் இதர பதினாறு மையங்களில் பாரத்தை ஒப்படையுங்கள்."

செல்வா, அந்த அம்மா, முன்னர் சொல்லிக் கொடுத்ததுபோல், தனது அத்தனை பாரங்களையும் பதினாறு மையங்களில் ஒற்றையாகவும், ரெட்டையாகவும் ஏற்றி, அவற்றை கனக்க வைத்தான். பிறகு, அந்த பாரங்களை இறக்கி, அவற்றை லகுவாக்கினான். கிட்டத்தட்ட அரைமணி நேரம் ஆயிற்று. சத்தியா, கேட்டாள்.

"இப்போ எப்படி இருக்குதுப்பா?"

"உடல் காற்றில் மிதப்பதுபோல் இருக்கிறது மேடம். மனம் என்ற ஒன்று இல்லாதது போல் தோணுது மேடம்."

"நல்ல அறிகுறி. ஆனால், ஒரு எச்சரிக்கை. கவிதாவோடு, நான் சொல்வது வரைக்கும், பழகவேண்டாம். அப்புறம், வட்டியும் முதலுமாய் பழகலாம்."

"பழகவே முடியாது மேடம்...."

"முடிய வைக்கிறேன். சரி... அடுத்த வாரம் இதேநாள், இதே நேரம் வாங்க... நான் சொல்லிக் கொடுத்த பயிற்சியை, அன்றாடம் செய்யுங்க... நீங்க போய்ட்டு, கவிதாவை வரச்சொல்லுங்க.."

செல்வா, சிறிது மிடுக்கோடு எழுந்தான். அந்த அம்மாவை, தன் அம்மாவைப் பார்ப்பதுபோல் பார்த்தபடியே, வெளியேறினான்.

# 17

டாக்டர். சத்தியா, குறிப்பிட்ட அதே வாரம், அதே நாளில், அதே நேரத்தில், செல்வா, அவளைச் சந்தித்தான். அவள் கேட்கும் முன்பே, 'இப்போ பரவாயில்லை மேடம்....! என்னை நானே வெல்லமுடியும் போலத் தோணுது' என்றான். உடனே அவள், 'அழகாய் பேசுறீங்களே.... அப்புறம், கவிதா எப்படி இருக்காள்...?' என்று போகிற போக்கில் கேட்கிறவள்போல் கேட்டாள்

"பொதுப்படையாய் பேசிக்குவோம் தனித்து சந்திக்கல ஆச்சரியமாய் இருக்கு. அவளும் மாறிட்டாளோ என்னமோ...?"

"உண்மையான பெண், ஒருவனை நினைத்தால், அது குரங்குப் பிடிதான் நான் சொல்வது வரைக்கும், உன்னோட தனித்துப் பழகக்கூடாதுன்னுதான் அந்தப் பெண்ணுகிட்ட சொல்லி இருக்கேன்."

இப்போது, செல்வாவின் பூட்டிய உதடுகளில், ஒரு கீறல். டாக்டர். சத்தியாவும், காரியத்திற்கு வந்தாள். அவனை, அருகே உள்ள கட்டிலில் படுக்கும்படி சைகை செய்தாள் அந்த சைகையை, அவன் செயலாக்கியதும், அவன் அருகே சென்று, நின்றபடியே பேசினாள்.

"இப்போ கால், கைகளை விரித்துப் பரப்புங்கள். உச்சி முதல் பாதம் வரை ரிலாக்ஸ் செய்யுங்கள். நான் சொல்லிக் கொடுத்தபடி உங்கள் கவனம், பாதங்களிலிருந்து உச்சிக்கு ஒவ்வொரு உறுப்பையும் மென்மைப்படுத்தியே வரட்டும். பிறகு, அதே கவனம் பிடரி வழியாய், முதுகுத் தண்டு மூலமாய், கால் பதங்களுக்கு போகட்டும். உடம்பை அப்படியே மிதக்க விடுங்கள். ஆழ்ந்து மூச்சு விடுங்கள். உள்வாங்கும் மூச்சுக்கு ஒரு நிமிடம் என்றால், வெளிவாங்கும் மூச்சுக்கு இரண்டு நிமிடம் ஆகட்டும். ஆழ்ந்து, வயிற்றை விம்மியும், எக்கியும்... ஆமாம்... இப்படித்தான்... இப்படியேதான் மூச்சு விடவேண்டும். இப்போது 'அஞ்சுவதும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை' என்ற இரண்டு வரிகளுக்கு இடையே இருக்கக்கூடிய வட்டத்தை பாருங்கள். அந்த வட்டத்தில் இருக்கும் மையத்தைப் பாருங்கள். அந்த மையத்தை மட்டுமே பாருங்கள்."

செல்வா, அவள் சொன்னபடியே செய்தான். கண்ணுக்கு வந்த வரிகள் மறைந்தன. வட்டமடித்த வட்டம் மறைந்தது மையம் மட்டுமே நின்றது. அதுவும் சிறுகச் சிறுக சென்றது அப்படிச் செல்லச் செல்ல, அவன் இறப்பிற்கும் பிறப்பிற்குமான இடைவெளியாய், தூக்கத்திற்கும் கனவிற்குமான எல்லையாய் கண்களை மூடியபடி, அரை மயக்க நிலையில் கிடந்தான்.

சத்தியாவின் குரல், இசை நிபுணர்போல ஏற்ற இறக்கத்தோடு குழைவாகவும், உறுதியாகவும் தோழியாகவும், தாயாகவும் பல்வேறு விதங்களில் ஒலித்தது.

"இப்போது உன் ஆழ்மனம் விழிக்கிறது. அந்த மனம் என் வசமாகிறது. என் சத்தத்தைத் தவிர, எந்த சத்தமும் உனக்கு கேட்காது. நான் சொல்லுகிறபடி நீ செய்யப்போறே. சரியா?"

"சரிதான்."

"இப்போ உனக்கு வயசு எட்டு. தோட்டத்துக்கு போற... யாரோடு போறே...?"

"எங்க மாமா மகன் குமாரோட போறேன்."

"தோட்டத்துல என்ன செய்றீங்க?"

"பரணுல ஏறி காக்கா குருவிகளை கல் கட்டுன கயிற்றுக் கம்பை சுழற்றி சுழற்றி துரத்துறோம்."

"அப்புறம்?"

"அம்மா அப்பா விளையாட்டு விளையாடினோம்."

"அப்படின்னா?"

"கொஞ்ச நேரம் அவன் கீழே படுப்பான். நான் மேல படுப்பேன். அப்புறம், நான் கீழே படுப்பேன், அவன் மேலே படுப்பான்."

"அப்புறம்?"

"அவனுக்கு குழந்தை பிறக்கிறது மாதிரி ஒரு பொம்மையை எடுத்து ரெண்டு பேருக்கும் மத்தியில போட்டுக்கிறோம். அதைத் தாலாட்டுறோம். கொஞ்சுறோம்... குலாவுறோம்..."

"இந்த மாதிரி, அப்பா-அம்மா விளையாட்டுக்கள நீங்க மட்டும்தான் செய்வீங்களா? இல்ல எல்லாரும் செய்வாங்களா?"

"மத்த பசங்க எங்களைவிட மோசம். ஆடு, மாடுன்னு அதுங்க மேல ஏறி, அட்டூழியம் பண்ணுவாங்க."

"அப்போ நீ அவங்களைவிட மேலு... சரியா?"

"சரிதான்."

"எல்லாக் குழந்தைகளும் ஏதோ ஒரு வகையில் செய்கிற, இந்த மாதிரி காரியம், சிறுபிள்ளை விளையாட்டு. இதை பெரிசா எடுத்துக்க கூடாது. எடுத்துக்குவியா?"

"மாட்டேன்."

டாக்டர் சத்தியா, சிறிது இடைவெளி கொடுத்தாள். அவனையே உற்றுப் பார்த்தாள். மீண்டும் ஆணைக்குரலில் பேசினாள்.

"இப்போ உனக்கு பதினெட்டு வயசு. உங்கப்பா சீட்டு போட்டு நொடித்திட்டார். ஆனாலும், நிலம், புலனை விற்று சீட்டுப் பணத்தை கொடுத்திட்டு என்ன செய்யுறார்?"

"ஒரு பெட்டிக் கடைக்குள் சிறைபட்டு கிடக்கார்"

"நீ என்ன செய்யுறாய்?"

"அழுகிறேன்."

"எப்படி அழுதே?"

செல்வா, அழுது காட்டினான். தலையில் அடித்துக் காட்டினான். முகத்தை மோதிக் காட்டினான். "எப்பா.. எப்பா..." என்ற ஒற்றைச் சொல்லால் புலம்புகிறான்; ஆர்ப்பரிக்கிறான்.

"சரி அழுகையை நிறுத்து நீ சிறுமைப்படவேண்டியவன் இல்லை. உங்கப்பாவை பார்த்து பெருமைப்பட வேண்டியவன். இந்த சென்னையில் சிட் பண்ட் நடத்தியவர்கள், தங்கள் பணங்களை வேண்டியவர்களுக்கு மட்டும் கொடுத்துவிட்டு, திவாலாகி விட்டதாக நாடகம் போடுகிறார்கள். கோடி கோடியாக சம்பாதித்த ஹர்ஷத் மேத்தா இன்னும் கம்பீரமாய் திரியுறான். ஆனால், சொத்தையும், நகையையும் விற்று அத்தனை பணத்தையும் அடைத்த நவீன அரிச்சந்திரன் உங்கப்பா. இதுக்கு நீ பெருமைப்படணுமா? சிறுமைப்படணுமா?"

"பெருமைப்படணும்."

"நல்லது. அப்படித்தான் எடுத்துக்கணும் இப்போ உனக்கு பத்தொன்பது வயது. சென்னையில் இருக்கே. பக்கத்து வீட்டு கவிதாவை எப்படி பிடித்தே?"

"நான் பிடிக்கல... அவள்தான் பிடித்தாள்."

"சரி யார் பிடித்தீர்கள் என்பது முக்கியமில்ல. கவிதா நல்லவளா? கெட்டவளா?"

"ஆக மொத்தத்தில் நல்லவள்."

"அது என்ன ஆக மொத்தம்?"

"டூப்ளிகேட் அம்மாவ பற்றி சொல்லல"

"கவிதா, ஓடிப்போன தன் அம்மாவைவிட இந்த அம்மாவை உசத்தியாய் நினைத்திருக்கலாம் இல்லியா? பெற்று போட்ட கடமைய முடிக்கும் முன்னால, ஓடிப்போனவளவிட, வலிய வந்து இவளுக்கு தானே அம்மாவான ஒருத்தி மேலானவள்தானே...?"

"ஆமாம்... ஆமாம்..."

"கணவன் மனைவியாய் இருந்தால்கூட, ஒவ்வொருவருக்கும் ஒரு அந்தரங்கம் இருக்கலாம். 'தாயாய் பிள்ளையாய் இருந்தாலும், வாயும் வயிறும் வேறதானே?' சொந்த அம்மாவாய் ஒன்றிப்போன ஒரு பெண்ணைப் பற்றி உன்னிடம் மாற்றிப் பேச, அவளுக்கு மனம்

இல்லாமல் இருந்திக்கலாம். இதனால் மறைத்திருக்கலாம். இப்படி மறைப்பதற்கு அவளுக்கு உரிமை உண்டா இல்லையா?"

"உண்டு. ஆனால், மோகனன்கிட்ட என்னை கூட்டிக் கொடுத்தாள். வீடு திறந்திருந்தால் வரச்சொல்லிவிட்டு, டூர் போயிட்டாள்."

"அவள் அண்ணன், வீட்டுக்கு வருவதை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள். பூட்டிய கதவை அவன் திறந்தது அவளுக்கு தெரியாது. இது அவள் வேண்டுமென்றே செய்த காரியமா?"

"இல்லை... இல்லை..."

"நான் சொல்வது மாதிரிச் சொல். கவிதா வேண்டுமென்றே செய்யவில்லை."

"கவிதா வேண்டுமென்றே செய்யவில்லை."

"அப்போ அவளை வெறுக்கலாமா?"

"கூடாது.. கூடாது... கூடவே கூடாது."

"சரி... இப்போ உன்னை மோகனன், உன் அறைக்கு கூட்டிட்டு போகிறான். என்ன செய்யுறான்?"

"நான் கவிதாவுக்கு எழுதிய லெட்டர்ரை காட்டி மிரட்டுனான். நான் நடுநடுங்கி போறேன். என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருக்க ஒரு உதவி கேட்கிறான். நான் வாயைத் திறக்கிறேன்."

"அப்புறம்... அந்த வெள்ளைக்காரனோட உறவாடும்போது?"

"முதலில் கஷ்டமாய் இருந்தது. அப்புறம் நான் இயங்கும்போது ஒரு சுகம் கிடைத்தது."

"அப்புறம் மோகனனோடு டீலக்ஸ் நிரோத்தோட ஈடுபடும்போது?"

"ஒரு தனி வாசனை; தனிச் சுகம். என்னையும் மதித்து அவன், செண்பக வாசனை டீலக்ஸை கொடுத்தான். நான் அவனானேன். அவன் நானானான்."

"உனக்கு இப்போ யாரை அதிகமாய் பிடிச்சிருக்கு?"

"மோகனனை."

"ஓ.கே. அவனோட அந்த உறுப்பு புண்ணாகி, சீழ்பிடித்து, நாற்றம் அடித்து, புண் புண்ணாய் இருக்கிறதாய் கற்பனை செய்து பார் செய்துட்டியா?"

"செய்துட்டேன். அய்யோ! சகிக்கல."

"இப்போ புழு அரிக்கும் உறுப்பை கொண்ட அவனை, நீ காலால் உதைத்து, மல்லாக்க கிடத்துறே. கிடத்துறியா?"

செல்வாவின் கால்கள், கட்டில் சட்டங்களை உதைக்கின்றன. கைகள் அங்குமிங்குமாய் ஆகாயத்தில் குத்து விடுகின்றன. லட்சுமி, இதமாகக் கேட்கிறாள்.

"இப்போ இப்படி சீழ் பிடித்து 'கண்டதே காட்சி, கொண்டதே கோலமாகி' உன்னைக் கெடுத்த அந்த மோகனனுக்கும், நீ உதைத்தியே அந்த தாமோதரன் கிழவனுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்குதா?"

"இல்ல... இல்லவே இல்ல... அவன் பொறுக்கி... இவன் புறம்போக்கு."

"மீண்டும் பெயர் சொல்லி திட்டு."

"தாமோதரன் கிழவன் பொறுக்கி. மோகனப் பயல் புறம்போக்கு."

"மோகனனை இன்னும் நல்லாத்திட்டு."

"அயோக்கியப் பயலே... திருட்டுப் பயலே... பொறுக்கி நாயே... புண் பிடிச்ச பிசாசே... சீழ்வடியும் சிறங்கா"

"சரி... இப்போ நான் பத்து எண்ணுவதற்குள் நீ எழுந்து விடுவாய். நான் சொன்னது எதுவும் உன் உள் மனதில் பதியுமே தவிர, வெளி மனதிற்கு வராது. சரி. ஒன்று... இரண்டு.... மூன்று..."

செல்வா, மெல்ல எழுந்தான். அங்குமிங்குமாய் கண்களை சுழற்றினான். சத்தியா, அந்த பெயருக்குரிய பொருள்போல், அமைதியாய்ச் சிரித்தாள். பிறகு ஒரு கேள்வி கேட்டாள்.

"இப்போ எப்படி இருக்குது தம்பி?"

"உடம்பு முழுக்க ஏதோ ஒரு சுகம். ஆகாயத்தில் பறக்கிறது மாதிரியான லகு. நடந்ததை நினைக்க மறுக்கும் மனம். நல்லதை மட்டுமே நாடும் இதயம். நான் கவிஞனாயிட்டேன் இல்லியா மேடம்?

"நீ கவிஞனேதான். கவிதாவைப் பற்றி மட்டும் கவிதை எழுதாதே. சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றியும் எழுது. உன் பெயரை வெளியிடாமல் ஓரினச் சேர்க்கையால் ஏற்படும் கேடுகளைப் பற்றி கட்டுரை எழுதி எனக்குக் கொடு. நான் அதை

ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, ஏதாவது ஒரு நல்ல பத்திரிகையில வெளியிடுறேன். சரி. வெளியில உனக்காக உன் சித்தப்பா குடும்பமும், கவிதாவும் கண்ணீரும் கம்பலையுமா நிற்கிறாங்க. உனக்கு சுகமாயிட்டுதுன்னு சொல்லு."

"அப்பா நான் இனிமே வரவேண்டியதில்லியா மேடம்?"

"மனம் என்பது ஒரு மாயப் பிசாசு. என் முன்னால் உன் மனம் ஆரோக்கிய வேடம் போடும். ஆனால், சில சமயம் அது அற்ப ஆயுளில் முடிந்து, மீண்டும் அதே மனம் பேயாட்டம் போடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்துல, நீ வேறு, மனம் வேறுன்னு நினைத்துக்கோ. இது ஒரு செஷன்ல முடியுற மெஸ்மரிசம் ட்ரீட்மெண்ட் இல்ல. குறைஞ்சது ஐந்தாறு தடவையாவது நீ வரவேண்டியதிருக்கும். ஏன் மூஞ்சை தூக்குறே? நல்லவேளை உன்னுடைய அனுபவம் ஒரு வாரம் என்கிறதுனால தேறிடுவே. பார்க்குல பார்த்தியே அந்தப் பையன். அவன் வயசுல துவங்கி இருந்தா உன்னை திருத்தியிருக்கவே முடியாது. அப்புறம், எய்ட்ஸோடதான் திரிய வேண்டியதிருக்கும். "நல்லவேள ஒன் ரத்தத்த டெஸ்ட் பண்ணியதில் உனக்கு அது இல்ல. இனிமேலும், இதையே தொழிலா வச்சா நீ உருப்பட மாட்டேன்னு புரியுதா?"

"புரியுது, மேடம். இப்போ அதுமேல அதிகமாய் ஆசையில்ல. திருந்திடுவேனா மேடம்?"

"திருந்திட்டே... திருந்திட்டே... சில திருத்தங்கள்தான் செய்யணும். சரி... உனக்கும் வேலை இருக்கும். எனக்கும், ஆட்கள் காத்திருக்காங்க... அப்புறம்..."

செல்வா, சத்தியாவின், பேச்சு இழுப்பை ஊன்றுகோலாய் ஆக்கியதுபோல் எழுந்து, வெளியேறினான். பிறகு, திரும்பிவந்து, ஒரு கேள்வி கேட்டான்.

"கவிதாவோட பழகலாமா மேடம்...?"

"லேசு... லேசாய்..."

# 18

அத்தனை பேரும் மாமூல் நிலைக்கு திரும்பி விட்டார்கள். செல்வாவை சித்திக்காரி அதிகமாக திட்டுவதில்லை. அவனும், அவள் மௌனத்தைத்தான் தவறாக எடுத்துக் கொண்டான். சித்தப்பாவுக்கும், சித்திக்கும் ஏற்படும் 'சில்லறை தகராறுகள்' வரும்போது, எந்த் பயமும் இன்றி, சித்திக்கே வக்காலத்து வாங்கினான். இதில் சித்தப்பாவுக்கு உள்ளூர பெருமைதான். குழந்தைகள் மீண்டும் செல்வாவுடன் ஒட்டிக் கொண்டன. வேன், ஸ்கூட்டர் ஆனது. கவிதா-செல்வா காதல், அந்த தெருவாசிகளுக்கு மட்டுமல்லாமல், அடுத்தடுத்த தெருக்களுக்கும் தெரிந்துவிட்டது. கவிதா, செல்வா வீட்டிற்கு போவதும், செல்வா, கவிதா வீட்டிற்கும் போவதும் வழக்கமாகி விட்டது. ஏற்கெனவே தனது தவறால்தான் மகன் மோகனன் கெட்டழிந்தான் என்ற குற்ற உணர்விலும், கூடவே தன்னோடு சேர்ந்தவளை கவிதா, அம்மா மயமாக்கியதாலும், மூத்த அதிகாரியான, கவிதாவின் தந்தை, லஞ்சம் வாங்குவதை நிறுத்த வில்லையானாலும், அதை குறைத்துக் கொண்டார். அவருள்ளும் ஒரு மாறுதல். கவிதா, மோகனைப்போல் லெஸ்பியன் ஆகாமல், இருப்பதற்கு நல்ல பையனான செல்வாவின் காதலை ஒரு மருந்தாக எடுத்துக் கொண்டார். ஆனாலும், ஒருநாள்...

செல்வா, முகத்தில் ஈயாடவில்லை. மோகனன், அவனுக்கு தனது பம்பாய் ஹோமோ வாழ்க்கை பற்றி விலாவாரியாய் குறிப்பிட்டுவிட்டு, தங்கை எப்படி இருக்கிறாள் என்பதை அறிய துடிப்பதாக அவனது கல்லூரி முகவரிக்கு ஒரு கடிதம் எழுதினான். இதனால் பழைய நினைவுகள், விசுவரூபம் எடுத்தன. இந்த கடிதத்தை கவிதாவிடம் காட்டியபோது, அண்ணன் முகவரி கிடைத்ததும், மகிழ்ந்து போனாள். ஆனாலும், செல்வா சோர்ந்து போனான். அந்த சோர்வை மறைக்கக்கூடிய அளவிற்கு அவனுக்கு திட சித்தமும் இருந்தது. ஆனாலும், அந்தக் கடிதம் ஒரு கலக்கு கலக்கிவிட்டது. கவிதாவோடு பேசும்போது, அவள் காதலனாகவே இருக்கிறவன், இரவு நேரத்தில் மட்டும், மோகனனுக்கு காதலனாகவும், காதலியாகவும் ஆகிப்போனான். மீண்டும் குடும்பத்திலும், கவிதாவுக்கும் குழப்பம் வருமோ என்று பயந்தான். வெளிப்படையான பயம் அல்ல. உள்ளூரத் தோன்றிய பயம். மறைக்கக்கூடிய பயம்.

ஆனாலும், அந்தப் பயத்தை அடியோடு ஒழிப்பதற்காக, மீண்டும், டாக்டர் சத்தியாவிடம் முன்னதாக தகவல் சொல்லிவிட்டு சென்றான். அவன் வரவை எதிர்பார்த்ததுபோல், அந்தம்மா,

"வா தம்பி.. வா." என்றாள் உடனே, செல்வா, மோகனன் எழுதிய கடிதத்தையும், அதில் தனது நடவடிக்கைகள் குறித்து, எழுதியதையும், குறிப்பிட்டான். இப்போது அவன், "ஹோமோ பத்திரிகை ஆசிரியனாம் அவன் கடிதம் வந்ததிலிருந்து, எனக்கு என்னவோ போலிருக்கிறது. எல்லாம் தீர்ந்துவிட்டதாக நினைத்த போது, இப்படி சின்ன அளவில் வருகிற தடுமாற்றம், பெரிய அளவில் வந்துவிடக்கூடாதே என்று பயமாக இருக்குது பரீட்சை வேற நெருங்கிடுது" என்றான்.

"உங்களுக்கும் ஹோமோ மூடு இருந்திருக்கு செல்வா. பறவை பறந்து போனாலும், அது இருந்த மரத்தின் கொப்பு ஆடுவது மாதிரி உங்கள் மனம் ஆடுகிறது."

"நோ... நோ... மேடம்."

"அதை நான் சொல்லணும். ஆனாலும், உங்கள் ஆண்பால் சேர்க்கை சிறிது வித்தியாசமானது. ஒரு ஆணைப் பெண்ணாகப் பாவித்து பாலியலில் ஈடுபடும் போக்கு."

"அப்படில்லாம்..."

"இருக்குது. இனிமேல் இருக்காமல் செய்து விடுகிறேன். நாளமில்லா சுரப்பிகளைப் பற்றி படித்திருப்பீங்க. இது ஒவ்வொருவருக்கும் பன்னிரண்டாவது வயதில், ஆண் தன்மை, பெண் தன்மைக்குரிய ஹார்மோன்களை சுரந்து, ரத்தத்தில் கலக்கிறது. அப்போதுதான் அந்தரங்க உறுப்புகளில் முடி முளைக்கிறது. மகரக்கட்டு எனப்படும் குரல் மாற்றம் ஏற்படுகிறது. பதினோரு சிறுவனோட அல்லது சிறுமியோட முதுகெலும்பைத் தடவினால், அவன் அல்லது அவள் மரக்கட்டை மாதிரி இருப்பார்கள். ஆனால், பன்னிரண்டு வயதில், அதே முதுகெலும்பைத் தொட்டால், அவர்கள் சிலிர்த்துப் போவார்கள்."

"இந்தப் பருவம்தான் ஆணையும் பெண்ணையும் தனித்தனியாய் பிரிக்கும் பருவம். ஆண்களுக்குக்கூட இந்த வயதில் மார்பகம் நெல்லிக்காய் அளவுக்கு பெருக்கும். காரணம், முழுமையான ஆண், முழுமையான பெண் என்று யாரும் கிடையாது. இரண்டு தன்மைகளில் எது மேலோ[illegible]குகிறதோ அது, [illegible]ாலியலையும் அதன் உறுப்பையும் தீர்மா[illegible]து. உங்களுக்கு சிறுமிக்குரிய ஹார்மோன் சிறிது கூடு[illegible] இருக்[illegible]ம் நமது உடம்பில், கோடிக்கணக்கான செல்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஜீன் உள்ளது.. உங்களுடைய ஜீனை வைத்து, உங்கள் முப்பட்டானின் ஜீனின் எண்ணிக்கையையும், இயல்பையும் கண்டு பிடித்து விடலாம். இப்போது, இந்த சுரபிகளை கட்டுப்படுத்துவது இந்த

ஜீன்கள் என்று தெரிய வந்திருக்கிறது. ஆகையால், ஓரினச் சேர்க்கையும் ஒரு வகையில் மரபு வழிப் பிரச்சினை."

"அப்படின்னா... இந்த பிரச்சினையை தீர்க்கவே முடியாதோ?"

"முடியும். ஜீன் மட்டுமே ஒருவரது கேரக்டரை தீர்மானிப்பதில்லை. சுற்றுப்புறச் சூழல், சமூக அமைப்பு, இளமைக்கால அனுபவங்கள், சேரிடம், சேராயிடம் என்று பல காரணிகள் உள்ளன. ஒரே குடும்பத்தில் படிக்காதவர் நடைமுறை வேறு. படித்தவர் நடைமுறை வேறு. இல்லையா? ஆகையால், உடல் ஜீன்களோடு, நம் உடம்பிலுள்ள கோடிக்கணக்கான செல்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஜீன்கள், சமூகச் சூழலையும், புதிய அனுபவங்களையும், பதிவு செய்கின்றன. இது உங்களுக்கு மட்டும் உள்ள பிரச்சினை அல்ல. மனம் அந்த பிரச்சினையை கிளப்பும் போது, 'நீ பாட்டுக்கு, எதை வேணுமென்றாலும் நினை. எனக்கு அதற்கும் சம்பந்தமில்லை' என்ற அணுகுமுறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்."

"என்னை மாதிரி நிறைய பேர் இப்படி இருக்காங்களே மேடம்."

"அப்படி இருப்பதா பேர் பண்ணிக்கிறாங்க. இந்த "பயர்" படம் வந்ததும் வந்தது, சமூகத்துல லெஸ்பியன் பெண்கள் அதிகமாக இருக்கிறது போலவும், மாமூல் பெண்கள் குறைவாய் இருப்பது போலவும் ஒரு மாயை ஏற்படுத்திவிட்டது. இயற்கை ஒரு பிரபஞ்ச இன்டர்நெட் மாதிரி. அதில் எல்லா நிகழ்வுகளும் உள்ளடங்கி உள்ளன. ஒரு ஆல விதை, எப்போது செடியாகி, மரமாகி, விழுதாகி. பல்கிப் பரவவேண்டும் என்பது, அந்த விதையிலேயே கணிப்பொறி திட்டங்களாய் உள்ளன இந்த திட்ட நிகழ்வுகள் நிறைவு பெறுவதற்கு, அந்த விதையை விதைப்பதும், விதைத்ததை சுற்றி முள்வேலியைப் போடுவதும், உரமிடுவதும், காடுகளில் தானாகவும், நாடுகளில் நம்மாலும் நடைபெறுகிறது. இந்த பராமரிப்பு தவறும்போது, இந்த நிகழ்வுகளுக்குள் தடுமாற்றம் ஏற்படுகிறது. இதேபோல், ஒரு குழந்தைக்குள் இருக்கும், மனிதனை அல்லது மனுஷியை - முழுமையாக வெளிக்கொணர, குடும்பத்தளமும், சமூகத்தளமும் ஒத்து வராதபோது, அந்தக் குழந்தை, பாலியல் திரிபு போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபடும் மனிதனாகிறது. இவனுக்கு அல்லது இவளுக்கு பாலியல் மீறல், பழக்கமாகிறது.

"மனிதனும் சமூகமும் இயற்கையின் விதிகளை மீறும்போது, இயற்கை ஒரு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் போல் பிரம்படி கொடுக்கிறது. 'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்பதுபோல், அதே இயற்கை மருந்துகளையும், வழிமுறைகளையும் காட்டுகிறது. காடுகளில் சாதுவான மிருகங்கள் அதிகமாகவும், கொடிய மிருகங்கள் குறைவாகவும் இருப்பது, இயற்கையின் சமச்சீர்

நிலையை பிரதிபலிப்பது. பொதுவாக, அயல் மகரந்த சேர்க்கைதான் தாவரங்களில் ஏற்படுகிறது. ஆனால், வேர்க்கடலையில் அயல் சேர்க்கை ஏற்படாதபடி, அது மொட்டாக கிடக்கிறது சில ஓரினச் சேர்க்கைக்காரர்கள் பெண்களோடும், பாலியல் உறவை வைத்துக் கொள்வதைப்போல், பூவரசு மரத்தில், அயல் மகரந்தச் சேர்க்கையும், சுய மகரந்தச் சேர்க்கையும் நடைபெறுகிறது. இது இயற்கை தனது சமச்சீர் நிலையை பாதிக்காமல் இருப்பதற்கு, ஏற்படுத்திய விதிவிலக்குகளாக இருக்கலாம்."

"நான் எப்படி முழுமையான ஆணாக மாறுவது மேடம்?"

"நீங்கள் மாறி விட்டீர்கள். எஞ்சி இருக்கிற பத்து சதவீதம், எல்லோரிடமும் உண்டு. இது இருப்பதால் ஆபத்தில்லை. ஆனால், அது உங்களுடைய பழைய அனுபவங்களை கிளறுவதால் தடுத்தாக வேண்டும். இதற்காக நான் உங்களுக்கு 'ஸாக்தெராபி' கொடுக்கப்போறேன்."

"அப்படின்னா மேடம்."

"முதலில் கட்டிலில் போய்ப்படுங்கள்"

கட்டிலில் செல்வா, மல்லாக்க கிடந்தான். டாக்டர் அல்லது முனைவர் சத்தியா, ஸ்டெதாஸ்கோப் மாதிரி ஒரு கருவியை கையில் எடுத்தாள். அதன் முனையிலிருந்த கறுப்புப் பட்டையை செல்வாவின் கையில் சுற்றிக் கட்டினாள். பட்டைக்குள் இருந்து வெளிப்பட்ட இரண்டு ஒயர்களில் ஒன்றை பிளக்கில் செருகினாள். இன்னொன்று இவள் கைக்குள் வட்ட உருளைக்குள், ஊடுருவி இருந்தது.

செல்வாவை முன்புபோல், அரை மயக்க நிலைக்கு செலுத்தியதும், சத்தியா, கேள்வி மேல் கேள்வியாக கேட்டாள். ஒவ்வொரு கேள்விக்கும், அவன் பதிலளிக்கும்போது, அந்த உருளையை இயக்கி சூடு போடுவார்களே, அதுபோல, அவன் உடம்பில் பட்டை வழியாக மின் அதிர்ச்சியை கொடுத்தாள். எந்த நினைவும் இப்படிப்பட்ட அதிர்ச்சியோடு இணைக்கப்படும்போது, அந்த நினைவு வேரறற்றுப் போகிறது.

"செல்வா! இப்போ மோகனன் உன் முன் தோன்றுகிறான். அவன் எதனால் உனக்கு பிடித்தவனாகிறான்"

"அவனின் கிறக்கமாக பார்வை. ஒற்றைக் கண்ணை மேலேற்றி, இன்னொரு கண்ணை தாழ்த்தி பார்க்கும் மோகனப் பார்வை... எம்மா... எப்படி வலிக்குது..."

"லேசான வலிதான். அப்புறம் செல்வா! அவனிடம் உங்களுக்கு பிடித்தமானது என்னது?"

"அவனது நடனம் ஊழிக்கூத்து மாதிரியான வேக வேகமான இயக்கம். அத்தனை கர்ணங்களையும் அடித்துக் காட்டுவானாம் எப்பாடி.. தோளுல வலிக்குதே."

"வலி போயிடும் அவனைப் பார்த்தால் நீ எப்படி ஆகிறாய்?"

"அர்த்த நாரீஸ்வரனாய். அவன் எந்த முறைக்கும் சம்மதிப்பான்."

இன்னொரு மின்குத்து. இன்னொரு 'எம்மா'

"செல்வா, வாய்விட்டுச் சொல்லு! மோகனனே! 'உன்னை மறக்க முடியலியே.. மறக்க முடியலியே..' இப்படி பல தடவை சொல்லுப் பார்க்கலாம்."

செல்வா, பல தடவை சொன்னான். ஒவ்வொரு தடவையும், மென்மைக்கும் வன்மைக்கும் இடையேயான மின் அதிர்ச்சியில், அவன் கரங்கள், காலோடு சேர்த்து குலுங்கின.

"இன்னொரு தடவைச் சொல்லு.... மோகனனை மறக்க முடியலியே... மனசுக்குள்ளே சொல்லு..."

"சொல்லமாட்டேன் வலிக்குது... வலிக்குது."

டாக்டர். சத்தியா, செல்வாவை வழக்கப்படி எழுப்பிவிட்டாள். அவன் தூக்கத்தையும் துக்கத்தையும் கலைத்தவன்போல் எழுந்து, அவளை புன்முறுவலாய் பார்த்தான். சத்தியா, இறுதியாகச் சொல்வதுபோல் சொன்னாள்.

"இனிமேல் உனக்கு பிரச்சினை வராது. கவிதாவை, அவள் அண்ணனுக்கு கடிதம் எழுதச் சொல். ஓரினச் சேர்க்கைப் பற்றி ஒரு வரிகூட வரக்கூடாது என்று கண்டிப்புடன் எழுதச் சொல். இனிமேல் எந்தக் கடிதம் வந்தாலும், அவள் மூலம்தான் உனக்கு வரவேண்டும் என்றும் அவளை எழுதச் சொல். அந்தக் கண்டிப்பில் அன்பு கனியவேண்டும். பாசம் பொங்க வேண்டும். காரணம், அவனும் சந்தர்ப்ப சூழ்நிலையால் அப்படி ஆனவன்தான்."

"அவனுக்கும் நீங்க சிகிச்சை.."

"அது முற்றின கேஸ் என்னால மட்டுமில்லாமல், யாராலும் முடியாது. அவனாய் நினைத்தால்தான் உண்டு."

"ஒரே ஒரு கேள்வி டாக்டர்! அய்யப்பன் அப்படி பிறக்கலியா? ஆறுமுகம் இப்படி பிறக்கலியா? பிரம்மா என்கிற ஆண், பிள்ளைகளை பெறலியா? விஷ்ணு என்கிற ஆண் வடிவம் பிரம்மாவை பெற்றெடுக்கவில்லையா? இப்படில்லாம் அந்த பசங்க கேட்கிறாங்க. அதுக்கு நாம என்ன பதில் சொல்றது?"

"சாமர்த்தியசாலி நீ. அவங்க கேட்கிறாங்களோ இல்லையோ, நீ கேட்கிறே. மதங்கள் கடவுளுக்கு எதிரி புராணங்கள் மதங்களுக்கு வைரி. அர்ச்சகர்கள் இந்த மூன்றுக்கும் எதிரி. ஆனாலும், இந்த அய்யப்பன் விவகாரத்தில் ஒரு உள் அர்த்தமும் இருக்கிறது. பரந்தும் விரிந்தும் அண்டங்கோடிகளான நட்சத்திரங்களாய் ஆகி, அவையே ஒரு அணுவாக மாறி, நாடகம் நடத்தும் பிரும்மம் என்பது ஒன்றுதான். அது, ஆணும் இல்லை; பெண்ணும் இல்லை; அலியும் இல்லை. அந்த பெரிய ஒன்று, தன்னையே சின்னச் சின்ன ஒன்றுகளாக பெற்றெடுக்கிறது. பிறகு, இந்த சின்ன ஒன்றுகளை ஆண், பெண்ணாக பிரித்து இறப்பாலும் பிறப்பாலும் ஒழுங்குபடுத்துகிறது. பிரும்மத்தின் சிருஷ்டி வினோதம்தான் அய்யப்பன் என்று எடுத்துக்கொள்ளலாம். கொச்சைப்பட்டவர்கள் தான், அதைக் கொச்சைப்படுத்துவார்கள். எப்படியானாலும் அது புராணம். பொய்களிலே பெரிய பொய் புராணப் பொய்."

செல்வா, அவளை மலைப்போடு பார்த்துவிட்டு, ஒரு கேள்வி கேட்டான்.

"பொதுவாய் சைக்காட்ரிஸ்ட், சைக்காலஜிஸ்ட் என்கிறவங்க பாதிக் கிராக்காத்தான் இருக்கிறாங்க. நீங்க... விதிவிலக்காய் இருக்கீங்களே."

"நீங்க சொல்கிறவர்கள், தங்கள் உணர்வுகளை தாங்களே பரீட்சித்து பார்ப்பதால், ஏற்படுகிற கோளாறு அது. அதோட மனநோய் என்பது, யாருக்கு வேண்டுமென்றாலும் வரலாம். என்னைப் பொறுத்த அளவில், நான் அரவிந்தர் ஆசிரமத்தில் தியானப் பயிற்சி பெற்றவள். பிரபஞ்சத்தை ஆராதிக்கும் வள்ளலாரின் அகவலை தினமும் படிப்பவள்."

டாக்டர். சத்தியா, அவனது கேள்வி ஞானத் துடிப்பால் தொடர்ந்தாள்.

"உறுதியான உடம்பில் உறுதியான மனம் இருக்க முடியும். உறுதியான உடலுக்கு யோகாசனம், உடற்பயிற்சி போன்றவைகளை செய்ய வேண்டும். மயிலாப்பூரில், தேசிகாச்சாரியார் என்ற ஒரு பெரியவர் இருக்கிறார். அவர் கைநாடி பார்த்தே, ஒவ்வொருவர் உடல் வாகுக்கு ஏற்றபடி, சில யோகாசனப் பயிற்சிகளை சொல்லிக் கொடுப்பார். அங்கேயும் நான் பயிற்சியாளராக இருந்திருக்கிறேன். உடலை கழுவுவதுபோல் மனதையும் கழுவ வேண்டும். ஒரு விளக்கின் தீபத்தை பார்த்தல், அது நம் உறுப்புக்கள் ஒவ்வொன்றிலும் பொங்கி ஒளியிடுவதாய் கற்பித்தல் போன்ற பயிற்சிகளை செய்யலாம். அல்லது குறைந்தபட்சம் வாக்கிங்காவது

போக வேண்டும். முக்கால் மணிநேரம் வேர்வையே குளியலாகும் வகையில் நடக்க வேண்டும். இனிமேல் எந்த பிரச்சினையும் வராது. அப்படி வந்தால், நீங்களும் எப்போது வேண்டுமானாலும் என்னிடம் வரலாம். ஓகே..."

டாக்டர். சத்தியா, இருக்கையை விட்டு எழுந்ததால், அட்டை மாதிரி ஒட்டிக் கிடந்த செல்வா எழுந்தான். எழுந்தபடியே நடந்தான்.

# 19

கடந்த ஒருமாத காலமாக புதை மண்ணாய் தெரிந்த கடல்மண், அவர்கள் இருவருக்கும் மாலை மஞ்சள் வெயிலில் ஒளி சிந்தும் மரகதத் துகள்களாக தெரிந்தன. கடல் வெள்ளை வெள்ளையான அலைப் பற்களைக் காட்டிக் காட்டி சிரித்தது. முன் எச்சரிக்கையாக வெளிச்சம் பொங்கும் இடத்திலேயே அமர்ந்தார்கள். கைகளை மட்டும் பிடித்துக்கொண்டார்கள்.

கடற்கரையில் சந்திக்கக்கூடாது என்று, இருவருக்கும் குடும்பத்தினர் விதித்த கட்டளைக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு, மாதம் ஒரு தடவை சந்திப்பது என்று இவர்களாகவே முடிவெடுத்துக் கொண்டார்கள். மற்ற நாட்களில், இவன் சித்தப்பா, சித்தி அங்கே போவதும், அவள் அம்மா, அம்மா இவர்கள் வீட்டுக்கு வருவதும் வழக்கமாகி விட்டது. இருவரும் எதிர்காலத் தம்பதியினர் என்ற எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று, இரண்டு குடும்பத்துக்கும் இடையே உறுதியாகி விட்டது.

"கவிதா, நான் ஒரு கவிதை எழுதி வந்திருக்கிறேன். படித்துக் காட்டட்டுமா?"

"அய்யய்யோ இந்த கவிதையால வந்த வினையே போதும்பா. நீங்க படிச்சது போதும்... கிழிந்து எறிங்க. அதோட எனக்கு இந்த கவிஞர்களோட கற்பனையே பிடிக்காது. பூ காதலியாம், வண்டு காதலனாம். இது அபத்தமான கற்பனை. மலருக்கும் மலருக்கும் மகரந்த உறவை ஏற்படுத்தும் வண்டுகள் வெறும் புரோக்கர்கள்தான். காதலன்கள் அல்ல."

"அல்லவோ... இல்லவோ... இது வேற மாதிரியான கவிதை கவிதா... உன்ன மாதிரி வித்தியாசமான கவிதை."

"ஏற்கெனவே கடல் காற்றுல குளிர் அடிக்குது. இந்த கவியரங்களில் சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்வான் பாருங்க... கத்துக்குட்டி கவிஞன் அதுமாதிரி பினாத்தாமல் ஒழுங்கா படிங்க. ஒருவரியை, ஒரு தடவை படித்தால் போதும்."

செல்வா, கவியரங்கத்தில் படிக்கப் போவதுபோல் குரலை உயர்த்தினான். பிறகு, கவிதா பார்த்த பார்வையில், குரலை இறக்கி அவளுக்காக மட்டுமே படித்தான்

"பாலினம் என்பது ஈரினம் – அதில்
ஓரினம் என்பது பாலின ஊனம்.

கல்லை கவியாக்கும் சிற்பி
கல்லிலும் ஆண் பெண் ஆய்கிறான்.

மருந்தை உருவாக்கும் வைத்தியன்,
மருந்திலும் ஆண் பெண் காண்கிறான்.

ஏறும் கலப்பையும் யாத்திடும் தச்சன்,
மரத்திலும் ஆண் பெண் பார்க்கிறான்.

மகரந்தம் சிந்தும் செடிகளை, கொடிகளை
ஆணா பெண்ணா என்று ஆய்பவை வண்டுகள்.

வண்டுகள் கொண்ட குணம்கூட இந்த
மண்டு மனிதனுக்கு இல்லை.

இயற்கைச் சிற்பி, படைத்த உடம்பு
இனிஷியல் இல்லாமல் அழியலாமா?

பிறப்பிற்காய் ஆன இருபாலும்
ஒருபாலாய் திரிந்தால் இருபால் எதற்கு?"

நீண்ட நெடிய கவிதை எழுதி வைத்திருந்த செல்வா, அவள் கோபத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, தனக்கு பிடித்த வரிகளை மட்டும் பாடினான். முதல் இரண்டு வரிகளை பல்லவியோ... அனுபல்லவியோ... அதை ஒவ்வொரு பத்தியை படித்து முடித்ததும், திருப்பி வாசிக்கப் போனவன், அதையும் அவளுக்காக விட்டுவிட்டான். அவள் மௌனமாக இருந்தாள். இவனுள் இருந்த கவிஞன் வெடித்தான்.

"கவிதை எப்படின்னு ஒரு வார்த்தை சொல்லல."

"நல்ல கவிதைன்னு என்னால சொல்லமுடியும். ஆனாலும், இது தெளிவாக புரிவதால், இந்தக் காலத்து நவீனத்துவ கவிஞர்கள், இதை கவிதைன்னு ஏற்றுக் கொள்ளமாட்டாங்க."

"நீ ஏற்றுக் கொண்டாயே, அதுவே போதும். இன்று முதல் நான் வெறும் செல்வா இல்லை. கவிஞன் செல்வா. சிறிது நாளில் பெருங்கவிக்கோ.. அல்லது சிறுங்கவிக்கோ.... கவிப்பேரரசு.."

"கவிதை மனிதன் தோன்றிய காலத்திலிருந்து, நம்மை ஆள்கிறது. அந்த ஆளுமையின் வலிவுதான் கவிஞன். இவன் கவிதைக்கு அரசன், பேரரசன் என்பது அசல் பித்துக்குளித்தனம். சரி அது கிடக்கட்டும் உங்க கவிதையில என்னை பற்றி ஒரு வார்த்தை வரலியே?"

"இந்தக் கவிதையே, உனக்காக நான் எழுதியது. நீ மட்டும் இல்லையென்றால், நான் தேங்காய் சிதறலாய் சிதறி, பம்பாய்க்குப் போய் படாதபாடு பட்டிருப்பேன். அந்த டாக்டர் சத்தியாம்மா சொன்னது மாதிரி தாயான பிரும்மம், எனக்கு காதலியாக வந்திருக்கிறது."

கவிதா, சிரிக்கப் போனாள். அதற்குள், செல்வாவின் தழுதழுத்த குரலும், பொங்கிய கண்ணீரும் அவள் சிரிப்பை கட்டிப்போட்டது. ஒன்றை ஒன்று பிடித்துக்கொண்டும், பிடிபட்டுக் கொண்டும் இருந்த, இருவரின் கரங்களும், இப்போது ஒன்றை ஒன்று கோர்த்துக் கொண்டன

# சு. சமுத்திரத்தின் படைப்புகள்

பல பல்கலைக்கழகங்களில், பாடநூல்களாக வைக்கப்பட்டவை; முனைவர், எம்பிஎல். பட்டங்களுக்காக ஆய்வு செய்யப்பட்டவை.

## நாவல்கள்

**1. ஒரு கோட்டுக்கு வெளியே**

பதினான்கு இந்திய மொழிகளில், மொழி பெயர்க்கப்படுகிறது பதினான்கு மொழிகளில், வானொலியில் ஒலிபரப்பானது - கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1997; மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 1992.

**2. சோற்றுப் பட்டாளம்**

சென்னை தொலைக்காட்சி நிலையத்தில், முதன் முதலாய் முழுநீள நாடகமாய் ஒளிபரப்பானது. கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1977; மணிவாசகர் பதிப்பகம், 1992

இந்தப் படைப்பையும், 'உயரத்தின் தாழ்வுகள்', 'காமன் அறிந்த ஈசனையும்' இணைத்து, கங்கை பதிப்பகம், 1997ல் புதிதாக வெளியிட்டுள்ளது.

| | |
|---|---|
| **3. இல்லந்தோறும் இதயங்கள்** | மணிவாசகர் பதிப்பகம், 1982.<br>இரண்டாம் பதிப்பு, 1997-ல் வானதி |
| **4. நெருப்புத் தடயங்கள்** | மணிவாசகர் பதிப்பகம், 1983.<br>இரண்டாம் பதிப்பு - கங்கைப் பதிப்பகம் |
| **5. வெளிச்சத்தை நோக்கி** | மணிவாசகர் பதிப்பகம், 1989 |
| **6. ஊருக்குள் ஒரு புரட்சி** | தமிழக அரசு முதல் பரிசு பெற்றது<br>மணிவாசகர் பதிப்பகம், 1980<br>1992 (ஐந்து பதிப்புகள்) |
| **7. வளர்ப்பு மகள்** | மணிவாசகர் பதிப்பகம்,<br>1980-1987 (ஐந்து பதிப்புகள்) |
| **8. நிழல் முகங்கள்** | தமிழ்ப் புத்தகாலயம், 1991 |
| **9. சாமியாடிகள்** | மீனாட்சி புத்தக நிலையம்,<br>மதுரை - 1991 |
| **10. தாழம்பூ** | மணிவாசகர் பதிப்பகம், 1992 |
| **11. மூட்டம்** | அன்னம் வெளியீடு, 1994;<br>ஏகலைவன் வெளியீடு, 1996. |
| **12. அவளுக்காக** | வானதி பதிப்பகம், 1992 |
| **13. வாடாமல்லி** | வானதி பதிப்பகம், 1994<br>இரண்டாம் பதிப்பு - 1997.<br>அமரர் ஆதித்தனார் பரிசு பெற்றது. |
| **14. சத்திய ஆவேசம்** | மணிவாசகர் பதிப்பகம், 1987. |
| **15. பாலைப்புறா** | ஏகலைவன் பதிப்பகம், 1998. |

## குறுநாவல்கள்

| | |
|---|---|
| 1. புதிய திரிபுரங்கள் (+கேள்வித் தீ) | மணிவாசகர் பதிப்பகம், 1982, இரண்டாம் பதிப்பு, 1997 - வானதி பதிப்பகம். |
| 2. வேரில் பழுத்த பலா (+ ஒரு நாள் போதுமா) | சாகித்திய அக்காதெமி விருது பெற்றது. மணிவாசகர் பதிப்பகம், 1988, 1994. |
| 3. சத்தியத்துக்குக் கட்டுப்பட்டால் (+ பிறபகல்) | வானதி பதிப்பகம், 1992. |
| 4. ஒத்தை வீடு (+ புதைமண்) | ஏகலைவன் பதிப்பகம், 2000 |

## சிறுகதைத் தொகுப்புகள்

| | |
|---|---|
| 1. குற்றம் பார்க்கில் | தமிழக அரசு முதல் பரிசு பெற்றது. கல்வி வெளியீடு, 1977; மணிவாசகர் பதிப்பகம், 1992. |
| 2. காகித உறவு | மணிவாசகர் பதிப்பகம், 1979-1982. |
| 3. ஒரு சத்தியத்தின் அழுகை | மணிவாசகர் பதிப்பகம், 1979-1985 |
| 4. உறவுக்கு அப்பால் | மணிவாசகர் பதிப்பகம், 1979. |
| 5. மானுடத்தின் நாணயங்கள் | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1989 |
| 6. பிணம் தின்னும் சாஸ்திரங்கள் | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1987 |
| 7. சமுத்திரம் கதைகள் | மணிவாசகர் பதிப்பகம், 1983. |
| 8. ஏவாத கணைகள் | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1990-1993 |
| 9. மண் சுமை | தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. மணிவாசகர் பதிப்பகம், 1991. |
| 10. யானைப் பூச்சிகள் | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994 |
| 11. காலில் விழுந்த கவிதைகள் | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994. |
| 12. மனம் கொத்தி மனிதர்கள் | வானதி பதிப்பகம், 1992. |
| 13. இன்னொரு உரிமை | வானதி பதிப்பகம், 1992 |
| 14. பூ நாகம் | வானதி பதிப்பகம், 1992 |
| 15. ஒரு மாமரமும் மரங்கொத்திப் பறவைகளும் | ஏகலைவன் பதிப்பகம், 1996 |
| 16. பொய்யாய் - புதுக்கனவாய் | கங்கை பதிப்பகம், 1993 |
| 17. சிக்கி முக்கிக் கற்கள் | ஏகலைவன் பதிப்பகம், 1999 |
| 18. ஆகாயமும் பூமியுமாய்... | ஏகலைவன் பதிப்பகம், 1999 |

## நாடகம்

| | |
|---|---|
| 1. லியோ டால்ஸ்டாய் | மணிவாசகர் பதிப்பகம், 1987 |

## கட்டுரைத் தொகுப்பு

| | |
|---|---|
| 1. எனது கதைகளின் கதைகள் | ஏகலைவன் பதிப்பகம், 1996. |
| 2. சமுத்திரம் கட்டுரைகள் | ஏகலைவன் பதிப்பகம், 1999 |



சு. சமுத்திரத்தின் கதாபாத்திரங்கள் கற்பனையாகத் தோன்றாமல், "இதோ இவர்தான் அந்த நாவலில் வருகிற அவரா" என்று நாம் அடையாளம் காட்டுகிற அளவுக்கு உயிருள்ளதாக இருக்கும். ஆனால், அந்தப் பாத்திரங்களுக்கு வருகிற பிரச்சினைகள் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். மற்ற எந்த எழுத்தாளரும் சிந்திக்காத அல்லது தொடப் பயந்த ஒரு சமூகப் பிரச்சினையை, தன் கதாபாத்திரங்கள் வழியாக தனக்கே உரித்தான பாணியில் எடுத்துச் சொல்லும்போது, நமக்கு ஏற்படுகிற சிலிர்ப்பும் தாக்கமும் அவரது எழுத்துக்களின் சக்திக்கு ஓர் எடுத்துக்காட்டு.

என்னைப் போன்ற மருத்துவர்களெல்லாம் நோயாளிகளிடம் நிறையப் பேசி, ஆலோசனை வழங்கலாம். ஆனால், ஒரு **"புதைமண்"** - ஒரு **"ஒத்தை வீடு"** ஏற்படுத்துகிற தாக்கம், ஆயிரம் மருத்துவர்களின் சேவையையும் மிஞ்சி நிற்கும்; உடனடிப் பலனையும் ஏற்படுத்தும்.

டாக்டர். க. காந்தராஜ்,
பாலியல் நிபுணர்,
சென்னை.

வெளியீடு:

**ஏகலைவன் பதிப்பகம்**
9, இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை – 600 041.
✆ : 4917594